310/93

வெளியீடு 1-12-1992 Issued 1-12-1992

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் எழும்பூர், சென்னை-600008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 21, 1992 - தொகுதி 25 எண். 1
Tuesday, the 21st April 1992 - Volume 25 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat,**
**Madras-600 009**

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

D
N91'31,11
V91.25-1
163179

N211,3) (N92
N92.25-)
163179



| | பக்கங்கள் |
|---|---|
| (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மணல் எடுக்கும் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளது குறித்து. | 55—59 |
| 6. அறிக்கை அளித்தல்— | |
| பொதுக் கணக்குக் குழு. .. .. .. | 59—60 |
| 7. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)— | |
| சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு, 1992. | 60—61 |
| 8. மானியக் கோரிக்கைகள், 1992-93— விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை | 61—238 |
| (ஆ) கோரிக்கை எண் 53—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | |
| (இ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள். | |
| (ஈ) கோரிக்கை எண் 22—கால் நடை வளர்ப்பு. | |
| *மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் | 61, 62, 64—65, 202—236 |
| *மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் | 63, 65 |
| திரு. எ. ஏகாம்பர ரெட்டி | 66—71 |
| திரு. என். ஆர். சிவபதி | 71—75 |
| திரு. நா. சா. பழனிசாமி | 75—81 |
| திரு. கே. பி. ராஜு | 81—87 |
| திரு. என். பன்னீர்செல்வம் | 87—92 |
| திரு. ஏ. எம். பரமசிவன் | 92—95 |
| திரு. சி. தாமோதரன் | 96—99 |
| *திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன் | 99—102 |
| திரு. கா. சின்னச்சாமி | 102—105 |



| | பக்கங்கள் |
|---|---|
| *திருமதி வி. ஜி. மணி மேகலை | 106—111 |
| திரு. கே. பி. மணிவாசகம் | 111—114 |
| திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் | 114—119 |
| திரு. கே. தவசி | 119—124 |
| திரு. கே. ஆர். ராஜு | 124—126 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 126—133 |
| திரு. கி. தர்மலிங்கம் | 133—135 |
| திரு. ஜி. பழனிசாமி | 136—143 |
| திரு. கா. பூ. முனுசாமி | 143—149 |
| திரு. சொ. இராசாராமன் | 149—153 |
| திரு. மு. நடேசன் | 153—158 |
| திரு. ச. அழகிரி | 158—166 |
| திரு. வி. என். சுப்பிரமணியன் | 167—174 |
| திரு. சி. ஞானசேகரன் | 174—179 |
| திரு. க. அர்ச்சுனன் | 179—182 |
| திரு. சி. சுவாமிநாதன் | 182—187 |
| திரு. வே. தம்புசாமி | 187—195 |
| திருமதி ரமணி நல்லதம்பி | 195—201 |
| அரசினர் தீர்மானம்— | |
| விதி 32-ஐ தளர்த்தல் .. .. | 238—239 |
| பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. | 239—240 |

(310)

## உள்ளடக்கம்

21—4—1992


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். | iv—vii |
| Personnel of the Government of Tamil Nadu | viii—x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | xii—xiii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி). | xiv—xxiv |
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1–42 |
| 2. சிறப்புக் குறிப்பு— .. .. .. | |
| ஆர். ஓய். எல். தீவிரவாத இயக்கத்தினர் பேரவை உறுப்பினர்களை மிரட்டும் வகையில் வெளியே பேசி வருவது குறித்து. | 42–45 |
| 3. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை— | |
| பொது விநியோகத்தில் வழங்கப்படும் அரிசி விலைக் குறைப்பு குறித்தும், குறைந்த விலை அரிசியைப் பெறத் தகுதிகள் நிர்ணயித்தல் குறித்தும். | 45—50 |
| 4. அறிவிப்பு— | |
| 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவைக்கு அளித்தல் குறித்து. (ஆ. செ.) | 50 |
| 5. கவன ஈர்ப்பு— | |
| (அ) வால்பாறை வட்டத்தில் அரசுக்குச் சொந்தமான ஆனைமலை கிளப் இடத்தை கையகப்படுத்தாதது குறித்து. | 50—55 |

| | | |
|---|---|---|
| | | எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம்; பூமிதானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள். |
| 5. | பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம் மற்றும் சீர்மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலம். |
| 6. | கல்வி அமைச்சர். | **மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல். |
| 7. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல். |
| 8. | போக்குவரத்துத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா. |
| 9. | கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :** கைத்தறி மற்றும் நெசவாலைகள். |
| 10. | பொதுப்பணித் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு. |



| | | |
|---|---|---|
| 11. | உள்ளாட்சித் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :** நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல். |
| 12. | உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :** உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளிவிவரங்கள். |
| 13. | தொழிலாளர் நலத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. செ. ரகுபதி :** தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு. |
| 14. | வேளாண்மைத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்பு வரி மற்றும் கரும்பு வளர்ச்சி. |
| 15. | வீட்டு வசதி— நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :** வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 16. | சமூக நலத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி :** சமூக நலம், (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம். |

| | | |
|---|---|---|
| 17. | ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம். |
| 18. | மீனளத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மீனளம். |
| 19. | ஊரகத் தொழில் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான்: சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப். |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU—Thiru. BHISHMA NARAIN SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. Chief Minister .. | The Hon. Dr. J. JAYALALITHA: Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture, Electronics and Newsprint Control. |
| 2. Minister for Finance .. | The Hon. Dr. V.R. NEDUNCHEZHIAN: Finance, Planning, Elections and Legislature. |
| 3. Minister for Law ... | The Hon. Thiru K. A. KRISHNASAMY: Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending, Chits and Registration of Companies. |
| 4. Minister for Revenue .. | The Hon. Thiru S. D. SOMASUNDARAM: Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes. |

53—118—B

5. Minis er for Backward Classes. — The Hon. Thiru ERAAMA VEERAPPAN: Backward Classes, Most Backward Classes and Denotified Communi ies, Indians Overseas, Refugees and Evacuees and Welfare of Ex-Servicemen.

6. Minis er for Education .. — The Hon. Thiru C. ARANGANAYAGAM: Educa ion, Technical Education, Science and Techno logy, Sports and Youth Welfare and Archaeology.

7. Minis er for Health .. — The Hon. Thiru S. MUTHUSAMY: Health, Medical Education, Family Welfare and Environmental Polution Con rol.

8. Minister for Transport .. — The Hon. Thiru K.A. SENGOTTAYAN: Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Forests and Cinchona.

9. Minister for Handlooms and Textiles. .. — The Hon. Thiru E. MADHUSUDHANAN: Handlooms and Textiles.

10. Minister for Public Works — The Hon. Thiru S. KANNAPPAN: Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity, Non-Conventional Energy Development and Iron and Steel Control.

11. Minister for Local Administration. — The Hon. Thiru ALAGU THIRU NAVUKKARASU: Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rurai Water Supply.

12. Minister for Food and Co-operation. .. — The Hon. Thiru G. VISWANATHAN: Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.



13. Minister for Labour .. — The Hon. Thiru S. RAGUPATHY: Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

14. Minister for Agriculture .. — The Hon. Thiru KU. PA. KRISHNAN: Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane and Sugarcane Development.

15. Minist er for Housing and Urban Development. — The Hon. Thiru T.M. SELVA GANAPATHY: Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development and Madras Metropolitan Development Authority.

16. Minister for Social Welfare — The Hon. Tmt. R. INDIRAKUMARI: Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. Minist er for Adi-Dravidar Welfare. — The Hon. Thiru M. ANANDAN: Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour, Animal Husbandry, Milk and Dairy Development.

18. Minister for Fisheries .. — The Hon. Thiru D. JAYAKUMAR: Fisheries.

19. Minister for Rural Indust ies. .. — The Hon. Thiru S. NAGOOR MEERAN: Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் : திரு. பீஷ்ம நாராயண் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை, சர்க்கரைப் பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

2. **நிதி அமைச்சர்.** **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. **சட்டத் துறை அமைச்சர்.** **மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் - அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

4. **வருவாய்த் துறை அமைச்சர்.** **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்ட துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம்,

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

பேரவைத் துணைத் தலைவர் :

பேராசிரியர் க. பொன்னுசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. வே. தம்புசாமி
5. திரு. நா. சா. பழனிசாமி

செயலாளர் :

திரு. செ. சு. ஜானகிராமன்.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

| | | |
|---|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ. கு.,<br>பி.ஏ., பி. எல். | .. | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ.,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ.,<br>பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ.,<br>பி. காம். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| சந்திரசேகர், திரு. ஆர்.,<br>பி. ஏ., | .. | துணைச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி.,<br>பி. எஸ்ஸி., பி. எல். | .. | துணைச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா.<br>பி.ஏ., பி.எல்., டி.ப் மற்றும்<br>பி. ஏ. | .. | துணைச் செயலாளர் |
| கிருஷ்ணமூர்த்தி, திரு.ச.,<br>பி. எஸ்ஸி. | .. | குழு அலுவலர் |
| வெங்கட்டராமன், திரு. ப. சீ.,<br>பி.காம். | .. | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜெ.,<br>பி.ஏ., பி. எல். | .. | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வெ.,<br>பி. எஸ்ஸி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி, வி. நா., பி. ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| கண்ணன், திரு. கே.,<br>பி.எஸ்ஸி., பி. எல். | .. | சார்புச் செயலாளர் |
| கணேசன், திரு. சா.,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. இ.,<br>பி.ஏ., பி. ஜி. எல். | .. | சார்புச் செயலாளர் |
| பவானி சுப்பையா, திருமதி.<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| பானுமதி அனந்தராஜன், திருமதி., பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| முடிகோபதி, திரு. நா., எம். ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| முனிர் உன்னிசா, திருமதி, பி. எஸ்ஸி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| ராஜன், திரு. கே. பி., டி. ஆர்.எஸ். | .. | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி. ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை., எம். ஏ. | .. | தலைமை நிருபர் |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ., பி. ஏ. | .. | தலைமை நிருபர் |
| ஜெயதேவ், திரு. பி. சி. | .. | தலைமை நிருபர் |

---

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அண்ணாமலை, திரு. எஸ். | .. | ஆலந்தூர். |
| 2. | அபரஞ்சி, திரு. பெ. | .. | அரூர் (செ. வ.) |
| 3. | அப்துல்ஹசன், திரு. எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அமர்நாத், திரு. ஒ. எஸ். | .. | மதுரை கிழக்கு |
| 5. | அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | .. | கன்னியாகுமரி |
| 6. | அரங்கநாதன், திரு. ஆர். டி. | .. | விருத்தாசலம் |
| 7. | அரங்கநாயகம், டாக்டர் செ. | .. | தொண்டாமுத்தூர் |
| 8. | அர்ச்சுனன், திரு. க. | .. | வீரபாண்டி |
| 9. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 10. | அழகு திருநாவுக்கரசு, திரு. | .. | ஒரத்தநாடு. |
| 11. | அறிவழகன், திரு. ஆ. | .. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 12. | அன்பழகன், திரு. எஸ். | .. | நாமக்கல் (செ. வ.) |
| 13. | ஆசைமணி, திரு. எஸ். | .. | குத்தாலம் |
| 14. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 15. | ஆண்டித் தேவர், திரு. எஸ். | .. | திருப்பரங்குன்றம் |
| 16. | ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 17. | ஆறுமுகம், திரு. செ. | .. | வானூர் (செ. வ.) |
| 18. | ஆனந்தன், திரு. எம். | .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.) |
| 19. | இந்திரகுமாரி, திருமதி இரா. | .. | நாட்ராம்பள்ளி |

| | | |
|---|---|---|
| 20. | இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. | .. மேலூர் |
| 21. | இராசாராமன், திரு. சோ. | .. பாபநாசம் |
| 22. | இராசாராம், திரு. க. | .. பனமரத்துப்பட்டி |
| 23. | இராதாகிருஷ்ணன், திரு. த. க. | .. திருமங்கலம் |
| 24. | இராமகிருஷ்ணன், டாக்டர், இ. | .. அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 25. | இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | .. திருவாடனை |
| 26. | இராமசுவாமி, திரு. சி. | .. சங்கராபுரம் |
| 27. | இராமச்சந்திரன், திரு. ஒ. ஆர். | .. கம்பம் |
| 28. | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | .. சாத்தூர் |
| 29. | இராமச்சந்திரன், திரு. ச. | .. பண்ருட்டி |
| 30. | இராமச்சந்திரன், திரு. மா. சா. மா. | .. இளையாங்குடி |
| 31. | இராமதாஸ், திரு. எஸ். எஸ். ஆர். | .. செஞ்சி |
| 32. | இராமநாதன், திரு. இராம. | .. கும்பகோணம் |
| 33. | இராஜமன்னார், திரு. சூ. சே. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 34. | இராஜன்பாபு என்கிற தணிகை பாபு, திரு. கி. | .. திருத்தணி |
| 35. | இராஜேந்திரன், திரு. பி. வி. | .. வேதாரண்யம் |
| 36. | இராம வீரப்பன், திரு. | .. காங்கேயம் |
| 37. | இலதா பிரியகுமார், திருமதி | .. அரக்கோணம் (செ. வ.) |
| 38. | இளம்வழுதி, திரு. | .. எழும்பூர் |



| | | |
|---|---|---|
| 39. | ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. | .. தாராபுரம் (செ. வ.) |
| 40. | ஈஸ்வரன், திரு. ஆர். | .. வாசுதேவநல்லூர் (செ.வ) |
| 41. | ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | .. பள்ளிப்பட்டு |
| 42. | கண்ணப்பன், திரு. எஸ். | .. திருப்பத்தூர் |
| 43. | கண்ணன், திரு. வே. | .. திருவண்ணாமலை |
| 44. | கந்தசாமி, திரு. கே. | .. தலைவாசல் (செ. வ.) |
| 45. | கருப்புசாமி, டாக்டர் எம். | .. குன்னூர் (செ. வ.) |
| 46. | கலியபெருமாள், திரு. ப. | .. திருவையாறு |
| 47. | கலைச்செல்வி, திருமதி கே. எம். | .. காட்பாடி |
| 48. | கவிநிலவு தர்மராஜ், திருமதி | .. மொடக்குறிச்சி |
| 49. | கற்பகம் இளங்கோ, திருமதி | .. காரைக்குடி |
| 50. | கனகவல்லி, திருமதி என். சி. | .. விளாத்திகுளம் |
| 51. | காஞ்சி பன்னீர்செல்வம், திரு. | .. உத்திரமேரூர் |
| 52. | காந்திராஜன், திரு. ச. | .. வேடசந்தூர் |
| 53. | காளன், திரு. கோ. | .. வில்லிவாக்கம் |
| 54. | காளிராஜன், டாக்டர் மு. | .. சமயநல்லூர் (செ. வ.) |
| 55. | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | .. ஆயிரம்விளக்கு |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ். எம். | .. தாம்பரம் |
| 57. | கிருஷ்ணன், திரு. கு.ப. | .. ஸ்ரீரங்கம் |
| 58. | கிருஷ்ணன், திரு. சி. | .. ஓமலூர் |
| 59. | குப்பன், திரு. க. | .. திருவொற்றியூர் |
| 60. | குமரி அனந்தன், திரு. | .. சாத்தான்குளம் |
| 61. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |

62. குழந்தைவேலு, திரு. சி. .. குளத்தூர் (செ. வ.)

63. கோடிமாரி, திரு. ஆர். .. நாகப்பட்டினம்

64. கோபால கிருஷ்ணன், திரு. வே. .. சங்கரநயினார் கோவில் (செ. வ.)

65. கோபால், டாக்டர் க. .. நன்னிலம் (செ. வ.)

66. கோவிந்தராசு, திரு. மா. .. ரிஷிவந்தியம்

67. சக்குபாய், திருமதி ரா. .. கும்மிடிப்பூண்டி

68. சக்குபாய் தேவராஜ், திருமதி டி. .. திருவள்ளூர்

69. சஞ்சய் ராமசாமி, திரு. .. விருதுநகர்

70. சண்முகநாதன், திரு. எஸ். .. ஆலங்குடி

71. சண்முகம், திரு. எஸ். வி. .. மதுரை மேற்கு

72. சத்தியமூர்த்தி, திரு. வ. .. கடலாடி

73. சந்திரசேகர், திரு. வி. பி. .. பொள்ளாச்சி

74. சம்பத், திரு. எ. .. வாணியம்பாடி

75. சரஸ்வதி, திருமதி அ.தி. .. சத்தியமங்கலம்

76. சரஸ்வதி, திருமதி ப. .. கபிலர்மலை

77. சரோஜா, டாக்டர் வெ. .. சங்கரி (செ. வ.)

78. சாத்தையா, திரு. தி. .. இராஜபாளையம் (செ. வ.)

79. சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். .. முகையூர்

80. சிங்காரம், திரு. ஆர். .. பேராவூரணி

81. சிங்காரம், திரு. கே. .. மொரப்பூர்

82. சிங்கை கோவிந்தராசு, திரு. .. சிங்காநல்லூர்

83. சியாமளா, திருமதி ரெ. .. கோவில்பட்டி



84. சிவசுப்பிரமணியன், திரு. கு. .. குறிஞ்சிப்பாடி.

85. சிவபதி, திரு. என். ஆர். .. தொட்டியம்

86. சின்னசாமி, திரு. கா. .. சேந்தமங்கலம் (ம.ப.)

87. சின்னசாமி, திரு. ம. .. கரூர்

88. சின்னசாமி, திரு. வி. கே. .. பவானிசாகர்

89. சின்னப்பன், திரு. கே. கே. .. ஜெயங்கொண்டம்

90. சீனியம்மாள், டாக்டர் மு. .. அவினாசி (செ. வ.)

91. சீனிவாசன், திரு. ஆ. கு. .. பெரணமல்லூர்.

92. சீனிவாசன், திரு. கு. .. மன்னார்குடி

93. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

94. சுந்தரசாமி, திரு. எம். .. கலசப்பாக்கம்

95. சுந்தரதாஸ், திரு. மா. .. விளவன்கோடு

96. சுந்தரம், திரு. எம். கே. .. தண்டராம்பட்டு

97. சுந்தரராஜ், டாக்டர் எஸ். .. பரமக்குடி (செ. வ.)

98. சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. .. திருப்பத்தூர்

99. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்

100. சுப்பிரமணியம், திரு. வ. மு. .. மானாமதுரை (செ. வ.)

101. சுப்பிரமணியன், திரு. வி.என். .. பெருந்துறை.

102. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ. வ.)

103. சுப்புரத்தினம், திரு. ஆ. .. பழனி (செ. வ.)

104. சுலோசனா, செல்வி எல். .. மேட்டுப்பாளையம்

105. சுவாமிநாதன், திரு. சி. .. புதுக்கோட்டை

106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. .. கோபிசெட்டிபாளையம்

107. செல்லக்குமார், டாக்டர் அ. .. அண்ணாநகர்

108. செல்லசாமி, திரு. ஏ. டி. .. ஒட்டன்சத்திரம்
109. செல்லதுரை, திரு. ஆ. .. திருச்செந்தூர்
110. செல்வகணபதி, திரு. டி. எம். .. திருச்செங்கோடு
111. செல்வராசன், திரு. அ. .. துறைமுகம்
112. செல்வராஜ், திரு. கே. .. கோயம்புத்தூர் மேற்கு.
113. செழியன், திரு. தா. .. பெரம்பலூர் (செ. வ.)
114. சேகர், டாக்டர் எம். பி. .. பெரம்பூர் (செ.வ.)
115. சேகர், திரு. எம். ஜி. .. பாலக்கோடு
116. சொக்கலிங்கம், திரு. பி. .. மதுராந்தகம்
117. சோமசுந்தரம், திரு. எஸ். டி. .. தஞ்சாவூர்
118. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
119. டேனியல்ராஜ், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்.
120. தங்கமுத்து, திரு. கு. .. திருவோணம்
121. தங்கராஜ், திரு. ஆர். .. ஆண்டிமடம்
122. தங்கவேல், திரு. எம். .. முசிறி
123. தண்டாயுதபாணி, திரு. வி. .. குடியாத்தம்
124. தமிழரசன், திரு. செ. கு. .. வந்தவாசி (செ.வ.)
125. தமிழரசு, திரு. வெ. .. ஆத்தூர்
126. தம்புசாமி, திரு. வே. .. திருவாரூர் (செ.வ.)
127. தர்மலிங்கம், திரு. கி. .. அணைக்கட்டு
128. தர்மலிங்கம், திரு. பே. .. பாளையங்கோட்டை
129. தவசி, திரு. கே. .. ஆண்டிப்பட்டி
130. தனபால், திரு. ம. .. திருப்போரூர் (செ.வ.)



131. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
132. தாமோதரன், திரு. சி. .. நெல்லிக்குப்பம்
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
134. துரை, திரு. எஸ். எம். .. ஆத்தூர்
135. துரைமுருகன், திரு. கு.சு. .. பல்லடம்
136. துரை ராமசாமி, திரு. .. வெள்ளக்கோவில்
137. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
138. தென்னவன், திரு. மு. .. இராமநாதபுரம்
139. தேவராஜ், திரு. அ. .. செய்யாறு
140. தேனி பன்னீர்செல்வம், திரு. .. போடிநாயக்கனூர்
141. நடேசன், திரு. இரா. .. திருவட்டாறு
142. நடேசன், திரு. மு. .. சேலம்-2
143. நடேசன் பால்ராஜ், திரு. வெ. .. நாங்குநேரி
144. நாகூர்மீரான், திரு. எஸ். .. கடையநல்லூர்
145. நிர்மலா, செல்வி பி. .. திண்டுக்கல்
146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. .. தேனி
147. பஞ்சவர்ணம், திருமதி கே. .. வலங்கைமான் (செ.வ.)
148. பட்டாபிராமன், திரு. கா. ப. .. காஞ்சிபுரம்
149. பரந்தாமன், டாக்டர் ஜெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
150. பரமசிவம், திரு. ஆர். பி. .. சின்னசேலம்
151. பரமசிவன், திரு. ஏ. எம். .. சோழவந்தான்
152. பலராமன், திரு. உ. .. பூங்காநகர்
153. பழனிசாமி, திரு. இரா. .. தாரமங்கலம்
154. பழனிசாமி, திரு. க. .. எடப்பாடி

155. பழனிசாமி, திரு. நா. சா. .. கிணத்துக்கடவு

156. பழனிசாமி, திரு. வெ. .. திருப்பூர்

157. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

158. பழனியம்மாள், திருமதி க. .. ராசிபுரம்

159. பன்னீர்செல்வம், திரு. என். .. திருவிடைமருதூர்

160. பன்னீர்செல்வம், திரு. சா. .. திண்டிவனம்

161. பன்னீர்செல்வம், திரு. ஜெ. .. திருநாவலூர்

162. பாண்டியம்மாள், திருமதி இரா. .. உசிலம்பட்டி

163. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை

164. பாலகங்காதரன், திரு. ஜெ. .. சிவகாசி

165. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

166. பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். .. பொங்கலூர்.

167. பாலசுப்பிரமணியன், திரு. கி. .. பட்டுக்கோட்டை

168. பாலன், திரு. எம். சே. .. சைதாப்பேட்டை

169. பாலையா, திரு. ஆ. .. குளச்சல்,

170. பீட்ரிக் டி' சோசா, டாக்டர் .. நியமனம்

171. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. தென்காசி

172. புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. .. சேரன்மகாதேவி

173. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ. வ.)

174. புருஷோத்தமன், டாக்டர் வெ. .. பெண்ணாகரம்

175. பூராசாமி, திரு. எம். .. பூம்புகார்

176. பெரியசாமி, திரு. வே. .. அந்தியூர் (செ. வ.)

177. பெரியவீரன், திரு. எம். .. பெரியகுளம்



178. பெருமாள் திரு. செ. .. ஏற்காடு (ம.ப.)

179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

180. பொன்னுசாமி, பேராசிரியர் க. .. மருங்காபுரி

181. பொன்னுசாமி, திரு. பெ. .. தருமபுரி

182. பொன்னுவேலு, திரு. ஏ. தா. .. வரகூர் (செ. வ.)

183. போளூர் வரதன், திரு. .. ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.)

184. மணிமேகலை, டாக்டர் சு. .. அரியலூர்

185. மணிமேகலை, திருமதி வி. ஜி. .. அருப்புக்கோட்டை

186. மணிவாசகம், திரு. கே. பி. .. உடுமலைப்பேட்டை

187. மதுசூதனன், திரு. இ. .. டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர்,

188. மரியம் உல் ஆசியா, திருமதி கே. .. அரவக்குறிச்சி

189. மல்லிகா, செல்வி கோ. .. புவனகிரி

190. மனோகரன், திரு. கே. ஏ. .. ஓசூர்.

191. மாணிக்கம், திரு. சி. .. ஈரோடு

192. மாலா, டாக்டர் ஜி. ஆர். .. திருச்சிராப்பள்ளி

193. முத்துசாமி, திரு. சு. .. பவானி

194. முத்தையா, திரு. இரா. .. சேடப்பட்டி

195. முருகானந்தம், திரு. கே. ஆர். .. சிவகங்கை.

196. முருகையாபாண்டியன், திரு. ஆர். .. அம்பாசமுத்திரம்

197. முனிரத்தினம், திரு. ஏ. எம். .. சோளிங்கர்

198. முனிவெங்கடப்பன், திரு. கே. .. கிருஷ்ணகிரி
199. முனுசாமி, திரு. கா. பூ. .. காவேரிப்பட்டினம்
200. முஹமது ஆசிப், திரு. .. திருவல்லிக்கேணி
201. மூர்த்தி, திரு. து. .. சீர்காழி (செ. வ.)
202. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
203. ரகுபதி, திரு. செ. .. திருமயம்
204. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
205. ரங்கராஜன், திரு. டி. எம். .. மயிலாப்பூர்
206. ரத்தினவேல், திரு. த. .. திருவெறும்பூர்
207. ரமணி நல்லதம்பி, திருமதி .. ராதாபுரம்
208. ரமேஷ், திரு. வி. பி. ஆர். .. தூத்துக்குடி
209. ரவிக்குமார், திரு. ஏ. .. பொன்னேரி (செ.வ.)
210. ரவிச்சந்திரன், திரு. வி. .. உப்பிலியாபுரம் (ம.ப.)
211. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. ஆலங்குளம்
212. ராஜு, திரு. எச். எம். .. உதகமண்டலம்
213. ராஜு, திரு. கே. ஆர். .. கூடலூர்
214. ராஜு, திரு. கே. பி. .. பேரூர்
215. ராஜேந்திரன், திரு. என். ஆர். .. காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
216. லட்சுமணன், திரு. வி. கே. .. கோயம்புத்தூர் கிழக்
217. லாரன்ஸ், திரு. கு. .. பத்மநாபபுரம்.
218. லோகாம்பாள், திருமதி ஜெ. .. லால்குடி
219. வரதராஜன், திரு. செ. து. .. செங்கல்பட்டு
220. விசுவநாதன், திரு. ஜி. .. ஆற்காடு
221. வீரபாண்டியன், டாக்டர் பெ. .. செங்கம் (செ.வ.)
222. வெங்கடராமரெட்டி, திரு. மு. .. தளி
223. வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். .. கடலூர்
224. வேடியப்பன், திரு. தா. .. போளூர்
225. வேணுகோபால், திரு. என். ஜி. .. ராணிப்பேட்டை
226. வேலையா, திரு. டி. .. திருநெல்வேலி
227. ஜனார்தனன், திரு. தே. .. விழுப்புரம்
228. ஜானகிராமன், திரு. கோ. .. மேல்மலையனூர்.
229. ஜீனத் சர்புதீன், திருமதி .. சேப்பாக்கம்
230. ஜெயக்குமார், திரு. எஸ். .. தியாகராயநகர்
231. ஜெயகுமார், திரு. டி. .. ராயபுரம்
232. ஜெயராமன், திரு. எஸ். ஆர். .. சேலம்-1.
233. ஜெயலலிதா, டாக்டர் ஜெ. .. பர்கூர்
234. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் .. ஆரணி.
235. ஸ்ரீதரன், டாக்டர் அ. .. வால்பாறை (செ.வ.)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

சுப்பிரமணியன், திரு. கே. .. தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 9, ஆங்கிரச திருவள்ளுவர் ஆண்டு 2023

1992, ஏப்ரல் 21, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை''

உலகம் பல தொழில்களைச் செய்து சுழன்றாலும் வேளாண் தொழிலின் பின் நிற்கின்றது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் வேளாண்மைத் தொழிலே சிறந்தது ஆகும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 570, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு நிதியமைச்சர்.

570— புதிதாக வாக்குச்சாவடி அமைத்தல்.

*5180—திரு. வ. சத்தியமூர்த்தி :
மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், கடலாடி ஒன்றியத்தில் உள்ள வாளம்பட்டி, கீழக்கிடாரம் நாடார் குடியிருப்பு (காவாகுளம்), பூப்பாண்டியபுரம், அண்ணாமுவ நாயக்கன்பட்டி, டி. ஆலங்குளம் ஆகிய கிராமங்களில் புதிதாக வாக்குச்சாவடி அமைக்கவேண்டுமென்ற கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், புதிய வாக்குச்சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ). மற்றும் (ஆ) இக்கிராமங்களில் புதியதாக வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட வேண்டுமென்று விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கடந்த 3 பொதுத் தேர்தல்களிலும்
இந்த வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கிற கிராமத்து வாக்காளர்
கள் எங்களுக்கு தனியாக வாக்கு சாவடி வேண்டும்
இல்லையென்று சொன்னால் தேர்தலில் கலந்துகொள்ள
மாட்டோம் என்று சுற்றறிக்கை மூலம் தெரிவித்து
போராட்ட வடிவில் இந்தப் பிரச்சினையைக் கொண்டு
வந்ததின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின்
பேரில் வட்டாட்சியரும் கோட்ட ஆட்சித் தலைவர் அவர்
களும் அந்த கிராமங்களுக்கு நேரிடையாக சென்று
அவர்களை சமாதானப் படுத்தி வாக்களிக்கச் செய்திருக்கி
றார்கள். இதில் காவாகுளம் என்ற கிராமத்தில் ஏற்
கெனவே வாக்கு சாவடி இருந்ததை கீழ்க் கிடாரம் என்ற ஊருக்கு
மாற்றியிருக்கின்றார்கள். அதுபோல அண்ணகுவன் நாயக்கன்
பட்டி என்ற பேருந்து செல்லும் வழித் தடத்தில் உள்ள
கிராமத்தினை, பேருந்து செல்ல முடியாத ஒரு கிராமத்தோடு
இணைத்திருக்கிறார்கள். 6 கிலோ மீட்டர் நடந்து செல்ல
வேண்டியிருக்கிறது. அதேபோல வாளம்பட்டி என்ற கிரா
மத்தில், அருகில் உள்ள பேருந்து செல்லுகிற சேவல்பட்டி
யில் வாக்களிக்க இருந்தவர்களை, தற்போது முத்துராம
லிங்கபுரம் என்ற பேருந்து செல்ல முடியாத ஒரு கிராமத்தில்
கொண்டு வந்து இணைத்திருக்கிறார்கள். ஆகவே
வசதியான இடத்தில் வாக்களித்தவர்களை வசதியற்ற இடத்
திற்கு மாற்றுவதோடு மட்டும் அல்லாமல் புதிதாகவும் வாக்கு
சாவடி கேட்கிற ஒரு சில கிராமத்திற்கும் சேர்த்து, வரப்
போகிற பொதுத் தேர்தலுக்கு முன்பு ஆய்வு செய்வதற்கா
வது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பணிப்பார்களா
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம்
மாவட்டம், கடலாடி சட்டமன்ற தொகுதியில் உள்ள
வாளம்பட்டி, கீழ்க்கிடாரம், நாடார் குடியிருப்பு, பூப்பாண்டிய
புரம், அண்ணகுவன் நாயக்கன்பட்டி, டி. ஆலங்குலம் ஆகிய
கிராமங்களில் புதியதாக வாக்கு சாவடிகள் அமைக்க வேண்டும்
என்று விண்ணப்பம் ஏதும் மாவட்ட ஆட்சி தலைவர் மூலமோ
அல்லது மற்றவர்கள் மூலமோ பெறப்படவில்லை என்று
ராமநாதபுரம் மாவட்ட ஆட்சி தலைவர் தகவல் தந்துள்
ளார். பூப்பாண்டியபுரம் கிராமத்தில் உள்ள வாக்காளர்
களை தவிர மற்ற கிராமங்களில் உள்ள வாக்காளர்கள் 2 கிலோ
மீட்டர் மிகாமல் நடந்து சென்று வாக்களிக்கும் வகையில்
வசதியாக வாக்கு சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. பூப்
பாண்டியபுரம் கிராமத்தை பொறுத்த மட்டில் அந்த கிராமத்
தில் உள்ள வாக்காளர்கள் மூக்கையூர் கிராமத்தில் உள்ள
வாக்கு சாவடிகளோடு இணைக்கப்பட்டுள்ளனர். பூப்பாண்டிய
புரம் கிராமத்தில் உள்ள வாக்காளர்கள் மூக்கையூர் கிராமத்தில்





உள்ள வாக்கு சாவடிகளுக்கு நல்ல சாலை வழியாகச்
சென்றால் 5 கிலோ மீட்டருக்கு மேல் நடக்க வேண்டியிருக்
கிறது. ஆனால் குறுக்குவழியில் சென்றால் 2 கிலோ
மீட்டர் தூரம் தான் நடக்க வேண்டும். பொதுவாக
பூப்பாண்டியபுரம் கிராம மக்கள் மூக்கையூர் செல்ல
இந்த குறுக்கு வழியையே பின்பற்றுகிறார்கள். பூப்
பாண்டியபுரத்தில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 232
தான். புதியதாக தனி வாக்குச் சாவடிகள் அமைக்கும்போது
வாக்காளர்களின் எண்ணிக்கையும் கணக்கில் கொள்ள
வேண்டியிருக்கிறது. இந்த கிராமத்து வாக்காளர்களிட
மிருந்து தங்களுக்கு தனி வாக்குச் சாவடி அமைத்துத்தர
வேண்டும் என்ற விண்ணப்பம் ஏதும் இதுவரையில் பெறப்
படவில்லை. மேலும். வாக்காளர் பட்டியலை 5 ஆண்டு
களுக்கு ஒரு முறை தீவிர முறையில் திருத்தப்பட்டு புதிய
வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. 1993-ல் தீவிர
முறையில் வாக்காளர் பட்டியல் திருத்தப்படலாம். அவ்வாறு
வாக்காளர் பட்டியல் தீவிர முறையில் திருத்தப்படும்போது
வாக்கு சாவடிகளில் இணைக்கப்பட்ட உள்ள வாக்காளர்களின்
எண்ணிக்கை அதிகரித்து இருந்தால், வாக்கு சாவடிகளை
மாற்றி அமைக்கவும் பிற காரணங்களுக்காக வாக்குசாவடி
களில் மாற்றங்கள் செய்யப்பட்டு அதற்கு ஏற்ப வாக்காளர்
பட்டியலும் தயாரித்து அச்சடிக்கப்படும். அப்போது
வேண்டுமானால் பூப்பாண்டியபுரம் வாக்காளர்களின் வசதிக்
காக அவர்களை வேறு வாக்கு சாவடிகளோடு இணைக்க
முடியுமா அல்லது பூப்பாண்டியபுரத்தில் போதுமான அளவுக்கு
வாக்காளர்கள் இருந்து அங்கேயே அமைக்க முடியுமா என்
பதைப்பற்றி ஆராயலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 571
திரு. வி. பி. சந்திரசேகர் ; மாண்புமிகு சட்டத்துறை
அமைச்சர்.

571—

## நீதி மன்றங்களை ஒரே இடத்தில் அமைத்தல்

***3903—திரு. வி. பி. சந்திரசேகர் :**
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா :

பொள்ளாச்சி நகரில் பல இடங்களில் அமைந்துள்ள
நீதிமன்றங்களை ஒரே இடத்தில் அமைக்க அரசு முன்
வருமா?

[1992 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சி நகரில் அமைந்துள்ள நீதிமன்றங்களை ஒரே இடத்தில் அமைக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 9-35

**திரு. வி. பி. சந்திரசேகர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி நகரிலே அமைந்திருக்கின்ற நீதிமன்றங்கள் நகரின் பல்வேறு பகுதிகளிலே பிரிந்து இருக்கின்ற காரணத்தினாலே வழக்குக்காக வருகின்ற மக்களுக்கும் வழக்காடுகின்ற வழக்கறிஞர்களுக்கும் நடைமுறைச் சிக்கல் ஏற்படுகிறது. அதற்குத் தான் ஒரே இடத்தில் நீதிமன்றங்கள் இருக்க வேண்டுமென்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் இலலை என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க அரசிடம் இந்த நீதிமன்றங்களை எல்லாம் ஒருங்கிணைப்பதற்கு வேறு ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியைப் பொறுத்த வரையில் 4 நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஒன்று டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட், இரண்டாவது 3 ஜுடிஷியல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்ஸ் இன்று உயர் நீதிமன்றம் அரசுக்கு ஒரு பரிந்துரை அனுப்பியிருக்கிறது. வேண்டுமானால் ஜுடிஷியல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு மேல் முதல் தளத்தில் இடம் இருக்கிறது. அதில் ஒரு புதிய கட்டிடத்தைக் கட்டி டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் அமைத்துக் கொள்ளலாம் அதற்கு டிசைன் இதோ என்றும், அதற்கு 11,15,000 ரூபாய் அனுமதித்திருக்கிறோம் என்றும் உயர் நீதிமன்றம் தமிழக அரசுக்கு அனுப்பியிருக்கிறது. விரைவில் அந்த முடிவின் அடிப்படையில் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டை ஜுடிஷியல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட் வளாகததிலேயே அமைத்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.பி. சந்திரசேகர் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நீதிமன்றங்கள் வெளியே இருக்கின்ற காரணத்தினாலே வெளியாருடைய கட்டிடங்களிலே வாடகைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்டிடங்களை காலிசெய்யச் சொல்லி அந்த வீட்டின் உரிமையாளர் இன்றைக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த இடைக்காலத்திலே இந்த நீதிமன்றங்கள் இருக்கின்ற இடத்திலே அரசினுடைய வளாகத்திலே அரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள் காலியாக இருந்துகொண்டிருக்கின்றன. அந்தக்



1992 ஏப்ரல் 21]

கட்டிடங்களிலே தற்காலிகமாக அந்த நீதிமன்றங்கள் நடைபெற அரசு முன்னுரிமை அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அளித்த தகவலின்படி அது உசிதமா என்று அரசு ஆலோசனை செய்து அதற்கு தகுந்தபடி நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 572, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**572—**

## கல்வியின் தரத்தை உயர்த்த நடவடிக்கை.

*** 2433—திரு. க. அர்ச்சுனன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தரம் தாழ்ந்துள்ளதற்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் காரணமா என்பதை அரசு ஆய்வு செய்யுமா?

(ஆ) கல்வியின் தரத்தை உயர்த்த பறக்கும் படை அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு இதை ஆய்வு செய்யும்.

(ஆ) ஏ.ஈ.ஓ., டி.ஐ. ஆகியோருக்கு ஆண்டுக்கு மூன்று முறை திடீரென பார்வையிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. க. அர்ச்சுனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை கண்காணிக்கும் பள்ளி துணை ஆய்வாளர்கள், உதவி கல்வி அலுவலர்கள் ஆகியோர்களுக்கு தற்போது தவறு செய்யும் ஆசிரியர் மீது மேற்பார்வையிட மட்டும்தான் அதிகாரம் இருக்கிறது. அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் இல்லை. டி. ஈ. ஓ. வுக்கு மட்டுமே அதிகாரம் இருப்பதால் கட்டுப்பாடின்றி சில ஆசிரியர்கள் தங்கள் இஷ்டத்திற்கு செயல்படுகிறார்கள். எனவே தவறு செய்பவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த உதவி கல்வி அலுவலர்

[1992 ஏப்ரல் 21

களுக்கு அதிகாரம் அளிக்கப்படுமா? அதன் மூலம் இன்னும்
ஒழுக்கம் அதிகமாகும் என்கிற காரணத்தினால் அந்த
அதிகாரம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே. அது குறித்து அரசு
பரிசீலிக்கும்.

**திரு. சு. அர்ச்சுனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மற்ற துறையிலே தவறு செய்பவர்கள் மீது
ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது போல கல்வி இலாக்காவிலே
எடுக்கப்படுவதில்லையே. எனவே ஒழுக்கத்தைக் கற்றுக்
கொடுக்க வேண்டிய ஆசிரியர்களே ஒழுங்காக நடந்துகொள்ள
வேண்டும் என்கிற வகையில் அவர்கள் மீது டிசிப்ளினரி
ஆக்ஷன் எடுக்கப்படுவதில்லை. மற்ற துறைகளில் சின்ன
தவறு இருந்தால் கூட டிசிப்ளினரி ஆக்ஷன் எடுக்கப்படு
கிறது. கல்வி இலாக்காவிலே பார்ப்போமேயானால்
அங்கொன்றும், இங்கொன்றுமாகத்தான் டிசிப்ளினரி ஆக்ஷன்
எடுக்கப்படுகிறது. எனவே இதை ஒரு சீரியஸ் மேட்டராக
எடுத்துக் கொண்டு இந்த ஒழுங்கு நடவடிக்கை பிரச்சினையை
அதிகப்படுத்தி ஆசிரியர்கள் ஒழுங்காக கல்வி கற்றுக் கொடுக்கக்
கூடிய நிலையை அரசு உருவாக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர்
புரட்சித் தலைவி அவர்களுடைய அறிவுரைக்கேற்ப இந்தப்
பள்ளிக்கூடங்களிலே ஒழுக்கம் பற்றிய தவறுகள் அல்லது
தரம் குறைந்திருப்பது போன்ற இந்த நிலைமைகள் எல்லாம்
ஆராய்ந்து அதற்கு தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும்
என்று அவர்கள் கூறியதற்கேற்ப அரசு சில நடவடிக்கைகளைப்
பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. ஆர். இராமசாமி
அம்பலம்.

**திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே
தனியார் நடத்தக்கூடிய பள்ளிகளுக்கும், அரசு நடத்தக்கூடிய
பள்ளிகளுக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அரசாங்கம்
நடத்தக்கூடிய பள்ளிகளுடைய தரம் மிகவும் குறைவாக இருக்
கிறது. இது அரசுக்குத் தெரியுமா? அதை சரி செய்ய அரசு
ஏதாவது திட்டம் வைத்து இருக்கிறதா என்பதை அறிய
விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 21]

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு இது தெரியும்,
உங்களைப் போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வப்
போது வந்து என்னிடத்தில் சொல்லவும் செய்கிறார்கள்.
பொது மக்களிடம் தொடர்பு கொள்ளும் போது அவர்களும்
சொல்கிறார்கள். எங்களிடத்திலே சிபாரிக்கு வருகிறவர்கள்
கூட ஒரு அரசு உயர்நிலைப் பள்ளியில் சேர்ப்பதற்காக யாரும்
சிபாரிசுக்கு இதுவரைக்கும் வந்தது இல்லை. தனியார் பள்ளி
களில் சேர்ப்பதற்காகத்தான் எங்களிடத்தில் சிபாரிசுக்கு
வருகிறார்கள். ஆகவே, இதையெல்லாம் எதைக் காட்டு
கிறது என்றால் தனியார் துறையில் பள்ளிகள் நல்லமுறை
யில் நடைபெறுகின்றன என்ற ஒரு நம்பிக்கை மக்களிடத்திலே
இருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. அதைப்போலவே
அரசு பள்ளிகளும் நடக்க வேண்டும் என்று நாம் விரும்புகி
றோம், அதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து
வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி செ. சுந்தராம்பாள்.

**திருமதி செ. சுந்தராம்பாள் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அரசு தொடக்கப்பள்ளிகளில் ஆசிரியர்கள்
குறிப்பிட்ட நேரத்திற்கு பள்ளிக்கு வருவது இல்லை. தன்
னுடைய சொந்த வேலைகளை எல்லாம் பார்த்துவிட்டு 11,12
மணிக்கு வந்து திறக்கிறார்கள். கல்வியின் தரம் மிகவும்
குறைவாக இருக்கிறது. எனவே இவர்களை கண்காணிக்க
ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பறக்கும் படை அமைக்கும் திட்டம்
அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, திடீரென்று ஆய்வு செய்து
தவறு கண்டுபிடிக்கப்பட்டால் அதே இடத்திலேயே அந்த
ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரம் படைத்த
ஒரு குழு தேவை என்பதை அரசு நன்கு உணர்கிறது. அதை
மாநில அளவிலேயும் மாவட்ட அளவிலேயும் நாம் ஏற்பாடு செய்து
அவர்களை அனுப்பி தவறு செய்கின்ற ஆசிரியர்கள்
மீது நடவடிக்கை எடுக்கவும் அரசு இப்போது திட்டமிட்டு
இருக்கிறது. ஆகவே, எங்களிடத்திலே வருகிற புகார்களின்
அடிப்படையிலேயும், அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள்
போன்றவர்கள் சொல்லுகின்ற புகார்களின் அடிப்படையி
லேயும் அந்த பறக்கும் படை போன்ற அந்தக் குழு பணி
யாற்ற வேண்டுமென்று நாம் விரும்புகிறோம், அதற்கான நட
வடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

[1992 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Dr. Beatrix D'Souza.

Dr. BEATRIX D'SOUZA: Hon'ble Speaker Sir, we cannot categorically state that there are no weak students, but only poor Teachers. I think we should consider the modern concept of "Streaming" where, the weak students are identified and put in a separate Section and the best Teachers should teach that particular Section. I think forming a 'flying squad' is an insult to Teachers. Thank you.

HON. DR. C. ARANGANAYAGAM: Mr. Speaker, Sir, we cannot say there are no bad Teachers.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப்பள்ளிகளுக்கு நாம் திடீரென்று அந்தப் பக்கம் போகும்போது பார்த்தால் உண்மையிலேயே அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திருமதி சுந்தராம்பாள் அவர்கள் சொன்னதைப் போன்று காலந் தாழ்த்தி ஆசிரியர்கள் வருகிறார்கள். வந்த உடனே அந்த மேசையின் மீது காலை தூக்கிப் போட்டுக்கொண்டு சிகரெட்டு பிடிக்கிறார்கள். இந்த சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் அந்தக் குழந்தைகளும் இந்த ஆசிரியர்களைக் கண்டு பயப்படுவது இல்லை. ஆகவே, ஆசிரியர்களுக்கு ஒரு தனி பயிற்சி கொடுத்தாகிலும் இப்படிப்பட்ட ஒழுக்கக் கேடான காரியங்கள் செய்யக்கூடாது என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப்பள்ளிகள் பற்றியும் வேறு கல்வி நிலையங்கள் பற்றியும் இதுபோன்ற புகார்கள் பற்றியும் இங்கே மட்டும் அல்ல வெளியே சொல்லுவதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறது. இப்போது ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் அமைக்க வேண்டுமென்று விதிகளை அமைத்து அதை முறைப்படி நடத்த நாங்கள் ஏற்பாடு செய்து இருக்கிறோம். பெற்றோர்கள் அந்தப் பள்ளிக் கூடத்திலே அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். தன் குழந்தைகள் படிக்கிற பள்ளிக்கூடத்திலே அக்கறை எடுத்துக்கொண்டு பெற்றோர்-ஆசிரியர் சங்கத்திலே அவர்கள் உறுப்பினராகி-



1992 ஏப்ரல் 21]

உறுப்பினர் ஆவதற்கு ஒன்றும் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை—அந்த சங்கத்திலே ஈடுபட்டு அந்த பொறுப்பை அவர்கள் எடுத்துக்கொண்டு அவர்கள் அந்தப் பள்ளிக்கூடம் நடப்பதிலே பங்கு எடுத்துக்கொள்வார்களானால், இந்த தவறுகள் பெரும்பாலும் இருக்காது. அதற்கான ஏற்பாட்டை நம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் இருக்கும் போதே செய்து இருக்கிறார்கள். பையனை பள்ளிக்கூடத்திலே சேர்ப்பதற்கு கூட பெற்றோர்கள் வருவது இல்லை என்ற நிலையில் தான் இது போன்ற தவறுகள் அதிகமாக இருக்கிறது. ஆகவே, பெற்றோர்கள் என்றைக்கு பள்ளிக்கூடத்திலே அக்கறை எடுத்துக்கொள்கிறார்களோ அன்றைக்கு தான் இதற்கு ஒரு முடிவு வரும். தவறு செய்கிற ஆசிரியர்கள் மீது உடனடியாக அங்கே நீங்கள் அவர்களிடத்திலே சொல்லலாம், அதிகாரிகளிடத்திலே சொல்லலாம் எங்களிடத்திலே சொல்லலாம், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியின் தரத்தை உயர்த்த பறக்கும் படை அமைப்பதை விட கல்விக் கண் திறக்கும் படை அமைத்தால் மிக சிறப்பாக இருக்கும் என்ற அடிப்படையில் இந்த அரசு நர்சரிப் பள்ளிகளை அங்கீகரித்து இருக்கிறீர்கள். அந்த நர்சரிப் பள்ளிகள் பெரிய நகரங்களில் மட்டும் தான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு எலிமெண்டரி ஸ்கூல் இருக்கின்ற இடங்களில் எல்லாம் நர்சரி பள்ளியை அமைத்தால், இந்த நர்சரி பள்ளிகளுக்கு மகத்தான வரவேற்பு மக்கள் மத்தியிலே இருக்கின்ற காரணத்தினால் ஒவ்வொரு கிராமத்திலும், எலிமெண்டரி எஜுகேஷன் இருக்கின்ற இடங்களில் எல்லாம் நர்சரி பள்ளியைத் துவக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் இத்தகைய பள்ளி, முன் பருவக் கல்வியைத் தருவதற்கான ஒரு கருத்து இருந்துகொண்டு இருக்கிறது. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். காலத்திலேயே அதை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

[1992 ஏப்ரல் 21

**திரு. வி. கே. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் ஒரு சில இடங்களில் 10, 15 ஆண்டுகளாக ஒரே இடத்தில் இருக்கிறார்கள். அவர்களை அரசாங்கம் வேறு இடத்திற்கு மாறுதல் செய்யும்போது. அவர்கள் வேண்டுமென்றே லீவ் போட்டுவிட்டு ஒரு மாதம், 2 மாதம் கூட அந்தப் பள்ளிக்குச் செல்லாமல் அவர்கள் காலத்தைத் தவிர்க்கிறார்கள். ஆக்வே, அப்படி லீவ் போடுகிறவர்கள் மீது, ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா? அதோடு மட்டுமல்லாமல், நான் வழியிலே போய்க்கொண்டு இருந்தபொழுது, ஒரு ஆசிரியர் பள்ளி டைமிலே பீடியை பற்றவைத்துக்கொண்டு, பக்கத்திலேயே குடித்துக்கொண்டு இருந்தார். அவர்கள் பாக்கெட்டிலே பீடி, சிகரெட் பெட்டியை வைத்திருப்பது அந்தக் குழந்தைகளுக்கு மாணவர்களுக்குத் தெரிகிறது. (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சின்னசாமி, கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. வி. கே. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, சட்டமன்றத்தின் வாயிலாக, பள்ளி நேரங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்கள், அது உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி ஆரம்பப் பள்ளியாக இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட பீடி, சிகிரெட், தீப்பெட்டி போன்ற பொருள்களை வைத்துக்கொள்ளக் கூடாது என்ற உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா என்பதோடு அந்த ஆசிரியர்கள் மீது உடனடியாக நடவடிக்கையும் எடுக்கவேண்டும். இப்போது விடுதலைப்புலி கள், இலங்கையைச் சேர்ந்தவர்கள் அங்கே ஒரு 3 ஆயிரம் பேர் எங்களுடைய தொகுதியிலே இருக்கிறார்கள்.... (மணி யடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்களே பதில் சொல்கிறீர்கள்.

**திரு. வி. சே. சின்னசாமி :** இல்லை. 3 ஆயிரம் பேர் அங்கே முகாமிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கேள்வி கேட்கிறீர்களா? பதில் சொல்கிறீர்களா?

**திரு. வி. கே. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய குழந்தைகளுக்காக.... (மணியடிக்கப்பெற்றது.)



1992 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. எஸ். அன்பழகன். (குறுக்கீடு) நீங்களே பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். உட்காருங்கள்.

**திரு. வி. கே. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதியிலே மட்டும் 3 ஆயிரம், 4 ஆயிரம் பேர்களுக்கு மேல் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கு (மணி யடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர் கேட்ட பீடி, சிகரெட் வைத்துக் கொள்வதைத் தடை செய்வதற்கு முடிவு எடுக்கப்படுமா என்ப தற்கு மட்டும் பதில் சொல்லலாம்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் மட்டுமல்ல, வெளியார்கூட பள்ளிக்கூடத்திற்குள்ளே பீடி, சிகரெட் டை கொண்டு போக கூடாது; பிடிக்கக்கூடாது என்கிற ஒரு நடை முறை ஏற்கெனவே இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆகவே ஒவ்வொருவராக மீறி இப்போது ஆசிரியர்கள் மீறுகிற அளவிற்கு வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். அன்பழகன்,

**திரு. எஸ். அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளிகளில் கல்வித் தரம் உயர ஒரு வகுப்பிற்கு ஓராசிரியர் என்ற முறை கொண்டுவரப்படுமா அல்லது கல்விக்கே அடிப்படையான முதல் 3 வகுப்புகளில் தனித் தனி ஆசிரியர்களை நியமிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு ஆசிரியர் போடுவதுதான் சிறந்த முறை. ஆனால் நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் போதுமான ஆசிரியர் களை நாம் நியமிக்க முடியவில்லை. அதன் காரணமாக, குறைந்த ஆசிரியர்களை வைத்துக்கொண்டு அதிகப்படியான மாணவர்களுக்கு சொல்லித்தரவேண்டிய சூழ்நிலை இன்றைக்கு நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. இப்போது, இந்த ஆண்டில் ஓராசிரியர் பள்ளிகளை இரு ஆசிரியர் பள்ளி களாகவும், ஈராசிரியர் பள்ளிகளை 3 ஆசிரியர் பள்ளி களாகவும் மாற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இருக்கின்றார்கள். அதன்படி ஓராசிரியர்

பள்ளிகளே இனி இருக்காது. அப்படிப்பட்ட பள்ளிகளில் இரண்டு ஆசிரியர்கள் இருப்பார்கள். அந்த இரண்டு ஆசிரியர்களிலே ஒரு ஆசிரியர் முதல் வகுப்பிற்கும் இன்னொரு ஆசிரியர் மற்ற வகுப்பிற்கும் என்கிற ஒரு முறையைக்கொண்டு வரலாம் என்று அரசு பரிசீலிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமாகப் பெண் ஆசிரியப் பெரு மக்கள் பள்ளிக்கூட நேரங்களில், கல்கி, ஆனந்த விகடன், மங்கை, இதயம் போன்ற பத்திரிகைகளைப் படித்துக் கொண்டும், அதே நேரத்தில் மாணவ மாணவியர் களை காப்பி வாங்கிக் கொண்டு வா; டீ வாங்கிக்கொண்டு வா என்றும் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இதை நான் என் கண்ணாலேயே பார்த்து இருக்கிறேன். அதை அரசு அறியுமா? அப்படி அறிந்தால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியெல்லாம் செய்யக் கூடாது என்று ஆசிரியர்களுக்கு அறிவுரை தரப்படும். மீறி நடந்தால் அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. நடேசன் பால்ராஜ்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலே பெரும்பாலான ஆசிரியர்கள் நேரத்தில் வருவதில்லை. வந்த பிறகு மிக எளிமையான குழந்தைகளுக்கு நன்றாகப் பேன் பார்க்கத் தெரியும் என்ற எண்ணத்தோடு அந்த நேரம் முழுவதும் பேன் பார்த்துக்கொண்டுதான் இருக்கி றார்கள். பெண் டீச்சர்கள். இதை உடனடியாக நட வடிக்கை எடுத்து, சரியான பாடங்களைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க ஆவன செய்வீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கேள்விகளிலிருந்து தனியார் துறை பள்ளிகள் சரியாக நடைபெறுவதாகவும், பொதுத் துறை யிலே நடைபெறும் பள்ளிகளில் இதுபோன்ற தவறான நடைமுறைகள் இருந்து வருவதும் நல்லபடியாக நமக்கும்





தமிழ்நாட்டிற்கும் தெரியக் கூடிய ஒரு செய்தியாக ஆகிவிட்டது. ஆகவே, இதை அரசு நன்கு உணர்ந்து, தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

இன்றைக்கு, நாளையிலிருந்து என்பது மட்டும் அல்ல; ஒரு சில பள்ளிகளுக்கு ஆசிரியர் பல நாட்கள் தொடர்ந்தே போகாமல் இருக்கின்ற பள்ளிகளெல்லாம் இருக்கின்றன. குறிப்பாக, வால்பாறை தொகுதியில் சிம்கோனா என்ற பகுதியிலே ஒரு பள்ளிக் கூடத்தை ஆரம்பித்திருக்கின்றோம். அங்கே ஆசிரியர்களைப் போட்டால் போவது இல்லை. லீவ் எடுத்துக் கொள்கிறார் கள். அதற்குச் சட்டமும் விதியும் இடம் தருகிற காரணத் தால் அவர்களை நாம் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட பள்ளிகளையெல்லாம் அரசு நடத்துவதற்குப் பதிலாகத் தனியாரிடம் விட்டு விடலாமா என்ற யோசனையை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 573. திரு. து. மூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

573— சீர்காழியில் அரசு கலைக் கல்லூரி.

*3572—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சீர்காழியில் ஓர் அரசு கலைக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு தொடங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, எனது சீர்காழி தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரி இல்லாததால் அங்கே கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்கள் வெகு தொலைவில் சென்று படிக்கக்கூடிய ஒ சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் மிகவும் சிரமப்படு கின்ற ஒரு சூழ்நிலையும் ஏற்படுகின்றது. இந்த நிலையை போக்க அவசியம் அங்கு ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத் வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து இப்பொழுது இல்லாவிட்டாலும், இனி வரும் காலங்களி இனி வரும் ஆண்டிலாவது மறுபரிசீலனை செய்து நம்முடை

சீர்காழி தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியிலே மட்டுமல்ல; எந்த தொகுதியிலேயும் அரசின் சார்பிலே கலைக்கல்லூரியை அமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை. இப்பொழுது இருக்கின்ற நிலைமையிலே, கலைக் கல்லூரி அவசியமில்லை என்றே அரசு கருதுகிறது. அதனாலே, அரசாங்கப் பணத்திலேயிருந்து அப்படியொரு முயற்சி எடுக்க வேண்டியதில்லை என்று நாம் கருதுகிறோம். அவ்வளவு முக்கியமான, அவ்வளவு தேவையான அளவிற்கு இந்தக் கலைக்கல்லூரி படிப்பு இல்லை என்பதையும் அரசு உணர்கிறது. ஆகவே, அரசின் சார்பில் சீர்காழியிலே மட்டுமல்ல, வேறு எந்த ஊரிலேயும் ஆரம்பிக்கிற கருத்துரு அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 574. திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

574—

ஆரம்ப சுகாதார மையத்தை மருத்துவமனையாக்குதல்.

*1296—**திரு. ச. புரட்சிமணி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம், பெண்ணாடம் நகரில் ஆரம்ப சுகாதார மையத்தில் 21 படுக்கை வசதி செய்து மருத்துவமனையாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், பெண்ணாடம் ஆரம்ப சுகாதார மையத்தை 21 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக உயர்த்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இப்பொழுது இல்லை.

**திரு. ச. புரட்சிமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என் தொகுதியில் பெண்ணாடம் நகரம் மிக முக்கிய நகரமாகும். அந்த நகரத்திலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலயத்திற்குச் சுற்று வட்டாரங்களிலிருந்து சுமாராக 30,000 மக்கள் வந்து தினமும் போகிறார்கள். அந்த ஆரம்ப சுகாதார நிலையம் 21 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக மாற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே 8 படுக்கைகள் அங்கே இருக்கின்றன. 21 ஆக உயர்த்த முடியாது என்று ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். நிதி நிலைமையின் காரணமாக இப்பொழுது அதைப்பற்றிப் பரிசீலிக்க முடியாது.

**திரு. ச. புரட்சிமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கு 8 படுக்கைகள் உள்ளன. ஆனால் இருந்தாலும் அந்த 8 படுக்கைகள் சரிவர போதாத நிலைமை உள்ளது. அதனால் இந்த ஆண்டில் இல்லை என்றாலும், அடுத்த ஆண்டிலாவது அது மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அடுத்த ஆண்டு அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். இப்பொழுது முடியாது. அடுத்த ஆண்டு நிதி நிலைமையைப் பார்த்த பின்னாலேதான் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். பி. பரமசிவம்.

**திரு. ஆர். பி. பரமசிவம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் அப்கிரேட் பி.எச்.சி. ஆக அதாவது கம்யூனிட்டி ஹெல்த் சென்டராக மாறி இருக்கின்றன என்பதனை மாண்புமிகு அமைச்சரவர்களின் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் விரிவாகச் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 575, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

575—

பாச்சேரியில் சித்த மருத்துவமனை.

*7894—**திரு. சி. இராமசுவாமி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வராயன்மலை பாச்சேரியில் சித்த மருத்துவமனை திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கல்வராயன்மலை பாச்சேரி சித்த மருத்துவம் 1987—1988 ஆம் ஆண்டிலேயே அரசு அனுமதி அளித்து கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. தற்காலிகமாக மொட்டாம் பட்டு கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் இப்போது இயங்கி வருகிறது. கட்டிடத்திற்கான பணிகள் பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு மேல் நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 9-55

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அங்கு கட்டிடம் கட்ட எந்தவித முயற்சியும் நடைபெறவில்லை. சித்த மருத்துவ மனை கட்டுவதற்காக 2 ஆண்டுகளுக்கு முன்னால், பாச்சேரியில் இடம் ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் இதுவரையில் கட்டிடம் கட்டப்படவில்லை. உடனடியாகக் கட்டிடம் கட்ட, அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3—7—1990 அன்று பொதுப் பணித்துறையிடம் இது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சுகா தார நிலையத்திற்காகவும், குடியிருப்புக்காகவும் 5,10,000 ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலை துவங்கவில்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி பி.டபிள்யு.டி. யோடு பேசி, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து, பின்னாலே தெரி விக்கப்படும்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும் போது, மொட்டாம்பட்டியில் சித்த மருத்துவமனை செயல்படுவ தாகக் கூறினார்கள். இந்தத் தொகுதியில் அந்த சித்த மருத்துவ மனை எனக்குத் தெரிந்து, இதுவரையில் செயல்படவில்லை. எனவே, உடனடியாக அரசு அங்கு ஒரு கட்டிடத்தைக் கட்டி, சித்த மருத்துவ மனையைத் திறக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத் திலேயே அது இயங்கிவருவதாக அங்கே தகவல் கொடுத் திருக்கிறார்கள். அது, இப்போது அங்கே சரியாக இயங்காமல் இருந்தால், அதற்கான நடவடிக்கை எடுக்கப் படும். ஏற்கெனவே பணம் ஒதுக்கப்பட்டு, அந்த வேலைகள் துவங்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டி ருக்கிறது. என்ன காரணத்தினால் அது நின்றிருக்கிறது என்பதைப் பார்த்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 576, திரு. கு. லாரன்ஸ், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. மா. சுந்தரதாஸ், நீங்கள் கேட்கிறீர்களா? திரு. மா. சுந்தரதாஸ். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

576—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மரங்கள் வெட்டப் படுவதைத் தடை செய்ய சிறப்புத் திட்டம்.

*2056—திரு. கு. லாரன்ஸ் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டம் பாதுகாக்கப்பட்ட காடு களிலுள்ள சிறப்பான தேக்கு, ஈட்டி, கடம்பு மற்றும் பல்வேறு மரங்களின் விலை மதிப்பு குறித்து அரசு மதிப்பீடு செய்துள்ளதா?

(ஆ) இச்சிறப்பான மரங்கள் சென்ற 25 ஆண்டு களில் எவ்வளவு ரூபாய் பெறுமானமுடையவை கடத்தல் காரர்களாலும் மற்றவர்களாலும் வெட்டப்பட்டுள்ளது.

(இ) இதனைத் தடை செய்ய அரசு சிறப்புத் திட்டம் ஏதும் வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூபாய் 83 லட்சம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த பாதுகாக்கப்பட்ட காடுகளில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள தேக்கு போன்ற நல்ல மரங்கள் ஃபெல்லிங் ட்ரீஸ் கிடைக்கின்றன. அவை பத்தாண்டுகள் ஆகியும் கணக்கெடுக்கப்படவில்லை. அவற்றை ஏலம் மூலமாக 'ஓபன் ஆக்ஷன்' மூலமாகக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற குறிப்புகள் அரசின் கவனத்திற்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மொத்தக் கணக்கெடுப்பில் பார்க்கும்போது, அங்கே இருக்கிற மரங்களு டைய மதிப்பீடு, 295 கோடி ரூபாய். அவற்றைப் பாதுகாக் கின்ற வகையிலே அரசு பல்வேறு நடவடிக்கைகளை இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறது. பெரிய அளவிலே இருக்கிற காடுகளை சிறியதாக மாற்றியமைப்பதற்கும், வனக் குற்றங்களைத் தடுப்பதற்காக ஆயுதங்களை வாங்குவதற்கும், முக்கியமான வனப் பகுதிகளில் கம்பியில்லாத் தொடர்பு, இந்திய நாட்டி னுடைய வரலாற்றில், தமிழகத்தில் 1993-வது ஆண்டிற்குள் முடிகிற அளவுக்கு, நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எந்தத் தவறுகள், எந்த அளவிலே யும் நடைபெறாமல் இருப்பதற்கு இந்த அரசு நட வடிக்கை மேற்கொள்ளும். உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, கீழே மரங்கள் விழுந்திருக்கின்றன என்கிற குறிப்புகள் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமார தாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரங்களை வெட்டுவதைத் த[illegible]ப்பதற்காக பொதுவாக ஒவ்வொரு மாவட்ட வாரியாக 'ஸ்குவாட் பார்க்கிங்' பொது மக்களைக் கொண்ட விதத்தில தனியாக ஒரு குழுவினை அமைத்து கண்காணிக்கிற விதத் தில் ஒரு 'ஸ்குவாட்' அமைப்பதற்கு இந்த அரசு முன் வருமென்று சொன்னால், பெருவாரியாக திருட்டுத்தனமாக மரங்களை வெட்டுவதைத் தடுக்க முடியும். எனவே, அந்த விதத்தில், ஒரு 'ஸ்குவாட்' அமைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்பு மிகு பேரவைத் தலைவா அவர்களே, மரங்கள் வெட்டியது அந்தக் காலம். ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, எந்த இடத்தில் மரங்களை வெட்டினாலும், கடுமையான நடவடிக்கை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே போல, பொது மக்களுடைய விழிப்புணர்ச்சிக் குழு ஒன்றை உருவாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டி ருக்கிறது. ஆகவே, பொதுமக்கள் அந்த நேரத்திலே எங்களுடைய கவனத்திற்கு ஏதாவது ஒரு இடத்தில், ஒரு சிறிய தவறு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டாலும் கூட, உடனுக்குடன் இந்த அரசு தங்குதடையின்றி யாராக இருந்தாலும் கைது செய்து, குண்டர் சட்டத்திலே கைது செய்து கொண்டிருக்கிறது. ஆகவே இது போன்ற தவறுகள், இந்த அரசைப் பொறுத்த வரையில், நம்முடைய தமிழக அரசு, அதுவும் ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் நடைபெறாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே, பல....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, குமரி மாவட்டத்தைப் பற்றியது (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதற்கு உங்களுக்குப் பதில் வராது. இது 'ஸ்பெஸிபிக் கொஸ்டியன்' குமரி மாவட்டத்தைப் பற்றியதாகும்.

முற்பகல் 10-00

வினா எண் 577, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

577—
அரசு ரப்பர் கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மேற்பார்வை யாளராக பதவி உயர்வு அளித்தல்.

*3118—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் கழகத் தில் 20 ஆண்டுகளாக பணியாற்றி வரும் பால்வெட்டும் தொழிலாளர்களில் 100 பேருக்கு ஒருவர் என்ற வீதத்தில் மேற்பார்வையாளர் (Supervisor) பதவி உயர்வு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

[1992 ஏப்ரல் 21

(ஆ) ஆம் எனில், எப்போது பதவி உயர்வு அளிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் கழகத்தில் 20 ஆண்டுகளாக பணியாற்றிவரும் பால்வெட்டும் தொழிலாளர்களில் 100 பேருக்கு ஒருவர் என்ற வீதத்தில் மேற்பார்வையாளர் (Supervisor) பதவி உயர்வு கொடுக்க அரசிடம் செ▪ற் குறிப்பு ஏதும் இல்லை.

**டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் கழகத்தில் 20 ஆண்டுகளாக 'டேப்பர்' வேலை பார்த்து வருகிறார்கள். இவர்களுக்கு சூப்பர்வைசர்களாகப் பதவி உயர்வு கொடுக்காவிட்டாலும் 'டேப்பர் கிரேடு 1, 2,3, என்று சீனியாரிட்டி முறையில் பல்வேறு பதவி உயர்வு கொடுக்க அரசு முன்வருமா என்றும், அவர்களுக்கு ஊக்க ஊதியம் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது சூப்பர்வைசர்களாக அவர்களுக்குப் பதவி உயர்வு தரப்படுமா என்பதுதான். அங்கே சூப்பர்வைசர்களாகப் பணியாற்றுகின்றவர்கள், சரகர்கள் மற்றும் வனக் காவலர்கள் தான் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். 100 பேருக்கு ஒருவராகப் பார்வையிட்டு ஏறத்தாழ அந்தப் பணியிலே உள்ளவர்கள் 42 பேர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல இது போன்ற குறிப்புகள் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 578. திரு. ம. சின்னசாமி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

578—

**போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் ரப்பர் தொழிற்சாலை.**

*5270— **திரு. ம. சின்னசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



1992 ஏப்ரல் 21]

போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் ரப்பர் தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ம. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு ஏராளமான போக்குவரத்துக் கழகங்களை வைத்திருக்கிறது. ஆகவே போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் தனியாக ஒரு ரப்பர் தொழிற்சாலையை ஆரம்பித்தால் போக்குவரத்துக் கழகங்களினுடைய சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கு அது ஏதுவாக இருக்கும். ஆகவே, எதிர்காலத்தில் அரசு இது குறித்து பரிசீலிக்குமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரப்பர் பாலிலிருந்து ரப்பர் தயாரிப்பதற்கு பல்வேறு தொழில்சாலைகள் இன்றைக்கு இருக்கின்றன. அதேபோல, குறைந்த அளவிலே நம்முடைய போக்குவரத்துக் கழகங்களுக்கு வாங்கிக் கொண்டிருக்கிறோம். பல்வேறு தொழிற்சாலைகள் நடத்துகின்றபோது, அதிலே சரியான முறையிலே அந்த ரப்பர் பாலை வடித்து, அதைச் சரியான முறையிலே தயாரிக்க முடியவில்லை என்றால், அந்த ரப்பரைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற டயர்களைக் கொண்டு ஓட்டுகின்ற நேரத்தில் பல்வேறு தவறுகள் ஏற்படும் என்ற காரணத்தால் இப்போது ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு துறையிலிருந்தும் ரப்பரை நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். டன்லப் டயர் ஒருபுறம். இதேபோன்று பல்வேறு டயர்களை அந்த அந்தப் பகுதிக்கு ஏற்றவாறு, அந்த அந்தப் பாதைகளுக்கு ஏற்றவாறு நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, ஒரு குறிப்பிட்ட ரப்பரைத் தயாரித்து, தமிழகப் போக்குவரத்துக் கழகங்களில் பயன்படுத்துவது என்பது சுலபமான காரியம் அல்ல. ஆகவே தான் அதை அரசு ஏற்க இயலவில்லை என்று குறிப்பிட்டேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மா. சுந்தரதாஸ்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலையைத் துவக்குவதற்காக ஏற்கெனவே மாண்புமிகு

முதல்வர் அவர்கள் 400 கோடி ரூபாயை லோனாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஏற்கெனவே கிடைக்கிற ரப்பரே போதுமானது. அதுவும் உங்கள் இலாகாவில் தான் இருக்கிறது. அரசு ரப்பர் கழகத்திற்குக் கிடைக்கின்ற ரப்பரும் தனியார்கள் உற்பத்தி செய்கின்ற ரப்பரும் சேர்ந்தால் ரப்பர் தொழிற்சாலைக்கு அதிகமான ரப்பர் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு நம்முடைய போக்கு வரத்துக் கழகமே ஒரு தொழிற்சாலையை கன்னியாகுமரி பகுதியிலே உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி யிலே இருக்கிற ரப்பர் தொழிற்சாலை இன்றைக்கு நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருப்பதை உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆண்டு ஒன்றுக்கு 2½ கோடி யிலிருந்து 3 கோடி வரை நஷ்டம் ஏற்படுகின்ற சூழ்நிலை உங்களுக்கு நன்றாகத் தெரியும். அரசு ஒரு நிலையை எடுக்கிறபோது, அதை ஆய்வு செய்து அதில் லாபம் ஈட்ட முடியுமா? அதனால் அந்தப் போக்குவரத்துத் துறைக்கு லாபம் வருகிறதா என்று ஆய்ந்து கொண்டிருக்கி றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டி ருப்பதை அரசு கவனத்தில் கொள்ளும். அது சரியான முறையிலே இயங்க முடியும் என்று அரசு கருதினால் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வதற்கு அரசு மறுபரிசீலனை செய் யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞான சேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் உள்ள சாலை களில், தார் சாலைகளில் மேடு பள்ளங்கள் இருக்கின்ற காரணத்தினால் போக்குவரத்துக் கழகங்களில் ஓடக்கூடிய வண்டிகளில் டயர்கள் எல்லாம் இன்று அடிபடுகின்றன. ஆகவே, வெளிநாடுகளில் இருப்பதைப்போல ரப்பர் ரோடு போடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய் வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரப்பர் ரோடு கேட்கிறார். சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு சாலை வசதிகளே இல்லாமல் பல வேறு இடங்களில் இருக்கின்றன. நம்முடைய தமிழகத்தின்





முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற தற்குப் பிறகுதான் யாருமே எண்ணிப்பார்க்காத அளவுக்கு நெடுஞ்சாலைத் துறையில் இன்றைக்கு ஏறத்தாழ 200 கோடி ரூபாய்க்கு மேலே பல்வேறு திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று தமிழகத்தில் ஒரு வரலாற்றைப் படைத்துக் கொண்டிருக்கிற முதலமைச்சராக இருந்து கொண்டிருக்கிற காரணத்தால், நீங்கள் குறிப்பிடுவதைப் போல ரப்பர் ரோடு போடுகின்ற அளவுக்கு இந்திய நாட்டிலே வருமானம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் புரிந்து கொள் வார்கள் என்று நான் கருதுகின்றேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 579. திரு. வ. மு. சுப்பிரமணியம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

579—

மானாமதுரை தொகுதியில் வைகையாற்றில் தடுப்புச் சுவர் கட்டுதல்.

*1459— திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மானாமதுரை தொகுதியில் வைகை ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் பழையனூர், மாரநாடு, கீழ்ப்பசலை ஆகிய கால்வாய்கள் மேடாக இருப்பதால், வைகை ஆற்றில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வைகைக் கால்வாய்களின் முகப்புகளில் தலை மதகுகள் கட்டி தண்ணீர் கால்வாய்களில் செல்லத்தக்க வகையில் தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கும், கால்வாய்களைச் சீரமைப்பதற்கும் ஏறத்தாழ 50½ இலட்சம் ரூபாய் இன்றைக்கு அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. 1992-93 ஆம் ஆண்டு பகுதித் திட்டத்தின் கீழ் அதாவது 'பார்ட் ஸ்கீம்' என்று சொல்லப்படும் அந்தத்

திட்டத்தில் இந்தத் தொகை ஒதுக்கப்பட்டு, இந்த ஆண்டு அந்தத் திட்டத்திற்கான 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு தொகை ஒதுக்கப்பட்டிருப்பதற்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்த ஒதுக்கீட்டுத் தொகை 10 இலட்சம் என்பது போதாது என்ற காரணத்தால் அரசு மறுபரிசீலனை செய்து அந்தத் தொகையை உயர்த்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு 50½ இலட்சம் ரூபாய். இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். ஆகவே வரும் ஆண்டுகளில் இதற்கான நிதியாதாரத்தை அதிகமாகப்பெருக்கி விரைவில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 580. திரு. பி. வி. இராஜேந்திரன். இருக்கையில் இல்லை. @

வினா எண் 581. திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

581—

என். ஆர். இ. பி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு.

திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதியில் 1988-89 முதல் 1990-91 வரை என். ஆர். இ. பி. மற்றும் ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டனவா?

(ஆ) இல்லையெனில் எப்போது மின் இணைப்பு அளிக்கும் பணி முழுமையடையும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நத்தம் தொகுதியில் 1988-89 முதல் 1990-91 வரை என். ஆர். இ. பி. மற்றும் ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு மின்னிணைப்பு கோரி வந்த விண்ணப்பங்கள் 1415. இதில் 1990-91 முடிய 910 விண்ணப்பங்களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுவிட்டன.

---

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 28-4-1992 ஆம் நாளன்று எடுத்துக் கொள்ளப்பெற்றது.





(ஆ) மீதம் உள்ள 505 தொகுப்பு வீடுகளில் இத்திட்டத்தின் கீழ் 250 வீடுகளுக்கும் ஆர். எல். இ ஜி. பி. திட்டத்தில் 67 வீடுகளுக்கும் மின்னிணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 188 வீடுகளுக்கு 1992-93 ஆம் ஆண்டில் மின்னிணைப்பு வழங்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொகுதிக்கு 2000 வீடுகள், தொகுப்பு வீடுகள் கட்டப்படும் என்பது அரசினுடைய ஒரு விதி. அதிலே குறிப்பாக நத்தம் தொகுதியில் எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகள் கட்டுவது என்பது உள்ளாட்சித் துறையைச் சேர்ந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிட்டது போல் தொகுதிக்கு 2000 வீடுகள் என்றல்ல. எனவே அது சம்பந்தமாக உள்ளாட்சித் துறைக்குத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆண்டி அம்பலம் மின் இணைப்பு கொடுப்பது தான் பொதுப்பணித்துறை அமைச்சர் பொறுப்பிலே வரும்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் 2000 இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவருடைய துறையிலே இல்லை. அது உள்ளாட்சித் துறையில் வருகிறது.

திரு. எம். ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்னிணைப்பு வழங்குவதில் இன்னும் காலதாமதம் இருப்பது பற்றிச் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டில் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். எனவே இதிலே மேலும் காலதாமதம் இல்லாமல் விரைவில் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல பாக்கி மின்னிணைப்பு கொடுக்கப்பட வேண்டியவை 188 வீடுகள் தான். 1992-93 ஆம் ஆண்டில் அதாவது இந்த ஆண்டில் அதற்கான மின்னிணைப்பு

வழங்கப்பட்டுவிடும். ஆகவே இந்த ஆண்டு முதல் இருக்கிற மின் இணைப்புகளும் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 582, திரு. தே. ஜனார்த்தனன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

582—

விழுப்புரம் நகரில் பாதாள சாக்கடை அமைத்தல்.

* 1812— திரு. தே. ஜனார்த்தனன்

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விழுப்புரம் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விழுப்புரம் நகராட்சிக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்காக ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது. கழிவுநீரை வெளியேற்றுவதற்கும், கழிவு நீரேற்று நிலையம் அமைப்பதற்கும் தேவையான இடங்களை ஒதுக்குமாறு நகராட்சியிடம் கோரப்பட்டுள்ளது. நகராட்சி இடம் ஒதுக்கீடு செய்தபின், திட்டம் வடிவமைக்கப்படும். இதர ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் கழிவு நீரகற்றவும், கழிவு நீரேற்றும் குழாய்கள் அமைக்கவும் விரைவில் இடம் தேர்வு செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அதுபற்றி ஆய்வு செய்து அந்தப் பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



முற்பகல் 10-10

திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட விழுப்புரம் வள்ளலார் மாவட்டத்தை இந்த ஆண்டு தொடங்கிட இதயத் தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு உள்ளார்கள். அதன் காரணமாக விழுப்புரம் நகரம் மிகவும் வேகமாக முன்னேறி வருகிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விழுப்புரம் நகரத்தின் தேவையை மிக நன்றாக அறிவார்கள். இந்த திட்டத்தை விரைவில் துவக்கிட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தை விரைவாக முடிப்பதற்கு அரசு எல்லாவிதமான முயற்சியையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 583, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

583—

திருப்பூர் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*3311.—திரு. வெ. பழனிசாமி :

மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இப்பணிகள் எப்பொழுது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்பூர் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது.

(ஆ) தலைமை பணியிடத்தில் நீர் சேகரிக்கும் கிணறு, பிரதான குழாய் அமைக்கும்பணி, சுத்திகரிப்புப் பணி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணிகள் அனைத்தும் நடப்பு நிதி ஆண்டில் (1992—93-க்குள்) முடிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

[1992 ஏப்ரல் 21

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு போடப்பட்ட
திருப்பூர் இரண்டாவது கூட்டுக் குடிநீர் திட்டம் இன்றைக்கு
மிகுந்த ஆமை வேகத்தில் கடந்த காலத்தினுடைய
அரசின் காலத்திலே முடங்கிப் போய் கிடந்தது. கடந்த
சட்டமன்றத்தினுடைய தேர்தல் நேரத்திலே திருப்பூர்
தொகுதியினுடைய மக்களுடைய உணர்வுகளை புரிந்து
கொண்டு எங்களுடைய இதய தெய்வம் புரட்சித்
தலைவி அவர்கள் இந்த கூட்டுக் குடிநீர் திட்டத்தை மிக
விரைவாக எங்களுடைய அரசு முடித்துத் தரும் என்று
மக்கள் மத்தியிலே வாக்குறுதி அளித்ததன் விளைவாக
இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னர்
மேட்டுப்பாளையம் தலைமை நீரேற்றும் நிலையம், பிரதான
குழாய் வரி அமைத்தல், ஓவர்டேங்க் கட்டுகின்ற பணிகள்
மிக வேகமாக நடைபெற்றுவருகிறது. இந்த பணிகள
இவ்வாண்டு முடிவிற்குள் முடிவடையுமா? எப்போது முடி
வடையும்? இதற்காக இவ்வாண்டு நிதி ஆதாரம் எவ்வளவு
ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றி நான் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பணிகளை இந்த
ஆண்டிலேயே முடிப்பதற்காக அரசால் சுமார் 8.54 கோடி
ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த பணி
களை இந்த ஆண்டிலேயே முடிப்பதற்கான எல்லா
விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன
என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டிலே போடப்பட்ட
திட்டம், இன்று 10 ஆண்டுகள் உருண்டோடிவிட்டது.
மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய
ஆட்சிக் காலத்திலே முடிவடைகிறது என்பது திருப்பூர்
தொகுதி மக்களுக்கு பெருமகிழ்ச்சி அளிக்கிறது. ஆகவே,
மிக விரைவாக 4 லட்சம் மக்களுக்கும், வெளியில் இருந்து
வரும் ஒரு லட்சம் மக்களுக்கும் வாழ்வளித்துக்கொண்டி
ருக்கின்ற பிரதான தொழில் நகரமான திருப்பூர் நகரத்திற்கு
முன் உரிமை அளித்து இவ்வாண்டு இறுதிக்குள் முடித்துத்
தருகின்ற வாய்ப்பை அரசு உருவாக்கித் தருமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிச்சய
மாக இந்த நடப்பாண்டுக்குள் இந்த திட்டத்தை முடிப்ப
தற்கு எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 584,
திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு உள்ளாட்சித்
துறை அமைச்சர்.

584—

## பூலாம்பட்டி குடிநீர்த் திட்டம்.

*4214. திருமதி க. பழனியம்மாள் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டத்தில் இராசிபுரம் தொகுதிக்கான
பூலாம்பட்டி குடிநீர்த் திட்டம் எப்பொழுது முடிவடையும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டத்தில் இராசிபுரம் தொகுதிக்கான
பூலாம்பட்டி குடிநீர்த் திட்டம் அதாவது இராசிபுரம் இடைப்
பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1994 ஆம் ஆண்டு இறுதிக்குள்
முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் நல்ல மழை
பெய்து இருந்த போதிலும், ராசிபுரம் பகுதியில் மழை
குறைவாக பெய்து உள்ளதால், இப்போது தண்ணீர் அளவு
மிகவும் குறைந்து விட்டது. ராசிபுரம் நகரில் 10 நாட்
களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வழங்கப்படுகிறது.
கிராமங்களிலே தண்ணீர் கஷ்டம் இந்த கோடையிலே
ஆரம்பித்துவிட்டது. எனவே விரைந்து செயற்படுத்தி,
இந்தத் திட்டத்தை இன்னும் குறைந்த காலத்திலேயே முடிப்ப
தற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.
வழி ஓரங்களில் உள்ள பல கிராமங்கள் விடுபட்டிருக்கின்றன,
அவைகளையும் சேர்த்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினை 1994
ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றுவதற்கு எல்லாவிதமான
நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம்
ராசிபுரம், இடைப்பாடி நகராட்சிகளைத் தவிர, 9 பேரூராட்சி
களுக்கும், 155 வழியோர கிராமங்களுக்கும் பயன் அளிக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 ஏப்ரல் 21

**திருமதி க. பழனியம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் கோடையில் ஏற்பட்டிருக்கின்ற தண்ணீர் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு சென்ற ஆண்டிலே 'டிரான்ஸ்போர்ட்டேஷன் வாட்டர்' லாரிகளின் மூலமாக கொடுக்கப்பட்டதைப் போல, இந்த ஆண்டும் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்துனுடைய ஆட்சி தலைவர் அவர்களுக்கு இதுபோன்ற நிலைமைகளைச் சமாளிப்பதற்காக எல்லாவிதமான அறிவுரையும் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. க. அர்ச்சுனன்.

**திரு. க. அர்ச்சுனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடைப்பாடி, ராசிபுரம் குடிநீர்த் திட்டம் வீரபாண்டி தொகுதியின் வழியாக பல்வேறு கிராமங்களுக்கு பயன்தரத்தக்ககூடிய வகையில் அமைக்கப்பட்டிருக்கின்ற திட்டம். இதிலே எஸ்டிமேட் போடுகிறபோது தவறான முறையிலே எஸ்டிமேட் போட்டுவிட்ட காரணத்தினால், இந்த டெண்டர் விடப்பட்டும் வேலை தொடங்கப்படவில்லை. எனவே ரிவைஸ்ட்டு எஸ்டிமேட் போடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இன்னும் வேலையே தொடங்கப்படவில்லையே, எப்படி 1994-க்குள் முடிவடையும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்? 1994-க்குள் முடிவடைந்து குடிநீர் வழங்கப்படும் என்று அவர்கள் கூறுகிறார்கள். எனவே வேலை எப்போது தொடங்கப்படும் என்பதைப்பற்றி நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே இந்தத் திட்டத்திலே இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து தற்போது விலை உயர்வு காரணமாகவும், மாற்று வரி விதிப்பு காரணமாகவும் தற்போது இத்திட்டம 21 கோடி ரூபாய்க்கு திருத்தியமைக்கப்பட்டு அரசு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவிலே ஒப்புதல் அளித்து திட்டத்தைத் துவக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. க. பழனிசாமி.

**திரு. க. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே என்னுடைய தொகுதியிலுள்ள விடுபட்டுள்ள பகுதிகள் சேர்த்துக்கொள்ளப்படுமா? இந்தத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு எவ்வளவு? இந்த ஆண்டு இத்திட்டத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 21 கோடி ரூபாய்க்கு திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. 1994ஆம் ஆண்டுக்குள் இந்தத் திட்டம் முடிக்கப்படும். இந்த ஆண்டு எவ்வளவு ஒதுக்கப்பட இருக்கிறது என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் சரோஜா.

**டாக்டர் வெ. சரோஜா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசிபுரம் நெடுங்குளம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் வடுகப்பட்டியையும் இணைத்து வடுகப்பட்டியில் பல ஆண்டுகளாக மூடிக் கிடக்கும் மருத்துவமனையிலுள்ள அறுவை அரங்கு செயல்பட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது உள்ளாட்சித்துறையின் கீழ் வராது. இவர் குடிநீர் அமைச்சர் அல்ல. மருத்துவமனையில் இருக்கிற அறுவை சிகிச்சை அரங்குகளை எல்லாம் திறப்பது பற்றியதல்ல கேள்வி.

**டாக்டர் வெ. சரோஜா :** அங்கு அறுவை சிகிச்சை அரங்கு மூடி இருப்பதற்குக் காரணமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை என்பதால்தான். அங்கு கிடைக்கும் உவர் நீரால் அறுவை இயந்திரங்கள் செயல்படாமல் இருக்கின்றன என்பதுதான்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முடிக்கப்படும் நேரத்தில் இந்த மருத்துவமனைக்கு தண்ணீர்க் கொடுப்பதற்கு அரசு ஆணையிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 585, திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

585—

### பாமாயிலுக்குப் பதிலாக சோயா எண்ணெய் விநியோகித்தல்.

*5029. திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாமாயிலுக்குப் பதிலாக சோயா எண்ணெயை விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், ஒரு கிலோ சோயா எண்ணெய்க்கு அரசு நிர்ணயிக்கும் விலை என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மைய அரசு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்குவதற்காக சோயா எண்ணெயை 1984-ல் அளித்தார்கள். அதற்கு பொதுமக்களிடையே வர வேற்பு இல்லை. அதனால் அரசுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது. ஆகவே, பாமாயிலுக்குப் பதிலாக சோயா எண்ணெயை வழங்கும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோயா எண்ணெயில் கொழுப்புச் சத்து மிகவும் குறைவாக இருப்பதாக சொல்கிறார்கள். ஆகவே, இதை மிக வசதிபடைத்தவர்கள் விரும்பி சாப்பிடு வதாக சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த எண்ணெய் சாப்பிட்டால் கறுப்பான நிறம் உள்ளவர்கள்கூட சிகப்பாக மாறுவார்கள் என்றுகூட சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை திரு. சின்னசாமிக்கு மட்டுமாவது வழங்கச் செய்யலாம். (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி : அப்படி சொல்லித்தான் விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதனு டைய உற்பத்தி மூலப்பொருள் குறிப்பாக பெரியார் மாவட்டத்திலே தான் அதிகமாக ஊடுபயிர் செய்கிறார்கள். ஆகவே, இந்தத் தொழிற்சாலையை அரசாங்கமே முன்வந்து





அமைக்க முன்வருமா? சோயா எண்ணெய் தயாரிக்கிற தொழிற்சாலை தமிழ்நாட்டில் தற்போது எத்தனை உள்ளது? அது எங்குள்ளது என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-ல் மத்திய அரசு நமக்கு 19,500 டன் சோயா எண்ணெயை வழங்கியது. அதை கடை களுக்கு அனுப்பி விற்பதற்கு நடவடிக்கை எடுத்த போது வெறும் 9,400 டன்தான் விற்றது. மற்றது அப்படியே திரும்பி வந்துவிட்டது. இந்த எண்ணெயில் ஒருவகையான மீன் வாசனை அல்லது மீன் நாற்றம் இருக்கின்ற காரணத் தால் மக்கள் வாங்க மறுத்துவிட்டார்கள் என்று சொல்லப் படுகிறது. அதிலே நஷ்டம் ஏற்பட்ட காரணத்தால் மறு படியும் இந்த முயற்சியை அரசு எடுத்துக்கொள்ள வில்லை. மேலும் மத்திய அரசு கொடுக்கின்ற எண்ணெயைத்தான் நாம் விநியோகம் செய்துகொண்டிருக்கிறோம். சமையல் எண்ணெய் அவ்வப்போது மைய அரசால் வழங்கப்படுகிறது என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரியும். ஆகவே அப்படிப்பட்ட முயற்சியை மீண்டும் எடுப்பதாக யோசனை இல்லை. யார் யார் எங்கு சோயா எண்ணெய் தயாரிக்கி றார்கள் என்கிற செயற் குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனியாக கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் எண்ணெய் வாசனை அடிப்ப தாக சொல்கிறார்கள். மீனே இப்பொழுது குறைந்த விலைக்கு கிடைக்காத அளவுக்கு மக்கள் விரும்பி சாப்பிடு கிறார்கள். அதைப்போல இப்பொழுது எத்தனையோ வாசனை திரவியம் தயாரிக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த ஆயிலில் மீன் வாசனையைக் குறைத்து நல்ல வாசம் வருகின்ற ஆயிலாக கூட தயாரிக்க முடியும். இப்போது விவசாயிகளிடமிருந்து வாங்குகின்ற அந்த மூலப் பொருளுக்கு என்ன விலை நிர்ணயிக்கிறார்கள்?

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சோயா எண் ணெய் விநியோகிப்பது பற்றிய கேள்வி. அதனுடைய விலை என்ன, எங்கெங்கே பயிர் செய்யப்படுகிறது என்கிற கேள்விகளுக்கெல்லாம் அவர் பதில் சொல்ல முடியாது. இது தொடர்புடைய கேள்வியாக இருந்தால் கேளுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : இதை ஒரு தனியார் நிறுவனம்தான் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் விவசாயிகளுக்கு ஏதாவது விலை நிர்ணயம் செய்து வாங்குகிறார்களா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் எண்ணெயை விற்கின்ற போதுதான் விலையைப் பற்றிய பிரச்சினையே வருகிறது. 1984-ல் நாம் விற்றபோது அதனுடைய விலை 14 அல்லது 15 ரூபாய் கிலோவுக்கு இருந்தது. நாம் இப்போது விற்காத காரணத்தால் விலையை நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோயா மொச்சை அமெரிக்காவிலே அதிகமாக விளைவதால் அந்த அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் சோயா எண்ணெயைப் பற்றி விளம்பரப்படுத்துவதற்காகவே, அதிலே கொழுப்புச் சத்து குறைவென்றும், நம்முடைய தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் ஆகியவற்றில் கொழுப்புச் சத்து அதிகமென்று சொல்லியும் விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள் என்று ஒரு செய்தி பத்திரிக்கையிலே போட்டிருந்தார்கள். மக்கள் விரும்பாத சோயா எண்ணெய்க்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து சோயா எண்ணெய் உற்பத்தியை இங்கே கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமா? மேலும் விவசாயிகளுக்கு நல்ல விலை கொடுக்காமல் அந்தக் கம்பெனிகள் ஏமாற்றிக்கொண்டிருப்பதை அரசு தடை செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாண்புமிகு உறுப்பினர்களும் முரண்பட்ட கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். இரண்டையும் அரசு கவனத்திலே கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய நிதியைப்பெற்று பொள்ளாச்சி மகாலிங்கத்தினுடைய சக்தி நிறுவனம் ''சக்தி



சோயாஸ்'' என்று சோயா எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை பொள்ளாச்சியில் அமைத்திருக்கிறார்கள். அந்த சக்தி நிறுவனத்தாலே தயாரிக்கப்படும் சோயா எண்ணெய் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது என்று மக்கள் மத்தியில் கருத்து இருந்து கொண்டிருக்கிறது. இந்தத் தொழிற்சாலையிலே தயாரிக்கப்படுகின்ற சோயா எண்ணெயை வெளி மாநிலங்களுக்கு இன்றைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசினுடைய நிதியைப் பெற்று தமிழ்நாட்டில் நடக்கின்ற தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் எண்ணெயை தமிழக அரசே பெற்று, தமிழக மக்களுக்கு விநியோகிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே அந்த ஆலை துவக்கப்பட்டு, அங்கே உற்பத்தி செய்யப்படுகிறது. முதலில் கோவை மாவட்டம், பெரியார் மாவட்டத்தில இருக்கிறவர்கள் அதை வாங்கிச் சாப்பிட்டு, உண்மையிலேயே அது நன்றாக இருக்கிறதென்று சொன்னால் அதைத் தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 586, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

586—

தொடக்கக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களை அரசு ஊழியராக்குதல்.

*5267.—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ? :

தொடக்கக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின்படி அந்தந்த சங்கங்களின் கட்டுப்பாட்டில் பணி புரிகின்றனர்; எனவே, அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க இயலாது.

திரு. ப. கலியபெருமாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பல்வேறு தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் பணி நீக்கம்செய்யப்படுவோமோ

[1992 ஏப்ரல் 21

என்ற அச்ச உணர்வோடு பணியாற்றிக் கொண்டிருக்
கிறார்கள். அந்த ஊழியர்களை நிரந்தர அரசு ஊழியர்க
ளாக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒழுங்காகப் பணி புரிகின்ற எந்த ஊழிய
ருக்கும் அப்படிப்பட்ட அச்ச உணர்வு தேவையில்லை
ஒரு வகையிலே அப்படிப்பட்ட அச்ச உணர்வு இருக்கும் இடங்
களில் தான் ஊழியர்கள் ஒழுங்காகப் பணி புரிகிறார்கள் என்பதை
யும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு
அதிகமாக லாபம் ஈட்டுகிற கூட்டுறவுச் சங்கங்களில் பணி புரியும்
ஊழியர்கள் அரசாங்க ஊழியர்களைவிட அதிகமாகச் சம்பளம்
வாங்குகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட பிரச்சினை எழவில்லை.
அவர்கள் அச்சப்பட வேண்டிய தேவையில்லை. ஒழுங்காக வேலை
செய்வார்களானால்.

முற்பகல் 10-25

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இதயதெய்வம் புரட்சித்தலைவர் காலத்தில் சத்துணவு
மையங்களில் பணியாற்றியவர்கள நம்பிக்கையோடு பணியாற்றி
னார்கள். இடையிலே தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அவர்களை
நீக்கிவிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களை
அங்கே பணியில் அமர்த்தியுள்ளார்கள. அவர்கள் அனைவரும்
இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சிப் பிரச்சாரம்
செய்துகொண்டு அங்கே சரியான முறையில் பணியாற்றுவதில்லை.
அவர்களை நீக்கிவிட்டு புரட்சித்தலைவர் காலத்தில் பணியாற்றி
யவர்களுக்கு முன்னுரிமை தந்து மீண்டும் அவர்களை அங்கே
பணியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர்
அவர்களே, அவர்களை வேலைக்கு நியமிக்கும்போது எம்ப்ளாய்
மெண்ட் எக்சேஞ்ச் மூலமாகவோ அல்லது நேர்முகத் தேர்வு
நடத்தியோ ஒழுங்காக அவர்களை வேலைக்கு எடுத்திருந்து,
அவர்களை வேறு அரசியல் காரணங்களுக்காக நீக்கப்பட்டிருந்
தால், உடனடியாக மறுபடியும் அவர்களை வேலைக்கு அனுப்பு
வதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும். அப்படியில்லாமல்
தமக்கு வேண்டியவர்களை irregular appointment என்ற
அளவுக்கு நியமிக்கப்பட்டிருந்தால் அப்படிப்பட்டவர்களைப்
பற்றி வேறுவிதமான பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தங்களுடைய தொகுதியிலேயே ஒரு தொடக்கக்
கூட்டுறவுச் சங்கச் செயலாளர் உர மூட்டையைக் கடத்துகிற
போது பொதுமக்கள் தடுக்க, டிராக்டரைக்கொண்டு அவர்களைக்
கொலை செய்தார் என்று இந்த அவையில் நீங்கள் பிரச்சினை
எழுப்பியபோது அன்றைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள்
சங்கச் செயலாளர் ஆகவும் ஊழியராகவும் இருப்பவர்களை ஒரு
சங்கத்திலிருந்து மற்றொரு சங்கத்திற்கு மாறுதல் செய்ய
அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உத்தரவாதத்தை இந்த
அவையிலேயே தந்தார்கள். அந்த உத்தரவாதம் நிறைவேற்றப்
படவேண்டுமானால் தொடக்க கூட்டுறவு வங்கி ஊழியர்கள்
என்ற நிலையிலிருந்து மாற்றி மத்திய வங்கி ஊழியர்கள் அல்லது
அரசு ஊழியர்கள் என்று மாற்றினால்தான் தவறு செய்பவர்களை
ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்ற இயலும்.
ஆகவே அந்த வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த கருத்து நம்முடைய அவையில் சொல்
லப்பட்டு இப்போது இந்தத் துறையில் பரிசீலனையில் இருக்கிறது.
'காமன் கேடர்' ஏற்படுத்துவது பற்றி அதற்காக ஒரு குழுவை
நியமித்திருக்கிறோம். அந்தக் குழு, அவர்களின் பணி நிலை
கள், மற்றும் சம்பள விகிதங்கள் அனைத்தையும் கருத்தில்
கொண்டு செயல்படும். அந்தக் குழுவின் பரிந்துரைக்குப் பின்னால்
அதனுடைய விபரங்கள் இந்த அவைக்குத் தெரிவிக்கப்
படும், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 587,
திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு சமூக நலத்துறை
அமைச்சர்.

587—

பச்சிளம் குழந்தைகளுக்கு சத்துணவு.

*96—திரு. டி. எம். ரங்கராஜன் :
மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முதல் அமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ்
பச்சிளம் குழந்தைகளுக்கும் (Children of Tender Age) சத்துணவு
வழங்கிட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1992 ஏப்ரல் 21

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த வினாவில் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்று வினா எழுப்பப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தபோது முதலமைச் சர் சத்துணவுத் திட்டம் என்று பெயர் வைத்தார்கள். முதல மைச்சர் என்று சொன்னாலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயர்தான் நினைவுக்கு வருகிறது என்ற காரணத் தினால், இரண்டாண்டுக்கால அராஜக ஆட்சியில் கருணாநிதி அவர்கள் அந்தப் பெயரை மாற்றி, தமிழக அரசு சத்துணவுத் திட்டம் என்று பெயர் வைத்தார்கள். ஆனால் எங்கேயும் எதி லேயும் எப்போதும் எம்.ஜி.ஆருடைய பெயர் உச்சரிக்கப்பட வேண்டுமென்று தமிழகத்தின் அரசியல் வானில் துருவ நட்சத்திர மாக விளங்குகிற நம்முடைய ஒப்பு உயர்வு இல்லாத தலைவி புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்திற்கு புரட்சித் தலை வர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று பெயர் மாற்றம் செய்திருக்கிறார்கள். ஆகவே வினாவை 'புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டத்தின் கீழ்' என்று மாற்றப்பட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) : இந்த வினாவுக்கான விடை, "ஒருங் கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் மூலமாக 6 மாதம் முதல் 3 வயது வரையிலும் உள்ள ஊட்டச் சத்துக்குறைவான குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவு வழங்கப் படுகிறது" என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா, இந்தப் பெயர் மாற்றம் செய்வதற்கு முன்பாகவே எழுப்பப்பட்ட வினா என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொன் னார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எந்த விதமான சத்துணவு வழங்கப்படும், 'ஃபாரெக்ஸ்' போன்ற ஊட்டச் சத்துக்கள் வழங்கப்படுமா, அது எங்கு, எவ்வாறு வழங் கப்படும் என்பதையும், அதற்காகும் செலவு என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாரெக்ஸ்' போன்றவைகளில் என்னென்ன கலக்கப்பட்டு இருக்கிறதோ அவையனைத்தும் கலக்கப்படுகின்ற வகையில், கோதுமை, ராகி, பருப்பு, சோயா மாவு, வெல்லம், வைட்டமின் சத்து ஆகியவை கலந்த புரதச் சத்து நிறைந்த ஊட்டச்சத்து மாவு ஒவ்வொரு எடை குறைந்த குழந்தைக்கும் தினந்தோறும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு



1992 ஏப்ரல் 21]

ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழ் 1.96 லட்சம் குழந்தைகளும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1.30 லட்சம் குழந்தைகளுக்கும் இதிலே பயன் ஏற்படுகின்றன, இதற்காக 20 மாவட்டங்களில் 80 திட்ட அலுவலகங்களைக் கொண்ட 7,061 குழந்தைகள் நல மையங்கள் செயல்பட்டு வரு கின்றன. 1-8-1991 முதல் மேலும் 30 வட்டாரங்களுக்கு இது விரிவு படுத்தப்பட்டிருக்கிறது. இதற்காகும் செலவு குறித்து, தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 588, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

588—

அரசு உறைவிடப் பள்ளிகளில் சத்துணவு மையங்கள் அமைத்தல்.

*812— திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில் காக்காய னூர், குட்டையூர் போன்ற இடங்களில் திறக்கப்பட்ட மலைவாழ் மக்கள் அரசு உறைவிடப் பள்ளிகளில் சத்துணவு மையங்கள் அமைக்க அரசு முயலுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் திறக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிய சத்துணவு மையங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனை யாளர், விடுதலை வீரர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த மாவட்டத்தினுடைய கடைசிப் பகுதியாக இருக்கின்ற ஊர்தான் குட்டையூர், காக்காயனூர் என்ற மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். இந்த ஊரிலே ஆதிதிராவிடர் மற்றும் ஆதிவாசிகளுக்காக இரண்டு பள்ளிகள் கடந்த ஆண்டு நான் வணங்கும் இதய தெய்வம், அம்மா, டாக்டர் அவர்களுடைய ஆட்சியிலே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளியிலே ஆதி வாசிகள் அல்லாத மற்றஇதர ஜாதியினர் அந்த ஊரில்

வாழ்கின்ற மக்களுடைய குழந்தைகளை அந்த விடுதியிலே சேர்க்க
முடியாமல் ஆனால் தினமும் பள்ளிக்கு வந்து போய்க் கொண்டி
டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு மதிய உணவு
கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. என்பதை அரசு
அறிந்து அந்த குழந்தைகளுக்கும் மதிய உணவு கொடுக்க அரசு
ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உறைவிடப் பள்ளிகளில்
பயிலும் மாணவர்களுக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்று வேளையும்
உணவு ஏற்கெனவே வழங்கப்பட்டு வருவதால் புதிய சத்துணவு
மையங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆதி திராவிடர்
அல்லாத குழந்தைகள், மலைவாசி அல்லாத குழந்தைகள
இதில் இருக்கும் என்று தோன்றவில்லை. ஏனென்றால் இதற்
காகவே ஏற்படுத்தப்பட்டுள்ள பள்ளி அந்தப் பள்ளி. அப்படி
இருப்பதாக உறுப்பினர் அவர்கள் தகவல் கொடுத்தால் அந்த
குழந்தைகளுக்கு மட்டும் அதே பள்ளிக்கூடத்தில் சத்துணவு வழங்
கப்படும் என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தப் பள்ளிக்கூடம் ஆதிதிராவிடர்கள் நலத்துறை
யின் மூலமாக ஆதிவாசிகளுக்கு மட்டும்தான் மூன்று நேரமும்
உணவு வழங்கப்படுகிற உறைவிடப் பள்ளியாகும். இதே துறை
யில்தான் நான் 26 ஆண்டுகளாக நான் பணியாற்றினேன்.
அந்தப் பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற ஆதிவாசிகளுக்கு மூன்று
நேரமும் உணவு வழங்கப்படுகிறது. ஆனால் வெளியிலே இருந்து
வருகிற மாணவர்களுக்கு உணவு அளிப்பதில்லை. நான் வணங்
கும் தெய்வம், ஒப்பற்றத் தலைவி புரட்சித் தலைவியினுடைய
ஆட்சியில் எல்லா குழந்தைகளும் எல்லா நலனும் பெற வேண்டும்
என்ற கல்வி நோக்கோடு, பொது அறிவியலும் பெற வேண்டும்
என்று. நூல் நிலையம் அமைத்துக் கொடுத்திருக்கிற ஒப்பற்றத்
தலைவியினுடைய ஆட்சியில், வெளியிலே இருந்து வருகிற அந்த
ஏழையெளிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட குழந்
தைகளுக்கும் மதிய உணவு வழங்குவதற்கு, மாண்புமிகு முதல்வர்
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ்
உணவு வழங்க அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, வெளியிலேயிருந்து பயிலுகிற
குழந்தைகள் எவ்வளவு இருக்கிறார்கள் என்பதைச் சொன்னால்,
புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் ஒரு குழந்தைக்கும்
உணவு இல்லை என்று சொல்லாத வகையில் அந்த குழந்தை
களுக்கும் உணவு அளிக்கப்படும் என்பதை நான் ஏற்கெனவே
சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 589,
திருமதி கற்பகம் இளங்கோ. மாண்புமிகு சமூக நலத்துறை
அமைச்சர்.

589—

முதியோர் புனர்வாழ்வு இல்லம் அமைத்தல்.

*4757. திருமதி கற்பகம் இளங்கோ :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா :

காரைக்குடி தொகுதியில் முதியோர் மற்றும் உடல் ஊன
முற்ற விதவைகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் முதியோர்
புனர் வாழ்வு இலலம அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 'நல்லார் ஒருவர் உளரேல் அவர்
பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை 'என்ற பாடலுக்கு
இலக்கணமாக அமைந்து எல்லோரையும் வாழ வைத்துக் கொண
டிருக்கும் தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம, தமிழக முதலவர்
டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில்
முதியோர் மற்றும உடல் ஊனமுற்ற விதவைகளுக்கு பாதுகாப்பு
அளிக்கும் வகையில் முதியோர் புனர்வாழ்வு இல்லம் வரும்
நிதியாண்டிலேயாவது அமைக்கும் திட்டத்தை கருணையோடு
பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம்,
புரட்சித் தலைவி அவர்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் வருகிற
ஆண்டில் இதை படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என்று
உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையில இது நிறைவேற்றப்
படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்— விடைகள் நேரம் முடிவுற்றது.

முற்பகல் 10-35

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் குறிப்பு.

**ஆர். ஒய். எல். தீவிரவாத இயக்கத்தினர் பேரவை உறுப்பினர்களை மிரட்டும் வகையில் வெளியே பேசிவருவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையில் ஆர்.ஒய். எல். என்கிற தீவிரவாத இயக்கம் ஒன்றைத் தடை செய்ய வேண்டும் என்று சில உறுப்பினர்கள் பேசியதைத் தொடர்ந்து அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள், அப்படிப்பட்ட பேச்சுக் கள் தொடருமேயானால் சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியிலே நடமாட முடியாது என்பது போன்ற கடுமையான பிரச்சாரத் தைச் செய்து வருவதாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. சிங்காரம், திரு. ஆர். சிங்காரம் ,திரு. சி. ஞானசேகரன், திரு. கு. லாரன்ஸ், திரு. கே. முனிவெங்கடப்பன், திரு. க. அர்ச்சுனன் ஆகியோர் ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கிறேன். திரு. கே. சிங்காரம்.

**திரு. கே. சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் மற்றும் ஏற்காடு மலைப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் குறித்தும், தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பாதுகாப்பு பற்றியும் நானும் இன்னும் சில உறுப்பினர்களும் 30-3-1992 அன்று இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு



வந்து இருந்தோம். அப்பொழுது பேசிய மாண்புமிகு உறுப்னர் திரு. கே. பி. முனுசாமி அவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தை யும் ஆர். ஒய். எல். என்று சொல்லப்படுகின்ற முற்போக்கு இளைஞர் அணியையும் தடை செய்ய வேண்டுமென்று கூறி இருந்தார். எனவே, இதனைக் கருத்தில் கொண்டு, ஆர்.ஒய் .எல் என்று சொல்லப்படுகின்ற முற்போக்கு இளைஞர் அணி 6 பெண்கள் உட்பட 65 பேர் கலந்துகொண்ட ஒரு ஊர்வலத்தை நடத்தி, அந்த ஊர்வலத்திலே அரசை எதிர்த்து கடுமையான கோஷங்கள் எழுப்பியும், குறளகம் எதிரே கூடி '' ஆர்.ஒய் .எல்.-ஐ தடை செய்தால் சட்டசபையில் பேச எந்த எம்.எல்.ஏ.-வும் இருக்க மாட்டார்கள்'' என்று ஆர்.ஒய் .எல். செயலாளர் ஜோசப் என்பவரும், முற்போக்கு மாணவர் சங்க செயலாளர் ஜெய ராமச்சந்திரன் என்பவரும் பயங்கரமாக எச்சரிக்கை விடுத்து உள்ளனர். இந்தச் செய்தி 3-4-1992 அன்று தினமலர் நாளிதழில் முதல் பக்கத்தில், '' எங்களை தடை செய்தால் எம்.எல்.ஏ.-களுக்கு மிரட்டல் '' என்ற தலைப்பில் செய்தியாக வந்துள்ளது' சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்களும், நாட்டு மக்களும் தங்கள் உயிரைப் பற்றி கவலைப்படாமல், நமக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் தன் உயிரை துச்சமென மதித்து 24 மணி நேரமும் அயராது உழைத்து வருகின்ற ஒப்பற்ற (மேசையைத் தட்டும் ஒலி) தலைவியாக விளங்கி வருகின்ற நம்முடைய மாண்பு மிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் உயிர்தான் மேலானது ; அவர் பல்லாண்டு வாழ வேண்டும் என்று ஒவ்வொரு வரும் வாழ்த்தியும் வேண்டிக்கொண்டு இருக்கின்ற இவ்வேளை யில் இம்மாதிரியான மிரட்டல்கள் விடப்பட்டு வருகின்றன.

இந்திய இராணுவத்தையே மிரட்டிக்கொண்டு வந்த விடுதலைப்புலிகளை இருக்கின்ற இடம் தெரியாமல் புறமுது கிட்டு ஓடச்செய்த புறநானூற்றுப் பெண்ணாக (மேசையைத் தட்டும் ஒலி) விளங்கி வருகின்ற, நம்முடைய ஒப்பற்ற தலைவியாக விளங்கி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த மிரட்டல்வாதிகளையும், தீவிரவாதிகளையும் அடக்கி ஒடுக்குவ தோடு, இந்த இயக்கங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த நிகழ்ச்சியை அவையின் கவனத் திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. முனுசாமி அவர்கள் இந்தப் பேரவையில் 1-4-1992 அன்று
ஆர்.ஒய்.எல். இயக்கத்தைத் தடை செய்யவேண்டுமென்று
பேசியது தொடர்பாக, சிலர் ஆர்.ஒய்.எல் அமைப்பை அவ்வாறு
தடைசெய்தால், சட்டமன்ற உறுப்பினர்களைக் கூண்டோடு
அழித்து விடுவதாகவும், சட்டசபையில் பேச எந்த உறுப்பினர்
களும் உயிருடன் இருக்கமாட்டார்கள் என்றும், தனித் தமிழ்நாடு
உருவாக்க வேண்டும் என்றும் அச்சுறுத்தியதாகக் குறிப்பிட்டு,
அது தொடர்பாக விவாதிக்க வேண்டுமென்று மாண்புமிகு
உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. கே. சிங்காரம்,
திரு. கு. லாரன்ஸ், திரு. க. அர்ச்சுனன், திரு. ஆர். சிங்காரம்,
திரு. முனிவெங்கடப்பன் ஆகியோர் சிறப்பு கவன ஈர்ப்பைக்
கொடுத்து உள்ளார்கள்.

சென்ற 2-4-1992 அன்று சென்னையில் இடதுசாரி கம்யூனிஸ்ட்
கட்சியின் மக்கள் இயக்கப் பிரிவைச் சேர்ந்த முற்போக்கு
இளைஞர் அணி மற்றும் முற்போக்கு மாணவர் சங்கத்தைச்
சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். விலைவாசி உயர்வு
மற்றும் மாநில அரசின் அடக்கு முறைகளைக் கண்டிப்ப
தாகச் சொல்லிக் கொண்டு மொத்தம் 40 பேர்கள் இந்த ஆர்ப்
பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் 7 பேர் பெண்கள். இவர்கள்,
ஆர்ப்பாட்டத்தின்போது பல தேசவிரோத, ஜனநாயக விரோத,
தீவிரவாத கோஷங்களை எழுப்பிச் சென்றனர். குறிப்பாக,
நக்சல்பாரிகள் 'தேச பக்தர்கள்' என்றும், தேர்தல் பாதை
'திருடர் பாதை' என்றும், மக்கள் பாதை 'புரட்சிப் பாதை'
என்றும், ஆயுதம் ஏந்திப் போராடுவோம் என்றும், துப்பாக்கிகள்
முழங்கட்டும், சுதந்திர தமிழகம் மலரட்டும் " என்றெல்லாம்
கோஷமிட்டுள்ளனர் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு
வரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை நகர 'எக்ஸ்' பிரிவு காவல்
நிலயத்தில் முற்போக்கு மாணவர் சங்கத்தைச் சேர்ந்த
திருவாளர்கள் ஜெயராமச்சந்திரன், பாஸ்கரன், ஜோசப்
மற்றும் சிலரின் மீது குற்ற எண். 764/92-ல் வழக்கு ஒன்று பதிவு
செய்யப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தீவிரப் பங்கு
கொண்ட குற்றவாளிகள் திரு. நீண்ட பயணம் சுந்தரம் என்பவர்
கடந்த 10-4-1992 அன்றும், நடராஜன் என்பவர் சென்ற
15-4-1992 அன்றும் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு
தற்போது நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இவ்
வழக்கில் முக்கிய குற்றவாளிகளான திருவாளர்கள் ஜெயராமச்
சந்திரன், பாஸ்கரன் மற்றும் ஜோசப் ஆகிய மூவரும் தலைமறை
வாகி உள்ளனர். அவர்களைக் கண்டுபிடித்து கைது செய்யக் காவல்
துறையினர் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு



வருகின்றனர். மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் இதற்காக
அஞ்ச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். தேச
விரோத சக்திகளையும், தேசிய ஒருமைப்பாட்டுக்கு பங்கம் விளை
விக்க முயற்சி செய்யும் எவரையும் இந்த அரசு எப்போதும்
அனுமதிக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-40

தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைத்
தடுத்து நிறுத்தி, அவர்களை வளர விடாது முளையிலேயே கிள்ளி
எறியும் அத்தனை நடவடிக்கைகளையும் எங்கள் அரசு மேற்
கொள்ளும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு
உறுப்பினர்களுக்கும், தமிழக மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டுள்ளேன்.

தேச விரோத, ஜனநாயக விரோத, தீவிரவாத நடவடிக்கை
களில் சென்ற 1-4-1992 அன்று ஈடுபட்டவர்கள் மீது எங்கள்
அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதையும்,
மேலும் இதனை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று,
இச்செயல்களில் ஈடுபட்டவர்களின் மீதும், அவர்கள் சார்ந்த
அமைப்புகளின் மீதும் உரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ள
வேண்டுமென்று வலியுறுத்துவோம என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 3, விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

பொது விநியோகத்தில் வழங்கப்படும் அரிசி விலைக் குறைப்பு குறித்தும்
குறைந்த விலை அரிசியைப் பெறத் தகுதிகள் நிர்ணயித்தல்
குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன்
கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது அரசின்
முக்கிய முடிவு ஒன்றைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழக அரசு பொது விநியோகத்
திட்டத்தின் கீழ், மிகக்குறைந்த விலையில் அரிசி வழங்கி
வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.
அரசின் இத்திட்டம், அடி மட்டத்தில் அல்லல்படும் மக்களுக்கு
குறைந்த விலையில் அரிசி வழங்கி, அவர்கள் தம் பொருளா
தாரச் சுமையை ஓரளவாவது குறைக்கலாம் என்ற நோக்கத்துடன்
தொடங்கப்பட்டது. ஆனால், உண்மை நிலை என்னவென்றால்
மாநிலத்திலுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும்

அதாவது 1 கோடியே 25 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்
படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குறைந்த விலை
அரிசி பெற, இவ்வளவு மாத வருமானம் பெறுபவர்களுக்குத்தான்
தகுதி உண்டு என்றோ அல்லது இத்தனை ஏக்கர் நஞ்சை நிலம்
வைத்திருப்பவர்களுக்குத்தான் தகுதி உண்டு என்றோ இதுவரை
குறிப்பிடப்படவில்லை. இதன்படி, அரசின் கொள்முதலுக்கு
நெல் கொடுக்கும் பெரிய நிலச்சுவான்தாரர்கள் கூட, அவர்களுக்கு
குடும்ப அட்டைகளில் குறைந்த விலை அரிசி வாங்கலாம் என்ற
நிலை தற்போது இருக்கின்றது. அதுபோலவே, மாத ஊதியம்
பெறுபவர்கள் எவ்வளவு அதிக ஊதியம் பெற்றாலும், அவர்களும்
தங்களது குடும்ப அட்டைகளில் குறைந்த விலை அரிசி வாங்கலாம்.
நடைமுறையில் உள்ளபடி குறைந்த விலை அரிசி பெறுவதற்கு,
குறிப்பிட்ட தகுதியினை நிர்ணயிப்பது மிகவும் அவசியம் மட்டு
மல்ல, தற்போதைய நிதிநிலையில் அவசரமும் ஆகின்றது.

தற்போது தமிழகத்திலுள்ள ஒரு கோடியே 25 இலட்சம்
குடும்ப அட்டைதாரர்களுக்கு, குறைந்த விலையில் அரிசி வழங்கு
வதன் மூலம், அரசிற்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 340 கோடி மானிய
மாக வழங்கச் செலவாகின்றது. ஆனால், இதன் முழுப்பயனும்,
யாருக்காக இந்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதோ, அவர்கள்
மட்டுமின்றி, பிறரும் பயனடையும் நிலையுள்ளது. இதனால்
பொது விநியோகத்தில் வழங்கப்படும் குறைந்த விலை அரிசி,
தவறான வழியில், முறைகேடாக வெளிச்சந்தைக்குக் கொண்டு
வரப்பட்டு, விற்பனை செய்யும் முயற்சிகளில் பலர் ஈடுபடுவதன்
விளைவாக, ஒருசில இடங்களில், உண்மையாக இத்திட்டத்தால்
பயனடைய வேண்டிய ஏழை எளியோர், பெரிதும் பாதிக்கப்
படுகின்றனர்.

எனவே, இத்திட்டத்தை திறம்பட செயல்படுத்த, சில வழி
முறைகளையும், வரம்பினையும் நிர்ணயிப்பது அவசியமாகிறது.
அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் கர்நாடகத்தில், இந்த
பொது விநியோகத் திட்டத்தின் கீழ், பயன்பெறுபவர்களின் தகுதி
யாக, மாத வருமானம் ரூ. 500-க்கும் கீழ் பெறுபவர்கள் என்று
குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மாநிலங்களில் எல்லாம், குறிப்பிட்ட மாத வருமானம்
உள்ளவர்களுக்கு மட்டுமே, குறைந்தவிலை அரிசி விநியோகிக்கப்
படும் பொழுது, நமது மாநிலத்தில் உச்ச வரம்பின்றி, அனைவ
ருக்கும் குறைந்த விலை அரிசி வழங்கப்பட்டு வருகிறது.
இதனை சீர்செய்ய, பயன்பெறுவோர் பற்றிய புள்ளி விவரங்கள்
சேகரிக்கப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டது. எனவே,
படையில், அரசு, இனி, மாத வருவாய் ரூ. 750-ம் அதன் அடிப்
உள்ள 90 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அதற்கு கீழ்
பொது விநியோகத் திட்டத்தின் கீழ், குறைந்த விலை, மட்டுமே,
வழங்கப்படும் என்று முடிவு செய்து உள்ளது. (மேசையைத் அரிசி



தட்டும் ஒலி). மாத வருவாய் ரூ. 750-க்கும் மேல் பெறுபவர்
களின் குடும்ப அட்டைகளுக்கு, அரிசி நீங்கலாக, இதர அத்தியா
வசியப் பொருட்கள் மட்டும் வழங்கப்படும்.

அதுபோலவே 2½ ஏக்கர் நஞ்சை நிலம் வைத்திருக்கும்
நிலச் சுவான்தாரர்களுக்கும், இத்திட்டத்தின் கீழ்
குறைந்த விலை அரிசி வழங்கப்பட மாட்டாது.
அவர்களது குடும்ப அட்டைகளுக்கு இதர அத்தியாவசியப்
பொருட்கள் மட்டும் வழங்கப்படும். இதனால் அரசு
பொது விநியோகத்திற்கு வழங்கும் மானியச் சுமை குறை
யும் என்பது உண்மைதான். ஆனால், ஏழை எளியோ
ரின் நலனையே, அவர்களின் உயர்வையே குறிக்கோளாக
வும் கோட்பாடாகவும் கொண்டுள்ள எங்கள் அரசு, இந்த
தகுதி நிர்ணயம் செய்தது மானியத் தொகை வழங்குவதை
மிச்சப்படுத்தி குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன்
அல்ல என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசை
யைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-45

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற, 1991 ஜூன் திங்களில்
சாதாரண ரக அரிசியின் விலை 2 ரூபாயாகவும், சன்ன
ரக அரிசியின் விலை 2.50 ஆகவும், மிகச் சன்ன ரக
அரிசியின் விலை 2.50 ஆகவும் இருந்தன. மத்திய அரசு
இத்திட்டத்திற்காக மாநிலத்திற்கு தனது மையத் தொகுப்பி
லிருந்து வழங்கும் அரிசியின் விலையை 28—12—1991 முதல்
உயர்த்தியது. எனவே, கட்டாயத்தின்பேரிலும், நிதிநிலை
யின் நெருக்கடியிலும் நாங்கள் விரும்பாவிட்டாலும் வேறு
வழியின்றி, ஒரு மாதம் கடந்தபின் 29—1—1992 முதல்
சன்ன ரகம் மற்றும் மிகச் சன்ன ரக அரிசியின் விலை
யினை ரூ. 2.50-லிருந்து ரூ. 3.50 ஆக உயர்த்தினோம்.
அப்பொழுதும், சாதாரண ரக அரிசியின் விலையான ரூ. 2
என்பதை மாற்றக்கூடாது என்ற உறுதியுடன், அதனை
மாற்றாது தவிர்த்தோம். இதிலிருந்தே, எங்கள் அரசின்
நல்லெண்ணத்தை தமிழக மக்கள் நன்கு புரிந்து கொள்ள
முடியும். (மேசையைத் தட்டும் ஒலி.)

தவிர்க்க இயலாத சூழ்நிலையில் உயர்த்தப்பட்ட, சன்ன
ரக மற்றும் மிகச் சன்ன ரக அரிசி விலை உயர்வினைப்
பற்றி, நான் முகாம் சென்றபொழுது சந்தித்த ஏழைத்
தாய்மார்களிடம் விசாரித்தேன். அவர்கள் பெரும்
பாலும் நியாயவிலைக் கடைகளில் சாதாரண ரக அரிசி,
மிகக் குறைவாகத்தான் கிடைக்கின்றது. எனவே, நாங்கள்
சன்ன ரக மற்றும் மிகச் சன்ன ரக அரிசியை வாங்கும்

பொழுது, அதன் விலை கூடுதலாக இருப்பதை உணர்கின்
றோம்' என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். மேலும்
நான் திங்கட்கிழமைகளிலும், சனிக்கிழமைகளிலும்
சந்திக்கும் பொது மக்களிடம் இதுபற்றிக் கேட்ட
பொழுது, அவர்களும் இதே கருத்தினையே தெரிவித்தார்
கள். எனவே, இது குறித்து மீண்டும் பரிசீலனை செய்ய
வேண்டும் என்று நான் முடிவு எடுத்தேன். அதற்காக
அமைச்சரவைக் கூட்டத்தை 15— 4— 1992 அன்று கூட்டி
னேன். இந்த அமைச்சரவைக் கூட்டத்தில், சன்ன ரகம்
மற்றும் மிகச் சன்ன ரக அரிசியின் விலையை ரூ. 3.50
காசிலிருந்து, ரூ. 3 ஆகக் குறைக்கலாம் என்று முடிவு
செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்கிறேன். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி).

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி
யின் விலை குறைப்பு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட குடும்ப
அட்டைதாரர்களுக்கான தகுதிகள், வருகின்ற 1— 6— 1992
முதல் அமுலுக்கு வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) எனவே, ஜூன் 1ஆம்
தேதி முதல், சன்ன ரகம் மற்றும் மிகச் சன்ன ரக அரிசி
யின் விலை 50 பைசா குறையும், இந்த இரண்டு
ரகங்களும் 3 ரூபாய்க்குக் கிடைக்கும் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

குறைந்த விலை அரிசி பெறுவதற்கு தகுதிகளை நிர்ண
யித்திருப்பதால், அதில் கிடைக்கக்கூடிய சேமிப்பில், இந்த
விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது என்று யாரும் கருதிட
வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். முன்னர்
அரசு கொடுத்து வந்த 340 கோடி ரூபாய் மானியத்
துடன் கூடுதலாக ஒவ்வொரு ஆண்டும் 10 கோடி
ரூபாய் வரை அரசு மானியமாக வழங்கவேண்டி வரும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இந்த
விலைக் குறைப்பினால் அரசிற்கு கூடுதலாக 10 கோடி
ரூபாய் செலவு ஏற்பட்டுள்ளது என்பதையும் தெளிவு
படுத்த விரும்புகிறேன்.

ஏழை எளியோரின் பொருளாதாரச் சுமையைச் சிறி
தேனும் குறைக்கும் முகத்தான், இந்தக் கூடுதல் மானியச்
சுமையை அரசு ஏற்று உள்ளது என்பதைத் தெரித்துக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) (குறுக்கீடு.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதி 110-லே வேறு
ஒன்றும் இல்லை. 110-லே பேச முடியாது. (குறுக்கீடு.)
திரு. ஆர். சிங்காரம்.



**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஏழை எளிய மக்களு
டைய உணர்வுகளையும் புரிந்து கொண்டு, சட்டமன்ற உறுப்
பினர்கள் இங்கே பேசிய உணர்வுகளையும் புரிந்து
கொண்டு, இந்த பல ரகங்களுடைய விலைகளைக் குறைத்
ததன் மூலம், முதல் ரகமாக ஆகிய, டாக்டர் புரட்சித்
தலைவி அவர்களை மனமார, இதயமார மக்களின்
சார்பாகப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).
(குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் விவாதம்
இல்லாமல் இருக்கவேண்டும். திரு. வே. தம்புசாமி.

முற்பகல் 10-50

**திரு. வே. தம்புசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாத வருமானம் ரூ. 750 என்பது (குறுக்கீடு)
விளக்கம் தான் கேட்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைத்தான் சொல்ல
வந்தேன். நீங்கள் கேளுங்கள். அவர் பாராட்டுகிறேன்
என்ற ஒரு வரி சொன்னதால் விட்டேன். எதுவாக
இருந்தாலும், விதி 110-ன் கீழ் வைக்கப்படுகின்ற அறிக்கை
கள் மீது எவ்வித விவாதமும் இருக்கக் கூடாது என்ற விதி
இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் விவாதம் இல்லாமல்
பாராட்டுகிறேன் என்று வேண்டுமானால் சொல்லுங்கள்.
விதியைத்தான் உங்களுக்குச் சொல்கிறேன். கேளுங்கள்.
அதாவது நீங்கள் விவாதத்திற்குரிய விதத்திலே போய்விடக்
கூடாது. அதுதான் இந்த விதியில் இருக்கிறது.
திரு. வே. தம்புசாமி.

**திரு. வே. தம்புசாமி :** விவாதமே இல்லை. ரூ. 750
என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் விவசாய
தொழிலாளர்களுக்கு இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிற
கூலி ரூ. 16. ஆண், பெண்ணுக்கும் சேர்த்து ரூ. 30 ஆக
கணக்கிடப்பட்டு அவர்களுடைய மாத வருமானம் ஏறத்தாழ
ரூ. 900 ஆக கணக்கிடப்படுகிறது. அது கீழே இருக்கக்
கூடிய அதிகாரிகளால் செய்யப்படுகிறது. அப்படிச் செய்
தால் சாதாரன அத்துக்கூலி, விவசாயத் தொழிலாளர்களுக்கு
இந்த உரிமை என்பது கிடைக்காமல் போய்விடும். எனவே
அரசு இதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கி
றேன்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கிராமப்புறங்
களிலே வாழ்கின்ற நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள்
அத்தனை பேருக்கும், கைவினைஞர்கள் அத்தனை பேருக்கும்
இது பொருந்தும் என்று அறிவித்து விட்டால் சரியாக
இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்களான
ஆந்திரம், கர்நாடகம் அங்கெல்லாம் மாத வருமானம் ரூ. 500
அதற்குக் கீழுள்ளவர்களுக்கும் மட்டும்தான் பொது விநியோக
திட்டத்தின் கீழ் குறைந்த விலை அரிசி வழங்கப்படுகிறது.
தமிழகத்தைப் பொறுத்த வரை அதை இன்னும் உயர்த்தி
மாத வருமானம் ரூ. 750-ம் அதற்குக் கீழ் உள்ளவர்
களுக்கும் இந்த குறைந்த விலை அரிசி வழங்கப்படும்
என்று நிர்ணயித்து விட்டோம். இது எல்லோருக்கும்
பொருந்தும். யாரெல்லாம் ரூ. 750 மாத வருமானம்
பெறுகிறார்களோ, அதற்குக் கீழ் பெறுகிறார்களோ அவர்
களுக்கு மட்டும் தான் இனி பொது விநியோகத் திட்டத்தின்
கீழ் குறைந்த விலையில் அரிசி வழங்கப்படும்.

4. அறிவிப்பு.

1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளின் மிகைச் செலவிற்
கான மானியக் கோரிக்கைகளைப் பேரவைக்கு அளித்தல்
குறித்து. (ஆ. செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர்
அறிவிப்பு. 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளின்
மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவைக்கு
அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல்
திங்கள் 22 ஆம் நாள் புதன்கிழமையைக் குறித்துள்ளார்கள்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

(அ) வால்பாறை வட்டத்தில் அரசுக்குச் சொந்தமான ஆனைமலை
இளப் இடத்தை கையகப்படுத்தாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது
முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு.
டாக்டர் அ. ஸ்ரீதரன் அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்ச
ருடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் அ.
ஸ்ரீதரன்.





டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ''வால்பாறை வட்டத்தில் அரசுக்குச் சொந்த
மான ஆனைமலை கிளப் இடத்தை திரும்பப் பெற அரசு
ஆணை பிறப்பித்தும் கையகப்படுத்தாதது குறித்த'' அவசரப்
பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு
வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகி
றேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான அறிக்கை
அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், கோயம்புத்தூர் மாவட்ட
ஆட்சியர் 5—5—1936-இல் வால்பாறை வட்டம், ஆனைமலை
குன்றுகள் கிராமத்தில் புல எண். 31, 43-5, 48 ஆகிய
வற்றில் 28.70 ஏக்கர் நிலத்தை ஆனைமலை சங்கத்திற்கு
விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்கு
பயன்படுத்திக்கொள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம்
வழங்கினார். உரிமத்தில் சொல்லப்பட்ட 7-வது நிபந்
தனையை மீறி ஆனைமலை சங்கம் கட்டிடங்களை கட்டி
உள்ளது. மேலும் உரிமத்தில் சொல்லப்பட்ட 28.70
ஏக்கர் நிலத்தில் 4.84 ஏக்கர் நிலத்தை மட்டுமே ஆனை
மலை சங்கம் பயன்படுத்தி உள்ளது. 23.86 ஏக்கர்
நிலம் சங்கத்தின் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படவில்லை.
குத்தகை உரிமத்தில் சொல்லப்பட்ட 14-வது நிபந்தனை
யின்படி மாவட்ட ஆட்சியரே நிபந்தனை மீறலுக்காக
கொடுக்கப்பட்ட உரிமத்தை ரத்துச் செய்யலாம். எனவே,
ஆனைமலை சங்கத்திற்கு 1936-ம் ஆண்டில் வழங்கப்பட்ட
நிலத்தை உரிமத்தில் சொல்லப்பட்ட நிபந்தனை மீறலுக்
காக ஏன் மீள எடுக்கக் கூடாது என்பதற்கான காரணம்
கேட்கும் குறிப்பாணை கொடுத்து பதில் பெற்று ஆய்வு
செய்து, நிலத்தை மீள எடுக்குமாறு கோவை மாவட்ட
ஆட்சியர் 21—5—1991 -இல் கேட்டுக்கொள்ளப்பட்டார்.
அதன்பேரில் கோவை மாவட்ட ஆட்சியர் ஆனைமலை
சங்கத்திற்கு வழங்கப்பட்ட நிலத்தை மீள எடுப்பது
தொடர்பாக 2—4—1992 அன்று ஆனைமலை சங்கத்திற்கு
காரணம் கேட்கும் குறிப்பாணை அளித்துள்ளார். அச்
சங்கத்தின் விளக்கத்தைக் கேட்டுப் பெற்றப்பின் நிலத்தை
மீள எடுப்பது தொடர்பாக முறையான நடவடிக்கை
கோவை மாவட்ட ஆட்சியரால் மேற்கொள்ளப்படும்.

**டாக்டர் அ. ஸ்ரீதரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கோட்டையாக இருக்கின்றது வால்பாறை சட்டமன்ற தொகுதி. இந்த வால்பாறை சட்டமன்றத் தொகுதியினுடைய வால்பாறை தாலுக்காவை "Industrially backward area'' வாக தமிழக அரசு அறிவித்திருக்கிறது. இருந்தாலும் வாக்குகளை சேகரிக்கின்ற போது, பலதரப்பட்ட மக்கள் என்னிடத்தில் ஒரு கோரிக்கையைச் சொன்னார்கள். அரசுக்குச் சொந்தமான ஆனைமலை கிளப்பினுடைய இடம் 28 ஏக்கர் இருக்கிறது. இதை பல சட்டமன்ற உறுப்பினர்கள் முயற்சி செய்தும் அரசுக்குத் திரும்பப் பெறமுடியவில்லை. காரணம் என்ன வென்றால், தமிழ்நாடு அரசு ஒரு தீயணைப்பு நிலையமும், தமிழ்நாடு டூரிசம் டெவல்ப்மென்ட் கார்ப்பரேஷன் மூலமாக ஒரு ஹோட்டலையும் கட்டுவதற்காக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இருந்த போதிலும் இந்த அரசினுடைய நலத் திட்டங்களை செயல்படுத்த முடியாமல் அரசுக்கு சொந்தமான இடம் இல்லாத காரணத்தினால் அவை நிலுவையிலே இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னது போல அங்கே இருக்கக் கூடிய ஆசிரியப்பெருமக்கள் அங்குள்ள கல்விக் கூடங்களிலே வந்து பணியாற்றுவற்குத் தயங்குகிறார்கள். காரணம். . . . .

*முற்பகல் 10-55.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

**டாக்டர் அ. ஸ்ரீதரன் :** காரணம் அங்கே தங்குவதற்கு இட வசதி இல்லாமல் இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் அரசினுடைய அனைத்து அதிகாரிகளும் அலுவலாளர்களும் அலுவலகங்களும் அங்கே செயல்பட முடியாமல் ஸ்தம்பித்துப் போன நிலையிலே இருக்கிறது. காரணம் அங்கே போதிய அளவுக்கு குடியிருப்பு வசதி இல்லை. அதற்குக் காரணம் அரசுக்குச் சொந்தமான நிலம் இல்லாததே. எனவே, அரசுக்குச் சொந்தமாக இந்த 28 ஏக்கர் நிலத்தையும் நாம் எடுத்து கையகப் படுத்தி அரசினுடைய நலத் திட்டங்களுக்கு செயல்படுத்தி, அரசு அலுவலாளர்களுக்கும் வீடுகளையும் குடியிருப்புகளையும் கட்டித் தருவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தால் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கால தாமதம் இன்றி அந்த நிலத்தை கையகப்படுத்த உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 1936 ஆம் ஆண்டு பி. எஸ். ஒட்ஹவுஸ் என்கிற ஐ.சி.எஸ். அதிகாரி காலத்தில் இவ்வளவு நிலமும் 100 ரூபாய்க்கு வாடகைக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. இதை உணர்ந்த இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, அரசினுடைய கட்டிடங் களைக் கட்டுவதற்கு வால்பாறை போன்ற முக்கியமான இடங்களில் நிலங்கள் இல்லை என்பதற்காக மட்டுமே இதை எடுக்க வேண்டும் என்று அரசு முயற்சி எடுத்தும் கூட, வகுக்கப்பட்ட விதி 7-ன் கீழ் உள்ள விதிமுறைகளை மீறி அந்த வால்பாறை சங்கம் அந்த விதியை மீறி கட்டிடங் களை கட்டுவதற்கும் மற்றவற்றிற்கு பயன்படுத்துவதற்கும் ஈடு பட்டிருக்கிறது. விதிகளை மீறினால் விதி 14-ன்படி அந்த இடத்தை எடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இருப்பதனாலும் அப்படி எடுக்கிறபோது விதி 15-ன் கீழ் 6 மாத காலம் தவணை கொடுக்க வேண்டும் என்று இருந்தாலும் அதையும் மீறி விதி 14-ல் இன்னும் சிறப்பாக அந்த விதி 7-ல் உள் ளதை மீறியதனால் எப்போது வேண்டுமானாலும் எடுக்க லாம் என்ற அதிகாரத்தை பயன்படுத்தி இங்கே இருக்கிற சட்டத்துறையின் ஆலோசனையின் பெயரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்து வருகிறார்கள். மிக விரைவில் அந்த நிலத்தை அரசு எடுக்கும் என்பதையும், அரசினுடைய தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் அ. ஸ்ரீதரன்.

**டாக்டர் அ. ஸ்ரீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை குன்றுகளின் இடத்தை அரசு கையகப்படுத்த வேண்டும் என்று கவர்ன்மெண்ட் லெடரக்ஷன் 21—5—1991-ன் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு பின்னாலும் 9—10—1991 21—11-1991, 6—1—1992, 12—2—1992 ஆகிய கடிதங்களில் அரசு மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டு உடனடியாக அந்த நிலத்தை அரசு சார்பில் கையகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது. இது தொடர்பாக நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் பேசியிருக்கிறேன். ஆனால் மாவட்ட நிர்வாகம் அரசு சார்பிலிருந்து இன்னும் தகவல்கள் வர வில்லை. உத்தரவு வரவில்லை. வந்தவுடன் அது கையகப்படுத்தப்படும் என்று சொன்னார்கள். நமது அரசின்

நல திட்டங்களுக்காக அந்த தனியார்களிடத்தில் அந்த எஸ்டேட் நிர்வாகிகள் இடத்தில் கேட்டாலும் கூட ஒரு இன்ச் இடம் கூட அவர்கள் தருவதற்கு முன் வருவதில்லை. எனவே சுமார் 40 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இந்த முக்கியமான இடத்தை உடனடியாக காலதாமதம் இன்றி கையகப்படுத்தி நம்முடைய அரசினுடைய பல்வேறு நலத் திட்டங்களுக்கும் செயல்படுத்தி வால்பாறை தொகுதியினுடைய மக்களுடைய நலனைக் காக்க வேண்டும் அப்போது தான் என்னுடைய தலை தப்பும் என்பதால் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இதில் உடனடியாக ஆவன செய்ய முன் வருவாரா என்பதை அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 11.00

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மட்டும் அல்ல. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பல இடங்களில் 100 ஆண்டு களுக்கும் சில இடங்களில் ஆண்டுகளை குறிப்பிடாமலும் குறைந்த வாடகைக்கு நிலங்கள் விடப்பட்டிருக்கிறது. இந்த அவையின் மூலமாக மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டு கோள்படி எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்வது எந்தெந்த இடங்களில் அரசு நிலங்கள் அது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே விடப் பட்டிருந்தாலும் சரி மற்ற யார் ஆட்சிக் காலத்திலே விடப் பட்டிருந்தாலும் சரி அவைகள் விதிகளை மீறியிருக்கின்ற போது எல்லா விதிகளிலும்— வால்பாறை மட்டும் அல்ல, பல இடங்களிலே அப்படி விடப்பட்டிருக்கின்றவை எல்லாம் அக்ரிமெண்ட்டை, ஒப்பந்தத்தைப் படித்துப் பார்க்கின்றபோது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதை எடுத்துக்கொள் கின்ற அதிகாரம் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் கள் அவர்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்தெந்த இடங்களில் நிலங்களை எடுக்க வேண்டுமோ அவற்றை எடுக்க வேண்டுமென்று— வால்பாறை மட்டும் அல்ல மற்ற இடங்களிலும் எடுக்க வேண்டும் என்பதையும் அதுமட்டுமல்ல 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேய ஏகாதிபத்திய காலத்தில் கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தை மீறி யிருப்பதனாலும் நாமினலாக 100 ரூபாய் 200 ரூபாய் என்று போடப்பட்டிருப்பதாலும் எல்லா விதிகளிலும் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த வாடகையை உயர்த்துவதற்கு அதிகாரம் இருக்கிறது என்று. இந்த அவையின் மூலமாக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கி றேன். எல்லா இடங்களிலும் வாடகையை உடனே உயர்த்த வேண்டும். விதியை மீறியிருக்கின்ற இடத்தில்



நிலங்களை எல்லாம் எடுக்க வேண்டும். அதனாலே சட்டத் துறையின் ஆலோசனையைப் பெறுகின்றபோது விதியில் மூன்று மாதம், நான்கு மாதம் கொடுத்திருந்தாலும், இன் றைக்கு இருக்கின்ற விதிமுறைப்படி விதியை மீறியிருக்கின்ற போது 15 தினங்களிலே எடுத்துக் கொள்ளலாம் என்று விதி இருக்கிறது. அதிகாரம் இருக்கிறது. எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் குறிப்பாக கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து நிலத்தை எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மணல் எடுக்கும் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு டாக்டர் தே. குமாரதாஸ், திரு. கு. லாரன்ஸ், திரு. மா. சுந்தரதாஸ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 3—4—1992 முதல் மணல் எடுக்கும் லாரி உரிமை யாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 3—4—1992 முதல் மணல், கல் ஏற்றிச் செல்லும் லாரிகள் போராட்டத் தில் ஈடுபட்டிருப்பதினால் குமரி மாவட்டம் முழுவதும் அரசு பணிகள் தனியார் தொழில்கள் மற்றும் சுமார் 30,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆற்றில் சட்டத்திற்குப் புறம்பாக மணல் ஏற்றி வந்ததால் வருவாய்த்துறைத் அலுவலர்களால் சுமார் 40 லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டு குளித்துறை தாலுக்கா அலுவலகத்தில்

நிறுத்தப்பட்டு இருப்பதாக போக்குவரத்து ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்ற லாரிகள் யாவும் ஓடிக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுவாகவே கல், மணல் ஏற்றிச் செல்கின்ற லாரிகள் அனுமதி பெற வில்லை என்று சொல்லி வெகுகாலமாக சரக்குகள் பறிமுதல் செய்யப்படுவதோடு அந்தந்தப் பகுதியில் உள்ள தாலுக்கா ஆபீசில் அந்த லாரிகளை கொண்டு விடுகிறார்கள். அரசு குறிப்பிட்ட இடத்தில் தான் மணல் எடுக்க வேண்டும் அல்லது கல் எடுக்க வேண்டும் என்று சொல்லி நிர்ணயிக்கவில்லை அதுமட்டுமல்லாமல் இந்த லாரிகள் பறிமுதல் செய்யப்படுகின்ற நேரத்தில் அதற்கென்றுபோடக் கூடிய அபராதத் தொகையை அவர்கள் கட்டுவதற்கு முன் வந்தாலும் குறைந்தது ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் அந்த லாரியை அந்த லோடோடு வைத்திருக்கின்ற நேரத்தில் அந்த லாரிகளும் பழுதடைந்து போவதுடன் அந்தப் பகுதியில் பணியாற்றுகின்ற ஆயிரக்கணக்கான அதாவது கிட்டத்தட்ட 30,000 முதல் 40,000 பேர்கள் வரைக்கும் கல் உடைக்கின்ற, மணல் எடுக்கின்ற பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். எனவே இந்த ஏழை தொழி லாளர்கள் பாதிக்கப்படுகின்ற ஒரு அபாயகரமான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே அரசு முன் வந்து குறிப்பிட்ட பகுதிகளை ஒதுக்கி இந்தப் பகுதியில் தான் மணல் எடுக்க வேண்டும் இந்தப் பகுதியில் தான் கல் எடுக்க வேண்டும் என்று ஒரு வரைமுறையை அறிவிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கின்ற தமிழகத்து முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைய தினம்தான்—போன ஆண்டு இதே தினத்தில் தான் தேர்தல் களத்திலே தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை தமிழகத் திலே இருந்து அகற்றியே தீருவேன் என்று சூளுரைத்து. தேர்தல் பணிகளை ஆற்றுவதற்காக புறப்பட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல யார் தவறு செய்தா லும் இந்த அரசு அவர்களைத் தண்டிப்பதற்குத் தயங்காது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பதை போல குறிப்பிட்ட இடங்களில் மணல் எடுக்கவேண்டும்



என்று வரையறை இல்லை. குறிப்பிட்ட இடங்களிலே எந்த எந்த இடங்களிலே ஏலம் போட்டு இருக்கிறார்களோ அந்த அந்த இடங்களில் தான் மணலை எடுக்கவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வலியுறுத்தி யும் கூட சில பேர்கள் முறை தவறி மணல், கல் ஏற்றி வந்த காரணத்தால் 40 லாரிகளும் பர்மிட் இல்லாத 3 லாரிகளும் அங்கே சீஸ் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல எல்லா லாரிகளும் அங்கே நிறுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11·05

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மா. சுந்தரதாஸ்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வி வருவாய்த்துறை அமைச்சருக்கு வரவேண்டும் என்று நினைக்கிறேன். என்ன வென்று சொன்னால் அந்தப் பிரச்சினை......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதாவது இது போக்குவரத்துத் துறையில்தான் வரும் (குறுக்கீடு) போக்குவரத்துத் துறையில் தான் வருகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியே லாரியைப் பற்றித்தான் கேட்கிறார்கள்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** தலைவர் அவர்களே, லாரியைத் தான் பிடித்து இருக்கிறார்கள். அதனால், தான் கேள்வியைப் போட்டிருக்கிறோம். ஆனால் பிரச்சினை என்னவென்று சொன்னால் மணல் எடுக்கின்ற இடங்கள் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட இடமா? இல்லையா? கல் எடுக்கின்ற இடங்கள் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட இடமா? இல்லையா? என்பதுதான் இந்தக்கேள்வி. ஆனால் இந்த லாரிகள் பிடிக்கப்பட்டிருக்கிறது. வருவாய்த் துறையின ரால்தான் பிடிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னாலும் கூட உண்மையிலேயே இது வருவாய் துறையைச் சார்ந்தது தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது கனிமத்துறை யைச் சேர்ந்தது. அதுவும் வருவாய்த்துறையின் கீழ் வராது. கனிமத் துறையின் கீழே வருகிற விவகாரம்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே கான்டிராக்ட் வேலை, அரசாங்க வேலை பல கோடி ரூபாயில் நடந்து கொண்டிருக்கிறது. அந்த வேலை நடப்பதற்காகக் கொண்டு வந்த மணலை அந்த அரசாங்க மெயின் ரோடிலேயே நான் பார்த்தேன், மெயின் ரோட்டிலே கல்லை. மணலை வருவாய்த்துறை அதிகாரிகள் இறக்கிவிட்டு அந்த லாரிகளை கான்பிஸ்கேட் செய்கிறார்கள். பிடித்துக்கொண்டு போகிறார்கள். இது எந்த அளவுக்கு நியாயம் என்று நான் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன. ஆகவே தான் பலயிடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சந்தித்துப் பேசியிருக்கிறோம். எங்கள் மாவட்டத்திற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எந்த எண்ணத்தில் பல கோடி ரூபாயை இந்த ஆண்டு ஒதுக்கி இருக்கிறார்களோ அந்தப் பலன் எங்களுக்குக் கிடைக்காமல் போகிற நிலைமை வந்திருக்கிறது. ஏன் என்றால் ஒப்பந்தக்காரர்கள் எடுக்க தயாராக இல்லை, எடுக்கின்ற வேலையை செய்ய விடுவது இல்லை இவர்கள். பல கோடி ரூபாயை இதுவரை கன்னியாகுமரி மாவட்ட வரலாற்றிலேயே இவ்வளவு. ரூபாய் ஒதுக்கியது இல்லை. அந்த அளவுக்கு அதிகமான தொகையை ஒதுக்கி எல்லா சாலைகளையும் செப்பனிடுகிறார்கள். எல்லா ரோடுகளிலும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இப்போது குறுக்கே நிற்பது வருவாய்த்துறை அதிகாரிகள் தான், வேண்டும் என்றே, ஜல்லி, கல, மணல் எடுக்கின்ற லாரிகளை நிறுத்தி 2 மாதம், 3 மாதம் நிறுத்தி, ஹை கோர்ட் ஆர்டர் வாங்கினால் கூட எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விடுவது இல்லை. இந்த அளவுக்கு கெடுபிடி செய்தால நம்முடைய வளர்ச்சிப் பணிகள குன்றி விடும் என்ற காரணத்தால் அதற்காக தயவுசெய்து இத்தகைய லாரிகளைப் பிடிக்கக்கூடாது என்று அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் வரலாறு காணாத அளவுக்கு நிதி ஒதுக்கித் தந்து இருக்கிறார்கள் என்று இன்றைக்குத் தான் இதை சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய ஒப்பற்ற தலைவி, டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு எப்படி செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதைத் அவர் சுட்டிக்காட்டியிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசை தட்டும் ஒலி) ஆகவே, மணலாக இருந்தாலும் சரி, ஜல்லியாக இருந்தாலும் சரி, குறிப்பிட்ட இடங்களில் தான் எடுக்கவேண்டும் என்று ஏலம் விட்டு அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. கல் குவாரி என்று சொன்னாலே கல் உடைக்கின்ற இடங்களுக்குத்தான் அரசு அனுமதி தந்திருக்கிறது அங்கே இருந்துதான்



எடுத்து வரவேண்டும் அதேபோல் ஆற்றில் மற்ற பகுதிகளில் இருக்கின்ற இடங்களில் ஏலம் விடப்படுகிறது பஞ்சாயத்து அல்லது அங்கே இருக்கின்ற பொதுப்பணித் துறையின் சார்பாக ஏலம் விடப்படுகிறது. ஆனால் இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்குத் தெரியாமலேயே பக்கத்தில் இருக்கின்ற இடங்களில் இருந்து பர்மிட் இல்லாமலேயே எடுத்து விடுகின்ற காரணத்தால்தான் அந்த லாரிகளை நாம் இப்போது தடை செய்து, பர்மிட் இல்லாமல் எடுத்துக்கொண்டுவந்து இருப்பதற்காக நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம் ஆகவே அங்கே இருக்கின்ற லாரிகளின் உரிமையாளர்கள் தவறான வழியினை சில இடங்களில் கையாள்கிறார்கள் என்பது இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும் இன்றைக்கு மணலை வழிக்கின்ற பலயிடங்களிலே அந்த லாரிகளுடைய வேகம், மணல் வழிக்கின்றபோது தவறான இடங்களில், அரசு அனுமதி இல்லாத இடங்களில் மணலை வழித்துக் கொண்டு வருவது இதுபோன்ற நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன என்பது இங்கே இருக்கின்ற அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் நன்கு தெரியும் ஆகவே, இது போன்ற தவறுகள் செய்கின்றவர்களை ஊக்குவிக்காமல் இருக்கவேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய தலையாய கடமை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இது போன்ற தவறுகள் இல்லை என்று பர்மிட வாங்கிக்கொண்டு யாராவது அங்கே வருகிறார்கள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று குறிப்பிட்டுக் காட்டினால் உடனடியாக இந்த அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்;

## 6. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன்:—

1. இந்திய தணிக்கைத்துறை தலைவரின் 1970-71 ஆம் ஆண்டு மற்றும் 1971—72 ஆம் ஆண்டுகளுக்கான சிவில் அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த 4-வது அறிக்கை, 7-வது பேரவை மற்றும் 8-வது அறிக்கை 8-வது பேரவையின் உள் துறை குறித்து மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகள் மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய 45-வது அறிக்கையை அளிக்கிறேன்

2. 1978-79 ஆம் ஆண்டுக்கான வாக்கு அளிக்கப்பெற்ற மானியங்களும் சாட்டப்பட்ட நிதி ஒதுக்கீடுகளும் மிகை செலவினங்கள பற்றிய பொதுக் கணக்குக் குழு அளித்த 26-வது அறிகசை 7-வது பேரவை மற்றும் 63 வது அறிக்கை 8-வது பேரவையில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய 46-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

## 7. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்.)

சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்) 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு மாண்புமிகு நிதி அமைச்சர்.

முற்பகல் 11-10

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.—

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதிஅமைச்சர்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்

## 8. மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 20—வேளாண்மை.

(ஆ) கோரிக்கை எண். 53—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

(இ) கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்.

(ஈ) கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''மானியக் கோரிக்கை எண். 20— வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 621,02,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 2218, திரு. கே. செல்வராஜ்.

திரு.கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வறட்சிப் பகுதிகளில் விவசாயிகள் நலன் கருதி மானிய விலையில் விதை பொருள் கொடுக்க நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 621,02,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 2219, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் முழுமையும் விவசாயத்தையே நம்பியுள்ள மாவட்டமாக இருப்பதால் இங்கு ஒரு வேளாண்மை கல்லூரி துவங்கும் அவசியம் பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக் கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 621,02,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 53- வேளாண்மை குறித்த மூலதனச் செலவு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''மானியக் கோரிக்கை எண் 53— வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,09,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங் கள். வெட்டுத் தீர்மானம் எண். 2258, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிறு குறு விவசாயிகள் விவசாயத் தொழில் செய்யும்போது இறந்தால் உதவித் தொகை வழங்குவது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.:

''வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 53-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறு கின்ற ரூ. 10,09,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பால் வழங்கு திட்டங் கள் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவை பற்றிய மானியக் கோரிக்கைகளும் சேர்ந்தே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட இருக்கிற காரணத்தால் அந்த மானியக் கோரிக்கை களையும் முன் வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.



மானியக் கோரிக்கை எண். 10— பால் வழங்கு திட்டங் ள். மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் லைவர் அவர்களே,

''பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் ானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 5,16,34,000-க்கு மேற் டாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' னக் கோருகிறன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வெட்டுத் திர்மானங் ள். வெட்டுத் தீர்மானம் எண். 2266, திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'To discuss about the use of sub-standard measuring insturmens that the milk booths in Madras City and the need o undertake steps to prevent this' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் ;

"பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற. ரூ. 5,16,34,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 2288, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருத்துறைப்பூண்டி நகரத்தில் ஆவின்பால் வழங்கும் திட்டம் குறித்து' விவாதிக்க நான் கீழ்கண்ட வெட்டுத்தீர் மானத்தை மொழிகிறேன் ;

''பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,16,34,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 22— கால்நடை வளர்ப்பு. மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 72,46,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் '' எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2356, திரு. எச். எம். ராஜு.

**திரு. எச். எம். ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கறவை மாடுகளை ஜெர்மனி, டென்மார்க் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து நீலகிரி மாவட்ட சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில்வழங்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 72,46,21,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2341, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை அளிக்க நடமாடும் மருத்துவமனை ஒன்றை அமைப்பது குறித்து"' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 22— கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 72,46,21,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக்கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர்கள் தங்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேளாண்மை மற்றும் வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சடிக்கப்பட்டு இப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றையெல்லாம் படித்திருப்பார்கள். இதில் தமிழில் உள்ள குறிப்புகளை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் ஏற்றுக்

---

241 முதல் 385 வரையிலான பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.



கொள்ள வேண்டும்". மாண்புமிகு உறுப்பினர்கள் இத்துறையின் நலன் கருதி அவர்கள் எடுத்துரைக்கின்ற ஆலோசனைகள் மற்ற கருத்துக்கள அடிப்படையில் என்னுடைய பதிலுரையை இறுதியாக இந்த அவைக்கு அளிக்கிறேன் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் பண்ணை வளர்ச்சித் துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை ஆகிய தலைப்புகளின் கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதில் தமிழில் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அவைக் குறிப்பில் ஏற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கிய பின்பு என்னுடைய பதிலுரையைக் கூறுகிறேன் என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பங்கு பெறுகிற உறுப்பினர்கள் இரண்டு அமைச்சர்களது மானியக் கோரிக்கைகள் மீதும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம். பேரவை மாலையிலேயும் கூட இருக்கிறது. எனவே, சில பொறுப்பு வாய்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் மாலை நேரத்திலேயும் 4 மணிக்கு வந்து விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

விவாதம் முடிவுற்றதற்குப் பின்னர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சா முதலில் பதிலுரை வழங்குவார். அதன் பின்னர் வேளாண்மைத் துறை குறித்த மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டதற்குப் பிறகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் தன்னுடைய பதிலை வழங்குவார். அதன் பின்னர் அந்த மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு நடைபெறும். எனவே காலையிலும் மாலையிலும் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இந்த இரண்டு அமைச்சர்களுடைய மானியக் கோரிக்கைகள் மீதும் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்படுகிறது. திரு. ஏகாம்பர ரெட்டி.

---

241 முதல் 385 வரையிலான பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

[1992 ஏப்ரல் 21

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, வேளாண்மை குறித்த மூல தனச் செலவு - மானியக் கோரிக்கை எண். 2) மற்றும் எண். 53 ஆகியவைகளின் மீது நான் சார்ந்திருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய சில கருத்துக்களைக் கூற முன் வந்துள்ளேன்.

அரிசி மற்றும் உணவு தானிய உற்பத்தி மிகவும் அதிகமான அளவிற்கு உற்பத்தி செய்தது, விவசாயப் பெருமக்கள் மேற்கொண்ட முழு முயற்சியும் அரசின் பரிபூரண உதவியும் காரணமாகும் என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

அரிசி உற்பத்தி மிக அதிகமான அளவிற்குக் கடந்த ஆண்டு வந்தது என்றால் அது விவசாயப் பெருமக்களுடைய விடா முயற்சி காரணமாக இருக்கும் என்றும் அதோடு பூரண ஒத்துழைப்பு அரசிடமிருந்தும் கிடைத்தது என்று தெரிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

அதுபோக, இந்த '' இன்டகிரேட்டட் ப்ரோகிராம் ஃபார் ரைஸ் டெவலெப்மென்ட் ''—அதாவது ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மைய அரசு 75 பர்சென்டும், மாநில அரசு 25 பர்சென்டும் கொடுப்பதும் மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸை ஏதோ கேரோ செய்வதைப்போலச் சுற்றி நிற்கக் கூடாது. திரு. ஏகாம்பர ரெட்டியார்.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : கடந்த ஆண்டு 533 இலட்சத்திற்கும் மேலான தொகையை ஒதுக்கி அதற்கு விவசாயப் பெருமக்களுக்கு உதவி செய்யப்பட்டது. இந்த ஆண்டு கூட கூடுதலான பணத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரிசி உற்பத்தித் திட்டத்தின் கீழ் ரைஸ் மினி கிஃப்ட் கொடுக்கிறார்கள். அது முழுமையாக மைய அரசு உதவியாலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை மீண்டும் அதிகப்படுத்தினால் நம்முடைய '' இன்டகிரேட்டட் ப்ரோகிராம் ஃபார் ரைஸ் டெவலெப்மென்ட் '' ஸ்கீமுக்கு உதவியாக இருக்கும் என்று என்னுடைய யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 21] [திரு. எ. ஏகாம்பர ரெட்டி]

முற்பகல் 11-20

அதேபோல, விவசாயப் பெருமக்கள் உற்பத்தி செய்யும்
ஒவ்வொரு பொருளுக்கும் தக்க விலை இல்லாமல மிகவும் அவதிப்
படுகிறார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்குத் தேவையான
அளவுக்கு உதவி செய்ய அரசு முன்வர வேண்டும். உதாரணத்
திற்கு, அரிசி, இந்த ஆண்டு—நெல்—ஜெ. 13, ஏ.டி.டி. 37,
1424 என்ற ரகம் அதிகமாக, மாண்சூன் அதிகமாக இருந்த
காரணத்தினால், அதிகமான அளவுக்குப் பயிர் செய்யப்பட்டது.
அதற்குச் சரியான விலை இல்லாத காரணத்தால், விவசாயிகள்
பெரிதும் அவதிப்படுகிறார்கள். தேவையான அளவுக்கு விலை
கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

அதேபோல், சமையல் எண்ணெய் கூட நமக்குப் பற்றாக்குறை
இருக்கிறது. அந்தப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு, நாம
18 ஆயிரம் டன் பாமாயிலை இறக்குமதி செய்கிறோம். அது
இல்லாமல் இருப்பதற்கு, எண்ணெய் வித்து மேம்பாட்டுத் திட்டத்
தின் கீழ் நம்முடைய தமிழ்நாட்டிலே அதிகமாக கடலை, எள்
போன்ற எண்ணெய் வித்துக்களைப் பயிர்செய்து, அந்தப் பற்றாக்
குறையைத் தீர்க்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். இன்
றைக்கு வேர்க்கடலை பயிரிடுவதற்கு ஒரு ஹெக்டேருக்கு, சுமார்
2½ ஏக்கரா உள்ள ஒரு ஹெக்டேருக்கு 500 ரூபாய் சப்சிடி
கொடுக்கிறார்கள் அரசாங்கத்திலே. அவனுக்கு விதைக் கடலை
வாங்க வேண்டுமென்றால், 2 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது.
5 மூட்டை வேர்க்கடலை வாங்க வேண்டும். ஒரு மூட்டை
வேர்க்கடலை 400 ரூபாய். இரண்டாயிரம் ரூபாய் போட்டு,
அதை வாங்கினால்தான் ஒரு ஹெக்டேருக்குப் போட முடியும்.
ஆகவே, அரசாங்கம் கொடுக்கக்கூடிய சப்சிடி 500 ரூபாயிலிருந்து
குறைந்தது ஆயிரம் ரூபாய்க்கு உயர்த்த வேண்டுமாய் நான்
கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பாமாயில் புராஜெக்ட் 24.89 கோடியிலே நிறுவு
வதற்கு உத்தேசித்திருப்பதற்கு மகிழ்ச்சி. அதைக் கூடிய விரை
வில் நிறுவினால், நம்முடைய சமையல் எண்ணெய் பற்றாக்
குறையை நிவர்த்தி செய்வதற்கு அது ஒரு வாய்ப்பாக இருக்கும்.
அதேபோல் ரைஸ் மினி கிட் புரோக்ராம் இருக்கிறது. அந்த
மினி கிட் புரோகிராமை அதிகப்படுத்தி விவசாயப் பெருமக்க
ளுக்கு உதவினால், அரிசி உற்பத்திக்கு ஒரு உதவியாக இருக்கும்
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது முழுமையாக
மத்திய அரசின் உதவியோடு செய்யப்பட்ட திட்டமாக இருப்ப
தால், மாநில அரசுக்கு ஒரு கமிட்மென்ட்டும் கிடையாது.
ஆதலால், அதிகபட்சம் அதை விரிவுபடுத்தி, ஏழை எளிய மக்க
ளுடைய விவசாயத்திற்கு உயர்த்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்
கிறேன்.

அதேபோல், மண் வளம் பெருக்க கிரீன் மேன்யூர் சீட்ஸ்
பசுந்தாள் உரத்தை அதிகப்படுத்த வேண்டும். கிளாரி சீடியா,
கிரீன் மேன்யூர் சீட்ஸை அதிகமாக விவசாயிகளுக்கு விநி
யோகம் செய்து, மண் வளத்தைப் பெருக்க வேண்டும். மண்
வளத்தைப் பெருக்கினால்தான், விவசாயிகளுக்கு வரக்கூடிய
மகசூல் அதிகமாகும். கிரீன் மேன்யூர் சீட்ஸ்—பசுந்தாள்
உரத்தை, கிளாரி சீடியா போன்ற உரத்தை அதிகமாகக் கொடுத்து
விவசாயிகளுடைய மண் வளத்தைப் பெருக்குவதற்கு அரசாங்கம்
உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கெல்
லாம் ஜலாதாரம் இருக்க வேண்டும். இரிகேஷன் ஃபெசிலிடீஸ்
இருக்க வேண்டும். கடந்த ஆண்டு 8,000 கிணறுகளுக்கு லோன்
வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அதிகமாக வழங்கினால்
வசதியாக இருக்கும். அந்த 8,000 கிணறுகளை—ஓபன்
வெல்ஸ்—கொடுப்பதை 10 ஆயிரமாக அதிகப்படுத்த வேண்டு
மாய்க் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மத்திய அரசு 50%
சப்சிடி கொடுக்கிறார்கள். ஆகையால், அதை அதிகப்படுத்தி,
நாம் தமிழ்நாட்டிலே 10 ஆயிரம் ஓபன் வெல்ஸ் -ஆவது
கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதே நேரத்தில், ராகி டெவலெப்மென்ட்—இன்டக்ரேடட்
டெவலெப்மென்ட ஸ்கீம் ஃபார் ராகி, கேழ்வரகுக்கு இருக்கிறது.
அந்த கேழ்வரகு முழுமையாக சென்ட்ரல் அசிஸ்டென்டின் கீழ்
வருகிறது. அது எங்கள் செங்கல்பட்டு ஜில்லாவிலே விஸ்தரிக்கப்
படவில்லை. அதைக் கட்டாயமாக செங்கல்பட்டு ஜில்லாவிலே,
கேழ்வரகு விளைவதற்கு வசதியாக நிலங்கள் அதிகமாக அங்கே
இருக்கிறது ; இரிகேஷன் ஃபெசிலிடீஸ் இருக்கிறது. ஓபன் வெல்ஸ்
இருக்கின்றன. பம்பு செட்டுகள் இருக்கின்றன. டிரை
லேண்ட் ஃபார்ம் இருக்கிற இடத்தில் எல்லாம் கேழ்வரகு பயிர்
செய்யலாம். அவ்வாறு கேழவரகு பயிர் செய்யும்போது, ஓரள
வுக்கு உணவுப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு அது ஒரு வாய்ப்
பாக இருக்கும். ஆகவே, தயவுசெய்து உங்கள் மூலமாக அமைச்ச
ரைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்.
ஜில்லாவிலே இந்த இண்டக்ரேடட் டெவலெப்மென்ட ஸ்கீம்
ஃபார் ராகி என்ற திட்டத்தில், அதையும் சேர்க்கும்படி நான்
கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கரும்பு. கரும்பிற்கு நம்முடைய மாநிலத்தில்
310 என்று நிர்ணயித்திருக்கிறோம். ஆந்திர மாநிலத்திலே 350 ;
கர்நாடக மாநிலத்திலே 380. இதிலே 8.5 ரெகவரிக்கு நம்முடைய
தமிழகத்திலே 310. இப்போது பார்த்தால், ஒரு டன்
னுக்கு குறைந்தது 150 ரூபாய்க்கு மேல் செலவாகிறது. 310
ரூபாய் கொடுத்தால் அவன் என்ன செய்வான் என்பதை யோசனை
செய்ய வேண்டும். அண்டை மாநிலத்திலே, ஆந்திராவிலே 350;
கர்னாடகாவிலே 380 ஒரு டன்னுக்கு 8.5 ரெகவரிக்கு கொடுக்
கிறார்கள். அதை நாம் ஏன் செய்யக்கூடாது ? அண்டை மாநிலத்
த்திலே கொடுப்பதற்குச் சமமாக இல்லாவிட்டாலுங்கூட.



குறைந்தது 375-ஆவது கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வர
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோக, 17%
ரெகவரி—17% என்பது, பர்சேஸ் டாக்ஸ் கொடுக்கிறார்கள்.
இது ரொம்ப அநியாயம். விவசாய சமுதாயத்திற்கே ஒரு அடி
இது. 17% அரசாங்கம் ' பர்சேஸ் டேக்ஸ் ' போட்டு எடுத்துக்
கொள்கிறது. ஆந்திர மாநிலத்திலே ஒரு டன்னுக்கு 30
ரூபாய்தான் பர்சேஸ் டேக்ஸ் போடுகிறார்கள். அதிலே 16
ரூபாயை விவசாயிக்குக் கொடுக்கிறார்கள். 14 ரூபாயை
அரசாங்கம் எடுத்துக் கொள்கிறது. மகாராஷ்டிராவிலே
கிடையாது. குஜராத்திலே கிடையாது. எந்த ஸ்டேட்டிலே
யும் பர்சேஸ் டேக்ஸ என்பது கிடையாது. ஆதலால், தயவு
செய்து உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்வது, அந்த பர்சேஸ் டேக்ஸ்—அதனுடைய உத்தேசத்தைக்
கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-25

அதேபோன்று டிரான்ஸ்போர்ட் சப்சிடி, ஆந்திராவிலே
50% கொடுக்கிறார்கள், மகாராஷ்டிராவிலே கிடையவே கிடை
யாது. டிரான்ஸ்போர்ட், லேபர், இவைகளையெல்லாம் கம்ப
ளீட்டாக அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. நம்முடைய மாநில
மும் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? அந்த அளவுக்குச் சர்க்கரை
விலையை ரூ. 6.95 என்று ஏற்றி விட்டார்கள். எப்போது சர்க்
கரை விலையை ஏற்றினார்களோ, அப்பொழுதே கரும்பு விலை
யையும் கட்டாயமாக ஏற்ற வேண்டும். அது ஒரு பாலிசி.
Constructive Policy எப்போது சர்க்கரை விலையை
மைய அரசு ஏற்றினார்களோ மாநில அரசும் தவறாமல அந்தக்
கரும்பு விலையையும் ஏற்ற வேண்டும். அதை மனதில வைத்துக்
கொண்டு, கரும்பு விலையை ஏற்ற வேண்டும் என்ற என்னுடைய
கோரிக்கையைப் போல், 375-வது 8.5 ரெக்கவரிக்கு ஏற்றினால்
விவசாயிகளுக்கு நலமாக இருக்கும். விவசாயக் குடும்பங்கள்
முன்னுக்குவர வசதியாக இருக்கும். விவசாயக் குடும்பத்தில்
பிறந்து, விவசாயக் குடும்பத்திலே வளர்ந்து, ஜனாதிபதியான
திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் சொன்னார்கள். "The pity is
the farming community is not getting its due share in the national cake",
அதை மனதிலே வைத்துக் கொண்டு, விவசாயக் குடும்பங்கள்
முன்னுக்கு வரவேண்டுமென்றால், அதிகமாகக் கொடுக்காவிட்
டாலும் கூட, அண்டை மாநிலங்களில் கொடுக்கக் கூடிய அளவுக்
காவது கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே மாண்புமிகு
அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எ. ஏகாம்பர ரெட்டி] [1992 ஏப்ரல் 21

ஸ்பெஷல் காம்ஃப்பொனன்ட் ப்ளான். ஆதி திராவிட மக்களுக்குக கொடுக்கக்கூடிய இந்தத் திட்டத்தில் அவர்களுக்கு முழுமையாக 100% சப்சிடி கொடுக்கும்படி ஒரு திட்டம் இருக கிறது. அந்தத் திட்டத்திலே ஸ்பெஷல் காம்ஃபபொனன்ட் பிளான் எனறால் எஸ்.சி., எஸ்.டி.-க்கு இருக்கிறது. நம்முடைய ஸ்டேட் டிலும் இருக்கிறது. ஆனாலும் கூட, கடலை சரியாகப் போய்ச் சேருவதுலலை. விவசாயக் குடும்பங்களுக்குப் பணப் பயிர் என்பது முக்கியமாகக் கடலைதான். கரும்பைவிடக் கடலையை நல்லவித மாகப் பயிரிட்டால் விவசாயிக்கு நல்ல ஆதாயம் தரக்கூடிய பயிர் கடலைப் பயிர்தான். அவனுககுக் கொடுக்கக்கூடிய விதை முளைக்கவே முளைக்காது. ஜெர்மினேஷன் இருக்காது. அந்த அளவுக்குக் கொடுத்தால் எப்படி அவன் பயிரிடுவான்? ஆகவே டிபார்ட்மெண்ட் இதில் அக்கறை எடுத்து அவன் பயிர் செய்யக் கூடிய அளவுக்கு வாய்ப்பும் வசதியும் கொடுக்க வேண்டும். அந்த எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும்.

நான் என்னுடைய ஏரியாவிலே ஸ்பெஷல் செக் போட்டேன். நானே எத்தனையோ கேஸ்கள் பிடித்து இருக்கிறேன். உரத் திற்கு என்று 30% for Small and Marginal Farmers சொன்ன உடனேயே எலலாவற்றையும் ஸ்டாப் பண்ணிவிட்டு வேறுவிதமாகப் பண்ணுவதற்குப் பார்த்தார்கள. நானே seize பண்ணிவிட்டு, கடையை சில பண்ணினேன். with the assistance of the Agricultural Extension staff. ஆனாலும் கூட, நான் வந்தவுடன் ரிலீஸ் பண்ணிவிட்டார்கள். அந்த அளவுக்கு இலலாமல, அந்த 30% மீண்டும் Small and Marginal Farmersககுக் கொடுக்க வேண்டுமென்று நல்ல உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறது அந்த உத்தேசத்தை நிறைவேற்ற வேண்டும். That should be the motto of the present Government. அது இருக்க வேண்டும். உத்தேசம் இருக்கலாம். செயல்படுத் தககூடிய அதிகாரிகள் ஃபீல்டு ஸ்டாப், அந்த ஃபீல்டு ஸ்டாபுக்கு கடுமையான உத்தரவு போட்டு, சப்சிடி ரேட்டில் போகக்கூடிய உரம் விவசாயிக்குப் போய் சேருகிறதா என்று பார்க்க வேண்டும். அது யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்ற குறிக்கோள நமக்கு இருக்க வேண்டும். அப்படி. எடுத்தால் 74 இலட்சம் விவசாயிகள் இருக்கிறார்கள. 64 இலட் சம் small and marginal farmers. Only 10 lakhs are big farmers. அந்த 64 இலட்சம் இருக்கக்கூடிய small and marginal farmers-க்கு இந்த வசதி போய்ச் சேர வேண்டும். சேர்ந்தால்தான் அது Socialist pattern of society என்ற குறிக்கோளுக்கு அர்த்தம் என்ற என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை உங்களுக்குச் சமர்ப்பித்துக் கொள்கிறேன். அதுபோக (மணி யடிக்கப் பெற்றது).



1992 ஏப்ரல் 21] [திரு. எ. ஏகாம்பர ரெட்டி]

செங்கல்பட்டு - எம்.ஜி.ஆர். மாவட்டம் பொதுவாக ஏரிகள நிறைந்த ஜில்லா., அந்த ஏரிகளில் இன்றைய தினம் அதிகமாக ப்ராஜக்டுகள் இல்லை. ப்ராஜக்டுகள் இல்லாத காரணத்தால் அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டுக்கும் அக்ரிகல்சர் என்ஜினியரிங் டிபார்ட்மெண்டுக்கும் ஒதுக்கியிருக்கிற பணத்தை integrated rice development allotment இல் அதிகமாக அந்த ஜில்லா வுக்குக் கொடுத்து, open wells, shallow wells கட்டுவதற்கு உதவினால் நலமாக இருக்கும். ஏன் என்றால் செங்கல்பட்டு மாவட்டம் அதிகமாக நெல் பயிர் செய்யக்கூடிய ஏரியா. கேழ் வரகு பயிர் செய்யக்கூடிய ஏரியா. கடலை பயிர் செய்யக்கூடிய ஏரியா. ஆதலால் open wells-க்கு அதிகமான அலாட் மெண்ட் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பினுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என். ஆர். சிவபதி.

**திரு. என்.ஆர். சிவபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயத் துறை மானியத்தில் பேச எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்து, நான் இந்த மாமன்றத்தில் இந்த மானியக் கோரிக்கையில் பேசும் அளவுக்கு எனது தகுதியை உயர்த்தி மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு, நன்றியுடன் வணங்கி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேளாண்மைத் துறை அமைச்சர் அவருடைய மானியக் கோரிக்கை நடைபெறுகிற போது யாரும் அவரிடத்தில் சென்று தொந்தரவு கொடுக்கக் கூடாது.

**திரு. என். ஆர். சிவபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.''

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கேற்ப இன்றைக்கு தமிழகத்தில் வாழ்கின்ற மக்களில் 70 சதவீதம் பேர் விவசாயத்தை நம்பித்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கிராமப்புற மக்க ளின் பொருளாதார வளர்ச்சி விவசாயத்தை நம்பித்தான் இருக் கிறது. தற்போது விவசாயிகளுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்றால் பயிர் செய்கின்றபோது ஒரு விலையும், பயிர் அறுவடை செய்கின்றபோது ஒரு விலையும் இருக்கிறது. இப்படி இடைப் பட்ட காலத்தில் விலை ஏற்றத்தாழ்வு இருப்பதால் விவசாயிகள்

பெரும் நட்டத்திற்கும், பாதிப்புக்கும் உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விவசாய விளை பொருட்களுக்கு அடிப்படை விலையை நிர்ணயம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளை விற்பனைத் தரகர்கள் ஏமாற்றுவதிலிருந்து தடுக்கவும், விவசாயிகள் தங்களின் விளைபொருட்களுக்கு நல்ல இலாபம் பெறும் வகையிலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலமாகத்தான் விற்பனை செய்யவேண்டும் என்ற கட்டாயச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கக்கூடிய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாநிலத்தில் விளையும் விவசாயப் பொருட்களுக்கு அந்தந்த மாநிலமே விலை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்க வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்திப் பெற்று தமிழகத்திலுள்ள விவசாய மக்களுக்கு நல்ல விலை கிடைக்கின்ற வகையிலே விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்திற்குத் தண்ணீர் விடுவது முறையாகச் செய்யப்படுவதில்லை. தேவையான நேரத்தில் தேவையான அளவு விடப்படுவதில்லை. அதனால் உரிய பட்டத்தில் நெல் பயிரை நடவு செய்ய முடியாமல் பட்டம் தவறி நடவு செய்வதால் பயிர்கள் நோய்களால் தாக்கப்பட்டு குறைந்த விளைச்சலே கிடைக்கிறது. இதைத் தவிர்க்கும் பொருட்டு ஆவன செய்ய வேண்டும். இப்பொழுது நீர் நிர்வாகம் பொறியியற் துறையில் இருப்பதுதான் இதற்குக் காரணம். ஆகவே அந்தப் பொறுப்பினை மாற்றி அவர்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள வேளாண்மைத்துறை அலுவலர்களின் ஆலோசனையின் பேரில்தான் செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மானிய விலையில் விதை, உரம், பூச்சி மருந்து போன்றவைகள் பருவம் ஆரம்பிப்பதற்கு முன் வழங்கப்படவேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன். ஆனால் இன்று வழங்கப்படுகிற மானிய விதை, உரம், பூச்சி மருந்து ஆகிய அனைத்தும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சரியான தருணத்தில் கிடைக்கவில்லை. பெரும்பாலும் விவசாயிகள் அறுவடை செய்யும் காலங்களில் தான் இந்த மானியப் பொருட்களைப் பெறுகிறார்கள். ஆகவே விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தக்க தருணத்தில் மானிய விலையில் விதை, உரம், பூச்சிமருந்து ஆகியவை கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பில் தரிசு நில சாகுபடி திட்டம் என்று கூறியிருக்கிறார்கள். இதனால் 10000 ஹெக்டேர் நிலப் பரப்பை சாகுபடியின் கீழ் கொண்டுவரும் வகையில் ரூ. 150



இலட்சம் நிதி ஒதுக்கி செயல்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். இதை மனதார வரவேற்று, இதைப்போல ஒவ்வொரு ஆண்டும் அதிக நிதி ஒதுக்கி இன்றைக்கு அதிக அளவில் உள்ள தரிசு நிலங்களைச் சாகுபடி நிலங்களாக ஆக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பட்டா புஞ்செய் நிலங்களைக் கொண்ட விவசாயிகளுக்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில், அந்த நிலத்தைச் சீர் செய்யவும், அதற்கு ஆழ் குழாய்க் கிணறு ஏற்பாடு செய்யவும் அதிக மானியம் கொண்ட கடனளித்து செய்து கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இதனால் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 'லாங் டேர்ம் லோன்' சப்சிடி ஸ்கீம் மூலம் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகளைப் பொறுத்தவரையில் பெரிய பிரச்சினையாக இருப்பது, காலச் சூழ்நிலைகளால் ஏற்படுகின்ற நோய்களாலும், பருவச் சீற்றத்தாலும் அழிகின்ற பயிர்களுக்கு தகுந்த நஷ்ட ஈடு கிடைக்காதது தான் பெரிய குறை. ஒவ்வொரு பருவத்திலும் ஏதாவது ஒரு காரணத்தினால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த விவசாயிகளைப் பாதுகாக்கும் பொருட்டு கால்நடைக்குத் தற்போது தனிப்பட்ட விவசாயக் காப்பீடு செய்து தனிப்பட்ட முறையில் நஷ்டயீடு கோருவதுபோல இந்தப் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பயிர்க் காப்பீட்டுத் திட்டம் சரியாகச் செயல்படவில்லை என்ற விவசாயிகளின் மனக்குறையைப் போக்க இதுநாள் வரையில் தமிழ்நாட்டில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பெற்ற பிரிமியத் தொகை எவ்வளவு என்றும் மற்றும் இத்திட்டத்தின் மூலமாகப் பயன் பெற்ற விவசாயிகள் எத்தனை பேர் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபோது அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இன்று விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் பயிர்களுக்கு ஒரு நல்ல நஷ்டஈடு கொடுக்கப்படுவதில்லை என்ற குறையைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை விளக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-35

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

அடுத்து எனது தொட்டியம் தொகுதியில் தா.பேட்டை ஒன்றியத்திலுள்ள மங்களம் கிராமத்தில் உள்ள ஏரியைத் தூர் எடுத்து, உயரப்படுத்தி சிறு நீர்த்தேக்கமாக அணை கட்ட வேண்டும். இதனால் கொல்லிமலையிலிருந்து ஓடிவரும் உத்திராட்ச கோம்பையாற்று நீரும், தும்பளம் சேக்குடி பாரஸ்டில் பெய்யும் மழை நீரும் ஆக இரண்டு வகைகளிலும் நீர் வரத்து வந்து வீணாக வடிந்துவிடுகிறது. இதனைச் சீர் செய்தால் கிட்டத்தட்ட 5,000 ஏக்கர் நிலம் சாகுபடி செய்யும் அளவிற்கு நீர் வசதி செய்து கொடுக்க முடியும். ஆகவே உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். ஆர். சிவபதி] [1992 ஏப்ரல் 21

அடுத்து, எனது தொட்டியம் தொகுதியில் நாகைநல்லூர் கிராமத்தில் ஏரி ஒன்று 1,000 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. ஜோடர்பாளையம் காலவாய்த் திட்டம் என்று அறிவிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர்கள் சர்வே செய்தார்கள். பிறகு ஏனோ கைவிடப்பட்டது. அதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்த நாகைநல்லூர் ஏரியைத் தூர் எடுத்து, காவேரியிலிருந்து குழாய் மூலம் தண்ணீர் கொண்டு வந்து ஏரியை நிரப்பி அந்தப் பகுதியிலுள்ள 15 கிராமங்களில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் ஏரியைச் செப்பனிட்டு இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் எனப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் எனது தொகுதியில் விவசாயிகளின் முக்கியமாக கொறம்பு பிரச்சினை இருந்து வருகிறது. இந்தப் பிரச்சினையைப் போக்கும் வகையில் ஸ்ரீராமசமுத்திரத்தில் நிரந்தர கொறம்பு கட்டித்தர வேண்டும் எனப்பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இது வருடாவருடம் டெண்டர் விட்டு செப்பனிட்டு அதிக அளவு செலவு ஆகிறது. அதைச் சரிவர காண்ட்ராக்டர்கள் செய்வது இல்லை. விவசாயிகளின் நலன் கருதி நிரந்தர கொறம்புக் கட்டித் தர வேண்டும் எனப்பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மை சார்ந்த தொழிற் சாலை தொடங்க வேண்டும் எனப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி மாவட்டம் பச்சமலையை ஊட்டியைப்போல் அழகு படுத்தி அதை சுற்றுலா மையமாக ஆக்க வேண்டும் எனப்பணிவன் புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிகளில் தொழிற்கல்வி, உடற்கல்வியைப் போல் விவசாயத்தை ஒரு முக்கிய பாடமாக, கட்டாய பாடமாக ஆக்க வேண்டும் எனப்பணிவன்புடன் கேட்டுக் கொளகிறேன்.

செயல் விளக்கக் குறிப்பில் வேளாண் பயிற்சி மையங்கள் தொடங்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனது தொகுதி யில ஒரு பயிற்சி மையம் அமைத்துத்தர வேண்டும் எனப்பணிவன் புடன கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலேயே தொட்டியம் தொகுதியில்தான் வாழை அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அது நன்கு தெரியும். ஆகவே வாழை ஆராய்ச்சி மையத்தை அதிக வாழை பயிரிடப்படும் தொட்டியத்தில் அமைத்துத்தர வேண்டும் எனப்பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 21] [திரு. என். ஆர். சிவபதி]

இந்த மாமன்றத்தில் எனக்குபேசப் வாய்ப்பு அளித்த மாண்பு மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. நா. சா. பழனிசாமி.

**திரு. நா. சா. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மற்றும் கால்நடைத் துறை களின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக உழவர்-உழைப் பாளர் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலக அரங்கில் ஒரு நாடு தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமென் றால் அது உணவு உற்பத்தியிலே, வேளாண்மை உற்பத்தியிலே தன்னிறைவு மட்டுமல்ல, ஏற்றுமதியும் செய்யக்கூடிய அளவுக்கு அந்த நாடு இருக்க வேண்டும். அதுவும் இந்தியா போல மக்கள் தொகை அதிகமாக உள்ள ஒரு நாடு வேளாண்மையில் தான் உரிய கவனம் செலுத்தி மக்களுக்கு உணவு கொடுப்பதில் ஒரு உறுதியான நிலை எடுத்திருக்க வேண்டும். இந்த வேளாண்மை உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட, தொழில் துறையை வளர்ப்பது முதன்மையானது என்று முதலிலே கருதிய நம்முடைய பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் 1951 ஆம் ஆண்டிலே நடந்த தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத் திலே பேசுகிறபோது "It is the heavy industry that counts." என்று சொன்னார்கள்.

முற்பகல் 11-40

அப்படிப்பட்ட நேரு அவர்களே, பாரதப் பிரதமர் அவர்களே, 1962 ஆம் ஆண்டு நடந்த சீன யுத்தத்தின்போது, நம்முடைய நாட்டிற்கு ஏற்பட்ட பெரிய தோல்வியையும் உணவுத் தட்டுப் பாட்டையும் உணர்ந்தபிறகு அவர்களே, 1962 ஆம் ஆண்டைய தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே பேசுகிறபோது

"Agriculture is more impoltant than industry for the simple reason that industry depends upon agriculture"

என்று சொன்னார்கள். அதன் பிறகுதான் குறுகிய காலம் பதவி யில் இருந்தாலும்கூட லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் 'ஜெய் ஜவான், ஜெய் கிஷான்' என்ற தாரக மந்திரமான கோஷத்தைப் போட்டு கிரீன் ரெவலூசன், பசுமைப் புரட்சியை இந்தியாவிலே கொண்டு வந்தார்கள். நல்விதை, நற்காப்பு, அமோக விளைச் சல் என்ற அந்தப்பச்சை முக்கோணம் நாம் இருவர் நமக்கு இருவர் என்ற சிவப்பு முக்கோணத்தை விட அதிகமாக விளம்பரப் படுத்தப்பட்டு பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது

பசுமைப் புரட்சியின் விளைவாக உணவு உற்பத்தி அதிகரித்தது.
உணவு உற்பத்தி அதிகரித்த பின்பு அந்தப் பசுமைப் புரட்சிக்குக்
கொடுத்த முக்கியத்துவம் நாளுக்கு நாள் குறைந்து வந்திருக்
கிறது. இன்று இந்தியாவில், இந்த ஆண்டு உணவு உற்பத்தி
குறைந்து கொள்முதல் அதிகம் செய்ய முடியாமல் இந்திய அரசு
அமெரிக்காவிலே இருந்து 10 லட்சம் டன் கோதுமையை
இறக்குமதி செய்வதற்கு முடிவெடுத்திருக்கிறது. அந்த
நேரத்திலே ஒரு லட்சம் டன் அரிசியை கியுபா நாட்டுக்கு
அனுப்ப இந்திய அரசு முடிவு எடுத்த நேரத்தில் அமெரிக்க
அரசாங்கம் தனக்கு விரோதமான கியுபா நாட்டுக்கு
இந்தியா அரிசியை ஏற்றுமதி செய்யக் கூடாது என்று சொல்லி,
மானிய திட்டத்திலே கோதுமையை முதலில் கொடுக்க ஒத்துக்
கொண்ட அமெரிக்கா, பிறகு இந்திய அரசுக்கு மானியத்திலே
கோதுமையைக் கொடுக்க மறுத்துவிட்டது. இந்திய நாட்டு
விவசாயிகளுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 225 ரூபாய் கோது
மைக்குக் கொடுக்கும் நிலையில் அமெரிக்க விவசாயிகளுக்கு இன்று
480 ரூபாய் கொடுத்து இறக்குமதி செய்கிறது. எனவே, இந்தியா
விலே இருக்கின்ற விவசாயிகள் உற்பத்தி செய்வதற்கு ஊக்கம்
அளிக்கும் வகையிலே மத்திய அரசு விலையை நிர்ணயிக்க
வேண்டும். விலை நிர்ணயிக்கின்ற அதிகாரம் மாநில அரசிடம்
இன்று இல்லை. எனவேதான், மாநில அரசு மத்திய அரசுக்கு
விலை நிர்ணயிக்கின்ற அதிகாரத்தை வழங்க ஒரு வேண்டுகோள்
வைக்க வேண்டும். ஏன் என்றால் விவசாயம் என்பது மாநிலத்
திற்கு மாநிலம் மாறுபட்டதாக இருக்கிறது. ஒரே மாநிலத்தில்
இருக்கின்ற ஒரு நீர்வளம் இன்னொரு மாநிலத்தில் இருப்ப
தில்லை. இயற்கைச் சூழல் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்
டிருக்கின்ற காரணத்தினால் நம்முடைய மாநில அரசு, மாநில
அரசாங்கத்திற்கு விலையை நிர்ணயிக்கின்ற அதிகாரத்தைக்
கொடுக்க கேட்டு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்ப வேண்டு
மென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று உலகையே விலைக்கு வாங்குகின்ற அளவுக்கு இந்தியச்
செலவாணியை வைத்திருக்கின்ற ஜப்பான் நாடு கூட அமெரிக்க
அரிசியை இறக்குமதி செய்ய வேண்டுமென்று நிர்பந்தித்த
நேரத்தில் ஒப்புக்கொள்ளவில்லை. ஐரோப்பிய நாடுகள் விவ
சாயத்திற்குக் கொடுக்கும் அதிகப்படியான மானியத்தைக்
குறைக்க வேண்டுமென்று அமெரிக்க நிர்ப்பந்தித்தும் ஐரோப்பிய
நாடுகள் ஒத்துக்கொள்ளவில்லை. ஏன் என்றால் ஒரு நாட்டிலே
விவசாயம் நிரந்தரமாகக் காக்கப்பட வேண்டுமென்றால் அந்த
விவசாயிகளுக்கு உரிய விலை கொடுத்து அந்த விவசாயம் பாது
காக்கப்பட வேண்டும். எனவே. விவசாயத்தைப் பாதுகாப்
பதற்காக, அந்த தொழில்துறையிலே வளர்ச்சி அடைந்த
நாடுகள்கூட மானியத்தை அதிகமாகக் கொடுத்து, தொழில்
துறை வளர்ச்சிக்கு விவசாயம் உறுதுணையாக
இருக்கின்ற அளவுக்கு அவர்கள் இன்று உற்சாகம்



அளித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்று பசுமைப் புரட்சி காரண மாக விவசாயப் பெருமக்கள் வீரிய ஒட்டு ரக வித்துக்களைப் பயிரிடுகிறார்கள். விவசாயத்துறையில் முன்பு நம்முடைய மரபு வழியில வந்த ரகங்கள் எல்லாம பூச்சி நோய் தாக்குதல் இல்லாத ரகங்களாக இருந்ததால் அதிகமாக ரசாயனம் தேவைப்படாத ரகங்களாக இருந்தன. ஆனால் இப்பொழுது நம்முடைய உயர் விளைச்சல் ரகங்களுக்கு அதிகமாக பூச்சி மருந்தும், அதிகமாக ரசாயன உரமும் போட வேண்டியிருக்கிறது. ரசாயன உரத்தை அதிகமாகப்போடுவதாலே பூச்சி தாக்குதல் அதிகமாக ஏற்படு கிறது. இப்படி அதிகமாக முதலீடு செய்து உற்பத்தி செய்கிற அந்த விவசாயிகளுக்கு இன்று பாதுகாப்பு இல்லை. உற்பத்தி பெருகியிருக்கிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு அதிக ஊக்கம் அளிக்கிறதேயல்லாமல் உற்பத்தியைப் பெருக்கிய விவ சாயிக்கு அதிலே இழப்பு ஏற்படாமல் இருக்கும் வகையிலே பாது காப்பு இல்லை. அதற்குப் பயிர்க்காப்புறுதித் திட்டத்தை அரசு நிறைவேற்ற வேண்டும்.

இன்று நம்முடைய தமிழ்நாட்டிலே வறட்சி நிலவுகிற காரணத் தால் விவசாயத்தின் மீது நம்பிக்கை குறைந்திருக்கிற நிலையில் மக்கள் பல்வேறு இடங்களுக்கு வேலை தேடிச் சென்றுகொண் டிருக்கிற காரணத்தால் கிராமப்பகுதிகள் காலியாகிக் கொண் டிருக்கின்றன. கிராமங்களிலே இருக்கிற மக்கள் நகரங்களை நாடி ஓடுகின்ற நிலை உருவாகியிருக்கிறது.

இதுகுறித்து, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், மதுரையிலே இருக்கின்ற வேளாண்மைக் கல்லூரி ஒரு ஆராய்ச்சி யிலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டுக்கும் தமிழ்நாட்டிலே 42 லட்சம் ஹெக்டேர் விளை நிலங்கள் இன்று தரிசு நிலங்களாக மாறிக்கொண்டிருக்கின்றன என்று சொல்லி யிருக்கிறார்கள். விவசாயப் பெருமக்களுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலமாக, அந்த விவசாயிகளைத் தொடர்ந்து கிராமங்களிலே தங்க வைத்தால்தான் அவர்கள் இந்தத் தொழிலில் இருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இங்கிலாந்து நாட்டில் தொழில் புரட்சி ஏற்பட்டு அங்கே கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறிக் கொண்டிருந்த நேரத் திலே அங்கேயிருந்த கோல்ட்ஸ்மித் என்ற ஆங்கிலக் கவிஞன் ஒரு கருத்தைச் சொன்னான். அது நம்முடைய இன்றைய இந்தியாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் பொருந்தும்.

"Ills fares the land to hastening ills a prey where wealth accumulates and men decay But a bold peasantry, their countries pride when once destroyed can never be supplied".

என்று சொன்னார்கள்.

(முற்பகல் 11-45

ஒரு நாட்டின் வலிமை மிக்க உழவர் சமுதாயம் ஒரு முறை அழிக்கப்பட்டுவிட்டால் மீண்டும் அவர்களைக் கொண்டுவர முடியாது. அரசின் திட்டங்கள் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதோடு நின்றுவிடாமல், உற்பத்தியாளன் நஷ்டமடை வதிலிருந்து பாதுகாக்க அவர்களுக்கு ஆதரவு விலை என்று கொடுக்காமல், ரெம்யூனரேடிவ் பிரைஸ் என்ற லாப விலை கொடுக்க முன்வர வேண்டும். மத்திய அரசு அக்ரோ பிசினஸ் கசார்ட்டியம் என்று பட்ஜெட்டிலே அறிவித்திருக்கிறார்கள். அதுசம்பந்தமாக மத்திய அரசினுடைய திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் குறிப்பிடுகிறபோது A quantum of growth in agriculture by the end of Eighth Plan என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டமானது எப்படிப் பட்டது, எந்த வகையிலே அது விவசாயிகளுக்கு உதவியாக இருக்கிறது என்பதை எல்லாம் மாநில அரசு கவனத்திலே கொண்டு அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து, விவசாயிகளுக்கு உதவும் படிச் செய்ய வேண்டும். விவசாயம் என்பது வெறும் தானிய உற்பத்தி மட்டுமல்ல என்ற நிலையை மாற்றி, விவசாயத்திலே கால்நடை, மரம் வளர்ப்பு மற்றும் பல்வேறு துறைகள் சம்பந்தப் பட்டதாக இருக்க வேண்டும். நமக்கு இருக்கிற விளை நிலங் களில் நான்கில் ஒரு பங்கு நிலத்திலே சந்தன மரங்களையும், தேக்கு மரங்களையும் விளைவிக்க அரசு உதவி செய்தால், அவன் ஒரு வங்கியிலே நிரந்தர வைப்புத் தொகையாக 10 ஆண்டுகளுக்குப் போட்டு, அதன் மூலம் கிடைக்கும் வட்டியைவிட அதிகமான வட்டியை இதிலே பெற முடியும் என்ற கருத்தை இந்துப் பத்திரி கையிலே விளம்பரமாக வெளியிட்டு, தேக்கு மர வளர்ப்புக்கு முதலீடு செய்வதற்கு அவர்கள் விளம்பரப்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். எனவே தமிழக அரசு விவசாய நிலங்களில் நான்கில் ஒரு பங்கு நிலத்தில் அவர்கள் மரம் வளர்க்க உதவி செய்ய வேண்டும். இதன் மூலம் விவசாயிகளுக்குப் பிற்காலத்தில் பாது காப்பு கிடைக்கிறது. மேலும் இதன் மூலம் மழை பெய்கின்ற வாய்ப்பும் நாட்டிலே ஏற்படுகிறது. இன்று கால்நடைத் துறை யும் இணைந்த மானியக் கோரிக்கை விவாதத்தின்போது நான் சொல்லிக் கொள்வது, மரங்களை வளர்ப்பதன் மூலமாக இலை, செடி, கொடிகள் அதிகமாகக் கிடைப்பதன் மூலம் கால்நடை களுக்கு தீவனம் கிடைக்கிறது. இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கிறவர்கள் பால் மாடு வளர்க்கும் தொழிலை நம்பிச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பால் மாடு வாங்க ஐ.ஆர்.டி.பி. திட்டத்தில் 3,200 ரூபாய் தான் கடன் கொடுக்கப்படுகிறது. அந்த 3,200 ரூபாயிலே ஒரு வறட்டு மாட்டைக்கூட வாங்க முடியாது. பால் மாடல்ல, கன்று போடாத மாட்டைக்கூட வாங்க முடியாது. அப்படிப்பட்ட நிலையிலே அவர்கள் ஏதோ மாடு என்று வாங்குகிறார்கள். அதனால் உண்மையில் பால் உற்பத்தி பெருகுவதில்லை.



இன்று தமிழக அரசு எருமைப் பாலுக்கு விலை உயர்த்திக் கொடுத்திருப்பதை மனமார வரவேற்கிறோம். ஆனால் எருமைப் பால் என்பது மொத்த கொள்முதலிலே 10 சதவிகிதம் கூட இல்லை. எனவே மாட்டுப் பாலுக்கும் எருமைப் பாலைப்போல விலை உயர்த்திக் கொடுக்கப்பட வேண்டும். (மணி அடிக்கப் பெற்றது). பால் உற்பத்தியாளர்கள் பால் உபயோகிப்பவர்களை விட ஏழைகள். அதை உணர வேண்டும். ஏனென்றால் பெரிய டைரி வைத்துபால் கறந்து கூட்டுறவுகளுக்கு ஊற்றுகிறவர்கள் குறைச்சல். எனவே பாலின் விலையை தமிழக முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு பால்வளத் துறை அமைச்சரவர்கள் விலை அறிவிக்க வேண்டும். பால் உற்பத்தியாளர்கள் போராட்டம் செய்வோம், பால் நிறுத்தம் செய்வோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைக்கு அந்த ஏழை மக்களை விடக்கூடாது என்று இந்த நேரத்துலே வேண்டுகோளாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

நம்முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சிமன்றக் குழு உறுப்பினர் என்ற முறையிலே ஒரு சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். நமது வேளாண் பல்கலைக் கழகம் முதல் தரமான வேளாண் பட்டதாரிகளை ஆண்டுதோறும் உருவாக்கி, வருகிறது. ஆனால் அதே நேரத்தில் அதன் விரிவாக்கப் பணியிலும், விவசாயிகளுக்கு பண்ணையில் உதவும் செயல் திட்டத்திலும் பயனுள்ள புதிய கண்டுபிடிப்புகளைச் செய்வதில பின்னுக்கு உள்ளது. என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (Genetics and Plant breeding) இரண்டிலும் இருபது ஆண்டுகளாக சரியான முன்னேற்றம் இல்லை. நெல், பருத்தி, சிறுதானியம், எண்ணெய் வித்து மற்றும் காய்கறியில் சரியான உயர் விளைச்சல் ரகங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இன்று தமிழ்நாட்டில் விவசாயிகள் அதிகமாகப் பயிரிடும் நெல பெரும்பாலும் ஐ.ஆர். ரகங்கள் தான். 20 ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிககப்பட்ட எம்.சி.வி. 5-க்குப்பின் புதிய பருத்தி ரகம் கண்டுபிடிக்கப்படவில்லை. சி.பி.எஸ். 156 என்ற ரகம் கண்டுபிடிக்கப்பட்டு அது தோல்வி அடைந்தது. விவசாயிகள் விரும்பிப் பயிரிடும் எல்.ஆர்.ஏ., டி.சி.எச். போன்ற ரகங்கள் நமது கண்டுபிடிப்பு அல்ல. தனியார் பண்ணை கண்டுபிடிப்பான ஜே. 13 பிரபலம் அடைந் திருக்கிறது. இன்று "ஜே" என்று சொன்னால், ஒரு பிரபலம். இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்களாலே "ஜே" என்பது பிரபலம் அடைந்துள்ள இந்தச் சூழ் நிலையில் ஜே. 13 தனியார் கண்டுபிடித்து, பிரபலம் அடைந்திருக்கிறது.

முற்பகல் 11-50

அதைப்போல ஜே.ஃஜே. என்ற முறையில் இதைவிடப் பிரபலமான ஒரு உயர்விளைச்சல் ரகத்தை, ஒட்டு ரக நெல்லை பல்கலைக் கழகம் கண்டுபிடிக்க அமைச்சர் அவர்கள் ஆணையிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யார் கண்டுபிடித்தது என்று தெரியாமல, (மணியடிக்கப் பெற்றது) இது விவசாய மானியக் கோரிக்கை, விரிவாகப் பேசவேண்டும், என்ட்ரி-2 என்று யார் கண்டுபிடித்தது என்று பெயர் தெரியாத ஒரு நெல ரகம் தமிழ்நாட்டில கோபி, ஆனைமலை வட்டாரத்தில் பிரபலம் அடைந்திருக்கிறது. அதைப்போல ''காஞ்சனா'' என்ற மக்காச் சோள ரகம் தனியார் கண்டுபிடித்த ரகம். அதன விதை கூட கிடைப்பதில்லை. 'ராசி சீட்ஸ்' என்ற சேலத்தில் இருக்கிற தனியார் கம்பெனி, நம் பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற ஒரு ஆராய்ச்சியாளரை, வைத்து அருமையான ஒரு பருத்து ரகத்தை, வறட்சிக கேற்ற பருத்தி ரகத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

உழவியல், பண்ணை இயந்திரம், வேளாண்மைப் பொறியியல், நீர் நிர்வாகம் ஆகிய துறைகளில்கூட, பல்கலைக் கழகக் கண்டுபிடிப்புகள் சரியான முறையில் இன்று விவசாயிகளுக்கு வந்து சேரவில்லை. சரியான பரிசோதனைகள் மேறகொள்ளப் படாமல் வெளியீட்டுக் குழுவிற்குக் கொண்டு செலலப்பட்ட டி.சி.எச்.பி. 213 என்ற பருத்தி ரகம் ஏற்றுக்கொள்ளப்படாமல் திருப்பி யனுப்பப்பட்டிருக்கிறது. ஒட்டு ரக வெண்டை கண்டு பிடிக்கப்பட்டுப் விவசாயப பண்ணைகளுக்கு சரியாக, வந்து சேரவேயில்லை. சைனா, தைவான் போன்ற நாடு களில் ஒட்டுரக நெல் வந்து மகசூல் 30 சதவீதத்திற்கு மேல் அதிகரித்துள்ளது. தீவிர நெல் உற்பத்தித் திட்டம அமலில் இருக்கும் இந்த நேரததில் நம்முடைய அண்டை மாநிலமான ஆந்திராவில கூட ஒட்டு ரக நெல் விதை விரைவில் வெளியிட இருக்கிறார்கள். நம்முடைய தமிழகம் இந்த ஒட்டுரக நெல்லை விரைவில் வெளியிடு வதற்கு நடவடிக்கை எடுத்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், நம்முடைய விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் இதைக கொண்டுவர வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்களுககு ஒரு கருத்தைச் சொலகிறேன். வேளாண்மை டெப்போக்களில் தரமான விதை உற்பத்தி செய்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் பொங்கலூர் பகுதியில் சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அவர்கள் காலம் கடந்த பூச்சி மருந்தைக் கொடுத்து, அதைக்கூட நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் ஆதாரத்தோடு, பில்லோடு



கொடுத்திருக்கிறேன். அதேபோல் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் 2 டன்னுக்கு மேல் கொள்முதல் செய்யப் பட்ட பருத்தி விதையானது முளைக்கக்கூடிய தகுதி யுடையதல்ல என்று சான்றிதழ் அளிக்கப்பட்டும் கூட, அந்த பருத்தி விதையை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதைக் கொள்முதல் செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். தனியாரிடம் கொள்முதல் செய்து இப்படியெல்லாம் விவசாயிகளை ஏமாற்றி வருகிறார்கள். இன்னும் பல தவறுகளுக்கான ஆதாரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. அதை நான் அமைச்ச ரிடத்தில் தனியாகக் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன். எனவே இப்படிப்பட்ட தவறுகள் இன்று மானிய விலையில் கொடுக்கப்படுகின்ற விதைகள் எல்லாம் ஆண்டுக் கடைசியில் சிறு விவசாயிகள் பெயரால் கொடுக்கிறார்கள். சிறு விவசாயிகள் மட்டும் உற்பத்தி செய்யவில்லை. எல்லா விவசாயிகளும் உற்பத்தி செய்கிறார்கள். அவர் களுக்கு கடைசி நேரத்தில் மானிய விலையில் விதைகள் கொடுத்து, இடதுகை, வலதுகை ரேகைகளைப் பதித்து வேளாண்மைக் கூடங்களில் இவர்களே விற்றுக் கொண் டிருக்கிறார்கள். என்னிடம் முழு ஆதாரம் உள்ளது. அதை அமைச்சரிடம் கொடுக்கிறேன் என்று கூறி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.**

**திரு. கே. பி. ராஜு:** பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியக் கோரிக்கையின்மீது என்னைப் பேசப் பணித்தமைக்காக டாக்டர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுக்கும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், சட்ட மன்றக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் சிரமப்பட்டு, பேசவேண்டுமென்று கேட்டதும் அவர்கள் தந்தார்கள். உங்கள் எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். இப்போது 622 கோடி ரூபாய் செலவு செய்து, இந்த விவசாயத்துறையை சிறப்பாக நடத்திக்கொண்டு வருகின்ற நமது அரசுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுதலைத தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

முற்பகல் 11-55

நமது நாடு விவசாயத்தை நம்பியிருக்கின்ற நாடு. பழமை பொருந்திய நாடும் கூட. வெள்ளைக்காரர்கள், இங்கே கிடைக்கும் குறு மிளகு, ஏலக்காய், சீரகம் போன்ற காரப் பொருட்கள் இல்லாத காலத்திலேயே, இங்கே வந்து படையெடுத்தார்கள். அவர்கள் நாடெல்லாம் பனிப்பிரதேசம். அங்கே காரம் கிடையாது. நம்முடைய நாட்டிலே காரம் இருக்கிறது என்று சொல்லி படையெடுத்து வந்த நாடு இது. நம்நாட்டிலே வேளாண்மை இருக்கிறது. மற்ற நாடுகளில் எல்லாம் இருந்து டூர் வரும்போது வாருங்கள், தாஜ்மகால் பார்க்கலாம். குதுப்மினார் பார்க்கலாம், டில்லி பார்க்கலாம் என்று டூர்கூட்டிக்கொண்டு வருகிறார்கள். அதே மாதிரி வெளி நாட்டிலிருந்து வருகிறவர்களை, தாஜ்மகால் பார்க்கலாம் எல்லோரா பார்க்கலாம், அஜந்தா பார்க்கலாம் இந்தியாவில் மழை பெய்வதைக்கூட பார்க்கலாம், என்று கூட்டி வருவார்கள். இந்த நாட்டிலே மழையே இல்லை என்று ஆகிறது. அப்படி சிறப்பு மிக்க நாடு நம்முடைய நாடு. இந்த நாட்டில் இன்றைக்கு விவசாயிகளின் நிலைமை எப்படி இருக்கிறது என்றால் பலபேர் பலவிதமாக இருக்கிறார்கள். இப்போது கங்கையையும் காவிரியையும் இணைப்பது பற்றி பேசுகிறார்கள். ஆனால் இந்தியாவில் உள்ள கங்கை ஆற்றில் தண்ணீர் வருகிறது. தமிழ் நாட்டில் இருக்கிற விவசாயிகளுடைய கண்ணிலிருந்து கண்ணீர் தான் வருகிறது. தண்ணீர் இல்லை. இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், அந்த அளவிற்கு விவசாயிகளுடைய நிலைமை இப்போது ரொம்ப மோசமாக இருக்கிறது. ஒரு காலத்திலே எங்குபார்த்தாலும் விவசாயம் செழிப்பாக இருந்தது. இப்போது எங்குபார்த்தாலும் பங்களா வீடுகளைக் கட்டியாகிவிட்டது. எல்லா விவசாயிகளும் நிலத்தை பிளாட் போட்டு, விற்று விட்டு வசதி இல்லாமல் அவரவர்கள் போய்விடுகிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், நம்முடைய நாட்டில் பொருளாதார ரீதியாக விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். ஐந்நூறு ரூபாய் போட்டு ஒரு தொழிலைச் செய்தால் ஐம்பதாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார்கள். ஆனால் ஐந்நூறு ரூபாய் போட்டு விவசாயம் செய்தால் 250 ரூபாய்தான் கிடைக்கிறது. அப்படியானால் அந்த விவசாயிகள், குழந்தை குட்டிகள் என்ன செய்வார்கள்? ஆகவேதான் சொல்லுகிறேன்— அந்த விவசாயிகளின் மேம்பாட்டிற்கு, முன்னேற்றத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு எத்தனையோ திட்டங்களை நாம் போடுகிறோம். எத்தனையோ நல்ல



திட்டங்களை விவசாயிகளுக்கு நாம் போடுகிறோம். நல்ல திட்டங்களை இந்த அரசு போட்டுக் கொண்டிருக்கிறது. அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தத் திட்டங்கள் எல்லாம் உடனடியாக விவசாயிகளுக்குப் போய்ச் சேருகிற அளவிற்கு நாம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் எந்தவிதமான எதிர் பார்ப்பும் இல்லாமல், உழைப்பதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள். விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்து போய் சோறு இல்லாமல், சாப்பாடுகூட இல்லாமல் மத்தியானம் வரைக்கும் பாடுபட்டு வருகிறவர்கள் விவசாயிகள். அந்த விவசாயிகளுக்கு பலன் கிடைப்ப தில்லை. எந்தவிதமான மனக்குறையும் இல்லாதவர்கள் அவர்கள். மனச்சோர்வு இல்லாதவர்கள் விவசாயிகள். அந்த விவசாயிகளுடைய நிலையை மேம்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

எங்கள் தலைவர்கூட ஒரு படத்திலே பாடியிருக்கிறார். ''சும்மா கிடந்த நிலத்தை பறிச்சி சோம்பல் இல்லாமல் ஏர் நடத்தி கம்மாங் கரையை ஓசத்திக்கட்டி, கரும்பு கொல்லையில் வாய்க்கால் வெட்டி சம்பா பயிரை பறிச்சி நட்டு, தகுந்த முறையில் தண்ணீர் விட்டு நெல் விளைந்திருக்க வரப்பு உள்ளே மறைந்திருக்கும்.'' என்று சொல்லி ஒரு கவிஞர் எழுதியதை எங்கள் தலைவர் பாடினார். இந்த பாட்டையெல்லாம் பாடிதான் திராவிட முன்னேற்றக் கழகமே வளர்ந்தது. ஒரு காலத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் ஊருக்குள்ளே போகாது இருந்தபோது எங்களுடைய தலைவர் கொடியை காட்டி, எங்களுடைய தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த பாட்டைப் பாடிய பிறகுதான் வளர்ந்தது. அதிலே புரட்சித் தலைவர் விவசாயியாக நடித்திருக்கிறார். விவசாயியாக நடித்து காட்டியதால் கிராமத்தில் உள்ள விவசாயிகள் அத்தனை பேரும் தி.மு.க.-வை ஊருக்குள்ளே விடும் அளவிற்கு விரும்பினார்கள். விவசாயிகளுடைய, திறமை அப்படியிருந்தும், இன்று விவசாயிகளுடைய நிலைமை ரொம்ப மோசமாக இருக்கிறது. தக்காளி ஒரு கூடையில் கொண்டு போவார்கள்; இருபது ரூபாய், முப்பது ரூபாய் விற்கும் என்று போனால் மார்க்கெட்டில் ஐந்து ரூபாய்க்கு விற்பார்கள். கற்பனை செய்து கொண்டு போவார்கள். ஒரு கூடை இருபது ரூபாய்க்கு விற்றால் திரும்ப வந்தால் வீட்டுக்கு அரிசி, பருப்பு வாங்கி வரலாம் என்று போவார்கள். அங்கே போனால் ஐந்து ரூபாய்க்கு, பத்து ரூபாய்க்குத்தான் ஒரு கூடை தக்காளி விற்கும்.

இதற்குக் காரணம் மத்திய சர்க்கார்தான் (குறுக்கீடுகள்) ஆமாம். நீங்கள்தானே விலையை நிர்ணயிக்கிறீர்கள் ? இங்கே கத்திரிக்காய் விளைந்தாலும் நீங்கள்தானே விலையை நிர்ணயிப்பது ! உண்மையைத்தானே சொல்லுகிறேன். கோபித்துக் கொள்ளக் கூடாது. காங்கிரஸ் காரர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. உண்மையைத் தானே சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. எஸ். டேனியல்ராஜ்.

**திரு. எஸ். டேனியல் ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறிகளுக்கு எல்லாம் விலை நிர்ணயம் செய்வது மத்திய அரசு கிடையாது. மாநில அரசுதான் நிர்ணயம் செய்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ராஜு அவர்கள் வீணான விவாதங்களுக்குள் போகாமல் கருத்துக்களைச் சொல்ல வேண்டும்.

**திரு. கே. பி. ராஜு :** கருத்தைத்தான் சொல்லுகிறேன், உண்மையைத்தான் சொல்லுகிறேன். எந்தவொரு பொருளை எடுத்தாலும் அதற்கு விலை நிர்ணயம் செய்வது மத்திய சர்க்காரா ? நாங்களா ? நீங்கள்தானே உயர்த்தினீர்கள் ? அரிசியின் விலையை நீங்கள்தானே உயர்த்தினீர்கள் ? இன்றைக்கு அம்மா என்ன சொன்னார்கள் ? அரிசி விலையை மத்திய சர்க்கார் உயர்த்தியதால்தான் நாங்கள் கம்மி பண்ணுகிறோம் என்று சொன்னார்கள் (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். உங்களுடைய தலைவர்கள் இங்கே இருக்கும்போது அவர்கள் பதில் சொல்வார்கள். நீங்கள் அனைவரும் எழுந்து நிற்பது சரியாக இருக்காது. திரு. ராஜு அவர்கள் தேவையில்லாத விவாதங்களுக்குள் செல்லக்கூடாது. தயவுசெய்து மானியக் கோரிக்கையில் விவசாயத்தில் பேசுங்கள்.

**திரு. கே. பி. ராஜு :** நீங்கள் எங்களுக்கு தோழமை கட்சிதான். நான் தப்பாகச் சொல்லவில்லை. எந்த சர்க்காராக இருந்தாலும் சரி, ஜனதா சர்க்கார் பத்து கோடி ரூபாய், 20 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு தள்ளுபடி பண்ணிவிட்டதாகச் சொன்னார்களே, அது



உண்மையா ? அது மத்திய சர்க்கார்தானே ? இப்போது பேசாமல் இருக்கிறீர்களே ? (குறுக்கீடுகள்) ஆகவே திட்டங் களைப் போடும்போது (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. எஸ். டேனியல்ராஜ்.

நண்பகல் 12-00

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனதா அரசு தள்ளுபடி செய்ததாகச் சொல்வது முழுவதும் மாயாஜாலம் என்று நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களே கடந்த வாரம் சொல்லி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. கே. பி ராஜு அவர்கள் தொடர்ந்து மானியக் கோரிக் கையில் பேசுங்கள். விவாதத்திலே போனீர்கள் என்றால் உங்கள் நேரம் முடிந்துவிடும் ; நான் அப்புறம் மணி அடிக்க வேண்டி இருக்கும்.

**திரு. கே. பி. ராஜு :** அதுமாதிரி, இப்பொழுது கரும்புக்கு விலை இருக்கிறது. அங்கே விடிய விடிய பாடு படுகிறார்கள். வருடத்திற்கு ஒரு போகம் கரும்பு பயிரிடுகிறார்கள். அந்த கரும்பு விலையை நிர்ணயிக்கிற அரசாங்கம், அதிகாரம் யாரிடம் இருக்கிறது ? மத்திய சர்க்கார். நாங்கள் உங்களை குறை சொல்லவில்லை. ஆகவே, விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும். அதை இரண்டு சர்க்காரும் சேர்ந்து செய்ய வேண்டும் என்ற கருத்தை நான் இந்த நேரத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் நாங்கள் மத்திய சர்க்காரிடத்திலே கையேந்த வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, அந்த நிலைகளை எல்லாம் மாற்ற வேண்டுமென்றால், மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களுக்கு விலையை நிர்ணயம் பண்ணுகிற அதிகாரத்தைக் கொடுத்தால் தான் முடியும்.

கங்கை— காவிரியை இணைக்க வேண்டுமென்று நாம் பேசிக்கொள்கிறோம் அது யாரிடம் இருக்கிறது ? இந்த காவிரிப் பிரச்சினை யாரிடம் இருக்கிறது ? எல்லாமே மத்திய சர்க்காரிடம் தான் இருக்கிறது. இங்கே நான்

பேசியவுடன் கோபித்துக் கொள்கிறீர்கள், இங்கே இருக்கிற காங்கிரசில் இருக்கிறவர்கள், மக்கள் மன்னிக்கமாட்டார் கள்; உங்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று பேசுவது இல்லையா நீங்கள்? (குறுக்கீடு) இல்லை, இல்லை; பேசுகிறீர்கள், ஆக, நாங்கள் நியாயமான கருத்தைச் சொன்னால் சண்டைக்கு வருகிறீர்கள நீங்கள் இப்படி பேசுகிறீர்கள், "மக்கள் உங்களை மன்னிக்க மாட்டார்கள்; மக்கள் உங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்" என்று.

திருமதி ரமணி நல்லதம்பி: துணைத் தலைவர் அவர்களே, என்ன பேசுகிறார் என்று புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்பு மிகு உறுப்பினர் திரு. கே. பி. ராஜு, பேரவைத் தலைவரைப் பார்த்துத்தான் பேச வேண்டும். நீங்கள் நேரடியாக மற்ற உறுப்பினர்களோடு விவாதத்திலே ஈடுபடுவது சரியாக இருக்காது.

திரு. கே. பி. ராஜு: ஆகவே, மத்திய சர்க்காரை நான் குறை சொல்லவில்லை. இந்த விலையை நிர்ண யிக்கின்ற அதிகாரத்தை மாநில சர்க்காருக்கு மத்தியச் சர்க்கார் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்தபடியாக, மாநிலத்திற்கு மாநிலம் விலை நிர்ணயம் பண்ணுவது மாறுகிறது. கங்கையில் தண்ணீர் வசதி இருக்கிறது. கங்கையில தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. இங்கே தண்ணீர்ப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இந்தியாவிலேயே அரிசி பிரச்சினை தான் பெரிய பிரச்சினை. உலகம் முழுவதும் இன்றைக்கு வெவ்வேறு விஷயத்தில் அரசியல நடந்து கொண்டு இருக்கிறது. ஆனால, நமது இந்தியா முழுவதும் அரிசி பிரச்சினையிலேயே அரசியல் நடந்து கொண்டிருக் கிறது. ஆகவே, அந்த நிலை நிர்ணயம் பண்ணுகிற அதிகாரம் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டு இருக்கிறது. அப்படி வேறுபடுகின்ற மாநிலத்திற்குத் தகுந்த மாதிரி தமிழ்நாட்டுக்கும் வெளி மாநிலங்களுக்குத் தருகின்ற, விலையைத் தர வேண்டும். காரணம என்னவென்று கேட்டால், கங்கையில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. விவசாயம் நன்றாக செழிப்பாக இருக்கிறது. ஆனால், இங்கே தண்ணீரே கிடையாது. இங்கே விவசாயிகளி னுடைய கண்ணீர் தான் வந்து கொண்டு இருக்கிறது.



ஆகவே, விலையை நிர்ணயம் பண்ணுகிற அதிகாரத்தை சிறப்பாக மாநிலத்திற்கு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

இன்னும் ஒரே நிமிஷம் தான். தென்னை மரங்கள் எல்லாம் ரொம்ப காய்ந்து இருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் தென்னை மரங்கள், அதுவும் கோவை மாவட் டத்தில் ஏகப்பட்ட தென்னை மரங்கள் காய்ந்து இருக் கின்றன; விவசாயிகள் எல்லாம் அதைப் பார்த்துப் பார்த்து கண்ணீர் வடித்துக்கொண்டு இருக்கிறார்கள், அந்த தென்னை மரங்களை எல்லாம் காப்பாற்றுவதற் குண்டான வழிவகைகளை அரசாங்கம் செய்யவேண்டும். அந்த நீர்ப் பிரச்சினையையும் நீங்கள் செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே (மணி அடிக்கப் பெற்றது) மாநில அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

கடைசியாக,

"எறும்புபோல சுறுசுறுப்பாய் எதிலும் சேர்த்து
உழைக்கணும்;
இடுப்பே வளையா மனிதன் எதிர்பார்த்துப்
பிழைக்கணும், நம்மை எதிர்பார்த்துப்
பிழைக்கணும்;
உடும்புபோல உறுதிவேணும்; ஓணான் நிலைமை
மாறணும்;
வேலை செய்தால் உயர்வோம் என்ற விவரம்
மண்டையில் ஏறணும்"

என்று சொல்லி, உழைப்பவருக்கு நிரந்தரமான உயர் விலைத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லி முடித்துவிடுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அச்சம் என்பது மடமையடா,
அஞ்சாமை தமிழரின் உடமையடா!
ஆறிலும் சாவு, நூறிலும் சாவு,
தாயகம் காப்பது கடமையடா,
தாயகம் காப்பது கடமையடா,

[திரு. என். பன்னீர் செல்வம்] [1992 ஏப்ரல் 21

என்று தமிழகத்தைக் காத்து ஆட்சி செய்து வருகின்ற ராணி மகாராணி இந்த ராஜ்யத்தின் ராணி புரட்சி தலைவி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி), '' உள்ளததில் நல்ல உள்ளம் உறங்காதென்பது வள்ளுவன் வகுத்ததடா '' என்ற தத்துவத்தின் செயல்வீரர் வாழப்பாடியார் அவர்களின் உள்ளம் தொட்டு என் உரையை ஆரம்பிக்கிறேன்.

'' சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. ''

என்று கூறினார் வள்ளுவர்.

'' உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்,
வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை
செய்வோம். ''

என்று பாடினார் பாரதியார்.

'' உழவினால் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை.''

பொன்னாசை, மண் ஆசை, பெண் ஆசை போன்றவை களை மனிதன் துறந்தாலும் சோற்றாசையை விட்டுவிட முடியாது என்று வள்ளுவர் தெளிவாகக் கூறினார். ஆனால் இன்று நம் முன்னோர்கள்,

'' உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட
மிஞ்சாது,
அழுதுகொண்டே ஆயினும் உழுதுகொண்டே இரு,
அழிவே ஆயினும் உழவே தலை.,
விதை முதலே கண்டாலும் வேளாண்மையை
விடாதே,
கடன் வாங்கி பயிர் நட்டவனும் மரம் ஏறி கை
விட்டவனும் ஒன்று ''

என்று பல பழமொழிகளைச் சொல்வதுண்டு. தற்பொழுது விவசாயம் செய்வதே நஷ்டத்தில் தான் நடைபெறுகிறது என்பதை நீங்கள் கண்கூடாக உணர்ந்துகொள்ள வேண்டும்.



1992 ஏப்ரல் 21] [திரு. என். பன்னீர் செல்வம்]

பிற்பகல் 12-05

நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவியின் அரசு வேளாண்மை துறையில் அரிசி மற்றும் உணவு உற்பத்திக்காக அதிக கவனம் செலுத்தி அதில் வெற்றியும் அடைந்து வருவது எல்லோரும் அறிந்ததே. இப்படிப் பட்ட இமாலய சாதனைக்கு முழு ஆதரவாக தமிழக அரசும், தமிழ் நாட்டு விவசாயிகளும் ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாய உற்பத்தித் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு ரூ. 187 கோடியிலிருந்து ரூ. 215 கோடி அளவில் எட்டியுள்ளதே இதற்குச் சான்றாகும்.

தரிசு நிலங்களை விளைச்சல் நிலங்களாக மாற்றி வரும் நமது அரசின் முயற்சிகு எனது பாராட்டைத் தெரிவிக் கிறேன். மீதமுள்ள 12,500 ஏக்கர்களையும் கூடிய விரைவில் விளைநிலங்களாக மாற்ற அரசு விரைவான நடவடிக்கையெடுக்க வேண்டும். வேளாண்மை உற்பத் திக்காக உலக வங்கியிடமிருந்து அதிக அளவில் உதவி பெற்று தரமான விவசாய பொருள்களையும் விதைகளை யும் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும்.

பட்ஜெட் உரையில் சொட்டு நீர்ப்பாசனத்திற்கு முன்னுரிமை கொடுப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இதனை அனைத்து மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும். நடுத்தர மக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் பாமாயில் எண்ணெய்யை அதிக அளவில் பெற்றிட நம் தமிழகத் திலேயே அதிக அளவில் அம்மரங்களை வளர்க்க மத்திய அரசு மற்றும் வங்கிகள் மூலம் முயற்சிகள் செய்யப்படுவ தாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதை நான் பாராட்டுகிறேன்.

வேளாண்மையில் நவீன உத்திகளைப் பயன்படுத்தி, அதிக அளவு உணவு உற்பத்திக்கு நாம் வழி வகுத்தாக வேண்டும். விவசாயிகள் மண்ணின் தன்மைக்கேற்ப விவசாயம் செய்வதால் தான் உணவு உற்பத்தியை அதி கரிக்க முடியும். எனவே, விவசாயிகளுக்கு சாயில் சர்வே பற்றி பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். விவ சாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்து விவசாயிகளுக்கு அதிக அளவு இலாபத்தை பெற்றுத்தர வேண்டும்.

விவசாயிகளுக்கு வாழை, நெல், கரும்பு, தென்னை, கம்பு, கேழ்வரகு, கடலை போன்ற விவசாயப் பொருட் களுக்குக் கூடுதல் விலை கொடுக்கப்பட வேண்டும். விலை,

[திரு. என். பன்னீர் செல்வம்] [1992 ஏப்ரல் 21

உரம், பூச்சிமருந்து, விவசாயக் கருவிகள் மானிய விலையிலும், முடிந்தால் இலவசமாகவும் கொடுக்க அரசு முன் வர வேண்டும். விவசாயம் செய்வதற்கு யூனியன்களில் டிராக்டர் மற்ற அமைப்புகள் விவசாயிகளுக்கு தடுப்பாடின்றி கிடைக்க ஆவன செய்ய வேண்டும். வாய்க்கால், குளங்கள், ஆறுகளை உடன் அரசு மூலமாக மண்ணை எடுத்து, ஆழப்படுத்தி, அகலப்படுத்தக் கேட்டுக் கொள்கிறேன்.

புயல், வெள்ளம், இவைகளால் நஷ்டம் ஏற்படும் விவசாயிகளுக்கு வாங்கிய கடன், வரிவசூல், இவைகளை உடன் அரசு நீக்கி, நிவாரணம் அளித்தும், இன்சூரன்ஸ் திட்டத்தை கட்டாயமாக்க வேண்டும். விவசாயிகளின் பழைய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். வருகின்ற ஆண்டில் காவேரியில் தண்ணீர் விட்டு மூன்று போக சாகுபடி செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும். விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு எந்த நிபந்தனையும் இன்றி உடன் மின்சார இணைப்பு கொடுக்கப்பட வேண்டும். நரிமணத்தில் உள்ள மின்சாரத்தை உடன் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு பூரணமாக கிடைக்க ஆவன செய்வதோடு அனைத்து பம்பு மோட்டார்கள் மின்னிணைப்பு தகுதியின் அடிப்படையில் பவர் உள்ள ட்ரான்ஸ்பார்மர்களை வைத்து கொடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

18 கோடி ரூபாய் இலாபத்தில் இயங்கி வரும் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அதிகமாக உற்பத்தி செய்து, வெட்டப்படாமல் உள்ளதால், விவசாயிகளின் கரும்புகளை உடன் வெட்டுவதற்கு ஆவன செய்ய கேட்டுக் கொள்கிறேன். நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி கூட்டுறவு ஆலை 25,000 ஏக்கர் கரும்பு உற்பத்தி நிலப்பரப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது 16,000 ஏக்கரில் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டு, மீதி 9,000 ஏக்கரில் கரும்பு போடாமல் உள்ளது. இதில் 6 1/2 இலட்சம் டன்னில் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டு 3 1/2 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. மீதம் 3 இலட்சம் டன் வெளியில் தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பப்படுகிறது. தற்பொழுது 1,500 டன் அறவைத் திறன் கொண்டு ஆலை 3,500 டன்னாக மாற்றப்பட்டாலும் இன்னும் ஒரு ஆலை - தஞ்சை மாவட்டத்தில் என் தொகுதியில், திருவிடை மருதூர் - திருப்பனந்தாளில் ஒரு கூட்டுறவு ஆலை அமைப்பதற்கு ஏறகனவே எடுக்கப்பட்ட 9,000 ஏக்கர் நிலமும், தற்பொழுது உற்பத்தியாகும்



1992 ஏப்ரல் 21] [திரு. என். பன்னீர் செல்வம்]

கரும்பில் மீதம் உள்ளதும் உள்ளன. இது வரையில் கூட்டுறவு ஆலையின் மொத்தம் இலாபம் இருப்பு ரூ. 18 கோடி. அரசாங்கத்திற்கு சுமார் ரூ 5 கோடி இலாபம். சங்க உறுப்பினர்களுக்கு போனஸ் பங்கு தொகை இலாபம் சுமார் ரூ. 5 கோடியென்னும் நிலை உள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் கொடுக்கப்பட உள்ள சர்க்கரை ஆலையை தி.மு.க.வைச் சார்ந்த தனியார்களுக்குக் கொடுக்காமல், கூட்டுறவு ஆலையாகக் கொடுத்து, தண்ணீர் வசதி, ரோடு வசதி, எடுக்கப்பட்ட நிலத்தில் தனியார் மூலம் உள்ள நிலங்களில் சுமார் 10,000 ஏக்கரில் உள்ள கரும்பு, கழிவு நீர் விடுவதற்கு வசதிகள் உள்ள என் தொகுதிக்கு கொடுத்து, ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவி, விவசாயத்தைப் பெருக்க கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு, தனியார் கரும்பு ஆலை மூலம் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் உள்ள கரும்புகள் வெட்டப் பட்டன. அதுபோல, இந்த ஆண்டும் வெட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவில் இரண்டு இடங்களில் தான் நெல் ஆராய்ச்சி நிலையம் உள்ளது. ஒன்று தமிழகத்தில் என் ஊரான ஆடுதுறையில் உள்ளது. இரண்டாவது கட்டாக்கில் இருக்கிறது. என் ஊரான ஆடுதுறையில் வெளிநாடுகளான பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற வெளிநாடுகளில் சென்று படித்த விஞ்ஞானிகள் 40 பேர்கள் பணி புரிகிறார்கள். உலகத்தில் சுமார் 5,000 வகை நெல் ஒட்டு வீரிய ரகங்கள் ஆராய்ச்சி செய்து 40 வகை ஒட்டு வீரிய நெல் கண்டுபிடிக்கப்பட்டு, பிலிப்பைன்ஸ் போன்ற வெளிநாடுகளில் நம் நெல்லுடன் ஒட்டு ரகம் செய்யப்பட்டு அதிக விளைச்சல் செய்யப்பட்டு வருகின்றது. பயிர் வகை, வாசனை நெல், பசு, மீன், கோழி, முயல், ஆடுகள் இவைகள் பற்றி ஆராய்ச்சி நடத்தி வருகின்றது. அதற்கு விவசாய ஆராய்ச்சிக் கருவிகள், அதிக அளவில் ஒதுக்கக் கேட்டுக் கொள்கிறேன். அங்கு வேளாண்மைக் கல்லூரி, வேளாண்மை அறிவியல் நிலையம், பேருந்து வசதி, வாழை ஆராய்ச்சி நிலையம் புதுப்பித்தல், நில ஆர்ஜிதத்தில் ஏற்பட்டுள்ள தடங்கல்களை அரசு முன்னுரிமை கொடுத்து சரி செய்யவும், புகை வண்டி நிலையத்திற்குச் செல்லும் ரோட்டையும் சரி செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

இத்துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை விவசாயிகளோடு நேரடித் தொடர்பு கொண்டு சிறப்பாகச் செயல்படுத்தி, துறையின் ஆணிவேராக இருந்து வருபவர்கள் வயல் விளக்க அலுவலர்கள். அவர்களது கோரிக்கைகளில் ஒன்றான, அனைத்து வயல் விளக்க அலுவலர்களையும் உதவி வேளாண்மை அலுவலர்களாக பதவி உயர்வு அளித்திடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

என்னுடைய கடைசி கோரிக்கையாக, மாண்புமிகு தற்போது துணைச் சபாநாயகராக அமர்ந்திருக்கிற அவர்களிடம், கடைசி கோரிக்கையாக ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சிக்கு நான் சவால் விடுகிறேன். (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். சிங்காரம்) :** பேரவை மாற்றுத் தலைவர்.

**திரு. என். பன்னீர் செல்வம் :** மாற்றுந் தலைவர் அவர்களே, இந்த ஆட்சிக்கு ஒரு சவால் விடுகிறேன். அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் செய்யும் சலுகைகளில் இந்த ஆட்சி இந்தியாவிலேயே மிகவும் பின் தங்கிய மாநிலமாகும். அப்படி முதல் மாநிலமாகக் கொண்டுவர இருந்தால், மற்ற மாநிலங்களில் உள்ள சலுகைகள் போல், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, சென்ற கூட்டத் தொடரில் நான் பேசியது போல், செய்து காட்டட்டும் என்று கூறி, என் உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். சிங்காரம்) :** திரு. ஏ. எம். பரமசிவன்.

**திரு. ஏ. எம். பரமசிவன் :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்களுக்கு முதலில் நன்றி சொல்லிக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். தமிழக அரசினில் மாறுதல்களை





ஏற்படுத்தி, புதிய திட்டங்களைக் கொண்டு வந்து, பொற் காலத்தை உருவாக்கியிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டுகிறேன்.

பயிர்த் தொழிலை அதிகமாகக் கொண்டுள்ள இந்தியத் துணைக் கண்டத்தில் 100-க்கு 80 விழுக்காடு, வேளாண்மைத்துறையை நம்பி இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களின் பல்வேறு கோரிக்கைகளையும், குறை களையும் நிவர்த்தி செய்திருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டுகிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகிற தண்ணீர் வீணாக அரபிக் கடலில் கலக்கின்றது. அந்தத் தண்ணீரை கிழக்கு முகமாகத் திருப்பிவிட்டால், தென் மாவட்டங்களாக இருக்கிற, மதுரை, பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர், முகவை, காமராஜர் மாவட்டங்கள் மற்றும் நெல்லை மாவட்டம் போன்ற பகுதிகளின் வேளாண்மைத்துறையில் உள்ள தண்ணீர்ப் பிரச்சினை தீரும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

வெறும் விளம்பரத்திற்காக கருணா என்ற நெல்லைக் கண்டுபிடித்த நிலைமை மாறி, இன்றையதினம் உள்ள படியே புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே, தமிழக வேளாண்மைத்துறை பல்கலைக்கழகத்தின் மூலமாக, ஏறத் தாழ 11 புதிய நெல் வகைகள் கண்டுபிடித்திருக்கிற அந்த விஞ்ஞானிகளைப் பாராட்டுவதோடு, அந்த விஞ்ஞானி களுக்கு, ஆராய்ச்சி செய்த அந்த பேராசிரியர் பெருமக்களுக்கு ரூபாய் 1 இலட்சம் மானியமாகக் கொடுத் திருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

உர விநியோகத்தைக் கட்டுப்படுத்த, சிறிய உழவர் களுக்கு 12 கோடி ரூபாய் பெறுமான பரிந்துரை சீட்டு கள் வழங்கப்பட்டு இருப்பதை, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் வழங்கப்பட்டு இருப்பதை, பாராட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். பெரியாறு மேம்பாட்டுத் திட்டம் வேளாண்மை விரிவாக்கப் பகுதிகளில் உலர் களங்கள் அமைத்திடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உர வினியோகத்தினைக் கட்டுப் படுத்த, சிறிய உழவர்களுக்கு 12 கோடி ரூபாய் பெறு மானமுள்ள பரிந்துரைச் சீட்டுகள் வழங்கப்பட்டு இருப்பதை பாராட்டுவதோடு, இன்னும் சிறிய விவசாயிகளுக்கு சில சலுகைகளை அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஏ. எம். பரமசிவன்] [1992 ஏப்ரல் 21

கரும்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இளங்குருத்துப்
புழுவைக் கட்டுப்படுத்த, ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்
கள் மற்றும் செயல் விளக்கப் பாத்திகள் அமைத்து, கரும்பு
விவசாயிகளை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-15 மணி

எண்ணெய் வித்துக்களில் நடப்பாண்டு 14 இலட்சம்
மெட்ரிக் டன் உற்பத்தி இலக்கை அடைய அரசு எடுத்துக்
கொள்ளும் முயற்சிகளைப் பாராட்டுகின்ற இந்த நேரத்தில்
நிலக்கடலை பயிரை பாசனப் பகுதிகளிலே பயிரிட விரி
வாக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். எண்ணெய் வித்துக்கள்
துறையை வேளாண்மைத் துறையோடு இணைத்து அந்தப்
பணியாளர்களை வேளாண்மை வளர்ச்சித் திட்டத்திலே
ஈடுபடுத்தி இருப்பதை பெரிதும் பாராட்டக் கடமைப்
பட்டவனாக இருக்கிறேன். சொட்டு நீர்ப் பாசனத்
திட்டம், நுண் பாசனத் திட்டம் மற்றும் உணவு தானிய
உற்பத்தி சிறப்புத் திட்டத்தின்கீழ் கிணறுகளை அமைத்தும்
ஆழப்படுத்தியும், சிறு உழவர்களுக்கு மானியம் வழங்குவ
தின் மூலம் விவசாயப் பெருங்குடி மக்கள் பயனடைந்து
வருகின்றார்கள்.

கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சர்க்கரை
ஆலைகளுக்கு இணைப்புச் சாலைகளை அமைத்து
விவசாயிகள் தங்கள் கரும்பை ஆலைகளுக்குக் கொண்டு
செல்ல வசதியாக ரூ. 5 கோடி செலவில் சாலைகள்
அமைப்பதற்கான பணிகள் நடைபெறுவது வரவேற்கத்
தக்கது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் வேளாண்மை அறிவியல் முறைகளில் கிராமப்
புற இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கும் மையங்கள்
தற்போது 12 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.
அவற்றை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊட்டச்சத்து மிக்க பழமரக் கன்றுகள் நட புரட்சித்
தலைவி அரசு வழங்கும் உதவி வரவேற்கத்தக்கது
என்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சேமித்து
வைத்து, நல்ல விலையில் விற்க வசதியாக கிராமப்புறக்
கிடங்குகள் இன்னும் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று



1992 ஏப்ரல் 21] [திரு. ஏ. எம். பரமசிவன்]

கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பற்பல சமுதாயக்
கிணறுகள் அமைத்து, விவசாயிகள் பாசன நீர்ப்
பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இங்கிலாந்து நாட்டிலே தொழில் புரட்சி ஏற்பட்டது.
பிரான்சில் பிரெஞ்சு புரட்சி ஏற்பட்டது. அதுபோல
தமிழகத்திலே மக்கள் மனதிலே சமுதாயப் புரட்சியும்,
புதிய புரட்சியும் ஏற்படுத்தி வரலாற்றிலே இடம்
பெற்றிருக்கிற எங்கள் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில்
பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதனை தெரிவிக்கக்
கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதேபோல எங்களுடைய மாவட்டமான மதுரை
மாவட்டத்தில் இன்றையதினம் வறட்சி நிலவிக் கொண்
டிருக்கிறது. ஆகவே வறட்சிப் பகுதியாக இருக்கின்ற
சோழவந்தான் தொகுதியில் பல்வேறு பிரச்சினைகளை
தீர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சோழ
வந்தான் தொகுதியில் பாலமேட்டிற்கு அருகில்
ஒரு பெரிய மஞ்சமலை அணையைக் கட்டினால், அதன்
மூலம் ஏறத்தாழ 5,000 ஏக்கர் விவசாயம் செய்கின்ற
அளவிற்கு உதவி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

முள்ளுப்பள்ளம் அருகில் ஊற்றுக்காலில் ஒரு தடுப்புச்
சுவர் கட்டப்பட்டால், அந்தத் தடுப்புச் சுவர் கட்டுவதன்
மூலம் விவசாயிகளுக்கு எந்தவித அழிவுப் பாதையும்
இல்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். ஆகவே சோழவந்தான் தொகுதியில் பல்வேறு
வகையில் விவசாயத்தை நம்பியிருக்கின்ற அந்த மக்களுக்
காக விவசாய கிடங்குகளை அமைத்துத் தரவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் அங்கே அதிக அளவில் உலர் களங்களை
உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
சோழவந்தான் தொகுதியில் பல்வேறு இடங்களில் ஏறத்
தாழ 3/4 பகுதி வறட்சியாகத்தான் இருக்கிறது. அங்கே
வறட்சியாக இருக்கின்ற அந்தப் பகுதிகளை நல்லமுறை
யில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். ஆகவே நம்முடைய புரட்சித்தலைவி அவர்
களுடைய ஆட்சிக் காலத்தில் அங்கேயிருக்கின்ற பல
களங்களை ஏற்படுத்தி அணைகளை கட்டித்தர வேண்டு
மென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பினை உருவாக்கித்
தந்த மாண்புமிகு மாற்றுத் தலைவருக்கு நன்றிகூறி
விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். சிங்காரம்) : திரு. சி. தாமோதரன் :

**திரு. சி. தாமோதரன் :** சிங்காரமாய் சபை நடத்தும் மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, (சிரிப்பு) வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பினை தந்த மாண்புமிகு இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாட்டின் விவசாய உற்பத்தி பெருகினால் அந்த நாட்டின் பஞ்சம் தீரும். பஞ்சம் தீர்ந்துவிட்டால் நல்லாட்சி அமையும் என்பதை நன்குணர்ந்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வேளாண்மைத் துறைக்கு இந்த ஆண்டு கடந்த ஆண்டைவிட கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, மொத்தமாக ரூ. 215.75 கோடியைக் கொடுத்துள்ளார்கள். இவற்றிலிருந்தே மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயத் துறையின் மீதும், தமிழ் விவசாயிகள் மீதும், உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்பதிலும் ஆழ்ந்த அக்கறை காட்டுகின்றார்கள் என்பதை நினைத்து நாம் அவரைப் பாராட்டிப் பெருமைப்படுகின்றோம். அரசின் கொள்கை விளக்கக் குறிப்பில் 1991-92 ஆம் ஆண்டில் 8,000 கிணறுகள் வெட்ட திட்டமிடப்பட்டு, ரூ. 400 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடருமென அறிவிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். 1992-93 ஆம் ஆண்டில் 21 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் நெல் பயிரிடுவதற்கு திட்டம இடப்பட்டுள்ளது என்கிற அறிவிப்பை, முன்முயற்சியை பாராட்டுகிறேன். கொள்கை விளக்கக் குறிப்பில் 1992-93 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஹெக்டேரில் கரும்பு பயிரிட திட்டம் இடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கரும்பு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் அதேநேரத்தில் அரசு 8.5 சதவீதம் சர்க்கரை கண்டுமுதலுக்கு, ஒரு டன் ஒன்றுக்கு ரூ. 410 என்று கரும்பு விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கரும்பு விவசாயிகளுடைய வாட்டத்தைப் போக்கும் வகையில் கடந்த ஆண்டு ரூ. 310 ஆக இருந்ததை இந்த ஆண்டு கூடுதலாக்கி, ரூபாய் 100 உயர்த்தி, ரூ. 410 ஆக 8.5 சதவீத சர்க்கரை சத்திற்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



பிற்பகல் 12-20

தென்னாற்காடு மாவட்டத்தில்தான் அதிக அளவு விளை பொருள்கள் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு விற்பனை ஆகிறது. ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் விதிப்படி விவசாயிகளுக்கு அன்றே விற்கப்படும் பொருள்களுக்கு பணப் பட்டுவாடா செய்யப் பட வேண்டும். அதாவது 24 மணி நேரத்திற்குள்ளாக என்று விதி இருக்கிறது. ஆனால் நடைமுறையில் அப்படி இல்லாமல் விவசாயிகளுக்கு காலம் தாழ்த்தி பணத்தைத் தரக்கூடிய சந்தர்ப்பம் அங்கே ஏற்படுகிறது. சில சமயங்களில் நள்ளிரவு 12 மணிக்குக்கூட விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிறது. அருகாமையில் உள்ள கிராமங்களிலிருந்து வரும் விவசாயிகளுக்கு பணத்தை பாதுகாப்பாக வீட்டிற்கு எடுத்துச் செல்ல முடியாத அச்சம் கலந்த சூழ்நிலை உள்ளது. அதை தவிர்க்கும் பொருட்டு விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிற பணத்தை காசோலையாக மாற்றி கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அவற்றை அரசு விவசாயிகளுக்கு ஒழுங்கு முறை விற்பனைக் கூட அலுவலர்கள் மூலமாக கொடுத்து விட்டு பிறகு வியாபாரிகளிடமிருந்து அரசு அவற்றை பெற்றுக் கொள்ளலாம். அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் கடந்த 17—11—91 அன்று தென்பெண்ணை ஆற்றில் பெருக்கெடுத்த வெள்ளத்தின் காரணமாக புலவனூர் கிராமத்தில் அருகிலே ஆற்றில் வலது கரையில் 300 மீட்டர் நீளத்திற்கு உடைப்பு ஏற்பட்டு பயிர்கள் சேதம் அடைந்தன. சுமார் 100 ஏக்கர் விளை நிலங்கள் மணல் மேடிட்டு மீண்டும் பயிரிட முடியாமல் விவசாயிகள் அவதிக்குள்ளாகியிருக்கின்றனர். இவற்றில் வேளாண்மை பொறியியல் துறையின் புல்டோசர் மூலமாக மணலை அப்புறப்படுத்தி மீண்டும் விளை நிலமாக்கித் தர அரசு முன் வர வேண்டும் என்று இந்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல எனது தொகுதியில் கூட்டாம்பாளையம், மேல் குமாரமங்கலம், வகல்லைட, நத்தப்பேடு ஆகிய கிராமங்களிலே விவசாய விளைநிலங்கள் மணல் மேடிட்டு மூடப்பட்டிருக்கின்றன. அவற்றையும் சரி செய்துதர வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்கிறேன். எதிர் வரும் காலங்களில் வெள்ள பாதிப்பு ஏற்படாமல் இருக்க உடைபட்ட ஆற்றின் கரையையும் தாழ்வான பகுதியையும் உயர்த்தி ஒரு தடுப்புச் சுவர் பொதுப் பணித்துறையின் மூலம் கட்டித் தரவேண்டும் என்று இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன். அதேபோல விழுப்புரம் தொகுதியிலுள்ள அரசமங்கலம், சின்னக்கள்ளிப்பட்டு, சேந்தனூர்,

கீழ குச்சிப்பாளையம், திருப்டாச்சலூர், வேளியம்பாக்கம் ஆகிய கிராமங்களில் வெள்ளம் ஊருக்குள் புகுந்ததன் விளைவாக விளை நிலங்கள் மண்மேடிட்டு இருக்கின்றன. இந்த மணல் மேடிட்ட விளை நிலங்களையும் புல்டோசர் மூலமாக அப்புறப்படுத்தி மீண்டும் விவசாயிகள் பயன் படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் நெல்லிக்குப்பம் நகரத்தில் மக்கள் விரும்புகிற ஓர் இடத்தை தேர்வு செய்து அவ்விடத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன் வரவேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்நகரத்தில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் உள்ள இட நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு புதிய கட்டிடம் கட்டித் தர வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் பாலூர் கிராமத்தில் 52 ஏக்கர் விளை நிலத்தில் காய்கறி ஆராய்ச்சி நிலையம் ஒன்று உள்ளது. அதனை மேலும் மேம்படுத்தும் விதத்தில் காலியாக உள்ள இடங்களுக்கு அதிகாரிகளை நியமித்தும் கூடுதல் விஞ்ஞானிகளை நியமித்தும் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். அங்கே கட்டிடம் புதிதாக கட்டித் தர வேண்டும் என்றும் விதை சுத்திகரிப்பு வசதியை செய்து தரவேண்டும் என்றும் கோரிக்கை நீண்ட நாட்களாக உள்ளது. அவற்றையும் அரசு உடன்கவனித்து செய்து தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். தென்னாற் காடு மாவட்டத்தில் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி 2-வது, 3-வது சுரங்கம் வெட்டுவதால் நிலத்தடி நீர் சுற்று வட்டாரங்களில் சுமார் 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு 300 அடிக்கும் கீழே போய்விட்டது. எனவே ஆழ்துளை குழாய் கிணறு அமைக்கும் இயந்திரங்கள் இம்மாவட்டத் திற்கு கூடுதலாக ஒதுக்கப்படவேண்டும். அதேபோல அரசு மானியத்துடன் நீர் மூழ்கி மின் மோட்டாரை அதிக எண்ணிக்கையில் அமைப்பதற்கு அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக மாவட்டத்தில் டிரான்ஸ்பார்மர்கள், அதாவது குறைந்தமின்சக்தி கொண்ட டிரான்ஸ்பார்மர்கள் ஒரே சமயத்தில் அதிக விவசாயிகள் பயன்படுத்துகிற நிலையில் இருப்பதால் அதனுடைய சக்தியின் தரம் குறைந்து இருப் பதால் கூடுதல் மின் சக்தியை கொண்ட டிரான்ஸ்பார்மர் களை பொருந்தவேண்டுமென்று கேட்கின்ற பொழுது எந்த ஒரு ட்ரான்ஸ்பார்மர் டோட்டலாக ஃபெயிலியூராக இருக்கின்றதோ அதற்குத்தான் முன்னுரிமை தரப்படும் என்ற விளக்கம் அதிகாரிகளிடமிருந்து பெறப்படுகிறது.





எனவே விவசாயிகளிடமிருந்து வரும் கோரிக்கைகளை முன் வைத்து குறைந்த சக்தி கொண்ட ட்ரான்ஸ்பார்மர்களை உடனடியாக மாற்றி கூடுதல் மின்சக்தி கொண்ட ட்ரான்ஸ்பார்மர்களை பொருத்திட வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

பிற்பகல் 12-25

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். சிங்காரம்): திரு ஓ.ஆர். இராமச்சந்திரன்

*திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நாட்டினுடைய வளமையைக் காப்பாற்றுவதற்காக தங்க ளுடைய வாழ் நாட்களை எல்லாம் அர்ப்பணித்துவிட்ட இந்த விவசாய பெருங்குடி மக்களுக்காகவும் அவர்கள் செய்கின்ற விவசாயத்திற்காகவும் இந்த அரசு அறிவித்து இருக்கின்ற நல்ல திட்டங்களுக்காகவும், அவர்கள் செயல்படுத்த இருக்கின்ற நற்பணிகளுக்காகவும் இந்த அரசை நான் மனமார பாராட்டுவதுடன் வருகின்ற காலங்களில் இந்தப் பணிகள் மேலும் தொடர வேண்டும், விவசாயத்திற்கு அரசு செய்கின்ற ஒதுக்கீடு மேலும் உயர்த்தப்பட வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையைத் தொடர்கிறேன். தேசிய நீர் அபிவிருத்திக் குழு தன்னுடைய அறிக்கையிலே கூறுகின்றபொழுது கேரளாவிலே ஓடுகின்ற அச்சன்கோவில், பம்பா நதியில் சுமார் 2,000 மில்லியன் குயூபிக் மீட்டர் தண்ணீர் போகிறது. அந்தத் தண்ணீரிலே கேரளாவினுடைய தேவைக்குப்போக மீதம் இருக்கின்ற சுமார் 660 மில்லியன் குயூபிக் மீட்டர் நீரை—மேற்கு நோக்கி பாய்கின்ற அந்த நீரை—கிழக்கு நோக்கி பாய்வதற்குண்டான முயற்சியை நாம் மேற்கொள்ளுவோமேயானால் தமிழ்நாட்டிற்கு குறிப் பாக மதுரை, இராமநாதபுரம் பகுதிகளில் சுமார் 1,50,000 ஹெக்டேர் நிலங்களை புதிதாக பாசனத்திற்கு கொண்டு வரவும் சுமார் 18 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்வதற்கும் ஏதுவாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அதை மனதில் கொண்டு இந்த பம்பா, அச்சன்கோவில் ஆறுகளில் ஓடுகின்ற, வீணாக மேற்கு நோக்கி ஆறுகளில் கலக்கின்ற, இந்த நீரை மதுரை, இராமநாதபுரம் பகுதிகளை மீண்டும் செழிக்கச் செய்ய இப்பகுதிகளுக்கு கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள் கிறேன்.

[திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்] [1992 ஏப்ரல் 21

அதுபோல கேரளா அமைச்சர் அவர்கள், திரு. விஸ்வ
நாதன் அவர்கள் பேசுகின்ற போது தமிழகத்திற்கும்
கேரளாவிற்கும் இடையே ஏற்பட்டிருந்த ஒப்பந்தம்,
பெரியாறு நீரை பகிர்ந்து கொள்வதில் உள்ள ஒப்பந்தம்
காலாவதியாகிவிட்டது என்று கருத்து வெளியிட்டுள்ளார்.
இந்தக் கருத்தானது மதுரை, இராமநாதபுரம், தேவர்
திருமகன் அண்ணா போன்ற மாவட்டங்களில் உள்ள
இலட்சக் கணக்கான விவசாயிகளுடைய மனதில் பெரும்
பீதியை ஏற்படுத்தியிருக்கிறது. அந்தப் பீதியைப் போக்கும்
வண்ணமாக நமது முதலவர் அவர்கள், கேரள முதல்வர்
அவர்களைத் தொடர்பு கொண்டு மக்களுடைய பீதியைப்
போக்கும் வண்ணமாக அரசு ஒரு அறிக்கையை வெளி
யிட்டு குறிப்பாக விவசாய மக்களுடைய பீதியைப் போக்க
ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
மேலும் தென்னக நீர் இணைப்பு—சதர்ன் வாட்டர்
கிரிட்—என்று சொல்லப்படுகின்ற அந்தத் திட்டத்தை
அமல் செய்வதற்கான முயற்சிகள் அத்தனையும் செய்
தால் நம் பகுதியில் குறிப்பாக தென்னகத்திலேயே
தண்ணீர் பற்றாக்குறை இருக்கவே இருக்காது. எனவே
அந்த சதர்ன் வாட்டர் கிரிட் அமைக்கும் திட்டத்தை
விரைவாகச் செயல்படுத்துவதற்கான முயற்சிகள் அத்தனை
யையும் இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி
யைப் பொறுத்தவரையில் அது ஒரு தனி தட்ப வெப்ப
நிலை உடைய பகுதியாகும். குறிப்பாக அதுவும் இரவு
நேரங்களில் அங்கு தட்ப வெப்ப நிலை 16 டிகிரிக்குக்
கூட இறங்கிவிடுகின்ற சூழ்நிலையைப் பார்க்கின்றோம்.
கம்பத்தை பொறுத்தவரையில் அங்கே நெல், கரும்பு,
வாழை, தென்னை, மா, பலா போன்ற பயிர் வகைகளும்,
தானிய வகைகளும், அது போக காபி, ஏலம், டீ போன்ற
வைகளும் அங்கே உற்பத்தியாகின்றன. இப்படிப்பட்ட
கம்பம் பகுதிக்கு இன்று தனியாக ஒரு விவசாய
ஆராய்ச்சி நிலையம் இல்லை. கம்பத்திற்கு அருகிலேயே
எத்தனையோ வசதிகள் இருந்தும் கம்பம் பள்ளத்தாக்கு
என்று கூறப்படுகிறது. நல்ல வளமான பகுதியாக இருப்ப
தால் இந்தப் பகுதியில் மல்ட்டி க்ராப் ரிசர்ச் சென்டர்
ஏற்படுத்தி இங்கே இருக்கின்ற பல்வேறு பயிர்களை
பாதுகாக்கும் வண்ணமாக வசதிகள் செய்துதர வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.



163179

1992 ஏப்ரல் 21] [திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்]

பிற்பகல் 12.30.

குறிப்பாக கம்பத்திலிருந்து திராட்சை, வாழை அதிக
மான அளவுக்கு கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்
களுக்கு செல்கிறது. இப்படி பக்கத்து மாநிலங்களுக்கு
வருவாயை ஈட்டித் தருகின்ற பணப் பயிர்கள் அங்கே
மிக அதிக அளவில் விளைகின்றன. எனவே அவற்றை
எல்லாம் பாதுகாக்கும் வண்ணமாக ஒரு Multi - crop
Research Centre கம்பம் பள்ளத்தாக்கில்
ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த அரசை கேட்டுக்
கொள்கிறேன். அடுத்து Western Ghat Development Scheme
என்று ஒன்று கம்பம் பகுதியில் இருக்கிறது.
அதற்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்வது இல்லை என்று
கேள்விப்பட்டேன். அந்த Western Ghat Development Scheme
க்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்து அதனுடைய
பணியை தீவிரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, கிராம சேவக் என்பவர்கள் கிராமங்
களுக்குச் செல்வது இல்லை. அவர்கள் பஞ்சாயத்து
யூனியன் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு விவசாயி
களை பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கு வரவைத்து
சொல்கிறார்களே ஒழிய இவர்கள் கிராமங்களுக்குச் சென்று
விவசாயிகளின் பிரச்சினையை நேரில் கண்டு அறிந்து
அவர்களுக்கு உதவி செய்வது இல்லை. மேலும்
இவர்களுக்காக கட்டப்பட்ட வீடுகள் கூட கிராமங்களில்
பூட்டியே இருக்கிறது. எனவே, இந்த கிராம சேவக்
என்று சொல்லப்படுகிறவர்கள் கிராமங்களுக்குச் சென்று
கிராம விவசாயிகளை அணுகி அவர்களுக்கு உதவி செய்ய
வேண்டும் என்று பணிக்க வேண்டும் என்று இந்த அரசை
கேட்டுக் கொள்கிறேன்.

கரும்பைப் பொறுத்தவரையில் கரும்பை விலைக்கு
தருகின்றபோது பொதுவாக தனியார் ஆலையாக இருந்தா
லும் சரி, கூட்டுறவு ஆலையாக இருந்தாலும் சரி
உடனடியாக பணம் தருவது இல்லை. கொடுக்கின்ற
பணத்தை குறைத்துக் கொடுக்கிறார்கள். 'மீதி வருகின்ற
பணத்திற்கு நாங்கள் வட்டி தருகிறோம்,' என்று சொல்லு
கிறார்கள். ஆனால் நாம் பயிர் கடனாக அவர்களிடம்
பணம் பெறும் போது கூடுதல் வட்டி பெற்றுக்கொள்
கிறார்கள். நம் பணத்தைத் திருப்பித் தருகின்ற போது
குறைந்த வட்டியைத் தருகிறார்கள். எனவே, கரும்
பிற்கு விலையை அதிகரித்து தருவதோடு கரும்பு விவசாயி
கள் விவசாயம் செய்த கரும்பை ஆலைக்கு அனுப்பிய

உடனே அவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்ய நட
வடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை வற்புறுத்திக்
கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் விவசாயிகளுக்கு மின்சாரம் இரவில் மட்டும்
தான் வழங்கப்படுகிறது. இரவில் மின்சாரம் வழங்கப்
படுவதால் விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு ஏற்ற
சூழ்நிலை இல்லை. ஏன் என்றால் வேலைக்கு வருகின்ற
வர்கள் இரவில் வருவதற்கு, ஒன்று மறுக்கிறார்கள், அல்லது
பயப்படுகிறார்கள். இரவில் பாம்பு, பூச்சி போன்ற பல
தொல்லைகள் இருப்பதால் இரவில் விவசாய வேலைக்கு
வருவதற்கு மறுக்கிறார்கள். அதனால் பகலில் 6 மணி
நேரம் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பாமாலின் பயிர் செய்வது பற்றி இங்கே
நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கிறீர்கள். பாமாலின்
பயிர் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை நம் தமிழகத்தைப்
பொறுத்தவரையில் எந்த எந்தப் பகுதிகளில் இருக்கிறது.
அதற்கு என்ன என்ன சலுகைகளை இந்த அரசு அளிக்க இருக்கி
றது என்பதை பத்திரிகை வாயிலாக விவசாயிகளுக்கு
விளம்பரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
ஏன் என்றால் இது அதிகாரிகள் மட்டத்தில் இருந்தால்
அது உரிய விவசாயிகளுக்கு சென்று அடைவது இல்லை.
அப்படி பாமாலின் விவசாயம் செய்ய முன்வருகின்ற
விவசாயிகளுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் இந்த
அரசு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு விவசாய
மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களை வெளி
யிட வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.
நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். சிங்காரம்) :**
அடுத்து, திரு. கா. சின்னசாமி.

**திரு. கா. சின்னசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கையில் பேச
வாய்ப்பு அளித்த பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கும்
மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்
பாதங்களை தொட்டு வணங்கி எனது நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு
எய்துவதே அரசின் முக்கிய கொள்கை என்ற கோட்பாட்
டுக்கு ஏற்ப ஒப்பற்ற ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு
டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு வேளாண்மைத்
துறைக்கு ரூபாய் 6,21,02,45,000 ஒதுக்கியிருப்பது மிகவும்



பாராட்டத்தக்கது. தமிழகத்திலே 70 சதவீத மக்கள்
விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். இதை உணர்ந்த
டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால
ஆட்சியிலே பல நல்ல திட்டங்களையும் விவசாயிகளுக்கு
பல சலுகைகளையும் அறிவித்து இருப்பதை நான் மகிழ்ச்சி
யோடு வரவேற்கிறேன்.

விவசாயத்திற்கு முக்கியமாக விளங்குவது நீர்வளம்,
நீர்வளம் இருந்தால் தான் விவசாயம் செய்ய முடியும்.
ஆகவே, தமிழகத்தில் அதிகமான நீர்த் தேக்க அணை,
கசிவுநீர் குட்டை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். தற்போது நிலத்தடி நீர் மிகவும் கீழே
போய் விட்ட நிலையில் நீரை, அறிவியல் கண்ணோட்டத்
தோடு, சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம்
போன்ற பாசன முறைகளில் பயன்படுத்துவது மிகவும்
அவசியம். இந்த புதிய பாசன முறைகளைப் பற்றி
அரசு பெரும்பாலும் கிராமங்களில் விளம்பரப்படுத்த
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் விவசாயி
களுக்கு நல்ல தரமான விதைகளை வழங்கி, ஒவ்வொரு
ஒன்றியத்திலும் அதிகமாக உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு
பரிசுகளை வழங்கி அந்த விவசாயிகளை ஊக்கப்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.35

மானியத்துடன் கூடிய உரங்கள், பூச்சி மருந்துகள் ஆகிய
வற்றை விவசாயிகளுக்கு தகுந்த சமயத்தில் கிடைக்க
அரசு ஆவன செய்யவேண்டும். மேலும் குறைந்த
வாடகையில் விவசாய நிலங்களை உழவடை செய்வதற்கு
ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு டிராக்டர்
வழங்கவேண்டுமாய் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதே
போல, விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு
விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அவர்கள் உற்பத்தி
செய்யும் பொருள்களுக்கு விலை ஏற்றத் தாழ்வுகள்
ஏற்படுகின்றன. இதனால் விவசாயிகளுக்கு பெரிதும்
நஷ்டம் ஏற்பட்டு வாங்கிய கடன்களை கட்ட முடியாத
சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் அவர்களுடைய நிலங்
களை விற்கவேண்டிய சூழ்நிலை சில இடங்களில் உள்ளன.
ஆகவே, அவர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையில்
புதிய திட்டங்களை அறிவிக்க வேண்டும். மேலும் கிராமப்
புறங்களில் உற்பத்தி செய்யும் காய்கறிகளை 20 அல்லது 30
கிலோ மீட்டர் தூரம் எடுத்துச் சென்று விற்பனை
செய்ய வேண்டியுள்ளது. விவசாயிகளின் நலனைக் கருதி

ஒவ்வொரு ஒன்றியத்தின் மையப் பகுதியில் காய்கறி கொள்முதல் நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் உபயோகப்படுத்தும் ஆயில் என்ஜின், டிராக்டர் போன்றவைகளுக்கு தேவைப்படும் டீசல் அந்தந்த கிராமங்களில் உள்ள நியாய விலைக் கடைகளிலேயே கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, ஆண்டுக்கு 40 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்று அரசு அறிவித்து உள்ளது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஆண்டுக்கு ஒரு லட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இன்றைய நிலையில் பல விவசாயிகள் மின் இணைப்பு வேண்டி காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். எனவே, அரசு துரித நடவடிக்கை எடுத்து விவசாயிகள் விண்ணப்பிக்கின்ற காலத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாவது மின் இணைப்பு கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சில இடங்களில் மின்சார வசதியே இல்லாமல் இருக்கிறது. எனது சேந்தமங்கலம் தொகுதியில் கொல்லிமலையிலுள்ள பெரும்பாலான கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்கப்படாமல் உள்ளது. அங்குள்ள அனைத்து கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுக்கவேண்டும். மேலும் எனது தொகுதியைச் சார்ந்த கொல்லிமலையில் நீர்வளம், நிலவளம் இருந்தும் சாலை வசதி இல்லாததால் உற்பத்தி செய்கின்ற விளைபொருள்களை கொண்டு சென்று விற்பனை செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. ஆகவே, அங்கே சாலை வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு பெருமளவில் பயிரிடப்படுகிறது. இதை தனியார் கொள்முதல் செய்து பல கோடி ரூபாய் லாபம் பெருகின்றனர். தனியார் கொள்முதல் செய்வதால் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. குறிப்பிட்ட காலத்தில் பணம் கொடுப்பதும் இல்லை. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, மிகப் பெரிய அளவில் ஒரு ஜவ்வரிசி தொழிற்சாலையை ஏற்படுத்தி, மரவள்ளிக் கிழங்கை அரசே கொள்முதல் செய்தால் அரசுக்கு கோடிக்கணக்கான லாபம் கிடைக்கும். விவசாயிகளுக்கும் தகுந்த விலை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது சேந்தமங்கலம் தொகுதி மலைவாழ் மக்கள் தொகுதியாகும். எனது தொகுதியில் ஒரு தொழிற்சாலை



கூட இல்லை. இந்த பின்தங்கிய தொகுதியில் நல்ல நீர்வளம் உள்ள சேந்தமங்கலம் பகுதியிலுள்ள நடுக்கோம்பை பகுதியிலோ அல்லது முள்ளுக்குறிச்சி பகுதியிலோ ஜவ்வரிசி ஆலையை அமைத்துக் கொடுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியைச் சார்ந்த சேந்தமங்கலம் புதுச்சத்திரம் பகுதியில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதைப் போக்க கொல்லிமலை அடிவாரத்தில் நல்ல நீர்வளம் உள்ள நடுக்கோம்பை பகுதியில் ஒரு திறந்த வெளிக் கிணறு அமைத்து அதன் மூலம் சேந்தமங்கலம் புதுச்சத்திரம், அதனைச் சுற்றியுள்ள பல கிராமங்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் எனது தொகுதியில் நடுக்கோம்பை முள்ளுக்குறிச்சி பகுதியிலே சில மாதங்களுக்கு முன்னால் பெரும் மழை பெய்து விவசாயப் பயிர்கள் வெள்ளத்தால் அடித்துச் சென்றுவிட்டது. இதுவரையிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண நிதி அளிக்கப்படவில்லை. உடனடியாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எனது தொகுதியிலுள்ள முள்ளுக்குறிச்சி பகுதியைச் சார்ந்த வரகூர்கோம்பை என்னும் இடத்தில் நீர்த்தேக்க அணை ஒன்று கட்டினால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயன் அடைவார்கள். அங்கே நீர்த்தேக்க அணை ஒன்று கட்டிக்கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, இன்றைக்கு மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ஒரு ஏக்கர் நிலத்தில் பழச் செடிகள், இடுபொருள்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில் பல ஏக்கர் நிலங்களில் பழச் செடிகளை பயிரிடும் வகையில் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு கரும்பு உற்பத்தியில் நஷ்டம் ஏற்படுகின்ற நிலைமை உள்ளது. கரும்பு உற்பத்திக்கு பெருமளவில் செலவு ஏற்படுகிறது. ஆனால், கொள்முதல் விலை அந்தச் செலவிற்கு தகுந்தாற்போல் இல்லாமல் குறைவாக இருக்கிறது. அரசு, கரும்பின் கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு 500 ரூபாயாக நிர்ணயம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி வி. ஜி. மணிமேகலை.

*திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலிவு விலை மதுவினால் தள்ளாடிக் கொண்டிருந்த தமிழகத்தை தன் முதல் ஆணையால் தலைநிமிரச் செய்து திராவிட இயக்கத்தின் திருவிளக்காய், தமிழகத்தின் கலங்கரை விளக்கமாய், புரட்சி மலராய் கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தின் வழிநின்று ஆட்சி செலுத்திக்கொண்டிருக்கும் என் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி என் இதய மலர்களைத் தூவி பொற்பாதந்தொட்டு வணங்கி இன்றைய மானியக் கோரிக்கையான வேளாண்மை துறையின் மீது என் உரையைத் தொடங்குகிறேன்.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு விவசாயத்துறைக்கு ரூ. 28 கோடி அதிகமாக வழங்கி பசுமைப்புரட்சியை ஏற்படுத்தி வருகின்ற தமிழக முதல்வர் டாக்டர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாகச் செலுத்திக் கொள்கிறேன்.

நம் நாட்டுப் பொருளாதாரத்திற்கு உயிர்நாடியாக அமைந்திருப்பது வேளாண்மை. கிராமப்புற மக்களில் 75 விழுக்காடு உழவுத் தொழிலிலும் அதைச் சார்ந்த தொழில்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர். சுருங்கக் கூறின் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு இரு கண்களாக அமைவது உழவும், தொழிலும். தொழில் துறையில் முன்னேற்றத்தை அடைய விழைவது எத்தனை முக்கியமோ அத்தனை முக்கியம் உழவுத் துறையில் முன்னேற்றத்தைக் காண்பது. வெளிநாடுகளிலிருந்து தொழில் நுணுக்கங்களை இறக்குமதி செய்தாவது நவீன முறைகளைக் கையாள்வது போல் வேளாண்மைத் துறையில் மேலை நாடுகளில் பயன்படுத்தப்படும் நவீன முறைகளைக் கையாளத் தவறி விடுகிறோம்.

வேளாண்மைத் துறைக்குச் செழிப்பைத் தேடி தருவது வீரிய விதைகளைப் பயன்படுத்துவதில்தான் அமைந்துள்ளது. ஜெர்மனி, ஸ்வீடன் நாடுகளில் இத்துறையில் அரிய பெரிய ஆராய்ச்சி மூலம் வீரிய விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதைத்தான் Improved Seeds method என்று கூறுகிறோம். மேலை நாட்டின் நில வளங்களுடன்



ஒப்பிட்டுப்பார்க்கும்போது நம் நாட்டின் நிலவளம் மிகவும் குறைந்தவைதான் என்பது யாவரும் ஒப்புக்கொண்ட உண்மைதான். மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘யேல்’ பல்கலைக் கழகத்தில் மாணவர்களைச் சந்தித்து உரையாடும்போது இந்திய நாட்டில் வேளாண்மை உற்பத்தி திருப்திகரமாக இல்லையே ஏன்? என ஒரு மாணவன் கேட்ட கேள்விக்குக் கீழ்வருமாறு பேரறிஞர் அண்ணா அவர்கள் பதில் அளித்து அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றார்.

‘‘எங்கள் நாடு பழம் பெரும் நாடு. பல நூற்றாண்டுக் காலமாக பல தலைமுறை மக்களால் பயன்படுத்தப்பட்ட நிலங்களைக் கொண்டது எங்கள் நாடு. வளமான உணவுப் பொருள்களை வாரி வழங்கி தன்னிடத்தே இருந்த வளம்— குன்றிப் போயிருக்கிறது. ஆனால் உங்களுடைய நிலங்கள் சிறிது காலமே பயன்படுத்தப்பட்ட நிலங்களாகும். ஆகவே, நிலத்தின் வீரியமும், வளமும் நிறைந்த நிலங்களைக்கொண்ட நாடாக அமெரிக்கா அமைந்திருக்கிறது’’ என சாதுரியமான பதிலை அளித்தார். இது உண்மைதான். நிலங்களில் வளம் சிறக்கப் போதிய முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். அதற்கு முக்கிய வழிமுறைகள் (1) தண்ணீர் பாய்ச்சுதல்; (2)எரு இடுதல்; (3) உரம் இடுதல்.

ஒரு நிலத்தில் உரமிடுவதற்கு முன்பு எரு இடுதல் முக்கியம் என்பதைப் பலர் உணருவதில்லை. இதை மேலை நாடுகளில் பண்ணைதள உரமிடுதல் (Farm-Yard manuring என்று கூறுகிறார்கள். தற்போது 23—25 சதவீதம்தான் இம்முறையைப் பயன்படுத்துகிறார்கள். மாடு, ஆடு சாணங்களை வெகு நாட்களாக மக்க வைத்து பெறப்படும் உரங்கள் நில வளத்தைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல் உரமிடும்போது அவற்றின் சக்தியைப் பெருமளவுக்குக் கிரகித்துக் கொள்ளும் வாய்ப்பினை நிலம் பெறுகிறது. நிலச் சொந்தக்காரர்கள் எருவின் பயனை உணருவதில்லை. அறுவடை முடிந்த நிலத்தில் மறுபடியும் உரமிட்டால் போதும் என எண்ணி விடுகின்றனர். இது தவறான கருத்தாகும். கால் நடைகளின், சாணம், சிறுநீர் இவைகள் தகுந்த முறையில் சேகரிக்கப்பட்டு பயன்படுத்துவது இன்றியமையாததாகும். இதைச் சீரிய முறையில் சேகரித்து பயன்படுத்தத் தவறிவிட்டால் எளிதாகக் கிடைக்கும் நைட்ரஜன் பெருமளவில் சேதப்படுத்தப்படும். இவற்றைச் சுகாதாரச் சீர் குலையாமல் சேகரிக்கும் முறையை உழவர் பெரு மக்களுக்கு வேளாண்மைத் துறை பயிற்சி அளிக்க வேண்டும்.

[திருமதி. வி.ஜி. மணிமேகலை] [1992 ஏப்ரல் 21

கால்நடைகளுக்குப் பராமரிப்புக் கொட்டகைகள், கால் நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப எருகுழிகள் அமைப்பது மேன்யூர் பிட்ஸ் போன்ற வசதிகளை வேளாண்மைத் துறையே பொறுப்பேற்றுச் செய்தல் வேண்டும்.

அடுத்து உரமிடுதல், அமோக விளைச்சலுக்கு அடிப் படையாக அமைவது :

1. வளமான மண்; 2. ஈரம் நிறைந்த மண் வளம்; 3. வீரீய விதைகள்; 4. வியாதிகள், பூச்சிகள் தொல்லைகளிலிருந்து பயிரைக் காப்பது.

இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தின் பருவ நிலை மிக வெப்பமானது. மண்ணின் ஈரம் வெகு விரைவில் சூரிய வெபப்த்தால் கிரகிக்கப்பட்டு ஈரச்சத்தை வெகுவாக இழந்து விடுகிறது. இதனால், எருவும், உரமும், மண் ணில் இரண்டறக் கலக்கும் வாய்ப்பினை இழந்து விடுகிறது. தட்பம் குறைந்து காணப்படும் வெளிநாடுகளில்கூட இந்த சோலார் எவாப்பரேஷன்-ஐ எளிய முறையில் தடுத்து விடு கின்றனர். வெளிநாடுகளில் டிபார்ட்மெண்ட் ஸ்டோருக்குச் சென்றால் வேளாண்மை துறை பகுதியில் 5 கிலோ, 3 கிலோ, 1 கிலோ பாக்கெட்டுகளில் ''வெர்மிகுலைட்'' என்ற பொருள் விற்கப்படுவதைக் காணலாம். இது ஒருவித மைக்கா வகையைச் சார்ந்ததாகும். இதை 200, 300 டிகிரி செண்டிகிரேடுக்குச் சூடாக்கினால் 1 கிலோ கிராம் அல்லது 5 கிலோ, 6 கிலோ கிராம் அளவுக்கு வெந்துவிடும். அதாவது it will expand 8 to 10 times to its original volume பூப்போல மலர்ந்து துகள் துகளாகக் காட்சி அளிக்கும். இவற்றை நிலத்தில் உழும்போது ஏக்கருக்கு குறிப்பிட்ட அளவுக்கு மண்ணில் இரண்டறக் கலந்து விடவேண்டும். அப்போது மண்ணின் ஈரச்சத்தை இது கிரகித்துக் கொண்டு மண்ணில் ஈரத்தைச் சூரிய வெப்பத்திலிருந்து காத்து மண்ணின் ஈரம் சூரிய வெப்பத்தால் ஆவியாகும் நேரத்தை நீடித்து விடுகிறது. The role of solar evaporation is appreciatelly reduced வீட்டின் உட்புறத்தில் சுண்ணீரில்லாமல் பராமரிக்கப்படும் செடிகளுக்கெல்லாம் மேலே நாடுகளில் ''வெர்மிகுலைட்'' டைப் பயன்படுத்துகின்றனர். இந்த முறையை நம்முடைய தமிழகத் திலும் பயன்படுத்துவதற்கு உண்டான ஆக்கப் பணியிலே ஈடுபடலாம் என்று நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 21] [திருமதி. வி. ஜி. மணிமேகலை]

பிற்பகல் 12-45

திருப்பத்தூர் அருகில் அமைந்துள்ள செவ்வாய்ப்புதூரில் வெர்மிகுலைட் படிவங்கள் நிரம்பக் கிடைக்கின்றன. இதை தகுந்த முறையில் விரிவாக்கப்பட்டு பயன்படுத்தினால் மண்ணின் ஈரச்சத்து சூரிய வெப்பத்தால் வீணாக்கப்படுவதை வெகுவாகத் தடுக்க முடியும். இது வேளாண்மைத் துறைக்கு இன்றியமையாத ஒன்றாகும். வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் நிலையற்ற வாழ்வை மேற்கொண்டிருக் கிறார்கள். வேளாண்மைத் துறை சம்பிரதாய முறையில் இயங்காமல் சில முக்கியப் பகுதியில் புரட்சிகரமான திட்டங் களை வகுத்து செயல்பட முனைய வேண்டும். விவசாயி களின் துயரைப் போக்கும் திட்டங்களில் ஒன்று ''கிராப் இன்சூரன்ஸ்'' (Crop Insurance) இம்முறை உடனடியாக செயல்பட வேண்டும். நிலையற்ற வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் விவசாயப் பெருமக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும் இது. இம்முறையை மேலை நாடுகளில் பயப்படுத்துவது சட்ட ரீதியாகும். இம்முறையை தமிழகத் தில் பயன்படுத்துவதில் சில சிக்கல்கள் இருக்கத்தான் செய் கிறது. அவற்றை தகுந்த முறையில் களைந்தெடுத்து பயிர்க் காப்பு முறையை செயல்படுத்த வேண்டும். வேளாண் மைத் துறையில் விவசாயிகள் ஒரே தரப்பட்ட வழி முறை யைப் பின்பற்றினால்தான், இம்முறை வெற்றியடையும். விவசாயி கள் தவறு செய்துவிட்டு அதை பயிர்க்காப்புத் திட்டத்தில் சரிகட்ட முடியாது. ஆகவே, இவற்றையெல்லாம் ஆராய்ந்து செயல்பட, வேளாண்மைத் துறையில் தனிப் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும்.

அதேபோல், வேளாண்மைத் துறையை அடிப்படையாகக் கொண்டு, தொழில்கள் பெருகுமளவுக்கு ''ஆக்ரோ பேஸ்டு இண்டஸ்ட்ரீஸ்''— அதிலே விவசாயிகளை தனிப்பட்ட முறை யிலாவது, கூட்டுறவுத் துறையிலாவது ஈடுபடுத்தி, அவர்கள் வாழ்வினை மேம்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதையெல்லாம் செயல்படுத்தும் போது, பண்ணை விவசாயிகள், கூட்டுறவு விவசாயிகள், தனிப்பெரும் விவசாயிகள், தனி விவசாயிகள் என்று பாகுபடுத்தி அவர் களுக்கு உண்மையான சலுகைகள் அளித்து, நாடு வளம்பெற வழிகோல வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், வறட்சியாக இருக்கிற என்னுடைய தொகுதியான அருப்புக் கோட்டை தொகுதியிலே மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலே அதிகமாக கசிவுநீர் குட்டைகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று மிக மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி. வி. ஜி. மணிமேகலை] [1992 ஏப்ரல் 21

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

காமராஜர் மாவட்டத்தில் செயல்படுத்தி வரும் பருத்திப் பெருக்குத் திட்டத்தில் என் தொகுதிக்கும் குறிப்பாக அருப்புக்கோட்டைத் தொகுதியிலுள்ள நரிக்குடி ஒன்றியத்திற்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், கதிரடிக்கும் களம் தனியாக அமைக்கப்படுதல் வேண்டும். ஏனென்றால், சுகாதார அடிப்படையிலே தனியாக கதிரடிக்கும் தளம் அமைக்கப்படுதல் வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு என் வேண்டுகோளை விடுக்கிறேன். சாலையில் கதிரடிப்பதால், பல நோய்கள் வருவதற்கு ஏதுவாக இருக்கிறது.

வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில், தரிசாக இருக்கும் நிலங்களுக்கென்று தனியாக விவசாய அதிகாரிகளை நியமித்து வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினைக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியான அருப்புக்கோட்டையிலே, காரியாப்பட்டி ஒன்றியத்தில் விவசாயிகள் பெருவாரியாக, மானாவாரியாகத்தான் விவசாயம் செய்கிறார்கள். குறித்த காலத்தில் பருவ மழை பொய்த்து விடுகிறது. எனவே, விவசாயிகள் நாற்றங்கால் போடவாவது, அரசு ஆழ்குழாய்க் கிணறுகள் போட உதவும்படி கேட்டுக் கொள்கிறேன். மானிய விலையிலே அரசு வழங்கும் கைத்தெளிப்பான், உரம், இவை முறையாக விவசாயிகளுக்குப் போய் சேர்வதற்குண்டான ஆக்கப் பணிகளுக்கு அரசு அதிகாரிகளை முடுக்கி விட வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அவை சரியான முறையிலே விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை என்பதால், இதை மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதிலே ஏதாவது சிறு தவறு நடந்தாலும்··· அரசு எவ்வளவோ செலவுகளை ஏற்று, செலவழித்துக் கொண்டிருக்கிற இந்த நல்ல நேரத்திலே, நாம் அதை முறையாக விவசாயிகளுக்குச் செல்வதற்கு வழி வகை செய்ய வேண்டும். அதில் அரசு அதிகாரிகள் தவறு செய்தாலும், உரிய தண்டனைகளை கடுமையாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்திலே என்னுடைய அருப்புக்கோட்டைத் தொகுதியையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ரீசர்ச் சென்டர் (Research Centre)



1992 ஏப்ரல் 21] [திருமதி. வி. ஜி. மணிமேகலை]

ஒன்று அமைத்துத்தர வேண்டும். என்னுடைய தொகுதியான அருப்புக்கோட்டைத் தொகுதியிலே, திருச்சுழி ஒன்றியத்திலே, பொம்மக்கோட்டையில் சிறப்பாக— சாத்தூர் தொகுதியிலே உள்ள கோவிலான்குளத்திலுள்ள ரிசர்ச் சென்டரிலே இருந்து வந்து சிறப்பாகப் பயிற்சி அளித்து இன்றையதினம் அது மாபெரும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. அதைட்டோல என்னுடைய நரிக்குடி ஒன்றியத்தில் 'ஆக்ரோ' பேஸ்டு இன்டஸ்ட்ரீஸ்' என்ற ஒரு இண்டஸ்ட்ரீயை நிறுவுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். திருச்சுழியிலே சூரியகாந்தி அதிகமாக விளைவதால், சூரிய காந்தி சம்பந்தப்பட்ட ஆக்ரோ பேஸ்டு இண்டஸ்ட்ரீஸை நிறுவுவதற்கு உதவிட வேண்டுமென்று மிகவும் பணிவன்போடுக் கேட்டுக் கொண்டு, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில், அரசு உயர்ந்திருக்கிறது. ஆகையினால் நீர் உயர்ந்து, நெல் உயர்ந்து, வரப்பு உயர்ந்து, நாடு உயரும் என்பதில் ஐயம் இல்லை என்பதைக் கூறி எனக்கு இந்த வாய்ப்பை அளித்த சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை காணிக்கையாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. பி. மணிவாசகம்.

**திரு. கே. பி. மணிவாசகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தைச சேர்ந்த என்னை சட்டமன்ற உறுப்பினராக்கிய எங்களின் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து, வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கும் நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

பிற்பகல் 12-50

பெற்றபிள்ளை சோறிடாவிட்டாலும் வைத்த பிள்ளை
காப்பாற்றும்'' என்பார்களே,

அந்த வகையிலே கோவை மாவட்ட அனைத்துச் சட்ட மன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று, தென்னைக்கு உயிர்த்தண்ணீர் விட்ட எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை நெஞ்சாரப் பாராட்டி, நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. பி. மணிவாசகம்] [1992 ஏப்ரல் 21

''கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி
விவசாயி''

என்ற வகையில் விவசாயிகளுக்காகப் பாடுபட்டு வரும் இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறேன்.

உடுமலைத் தொகுதி மக்களின் சார்பாக சில கோரிக்கைகளை இந்த அரசு முன் வைக்கிறேன்.

உடுமலைத் தொகுதியில் வரலாறு காணாத வகையில் வறட்சி நிலவுகிறது. உடுமலைப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுகிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ருத்திராபாளையம் நவால் ஓடை திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 1,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். ஆனால், வன இலாக்கா அனுமதி தராததால் இத்திட்டம் நிறைவேறவில்லை. எனவே, இத்திட்டத்தினை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உடுமலை தேவனூர் புதூருக்கு அருகில் நவக்கரை பள்ளத்தில் கசிவுநீர்க் குட்டை கட்ட ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் திட்டம் தீட்டப்பட்டது. ஆனால் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் வேண்டுமென்றே கிடப்பில் போடப் பட்டது. இத்திட்டம் நிறைவேறினால் சுமார் 1,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். எனவே இத்திட்டத்தினை நிறை வேற்றித்தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உடுமலை கல்லாபுரம் பகுதியில் ஆதி திராவிட மக்கள் அதிகம் வாழ்கிறார்கள். இங்கே முக்கிய தொழில் விவசாயம். இங்கே மக்கள் நலம் கருதி அரசு பால் பண்ணை அமைத்துத் தருமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைய சாலைகளை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். இலவச வேட்டி, சேலை திட்டம் போன்ற புரட்சித்தலைவி அரசு, சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவ சாயத் தொழிலாளர் ஆகியோருக்கு இலவச விவசாயக் கருவிகள் வழங்குமாறு கேட்டுக்கொளகிறேன்.

சமீபத்தில் திருப்பதியில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் வேளாண்மையை ஒரு தொழிலாக அறிவிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நல்ல திட்டம். பரிசீலனை செய்ய வேண்டுகிறேன்.



1992 ஏப்ரல் 21] [திரு. கே. பி. மணிவாசகம்]

குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க அமராவதி அணையில் உள்ள வண்டல் மண்ணை எடுத்து நீர் கொள்ளளவை அதிகப்படுத்த வேண்டுகிறேன்.

உடுமலைப் பகுதியில் தோட்டக்கலை மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் வளர்க்க நல்ல தட்ப வெப்பம் சரியாக உள்ளது. எனவே, விவசாயிகளுக்கு இடுபொருள் வசதி, வங்கிக் கடன் வசதி, தொழில்நுட்ப ஆலோசனை தோட்டப் பயிர்கள் மானிய விலையில வழங்கி உதவிட வேண்டுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்:

''வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர, கோன் உயரும்
கோன் உயரக்குடி உயரும்''

என்பார்களே, அதைப்போல

''மரம் வைத்தால் நல்ல மழை பெறலாம்
மழை பெற்றால் மக்கள் வளம் பெறலாம்
மக்கள் வளம் பெற்றால் நாடு நலம் பெறலாம்''

என்று நாம் நம்பலாம் எனக் கருதுகிறேன்.

தி. மு. க. ஆட்சி விவசாயிகளைப் பொறுத்த அளவில் ஒரு இருண்ட ஆட்சி என்றே சொல்லலாம்.

காடு உழும் உழவனுக்கு கணக்கர் மூலம் லெவிபோட்டு
கேடு செய்யும் ஆளைவைத்து கேட்டமைத்து ரோடடில் நின்றாய்
வாடிமனம் நொந்துழவன் வாங்குவட்டிக் கடன்தீர்க்க
வீடுகொண்டுபோக நெல்லைவிட்டாயா தி.மு.க. வே!

மாடுகட்டி ஏர் உழுது மனைவிமக்கள் நாத்துநட்டு
வாடுபயிர் நீர்ப்பாய்ச்சி வளர்களை கொன்று உரமிட்டு
பாடுபட்டு பெற்றநெல்லை பாதிவிலைக்களந்தாயே
தமிழ் நாடுனக்கு ஓட்டளிக்க நாணாதா தி. மு. க, வே!

உத்தரவுவாங்கித்தான் உழவன்வயல் அறுத்திடனும்
எத்திசையும ஒவ்வாத இச்சட்டம்தலை விதித்து
அத்துமீறி களத்தில எமமை ஆட்டிவைத்து நெல் அளந்தாய்
எழுபத்து ஏழில தண்டித்தோம் ஆசைவேண்டாம் தி.மு.க.வே.

தமிழக வரலாற்றிலே புரட்சித் தலைவியின் ஆட்சி பொற்கால ஆட்சி எனலாம்.

எத்தனையோ சோதனைகள் என்றாலும் என்தலைவி
அத்தனைக்கும் நடுவே நல்லாட்சி நடத்துகின்றார்
உள்ளாட்சி தோறும் ஒரு கோடி என்றுரைத்த
ஒப்பற்ற முதல்வரை உவப்புடனே வணங்குகின்றேன்.
குடிநீர் வழங்கலுக்கே கொடுத்திட்டார் முன்னுரிமை
அடிப்படைத் தேவையிது அதனாலே பாராட்டு
சாலை வசதிக்கும் சற்றும் குறைவில்லை
வேலை வாய்ப்புக்கு வித்திட்ட திட்டங்கள்
எரியாத மின்விளக்கு எரிந்திடும் இனிமேலே
சரியாக நிறைவேற்றி சாதனைகள் புரிந்திடுவாம்
பள்ளத்தி லுள்ளோரை படிப்படியாய் மேலேற்றும்
பாங்கான புரட்சித் தலைவியின் புனித அரசைப்
பாராட்டி முடிக்கின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையின் மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக சில கருத்துக்களை இங்கே நான் கூற விழைகிறேன்.

இன்று நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் -

''கார் நடக்கும் படி நடக்கும் காராளர் தம்முடைய
ஏர் நடக்குமெனில் இயல் இசை நாடகம் நடக்கும்
சீர் நடக்கும் திறல் நடக்கும் திருவறத்தின் செயல நடக்கும்
பார் நடக்கும் எங்கும் பசி நடக்க மாட்டாது''

என்ற உறுதியினை இங்கே கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இங்கே வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையில் 28 கோடி ரூபாய் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து பசுமைப் புரட்சி செய்ய அவர்கள் முன் வந்திருக்கிறார்கள். இதே கருத்தை காங்கிரஸ் பேரியக்கமானது திருப்பதி மாநாட்டிலே வேளாண்மையை ஒரு தொழிலாகக் கருதி, தொழிலுக்கு எந்த அளவுக்கு சலுகைகள் வழங்கப்படுகிறதோ அந்தச் சலுகைகள் எல்லாம் வேளாண்மைக்கும் வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தையும் வலியுறுத்தியிருக்கிறது.



ஆகவே மத்திய அரசு கூடிய விரைவில் வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த அடிப்படையில் வேளாண்மைத் துறையில் பல புதுமைகளைப் புகுத்தி சென்ற வருடம் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். தரிசாகக் கிடக்கிற நிலங்களை எல்லாம் சாகுபடி நிலங்களாக மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வாறு கொண்டு வந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் எண்ணெய் வித்து உற்பத்தியில் செம்பனைச் சாகுபடித் திட்டத்தை இந்த வருடம் கொண்டு வந்து எண்ணெய் வித்துத் துறையில் ஒரு புதிய திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 13-55

அதேபோல் உணவு தானியங்கள் உற்பத்தியில் சிறப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குப் பல சலுகைகள் வழங்கப் படுகின்றன. அந்தச் சலுகைகளின் கீழ் கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க கடன் வசதி செய்து தந்திருக்கி றார்கள். ஆனால் கடன்களை வழங்குவதில் சில சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தால் விவசாயிகளுக்கு அந்தச் சலுகைகள் கிடைக்க வாய்பில்லாமல் போய்விடுகிறது. இந்த நடைமுறைச் சிக்கல்களை எல்லாம் தீர்க்க வேண்டும். குறிப்பாக கிணறுகளுக்கிடையே 500 அடி இடைவெளி இருக்க வேண்டும் என்ற கொள்கைகள் எல்லாம இங்கே நடைமுறைப்படுத்தப்படுகிறது. அந்த நடைமுறைகளைத் தளர்த்தி விவசாயிகளுக்கு சலுகைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று வேளாண்மைத் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு விதை, பூச்சிமருந்து மற்றும் விவசாயக் கருவிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் கால நிலை மாறுபட்டு மழை வருவதில் காலதாமதம் ஏற்படுகிற போது இந்த விவசாயக் கருவிகள், விதைகள், விவசாயிகளுக்குச் சரியாகக் கிடைப்பதில்லை, ஆகவே காலம் அறிந்து அவை விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்தால் நாம் போடுகிற திட்டங்கள் நிச்சயமாக வெற்றி பெறும். அதன் மூலமாக வேளாண்மைத் துறை சிறப்பாகச் செயல் படுவதற்கு வாய்ப்பாக அமையும் என்ற எனது கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போன்று இன்று வேளாண்மைத் துறை மூலமாக பண்ணைகள் அமைத்து அதிலே விளையும் தானியங்களை அரசு கொள்முதல் செய்யும்போது அரசால் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. அப்படி ஊக்கத்தொகை வழங்கும் போது நெல்லுக்கு கிலோ ஒன்றுக்கு ரூபாய் ஒன்று

கொடுக்கப்படுகிறது. ஆனால் அதை இரண்டாக உயர்த்திக்
கொடுத்தால் விதைப் பண்ணை அமைத்து விவசாயம் செய்கிற
உழவர்கள் ஊக்கமாக இருந்து முறையாக விவசாயம் செய்து
சுத்தமான, நல்ல விதையாகத் திருப்பிக் கொடுக்க வாய்ப்
பாக அமையும்.

அதேபோன்று தோட்டக் கலைத் துறையின் மூலமாக நகர
காய் கறித் திட்டம் ஒன்று கடந்த 25 ஆண்டுகளுக்கு
மேலாகச் செயல்பட்டு வந்தது. ஆனால் அது 1989 ஆம்
ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுவிட்டது. இந்த நகர காய்-
கறித் திட்டத்தின் மூலமாக நகரங்களில் வசிக்கிற மக்களுக்கு
குறைவான விலையில் காய்கறி விதை போன்றவை எளிதாகக்
கிடைத்து வந்தது. ஆனால் இந்தத் திட்டம் நிறுத்தப்
பட்டுவிட்ட காரணத்தால் கிராமங்களிலே பயிர் செய்து,
அங்கேயிருந்து இங்கே கொண்டு வந்து அதனால் செலவுகள்
கூடி விலைவாசியும் கூடிக்கொண்டிருக்கிறது. ஆகவே அதை
மீண்டும் பரிசீலனை செய்து மாவட்ட தலைநகரங்கள்
அளவிலாவது அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.
அவ்வாறு நகர காய்கறி உற்பத்தித் திட்டத்தைச் செயல்
படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை
நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டி
ருக்கிறேன.

தோட்டக்கலைத் துறையின் சார்பாக பழத் தோட்டப்
பண்ணைகள் அமைத்து, பழங்கள் மற்றும் வாசனை மரங்கள்
பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால் எங்கள் மேலூர் பகுதியில்
பெரியார் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ்
செயல்பட்டு வருகிறோம். சில நேரங்களில் நாங்கள்
தண்ணீர் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறபோது பெரியாரில்
எங்கள் பகுதியில் இருக்கிற
மிகவும் கஷ்டமான சூழ்நிலைக்குத் ஒரு போக விவசாயிகள்
அப்படிப்பட்ட நேரங்களில் எங்கள் தள்ளப்படுகிறார்கள்.
மற்றும் வெள்ளிமலை போன்ற பகுதியில் அழகர்மலை
ஒரு பழத் தோட்டப் பண்ணை அமைத்து பகுதிகளில் புதிதாக
திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். அங்கே அந்தக்
சில விவசாயிகள் இந்தக் கோடை இப்போது கூட
கொய்யா மரம் போன்றவைகளைப் காலங்களில், மாமரம்,
ருக்கிறார்கள். அவர்களுக்கு எளிதாக பயிரிட்டுக்கொண்டி
பண்ணை அமைத்தால் அவர்கள் இந்த பழத்தோட்டப்
கொஞ்சம் ஈடுபாடு கொண்டு இந்த விவசாயத்திலும்
னுரிமை கொடுக்க ஒரு பழத் தோட்டங்களுக்கு முன்
வாய்ப்பாக அமையும்.



அதேபோல் மேலூர் பகுதியில் பெரியார் நீர்ப்பாசனத்
திட்டத்தின் கீழ் இருக்கின்ற பகுதிகள் ஒரு போக சாகுபடி
திட்டத்தின் கீழ் இருக்கின்றன. ஆனால் 182 அடியாக
உயர்த்தினால் எங்கள் பகுதிக்குத் தண்ணீர் நிச்சயமாக
வந்து சேர முடியும். எக்ஸ்டென்சன் என்று உலக வங்கி
உதவியுடன் மேலூரிலிருந்து கொட்டாம்பட்டி வரையில் சில
கால்வாய்க்கள் நீட்டிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவ்
வாறு நீட்டிக்கப்பட்டு இப்போது 7, 8 வருடங்கள் ஆகி
விட்டன. 182 அடியாக உயர்த்தாத காரணத்தால்
எங்களுக்குச் சரியாகத் தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே,
அதற்காக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும்,
பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் சேர்ந்து
இந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக நில
மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புல்டோசர், டிராக்டர்
போன்றவை வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.
இதில் சில நேரங்களில் அரசு வேலைகளுக்கு முன்னுரிமை
கொடுக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்க
வேண்டும் என்று கூறுவதற்குக் காரணம், அவர்கள் கோடை
காலங்களில் தங்களுடைய நிலத்தை மேம்படுத்த வாய்ப்பாக
அமையும் என்பதுதான். மழைக் காலங்களில் தண்ணீர்
தேங்கி இருக்கின்ற காரணத்தால் நில மேம்பாட்டுத் திட்
டத்தை அவர்கள் செயல்படுத்த முடியாத நிலைமை ஏற்படு
கிறது. ஆகவே கோடைக்காலங்களில் விவசாயிகளுக்கு
முன்னுரிமை கொடுத்து நிலமேம்பாட்டுத் திட்டத்திற்கு
வேண்டிய இந்த வாடகைக்குக் கொடுக்கப்படுகின்ற கருவிகளை
கோடைக்காலங்களிலே கொடுப்பதற்கு முன்னுரிமைக்
கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

அடுத்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், வேளாண்மைத்
துறையின் சார்பாக நடத்தப்படுகின்ற ஒழுங்குமுறை விற்
பனைக் கூடங்களில் விலை நிர்ணயம் செய்வது விவசாயி
களுக்கு சரியாக தெரிய வருவதில்லை. காரணம் உதாரண
மாக இப்போது செய்தித்தாளிலே தினந்தோறும் குவிண்டால்
என்ற அளவில் அவர்கள் அந்த விலையை நிர்ணயம் செய்
வதை வெளியிடுவதால் கிராமப் புறங்களில் உள்ள விவசாயி
கள் அதை சரிவர தெரிந்துகொள்ள வாய்ப்பாக அமைய
வில்லை. இன்னும் சில நேரங்களிலே ஒழுங்குமுறைவிற்
பனைக் கூடத்தின் அ[illegible]ரிகளும் அந்த ஊரிலே இருக்கின்ற

மொத்த வியாபாரிகளும் சேர்ந்துகொண்டுகூட அங்கேயுள்ள போர்டுகளை சரியாக எழுதி வைக்காத சூழ்நிலை இருக்கிறது. அதை மனதிலே கொண்டு அதே நேரத்திலே அன்றாடம் விலை நிர்ணயம் செய்வதை தொலைக்காட்சிப் பெட்டியின்மூலம் தெரி வித்தால் ஆங்காங்குள்ள ஏழையெளிய விவசாய மக்கள் அதை கண்டு கேட்டு அவர்கள் அந்த விவசாய இடுபொருட்க களுக்கு கொடுக்கக்கூடிய விலையினால் அவர்கள் நிச்சயமாக பயன் பெறுவார்கள் என்பதை சொல்லி இந்த நேரத்திலே நான் அதை உறுதிப்படுத்தக்கடமைப்பட்டிருக்கிறேன். அதை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தைப் பரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று விவசாயிகளுக்கு எங்கள் பகுதியிலேஇப்போது பெரியார் அணை 152 அடியாக உயர்த் தாதனால் சென்ற வருடம் எங்களுக்குக் கிடைக்கவேண்டிய தண்ணீர் முறையாகக் கிடைக்கவில்லை.

அதே நேரத்திலே கேரளா அரசு வேறு இப்போது விவசாயிகளுக்குப் பீதி உண்டாக்கும் வகையில் தன்னுடைய அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. இதை கூடிய விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்களும் வேளாண்மை துறை அமைச்சர் அவர்களும் கேரள அரசுடன் தொடர்பு கொண்டு, அதை உடனடியாக 152 அடி ஆக உயர்த்துவ தற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது இங்கே பணிபுரிகின்ற, வேளாண்மைத் துறையிலே பணிபுரிகின்ற அடிப்படை தொழில் நுட்ப பணியாளர்களாகவும் விவசாயிகளுக்கும் அரசின் திட்டங் களுக்கும் பாலமாக செயல்பட்டு வருகின்ற பயிர் விளக்க அலுவலர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு கிடைக்கக்கூடிய அளவுக்கு சலுகைகள் சரியாக கிடைக்க வில்லை. இதே துறையில் வேலை செய்கின்ற மற்ற அனைத்து ஊழியர்களுக்கும் மத்திய அரசுக்கு இணையான சலுகைகள் கிடைத்து வருகிறது. இதை வேளாண்மை அமைச்சர் அவர்களும் மறுபரிசீலனை செய்து, உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு இணையாக, அவர்களை உயர்நிலைப் படுத்தி அவர்களுக்கும் மத்திய அரசுக்கு இணையான ஊதியம், சலுகைகள் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து கால்நடை துறையின் சார்பாக சில கருத்துக் களை நான் கூற விரும்புகிறேன். புதிதாக பால் பண்ணை அமைப்பதிலே சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின் றன. புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கின்ற பால் பண்ணைகளுக்கு பழைய சங்கங்களிலிருந்து அவர்கள் N. O. C. வாங்கிக்கொண்டு வந்தால்தான் நாங்கள் புதிய பால் பண்ணை ஆரம்பிக்கமுடியும் என்ற கருத்தைக் கூறி வருகிறார்கள். ஆனால் பழைய சங்கத்திலே உள்ளவர் கள் இந்த சங்கம் பிரிந்துசென்றால் அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்குமே என்று கருதி அவர்கள் என்.ஓ.சி. கொடுப்பதிலே தாமதப்படுத்துகிறார்கள். ஆகவே அந்த நிலையை மாற்றி புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற பால் பண்ணை சங்கங்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்றும் அதன் மூலமாக பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றும் மாண்புமிகு கால்நடை துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. தவசி.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டப் பேரவையிலே விவசாயத் துறையில் எனக்கு பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும் நான் வணங்குகின்ற தெய்வமாகிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"சுழன்றும் ஏர் பின்னது உலகம்" என்பது ஆன்றோர் வாக்கு. உயிர்கள் அனைத்துக்கும் உணவு அளிக்கும் உழவு தொழில் செம்மையாக நடந்தால்தான் நாடு உயரும். இந்த அரசு விவசாயிகளின் அரசு என்பதை நிருபிக்கின்ற வகையில் பல்வேறு திட்டங்களில் கோடிக் கணக்கான ரூபாய் மதிப்பீட்டிற்கு சலுகைகள் விவசாயி களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதை நான் மனநிறைவோடு வரவேற் கிறேன்.

ஒருங்கிணைந்த அரிசி மேம்பாட்டு திட்டம் ஏற்கனவே 14 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு முதல் மேலும் ஆறு மாவட்டங்களில் இத் திட்டத்தினை செயல்படுத்த அனுமதி வழங்கியதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். இத்திட்டத்தின் மூலம் விதைகள், உரம், பூச்சி மருந்து, களைகொல்லிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு கொடுப்பதால் தமிழகத் தில் அரிசி உற்பத்தியினை கணிசமான அளவுக்கு உயர்த்த ஏதுவாகும் என்பதை நான் மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே. தவசி] [1992 ஏப்ரல் 21

அடுத்தபடியாக உணவு தானியங்கள் உற்பத்தி சிறப்பு திட்டத்தின்கீழ் ஆழமற்ற குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகள் அமைக்க சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானியத்துடன் கடன் வழங்கும் திட்டம் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமேயாகும்.

மேலும் பயறு வகை உற்பத்தித் திட்டத்தைப் பொறுத்தவரை தமிழகத்தில் தேவைக்கு ஏற்ப உற்பத்தி இல்லை. இதை கருத்தில் கொண்டு உற்பத்தியைப் பெருக்குவதற்காக விதை, உரம், பூச்சி மருந்துகள் மான்ய விலையில் வழங்க திட்டம் தீட்டி செயலபடுத்துவதை மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

பிற்பகல் 1-05

அடுத்தபடியாக, எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின அரசு விவசாயிகளுக்கு பல கோடி ரூபாய் அளவுக்கு மானியம் வழங்கி உற்பத்தியைப் பெருக்க பல திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன். எண்ணெய் வித்துக்களில் முக்கியமானது நிலக்கடலை ஆகும். விவசாயிகளிடமிருந்து விதை நிலக்கடலை கொள்முதல் செய்யும்போது, விவசாயிகளின் நன்மைக்காக சான்று அளிக்கப்பட்ட விதையை கொள்முதல் செய்தால் கிலோவுக்கு ரூ. 2 மானியமாகவும் பெயர் சீட்டு ஒட்டப்பட்ட விதை கொள்முதல் செய்தால் 50 பைசா ஒரு கிலோவுக்கு மானியமாகவும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில் நமது அரசு அமைந்ததற்கு பிறகு இத்தகைய சலுகைகள் விவசாயிகளுக்கு நல்லமுறையில் போய் சேர்ந்து கொண்டிருக்கிறது. நமது அரசு அமைவதற்கு முன்பு இத்தகைய சலுகைகள் விவசாயிகளுக்கு போய் சேர்வதில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளே அரசு வழங்கிய மானியங்களை தங்கள் சொந்த நலனுக்காக பயன்படுத்தி உள்ளனர். நமது ஆட்சி அமைந்த பின்னர், இத்தகைய ஊழல் அதிகாரிகளின் நடவடிக்கைகள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தொடர் நடவடிக்கையின் காரணமாக முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். அரசுக்கு அவப்பெயர் உருவாக்கும் நோக்கோடு செயல்பட்ட பல அதிகாரிகள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கை காரணமாக தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் யார் யார் என்பதனை இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரேயானால், இது மற்ற ஊழல் அதிகாரிகளுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல், 21] [திரு. கே. தவசி]

அடுத்தபடியாக,. தரிசு நில சாகுபடி திட்டம் விவசாயி
களுக்கு கிடைத்திட்ட ஒரு வரப்பிரசாதமாகும். 1991-
91 ஆம் ஆண்டில் பல இடங்களில் இத்திட்டம் நன்கு
செயல்படுத்தப்பட்டுள்ளது. சில இடங்களில் ஊழல்
அதிகாரிகள் நடவடிக்கை காரணமாக அரசு விவசாயி
களுக்கு வழங்கிய ஊக்கத்தொகை தவறான வழியில்
பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1,500
ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகையினை
வழங்கியதாக போலியாக தஸ்தாவேஜ்கள் தயாரிக்கப
பட்டு அரசு வழங்கிய மானியம் சில அதிகாரிகளால்
கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மாண்பு
மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின்
நேரிடை கவனத்திற்கு விவரங்கள் கொண்டு செல்லப்பட்டு,
அதன் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
நடவடிக்கை எடுத்து இருப்பதை வரவேற்கிறேன்.

வேளாண்மைத் துறைக்கு அடுத்தபடியாக மிகப்
பெரிய துறை தோட்டக் கலை துறையாகும். இத்துறை
யின் வளர்ச்சிக்காகவும், அரசின் திட்டங்கள் ஊழல்
இல்லாமல் செயல்படுத்தவும் என்னுடைய கன்னிப்
பேச்சில் அரசுக்கு இந்தத் துறைக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரியை
நியமிக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். நான் விடுத்த
வேண்டுகோளுக்கிணங்க ஐ.ஏ.எஸ். அதிகாரியை தோட்டக்
கலை இயக்குநராக நியமனம் செய்த எங்களின் காவல்
தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும்
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும்
என் நன்றியினை காணிக்கையாக்குகின்றேன்.

1979-ல் தோட்டக் கலை துறை தனித் துறையாக
அறிவிக்கப்பட்டது. தனித் துறையாக அறிவிக்கப்பட்டவுடன்
பி, எஸ்ஸி, (பாட்டனி) படித்து தேர்வாணைக்
குழு மூலம் தோட்டக் கலை (ஆராய்ச்சி) பிரிவுக்கு
வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்
பட்டவர்கள் துறையின் முக்கிய பதவிகளான ஏ.டி.எச்.,
ஜெ.டி.எச். மற்றும் இயக்குநர் பதவிகளை தாங்களே
அபகரித்துக்கொண்டு, அதுவரை தோட்டக்கலை துறை
யின் வளர்ச்சிக்காக பாடுபட்ட வேளாண் பட்டதாரிகளை
மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்த ஆரம்பித்
தனர். ஒரு திட்டம் வெற்றிபெற விரிவாக்க கல்வி
பயின்ற வேளாண் பட்டதாரிகளால்தான் இயலும்.
தொழில் நுட்பம் தெரிந்தவர்களை ஊக்குவிக்காமல்
பி.எஸ்ஸி., (பாட்டனி) படித்தவர்களை பெரிய பதவி

களில் நியமனம் செய்த காரணத்தால் துறையின் முன்
னேற்றம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.
தோட்டக் கலை துறையில் பணிபுரியும் ஆகவே,
தாரிகளின் நியாயமான கோரிக்கையான வேளாண் பட்ட
உயர்வு உடனே வழங்க வேண்டுமென்று ஏ.டி.எச். பதவி
கிறேன். இவர்களின் கோரிக்கையின் நியாயத்தை கேட்டுக்கொள்
ட்ரிபூனல் மற்றும் உச்ச நீதிமன்றம் ஏற்று தமிழ்நாடு
வழங்கியுள்ளது. ஆகவே, ஜட்ஜ்மெண்ட்
முன்னுரிமை கொடுத்து ஆட்சி நீதி, நேர்மைக்கு
தெய்வம் புரட்சித் தலைவி புரிந்துவரும் நமது இதய
தாரிகளின் கோரிக்கையினை அவர்கள் வேளாண் பட்ட
வாணைக் குழு நிர்ணயித்துள்ள ஏற்று, தமிழ்நாடு தேர்
பாடையில் ஏ.டி.எச். பதவி சீனியாரிட்டியின் அடிப்
தயாரித்து உயர்வு வழங்க உயர்வுக்கு "பேனல்"
தொட்டு கேட்டுக்கொள்கிறேன். தங்களின் பொற்பாதங்களைத்

பிற்பகல் 1-10

மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு
வளர்ச்சிக்காக இயக்குநராக ஐ.ஏ.எஸ். இத்துறையின்,
இந்த அரசு நியமனம் செய்தது. அதிகாரி ஒருவரை
கொச்சைப்படுத்தும் வகையில் முன்னாள் இந்த நடவடிக்கையைக்
தினப்புரட்சி, தினகரன் ஆகிய நாளேடுகளில் இயக்குநர்
அவதூறுகளை வெளியிட்டு புனிதமான இந்த அரசின் மீதும், தன்னுடைய
ஐந்து கோடி தமிழ் மக்களின் நெஞ்சங்களில் அரியாசனம்
இட்டு வீற்றிருக்கும் தங்கத் தலைவி புரட்சித் தலைவி
மீதும் சேற்றை வாரி இறைத்து இருக்கின்றார். இந்த
டைரக்டர் எப்படிப்பட்டவர் என்பதை இந்த மாமன்றத்
தில் எடுத்துரைப்பது எனது கடமையாகும். இவர் 1989
அக்டோபர் முதல் 1992 ஆம் ஆண்டுவரை தோட்டக்
கலை இயக்குநராகப் பணி புரிந்த காலத்தில் இவர்
புரிந்த ஊழல்கள் கணக்கில் அடங்காது. உதாரணமாக
மலைவாழ் மக்களுக்கென, அவர்களின் வாழ்க்கை வளம்
பெற பழச் செடிகள், உரம், பூச்சி மருந்துகள் ஆகியவை
இலவசமாக வழங்கப்படுகின்றது. முந்தைய ஆட்சியில்,
இத்திட்டத்தின் பலன் ஒரு நபருக்குக்கூடப் போய்ச் சேர
வில்லை. வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில்
மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் அதிகாரி
களாகப் பணி புரிந்தவர்கள் நல்லமுறையில் பணி
புரியாமல், அந்தத் திட்டத்தை நிறைவேற்றியதாகப் பொய்
யான தஸ்தாவேஜுகளைத் தயார் செய்து, ரூபாய் எட்டு





இலட்சத்தை ஊழல் செய்தனர். இது சம்பந்தமாக 1988-ல் இந்த மூவர்மீது போலீஸ் நடவடிக்கை எடுக்க அப்போது இருந்த இயக்குநர் உத்தரவிட்டார். அதன் பின்னர் இயக்குநராக, வந்த இவர் நடவடிக்கையைத் தொடராமல், இன்டர்னல் ஆடிட் போட்டு எட்டு இலட்சத்தை வசூல் செய்யாமல் வெறும் ஆயிரம் ரூபாய் கட்டினால் போதுமென வழி வகை செய்து, அதன்மூலம் இவர் குற்றவாளிகளிடம், இலட்சக் கணக்கில் லஞ்சமாகப் பணம் வாங்கி உள்ளார். இதேபோல் 1990-91 ஆம் ஆண்டில் மா ஒட்டுச் செடி டெண்டரில் குறைந்த விலையான ரூ. 9.50-க்கு குறிப்பிட்ட சந்தூரைச் சேர்ந்த ரங்கநாதன் என்பவருக்கு, செடிகள் சப்ளை செய்ய உத்தரவு வழங்காமல், செடிக்கு ரூ. 11 என்று குறிப்பிட்ட திருப்பத்தூர் வியாபாரிகளுக்கு அவர்களிடம் பணத்தை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டு, உத்தரவு வழங்கியுள்ளார்.

இதேபோல் 1990-91 ஆம் ஆண்டில் 50,000 சாத்துக்குடி செடிகள் வாங்கியதிலும் ஊழல் செய்துள்ளார். வெளி மாநிலங்களில் இருந்து, குறிப்பாக ஆந்திராவில் இருந்து பழச் செடிகள் வாங்கக்கூடாது என அரசு ஆணை உள்ளது. ஆனால் அந்த டைரக்டர் ஆந்திராவில் இருந்து 50,000 சாத்துக்குடி செடிகள் கமிஷன் வாங்கிக் கொண்டு தருவித்து, அந்தச் செடிகள் திருத்தணியில் பாருக் என்பவரிடமிருந்து பெற்றதாசப் போலியான ரிக்கார்டு தயார் செய்து அரசை ஏமாற்றியுள்ளார். இவர் இயக்குநராக இருந்த காலத்தில் தனக்கு விஸ்வாசமாக இருப்பவர்களை முக்கிய பதவிகளில் அமர்த்தி, அதன்மூலம் லஞ்சமாகப் பல இலட்சங்களைப் பெற்றிருக்கிறார்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் பதவிப் பொறுப்பேற்றவுடன் காஞ்சீபுரம் உதவி தோட்டக் கலை இயக்குநர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு செய்தபோது, உதவித் தோட்டக் கலை இயக்குநர் பொறுப்பில் இருந்த அதிகாரி மாங்கொட்டை கொள்முதல் செய்ததிலும், மண் தொட்டிகள் கொள்முதல் செய்ததிலும் ஊழல் செய்திருப்பதைக் கண்டுபிடித்து அவர்மீது நடவடிக்கை எடுத்தார்கள். அப்படிப்பட்ட ஊழல் அதிகாரியை இப்போது பக்கத்திலே பணி அமர்த்தம் செய்கிறார். இப்படி ஊழல் செய்தவர்கள்மீது அரசு இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. தவசி] [1992 ஏப்ரல், 21

மக்கள் நலனுக்காக அரசு செயல்படுத்தும் மானிய
சம்பந்தப்பட்ட திட்டங்களை அந்தந்த நிதியாண்டில்
முடித்துவிட வேண்டுமென்ற நியதியின் அடிப்படையில்
செயல்படாமல், அரசுக்குத் தவறான தகவல்கள்
கொடுத்த அதிகாரிகள்மீது பண்டமெண்டல் ரூல்ஸ் 17(சி)
பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு, அவர்கள் பணி
யினை டெர்மினேட் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு
தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி
அவர்கள் பாதம்தொட்டு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தோட்டக் கலைத் துறையின் மூல
மாக மாண்புமிகு முன்னாள் முதல்வர் நம்முடைய இதய
தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டிப்பட்டி
தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது 500
ஏக்கர் இடம் பழப் பண்ணை வைப்பதற்கு கையகப்
படுத்தி இருக்கிறார்கள். அதை இந்த ஆண்டு புரட்சித்
தலைவி அவர்கள் ஆட்சியில் நிறைவேற்றித் தர
வேண்டுமென்று கேட்டு, எனக்கு வாய்ப்பு அளித்த தலைவர்
அவர்களுக்கு என்னுடைய பணிவான நன்றியைத் தெரி
வித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆர். ராஜு.

திரு. கே. ஆர். ராஜு: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான நிதி
நிலை அறிக்கையில், விவசாயத் துறை மானியக் கோரிக்கை
மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்ற வாய்ப்
பளித்த இப்பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது
நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை எளிய கிராமப்புற மக்களுக்கு நிலையான,
நிறைவான நன்மைகளை ஒளிமயமான எதிர்காலத்தினை
உருவாக்கும் பொருட்டு, தமிழ்த்தாய், டாக்டர் புரட்சித்
தலைவி அவர்களின் இப்புனித அரசு அளித்துள்ள இந்த
பட்ஜெட் ஏழை எளியோர் நலன் காக்கும் நல்ல
பட்ஜெட்.

நீலகிரி விவசாயத்துறையைப் பொறுத்தமட்டில்
தோட்டக் கலைத் துறையின் தன்னலமையத்தை
சென்னைக்கு மாற்றி ஒரு ஐ.ஏ.எஸ். நிர்வாகியை நிய
மித்து தோட்டவளம் பெருகப் பாடுபடும் எங்கள் இதய



1992 ஏப்ரல் 21] [திரு. கே. ஆர். ராஜு]

தெய்வத்திற்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரி
வித்துக் கொள்கிறேன். நீலகிரி மாவட்ட தோட்டக்
கலைத் துறையின் வளர்ச்சிக்கு அரசு மிகச்சிறப்பான
பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கிட வேண்டும்.
நீலகிரி மாவட்டத்து மலைப் பயிர்களான கோதுமை,
ராகி, சாமை, முக்கியமாக உருளைக் கிழங்கு ஆகியவற்
றின் விளைச்சல் குறைந்துவிட்டது. இவ்வகைப் பயிர்
விவசாயம் பெருக அரசு புதிய கொள்கையுடன் விவசாயி
களுக்கு ஊக்கம் அளித்திடவேண்டும்.

பரந்து விரிந்துள்ள நீலகிரி மலைப்பரப்பின் தற்போதைய
முக்கிய விவசாயம் தேயிலை ஆகும். எமது
மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தேயிலை விவசாயத்தை
மட்டுமே நம்பியுள்ள பல்லாயிரக்கணக்கான சிறு மற்றும்
குறு விவசாயிகள் நலனைக் கருதி குறைந்த விலையில்
தேயிலை மற்றும் சில்வர் ஓக் மர நாற்றுக்கள், உரம்,
பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்குவது தீவிரப்படுத்தப்
பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபகாலமாக கடும் வறட்சியினால் புதிதாகப்
பயிரிடப்பட்ட தேயிலை நாற்றுக்கள் கருகிவிட்ட நிலையில்,
தேவையுள்ள ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக தேயிலை
நாற்றுக்கள் வழங்கி உதவிட வேண்டும் எனவும், நவம்பர்
மாதப் பனிக்குப் பிறகு கடந்த ஐந்து மாதங்களாக கடும்
வறட்சியினை சந்தித்த நீலகிரி மாவட்ட தேயிலைத்
தோட்டங்கள் காய்ந்து கருகிய நிலையில் உள்ளன.
வறட்சியினால் பாதிக்கப்பட்ட, ஏழை சிறு விவசாயி
களுக்கு அரசு சிறப்பு நிவாரண உதவி அளித்திடவேண்டும்.
தேயிலை ஏற்றுமதியை மேலும் அதிகரித்து விவசாயி
களுக்கு நிரந்தர விலை நிர்ணயம் செய்துதர மத்திய
அரசை வலியுறுத்தவும் வேண்டுகிறேன். நீலகிரியில் மண்
சரிவைத் தடுக்கவும் மண்வளப் பாதுகாப்புக்கு அதிக
அளவு நிதி ஒதுக்கீடு செய்து, திட்டத்தினை தீவிரப்
படுத்த வேண்டுகிறேன். தோட்டக்கலைத்துறை நடத்தும்
உதகை, குன்னூர் மலர்க் கண்காட்சிகளை மிகச்சிறப்பாக
நடத்திட ஆணையிட்ட எமது புரட்சித் தலைவி அரசுக்கு
நன்றி கூறுகிறேன்.

எமது மாவட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று,
உதகை மலர்க் கண்காட்சிக்கு வருகைதரும் தமிழக
மக்களின் தெய்வத்தாய், டாக்டர் புரட்சித் தலைவி
அவர்களை வருக, வருக என உள்ளன்போடு வரவேற்
கிறோம். உதகை தாவரவியல் பூங்காவிற்கு, நமது

புரட்சித் தலைவி அவர்களின் அன்னையின் திருப் பெயரைச் சூட்டிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவையான ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென விரும்பி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.**

**திரு. சோ. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்துறை, கால்நடைத்துறை, பால் வழங்கு துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதும், முக்கியமாக கால்நடை மானியக் கோரிக்கை மீதும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்ததற்கு நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயம், கால்நடை வளர்ச்சி, நெசவுத் தொழில் போன்ற தொழில்கள்தான் மிக முக்கியமான தொழில் களாகக் கருதப்படுகின்றன. அந்தத் துறைகள் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. கால் நடையே இல்லாத கிராமங்களே இல்லை என்ற அளவுக்கு எல்லா இடங்களிலும் கால்நடைகள் ஏராளமாக இருக் கின்றன. கால்நடைகளை மூன்று பிரிவுகளாக நாம் பிரிக்க லாம். கால்நடை வளர்ப்பது ஒருகாலத்தில் வேளாண்மைத் துறைக்கு உதவியாக நம்முடைய விவசாயிகள் உழவு செய்து பிழைப்பதற்கு கால்நடைகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதற்கு உழவு மாடுகள் உருவாக்கு வதற்கும், உரங்கள் தயாரிக்கவும் தமிழக மக்கள் குறிப்பாக விவசாயிகள் கால்நடை செல்வத்தை வளர்த் தார்கள். பல செல்வங்கள் இருந்தாலும் அவற்றில் முக்கியமான செல்வமாகக் கருதப்பட்டது கால்நடை செல்வமாகும். அப்படிப்பட்ட அந்தத் துறையில் இன்று ஏற்பட்டிருக்கிற விஞ்ஞான வளர்ச்சி காரணமாக, பல கிராமங்களில் டிராக்டர்களை வைத்து பயன்படுத்துகின்ற ஒரு சூழ்நிலையில் இப்போது உழவு மாடுகளுக்குப் பதிலாக டிராக்டர்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-20

இந்த நிலையில் இறைச்சிக்காகவும், பாலுக்காகவும், முட்டைக்காகவும் கால்நடைகளை முகியமாக பயன் படுத்துகிற சூழ்நிலையில் இருக்கிறோம். நம்முடைய



தமிழகத்தைப் பொறுத்த வரை 1934 ஆம் ஆண்டு கால் நடைகளுக்கென மருந்துவக் கல்லூரி ஏற்பட்டது. அதற்குப் பிறகு இப்போது நாமக்கல்லில் ஒரு கல்லூரி இயங்கி வருகிறது. இரண்டு கால்நடை கல்லூரிகள், தமிழகத்திலே இயங்கி வருகின்றன. ஆண்டுதோறும் 400 பட்டதாரிகள் வெளியே வருகிறார்கள். கடந்த 1989- 90 ஆம் ஆண்டு நம்முடைய தமிழகத்தில் கால்நடை களுக்கென்று தனி பல்கலைக் கழகமும் ஏற்பட்டிருக்கிறது. இது கால்நடைத் துறையில் புதிய வளர்ச்சியை தமிழகத் திலே ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சி யோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அந்த கால் நடைத் துறையினுடைய பல்கலைக் கழகத்தில் விரிவான ஆய்வுகள், பல திட்டங்கள் ஆகியவற்றுக்கு வழிவகை ஏற்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதே நேரத்தில் தமிழகத்திலே இருக்கின்ற கால்நடைகளுடைய நிலையைப் பார்க்க வேண்டும். 400 பட்டதாரிகள் ஆண்டுதோறும் வெளியே வருகிறார்கள். இரண்டு கால் நடை மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. ஏராளமான மருத்துவமனைகள் இருக்கின்றன. ஆனால் கால்நடை வைத்திருக்கக்கூடிய சாதாரண விவசாயிகளுக்கு, ஏழை யெளிய விவசாயிகளுக்கு இன்னும் அந்த நன்மைகள் போய்ச் சேரவில்லை என்பதை நான் இங்கே சொல்லித் தான் ஆக வேண்டும். பல இடங்களில் ஆடு, மாடு, கோழிகள் எல்லாம் திடீர் திடீரென்று இறந்து விடுகின்றன. அதற்கு மருத்துவர்களை அணுகி உதவியைப் பெறுகின்ற சூழ்நிலை இன்னும் பல இடங்களில் ஏற்படவில்லை. படித்தவர்கள் வேண்டுமானால் கால்நடை அதிகாரிகளை, டாக்டர்களை அணுகி பயன்பெறுவார்கள். படிக்காத கிராம மக்கள் இன்னும் பழமையிலேயே இருக்கிறார்கள் என்ற உணர்வை நாம் மாற்றியாக வேண்டும்.

இப்போது நம்முடைய வானொலியிலும், தொலைக் காட்சியிலும் நல்ல, அரிய செய்திகளை, கால்நடைத் துறைக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாள் தோறும் ஏராளமான நல்ல செய்திகளை வானொலி மூலமாகவும், தொலைக்காட்சியின் மூலமாகவும் பரப்பிக் கொண்டிருக்கிற காட்சியை நாம் பார்த்துக் கொண்டிருக் கிறோம். ஆனால் அது பல கிராமங்களுக்கு எட்டவில்லை என்று கருதுகிறேன். உதாரணமாக, தொலைக்காட்சி யில் ஒரு விவாதம் நடந்ததை பார்த்திருந்தேன். அந்த விவாதம் என்னவென்று சொன்னால் புதிதாக விஞ்ஞான முறைப்படி விந்து தயார் செய்து அதை மாடுகளுக்கு, ஊசியின் மூலம் செலுத்தி சினை பிடிக்கும் முறை அதைப்

பற்றி விளக்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது கேள்வியைக் கேட்கிற தொலைக்காட்சியினுடைய அதிகாரி அந்த டாக்டரைப் பார்த்து, ''இது இயற்கைக்கு விரோதமான செயல் அல்லவா? ஆண்-பெண் கூடி, கருத்தரிக்கும் நிலையில் இப்படி இயற்கைக்கு விரோதமான செயல் செய்யலாமா என்று கேள்வியைக் கேட்டார். அதற்குக் கால்நடை அதிகாரி மிக அழகாக, விளக்கமாக பதில் சொன்னார்கள். மற்ற எந்த இனத்திற்கும் இல்லாத ஒரு சூழ்நிலை கால்நடைகளுக்கு இருக்கிறது; ஆண்டுக்கு ஒரு தடவைதான் அதற்கு சினை பிடிக்கும் உணர்வு வரும். அதன் பிறகு ஆண்-பெண் மாடுகளும் ஒன்றாக இணைந்தாலும் அந்த உணர்வு அதற்கு வராது என்பதை நாம் உணர வேண்டும் என்று சொன்னார்கள். அந்த முறையில் இது ஒரு பாவ காரியம் அல்ல; புனித காரியம்தான் என்பதை மிக விளக்கமாக, தெளிவாக எடுத்துச் சொன்ன காட்சியைப் பார்த்தேன். இதெல்லாம் கிராமங்களுக்குப் போய்ச் சேர வேண்டும்.

கால்நடைகளை வைத்து வளர்ப்பவர்களுக்கு இந்த விஞ்ஞான கருத்துக்கள் சேருகின்ற வகையில் இதை மிகத் தீவிரமாக விளக்கமாகச் சொல்ல வேண்டும். இன்றைக்கு வானொலியில் கூட குடுகுடுப்பைக்காரர்கள் விளக்கமாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் மூலம் பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதை நகரத்திலே இருப்பவர்கள் கேட்காமல்கூட இருக்கலாம். கிராமத்திலே இருக்கின்ற வேளாண்மைத்துறையில் உள்ள விவசாயிகள், கால்நடைகளை வளர்ப்பவர்கள் நாள்தோறும் கேட்கும் வகையில் அதைச் செயல்படுத்த வேண்டும் என்று வானொலி துறையையும், தொலைக்காட்சித் துறையையும் கேட்டு, கிராமங்கள் தோறும் தொலைக்காட்சியையும், வானொலியையும் அமைக்கும் வகையில் செயல்படுகிற ஒரு சூழ்நிலை உருவாக்க வேண்டும் என்று நம்முடைய அரசையும் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

ஆதோடு கால்நடைத்துறையில் நான் முக்கியமாக, சொல்ல விரும்புவது, நம்முடைய பால் உற்பத்தியைப் பொறுத்தவரை..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கால்நடைத்துறை அமைச்சரை நெருக்கி அப்படி உட்காரக் கூடாது.



**திரு. சோ. பாலகிருஷ்ணன் :** கால்நடைத் துறையில் 1978-79 ஆம் ஆண்டில் 1.72 மில்லியன் டன் பால் உற்பத்தி தமிழகத்திலே ஏற்பட்டு இருக்கிறது. அதே நேரத்தில் 1988-89 ஆம் ஆண்டு 3.23 மில்லியன் டன்னாக பால் உற்பத்தி அதிகரித்து இருக்கிறது. இது ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 99 கிராமிலிருந்து 1988-89-ல் 164 கிராமாக உயர்ந்து இருக்கிறது. இது நம்முடைய பால் உற்பத்தியில் ஏற்பட்டு இருக்கின்ற வளர்ச்சி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அதேபோல் முட்டை உற்பத்தியிலேயும் 1978-79-ல் 782 மில்லியன் உற்பத்தி பண்ணி இருக்கிறார்கள். 1988-89-ல் 2,287 மில்லியன் உற்பத்தி செய்யப்பட்டு இருக்கிறது. ஒரு நபருக்கு ஒரு ஆண்டுக்கு 16 முட்டைகள் என்று இருந்ததிலிருந்து இன்று இந்த நாட்டில் 42 முட்டைகள் கிடைப்பதாக நம்முடைய குறிப்பு புத்தகங்களிலே இருந்து கிடைக்கிறது. ஆனாலும் கூட, இதெல்லாம் அபிவிருத்தி என்று, முன்னேற்றம் என்று சொன்னாலும் கூட இன்று நாம் பாலுக்காகவும், முட்டைக்காகவும் மற்ற நாடுகளைவிட குறிப்பாக இந்தியாவிலேயே பல பகுதிகளுக்கு நாம் சென்று இருக்கிறோம். அங்கேயெல்லாம் காலையில் எழுந்தவுடன் முட்டை இல்லாமல் யாரும் சாப்பிடுவதை நாம் பார்க்கவில்லை. ஆம்லெட் போட்டுத் தான் எல்லோரும் சாப்பிடுகிறார்கள். ஆனால், இங்கே நாம் ஆம்லெட், சாப்பிடுவது என்பது, வசதி உள்ளவர்கள் தான் சாப்பிட முடிகிறதே தவிர, சாதாரண மக்களுக்கு இன்னும் முட்டை சாப்பிடுகின்ற பழக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. நம்முடைய நாட்டில் முட்டையையும், பாலையும் மிகுதியாக உற்பத்தி செய்வதற்கு இந்த கால்நடைத்துறை அதிகமான சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நம்முடைய கால்நடைகளை எல்லாம் இன்னும் அதிகமான உற்பத்தியை ஏற்படுத்துகின்ற அளவிற்கு உயர் ஜாதி காளைகளைக் கொண்டுவந்து இனவிருத்தி செய்கின்ற திட்டத்தை நாம் செயல் வடிவம் கொடுத்து, நாட்டில் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். பால் உற்பத்தியையும் முட்டை உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டும். அதோடு இந்த முட்டை உற்பத்தி செய்வதற்கு இன்று ஆந்திராவிலே இருந்துதான் நம்முடைய சென்னை நகரின் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே,

இங்கே முட்டை உற்பத்தி செய்யக்கூடிய கோழி வளர்க்கின்ற ஆர்வம் உள்ளவர்கள் வந்து சென்னையை சுற்றி 50 மைல் சுற்றளவிற்கு ஒரு ஏக்கர் ஒரு இலட்ச ரூபாய்க்கு குறைந்து இடமே கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஒரு லட்ச ரூபாய்க்கு குறைந்து இடமே கிடைக்கவில்லை என்று சொன்னால் அந்த கோழி வளர்ப்புக்கான வாய்ப்பே இல்லாமல் போய்விடும். ஆகவே நம்முடைய அரசாங்கம் எப்படி தொழில் வளர்ச்சிக்கு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் உண்டாக்குகிறார்களோ, அதேபோல இந்த கோழி உற்பத்திக்கும் ஒரு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் போல "கோழி உற்பத்தி எஸ்டேட்" ஏற்படுத்தி, அதற்கு மனைகள் எல்லாம் ஏற்படுத்திக் கொடுத்து, நம்முடைய ஆர்வமிக்க இளைஞர்களை ஊக்குவித்து கோழி உற்பத்திக்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை இன்று நாம் பல நல்ல திட்டங்களை எல்லாம் வைத்து இருக்கிறோம். நம்முடைய மாணவர்களுக்கு சத்துணவு கொடுக்கிறோம். முட்டை கொடுக்கிறோம். அதையெல்லாம், இன்னும் கொஞ்சம் அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் எல்லா கிராமங்களிலேயும் பால் உற்பத்தி அதிகமாக வேண்டும். இந்த கோழி உற்பத்தி செய்வதன் மூலம் நாள்தோறும் முட்டை கிடைக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியும். அதேபோல பால் பண்ணைகள் அதிகரிப்பதன் மூலம் நாள்தோறும் நம்முடைய மாணவர்களுக்கு இலவசமாக பால் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியும். அந்த சூழ்நிலை உருவாக வேண்டுமானால் நம்முடைய பால் உற்பத்தியும், முட்டை உற்பத்தியும் அதிகரிக்க வேண்டும். அதே நேரத்தில், இந்த பால் உற்பத்தி செய்பவர்களையும், முட்டை உற்பத்தி செய்பவர்களையும் நாம் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன் :** இன்று நல்ல ஸ்டார் ஓட்டலில் போய் அமர்ந்து 400 ரூபாய்க்கு ஒரு துண்டு கறி சாப்பிட்டு விட்டு நம்முடைய பெருந்தனக்காரர்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்த ஆட்டின் விலை என்னவென்று சொன்னால் 400 ரூபாய் தான். ஒரு ஆடு வளர்ப்பவன் ஒரு ஆட்டை



400 ரூபாய்க்கு தான் விற்கிறான். நம்முடைய பெருந்தனக்காரர்கள் சென்னையில் இருக்கிற பெரிய ஓட்டலில் நுழைந்து 400 ரூபாய்க்கு ஒருவேளை சாப்பிட்டு விட்டு வந்து விடுகிறார்கள். இவர்களுடைய ஒருவேளை சாப்பாடு அவர்களுடைய ஒரு மாத வருமானத்திற்கு கூட ஈடாவதில்லை என்ற வேறுபாடு நாட்டில் நிலவுகிறது. அதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

சென்னையில் இருக்கிற கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல்லில் இருக்கிற மருத்துவக் கல்லூரியோடு தென்பகுதியில் ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டும். உதாரணமாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி பகுதிகளுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே ஒரு அதிசயமான செய்தியைச் சொன்னார்கள். எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை ஆஸ்பத்திரி இல்லையென்று சொன்னார்கள். அங்கெல்லாம் டிஸ்பென்சரி தான் இருக்கின்றது. கிராமங்களிலிருந்து கால்நடைகளைக் கொண்டு வந்து, டாக்டரிடம் காட்டி அவர் மருந்து கொடுத்து, திரும்ப அழைத்துக் கொண்டு செல்கிற சூழ்நிலையெல்லாம் இருக்கிறது. எப்படி மாவட்ட மருத்துவமனை அதாவது இன்பேஷண்ட் மருத்துவமனை இருப்பதைப் போல கால்நடைகளுக்கும் இன்பேஷன்ட் மருத்துவமனையை ஏற்படுத்த வேண்டும். அங்கே வந்து டாக்டர் நோயைப் பார்த்து ஒருநாள், இரண்டு நாள் கால்நடைகளை தங்க வைத்து, அதற்கு முறையாக வைத்தியம் செய்து அனுப்புகிற வகையில் மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் ஒரு இன்பேஷன்ட் மருத்துவ மனையாவது ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் என்பது கால்நடை வளர்ப்புக்கு பெயர் போனது. எங்களுடைய பகுதியில் இருக்கிற அத்தனைபேரும் கால்நடைகளை வைத்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக செம்மறியாடு வளர்ப்பது என்பது, எங்களுடைய பகுதி மக்களுடைய நிரந்தரத் தொழிலாகும். இப்போது அவர்கள் குழி தோண்டுகிற இடமெல்லாம் போய்க்கொண்டிருக்கிற நிலை நாட்டிலே இருக்கிறது. காரணம் வறட்சி. புறம்போக்கு நிலம் எல்லாம் இப்போது பட்டா நிலமாக மாறிவிட்டது. ஆகவே, அவர்களுடைய கால்நடைகளுக்கு உணவு கிடைப்பதில்லை. இந்தச் சூழ்நிலைகளையெல்லாம்

மாற்றியமைக்க வேண்டும். கால்நடைகளுக்காக சில பகுதிகளை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். நல்ல புல் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அவைகளுக்கு கால்நடைகளை வைத்திருப்பவர்கள் இப்போது சென்றால் அங்கே பாரஸ்ட் பகுதிகளுக்குச் ஆட்டுக்கு 3 ரூபாய் கொடு என்று கேட்கிறார்கள். 500 ஆடுகள் வைத்திருப்பவர்கள் 1,500 ரூபாய் வரியாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைப்போல மழைக் காலங்களில் அந்த ஆடுகளை யெல்லாம் அவர்கள் நிலங்களில் அடைய வைக்க முடியாது. ஆகவே, அந்த பாரஸ்டுக்குள்ளே தான் பட்டி போட வேண்டும். அப்போது ஒரு பட்டிக்கு 5 ரூபாய் கொடு என்று சில அதிகாரிகள் கேட்பதாகச் சொல் கிறார்கள். இந்த முறையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும். மாற்றியமைத்து அந்த கால்நடைகள் வைத்திருப் திருப்பவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கிற சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

இன்னொன்று, நம்முடைய ஊராட்சி ஒன்றியங் களில் ஐ.ஆர்.டி.பி. திட்டத்திலே ஏராளமாக கடன்களைக் கொடுக்கிறோம். நாம் கிறோம் என்று சொன்னால் பல கடன் எப்படி கொடுக் கொடுக்கப்படுகிறது. ஆனால், காரணங்களுக்காக கடன் ஐ.ஆர்.டி.பி. திட்டத்திலே உண்மையாக அந்த செயல் இந்த பால் மாடு வாங்குவது தான். பயன்தரக்கூடிய நல்ல என்னுடைய தொகுதியில் இரண்டு ஊராட்சி இப்போது கள் இருக்கின்றன என்று சொன்னால், ஒன்றியங் ஒன்றியத்தில் 550 பேர்களுக்கு கமுதி ஊராட்சி திட்டத்திலே கடன் கொடுக்கிறோம். நாம் ஐ.ஆர்.டி.பி. 120 பேர்களுக்கு மட்டும் தான் நாம் இந்த 550 பேர்களில் கடன் கொடுக்க வேண்டுமென்று விதி பால் மாட்டிற்காக இந்த 120 பேர்களும் பால் இருக்கிறது. அதுவும், களுக்குத் தான் கொடுக்க பண்ணை வைத்திருப்பவர் கிறோம். இதனால் அந்த வேண்டுமென்று நாம் சொல்லு பவர்கள் பயனடைகிறார்களே பால் பண்ணை வைத்திருப் விவசாயிகள் பயனடைவதில்லை. தவிர, உண்மையாக 550 பேர்களுக்கு கடன் கொடுப்பதை, ஆகவே, இப்போது, 300, 400 பேருக்காவது பால் மாடு குறைந்தபட்சம் நபர்களுக்கும் கொடுக்கிற வாங்குவதற்கு தனி உள்ளாட்சித் துறையில் உத்தரவுகள் வகையிலே நம்முடைய கேட்டுக் கொள்கிறேன். பால் இட வேண்டுமென்று பணத்தில் தான் உண்மையாக மாட்டிற்கு கொடுக்கிற அந்தக் குடும்பம் நன்றாக அவர்கள் மாடு வாங்கி கொடுக்கிற கடன்கள் எல்லாம் இருக்கிறது. மற்றபடி வீணாகப் போகின்றன



என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள் கிறேன். இந்தக் கால்நடைத் துறைக்கு நல்ல இளைஞர் அமைச்சராக இருக்கிறார். அவர்கள், இதில் அதிக கவனம் செலுத்தி, மற்ற மாநிலங்களில் எல்லாம் கால்நடை வைத்திருப்பவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள், அவர்களுடைய உற்பத்தித் திறன் மிக அதிகமாக இருக்கிறது. அந்த முறையில்—தமிழகத்தில் இருக்கிற கால்நடைகளின் ஆதாரம் வளர்வதற்கு உறு துணையாக இருக்கவேண்டும் என்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தர்ம லிங்கம். 1-40-க்கு முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயலில் உழுது வாய்க்கால் வெட்டிக் கொண்டிருந்த என்னை, வரலாற்று சிறப்புமிக்க இந்த மாமன்றத்திற்கு வரவழைத்து, தமிழகத்தில் வரலாறு படைத்துக் கொண்டிருக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி, எங்கள் கழகக் காவல் தெய்வம் அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, நான் சார்ந்த வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கை மீதும், கால் நடை மானியக் கோரிக்கை மீதும் பேச விழைகிறேன்.

வேளாண்மை வளர்ச்சிக்கு சுமார் 631 கோடியே 11 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, இதுவரை யாரும் செய்யாத சாதனையைச் செய்து, ஏழை எளிய விவசாய மக்களின் பால் அக்கறைகொண்டு, அவர்களை பொருளாதார நிலையில் ஏற்றம் செய்ய ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்'' என்ற வள்ளுவரின் அருள்வாக்குக்கு 2000 ஆண்டுகளுக்குப் பின், உருக்கொடுக்கும் புரட்சித்தாயே, உங்களை இந்த வேளாண்மைக் குடிமக்கள் சார்பில் நன்றியோடு வாயாரப் பாராட்டுகிறோம்.

புரட்சித் தலைவி பொறுப்பேற்ற பிறகு, பாலைவன மாக இருந்த தமிழகத்தை பசும்சோலைவனமாக்கி, தரிசு நிலங்களாக இருந்ததை, நடப்பாண்டில், 1991-92 ஆம் ஆண்டில் 6,500 ஏக்கர் நிலத்தை சாகுபடிக்குக் கொண்டு வந்து, மேலும் அதனை வரும் ஆண்டில், 12,500 ஏக்கர்

[திரு. இ. தர்மலிங்கம்] [1992 ஏப்ரல் 21

நிலத்தை 75 இலட்சம் செலவில் சாகுபடிக்குக் கொண்டு
வந்து சரித்திரம் படைக்கும் விவசாயிகளின் விடிவெள்ளி,
எங்கள் காவல் தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர்,
புரட்சித் தலைவி அவர்களை நன்றியோடு பாராட்டுவ
தோடு, இதனால் ஏழை எளிய விவசாய மக்களுக்கு
வளமான வாழ்வு கிடைப்பதோடு மட்டுமல்லாமல்,
நாட்டில் உள்ளவர்களுக்கு - உணவு தானிய உற்பத்தியில்
உச்சகட்டத்தை அடைவோம் என்பதில் எந்தவித
சந்தேகமும் இல்லை என்பதனை இவ்விவசாயியாகிய நான்
பெருமையோடு மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திலே,
தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

வரும் நடப்பு ஆண்டுக்கு உணவு தானிய உற்பத்தி
செய்ய வேளாண்மைத் துறைக்கு 215.75 கோடி ரூபாய்
ஒதுக்கி, விவசாய மக்களின் வளர்ச்சிக்கு வழி வகுத்து,
மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை விவசாய
மக்களின் சார்பாக வாழ்த்துகிறோம். 18 கோடி ரூபாய்
செலவில் ஆண்டுக்கு 9 ஆயிரம் மகளிருக்கு வேளாண்மை
நடைமுறை பயிற்சி அளித்து, கிராமப்புற மகளிருக்கு
வேலை கொடுப்பதோடு மட்டுமல்லாமல், வேளாண்மைப்
பெருக்கத்திற்கும் வித்திட்ட வரலாற்றுப் பெருமை மிக்க
ஆட்சி நடத்தும், எங்களை வாழ வைக்க வந்த விவசாயி
களின் விடிவெள்ளி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்
களுக்கு, விவசாய மக்களின் சார்பாக நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் எல்லாத் துறைகளிலும் உள்ள அலுவலர்
களுக்கு வாரிசுப் பணியை அரசு வழங்குகிறது. ஆனால்
இரவு என்றும் பகல் என்றும் பாராமல் உழைத்துக்
கொண்டு இருக்கும் உழவர் மட்டுமல்லாமல், மனைவி
தன் பள்ளி செல்லும் பிள்ளைகள் எல்லோரும் உழைத்து
உணவு கொடுத்துக் கொண்டு இருக்கும் இந்த உண்மை
யான உழைப்பாளியின் பிள்ளைகள் படித்து பட்டம்
பெறவும், அரசுப் பணியில் சேரவும் 25 விழுக்காடுகளை
அரசு ஒதுக்கித்தருமாறு தாய் உள்ளம் படைத்த புரட்சித்
தலைவி அவர்களை நான் வேண்டுகிறேன். இந்த நேரத்
தில், அம்மா அவர்களை வேண்டிக் கொள்வது, இந்த
மாமன்றத்தின் வாயிலாக—பேரவைத் தலைவர் அவர்கள்
நேரம் குறைவாகக் கொடுத்ததால், நான் சுருக்கமாக,
மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.



1992 ஏப்ரல் 21] [திரு. இ. தர்மலிங்கம்]

1. கங்கை ஆற்றை காவிரியுடன் இணைப்பதற்கு, இந்த மாமன்றத்திலே தீர்மானத்தை இயற்றி, நாம் மத்திய அரசுக்கு கோரிக்கைவிட்டு, இந்த விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கவேண்டும் என்று நான் பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

2. மேற்கு மலைத் தொடர்ச்சியில் ஓடும் அத்தனை ஆறுகளையும் அணைகட்டி, நம் தமிழகத்திற்கு திருப்பி விவசாய நிலங்களை பயிர் செய்வதற்கு ஏற்ற வகையில் நீரைச் சேமித்து நாம் அணையைக் கட்டவேண்டும்.

பிற்பகல் 1-40

3. வறட்சியைத் தாங்கும் நெல் மற்றும் கரும்புப் பயிரை, விதைகளை நம் வேளாண்மைத்துறையின் ஆராய்ச்சி மூலமாகக் கண்டுபிடித்து நாம் உடனடியாகக் அந்தத் திட்டத்தைச் செயலாக்கவேண்டுமென்று துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்தத் துறையில் மிக அதிகமாக சேதப் படுத்திக் கொண்டிருக்கும் எலிகள், அந்த எலிகளை ஒழிப்பதற்கு மிகத் தீவிரமான நடவடிக்கை எடுத்து, ஒரு விவசாயக் குடிமகன் ஒரு எலியை அடித்து, அந்தத் துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தால் ஒரு எலிக்கு ஒரு ரூபாய் விதம் கொடுத்து, அந்த எலிகளை ஒழிக்க வேண்டுமென்று தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து இங்கே கால்நடைக....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எஞ்சியிருக்கிற உங்களுடைய யோசனைகளை எல்லாம் அமைச்சரிடம் கொடுத்துவிட்டால் அவர் முழுமையாகச் செய்து முடிப்பார். கொடுத்துவிடுங்கள்.

**திரு. இ. தர்மலிங்கம் :** கால்நடைகளை-ஆதிகாலத்தில் கிராமப் புறங்களில் கால்நடைகளை அதிகமாக வளர்ப்போரை அவர் தான் அந்த கிராமபுறத்தின் பெருங்குடி மகனாகக் கருதி, அவருக்கு மதிப்பு கொடுத்துக் கொண்டிருந்தோம். ஆனால் இந்தக் கால கட்டத்தில் கால்நடை வளர்ப்பதே அரிதாகிவிட்டது. எனவே விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக கால்நடைகள் வைத்திருப்போருக்கு விவசாயத்துறையின் மூலம் அவர்களுக்கு ஒரு பரிசுத் திட்டத்தை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** போதும், முடித்துக் கொள்ளுங்கள். மற்றவற்றைக் கொடுத்துவிடுங்கள்.

பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4.00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1,41 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.00

மாலை 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேளாண்மைத் துறை, கால்நடை வளர்ப்பு மற்றும் பால் வளத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடர்ச்சி. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை, கால்நடை, பால்வளம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். தமிழகத்தினுடைய, வேளாண்மைத் துறை என்பது மிகத் தேவையான ஒரு சிறந்த துறையாக செயல்பட வேண்டும். தமிழ் நாட்டு மக்களுக்கு உணவு அளிக்கின்ற வகையில் அந்தத் துறை எங்கு சிறந்து விளங்குகின்றதோ அங்கு தான் நாட்டின் பசி, பஞ்சம், உணவு தானியக் கட்டுப்பாடுகள் நீங்கி, உணவு தானியத் திலே ஒரு தன்னிறைவு பெறக்கூடிய நிலை உருவாகும். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த துறை வேளாண்மைத் துறை ஆகும், வேளாண்மையைச் சார்ந்து தான் கால் நடையும் இருக்கிறது. விவசாயிகளுக்கு வேளாண்மை சிறந்து விளங்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு கால்நடை ஆண்டாண்டுகாலமாக உறுதுணையாக இருந்து கொண்டிருக்கிறது அதே போன்று தான் பால்வளமும். அரசினுடைய கொள்கைக் குறிப்பிலே சென்ற ஆண்டு உணவு தானியங்கள் உற்பத்தியைப் பற்றி, நம்முடைய அரசாங்கம் பல்வேறு புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறது. குறிப்பாக 1991-92 ஆம் ஆண்டு 84.10 இலட்சங்கள் அரசினுடைய இலக்காக இருந்தாலும் 90.45 இலட்சம் டன் உற்பத்தியை நாம் எட்டியிருக்கிறோம் என்று இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதே போன்று 1992-93 ஆம் ஆண்டுக்கு சுமார் 85 மெட்ரிக் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்ய முடியும் என்கிற



ஒரு நம்பிக்கை அரசு கொள்கை குறிப்பிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதற்கு அடிப்படையாக இயற்கை வளங்கள் நமக்கு எந்த அளவிற்கு ஒத்துழைப்பு தருகின்றனவோ அந்த அளவிற்குத்தான் விவசாயத்திலே, வேளாண்மையிலே உணவு தானியங்களை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பினை நாம் எட்ட முடிகிறது. விஞ்ஞான பூர்வமாக விவசாயத்திலே நாம் ஈடுபட்டாலும் இன்றைய தினத்திலே இயற்கையினுடைய ஒத்துழைப்பும் இருந்தால் தான் விவசாயம் சிறப்பாக தழைத்து ஓங்குவதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அதே போன்று சென்ற ஆண்டை பொறுத்தமட்டில் வடகிழக்கு பருவமழை சாதகமாக அமைந்திருந்தது. தென்மேற்கு பருவமழை நமக்கு பாதகமாக அமைந்திருந்தது அதே போன்று தான் மழையினுடைய அளவு கூட, அநேகமாக தென்மேற்கு பருவ மழை சமயத்திலே விவசாயிகளுக்குச் சாதகமாக அமைவதும், சமயத்திலே பாதகமாக அமைவதுமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆண்டாண்டுக்காலமாக அரசாங்கத்தினுடைய கணக்கீட்டை நாம் பார்த்தோம் என்று சொன்னால் வெள்ளத்தினாலும், வறட்சியினாலும், வேளாண்மைத் துறையும் பாசனத் துறையும் இணைந்து நவீனமான திட்டங்களை உருவாக்க முடியாத சூழ்நிலை தமிழ் நாட்டில் மட்டும் அல்ல இந்தியாவிலேயே இன்றைய தினம் இருக்கிறது. ஆக நீர்ப்பாசன வசதிகளை ஒழுங்குபடுத்துவது மூலமாகத்தான் நம்முடைய வேளாண்மை சிறந்து விளங்குவதற்கு நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். அதே போன்று இன்றைக்கு உரத்தில் கூட நம்முடைய அரசு பல்வேறு கணக்குகளை இட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 4-05

எதிர் காலத்திலே இவ்வளவு உர விநியோகம் செய்ய முடியும் என்று சொல்லி நவீன விஞ்ஞான முறையில் ஆயிரம் வகையான உரங்களை நாம் சாகுபடியிலே ஈடுபடுத்திய போதிலும் கூட கால்நடையினுடைய சாணம் இல்லை என்று சொன்னால் ரசாயன உரங்கள் எடுபடுவது இல்லை. கால்நடைகளின் வளம் என்பது தமிழ்நாட்டில் குறைந்து கொண்டு வந்திருக்கிறது. காரணம் பக்கத்தில் இருக்கக்கூடிய, அருகாமையில் இருக்கக்கூடிய கேரளா மாநிலத்திலிருந்து வந்து தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய, கால்நடைகளை, பரம்பரையாக விவசாயிகள் வைத்துள்ள நாட்டு மாடுகளை அத்தனையும் கடத்திக்கொண்டு சென்று விடுகிறார்கள். நம்முடைய அரசு, கால்நடை அமைச்சர் அவர்கள் அதை கட்டுப்படுத்த வேண்டும். இல்லை என்று சொன்னால் நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு விவசாயம் செய்ய முடியாது.

இப்போது விலைக்கு உரத்தை வாங்கி போட்டு விவசாயம் செய்ய . முடியாத நிலை இருக்கிறது. உரத்தினுடைய, விலை ஒரே ஆண்டில் டன்னுக்கு ஆயிரம் ரூபாய் உயர்ந்து இருக்கிறது. ஒரு விவசாயி ஒரு டன் உரம் போட வேண்டும் என்று சொன்னால் இன்றைக்கு அவர்களால் ஒரு டன் போட முடியாது. ஒரு மூட்டை தான் போட முடியும். உரத்தினுடைய விலை உச்ச மட்டத்திற்கு ஏறி விட்டது. ராக்கெட் வேகத்தில் போய் கொண்டிருக்கிறது. ஆக நாம் எதிர்பார்க்கக்கூடிய 90 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொன்னால் கால்நடைகளையும், உரங் களையும் கூட நம்முடைய அரசு மானிய விலையில் விவசாயிகளுக்கு சிறு, குறு விவசாயிகளுக்காவது வழங்க வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். சிறு, குறு விவசாயிகளுக்கு கார்டு வழங்கி மானிய விலையில் இடுபொருட்களை வழங்குவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்படும் என்று கேள்வி நேரத்தில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே விரைவில் அதை அமல்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள் நேர்த்தி செய்யப்பட்ட விதைகள் எல்லாம் அனேகமாக காலத்தோடு கிடைப்பதில்லை. பருவநிலை முடிந்த பிறகு நேரடியாக அங்கே இருக்கக்கூடிய கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வருவதன் காரணமாக விவசாயிகள் பெறுவதில் தயக்கம் இருக்கிறது. கேட்கிற நேரத்தில் கொடுப்பது இல்லை. பருவ நேரத்தில் அந்த உரத்தைக் கொடுக்கவேண்டும், அந்த பூச்சி மருந்துகளைக் கொடுக்க வேண்டும். அந்த விதைகளை கொடுக்கவேண்டும் என்ற பக்குவ நிலை இல்லாமல் பருவ நிலை மாறி கொடுப்பதன் மூலமாக அங்கே வருகின்ற பொருட்கள் அநேகமாக தனியார் கடைகளுக்குப் போய் விடுகிறது. இல்லை என்றால் அதிகாரிகள் தவறு செய்வதற்கு ஒரு வாய்ப்பாக உருவாக்குகிறது. இதை நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எதிர்காலத் தில் ஒழுங்குபடுத்த வேண்டும். ஒழுங்குபடுத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அதேபோல் பூச்சி மருந்துகளை இன்றைக்கு மானிய விலையில் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த பூச்சி மருந்தை பார்த்தோம் என்று



சொன்னால் விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயத்திலே ஒன்றை சொல்கிறார்கள், அவர்கள் வந்து பார்க்கிறபோது பூச்சி மருந்தாக ஒன்றை சொல்லுகிறார்கள். நம்முடைய ஆல் இந்தியா ரேடியோ சொல்லுவதைப் பார்த்தால் அது ஒன்று சொல்லுகிறது. விவசாயிகள் குழப்பமான நிலையை அடைகிறார்கள். வித்தியாசம் இருக்கிறது. ஆகவே விரிவாக்க மையங்களோடு கலந்து அந்த வேளாண்மை யினுடைய பூச்சிகளுக்கு ஏற்ற வகையான அறிவிப்பு களாக அது இருக்க வேண்டும். ரேடியோவில காலையில் ஒன்றைச் சொல்லி, மாலையில் போய் விரிவாக்கப் பணியாளர்களைக் கேட்டால் அவர் மாற்றி சொல்லு கிறார். பலவிதமான மருந்துகள் இன்றைக்கு வந்து கொண்டிருக்கின்றன. போலியான மருந்துகள் பல வந்திருக்கின்றன. சென்ற சட்டமன்ற கூட்டத்தில் கூட 1990 ஆம் ஆண்டில் சொல்லி திருத்துறைப்பூண்டியில போலியான மருந்துகளை கண்டுபிடித்து அதற்கு உரிய நடவடிக்கை எடுத்து அநேகமாக அந்த வழக்கு இன்று நடந்து கொண்டிருக்கிறது என்று கருதுகிறேன். அரசாங்கம் விரைவில முழுமையாக இது போன்ற மருந்துகளை பரிசோதனை செய்து விவசாயிகளுக்கு வழங்க வேண் டும். பூச்சிக்கு மருந்து அடித்தால் பூச்சியாலே பருத்தி பயிர் விளைகிறது. அதாவது தோண்டு பூச்சி வந்தால் அதற்கு மருந்து அடித்தால அங்கே குருத்துப் பூச்சியாக வந்து விடுகிறது. இதற்கு எல்லாம் என்ன காரணம் என்பதை வேளாண்மைத் துறை விரிவாக்க அதிகாரிகள் இதை தூய்மையாக கொஞ்சம் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் விதைகள் வினியோகிப்பதை பார்த் தோம் என்று சொன்னால் அந்த விதைகளை காலத்தோடு விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். இன்றைய தினம் நம்முடைய தமிழக அரசு ஜூன் மாதம் 12 ஆம் தேதி தண்ணீர் தரப்போவதாக அறிவித்து இருக்கிறது. காவேரிப் பாசன விவசாயிகள் மிகப்பெரிய மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். துரிதமாக மராமத்துப் பணிகளை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். 10 ஆண்டு காலம் ஓடிவிட்டது, குறுவை விவசாயத்தைப் பார்த்து, குறுவை விதைகள் இன்றைக்கு தஞ்சை, காயிதே மில்லத் மாவட்டங்களில் கிடையாது. ஆகவே காலத்தோடு நம் முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் சென்ற மாதமே ஒரு அறிக்கையைக் கொடுத்து விட்டேன். ஒரு ஏக்கருக்கு சுமார் 45 கிலோ விதைகள் தேவை. ஐ.ஆர். 8, அதேபோல் கருணா, கருணா .... (சிரிப்பு).

பிற்பகல் 4-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் .

***மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கருணா '' என்ற நெல்லே தமிழகத்திலே காணாமல் போய்விட்டது. எனவே அந்த விதை தரம் இல்லை என்று அந்த அரசே முடிவு செய்து, நீக்கி விட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏன் நீங்கள் '' கருணா '', '' கருணா '' என்று கதறிக் கிடக்கிறீர்கள் ?

**திரு. ஜி. பழனிசாமி :** உண்மையிலேயே, நெல் வகையிலே விவசாயிகளை எந்தவகையிலும் பாதிக்காமல் இருக்கக்கூடிய நெல் ஐ.ஆர். 20. அதுபோன்று நீண்டகாலங்கள் நிலைத்து இருக்கக்கூடிய நெல் என்பது, விவசாயிகள் பாதிக்கப்படாத வகையிலே, வெள்ளம் வந்தாலும் வறட்சி வந்தாலும் பாதுகாக்கிற ஒரு நல்ல நெல்லானது இன்றைய தினத்திலே ஐ.ஆர் 20 விவசாயிகளுக்கு ஒரு ஒத்துழைப்பாக இருக்கிறது. ஆகவே, தானியங்களை சுமார் 22,500 டன்னாவது இன்றையதினம் காயிதே மில்லத், நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களுக்கு வழங்கவேண்டும். 5 ஆயிரம் ஏக்கர் குறுவை சாகுபடி செய்யக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு இந்த ஆண்டு இருக்கிறது. அரசு எதிர்பார்க்கக்கூடிய உணவு தானியங்களை உற்பத்தி செய்ய முடியும். ஆகவேதான் நீங்கள் காலத்தோடு (மணியடிக்கப் பெற்றது) முடித்துக் கொள்கிறேன். இப்போதுதான் நான் துவங்கி இருக்கிறேன். இன்னும் விதையை விட்டு போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் விதையிலேயே இருந்தால் எப்படி ? 11 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் சிறிது நேரம் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, இன்றைய தினம் நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கெல்லாம் மிகப் பெரிய கவலை அளிக்கிறது என்னவென்றால் நம்முடைய காவிரி நதிநீர்ப் பிரச்சினை. இன்றைக்கு காவிரி நதிநீர் பிரச்சினையில் தமிழகத்திற்குக்



கிடைக்க வேண்டிய நியாயமான தீர்ப்பு வழங்கப்பட்டிருக்
கிறது. ஒரு தடவை இல்லை. இரண்டு தடவைகள்
தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது தடவை
கூட கர்நாடக அரசு, நடுவர் குழு அறிவித்து இருக்கிற
தீர்ப்பு என்பது சரியல்ல, மறுபரிசீலனை செய்யவேண்டு
மென்று சொல்லி மனு செய்தார்கள். அதையும் காவிரி
நடுவர் குழு தள்ளுபடி செய்து 205 டி.எம்.சி. தண்ணீரை
வழங்கவேண்டுமென்று சொல்லி மீண்டும் அறிவித்து
இருக்கிறது. ஆனால், கர்நாடக அரசு நடுவர் குழுவி
னுடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று
அறிவித்து இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர்
அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.
காவிரி நடுவர் குழு அமைத்தபோது, அந்த நடுவர் குழு
தமிழகத்தில் காவிரி நீர் பாயக்கூடிய பகுதிகளைப் பார்வை
யிடுவதற்கு முன்பாக, கர்நாடக மாநிலத்திலே பார்வை
யிட்டார்கள். அங்கே இருக்கக்கூடிய பல புதிய பாசனங்
களைக் கணக்கிலே கொண்டார்கள். அதற்குப் பின்னால்
தான் தமிழகத்திலே இருக்கக்கூடிய தஞ்சை, திருச்சி
போன்ற மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து ஒரு
நல்ல தீர்ப்பை, நியாயமான தீர்ப்பைத் தமிழகத்தினுடைய
உரிமை நிலைமையை இன்றைய தினத்திலே அறிவித்து
இருக்கிறார்கள். ஆனால் கர்நாடகாவிலே இன்றைக்கு
இருக்கக்கூடிய பங்காரப்பா அரசு, அங்கே இருக்கக்கூடிய
கட்சிகளெல்லாம் கூடி தண்ணீர் கொடுப்பதற்கு மறுப்ப
தோடு மட்டுமல்ல, இன்றைக்கு நடுவர் குழுவினுடைய
தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று
சொல்லக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே
நம்முடைய மாநில அரசு உடனடியாகத் தமிழகத்திலே
இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளையும் கூட்டி,
உடனடியாக மத்திய அரசை அணுகி, அந்தத் தண்ணீரைப்
பெறுவதற்கான ஒரு முயற்சியை, இந்த அரசு மேற்
கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான்
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று
வேளாண்மை. அக்ரோவிலே இருந்து, விவசாயிகளுக்கு
டிராக்டர்களெல்லாம் கொடுத்தார்கள். தனியாரிடத்திலும்
டிராக்டர்களெல்லாம் இருக்கின்றன. அப்படிக் கொடுக்கப்பட்ட
டிராக்டர்களெல்லாம் இப்போது எங்கே உழுதுகொண்டு
இருக்கின்றன என்று கேட்டீர்களென்றால், அவை
விவசாயிகளுக்கு உதவவில்லை. சென்னையிலே,
மாநகராட்சிக்குக் குப்பைகளை அள்ளிக்கொண்டு இருக்
கின்றன. நான் இதை மாண்புமிகு அமைச்சர் அவர்
களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவை

யெல்லாம் பழைய வண்டிகள். அந்தப் பழையகால வண்டிகள், பழைய வண்டிகள் சென்னை மாநகரத்திலே மாநகராட்சியிலே குப்பை அள்ளிக்கொண்டு இருக்கின்றன. ஆகவே, நீங்கள் புதிய டிராக்டர்களை வழங்கவேண்டும். 80 இலட்சம் ரூபாயில் 32 டிராக்டர்களை விவசாயிகளுக்குக் கொடுக்கப் போவதாகக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேளாண்மைத்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில குப்பைகள் சென்னையிலே இருந்தது. அந்தக் குப்பைகளை அள்ளுவதற்கு அந்த டிராக்டர்கள் பயன்படுத்தப்பட்டன. இன்றையதினம் குப்பைகள் தள்ளப்பட்டுவிட்டன. எனவே அந்த டிராக்டர்கள் எல்லாம் உழவுக்குச் சென்று கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இந்த வண்டிகளைக் கொண்டுபோய் வயல்களிலே இறக்கிவிட்டோமானால் வேலை நடைபெறாது. நிலத்தையும் வீணாக்கிவிடும். புதிய வண்டிகளை வாங்கிவிடவேண்டும்.

மேலும் மருந்து அடிக்கிற ஸ்பிரேயர்களெல்லாம்கூட பல காலமாகப் பழுதடைந்த நிலையிலே குப்பையாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், பேரூராட்சிகளிலும் அப்படியே கிடக்கின்றன. அதையெல்லாம் ஏலம் விட்டால் கூட பல கோடி ரூபாய் அரசுக்கு லாபம் கிடைக்கும். அதையெல்லாம் விற்றுவிடுவதுடன், புதியதாக இருப்பவைகளைக்கூட நீங்கள் ஒழுங்குபடுத்தவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4-15

அடுத்து, பால் வளத்தைப்பற்றி நான் சொல்லி முடித்துவிடுகிறேன். பல்லாவரம் பால் வளத்திலே நான் தொடர்ந்து— மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களும் இருக்கிறார்கள். சட்டமன்றத்திலே பல தடவை பேசி அதற்காக முன்னால் இருந்த அரசினிடத்தில் பல பேருக்கு— ஆயிரத்துச் சொச்சம் பேர்களுக்கு அனுமதி வாங்கி வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். கோர்ட்டுகளுக்கெல்லாம் சென்று இருந்தார்கள். ஆனால் அவர்கள் இன்னும் கூட, 583 பேர்கள் இன்னும் பாக்கி இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல்லாவரம் பால் பண்ணையா? மாதவரம் பால் பண்ணையா?

திரு. ஜி. பழனிசாமி : மாதவரம்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல்லாவரம் பால் பண்ணை என்று சொன்னீர்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாதவரம் பால் பண்ணை. இந்த மாதவரம் பால் பண்ணையில் ஊழியர்களுடைய கோரிக்கையை அரசு பரிவோடு கவனிக்க வேண்டும். அதிலே பணியாற்றி இருக்கின்ற தொழிலாளர்களிலேகூட பலபேர் இறந்து போய்விட்டார்கள். நேற்று தொழிலாளர் மானியக் கோரிக்கையில் பேசுகின்றபொழுது, உடனடியாக அப்படிப் பட்ட நடவடிக்கை என்றால் உடனடியாகக் கவனிக்கப் படும், நியாயம் வழங்கப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆக அந்த உரிய நடவடிக்கையை நம்முடைய பால் வளத் துறை அமைச்சரவர்களும் உரிய நடவடிக்கையெடுத்து அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பழனிசாமி அவர்கள் சொல்கிறபொழுது, ஆர்வமாக, வேகமாகப் பேசுகிற பொழுது, குறுவை தஞ்சை, நாகை மாவட்டங்களில் 5,25,000 ஏக்கர் 5,000 ஏக்கர் என்று சொல்லி விட்டார்கள். அந்த அளவிற்கு வாய்ப்பு இருக்கிறது போடுவதுதான் வழக்கம். அந்த அளவிற்கு வாய்ப்பு இருக்கிறது என்று அவருடைய பேச்சிலே திருத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண், பால் வளம் மற்றும் கால்நடைத் துறையின்மீது இந்த விவாதத்திலே என்னைப் பேசுவதற்கு அழைத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை உரித்தாக்கிக் கொள்ளுகிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்ததிலேயிருந்து இந்த பத்து மாதக் கால மாக, மக்களும், அறிஞர்களும் வியக்கின்ற வகையிலே பல புரட்சிகளைச் செய்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தமிழக சட்டசபையின் வரலாற்றிலேயே ஒரு அமைச்சரவை ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்து 10 மாத காலத்திற்குள்ளாக இரண்டு முறை நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது இந்த அரசாகத்தான் இருக்குமென்று நான் கருதுகிறேன்.

இங்கே இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் புரட்சியைச் செய்திருக்கிறார்கள். இங்கே தொழிற் துறையிலே தமிழகம் புரட்சியைச் செய்து கொண்டிருக்கிறது என்று பத்திரிக்கைகளிலே நான் படித்திருக்கிறேன். ஆனால் ஒவ்வொரு மானியக் கோரிக்கையையும் இந்த அவையிலே கொண்டு வருகின்றபோது, கடந்த கால ஆட்சியிலே இந்த மானியக் கோரிக்கையின் மீது கொண்டு வருகின்ற திட்டங் களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் ஒவ்வொரு புரட்சியை நான் இங்கே கண்டு கொண்டிருக்கிறேன்.

அந்த வகையிலே இங்கே வேளாண்மைத் துறையிலே மிகப் பெரிய பசுமைப் புரட்சியை இங்கே மாண்புமிகு இதய தெய்வம் புரடசித் தலைவி அவர்கள் வேளாண்மைத்துறை அமைச்சரின் வாயிலாகப் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக் கிறார்கள்.

இங்கே ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்படடிருக்கிறேன். பஞ்சாப் மாநிலம் பசுமைப் புரட்சியைச் செய்தது என்று கிட்டத்தட்ட பத்தாண்டுகளுக்கு முன்பாகப் பத்திரிக்கையின் வாயிலாகப் பார்த்தேன். பஞ்சாப் மாநிலத்திலே அள விற்கு அதிகமான, எதிர்பார்த்ததைவிட கோதுமை விளைச்சல் அதிகம் என்ற காரணத்தினால் அங்கே ஒரு மிகப் பெரிய பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியது என்று சொன்னார்கள். ஆனால் பஞ்சாப் மாநிலத்தைப் பார்க் கின்றபொழுது அங்கேயிருக்கின்ற நீர் ஆதாரங்களைக் கொண்டும், அந்த மண் வளத்தைக் கொண்டும் இந்தத் தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது இன்று பஞ்சாபைவிடப் பன்மடங்கு மேலாக பசுமைப் புரட்சியை இந்த நிதி நிலை அறிக்கையிலே நாம் காண முடிகிறது.



பிற்பகல் 4-20

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார் கள். 90 இலட்சம் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்கின்ற வகையிலே இங்கே குறிப்பு கூறியிருக்கிறீர்கள், அது முடியுமா என்று சொன்னார்கள். முடிகின்ற வகை யிலேதான் இங்கே திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம், தமிழகத்தினுடைய பூகோள ரீதியாகப் பார்க்கிறபோது, நீர்நிலை ஆதாரங்கள் மிகக் குறைவு. மற்றபடி மண் பரிசோதனை செய்கிறபோதும் தரமான மண்ணும் இல்லை. இப்படி நீர்நிலை ஆதாரங்கள் குறைவாக இருந்தும், தரமான மண் இல்லாமல் இருந்தும், மேட்டுக் பகுதியாக, வானம் பார்த்த பூமியாக இருந்தும் இவ்வளவு இடையூறுகளுக்கிடையிலே யும் 90 லட்சம் டன் உண்வு தானியங்களை உற்பத்தி செய்கிறோம் என்று இங்கே திடமாக ஒரு திட்டத்தைச் சொல்கிறார்கள் என்று சொன்னால், இது நிச்சயமாக இந்தியத் துணைக் கண்டத்தில் மிகப்பெரிய பசுமைப் புரட்சி என்று நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், அறிவுக் கூர்மையாலும், விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகளா லும்தான் 90 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தியைப் பெற முடியும் என்பதை இங்கே நினைவுகூற கடமைப் பட்டிருக்கிறேன். அப்படி அறிவுத் திறன் மிக்க விவசாயி களைத் தூண்டுகின்ற வகையிலே இந்த நிதுநிலை அறிக்கை இருப்பதைக் கண்டு நான் அதை வரவேற்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், இங்கே வேளாண்மைத் துறையிலே பல திட்டங்களைக் கொண்டு வந்திருந்தாலும், கடந்த கால ஆட்சியின் அவலநிலையின் காரணமாக, அவர்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்தபோது, இந்த வேளாண்மைத் துறை யிலே எந்தெந்த வகையிலே வருவாயை ஈட்ட முடியும் என்று பார்த்து, இந்தத் துறையைக் குட்டிச் சுவராக்கி யிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே மானியத்திலே கொடுக்கப்படுகிற பூச்சி மருந்துகள் மற்றும் உரங்கள் அவர்கள காலத்திலே அதற்கு முன்பிருந்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே 'ஷீபா' போன்ற தரம் வாய்ந்த பூச்சி மருந்துகள் கொடுக் கப்பட்டு வந்தன; அதைப்போல விதைகளும் தரம்வாய்ந்த விதைகளாகக் கொடுக்கப்பட்டு வந்தன; இவற்றிலெல்லாம்

இலாபம் தேடுகிற வகையிலே, அதைப்போன்ற தரம் வாய்ந்த மருந்துகளை ஒதுக்கிவைத்துவிட்டு, கால நேரத் தில் விவசாயிகளினுடைய பருவ நிலையை ஆராய்ந்து, விவசாயிகளினுடைய தேவையைப் பூர்த்தி செய்கிற அந்தக் கால நேரத்தை ஒதுக்கிவிட்டு, காலங்கடந்து, பூச்சி மருந்து களையும், உரங்களையும், விதைகளையும் கொடுத்ததன் காரணமாக, அதே நிலையை இப்போது இருக்கிற பல அதிகாரிகளும் பின்பற்றுகிறார்கள். அதை இந்த அரசு களைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் போடுகிற திட்டங்கள் உயரிய திட்டங்களாக இருந் தாலும், அதை நிறைவேற்றுகிறவர்கள், அதிகாரிகளாக இருக்கிற காரணத்தினால், நிறைய அதிகாரிகள் கடந்தகால ஆட்சியில் சுவையை அனுபவித்திருக்கின்ற காரணத்தினால், அவர்களை மாற்றி வேறு இலாகாவுக்கு அனுப்பி விட்டு, நல்ல திறமை வாய்ந்த அதிகாரிகளை அமர்த்துகிறோம் என்று சொன்னால் நாம் போடுகிற திட்டங்கள் மக்களுக்குச் சென்றடையும்.

அதைப்போல, பல அரிய பொருட்களை இந்தத் தமிழ கத்தில் இருக்கிற அனுபவம் நிறைந்த விவசாயிகள் பயிர் செய்கிறார்கள். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கண்வலிக் கிழங்கு, கடந்த முறையிலே மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள், ! அந்த கண்வலிக் கிழங்கினுடைய விதையை அரசே கொள்முதல் செய்யுமென்று சொன்னார்கள். இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் கேள்வி கேட்ட போது, பரிசீலிக்கப்படுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து விவசாயிகளினுடைய ஆர்வம் குன்றாமல் இருக்கிற வகையிலே அரசுக்குச் சிறு நஷ்டம் ஏற்பட்டாலும் இதுபோன்ற திறமை மிக்க விவசாயிகளினுடைய விவசாய நுணுக்கங்களை உயர்த்துகிற வகையில், அரசே இது போன்ற விதைகளைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று நான் கேடடுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தர்மபுரி மாவட்டத்திற்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சுதந்திரம் அடைந்து 43 ஆண்டுக் காலத்தில் கிட்டாத மிகப்பெரிய வரப்பிரசாத மாக இந்த மாவட்டத்திற்கு நாங்கள் கேட்காமலேயே பல திட்டங்களையும், தொழிற்சாலைகளையும், கல்வி நிலையையும் முன்வந்து கொடுத்திருக்கிறார்கள். அதற்கொப்ப இன்று தர்மபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டிணம் தொகுதியில் பையூரில் மிகப்பெரிய விவசாய ஆராய்ச்சிப் பண்ணை ஒன்று





இருந்து கொண்டிருக்கிறது. அந்த ஆராய்ச்சிப் டண்ணை யில் அந்தப் பகுதிகளான சேலம், தர்மபுரி, வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களையொட்டி ஒரு விவசாயக் கல்லூரியை அந்த மாவட்டத்திற்கு நீங்கள் அளிக்க வேண்டு மென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். காரணம், கொடுத்துக் கொடுத்து சிவந்த கைகளுக்குச் சொந்தக்காரரான புரட்சித் தலைவர் அவர்களின் வாரிசாகத் திகழ்ந்துகொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், நிறைய எங்கள் மாவட்டத்திற்குக் கொடுத்திருக் கிறார்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இருந்தாலும், பிறந்த நாள் விழாவிற்குத் தொண்டர்களிடத்திலே நிதி வசூல்ப்பவர்களைப் போல நாங்கள் சென்று கேட்க முடியாது. எப்போதுமே கொடுக் கின்ற ஈகை மனம் படைத்த இதய தெய்வம் புரட்சித தலைவி அவர்களிடத்திலேதான் நாங்கள் இதையும் கேட்கி றோம். பணிவோடு கேட்கிறோம். இந்த விவசாயக் கல்லூரியையும் எங்களுடைய தர்மபுரி மாவட்டத்திற்கு அளிக்க வேண்டுமென்று டணிவன்போடு கேட்டுக் கொள் கிறேன்.

பிற்பகல் 4-25

அதே நேரத்தில், தர்மபுரி மாவட்டத்தில் நிறைய விவ சாயிகள் முல்லைப் பூச்செடி பயிரிடுகிறார்கள். அந்த முல்லை, மல்லிகைப் பூவிற்கு ஒரு குறிப்பிட்ட கால கட்டத் தில்தான் நல்ல விலை கிடைக்கிறது. ஆண்டு முழுவதற்கும் நல்ல விலை நிர்ணயம் செய்யக்கூடிய அந்தத் தொழில் வேறு எங்கும் இல்லாத காரணத்தால் அங்கே வாசனைத் திரவியம் செய்யக் கூடிய ஒரு தொழிற்சாலையைத் தர்மபுரி மாவட்டத்திற்குக் கொண்டு வருவீர்கள் என்று சொன்னால் அங்கே கிட்டத்தட்ட 40,50 ஆயிரம் விவசாயி கள்-முல்லைப் பூச்செடி பயிரிடுகின்ற விவசாயிகளுடைய முல்லைப் பூவிற்கு விலை நிர்ணயம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலைமை உருவாகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி யடிக்கப் பெற்றது).

அதே போல, தோட்டக் கலை. தோட்டக் கலை இயக்குநர கம் தர்மபுரி மாவட்டத்திலிருந்தது. நிர்வாகத்தின் காரண மாக சென்னைக்கு மாற்றப்பட்டிருந்தாலும், தோட்டக்கலை வாயிலாக தர்மபுரி மாவட்டம் மேட்டுப்பகுதியாக இருக் கின்ற காரணத்தால் அந்த மாவட்டத்தினுடைய பெரும் பாலான பகுதிகளில் மா பயிரிடுகிறார்கள். கர்ய்கறிகள்

பயிரிடுகிறார்கள். மாவிற்கும், காய்கறிகளுக்கும் நல்ல விலை நிர்ணயம் செய்ய முடியாத காரணத்தால் அங்கு இருக்கின்ற விவசாயிகள் இடைத்தரகர்களிடத்தில் பலிகடா வாக ஆகிக்கொண்டிருக்கிறார்கள். இன்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இதைக் கருத்திற்கொண்டு அங்கு பழத் தொழிற்சாலை ஒன்று கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய்க்கு அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளும் அதே நேரத்தில், காய்கறிகள் உற்பத்தி என்று சொல்லும்போது, நல்ல காய்கறிகள் கர்நாடக மாநிலம் பெங்களூருக்குப் போக மற்ற காய்கறிகள் சரியான விலைக்குப் போவதில்லை. அந்தக் காய்கறிகள் கெடாமல் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் இருப்பில் வைக்கக் கூடிய வகையிலே குளிர்பதனம் செய்யக்கூடிய குளிர் அறை களை அரசாங்கம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

அதேபோல, தர்மபுரி மாவட்டத்தில் மேட்டுப் பகுதி யில் பருத்தி அதிகமாகப் பயிரிடப்படுகின்றது. இந்தப் பருத்தி என்று சொல்லும்போது தமிழகத்திலே பல ஆராய்ச்சி நிலயங்கள் இருந்தாலும் அந்த ஆராய்ச்சி நிலையங்கள் உயர் ரக பருத்தியை இதுவரை கண்டுபிடிக்கவில்லை. கர்நாடக மாநிலத்திலே கண்டுபிடிக்கப்பட்ட வரலட்சுமி பருத்திதான் இதுவரையில் தமிழகத்திலே உயர்ரக பருத்தியாக இருந்து கொண்டிருக்கிறது. அதனுடைய வீரியம் குறைந்து விட்ட காரணத்தால், அதனுடைய உற்பத்தி குறைந்துவிட்ட காரணத் தால் விவசாயிகளுக்குப் போதிய விலை கிடைப்பதில்லை. எப்படி கர்நாடகத்தில் வரலட்சுமி பருத்தியைக் கண்டுபிடித் தார்களோ அதைப்போல தர்மபுரி மாவட்டத்தினுடைய வெப்ப தட்ப நிலைமைக்கேற்ப மேட்டுப் பகுதியில் அதைப் பயிரிடுவதற்குத் தக்கவாறு பருத்தியைக் கண்டுபிடிப்பதற்கு மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் வல்லுநர்களுக்குத் தக்க அறிவுரை வழங்கி அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு பால் வளத்திற்கு வரவிருக்கிறேன். காரணம் தர்மபுரி மாவட்டத்திலே கிட்டத்தட்ட......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி, முடிக்கவும்.

திரு. கா. பூ. முனுசாமி : தர்மபுரி மாவட்டத்திலே 1 இலட்சத்து 20 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கின்றனர். அந்த 1 இலட்சத்து 20 ஆயிரம்



குடும்பங்கள் முடிந்த வரை அவர்கள் பசுமாட்டை வைத்துக் கொண்டு சங்கங்களுக்குப் பால் ஊற்றிக் கொண்டி ருக்கிறார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர் களின் அரசு எருமைப் பாலுக்கு விலையை உயர்த்தியிருக் கிறது. அதேபோல பசுவின் பாலுக்கும் விலையை உயர்த்தி கிட்டத்தட்ட ஒன்றேகால் இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும வகையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராமத்திலே பொருளாதாரப் புரட்சி ஏற்பட்டுக் கொண்டி ருக்கிறது என்று சொன்னால் அது இந்தப் பால் உற்பத்தி யாளர்கள சங்கங்களின் மூலமாகத்தான. கிராமத்திலே வாழ் கின்ற நிலமற்ற விவசாயிகள வாழ்ந்து கொண்டிருக்கிறா கள். அதைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி எருமைப் பாலுக்கு விலை நிர்ணயித்து உயர்த்திக் கொடுத்திருக்கிறார்களோ அதேபோல் தர்மபுரி மாவட்டத்தில் இருக்கின்ற அந்த ஒன்றேகால் இலட்சம் குடும்பங் களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு, பசும்பாலுக்கும் விலையை உயர்த்தித் தரவேண்டுமென்று சொல்லி, தர்மபுரி மாவட்டத்திற்கு எண்ணற்ற திட்டங்களையும், எண்ணற்ற தொழிற்சாலைகளையும், எண்ணற்ற கல்வி நிலையங்களை யும் அளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர் களுக்கு மாவட்ட மக்களின் சார்பாக நன்றி சொல்லி முடிக் கின்றேன். வணக்கம்.

பிற்பகல் 4-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. இராசா ராமன்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, பால் வழங்கு துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை ஆகிய மானியக்கோரிக்கை களில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று ஆசைப்படு கிறேன்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''.

என்ற வள்ளுவரின் வாக்குப்படி, நல்ல எண்ணத்தோடு, தமிழக அரசு பல கோடிக்கணக்கான ரூபாய்களை இன்றைய தினம் விவசாயத்திற்காகவும், விவசாய உற்பத்திக்காகவும் செலவு செய்தாலும், இன்னும் விவசாயிகளின் நிலைமையில் மாற்றமில்லை என்பதை நினைத்து, அவர்களுடைய வாழ்வு வளம் பெற சில கருத்துக்களைச் சொல்லலாம் என நினைக் கிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டமும், திருச்சி

மாவட்டமும் காவிரியை நம்பி வாழ்கிற மாவட்டங்களாகும். 1974 ஆம் ஆண்டு காவிரி நீர் ஒப்பந்தப் பிரச்சினைக்குப் பிறகு தமிழ்நாட்டை ஆண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின் கவனக் குறைவாலும், மெத்தனப்போக்காலும் மீண்டும் அந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த முடியவில்லை. அதோடு மட்டுமல்லாமல், கர்நாடக அரசுடைய பிடிவாதத்தாலும், தஞ்சை மாவட்ட விவசாயிகள் கடந்த 15—16 ஆண்டுகளாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைய நிலைமையில் நடுநிலையில் உள்ள மத்திய அரசு அளித்துள்ள காவிரி நீருக்கான உத்தரவு, அம்மாமன்றத்தின் சார்பாக மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் நடுவர் மன்றத்திற்கும் ஒரு நல்ல முடிவை அளித்து இருக்கிறது என்பதை நாம் நன்றியோடு தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் தரணியில் கடந்த எட்டாண்டுக் காலமாக வானம் பொய்த்த காரணத்தால் இன்றைய தினம் அந்த மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகள் எந்த அளவுக்கு அல்லலுறுகிறார்கள் என்பதைத் சற்று சிந்திக்க வேண்டும். 8 ஆண்டுக்காலமாக வானம் பொய்த்த காரணத்தினால் இங்கே இருக்கிற விவசாயிகள், விவசாயத்தை நம்பியுள்ள சிறு குறு விவசாயிகள் வாங்கிய கடன்களைக் கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் வாங்கிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அப்படி கடன் தள்ளுபடி செய்ய அரசு முன்வராவிட்டாலும், அவர்கள் வாங்கிய கடனுக்கான வட்டியையும், அதிகப்படி வட்டியையும், செலவுத் தொகைகளையும் இந்த அரசு தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, கடனைப் பல ஆண்டுகள் தவணையில் வசூல் செய்துகொள்ளலாம் என்ற வகையில் ஒரு குறிப்பிட்ட ஆண்டுக் காலம் நிர்ணயித்து காலக்கெடு வைத்து வசூலிப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு இயற்கை நமக்குச் சாதகமான நிலையில் இருக்கிற காரணத்தால் மேட்டூர் அணையில் ஏறத்தாழ 100 அடி தண்ணீர் இருக்கின்ற காரணத்தால் தமிழக அரசு வருகின்ற ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணையைத் திறப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதைக் கேள்விப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள், குறிப்பாக தஞ்சை மற்றும் திருச்சி மாவட்டங்களின் விவசாயப் பெருங்குடி



மக்கள் குறுவை சாகுபடிக்குத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் அவர்களுக்குத் தேவையான விதை நெல் போன்றவைகளை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் மானிய விலையில் விதை நெல் மற்றும் உரம் உபகரணங்களைக் கொடுப்பதற்கும் அரசு முன்வரவேண்டும்.

பிற்பகல் 4-35

விவசாயிகள் பெற இருக்கிற கடன்களை உடனடியாகக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். விவசாயிகள் கடன் வேண்டும் என்று அணுகுகிறபோது, குறுவை விவசாயம் செய்வதற்கு விண்ணப்பித்தால் காலம் கடந்து கடன் கிடைக்கிறது. உரம் கிடைக்கிறது. நான் இதற்கு அரசைக் குறை சொல்வதற்குத் தயாராக இல்லை. பல அதிகாரிகள் காலத்திலே நடவடிக்கை எடுத்து கடன் கொடுப்பதற்கு உறுதுணையாக இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து இதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கரும்பு, நெல் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களுக்கு உடனடியாக விலை நிர்ணயிக்க வேண்டும். இப்போது கொடுக்கிற விலை போதவில்லை. அண்டை மாநிலமாக இருக்கிற ஆந்திராவிலும், கர்நாடகாவிலும், தமிழகத்தைவிட அதிகமாகக் கரும்புக்கும், நெல்லுக்கும் விலை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் விவசாயத்திலே முன்னணியிலே இருக்கின்ற மாநிலமாக இருக்கின்ற காரணத்தினாலும், விவசாயத்தையே நம்பி இருக்கின்ற காரணத்தாலும், விவசாயிகளுடைய உற்பத்திப் பொருள்களுக்கு விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். அதற்காக ஒரு கமிஷனை நியமித்து விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இந்த ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட நெல்லை விலை கொடுத்து வாங்குவதற்குக் கொள்முதல் நிலையங்களில் சில நேரங்களில் தயங்குகிறார்கள். காரணம் அவர்களுக்கு இட வசதி போதவில்லை. கொள்முதல் செய்த நெல்லை கொடவுனில் அடுக்குவதற்கு அங்கே கொடவுன்கள் இல்லை. ஆகவே தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சில நாட்கள் விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதை நிறுத்தி வைத்தார்கள். அந்த நிலை இனி இல்லாமல் இருப்பதற்கு அதிகப்படியான

கொள்முதல் நிலையங்களை துவக்கி ஆங்காங்கே உடனடியாக கொடவுன்களை கட்டி நெல் மூட்டைகளை அடுக்கி வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும். கரும்பை விவசாயிகள் வெட்டி பல மாதங்கள் ஆகியும், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பணம் இன்னும் கிடைக்கவில்லை. அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அதோடு மட்டுமல்ல, கரும்பை ஏற்றிச் செல்லுகிற கார்ட்டாக இருந்தாலும், மாட்டு வண்டியாக இருந்தாலும் அதனுடைய வாடகையைக்கூட உடனடியாக தஞ்சை மாவட்டத்திலுள்ள கரும்பாலை அதிபர்கள் விவசாயிகளுக்கு கொடுப்பதில்லை. காலம் கடந்து அந்த விவசாயிகளுடைய வாடகையை அவர்கள் அளித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதனை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

விவசாயிகள் மின் இணைப்பு வேண்டும் என்று பல்வேறு காலக் கட்டத்திலே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். விவசாயத்தைப் பொறுத்த வரையில் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து மின் இணைப்பு பம்புசெட்டுகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு வீசிய புயலால், வெள்ளத்தால் பாதிக்பட்ட பகுதிகளில், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இன்சூரன்ஸ் திட்டத்தை இன்னும் செயல்படுத்தவில்லை. இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே வீசிய புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல இடங்களில் இன்சூரன்ஸ் திட்டத்தை அறிமுகப்படுத்தவில்லை. அந்த இன்சூரன்ஸ் திட்டத்தை உடனடியாக அமல் படுத்தப்பட வேண்டும். விவசாயிகளுடைய விலை பொருள்களுக்கு விலை நிர்ணயிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைக் கல்லூரியை தஞ்சை மாவட்டத்திலே அமைக்க வேண்டும். தமிழகத்தின் நெற்களஞ்சியமாக இருக்கின்ற தஞ்சை மாவட்டம் பல்வேறு வழிகளிலும் பின்னடைந்திருக்கிறது. தமிழகத்தின் நெற்களஞ்சியமாக இருக்கின்ற தஞ்சை மாவட்டத்திற்கு தனிச் சலுகை செய்து விவசாய உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 4.40.

கால்நடையைப் பொறுத்தவரை, கால்நடை உற்பத்தியில் தமிழகம் மிகவும் பின்னோக்கி உள்ளது. கால்நடை இன உற்பத்தி மூலம் கால்நடைகளை பெருக்க வேண்டும். ஆனால், பல்வேறு காலக்கட்டத்தில் கால்நடைகளின் உற்பத்தி குறைந்து வருகிறது என்பதனை தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மு. நடேசன்.

**திரு. மு. நடேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 1/2 கோடி மக்களின் உள்ளங்களிலே குடி கொண்டு இருக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களினுடைய பாதம் தொட்டு என்னுடைய உரையை துவங்குகின்றேன். ஆறறிவு உள்ள மனிதர்களுக்கு மட்டும் தான் நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் சலுகையா என்றால், இல்லை இல்லை, இந்த ஐந்தறிவு உள்ள கால்நடைகளுக்கும் இத்தனை சலுகைகள் அளித்து இருக்கிறேன் என்று எங்களுடைய புரட்சித் தலைவி அறிவித்தலை த வரவேற்றுப் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல எங்களுடைய மறைந்த முன்னாள் புரட்சித் தலைவர் அவர்கள், 'சத்தியம் நீயே? தர்மத்தாயே! குழந்தை வடிவே' என்று பாடிவிட்டுச் சென் றார்கள். அந்தத் திட்டத்தை மனதிலே வைத்து எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள், அவருடைய வழி நின்று கால்நடைகளை வளர்ப்பதிலே அக்கறை எடுத்துக் கொண்டு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கின்றேன். மேலும் இந்த நேரத்திலே ஒன்றை நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன் இங்கே, தாய் எட்டு அடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாயும் என்று சொல்வார்கள் எங்களுடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எந்த அளவுக்கு இந்த ஆட்சியை நடத்திச் சென் றார்களோ அதைவிட இன்றையதினம் பன்மடங்கு எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி செலுத்துவதை நீங்கள் எல்லாம், நாங்கள் எல்லாம் கண் முன்னாலே பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அதற்காக நான் இதை வரவேற்கின்றேன்

அதேபோல, இன்றைய தினம் கால்நடையைப் பொறுத்த வரை, பால் வளத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு மனிதனுக்கும் தினந்தோறும் பால், தயிர், நெய் போன்ற அத்தியாவசிய தேவையாக இந்த பால் வளம் இருந்து

[திரு. மு. நடேசன்] [1992 ஏப்ரல் 21

கொண்டு இருக்கிறது. இந்த பால் வளத்தை இன்றைய தினம் பார்த்தீர்களேயானால், மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் நம்முடைய தமிழகம் முன்னிலையில் இருந்தாலும் இன்னும் இது போதாது. வளர்ந்து கொண்டிருக்கிற மனித சமுதாயத்தையே வாழ வைக்கின்ற இந்த பால் வளம் இன்னும் மேலும் இங்கே வளர்க்கப்பட வேண்டும் என்பதற்காக இன்றைய தினம் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்து இருக்கின்றார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றைய தினம் என்னென்ன அத்தியாவசியத் தேவையோ அதை இன்றையதினம் எங்களுடைய புரட்சித் தலைவி, அவர்கள் அறிவித்து செயல் படுத்தி இருக்கின்ற இந்த நேரத்திலே இங்கே நம்முடைய புனிதத் தலைவி புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே ஒரு கோடி செலவில 1,127 கால்நடை மருந்தகங்களுக்கும் துணை மையங்களுக்கும் உறைவிந்து போன்ற வசதிகளை அளிக்கும் திட்டத்தைத் தொடங்குவதை நான் வரவேற்கிறேன்.

அதேபோல, இங்கே ஒசூரிலும் ஈச்சங்கோட்டிலும் 2.68 கோடி ரூபாய் செலவில் உறைவிந்து உற்பத்தி செய்யும் வசதிகள் செய்து கொடுத்ததை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். 18 இலட்சம் உழவர்கள் பயனடையும் பால் பெருக்குத் திட்டம்-3 என்பதை 62.2 கோடி செலவில் 8 மாவட்டங்களிலே செயல்படுவதை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப் பட்டு இருக்கின்றேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் சென்ற 2 மாதங்களுக்கு முன்னாள் பாலின் விலையை—அதாவது 1 கிலோ எருமைப் பாலினுடைய கொழுப்பு சத்துக்கு 65-லிருந்து 90 ஆக உயர்த்தி தந்து இருக்கிறார்கள். ஆனால், அதை நாம் நிச்சயமாக வரவேற்றே தீரவேண்டும். காரணம், 1987-லே ஒரு கிலோ கொழுப்பு சத்தினுடைய விலை 50 ஆக தான் இருந்தது. ஆனால், இன்றைய தினம் அந்த விலையை 4, 5 ஆண்டுகளுக்குள்ளே 90 ஆக உயர்த்தியதை நான் பாராட்டி வரவேற்கின்றேன். அப்படி வரவேற்கின்ற நேரத்திலே, பசும் பாலினுடைய கொழுப்பு சத்தினுடைய விலை ஒரு கிலோ 1987-லே வெறும் 24 ரூபாயாகத்தான் இருந்தது. ஆனால் இன்றையதினம் அதனுடைய விலை 32.30 ரூபாயாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த 5 ஆண்டுகளிலே பசும்பாலின் கொழுப்பு சத்து விலை ஏறக்குறைய 7½ ரூபாய் தான் உயர்ந்து இருக்கின்றது. ஆகவே தயவுசெய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை நான்



1992 ஏப்ரல் 21] [திரு. மு. நடேசன்]

கேட்டுக் கொள்கிறேன், பசும்பாலினுடைய விலையை உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு கொள்ள ஆசைப்படுகின்றேன். காரணம், இங்கே ஆகின்ற செலவு பசுவுக்கும் எருமைக்கும் ஒன்றாகத் தான் ஆகிக் கொண்டு இருக்கிறது. தீவனத்திற்கு என்ன செலவாகின்றதோ அதே செலவு தான் பசுவுக்கும் ஆகின்றது. ஆகவே நீங்கள் பசும்பாலின் விலையை உயர்த்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டிக் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இங்கே எருமை மாட்டை விட பசு மாட்டிலே பல பெரிய சிக்கல்கள் இருந்துகொண்டு இருக்கின்றன. பசுமாட்டை வெயிலிலோ மழையிலோ கட்ட முடியாது. ஆகவே அதற்கு இன்னும் செலவு அதிகமாகிற கரணத்தால் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பசுமாட்டின் பாலுக்கு விலையை உயர்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே நம்முடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் இலவசமாக கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளித்தல், செயற்கை முறை கருஊட்டல் நடத்தல், சரிவிகித காலநடை தீவனம் அளித்தல் ஆகியவைகளை திட்டம் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனை தமிழ்நாட்டில் உள்ள அத்தனை வேளாண்குடி பெருமக்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 4-45.

இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில் பால் உற்பத்தியாளர்களுக்கு வாரம் ஒரு முறை பணம் பட்டுவாடா செய்யப்படுவதாக இருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறை தான் பணம் பட்டுவாடா விவசாய பெருங்குடி மக்களுக்கு செய்யப்படுகிறது. இந்த குறையை தயவுசெய்து நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் பண்ணைகளுக்கு சூரிய வெப்பத்தால் இயங்கும் கொதி கலன்கள் அமைக்க பணம் ஒதுக்கியுள்ள நம்முடைய மாண்புமிகு காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன்.

கால்நடை தீவன ஆலை மாதவரம், ஈரோடு, கப்பலூர் ஆகிய இடங்களில் தான் உள்ளது. இந்த ஆலைகள் போதாது. மற்ற மாவட்டங்களிலும் இதுபோன்ற ஆலைகளை உடனடியாக திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சேலம் பால் பண்ணை விரிவாக்கத்திற்கு ரூ. 146.15 இலட்சமும், ஆத்தூர் பால் குளிரூட்டும் நிலைய விரிவாக்கத்திற்கு ரூ. 47.49 இலட்சமும் நாமக்கல் பால் குளிரூட்டும் நிலைய விரிவாக்கத்திற்கு ரூ. 96.8 இலட்சமும் அளித்துள்ள நம்முடைய மாண்புமிகு காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை இந்த நேரத்தில் பாராட்டுகிறேன்.

கிராமப்புற பொருளாதாரம் முன்னேற வேண்டுமென்று சொன்னால் கால்நடை வளர்ப்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன். தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம், சிறப்பு கால்நடை வளர்ப்புத்திட்டம், தமிழ்நாடு இறைச்சி கழகம் ஆகிய அரசு நிறுவனங்கள் மேலும் வளப்படுத்தப் படவேண்டும். அப்படி வளப்படுத்தினால் இங்கே கால்நடைகள் மேலும் வளர்வதற்கு வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

ஆட்டு இறைச்சி, கோழி இறைச்சி, கோழி முட்டை ஆகியவற்றிற்கு நல்ல விலை ஏறுகிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இங்கே தனிப்பட்டவர்கள் அதை கொள்ளையடித்துக் கொண்டிருக்கிற காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கே நம்முடைய மத்திய நிதியுதவி திட்டத்தில் கீழ மானியமாக கொடுக்கப்படும் தொகைக்குப் பதிலாக, அதாவது அமவுண்டாக கொடுப்பதை மாற்றி தயவு செய்து மானியத்திற்கும் ஆடுகளே வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 1990-ல் பழங்குடி நலத்துறை ஆணை எண். 1204-ன்படி மானியம் வழங்க தமிழ்நாடு முழுவதும் 1945 யூனிட்டுகள் அனுமதிக்கப்பட்டன. இதில் சேலம் மாவட்டத்திற்கு மட்டும் 1270 யூனிட்டுகள் கொடுக்கப்பட்டன. அதாவது மொத்தம் வழங்கப்பட்ட யூனிட்டுகள் 1945. இதிலே சேலம் மாவட்டத்திற்கு மட்டும் 1270 யூனிட்டுகள் என்று சொன்னால் அன்றையதினம் தி.மு.க. அமைச்சராக இருந்தவரும், மற்றவர்களும் எந்த அளவுக்கு கொள்ளையடித்து இருப்பார்கள் என்பதை நீங்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும் அதன் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையின் மானியம் முழுவதும் முறையாக மக்களுக்கு சென்றடைய வேண்டும். இடைத்தரகர்களை நடுவில் ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



சேலம் மாவட்டம் வீரபாண்டி தொகுதியிலுள்ள திருமாம் பட்டியில் கால்நடை மருத்துவமனை கட்ட 1989-ஆம் ஆண்டு சர்வே நம்பர் 25/12-ல் 0.68 செண்ட் நிலம் அரசு சார்பாக ஒதுக்கப்பட்டது. அந்த நிலத்தை அன்றைய தி.மு.க. அமைச்சராக இருந்தவரும் மற்றும் பலரும் இன்றைய தினமும் அபகரித்துக் கொண்டு, காலி செய்யாமல், ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக நடவடிக்கையெடுத்து அந்த நிலத்தை கைப்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் நகரத்தின் மையப் பகுதியில் தற்போது கால்நடை மருத்துவமனை அமைந்துள்ள இடத்தில் போதிய இடவசதி, அதாவது ஏறக்குறைய 40, 50 ஏக்கர் நிலம் அங்கே இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் வெட்டர்னரி காம்ப்ளெக்சை அமைத்தால், அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளும் மற்றவர்களும் ஒரே இடத்தில் அந்த கால்நடைகளைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அதை உடனடியாக செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தின் மூலமாக தலா ரூபாய் 1.30 கோடி செலவில் கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகம் முழுவதும் தொடங்கப்பட உள்ளதாக அறிகிறேன். என்னுடைய தொகுதியான சேலம்-2 தொகுதியில் இத்தகைய ஒரு சங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்களை கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 4-50

மேலும் சேலம் இரண்டாவது தொகுதியில் குமாரசாமிப் பட்டி பால் உற்பத்தியாளர்கள் சங்கம் ஒன்று உள்ளது. தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய சங்கம். தினந்தோறும் 12 ஆயிரம் லிட்டர் பாலை நம்முடைய அந்த பெடரேசனுக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் 5, 6 மாதங்களாக ஏறக்குறைய 25 லட்சத்திலிருந்து 30 லட்சம் வரையில் அந்தச் சங்கத்திற்கு பணம் கொடுக்காமல் நிலுவையில் வைத்துள்ளார்கள். ஆகவே, உடனடியாக அந்தப் பணத்தை, அந்தச் சங்கத்திற்குத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். காரணம், அங்கே பணம் தராத காரணத்தினாலே, பால் உற்பத்தியாளர்களாக இருக்கிற விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதை அரசினுடைய கவனத்திலே உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சேலம் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று உள்ளது. அதிலே ஏறக்குறைய 147 பணியாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பால் வழங்கும் ஒன்றியங்களாக இயங்கி வந்த அனைத்தும் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்துடன் அப்போதே இணைக்கப் பட்டுவிட்டன. ஆனால் இந்த பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் மட்டும் இணைக்கப்படவில்லை. ஆகவே, தயவு செய்து, உடனடியாக பால் உற்பத்தியாளர் சங்கத்துடன் இணைத்து அந்தத் தொழிலாளர்களை நீங்கள் காப்பாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு ரூ. 100 ஆபத்து ஈட்டுப்படி வழங்கப்படுகிறது. ஆனால் சில கால்நடை ஆய்வாளர்களுக்கு வெறும் ரூ. 25 மட்டும் ஆபத்து ஈட்டுப் படியாக வழங்கப்படுகிறது. இதை மாற்றி எல்லாக் கால் நடை ஆய்வாளர்களுக்கும் ஆபத்து ஈட்டுப்படி வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவியினு டைய ஆட்சியிலே இன்றையதினம் இத்துணை கால்நடை வசதிகள் இருந்தும், பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்கிற ஒரு நிலைமையை மாற்றிட நாம் பசுமைப் புரட்சியை இந்த நேரத்திலே ஏற்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டு, என்னை இங்கே பேச பணித்தமைக்கு என்னுடைய நன்றியைக் கூறி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்கிற திருவள்ளுவருடைய திருக்குறளைச் சொல்லி, விவசாயத்துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு விவசாயத்தையும் ஒரு தொழிலாக அறி விக்கவேண்டும் என்று விவசாயிகள் போராடி வருகிறார்கள். சமீபத்தில பேசிய மத்திய நிதியமைச்சர் திரு. மன்மோகன் சிங் அவர்கள், விவசாயத்தை ஒரு தொழிலாக அறிவிப்பது சம்பந்தமாக ஒரு குழுவை நியமித்து பரிசீலிக்கலாம் என்கிற ஒரு நல்ல கருத்தை அவர்கள் தெரிவித்து இருக்கிறார் கள். அந்தக் கருத்து முழுமை பெறுவதற்கு நாடு



தழுவிய ஒரு கருத்தரங்கு, ஒரு சிந்தனை ஓட்டத்தை நாம் உருவாக்கினால், விவசாயிகளுடைய வாழ்க்கையில் ஒரு மறு மலர்ச்சியை நாம் ஏற்படுத்த முடியும் என்பதனை நான் அறிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உதாரணமாக, இன்றைக்கு சிறுதொழில்கள் செய்பவர்கள் அல்லது பெரிய தொழில் செய்பவர்கள் எல்லாம் 30 சதவீதம் தங்களுடைய பணத்தை முதலீடு செய்தால், அரசாங்கத் திடமிருந்தோ அல்லது வங்கிகளிடமிருந்தோ 70 சதவீதம் கடனை அவர்களால் பெற முடிகிறது. ஆனால், விவசாயி கள் 30 சதவீதத்தை முதலீடு செய்தால், அவர்களுக்கு அந்த அளவிற்கு கடன் கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் எந்தவிதமான திட்டமும் இல்லை என்பது நமக்கு எல்லாம் மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய விஷயம்.

உதாரணமாக பொதுத் துறை வங்கிகள் தங்களுடைய மொத்த வைப்பு நிதியிலே 16 சதவீதத்தை விவசாயிகளுக்குக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனாலும் கூட, பொதுத் துறை வங்கிகளிடமோ, அல்லது கூட்டுறவுச் சங்கங்களிடமோ, விவசாயிகள் கடன் பெற முயற்சிக்கிறபோது, தொழில் அதிபர் களுக்கு கிடைக்கின்ற சலுகைகள் தொழில் அதிபர்கள் பயன் பெறுகிற விதத்தில் விவசாயிகளால் பயன் பெற முடியவில்லை என்பதனை நான் இங்கே வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு ஏகபோக கொள்முதல் என்கிற ஒரு திட்டத்தை தஞ்சை மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலே சிதம்பரம் தாலுக்கா, காட்டு மன்னார்குடி தாலுக்கா போன்ற இடங்களிலே வைத்திருக் கிறார்கள். ஏகபோகக் கொள்முதல் என்பது அரசாங்கத் தினுடைய ஒரு கொள்கையாக இருக்கிறது. மிகக் கஷ்டப் பட்டு, விவசாயிகள் நெல்லைப் பயிரிடுகிறார்கள். ஆனால், அவர்கள் பயிரிட்டு இருக்கிற நெல்லிலே ஒரு மணியைக் கூட விற்பதற்கான உரிமை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவ்வளவு நெல்லையும், அவர்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய ஒரு கட்டாயத்திலே இருக்கிறார்கள். அதற்குப் போதுமான விலை கிடைக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில், அந்த நெல் வெளிமார்க்கெட்டில் விற்கப்படுகிற போது 30-லிருந்து 40 ரூபாய் வரை அதிகமாக விலை கொடுத்து, அங்கே இருக்கிற விவசாயிகளோ அல்லது வியா பாரிகளோ அதனைப் பெறுகிறார்கள். அப்படிப் பார்க்கிற

போது, ஒரு விவசாயி உண்மையிலேயே மிகுந்த வருத்தத்
திற்கும் கஷ்டத்திற்கும் ஆளாகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்
கிறது. தான் உற்பத்தி செய்த நெல்லை, தான் விரும்புகிற
விலைக்கு விற்க முடியவில்லை. ஆனால் பக்கத்திலே இருக்
கிற அந்த ஏகபோக கொள்முதலினுடைய எல்லைக்கு அப்
பாற்பட்டு கிராமங்களிலே இருக்கிற விவசாயிகளோ, வியாபாரி
களோ அதிகமான விலைக்கு அதை விற்கமுடிகிறபோது,
கஷ்டப்பட்டு இவ்வளவு நெல்லை உற்பத்தி செய்ததினுடைய
பலன் என்ன என்று விவசாயிகள் வருந்தக் கூடிய ஒரு சூழ்
நிலை இருக்கிறது.

பிற்பகல் 4.55

அதல்லாமல், குறிப்பாக எங்களுடைய பகுதியில் சிதம்பரம்,
காட்டுமன்னார்குடி பகுதிகளில் ஏகபோகக் கொள்முதலினால்
விவசாயிகள் அடைகின்ற இன்னொரு பெரிய சிரமம் என்ன
வென்றால், தஞ்சை மாவட்டத்திலே ஏகபோக கொள்முதல்
இருக்கிற காரணத்தினால் விவசாயிகளுக்கு அங்கே முன்னுரிமை
யிலே மின்சார இணைப்பு வழங்கப்படுகிறது. ஆனால் அதே
ஏகபோக கொள்முதல் இருக்கிற சிதம்பரம் காட்டுமன்
னார்குடி தாலுக்காக்களில் விவசாயிகளுக்கு மின் இணைப்
பிற்கு முன்னுரிமை கிடையாது என்பது மிகவும் வருத்த
மான ஒரு சூழ்நிலை என்பதனை நான் விவசாயத்துறை
அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்பு
கிறேன். இன்றைக்கு விவசாயிகளுடைய நிலைமை எப்படி
யிருக்கிறது என்றால் ஈசல் என்கிற ஒரு சின்ன பூச்சி இருக்
கிறது. அது மழைக் காலங்களில் பூமியிலிருந்து கிளம்பி
வெளியே வரும். அது வெளியிலே வருகின்றபோதே அந்த
ஈசலைப் பிடித்துத் தின்பதற்கு அந்தப் புற்றுக்கு அருகிலே
குருவிகள் உட்கார்ந்திருக்கும், காக்கைகள் உட்கார்ந்திருக்கும்.
நாய்கள் கூட சில சமயம் பிடித்துத் தின்றுவிடும். அதையும்
மீறி வருகிறபோது மனிதர்கள் கூட அதைப் பிடித்துத் தின்று
விடுவார்கள். யாருடைய கையிலுமே அது கிடைக்கவில்லை
என்றால், கொஞ்ச தூரம் பறந்து சென்று அதனுடைய
இறக்கைகள் தானாகவே கீழே விழுந்து அது அழிந்துவிடும்.
அதைப்போன்ற ஒரு சூழ்நிலைதான் இன்றைக்கு விவசாயி
களுக்கு இருக்கிறது. எவ்வளவு கஷ்டப்பட்டு அவர்கள்
உழைத்தாலும்கூட, தங்களுடைய பொருட்களுக்கு நியாயமான
விலை கிடைக்கவில்லை என்பது விவசாயிகளுக்கு ஒரு பெரிய
ஏமாற்றமாக இருக்கிறது என்பதனை நான் இந்தச் சபையிலே
கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு வேலிக் கருவை என்கிற ஒரு செடி இருக்கிறது.
ஒரு முள், ஒரு வகை விறகு இருக்கிறது. அதை ஒரு டன்
ரூ. 500-க்கு வாங்குகிறார்கள். ஆனால் கரும்பிற்கு ரூ. 300



தான் நாம் விலை கொடுக்கிறோம். அப்படி இருக்கிறபோது
விவசாயி எப்படி மகிழ்ச்சியுடன வாழமுடியும்? எப்படி விவ
சாயம் என்கிற ஒரு துறை செழித்து வளர முடியும என்
டதனை தயவு செய்து நாம் உணர்ந்து பார்க்கவேண்டும்.
இது ஒரு பொதுவான கருத்து. எல்லோரும் ஆழமாக சிந்தித்துப்
பார்க்க வேண்டிய கருத்து. நம்முடைய விவசாயம்
என்பது புராதனமான தொழில். வள்ளுவர் காலத்தில்
ருந்தே அதற்கு முன்பிருந்த விவசாயத்தைப் பற்றி எல்
லோரும் பேசி வருகிறோம். ஆனால் விவசாயத்திலே ஈடு
படுகிறவர்களுக்கு பெரிய லாபம் கிடைப்பதில்லை. அவர்
களுடைய வாழ்க்கையில ஒரு பெரிய மறுமலர்ச்சி கிடைக்கவில்லை.
அவர்களுடைய பொருட்களுக்கு போதுமான விலை கிடைக்க
வில்லை என்பதற்கு மேலும் மேலும் விவசாயக் குடும்
பங்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்ற நிலையும், மங்கிப்
போகின்ற ஒரு சூழ்நிலை இருப்பதையும் நாம் இங்கே பார்க்
கிறோம். ஆனால் அதே நேரத்தில் இன்றைக்கு ஏகபோகக்
கொள்முதல் விவசாயிகளுக்கு இருக்கிறது. ஆனால் வியா
பாரிகளுக்கு 'ட்ரேடர்ஸ் லெவியில்' வியாபாரிகளுககு அதிலே
சலுகை அளிக்கப்படுகிறது. தயவு செய்து நம்முடைய
விவசாய அமைச்சர் அவர்கள் அதை உணர்ந்து பார்க்க
வேண்டும். அதற்கு அவர்கள் சொல்கிற காரணம
வியாபாரிகளுக்கு லெவியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்
கிற காரணத்தால், அரிசி விலை குறைகிறது என்று சொல்
கிறார். எங்களைப் போல் நீண்டகாலமாக ஏகபோக
கொள்முதல் இருக்கிற பகுதியிலே வாழ்கிற விவசாயிகளுக்கு அந்தக்
கருத்து எவ்வளவு தவறான கருத்து என்பது நன்றாகப்
புலப்படுகிறது. இந்த ஆண்டு நாம் 62 லட்சம் மெட்ரிக்
டன் நெல்லை உற்பத்தி செய்தோம். ஏராளமான மழை
பெய்தது. அதனால் ஏராளமான விளைபொருட்கள்
நமக்கு விளைந்தன. அந்த காரணத்தினால்தான் அரிசி
விலை ஏறாமல் இருந்ததே ஒழிய, வியாபாரிகள் எங்கு வேண்
டுமானாலும் தங்களுடைய பொருட்களைக் கொண்டு செல்
லலாம் என்கிற காரணத்தினால் தான் விலை ஏறாமல்
இருந்தது என்று சொல்வது ஒரு தவறான கருத்து என்பதனை
நான் இந்தப் பேரவைக்கு சொல்லிக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். நெல்லை விளைவிக்கின்ற விவசாயி
யிக்கு சலுகை கிடையாது. ஆனால் நெல்லை விற்பனை
செய்கின்ற வியாபாரிக்கு சலுகை என்று சொன்னால்,
அதிலே என்ன நியாயம் இருக்கிறது என்பதனை தயவு செய்து
விவசாய அமைச்சர் அவர்கள் உணர்ந்து பார்க்கவேண்டும்.

அடுத்ததாக விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற மானி
யம் எங்கள் பகுதியில் மிகப் பெரிய வெள்ளப்பாழ் ஏற்
பட்டது. வெள்ளப்பாழ் ஏற்பட்டபோது அரசாங்கம் முன்
வந்து விவசாயிகளுக்கு ஏராளமான சலுகைகளை அளித்தது

இதற்கு முன் வெள்ளப்பாழ் வந்தபோதெல்லாம் அளிக்கப் படாத சலுகைகள் இந்த முறை விவசாயிகளுக்கு அளிக்கப் பட்டது. அப்படி அளிக்கப்பட்டிருந்தும்கூட, நம்முடைய அரசாங்க நடைமுறைகளின் காரணமாக இந்தச் சலுகைகள் விவசாயிகளுடைய கைக்குப் போய்ச்சேரவில்லை. நான ஆதார பூர்வமாகச சில விளக்கங்களை இங்கே வைத்திருக் கிறேன். ஏராளமான உரமானியம் கொடுத்தார்கள். ஒரு குறு விவசாயிக்கு ரூ. 456 உர மானியம் வழங்கப்பட்டது. ஆனால் அந்த ரூ. 456-ஐ அந்த விவசாயி சலுகையாகப் பெறவேண்டுமானால் அவர் ரூ. 1234-ஐ ரொக்கமாகக் கொண்டுபோய் அந்த விவசாயக் கிடங்கில் கட்டி, அவர் அந்த உரத்தை எடுத்துச் செல்லவேண்டும் அப்படி அந்தப் பணத்தைக் கட்டினால் தான் அவருக்கு ரூ. 456 மானியம் கிடைக்கும. மிகக் கடுமையான வெள்ளப்பாழ் ஏற்பட்டு விவசாயிகள் தங்களுடைய பொருட்களை எல்லாம் இழந்திருக்கிற இந்த நேரத்திலே....

பிற்பகல் 5.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கையிலே பணம் உள்ள விவசாயி ரொக்கத்தைச் செலுத்தி அந்த மானிய சலுகையை பெற்றுக் கொள்ளவும் வழி வகை செய்யப்பட்டது. பணம் இல்லாதவர்கள் வேளாண் கூட்டுறவு சங்கங்களில் கடனாகப் பெற்றுக் கொண்டாலும் அவர்களுக்கும் இந்தச் சலுகையை இந்த அரசு வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற வகையிலே வேளாண் கூட்டுறவு சங்கங்களிலே அந்த நேரத்திலே கடன் கொடுக்கவில்லை. கடன் கொடுக்க முடியாத காரணத்தினால் விவசாயிகள் 1,234 ரூபாயைக் கட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதனை அறிந்த அதிகாரிகளும் உர வியாபாரிகளும் சேர்ந்து ஒவ்வொரு கிராமமாக வந்து அரசாங்கம் அளித்த அந்த ரசீதுகளை பெற்றுக்கொண்டு அவைகளுக்குப் பதிலாக விவசாயிகளுக்கு 100 ரூபாய் கொடுத்துவிட்டார்கள். வெறும் 100 ரூபாயைப் பெற்றுக்கொண்டு அரசாங்கம் அளித்த அவ்வளவு சலுகை களையும் அவ்வளவு மானியங்களையும் உர வியாபாரிகளுக்கு கொடுத்துவிட்ட விவசாயிகள் வழக்கம்போல் ஏமாந்து வீடு களுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள் என்பதை....



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் .

மாண்புமிகு திரு.கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற குற்றச் சாட்டிலே அந்தக் குற்றம் புரிந்த உர வியாபாரிகள் யார் யார்? அதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் யார் யார் என்று புள்ளி விவரத்தையும் தருவார்கள் என்று சொன்னால் நிச்சயமாக நடவடிக்கையை புரட்சித் தலைவியினுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி : பேரவைத் தலைவர் அவர்களே, என் கையிலே 750 பில்கள் வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அவை முழுமையையும் அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள்.

திரு. ச. அழகிரி : அமைச்சரிடம் கொடுத்து விடுகிறேன். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களானால் நல்லது. எடுப் பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதிலே நான் குற்றச் சாட்டாக சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு அவைகள் வரவேண்டும். நம் முடைய அதிகாரிகள் எப்படிச் செயல்படுகிறார்கள். நம் முடைய விவசாய இலாகா எப்படி செயல்படுகிறது? விவசாய கிடங்குகள் எப்படி செயல்படுகின்றன என்பதை உணர வேண்டும். அவைகள் இன்று செயல்படுபவை அல்ல நீண்ட நாட்களாக 8, 10 ஆண்டுகளாக அவர்கள் அப்படி பழகி இருக்கிறார்கள் என்பதையும் எனவே அவர்களுடைய பழக்கத்தை நாம் அறவே ஒழிப்பது என்பது சிரமம். இதற் காக அமைச்சர் அவர்கள் பெரிய முயற்சியே எடுத்துக் கொள்ளவேண்டிய என்பதற்காக நான் சொல்லுகிறேனே ஒழிய குற்றம் சொல்ல வேண்டும் என்ற உணர்வோடு நான் இதைச் சொல்லவில்லை. விவசாயிகளுக்கு இதுபோன்ற அனுபவங்கள் புதியது அலல. இன்று நேற்று ஏற்பட்ட அனுபவம் அல்ல. இது பன்னெடுங்காலமாக ஏற்பட்டிருக்கிற அனுபவம் இது. ஏனென்றால் விவசாயம் நம்முடைய தொன்மையான தொழில். ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆள்வதற்கு வந்த பிறகுதான் விவசாயிகளுடைய நிலைமையிலே மாற்றம் ஏற்பட்டது, ஏனென்றால் கிழக்கு இந்தியக் கம்பெனியோ அல்லது ஆங்கி லேயர் அரசாங்கமோ விவசாயத்திலே ஈடுபடவில்லை. அவர் கள் விவசாயத்தைப் புறக்கணித்துவிட்டார்கள். தொழி லிலே அவர்கள் ஈடுபட்ட காரணத்தினால் தொழில் மீது.

அவர்கள் எடுத்துக் கொண்ட அக்கறை விவசாயத்தின்மீது அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லை. அதுதான் காரணம் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்றால் ஆங்கிலேயர் வருவதற்கு முன்பு, மாடு கட்டி போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டி போர் அடித்த அழகான தென் மதுரை' என்று நம்முடைய பாடலிலே வருவதுபோல் இருந்தது. அன்றைக்கு விவசாயம் மிக செழிப்பான தொழிலாக இருந்தது. ஆனால் ஆங்கிலேயர்கள் வந்த பிறகு விவசாயம் புறக்கணிக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் அது ஒரு அடிமைத் தொழிலாகப் போய்விட்டது. நம்முடைய பழைய கிராமியப் பாடல் ஒன்று - ஊரான் ஊரான் தோட்டத்திலே ஒருவன் போட்டான் வெள்ளரிக்காய், காசுக்கு இரண்டு விற்கச் சொல்லி கடுதாசி போட்டான் வெள்ளைக்காரன்'' என்ற ஒரு கவிதை உண்டு.

ஒருவன் ஒரு தோட்டத்திலே வெள்ளரிக்காய் போட்டான். வெள்ளரிக்காய் விளைந்த பிறகு காசுக்கு இரண்டு வெள்ளரிக்காய் விற்க வேண்டும் என்று வெள்ளைக்காரன் கடுதாசி போட்டான் என்பது விவசாயிகளுடைய பாடல். அதிலே வருகிற முதல் வரியிலே வருவது அவன் தன்னுடை செயாந்த நிலத்திலே அந்த வெள்ளரிக்காயைப் போடவில்லை. ஏனென்றால் அவனுக்கு சொந்த நிலம் இல்லை. அவன் ஒரு ஊரான் தோட்டத்திலே போய் வெள்ளரிக்காய் போட்டான். அது தான் ஊரான் ஊரான் தோட்டத்திலே என்று அந்தப் பாடல் ஆரம்பிக்கிறது. சொந்த நிலமே இல்லை அவனுக்கு. அவன் வேறு ஒருவன் தோட்டத்திலே வெள்ளரிக்காய் போட்டான். ஆனால் அவன் அந்த வெள்ளரிக்காயை என்ன விலைக்கு விற்கவேண்டும் என்ற கருத்து ஆங்கிலேயர்களுடைய கடுதாசியிலேயிருந்து வருகிறது என்று அந்தக் காலத்திலே பாடல் கூறியிருக்கிறது. அந்த விவசாயி கவிதை எழுத வேண்டும் என்று எழுதியது அல்ல இது. வெள்ளரிக்காயை விற்க முடியாத காரணத்தினால் அவனுடைய கண்ணீர் கவிதை தான் அது என்பதை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, நம்முடைய காலத்திலாவது விவசாயத்துறையில் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வருவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். இன்றைக்கு தரமான விதைகள் நம்மிடம் கிடையாது. தேவையான விதைகளும் நம்மிடம் கிடையாது. எப்போதுமே விவசாயத்துறை விவசாயிகளுக்கு தேவையான 4 பாகத்திலே 1 பாகத்திற்கு தேவையான விதைகள்தான் நம்முடைய விவசாய கிடங்குகளிலே கிடைக்கின்றன. விதைகள் கூட தரமான விதைகளாக இருப்பதில்லை. அதற்கான திட்டம் அரசாங்கத்தினுடைய கையிலே



இல்லை. உங்களுக்கு தரமான விதைகள் கிடைக்க வேண்டு மானால் அன்றைக்கு பசுமைப் புரட்சி என்று சொன்னார்கள். அப்போது ஏற்பட்டதுதான் தரமான விதைகள். அன்றைக்கு ஏற்பட்டது தான் ஐ. ஆர். 20 விதைகள். அதன் பிறகு புதிய தரமான விதைகளை நாம் கண்டுபிடிக்கவில்லை. ஐ. ஆர். 20 உடைய ஜெர்மினேஷன் தரம் அந்த முளைக்கக் கூடிய தன்மை வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே விவசாயிகளுக்கு தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கு அவர்களுக்குத் தேவையான நேரங்களிலே கொடுக்க நாம் முயற்சி செய்யவேண்டும். அதற்கு மிகப் பெரிய கவனத்தை நம்முடைய அரசு எடுத்துக்கொள்ளவேண்டும். என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விவசாயமும், கால்நடையும் நம்முடைய புராதனமான தொழில்கள். இந்த இரண்டு துறைகளையுமே தனித் தனியாக வைத்து ஒரு நாள் முழுவதும் விவாதிக்கக்கூடிய சூழ்நிலையை நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் உருவாக்கி இருக்கலாம். ஆனால் இரண்டையுமே ஒரே நாளிலே வைத்து. ...

பிற்பகல் 5.05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வழக்கமாக மற்ற மற்றத் துறைகளுடைய விவாதத்திற்கு ஒவ்வொரு செஷன் தான் ஒதுக்கி இருக்கிறோம். இதற்கு இரண்டு செஷன்கள் ஒதுக்கியிருப்பதிலிருந்து நீங்கள் தெரிந்துகொள்ளலாம், இதற்குத் தனி முக்கியத்துவம் கொடுத்துத்தான் இருக்கிறோம் என்பதை இருந்தாலும் என்ன செய்வது? உங்களைப் போன்ற பலர் பேச வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

**திரு. ச. அழகிரி** : பேரவைத் தலைவர் அவர்களே, சுட்டிக்காட்ட வேண்டிய இடத்தில் இருப்பதனால் சுட்டிக்காட்டுகிறேன். தட்டிக் கேட்க வேண்டிய இடத்தில் இருக்கின்ற சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் தான் இதற்குத் தேவையான நேரத்தை உங்களிடமிருந்து கேட்டுப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு தேவையான விதைகளை, தரமான விதைகளைத் தருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலே ஒரு பெரிய திட்டத்தை தீட்ட வேண்டும். புதுமையான முறையில் நவீனமான முறையில் விவசாயத்தைச் செய்வதற்கான புதிய கருத்துக்களை நம்முடைய அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டும். அதன்மூலமாக அவருடைய பெயர் விவசாயிகளுடைய மத்தியிலே நிலை பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு கருத்து, இன்றைக்கு நம்முடைய கால்நடைத் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய

[திரு. ச. அழகிரி] [1992 ஏப்ரல் 21

கொள்கைக் குறிப்பிலே ஏராளமான நல்ல திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு நான் அவர்களைப் பாராட்டி கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்திலே 800க்கு மேற்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. ஆனால் அவைகள் எல்லாம் இன்றைக்கு கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துபோய்விட்டன. அதற்கான காரணம் என்ன என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். என்ன காரணத்தினால் அந்தப் பால் வழங்கும் சங்கங்கள் மறைந்து போயின என்பதை நாம் கண்டுபிடித்தாலே அந்தக் கால்நடைத் துறையிலே ஒரு பெரிய மாற்றத்தை நம்மால் கொண்டுவரமுடியும். அதற்கு மிக முக்கியமான காரணம் ஏழை விவசாயக் கூலிக்கு நாம் ஐ. ஆர். டி. பி. திட்டத்திலே ஒரு மாட்டை கொடுக்கிறோம், ஆனால் அந்த மாட்டை கணவனும் மனைவியும் வேலைக்கு செல்கின்றபோது, அவர்கள் வேலைக்குச் சென்றால்தான் கூலி கிடைக்கின்ற காரணத்தினால், மாடுகளை அவர்கள் வைத்துக் கொண்டு அவற்றை மேய்க்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அவர்கள் மாட்டை விட்டுவிட்டு கூலி வேலைக்குச் சென்றுவிடுகிறார்கள. வேலை கிடைக்காத காலங்களில் மட்டுமே தான் அவர்கள் அந்த மாட்டை மேய்ப்பதற்கான அல்லது பராமரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். இது ஒரு மிக முக்கியமான காரணம். இரண்டாவது காரணம் மானியம் அவர்களுக்கு போதுமான முறையிலே கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும் தரமான மாடுகள் அவர்களுக்குச் சென்று சேர்வதில்லை. இடையிலே அதிகாரிகள் அந்த மானியத் தொகையை எடுத்துக் கொள்கிறார்கள். எனவே தரமான மாடுகளை பெறமுடியாத இப்படி ஏராளமான காரணங்கள் இருக்கின்றன. எனவே அவைகளை எல்லாம் அமைச்சர் அவர்கள் சரிசெய்து கால்நடைத் துறையை அவர்கள் சீர் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய ஒரே ஒரு கருத்தை சொல்லிவிடுகிறேன். இந்த விவசாயக் கிடங்குகளை எல்லாம் விவசாயிகளுடைய குழுக்கள் மேற்பார்வையிடச் செய்வதற்கான ஒரு வாய்ப்பினை அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தருவார்களேயானால் விவசாயக் கிடங்குகளை செம்மையாக நடத்துவதற்கான ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று கேட்டுக் கொண்டு எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு பேரவைத் தலைவருக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. என். சுப்பிரமணியன்.**



1992 ஏப்ரல் 21]

**திரு. வி. என். சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானிய கோரிக்கை மீது விவாதம் செய்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி. மாண்புமிகு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது 1991-92 ஆம் ஆண்டினுடைய விவசாய உற்பத்தியினுடைய குறியீடு 80 இலட்சம் மெட்ரிக் டன் என்று சொன்னார்கள. ஆனால் அதே நேரத்திலே அவர்கள் சொல்கின்றபோது உற்பத்தி அளவு 90 இலட்சம் மெட்ரிக் டன் என்று சொல்லி குறியீட்டளவை விட 10 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அதிகமாக இருக்கின்ற அந்த புள்ளிவிவரத்தைச் சொன்னார்கள். இதுதான் புரட்சித் தலைவியினுடைய அரசினுடைய சாதனை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் கூட என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் 1991-92ஆம் ஆண்டினுடைய குறியீடு வெறும் 65 லட்சம் மெட்ரிக் டன் தான். ஆனால் உற்பத்தி 90 லட்சம் மெட்ரிக் டன் என்று சொல்லுகிறபோது இது உண்மையிலேயே புரட்சித் தலைவியினுடைய இமாலய சாதனை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறித்துக் கொள்பவர்கள் குறித்துக் கொள்ளலாம். புரட்சித் தலைவியினுடைய அரசினுடைய சாதனை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருடைய பாராட்டு என்று குறித்துக்கொள்பவர்கள் குறித்துக் கொள்ளட்டும்.

பிற்பகல் 5-10

இந்திய நாட்டிலே 70 சதவீத மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் அந்த விவசாயத்திற்கு உறுதுணையாக, விவசாயம் ஒரு தொழில் என்ற அளவுக்கு அகில இந்திய அடிப்படையில் அறிவிப்பதாக காங்கிரஸ் நண்பர் கூட குறிப்பிட்டார்கள். அப்படி விவசாயம் தொழில் என்று வருகிறபோது அந்தத் தொழிலுக்கு உண்மையிலேயே மிகப்பெரிய உறுதுணையாக இன்னும் சொல்லப்போனால் எங்கள் தொகுதியைப் போன்ற வறட்சிப் பகுதிகளில் எல்லாம் இன்றையதினம் விவசாயம் நடைபெறுவது இல்லை. ஆனால் அப்படிப்பட்ட விவசாயிகள் எல்லாம் இன்றைய தினம் நம்பி இருப்பது கால்நடை பராமரிப்பு ஒன்றுதான். எங்களைப்போன்ற வறட்சியான பகுதிகளில் இருந்து வருகிறவர்கள் எல்லாம் இன்றையதினம் பசுமையாக இருந்த தோட்டங்கள் எல்லாம் மழை இன்றி, தண்ணீர் இன்றி வறண்டு சுடுகாடு போல் காட்சி அளிக்கிறபோது அங்கே இருக்கின்ற விவசாயிகளுடைய தோட்டத்தினை நீங்கள் சென்று பார்ப்பீர்களானால் ஒவ்வொரு விவசாயினுடைய தோட்டத்திலும் ஒரு கோழிப் பண்ணையாவது

இருக்கும், 4 எருமை மாடுகளை வைத்து அந்த விவசாயி பாலை ஊற்றி சம்பாதித்து ஜீவனம் நடத்திக்கொண்டு இருப்டான். அந்த அளவுக்கு இன்றையதினம் கால்நடை பராமரிப்பு, கால்நடை வளர்ப்பு ஒவ்வொரு விவசாயிக்கும் உறுதுணையான தொழிலாக ஒரு அடிசனல் இன்கம் இன்டஸ்ட்ரி என்று சொல்லுகிற அளவுக்கு மிகப்பெரிய அளவிலே விவசாயிகளை காப்பாற்றிக்கொண்டிருக்கிறது.. அப்படிப் பார்க்கிறபோது அந்தக் கால்நடையை ஒவ்வொரு விவசாயியும் எந்த அளவுக்கு முன்னேற்ற வேண்டுமோ அந்த அளவுக்கு கால்நடை பராமரிப்பும், வளர்ப்பும் இந்த நாட்டுக்கு விவசாயத்திற்கு உரிய ஒரு இன்றியமையாத கடமையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் எல்லாம் அறிந்து இருப்பீர்கள். சேலம் மாவட்டத்தில் குறிப்பாக நாமக்கல் வட்டங்களில் எல்லாம் சென்று பார்ப்போமானால் அங்கே இருக்கின்ற அத்தனை தோட்டத்திலும் வீடு இருக்கும், பக்கத்தில் ஒரு ஷெட் இருக்கும். அந்த ஷெட்டில் அத்தனை விவசாயிகளும் ஒவ்வொருவரும் கோழிப் பண்ணை வைத்து அதன் மூலமாக விவசாயம் பெருகாத, விவசாயம் செய்யமுடியாத நேரத்தில் கோழிப் பண்ணையை வளர்த்து அதன் மூலமாக வருகின்ற வருமானத்தில் தன்னுடைய குடும்பத்தினை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல் எங்களுடைய கிராமங்களில் வந்து பார்ப்பீர்களானால் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு விவசாயியும் பால் கறக்கின்ற எருமை மாடுகளை வளர்த்து வைத்து அதன் மூலம் வருகின்ற தினசரி வருமானத்தில் அவர்கள் குடும்பங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் தமிழகத்தைப் பொறுத்த வரையில் விவசாயம் முன்னேற வேண்டும் என்றால் விவசாயி பட்டினி இல்லாமல் இருக்க வேண்டும் என்று சொன்னால் அந்த விவசாயிக்கு உறுதுணையாக, பக்கத் துணையாக வருமானம் தந்து கொண்டிருக்கிற அந்த கால்நடை பராமரிப்பை, கால்நடைத் துறையை மிகச் சிறந்த முறையில் நீங்கள் வளர்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்படி இந்தியாவில் பசுமைப் புரட்சி வந்ததோ, இன்றையதினம் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு ஏற்பட்டு இருக்கின்ற ஒரு நாடு, என தலை நிமிர்ந்து நிற்கும் அளவுக்கு பசுமைப் புரட்சி அதற்கு வழி வகுத்ததோ அதேபோல் கால்நடை வளர்ச்சிக்கு, கால் நடைக்கு ஒரு புரட்சி ஏற்பட வேண்டும். அப்படி புரட்சி ஏற்படுவதற்கு கால்நடையைப் பொறுத்த



வரையில் நவீன முறையில் ஒரு கால்நடை பராமரிப்பு வழிமுறைகளை எல்லாம் ஏழை விவசாயிகள், படிப்பு அறிவு இல்லாதவர்களுக்கு எடுத்து உரைக்கவேண்டும். அப்படி எடுத்து உரைத்து பணிகளைச் செய்யவேண்டும். அந்த கால்நடைகளுக்கு வருகின்ற ஆபத்துகள், நோய்களை எல்லாம் தீர்க்கின்ற பணிகளை அந்த கால்நடை துறையைச் சேர்ந்த மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மிக தீவிரமாக தமிழகத்தில் செய்து கொண்டிருக்கிறார்கள்.

என்னிடத்தில் பல கால்நடை ஆய்வாளர்கள், மருத்துவர்கள் மிக நன்றாகப் பழகக்கூடியவர்கள் இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் கிராமங்களுக்கு நீங்கள் சென்று பார்ப்பீர்களானால் கால்நடை மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள் எல்லாம் மக்களோடு மக்களாக இன்றைக்கு இணைந்து பழகி, அவர்களுடைய குடும்பத்தோடு பழகி குடும்ப நண்பர்களில் ஒருவராக இருந்து அவர்களுக்கு, அந்த எழுத்து அறிவு அற்ற ஏழை விவசாயிகளுக்கு கால்நடையில் புதிதான முறையில ஏற்படுகின்ற கால்நடைகளுக்கு எல்லாம் எப்படி நீங்கள் போற்றி பாதுகாத்து வளர்க்க வேண்டும், அவற்றிற்கெல்லாம் நோய் வருகிறபோது அதை நீங்கள் எப்படி தடுக்க வேண்டும் என்ற வழிமுறைகளை எல்லாம் சொல்லிக் கொடுத்து அவர்கள் குடும்பத்தில் ஒரு நண்பனாக இருந்து அந்த கால்நடை வளர்ச்சிக்கு பாடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி பாடுபட்டு அந்தக் கால்நடைகளை எல்லாம் வளர்ப்பதற்கு ஏழை விவசாயிகளிடத்தில் அந்த புதிய முயற்சிகளை எல்லாம் எடுத்துச் சொல்லி ஒரு புரட்சி ஏற்படுத்துகின்ற அந்த கால்நடை மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்களைப்பற்றி உங்களுக்குத் தெரியும்.

பிற்பகல் 5-15

மனிதனுக்கு மருத்துவம் பார்க்கின்ற மருத்துவர்கள், நாம் அவர்களிடம் சென்றதும், அவர்கள் உனக்கு என்ன செய்கிறது என்று கேட்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் கால்நடை மருத்துவர்கள். அவர்களிடம் கால்நடைகளை நாம் அழைத்துச் செல்கிறோம். அதற்கு என்ன நோய் என்று நமக்கும் தெரியாது, அவரும் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாத சூழ்நிலை. இருந்தாலும் கூட அவர்களாக ஆராய்ச்சி செய்து அந்தக் கால்நடைக்கு மருத்துவம் செய்கிறார்கள். இப்பேர்ப்பட்ட மிகப் பெரிய பணியைச் செய்கிற அந்த மருத்துவர்

களுக்கு இன்றையதினம் மெடிக்கல் டாக்டர்களுக்குக் கொடுப்பதைவிட 200 ரூபாய் சம்பளம் அவர்கள் குறைவாக வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்தக் குறையை நீங்கள் நிவர்த்தி செய்யவேண்டும்.

அதே நேரத்திலே கால்நடை ஆய்வாளர்களைப் பற்றி ஒரு கருத்தை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆட்சியிலே, நாங்களெல்லாம் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்துகொண்டு இருந்தபொழுது கால்நடை ஆய்வாளர்கள் ஏறத்தாழ தமிழகத்திலே 3,500 பேர் இருந்துகொண்டு இருக்கிறார்கள், அந்தக் கால்நடை ஆய்வாளர்கள், கிளை நிலையங்களுக்குச் சென்று முழு பொறுப்பு ஏற்றுக்கொண்டு, மாடுகளுக்கு அத்தனை வைத்தியங்களையும் செய்துகொண்டு இருக்கிறார்கள், அவர்களுக்கும், டாக்டர்களுக்கு வழங்குவதைப்போல, மருத்துவர்களுக்கு வழங்குவதைப்போல, ரிஸ்க் அலவன்ஸ் வழங்கவேண்டுமென்று சொல்லி நாங்கள் பலமுறை பேசி இருக்கிறோம். பல கட்டத்திலே மாண்புமிகு அமைச்சர் கே. ஏ. கே. அவர்களும் மாண்புமிகு அமைச்சர் செங்கோட்டையன் அவர்களும் இந்தக் கருத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் எல்லாம் இப்படிச் சொன்னதற்குப் பிறகு, முந்தைய அரசு ஒரு அறிவிப்பை இந்த அவையிலே வெளியிட்டது. நாங்கள், கால் நடை ஆய்வாளர்கள் அத்தனை பேருக்கும் ரிஸ்க் அலவன்ஸ் ரூ. 25 வழங்குகின்றோம் என்ற அறிவிப்பை இந்த அவையிலே ஏற்படுத்தினார்கள். அந்த அறிவிப்பு வந்ததற்குப் பின்னாலே அந்த ஆய்வாளர்களெல்லாம் எங்களிடத்திலே வந்து பாராட்டினார்கள். எங்களுக்காக நீங்கள் வைத்த கோரிக்கை வெற்றி அடைந்து இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அரசாங்கத்தின் உத்தரவு வருகிறது. கால்நடை மருத்துவமனைகளிலே, கால்நடை ஆஸ்பிட்டல்களிலே பணியாற்றுகின்ற ஆய்வாளர்களுக்கு மட்டுந்தான் அந்த ரிஸ்க் அலவன்ஸ் என்றும், கிளை நிலையங்களிலே பணியாற்றுகின்ற ஆய்வாளர்களுக்கு அந்த ரிஸ்க் அலவன்ஸ் இல்லை என்றும் சொல்லி, ஏறத்தாழ 2 ஆயிரம் பேர்களுக்கு, கிளை நிலையங்களிலே பணியாற்றுகின்ற கால்நடை ஆய்வாளர்களுக்கு அந்த ரிஸ்க் அலவன்ஸ் இல்லையென்ற அறிவிப்பு, அந்த கவர்ன்மென்ட் ஜி. ஓ. பின்னாலே வந்தது. இதை நான் சொல்வதற்குக் காரணம், முந்தைய அரசு எந்த அளவிற்கு படித்தவர்களை, இன்னும் சொல்லப்போனால் அரசாங்க உத்தியோகத்திலே இருக்கிற அனுபவப் வாய்ந்த கால் நடை ஆய்வாளர்களை எந்த அளவிற்கு ஏமாற்றினார்கள் என்பதை இந்த நேரத்திலே



தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, முந்தைய அரசாலே வஞ்சிக்கப்பட்ட அந்த மீதி இருக்கிற 2 ஆயிரம் கால்நடை ஆய்வாளர்களுக்கும் இந்த அரசு, புரட்சித் தலைவியினுடைய அரசு உறுதியாக அந்த ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கும் என்று நான் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, உங்களுக்குக்கூட தெரியும். அதை குறிப்பிட்டுச் சொல்கின்றபோது நான் அவர்களிடத்திலே சொன்னேன், முந்தைய அரசு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுக்கும் என்று சொல்லி, 450 கோடி ரூபாய் செலவிலே நாங்கள் கொடுத்துவிட்டோம் என்று சொன்னார்கள். நான் சென்ற சட்டமன்றத்திலேகூட பேசினேன். நீங்கள் இப்படி சொல்லியிருக்கிறீர்களே, அன்றைய தினம் அமைச்சராக இருந்த பேராசிரியர் அவர்கள் அந்த அனௌன்ஸ்மென்ட் வருவதற்கு முன்பாக, சேலத்திலே பத்திரிக்கையாளர்களிடத்திலே சொல்கிறார்கள், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை நாம் வழங்க முடியாது; காரணம் அப்படி வழங்கினால் ஏறத்தாழ 1,200 கோடி ரூபாய் செலவாகும். ஆகவே நாங்கள் வழங்க முடியாது என்று சொன்னார்கள். ஆனால், அதே நேரத்தில், அடுத்த நாளிலே, அதே பேராசிரியர் அவர்கள் என்னுடைய தொகுதியிலே, ஒரு பள்ளிக் கட்டிட திறப்புவிழா, என்னுடைய தலைமையிலே நடந்தது. அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சரவைக் கூட்டத்திலே இந்த அறிவிப்பு வெளியானதும் நான் கடந்த சட்டமன்றத்திலேயே, பேராசிரியர் 1,200 கோடி ரூபாய் ஆகும். ஆகவே அதற்கு இணையான ஊதியத்தை வழங்க முடியாது என்று, சேலத்திலே சொல்கிறார்கள்; ஆனால் அடுத்த நாளே அமைச்சரவை கூடி 408 கோடி ரூபாயை வழங்கிவிட்டோம் என்று சொல்கிறார்களே, இதில் எது உண்மை என்று கேட்டபோது பேராசிரியர் அவர்கள் எழுந்து சொன்னார்கள். நான் அப்படி சொல்லவேயில்லை என்று. நான் அதற்குச் சொன்னேன், நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், பத்திரிகைகளிலே வந்திருக்கிறது என்று சொன்னேன். அப்போது பேரவைத் தலைவராக இருந்தவர், பத்திரிகைகளிலே வந்ததையெல்லாம் வைத்துக்கொண்டு நீங்கள் ஆதாரமாகப் பேசக்கூடாது என்று சொன்னார். நான் சொன்னேன், பத்திரிகைகளிலே வந்தது உண்மை. ஆனால் பேராசிரியா அவர்கள் அதை மறுக்கவில்லை. ஆகவே, அவர்கள் மறுக்காத காரணத்தினாலே, அது உண்மை என்ற காரணத்தின் அடிப்படையில் நான் சொல்கிறேன் என்று சொன்னேன். அப்போது பேராசிரியர் அவர்கள் நான் அந்தப் பத்திரிகையைப் படிக்கவில்லை என்று சொன்னார்கள். அதற்குக் கூட நான் சொன்னேன், தினமணி, தினமலர்

போன்ற தரமான பத்திரிகைகளிலே வந்திருக்கிறது, தரமான பத்திரிகைகளை படிக்கிற வழக்கம் அமைச்சருக்கு இல்லையோ என்ற கருத்தைக் கூட அந்த நேரத்திலே சொன்னேன். ஆக, அந்த அளவிற்கு, படித்தவர்களை, படித்து, வேலையிலே இருப்பவர்களை எல்லாம் ஏமாற்றுகிற அளவிலே முந்தைய அரசு செயல்பட்டுக்கொண்டிருந்தது. அப்படேர்ப்பட்ட ஒரு வஞ்சகத்தினாலே இந்த கால்நடை ஆய்வாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்தப் பாதிப்பை, முந்தைய அரசினுடைய பழிவாங்குகிற போக்கினாலே பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அமைச்சரவை நிவாரணம் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-20

தமிழகத்திலே இருக்கின்ற சுமார் 400 கால்நடை கிளை நிலையங்களுக்கு மேலாகக் கால்நடை ஆய்வாளர்கள் இல்லாமல் இருந்துகொண்டு இருக்கின்றன. அப்படியிருப்பதற்குக் காரணம், அந்தக் கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சி பெற்றவர்கள் பற்றாக்குறையாக இருந்துகொண்டு இருக்கிறது. ஆனால், அதே நேரத்தில், தஞ்சை மாவட்டத்திலே ஒரத்தநாட்டிலே ஒரு கால்நடை ஆய்வாளருடைய பயிற்சி நிலையம் இருக்கிறது. அங்கே ஆண்டு ஒன்றுக்கு 100 பேர் பயிற்சி பெறுகின்ற அளவிற்கு வசதி வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆகவே அந்த வசதியை இவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு முக்கியமான பாராட்டை நான் இந்த அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த ஒரு ஆண்டிலுமே கால்நடை மானியக் கோரிக்கை வருகின்ற பொழுது மேக்சிமம் ஒரு பத்து கிளை நிலையங்களோ, மருத்துவ முகாம்களோதான் ஏற்படுத்துவார்கள். ஆனால் நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் இந்த ஒரே ஆண்டிலே மட்டும் 396 கால்நடை மருந்தகங்கள புதிதாக உருவாக்குகின்ற அளவிற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அதற்கு உண்மையிலேயே என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியைச் சேர்ந்த நல்லாம்பட்டி, விஜயமங்கலம், வேப்பம்பாளையம், ஆதியூர், திங்களூர் ஆகிய ஊர்களில் கால்நடை மருந்தகங்களும், சீனாபுரம், தோரணவாவி, நடுப்பட்டிவாவிக்கடை, சூரியம்பாளையம் ஆகிய ஊர்களில் கிளை நிலையங்களும் அமைத்து உதவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



பெருந்துறை கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுகிறேன்.

கால்நடை அதிகமாக உள்ள பகுதிகளில் மருந்தகங்களையும், கிளை நிலையங்களையும் திறந்தால் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, எனது பெருந்துறை தொகுதியிலும் காங்கேயம் தொகுதியிலும்தான் உலகப் புகழ் பெற்ற காங்கேயம் காளைகள் அதிகமாக இருக்கின்றன. இன்றைக்கு அப்படிப்பட்ட கால்நடைகளை உருவாக்கும் விவசாயிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை அரசு செய்து கொடுக்க வேண்டும்.

பெரியார் மாவட்டம், திருச்சி மண்டல இணை இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ளது. மண்டலம் முழுவதும் பயணம் செய்வது மிகவும் சிரமம். ஆண்டிமடத்தில் இருந்து தாளவாடி வரை மிக அதிக தூரமாக உள்ளபடியால் ஈரோட்டில் ஒரு மண்டல இணை இயக்குநர் அலுவலகம் அமைக்க வேண்டிக் கொள்கிறேன்.

கால்நடைத்துறைக்குச் சொந்தமான அரசு கட்டிடம் நல்ல வசதியுடன் பெருந்துறையில் ஒன்று இருக்கிறது. ஈரோட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற உதவி இயக்குநர் அலுவலகத்தைப் பெருந்துறைக்கு மாறுதல் செய்வீர்களேயானால் ஈரோட்டிலே வாடகை கொடுத்துக் கொண்டிருக்கின்ற — மாதம் ஒன்றுக்கு 4,000 ரூபாய் வாடகை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, — அந்தப் பணம் அரசுக்கு மிச்சமாகும் என இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பால்வளத்தைப் பற்றி நான் ஒரேயொரு வார்த்தை மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்களைப் போன்ற வறட்சியான பகுதிகளிலே இருக்கின்ற மக்கள் பாலை உற்பத்தி செய்து அதன் மூலம் தங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பால் உற்பத்தியாகிற பொழுது பால் சொசைட்டிக்கெல்லாம் ஊற்றுகிற பொழுது அந்த லோக்கல் பர்சேஸ் பண்ணுகிற அந்த இடத்திலே பத்து பர்சன்ட்தான் அதிகமாக அங்கே விற்கவேண்டுமென்ற ஒரு சட்டம் இருக்கிறது. ஆனால் எங்கள் பகுதியிலே விவசாயிகள் இருக்கின்ற அதே நேரத்தில் நெசவாளப் பெருமக்களும் இருக்கிறார்கள். ஆகவே, அந்தந்த சொசைட்டியிலே 100 லிட்டர் வருகிறது என்றால் இப்பொழுது பத்து லிட்டர்தான் வெளியே விற்க முடியும். அதை அதிகப்படுத்தி 25 பர்சென்ட் அங்கே லோக்கலில் அங்கே இருக்கின்ற பகுதி மக்களுக்குப் பயன் தருகின்ற அளவிற்கு நீங்கள் அந்த உச்சவரம்பைத் தளர்த்த வேண்டும், நீட்டிக்கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : முடியுங்கள்.

**திரு. வி. என். சுப்பிரமணியன்** : நான் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கத்தைப் பொறுத்த அளவில், இதுவரை தமிழகத்திலே ரேஷன் கடைகளில், நியாய விலைக் கடைகளிலே அரிசி விலையை ஏற்றி மீண்டும் குறைத்ததாகச் சரித்திரம், இந்தத் தமிழக அரசியலிலே கிடையாது. ஆனால் காலையிலே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நியாய விலைக் கடைகளிலே இருக்கின்ற அரிசியினுடைய விலையை கிலோவிற்கு 50 பைசாவாகக் குறைத்து ஒரு மிகப் பெரிய சாதனையை நிகழ்த்தி இருக்கிறார்கள். இந்தச் சபையின் சார்பாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு நம்முடைய வணக்கங்களை தெரிவித்து, நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. சி. ஞானசேகரன். ஐந்து நிமிடங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, கால்நடை மற்றும் பால்வளம் மானிய விவாதத்திலே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக எனது கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிதனைக் காணிக்கை ஆக்குகிறேன்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
எழுவாரை எல்லாம் பொறுத்து''.

என்ற வள்ளுவர் வாக்கு, கேட்பதற்கு இனிமையுடையதாய் ஏட்டளவில் நின்றுபோய் நெடு நாட்கள் ஆகிவிட்டன. உழவன் பின்னால் உலகம் இருக்குமென்ற கதை, தலைகீழாக மாறி, இன்று உழவன் மற்றவன் பின்னால் கைகட்டி பின் செல்ல வேண்டிய அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றான். கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே இறக்கும் தன்மை படைத்தவனாக விவசாயி, இன்று படுபாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கிறான். உழவனுக்கு உழக்குக்கூட மிஞ்சுவதில்லை. விவசாயம் தான் இந்தியாவின் முதுகெலும்பு, விவசாயிதான் இந்தியாவின் இதயம். அத்தகு விவசாயியின் கடைநிலையை போட்டு, பசுமைப் புரட்சியையும், வெண்மைப் புரட்சியையும் தன்காலத்தில் தன்பெயருக்கேற்ப படைக்கப்படவேண்டும்.



சரித்திரம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற நெஞ்சுறுதியோடு நிமிர்ந்து நின்று நேர்கொண்ட பார்வையோடு மட்டுமல்ல; கிட்டப்பார்வையின் ஆட்சிக்கு சாவுமணி அடித்து, தொலைநோக்குப் பார்வையோடு, மாண்புமிகு முதல்வரின் நல்லாட்சி மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கிறது. வேளாண்மைக்கு நடப்பாண்டில் (குறுக்கீடு)

பிற்பகல் 5-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. கே. பி. ராஜு, இது அவை.

**திரு. சி. ஞானசேகரன்** : 187.53 கோடி, வரும் ஆண்டிற்கு 215.75 கோடி ஒதுக்கி, பசுமைப் புரட்சிக்கு வித்திட்டுள்ள மாண்புமிகு முதல்வரையும், திறமையின் சிகரமாம் வேளாண்மைத் துறை அமைச்சரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும், இரத்தப் புரட்சிக்கு வித்திட்டு, அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை சுடுகாடாக மாற்றியவர்களை வேரறுத்து, பசுமைப் புரட்சியும், வெண்மைப் புரட்சியும் காண்பது, மிக மிகச் சிரமமான செயல் என்றாலும், அதுவும் பெண்ணுக்கு பெரும் சோதனையான செயல் என்றாலும், உருவத்தில்தான் பெண், ஆனால் உள்ள உறுதியில் ஓராயிரம் ஆணுக்கு நிகர் என்று நிரூபித்து சோதனைகளை, சாதனைகளாக மாற்றி (மேசையைத் தட்டும் ஒலி) வெண்மைப் புரட்சிக்கும் வழிவகுத்து, கூட்டுறவு சங்கங்களுக்கும் பால் வழங்கியுள்ள உழவர்களின்பால் கருணை வைத்து அவர்களுக்குச் சேர வேண்டிய நிலுவை பாக்கியை தீர்க்கும் பொருட்டு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கு ரூ. 10 கோடி தந்து உழவர்களின் வீடுகளில் விளக்கெரிய செய்த ஒளிவிளக்காம் மாண்புமிகு முதல்வருக்கு நன்றி, நன்றி என்று நன்றி கூறுகிறேன்.

2½ ஏக்கர் நிலமுள்ள விவசாயிகளுக்கு குடும்பக் கார்டு மூலம் அரிசி பெற முடியாது என்ற உத்தரவை முதல்வர் அவர்கள் இன்று காலை பிறப்பித்திருக்கிறார்கள். நீர்வளம் இன்றி, கடனிலே வாழ்கிற விவசாயிகள் ஏராளம், குறைந்தது 5 ஏக்கர் வரை நஞ்சை நிலம் வைத்திருப்பவர்களுக்கும் 1,000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கும் குடும்ப கார்டு மூலம் அரிசி வழங்கலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவை மாற்றியமைத்து ஏழை மக்கள் மீது கருணை மழை பொழிந்தால் தமிழ்ச் சமுதாயம் நன்றி

யுடையதாய் மகிழ்ச்சி பெற்றதாய் விளங்கும். பால் விலையை ஒரேயடியாய் ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் என்று அரசு சில மாதங்களுக்கு முன்னாலே ஏற்றியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. பி. ராஜு, எதிர் வரிசையிலே இருந்து நீங்கள் பேசுவது அவைக்கு இடையூறாக இருக்கிறது, வேளாண்மைத் துறை அமைச்சர் குறிப்பெடுப்பதற்கு இடையூறாக இருக்கிறது என்று சொன்னேன். கடைசியில், நீங்கள் அமைச்சர் வரிசையிலே வந்து உட்கார்ந்து கொள்வது அத்துமீறிய செயல். உங்களுடைய இடத்தில் போய் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன் :** அதனால், வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழைச் சமுதாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு பச்சிளங் குழந்தைகளுக்கு பால் கூட வாங்கித் தர முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. வறுமை காரணமாக, தாய்ப்பாலும் இல்லாமல் விலையேற்றம் காரணமாக புட்டிப்பாலும் இல்லாமல் குழந்தைகள் அழுது கொண்டிருக்கின்றன. தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் இருக்கும்போது குழந்தைகள் இனி அழக்கூடாது. எனவே, தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றே ஒரு லிட்டருக்கு குறைந்தது 0.50 காசாவது நீங்கள் குறைத்து, பச்சிளங்குழந்தைகளுடைய வாயிலும் ஏழைகளின் வயிற்றிலும் பால் வார்க்க வேண்டும் என்று பணிவன்போடு வேண்டுகிறேன்.

அதே வேளையில் பாலின் கொள்விலையில் பசும் பாலுக்கு இன்னும் விலை கூட்டிக் கொடுக்கப்படவில்லை. எருமைகள் மட்டும் கொடுத்து வைத்திருக்கிறபோது, பசுக்கள் என்ன பாவம் செய்தன? ஆவின் பால் நிறுவனம் என்று பெயர் வைத்துக் கொண்டு, எருமைக்கு தந்து விட்டு 'ஆ' எனப்படும் பசுவை மறக்கலாகுமா? பசும்பால் கொள்விலையையும் கூட்டிக் கொடுக்க மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஆனந்தமே உருவான செயல்திறமிகு பால்வள அமைச்சர் அவர்களும் இன்றே உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று பணிவன்போடு மாமன்றத்தின் வாயிலாக வேண்டுகிறேன்.

கடவுள் எனும் முதலாளி, கண்டெடுத்த தொழிலாளி விவசாயி என்ற பாடலை புரட்சித் தலைவர் பாடி விவசாயியாக நடித்தார்கள். அப்படிப்பட்ட தொழிலாள வர்க்கத்தினுடைய அடித்தளத்தில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற விவசாயிகளின் அரசு இன்று விவசாயிகளின் கடன்களையும் விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். நிதி நெருக்கடி அரசுக்கு உள்ளது



என்பது மறுக்க முடியாத ஒன்றுதான். நான் இம்மாமன்றத்தில் விவசாயிகளின் கடன் வட்டியையாவது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று முதல்வர் அவர்கள், இந்த மாமன்றத்தில் இருக்கிறபோது அவையில் வேண்டுதல் வைத்தேன். பரிவோடு பரிசீலிப்பதாக பரந்த மனம் படைத்த முதல்வர் அறிவித்திருந்தார்கள். வேளாண்மை மானியக் கோரிக்கையின் விவாதம் நடைபெறும் இன்றே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் விவசாயிகளின் கடன் வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்ற பரிசை அறிவித்து ஒட்டிய வயிறும் கட்டிய கோவணத்தோடும் காட்சிதரும் ஏழை உழவனின் வாழ்வில் ஒளிதீபம் ஏற்ற வேண்டுமென்று பணிவன்போடு வேண்டுகிறேன்.

விவசாயிகளின் பம்புசெட்டுக்கு மீண்டும் மீட்டர் பொருத்தி இலவச மின்சார சலுகை பறிபோய்விடுமோ என்று உழவர்கள் பயந்துபோய் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். கொடுத்ததை எடுக்கும் நிலைமை வந்துவிட்டால் விவசாயிகள் மிகவும் வேதனைக்கு உள்ளாவார்கள். எனவே இலவச மின்சாரம் விவசாயிகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளிக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

பிற்பகல் 5.30

பால் விநியோகத்தில் எங்கள் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் குறிப்பாக (மணியடிக்கப்பெற்றது) வேலூர், சத்துவாச்சாரி, தொரப்பாடி, சேண்பாக்கம், அல்லாவரம் ஆகிய பகுதிகளில் பால் பாக்கெட் விற்கும் ஏஜெண்டுகள் அதிக விலைக்குப் பாலை திருமண வைபவங்களுக்கும், ஓட்டல்களுக்கும் விற்றுக் கொள்ளையடித்துக்கொண்டிருக்கிறார்கள். வீடுகளுக்கு விற்பனை செய்யும்போது அதிக விலைக்குத்தான் விற்கிறார்கள். கடையில் அவர்கள் விற்பனை செய்யாமல் வீடு, வீடாக 'டோர் டெலிவரி' என்ற பெயரால் அதிக விலைக்கு விற்கிறார்கள். கடைக்குச் செல்லும் தாய்மார்களுக்குப் பால் விற்பதில்லை. சில தினங்களுக்கு முன்னாலே எனக்கே சத்துவாச்சாரியிலே உள்ள ஒரு பால் ஏஜெண்ட் பால் இல்லை என்று கூறி விட்டார். அவர் மீது நான் புகார் தந்திருந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதிக விலைக்கு விற்கும் ஏஜெண்டுகளை உடனே நீக்கி, புதிய நாணயமான ஏஜெண்டுகளை அரசு நியமிக்க முன்வரவேண்டும். நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துப் பால் விநியோகத்தை

அரசு சங்கங்கள் மூலமாகச் செய்தால் இதுபோன்ற குறைகளைக் களைவதற்கு ஏதுவாக இருக்கும். பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள செயலாளர்கள் 'டெஸ்ட்' போட்டு பால் வாங்காமல் பொதுப்படையாக பாலை, குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்கிறார்கள். அதைத் தவிர்க்க உற்பத்தியாளர்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, டெஸ்ட் போட்டு பால் கொள்முதல் செய்து, நியாய விலையை பாலுக்கு கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும். (மணியடிக்கப் பெற்றது). வேலூர், திருவண்ணாமலை, அணைக்காஞர், ஆம்பூர் ஆகிய பால் பண்ணைகளிலிருந்து சென்னைக்குப் பால் டேங்கரில் கொண்டு வரும் பாலை ஓச்சேரி என்ற இடத்தில் பாலைத் திருடி, திருடுகிற பால் அளவுக்குத் தண்ணீர் கலந்து லட்சக் கணக்கில் கொள்ளையடித்து பணியாளர்கள் பணத்தைச் சேர்த்திருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக வேலை நீக்கம் செய்ய வேண்டும்.

வேலூரில் பி.எஸ்.சி. (டயரியிங்) என்ற கோர்சை ஆரம்பிக்க வேண்டும். வேலூரில் ஒரு விவசாயக் கல்லூரியை நிறுவவேண்டும். செங்கநத்தம் பாலமதி என்ற மலைப்பகுதிகளிலே........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் பேசுகிறபோது பால் டெஸ்ட் போடவில்லை என்று சொல்லுகிறார்கள். அங்கே கூட்டுறவுச் சங்கங்களில் பால் டெஸ்ட் பண்ணுவதற்காக பால்மானியும் குடுவையும் தயாராக இருக்கிறது. பாலைப் பெறுபவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூட அறிவித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி, அத்தோடு நீங்கள் முடித்துக் கொள்வதற்கும் நன்றி. (சிரிப்பு).

**திரு. சி. ஞானசேகரன் :** ஒரே ஒரு நிமிஷம். அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி சொல்லி, இருந்தாலும், இன்று உற்பத்தியாளர்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படவில்லை. செயலாளர்கள் டெஸ்ட் போடாமலேயே ஜெனரலாக பாலை வாங்குகிறார்கள். எங்கள் மாவட்டத்திலே





இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே தயவு செய்து இதை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டி, மலைப்பகுதி கிராமங்களான ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தச் செயலாளர் என்பதையும், எந்த இடத்தில் என்பதையும் குறிப்பாகப் புகார் மனு என்னிடம் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்துத் தருகிறேன் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன் :** நன்றி. நான் உங்களிடம் நிச்சயமாக பெரிய பட்டியலைக் கொடுக்கிறேன். காரணம் எங்களுடைய மாவட்டத்தில் இன்னும் ஜெனரலாக வாங்குகிற சிஸ்டம் இருந்து கொண்டிருக்கிறது. பேசிக்கொண்டேயிருந்தால் நேரமாகிவிடும். செங்காநத்தம், பாலமதி மலைப் பகுதி கிராமங்களிலே செம்மறி ஆட்டுப்பண்ணையை ஆரம்பிக்க வேண்டுமென்று பணிவன்போடு வேண்டுகிறேன். கரும்புக்கு விலையை அரசு கூட்டிக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 10 டிராக்டர்களை வாங்கித்தந்து குறைந்த வாடகையில் விவசாயிகள் டிராக்டர்கள் மூலம் நிலம் உழ ஆவன செய்ய வேண்டும் என்று கூறி, அதேபோல, முன்பு கால்நடை அமைச்சராக இருந்த ....(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. க. அர்ச்சுனன்.

**திரு. க. அர்ச்சுனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பினை அளித்தமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடைத் துறை 1892 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது 1992 ஆம் ஆண்டு. 100 ஆண்டு நிறைவு பெறுகிறது. புரட்சித்தலைவி அவர்களுடைய இந்த ஆட்சியில் மாவட்டந்தோறும் நூற்றாண்டு விழா நடைபெற கால்நடைக் கண்காட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தற்போது உயர் ரகக் காளைகளை கொண்டு வந்து விந்துகளைச் சேகரித்து, கிராமப் புறங்களிலே மருத்துவமனைகளிலே கூட கலப்பினங்களை உருவாக்குகிற நிலையை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

அடுத்து, இந்த அவைக்கு ஒரு முக்கியமான விஷயத்தைக்
கூற விரும்புகிறேன். முந்தைய அரசில் அமைச்சராக இருந்த
சுப்புலட்சுமி அவர்கள் திருச்செங்கோட்டிற்கு அருகில் இருக்கிற
ஒரு கோழி விஸ்தரிப்பு நிலையத்திற்குரிய பகுதியை சுமார் 2½
ஏக்கர் நிலத்தைக் கிட்டத்தட்ட 5ப இலட்சம் மதிப்புள்ள அந்தப்
பகுதியை விடுதலைப்புலிகளின் துணையோடு அதைக் கபளீகரம்
செய்திருக்கிற முயற்சியை இந்த அவையின் கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன்.
முதலமைச்சரும் துணையிருந்திருக்கிறார் என்பதையும் தெரி அதற்கு அப்பாதைய
வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 5-35

1959 ஆம் ஆண்டு அந்த நிலம் கையகப்படுத்தப்பட்டு
அப்போதைய முதலமைச்சராக இருந்த திரு. காமராஜர்
அவர்களால் 1960 ஆம் ஆண்டு அடிக்கல்லும் நாட்டப்பட்டது.
அதற்கான புகைப்படமும் என்னிடத்திலே இருக்கிறது.
அதை 3— 5— 1990-ல் திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சியின்போது விடுதலைப் புலிகள் அப்புறப்படுத்தவும்
முயற்சித்திருக்கிறார்கள். அந்த நிலத்தின் 'டைட்டில்' இப்
போது ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்கிற (அப்போது
எம்.பி.யாக இருந்த திரு. டி. எஸ். பட்டாபிராமன் அவர்
களின் மகன்) திரு. டி. பி. நாகராஜன் அதை கிட்டத்
தட்ட 32 ஆண்டுகளாக, அந்த இடம் கோழிப்பண்ணை
விஸ்தரிப்பு நிலத்தை, கால்நடைத் துறை பராமரிப்பில்
இருந்ததை, கடந்த 32 ஆண்டுகளில் பெரிய பெரிய மரங்கள்
வளர்க்கப்பட்டு விருட்சங்களாக இருந்த இடத்தை 3— 5— 1990
ஆம் நாள் கிரிமினல் டிரெஸ்பாஸ் செய்திருக்கிறார்கள்.
அங்கே இருக்கிற அசிஸ்டெண்ட் டைரக்டர் இதுபற்றி
காவல் துறைக்கு புகார் கொடுத்திருக்கிறார். 5— 5— 1990
ஆம் தேதி அந்த ஆவணங்கள் விடுதலைப்புலிகளால்
அழிக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் போலீசில் கம்ப்ளையிண்ட்
கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் போலீஸ் எந்தவித
மான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்குப் பதிலாக
மாவட்ட ஆட்சித் தலைவர், வி. ஏ. ஓ., ஆர். ஐ.,
தாசில்தார், ஆர்.டி.ஓ., எஸ். பி., போன்ற அத்தலைவர்களும்
அந்த விடுதலைப் புலிகளுக்கும், அந்த அமைச்சருக்கும்
துணை போய் இருக்கிறார்கள். 6— 5— 1990 இல் அவர்
களுக்கு வேலி அமைத்துக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.
அந்த மரங்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன
என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது சம்பந்த
மாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லி மாவட்ட
ஆட்சித் தலைவருக்கு கால்நடைத் துறை முயற்சித்திருக்கிறது.
கோர்ட்டில் வழக்குப் பதிவு செய்யவேண்டுமென்று சொல்லி
யிருக்கிறது. அப்படி வழக்குப் பதிவு செய்ய வேண்டுமென்று





அரசாங்கத்தின் வக்கீல் ஒப்பீனியன் கூட கொடுத்திருக்கிறார். அவருடைய ஒப்பீனியன் ஆர். ஓ. சி. எண். 2053-சி/90, நாள் 21— 8— 1990-ல் "I have gone through the papers. It is seen that the department was in possession of the property for a very long time, for more than 30 years. It is seen that only on 7-5-1990, the department was dispossessed without consent by force. In the circumstances, the department can recover possession notwithstanding the title through filling a suit for possession before the Competent Civil Court under Section 6 of the Specific Relief Act, 1963. The suit has to be filed within six months from the date of dispossession. I am of the opinion that the suit can be filed against the person who has encroached the property through the above provision of law and against the persons who are in possession irrespective of their title. But the suit should be filed within six months from the date of the dispossession" என்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சுர்ஜித் கே. சவுத்திரி அவர்கள் தனது கடிதம் எண். 62614/90, நாள் 24— 10— 1990-ல் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

" .... it is seen from the Plaint prepared for the Institution of suit for declaration of title in respect of S. No. 259/3 of Tiruchengode village, that the Animal Husbandry Department is claiming adverse possession against the Pattadars. Hence the Revenue Department cannot institute any suit against the Pattadars. The Plaint and affidavit etc., received are returned..... என்று எழுதியிருக்கிறார். எந்த அளவுக்கு அதிகாரிகளும் அமைச்சர்களும் சேர்ந்து அரசாங்கத்தின் சொத்தை கொள்ளையடிக்க முயற்சித்து இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம்.

பிற்பகல் 5-40

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அப்போதைய டிப்பார்ட்மெண்ட் செக்கரட்டரியாக இருந்தவர் திரு. சுந்தரேசன், ஐ.ஏ.எஸ்., என்று கருதுகிறேன். அவர் முயற்சித்து அவராகவே சூட் ஃபைல் செய்து அந்த வழக்கு தி.மு.க. ஆட்சியிலே நியமிக்கப்பட்ட அந்த கவர்ன்மெண்ட்

பிளீடர், அதற்கு அக்கறை எடுத்துக்கொள்ளாத காரணத்தால், இன்றைய தினம் வரைக்கும் அது கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. ஆக இது சங்கிரி சப்கோர்ட்டில் ஓ. எஸ். எண். 140/90 இந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. நாகராஜன் என்பவர் 'சூட் ஃபைல்' பண்ணுகிறார்.

Nagarajan filed suit against Chinnammal and others. Chinnammal and others தான் இந்த dispute பிரச்சினைக்குரிய புராப்பர்ட்டியை அப்போது 1959 ஆம் ஆண்டு திருசெங்கோட்டில் உள்ள வசதி படைத்தவர்கள் பணம் கொடுத்து அப்போதிருந்த எம். பி. காமராஜ் அவர்களுக்கு நெருக்கமாக இருந்த எம். பி. அவர்களிடத்திலே பணத்தைக் கொடுத்து அசிஸ்டெண்ட் டைரக்டர் ஆபீஸ் வருவதற்கு அந்த நிலத்தை வாங்குவதற்கு உதவியிருக்கிறார்கள். ஆனால் அப்போதிருந்த எம்.பி. அந்த நிலத்தை தன்னுடைய பெயருக்கு வாங்கிக் கொள்கிறார். எனவே அந்த நிலம் 1959 இல் இருந்து கால்நடைத் துறை பராமரிப்பிலே 32 ஆண்டுக் காலமாக இருந்த போதிலும் அந்த டைட்டில் அவருடைய தகப்பனார் பெயரில் இருக்கின்ற காரணத்தால் அவருடைய தகப்பனார் இப்போது இல்லை; அந்த அதிகாரி மட்டும் இப்போது இங்கே இருக்கிறார். அவருடைய குடும்பம் அமெரிக்காவிலே இருக்கிறது. ஆனால் இப்போது ஒரு சூட் ஃபைல் பண்ணுகிறார் சின்னம்மாள் பெயரிலே. சின்னம்மாள் அந்த நிலத்தைக் கேட்கவில்லை. சின்னம்மாள் பிரச்சினைக்கே வரவில்லை. இப்போது பிரச்சினை அரசாங்கத்திற்கும் அந்த ஐ. ஏ. எஸ். அதிகாரிக்கும், அவருக்குத் துணை போகிற விடுதலைப் புலிகளுக்கும், முன்னாள் அமைச்சருக்கும், முன்னாள் முதலமைச்சருக்கும் தான். ஆனால் எக்ஸ் பார்ட்டி தீர்ப்பை வைத்துக் கொண்டு இந்த மாபெரும் ஊழலில் அன்றைய அரசு ஈடுபட்டிருக்கிறது. அதை இந்த நேரத்தில் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த 50 இலட்சம் ரூபாய் பெருமானமுள்ள ப்ராபர்ட்டியை அரசுக்கு நிலைநிறுத்துவதற்கு இந்த நேரத்திலே அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருபதாம் எண் மானியக் கோரிக்கை, வேளாண்மைத் துறையின் மீது பேச வாய்ப்பளித்த



தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1992—93 ஆம் ஆண்டுக்கு வேளாண்மைத்துறைக்கு ஏறத்தாழ 621 கோடியே இரண்டு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரம் ரூபாய் நிதி ஒதுக்கி இந்த வேளாண்மைத் துறை சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக விவசாயிகள் பாராட்டுதலுக்குரிய நல்ல நோக்கத்தோடு பல துறைகளிலே இந்தப் பணியைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்ற எண்ண ஆர்வத்தின் அடிப்படையில் இங்கே பல்வேறு செயல்முறைகளை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள்.

இங்கே பேசுகின்றபோது அருமை நண்பர்கள் தமிழக விவசாயிகளைப் பற்றி, பல்வேறு உணர்வுகளைப் பற்றி எல்லாம் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி அமர்ந்திருக்கிறார்கள். இங்கே வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள், வேளாண்மை பொறியியல், விதை சான்றளிப்பு போன்ற பல்வேறு துறைகளில் மிகுந்த கவனத்தோடும், அக்கறையோடும் மத்திய மாநில அரசுகளின் நிதி ஆதாரங்களோடு பல்வேறு நலத் திட்டங்களை தமிழக விவசாயிகளுக்கு அறிவித்திருப்பதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-45

வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் நம்முடைய தமிழக வரலாற்றில் கடந்த பத்தாண்டுக் காலமாக தமிழகத்தினுடைய நெல் உற்பத்தியை கணக்கில் எடுத்துப் பார்க்கிறபோது ஏறத்தாழ 55 இலட்சம் டன் அல்லது 60, 65 டன்னுக்கு மேலாக நம்மால் நெல் உற்பத்தியைப் பெருக்க முடியாத ஒரு சூழ்நிலையை— தமிழகத்திலே இருக்கின்ற நீர் ஆதாரங்கள் அத்தனையும் பயன்படுத்தி முயன்றும் அதற்கு மேல் அபிவிருத்தி செய்ய முடியாத சூழ்நிலையில்— தமிழகத்திலே இருக்கிற விவசாயிகள் ஏறத்தாழ 22,000 எக்டேர் நிலப்பரப்பில் நெல் உற்பத்தியை இன்றைக்குத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 20 இலட்சம் ஹெக்டேருக்கு மேல் தமிழகத்தில் நெல் உற்பத்தி செய்யக்கூடிய விளைநிலங்கள் இருந்தாலும் கூட நீர் ஆதாரம் இல்லாத காரணத்தால் அந்த விவசாயிகள் நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய சூழ்நிலை இல்லாத காரணத்தால் கடந்த 10 ஆண்டுக் காலமாக நாம் நெல் உற்பத்தியில் ஒரே நிலையிலேயே ஏறத்தாழ 55 ஆயிரம் டன் அல்லது 60 ஆயிரம் டன்னுக்கு மேலே

நெல் உற்பத்தி செய்ய முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தமிழக விவசாயிகள் மாட்டிக்கொண்டு இருக்கிறார்கள். தமிழக விவசாயிகளைப் பொறுத்த வரையில் உழைப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற மண்வளத்தைப் பொறுத்த வரையில் மிக்க சிறப்பாக மண்வளம் பொருந்திய இந்த தமிழ் மாநிலம் எல்லா வகையிலும் பொருத்தமாக இருந்தாலும் கூட நீர் ஆதாரத்தைப் பெருக்க முடியாத ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் அல்லல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாம் அனைத்தையும் தயாராக வைத்து இருந்தாலும் கூட தமிழக அரசைப் பொறுத்தவரையில் நல்ல திட்டங்களை நல்ல பொறுக்கு விதைகளை வீரிய வித்துக்களை மற்றும் சப்சிடி ரேட்டில் பல்வேறு உபகரணங்களை நாம் விவசாயிகளுக்கு வழங்கி இருந்தாலும் கூட உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் கடந்த 10 ஆண்டுக் காலமாக ஒரே நிலையிலே நிற்கின்ற ஒரு சங்கடமான சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

இன்றைக்கு காலையில் கூட நம்முடைய மரியாதைக்குரிய புரட்சித் தலைவியார் அவர்கள் சொல்லுகிறபோது, ஏறத்தாழ தமிழகத்தில் 1 1/4 கோடி பேருக்கு இன்றைக்கு குடும்ப கார்டு வழங்கப்பட்டு அத்தனை விவசாயப் பெருங்குடி மக்களும் அரிசி வாங்கி சாப்பிடுகிற ஒரு சூழ்நிலையை இந்த அவைக்கு எடுத்துரைத்தார்கள். இதை நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், உணவு உற்பத்தியை செய்து, இல்லாதவர்களுக்கு வழங்குகின்ற விவசாயிகளே இன்றைக்கு கையும் பையுமாக அலைகின்ற ஒரு சூழ்நிலை கிராமப்புறங்களிலே இருக்கிறது என்பதனை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். இவற்றிற்கு எல்லாம் மூல காரணம், தமிழகத்தில் நாம் நீர் ஆதாரத்தை பெருக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறோம், குறிப்பாக தமிழகத்தில் நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கு கேரளாவில் மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளை தமிழக விவசாயிகள் பக்கம் திருப்பிவிடுகின்ற சூழ்நிலையையும், அதேபோல விந்திய மலைக்கு தெற்கே இருக்கிற அத்தனை ஆறுகளையும் ஒன்றாக இணைத்து தமிழக விவசாயிகளுக்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்குகின்ற வகையில் மாண்புமிகு மரியாதைக்குரிய புரட்சித் தலைவியார் அவர்கள் மத்தியிலே ஆளுகின்ற பாரதப் பிரதமர் அவர்களை அணுகி— அதற்காக தமிழக விவசாயிகள் கட்சி வேறுபாடின்றி உங்கள் பக்கம் அணிவகுத்து நிற்பதற்கு காங்கிரஸ் இயக்கமும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும். அந்த



அளவிற்கு ஆந்திரா, கர்நாடகம், தமிழ்நாடு மற்றும் கேரளா போன்ற நான்கு மாநிலங்களை ஒன்றாக இணைக்கின்ற ஒரு மாநாடு நடத்தி, உண்மை நிலைகளை அறிந்து விந்திய மலைக்கு தெற்கே இருக்கிற அத்தனை ஆறுகளையும் ஒன்றாக இணைத்தால்தான் தமிழகத்தில் இருக்கிற விவசாயிகள் நிம்மதிப் பெருமூச்சு விட முடியும். நீங்கள் நீர் ஆதாரத்தைப் பெருக்கிக் கொடுத்தால் தமிழக விவசாயிகள் இன்றைக்கு ஒரு கிலோ அரிசியின் விலையை 1/4 ரூபாய் ஏற்றினாலும், ஐயோ, குய்யோ என்று அலறிக் கொண்டு இருக்கிற நிலைமை மாறி, உங்களுக்கும் சப்சிடி வழங்குகின்ற நிலைமையை மாற்றி அவர்களே உழைத்து அவர்களே முன்னுக்கு வருகிற நல்ல சூழ்நிலை தமிழகத்தில் உருவாகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள் மனமுவந்து மத்தியிலே ஆளுகின்ற மரியாதைக்குரிய பாரதப் பிரதமர் அவர்களை அணுகி இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த நான்கு மாநிலங்களினுடைய மாநாட்டைக் கூட்டி, நீர் ஆதாரங்களைப் பெருக்குவதற்கு சிறந்ததொரு சிறப்பான திட்டத்தை தாங்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-50

புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்த வரையில், (மணியடிக்கப்பெற்றது) கோரையாறு திட்டம் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் அங்கே காவிரியில் உபரி நீராக வெள்ளப்பெருக்கெடுத்து ஓடுகிறபோது, உபரி நீரை கோரையாறு திட்டத்தின் மூலமாக கால்வாய்களை வெட்டி, புதுக்கோட்டை மாவட்டத்தில் நீராதாரத்தை பெருக்குகிற வகையில் கொண்டுவர நல்ல சூழ்நிலையில் மிகப் பெரிய எஸ்டிமேட்டை போட்டு வைத்திருக்கிறார்கள். அது 6, 7 ஆண்டு காலமாக கிடப்பிலே இருக்கிறது. அந்த கோரையாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் புதுக்கோட்டையில் இருக்கிற பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் அத்தனைபேரும் நல்ல முறையில் பயன்பெறுவார்கள் என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்த வரையில் விவசாயிகள் உற்பத்தி செய்கிற நிலக்கடலை என்பது அதிகமாக இருக்கிறது. அந்த நிலக்கடலை பயிர்களை அடுத்த மாநிலங்களுக்கு எடுத்துச் சென்று அங்கே வனஸ்பதி ஆலையெல்லாம் திறந்து இருக்கிறார்கள். எனவே அங்கே உற்பத்தி செய்யும் நிலக்கடலையை மூலப்பொருளாக வைத்து அங்கே வனஸ்பதி ஆலையை தொடங்குவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தந்த நபார்டு திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஆழ்துளை கிணறுகள் அமைக்கக் கூடாது என்ற செய்தியை மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். இப்போது நிலவள வங்கி அல்லது தேசிய வங்கிகள் விவசாயிகள் ஆழ்துளை கிணறு அமைக்க வேண்டுமென்று செல்கிறபோது, நபார்டிலிருந்து சான்று வாங்கச் சொல்லி, சான்று கொடுத்தால் தான் கடன் தர முடியும் என்று அறிவித்து இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு எடுத்துரைத்து—அங்கே நிலநீர் ஊற்று பிரிவு நிபுணர்களை புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 100 ஆண்டுகளுக்கு தண்ணீர் இருக்கிறது என்று சான்றை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அந்த புள்ளிவிவரங்களையெல்லாம் சேகரித்து, நபார்டு நிறுவனத்திற்கு எழுதி புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடர்ந்து தேசிய வங்கியிலிருந்து கடன் பெறுவதற்குரிய நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

எண்ணெய் பனை மரங்களைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல திட்டத்தை இன்றைக்கு தமிழக அரசு அறிவித்து இருக்கிறது என்று நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். எண்ணெய் பனை மரங்களை வளர்ப்பதற்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் நல்ல மணற்பாங்கான நிலங்கள் நிறைய இருக்கின்றன. அங்கே எண்ணெய்ப் பனை மரங்களை வளர்த்து விவசாயிகள் பயனடைகிற நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தருமாறு உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ஒரே ஒரு சர்க்கரை ஆலை அறந்தாங்கியில் அமைப்பதற்கு நல்ல சூழ்நிலை இல்லையென்று சொல்லி மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆனாலும் புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 10,000 ஹெக்டேர்களுக்கு மேல் இப்போது கரும்பு உற்பத்தியாளர்கள் கரும்பை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அறந்தாங்கி பகுதியில் அந்த ஆலையை அமைக்க முடியவில்லை என்றாலும், புதுக்கோட்டையின் மைய பகுதியிலாவது, இருக்கிற கரும்பு



உற்பத்தியாளர்களை பயன்படுத்தி, அந்த ஆலைகளை வேறு எங்கும் விட்டுவிடாமல், புதுக்கோட்டையில் தொடங்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் மின் பற்றாக்குறை காரணமாக அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு 230 மெகாவாட் பவர் ஸ்டேஷனை அவசியம் அமைத்து தர வேண்டுமென்று மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இறுதியாக இந்த அவையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள் சென்ற ஆண்டு அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய படத்தை இங்கே இராஜாஜி ஹாலில் வைப்பதாக அறிவித்தார்கள். ஆனாலும் என்னைப் பொறுத்தவரையில் இந்தப் பேரவையில் இருக்கிற அத்தனை தலைவர் பெருமக்களும் ஆண் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிற காரணத்தால், இந்தியாவின் ஒளிவிளக்காக, பெண் இனத்தின் தலைவியாக, தாயாக விளங்கிய அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய திருவுருவப் படத்தை இந்த அவையில் திறக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

பிற்பகல் 5-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக்கொண்டிருக்கிற வேளாண்மை மானியக் கோரிக்கை மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களைக் கூற அனுமதித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் தொழில் என்பது ஒரு சாதாரணத் தொழில் அல்ல. இன்றையதினம் மூலதனம் போடுகிற ஒரு தொழிலாக அது அமைந்திருக்கிறது. இப்படி மூலதனம் போடுகிற அந்தத் தொழிலை நம்பி, தமிழகத்திலே ஏறக்குறைய 80 சதவீதம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்தில், இந்தத் தொழிலில் மூலக்கச்சாப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகத்திலே இருக்கிற ஆலைகள் செயல்படவேண்டும். அதே போன்று, நாம் அயல்நாட்டிலே வாங்கிய கடனுக்காக

சில மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்யக்கூடிய தொழிலாக இது அமைந்திருக்கிறது. இப்படி முக்கியமான தொழிலாக அமைந்திருக்கிற இந்த வேளாண்மைத் துறையில், 1990—92 ஆண்டுகளிலே திட்டமிடப்பட்ட அந்த திட்ட இலக்குகள் தொடர்ந்து கொள்கைக் குறிப்பிலே முழுமையாக நிறைவேற்றப்படாத திட்டமாக அது அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் கவலையோடு பார்க்க வேண்டி இருக்கிறது.

மேலும், இந்த திட்ட இலக்குகளை அடைவதற்கு, முன்னேற்றம் ஏற்படுவதற்கு, 1992—93 ஆம் ஆண்டுகளில் ஒரு புதிய திட்ட வரையறுப்பு கொள்கை அறிக்கையிலே கூறப்படவில்லை. தொடர்ந்து 1992—93 ஆண்டுகளிலே என்ன திட்ட இலக்குகள் அறிவிக்கப்பட்டு இருக்கிறதோ, அதுவே தொடரும் என்றுதான் கொள்கை அறிக்கையிலே கூறப்பட்டு இருக்கிறது. தமிழகத்திலே அனைத்துத் தொழில்களையும் விட மிக முக்கியமான தொழில், வேளாண்மைத் தொழில் முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள், தமிழகத்தை தொழில் துறையிலே முன்னேறிய ஒரு முதல் மாநிலமாக ஆக்கப்போகிறோம் என்று. தமிழகத்திலே தொழில்துறையிலே ஒரு முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்றால், இந்த வேளாண்மைத் தொழில் சிறக்கவேண்டும். இது முன்னேற்றம் அடையவேண்டும். இது வளர்ச்சி பெற வேண்டும். இலக்குகள் எட்டப்படவேண்டும். காரணம் என்ன ? இந்தத் தொழிற்சாலைகள் இயங்குவதற்கு அடித்தளமாக அமைந்திருப்பது கச்சாப் பொருட்கள் இந்தக் கச்சாப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு விவசாயத் துறை கடுமையாக முயற்சிக்க வேண்டும். ஒரு புறத்திலே பஞ்சு உற்பத்தி செய்யப்பட வேண்டும், எண்ணெய் வித்து போன்ற தானியங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். சர்க்கரைக்கு கரும்பு உற்பத்தி செய்யப்பட வேண்டும். தமிழக மக்களுடைய பசி, பட்டினியை தீர்ப்பதற்கு உணவு உற்பத்தி செய்ய வேண்டும். இந்த உற்பத்திகள் எல்லாம், ஏறக்குறைய 10 தலைப்புகளிலே, கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டு இருக்கிற அந்த உற்பத்திகள் எல்லாம் முழுமையாக முன்னேறுகிறபோதுதான், ஆலைக்கு கச்சா பொருட்களை தாராளமாகத் தந்து, அந்த ஆலைகள் மூலமாக தமிழகம் முன்னுரிமை பெறக்கூடிய ஒரு முதல் மாநிலமாக மாற முடியும். இந்தத் தொழில் மாறாமல் எந்த தொழிலும் தமிழகத்திலே முன்னேற முடியாது என்பது தான் கடந்த காலத்திலே நமக்கு கிடைத்திருக்கிற அனுபவமாகும். ஒருபுறத்திலே உணவு உற்பத்தியை



செய்வதற்கும் கச்சா பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், அதேபோல், அன்னிய நாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்வதற்கும் இந்தத் தொழில் முக்கியமான பொருளாதார அடிப்படைத் தொழிலாகும். கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்துகின்ற தொழிலாகும். கிராமப் புற மக்கள் வாழ்க்கையிலே பொருளாதார விடுதலை பெறுகிற தொழிலாகும். ஆகவே, இதற்குமட்டும் ஏன் அந்தத் திட்ட இலக்குகளை எட்ட முடியவில்லை என்பதை ஆராய்வதற்கு விரைவாக அரசு முயற்சிக்க வேண்டும். இதில் ஏற்பட்டு இருக்கிற ஊழல்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அந்த ஊழல்களை போக்குவதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்கிறபோதுதான், 1992—93 ஆம் ஆண்டுக்கு நாம் நினைத்து இருக்கக்கூடிய இலக்குகளை எட்ட முடியுமே தவிர, இல்லை என்றால் 1991—92-லே ஏற்பட்டு இருக்கக்கூடிய பின்னடையான இலக்குக்குதான் கொண்டு செல்லக் கூடிய சூழ்நிலைமை வரும். நாம், 90.45 என்று இலக்கு நிர்ணயித்து இருந்தாலும், 1992-93-க்கு 85.45 தான் நிர்ணயிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அப்படியானால், இதிலே ஏதோ கோளாறு இருக்கிறது. இதை முழுமையாக எட்ட முடியாத ஒரு சிக்கலான பிரச்சினை இருக்கிறது. இதை அரசு கவனிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு விவசாய நிலங்கள் எல்லாம் குறைந்து வருகிறது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருபுறம் தொழிற்சாலை அமைப்பதற்கும், மறுபுறத்திலே குடியிருப்புகளுக்கும் விளை நிலங்கள் எடுக்கப்படுகின்றன. அதன் விளைவாக, விளை நிலங்கள் நாளுக்குநாள் குறைக்கப்படுகின்றன. நான் வீடு கட்டுவதை வேண்டாம் என்று சொல்லவில்லை. வீடுகளைக் கட்டுகின்றபோது அடுக்கு மாடி வீடுகளைக் கட்டிவிட முடியும். ஆனால் நாம் நிலத்தை அடுக்காசப் பயன்படுத்த முடியாது.

அதேபோல், நகரங்களைச் சுற்றிப்பார்த்தால், லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள், விளைந்து கொண்டு இருந்த தரமான நிலங்கள், குடியிருப்புகளாக மாற்றப் படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய புனித அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின்பு, அது சமர்ப்பித்த முதல் நிதிநிலை அறிக்கையிலே வேளாண்மைத் துறை விவாதத்தின்போதே, விளை நிலங்கள் வீட்டு மனைகளாக ஆவதைத் தடுப்பதற்கும், அவ்வாறு விளை நிலங்களை வீடு கட்டுவதற்கோ அல்லது வீட்டு மனைகளாக ஆக்குவது என்று சொன்னால், வேளாண்மைத் துறையிலே அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்ற சட்டத்தையே இந்தியத் துணைக் கண்டத்திலே போட்ட முதல் அரசு புரட்சித் தலைவியினுடைய அரசு என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 6-00

**திரு. வே. தம்புசாமி :** இனிமேல் இப்படிப்பட்ட நிலைமை இருக்காது என்பதை அமைச்சரவர்கள் கூறியதற்கு நன்றி. ஆனால் இன்னமும் பார்த்துக் கொள்வது தான் அவசியமாக இருக்கிறது.

அடுத்து இந்த உற்பத்தியைப் பெருக்குவதற்கு இன்றையதினம் அந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் என்பது அவசியம் என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். அப்படி பரிசீலித்து, அந்த நிலக் குவியல் உடைக்கப்படுகிறபோது தான் உற்பத்தி அதிகமாக உயர்ந்திருக்கிறது என்பதை அனுபவபூர்வமாக நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொன்னால், ஒரு உச்சவரம்புச் சட்டம் வந்த பிறகு, நிலம் கை மாறிய பிறகு, இன்றையதினம் கிராமப்புறங்களில் ஓரளவிற்கு சிறிய சிறிய தொழில்கள் வளர்ந்திருக்கிற ஒரு நிலைமையை நாம் பார்க்கிறோம். ஆகவே மேலும் உபரி நிலச் சட்டத்தை, பினாமி சட்டத்தை முழுமையாக நிறைவேற்றும் வகையில் அரசு நடவடிக்கை எடுத்து அந்த நிலமற்றவர்களுக்கு வழங்குகிறபோது இன்னமும் நாம் அதிக விளைச்சலை மேற்கொள்ள முடியும். மேற்கு வங்காளத்தில் கடந்த ஓராண்டு காலத்தில் ஏறத்தாழ 1.18 கோடி டன் உற்பத்தி செய்யப் பட்டிருக்கிறது. காரணம், இந்த நிலக் குவியல் உடைக்கப் பட்டதன் விளைவாகத்தான். இதுபோன்ற விவசாய மக்களுக்கு........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் முதலில் குறிப்பிடுகின்றபோது இந்த அரசு இலக்குகளை எட்டவில்லை என்று சொன்னார்கள். நானும் பதிலுரையின்போது விளக்கமாகச் சொல்லலாம் என்று காத்திருந்தேன். இப்போது இலக்குகளை எட்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே அவருடைய கொள்கையில் தடுமாற்றம் இருக்கிறது. அவருடைய எண்ணத்திலே குழப்பம் இருக்கிறது. குழப்பம் இல்லாமல் பேசுவது நலமாக இருக்குமெனக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

**திரு. வே. தம்புசாமி :** நான் இலக்குகளை எட்டியது என்று கூறவில்லை. உதாரணத்திற்கு இந்த நிலக் குவியல் உடைக்கப்பட்டபொழுது இன்றையதினம் அந்தப் பழைய காலத்திலிருந்து உற்பத்தியிலிருந்து அதிகரித்திருக்கிறது என்று சொன்னேனே தவிர, இலக்குகளை எட்டவில்லை என்பதைத்தான் கொள்கை அறிக்கையிலும் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே நிலக் குவியல் இன்னும் அதிகமாக உடைக்கப்படுகின்றபோது இந்த உற்பத்தியைப் பெருக்கமுடியும் என்று நான் கூறுகின்றேன். அதைப் போன்று மக்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யக் கூடிய வகையில் திட்டமிடப்பட வேண்டும். ஒருபுறம் கச்சாப் பொருட்கள் எந்த அளவிற்கு உற்பத்தி செய்யப்பட வேண்டும் , உணவு தானியங்கள் எந்த அளவிற்கு உற்பத்தி செய்யப்பட வேண்டும். ஏற்றுமதிக்கான பொருட்கள் என்ன என்பது நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இந்த அளவிற்கு திட்டமிட்டு, அந்தத் தொழில் நுணுக்கத்தோடு, அதற்குரிய பாசன வசதிகளையும் ஏற்படுத்தி, அந்த உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

அதுபோன்று இன்றையதினம் விவசாயத்தைப் பொறுத்தவரையில், பாதுகாப்பற்ற தொழிலாக இருக்கிறது. ஒருபுறத்திலே புயல் வீசுகிறது, வெள்ளம் வருகிறது, வறட்சி தாக்குகிறது. இப்படி இதனால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டு அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அப்படியே அந்த விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறபோது, அவர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டும். எப்படி நலிந்த தொழிற்சாலைகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கான திட்டமிருக்கிறதோ, அதுமாதிரி வேளாண்மைத் துறையிலேயும் அந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய
விளைபொருட்களுக்கு கட்டுபடியாகக் கூடிய விலையை
கொடுத்து, அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் புஞ்சைதானியமும்
எண்ணெய் வித்தும் நாளுக்கு நாள் குறைந்து
கொண்டு வருகிறது அதை அபிவிருத்தி செய்வதற்காக
துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதுபோன்று பருத்தி. இன்றையதினம் நமக்கு 12
இலட்சம் பேல்கள் தேவை இருக்கிறபோது, நாம் உற்பத்தி
செய்வது 5 இலட்சம் டன்னாக இருக்கிறது. அதை
அதிகரிக்க விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று
இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று சிறிய சிறிய விவசாயிகள் முன்னேற்றத்
திற்கான அந்த நிதியாதாரங்களை ஏற்படுத்தி, அவர்
களுக்கு தாராளமாக கிடைப்பதற்கான நடவடிக்கைகளை
மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
சிறு விவசாயிகள் என்று ஏறத்தாழ இன்றைக்கு 52
இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பாது
காப்பதற்கான துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.
அவர்களுக்கான நிதியாதாரங்களை ஏற்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று குத்தகை விவசாயிகள் இருக்கிறார்கள்.
அவர்களுக்கும் தீவிரமான முறையில் உற்பத்தி செய்வதற்
காக அரசு பல்வேறு சலுகைகளை அளிக்கவேண்டுமென்று
இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இன்றைய
தினம் 70 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் தமிழகத்
தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை அளவு என்பது
நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. அவர்களுடைய
வருமானம் குறைந்து வருகிறது. மிகவும் சிரமப்படு
கிறார்கள். ஆகவே அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு
நிரந்தரமான வருவாய் ஏற்படுத்துவதற்கு அந்த விவசாய
தொழிலிலே ஒரு முன்னேற்றத்தை அரசு திட்டம் இட்டு
ஏற்படுத்தி அவர்களுக்கு ஒரு வேலை வாய்ப்பை ஏற்
படுத்துவதற்கு கடுமையாக முயற்சிக்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கிராமப்
புறத்திலே படித்தவர்கள் பட்டதாரிகள், இளைஞர்கள்,
அந்த விவசாய தொழிலிலே லாபம் இல்லை என்ற
காரணத்தினாலே— அந்தத் தொழிலைச் செய்தால் இந்த
சமுதாயத்திலே தங்களுக்கு கௌரவம் இருக்காது என்று



கருதி இன்றையதினம் நகரத்திற்கு செல்லுகிற ஒரு சூழ்
நிலை இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே விவசா
யத்திலே அதிகமான வருமானம் வருமேயானால் படித்த
பட்டதாரிகள் இளைஞர்கள் விவசாயத் தொழிலிலே ஈடு
பட்டு அதை மேலும் சிறப்பாக செய்வதற்கு வழிவகை
ஏற்படும். ஆகவே அரசு படித்த இளைஞர்களையும்
வாலிபர்களையும் இதில் ஈடுபடுத்தி எதிர் காலத்தில்
இந்தத் தொழில் நசிந்து போகாமல் காப்பதற்கு
நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி உரத்திற்கு வழங்கக்
கூடிய மானியத்தை கூட்ட வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அதே மாதிரி விவசாயத்திலே வழங்கக்
கூடிய பயிர் கடன் உரம் போன்றவைகள் தாராளமாக
கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இந்த
உரம் வழங்குவதைப் பார்த்தால் நம்முடைய இலக்கை
முழுவதுமாக எட்ட முடியவில்லை. ஆகவே அரசு அதை
துரிதமாக நடவடிக்கை எடுத்து வழங்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முக்கிய
மானது இன்னும் ஒரு நிமிடம்.

பிற்பகல் 6-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முக்கிய
மானதை முதலிலே பேசவேண்டும்.

**திரு. வே. தம்புசாமி :** அது மாதிரி குடிமராமத்து,
இன்றைக்கு தஞ்சை மாவட்டம் முழுவதும் கடுமையாக பாதிக்கக்
கூடிய குடிமராமத்தாக இருக்கிறது. தஞ்சை மாவட்டம் முழு
வதும் அதிகமான ஆறுகளைக் கொண்ட பகுதி. அந்த
ஆறுகளிலே இன்றைய தினம் நெய்வேலி
காட்டாமணி என்று சொல்லக் கூடிய செடி படர்ந்து
வருகிற தண்ணீரை கிராமங்களுக்கு தர முடியாமல்
தடுக்கிறது. மழைக் காலங்களில் அந்த தண்ணீர் வடிய
முடிவது இல்லை. அதனால் ஆறுகள் முழுவதும் கடுமை
யாக பாதித்து உடைப்புகள் ஏற்பட்டு அந்த தண்ணீரால்
எவ்வளவு சிரமங்கள் ஏற்பட்டது என்பது..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு
பொதுப் பணித்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சொல்லியது போல இன்றைக்கு

எந்தப் பணியிலேயும் தயக்கம் இல்லை. ஏரிகளை 70, 80 புல்டோசர்களை வைத்து பொதுப் பணித்துறை மூலம் செய்து கொண்டிருக்கிறோம், என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. தம்புசாமி :** அமைச்சர் அவர்கள் அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதை விரைவாக செய்து முடிப்பதற்கு இன்னும் விரைவாக அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்... அதேபோன்று தமிழகத்தில் இன்றைக்கு நிலத்தடி நீர் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. அந்த நிலத்தினுடைய தன்மையை உயர்த்துவதற்கு ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும். குளங்களையும் ஆழப்படுத்த வேண்டும் இன்றையதினம் ஏரிகளிலே காடு வளர்க்கும் திட்டத்தை கைவிட்டு ஏரிகளிலே தண்ணீரை சேமிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதே மாதிரி பெரிய பெரிய ஆறுகள் இருக்கின்றன. அந்த ஆறுகளிலே பெட்டேம்களை கட்டி தண்ணீரை சேமிக்கின்ற நடைமுறைய அரசு பின்பற்ற வேண்டும். அதேபோல கிராமங்களில் பெரிய வாய்க்கால்களில் தண்ணீர் தேங்குகிறபோது அதை சேமித்தால் சிறிய பயிரை சாகுபடி செய்வதற்கு கூட அது உதவியாக இருக்கும். அந்த திட்டத்தை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல விவசாயக் கடன். தேர்தல் காலத்திலே தள்ளுபடி செய்வதாக தேர்தல் அறிக்கை கூறுகிறது. அது முன்னுக்கு, பின்னாக இருந்தாலும் பரவாயில்லை—முதல்வர் அவர்கள் வட்டியை தள்ளுபடி செய்வதற்கு பரிசீலிக்கப் போவதாக சொன்னார்கள். அதை முழுவதுமாக வட்டி அசல் அதற்குரிய செலவு ஆகிய அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) கேட்டுக் கொள்வதுதானே. அதே போன்று ஜப்தி நடவடிக்கை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏரிகளிலே மரங்களை வளர்க்கக் கூடாது என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மரங்களை வளர்ப்பதற்கு காரணம் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக. ஏரிகளில் பல இடங்களில் ஆக்கிரமிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அதை தவிர்ப்பதற்காகவும் அதேநேரத்தில் தமிழகத்திலே காடுகளை அதிகமான



அளவிலே வளர்ப்பதற்கான நோக்கத்திலே நம்முடைய தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அவர்களின் ஆணை பிரகாரம் அதனை செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. தம்புசாமி :** அடுத்து ஜப்தி நடவடிக்கை என்பது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கிற போது ஜப்தி எடுத்த பொருள்களை திருப்பி கொடுக்க வேண்டும் என்ற கேள்விக்கு பதில் அளிக்கிறபோது ஜப்தி நடவடிக்கை இனி மேல் எடுக்கப்பட மாட்டாது என்று சொன்னார்கள். ஆனால் பத்திரிகையிலே பார்க்கிறபோது திருச்சியிலே பேசுகிறபோது அப்படி சொல்லவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எது உண்மை என்பது பற்றி அவர்கள்......(குறுக்கீடுகள்) ஆகவே அந்த நிலை என்ன, என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். ஆகவே இந்த விவசாய மானிய கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை சொல்ல அனுமதித்தற்கு தங்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 6-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பேசும்போது ஏதோ நிலங்களை வீடு கட்டுவதற்கு எடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் தான் வீடு கட்டுகின்றவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டுமென்று கொடி பிடிப்பவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி.) நாம் ஆதி திராவிட மக்களுக்கும், இதர பின் தங்கிய மக்களுக்கும் வீட்டடி மனை கொடுக்கவேண்டும் என்று ஒரு இலக்கை வைத்திருக்கிறோம். அப்படி வரும்போது புறம்போக்கு இருந்தால் அதைக் கொடுக்கின்றோம். புஞ்சைக் காடாக இருந்தால் அதைக் கொடுக்கின்றோம். இது இரண்டும் இல்லாவிட்டால்தான் நஞ்சையிலே நாம் கை வைக்கிறோமே தவிர வீட்டடி மனை கொடுக்காமல் எப்படி இருப்பது என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணராமல் பேசுகின்றார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு திரு. தம்புசாமி அவர்களுக்கு நீங்கள் பேசியதற்கு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். இதிலே விவாதம் வேண்டாம். நாளைக்குப் பேசிக்கொள்ளலாம். நீங்கள் உட்காருங்கள். திருமதி ரமணி நல்லதம்பி.

**திருமதி ரமணி நல்லதம்பி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலையிலிருந்து இவ்வளவு நேரமாக பல்வேறு உறுப்பினர்கள் இந்த வேளாண்மை பால்வளம், கால்நடை வளர்ப்பு போன்ற இந்த மானிய கோரிக்கைகளைப் பற்றி பல்வேறு கருத்துக்களை கூறிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த வேளாண்மையைப் பற்றி பேசுகின்றபோது இந்த கொள்கை குறிப்பு புத்தகத்தை படித்துப் பார்க்கின்றபோது 88 பக்கங்கள் இருக்கின்றன. 12 உட்பிரிவுகள் அடங்கியதாகக் காணப்படுகிறது. இதிலே பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அதாவது, இன்றைக்கு விவசாயிகள் இந்தியத் திருநாட்டிலே 80 சதவீதம மக்கள விவசாயிகளே இருக்கிறார்கள். விவசாயத்தைத் தொழிலாக மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அந்த விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரம் எப்படி இருக்கிறது என்று கேட்டால் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்ற அல்லது வறுமைக் கோட்டிலே வாழ்கின்றவர்களாகத்தான் காணப்படுகிறார்கள். அவர்களுடைய விவசாயம் வாழ்க்கைத்தரம் இந்த நிலையிலே இருக்கிறது என்பதை இந்த அரசு எந்த அளவிலே உணர்ந்துள்ளது என்பதையும் இந்த நிலையை மாற்றிட எந்த அளவிற்கு முயன்றுள்ளது என்பதையும் இந்த கொள்கை குறிப்பு நன்றாகத் தெளிவுபடுத்துகிறது. இதிலே உணவு உற்பத்தி, நெல் உற்பத்தி, பயிறு வகைகள் உற்பத்தி, சிறு தானியங்கள், பருத்தி, எண்ணெய்வித்துக்கள், கரும்பு என்று பல்வேறு உற்பத்தித் திட்டங்கள மத்திய அரசு மாநில அரசு தத்தம் பங்கு நிதி உதவிகளுடன் செயல்படுத்தப்படுவதாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. சில திட்டங்களுக்கு அதாவது அரிசி மேம்பாட்டுத் திட்டம், உணவு தானிய உற்பத்தித் திட்டம் பயிறு வகைகள் உற்பத்தித் திட்டம், மானாவாரி திட்டம், கேழ்வரகு, கம்பு ,மக்காசோளம், கரும்பு இப்படி ஒன்று ஒன்றுக்கும் மத்திய அரசு நிதி தருகிறது. சிலவற்றிற்கும் முழு நிதியும் மத்திய அரசே தருகிறது. சிலவற்றிற்கு மத்திய அரசு பாதி, மாநில அரசு பாதி என்றும் சில திட்டங்களுக்கு மத்திய அரசு 75 சத வீதம் மாநில அரசு 25 சதவீதம் என்று இந்த அளவிலே இவர்கள தருகின்ற இந்த நிலையை வைத்துப் பார்க்கின்றபோது மத்திய அரசும் மாநில அரசும் இந்த



வேளாண்மை எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்து, இந்த வேளாண்மையிலே தங்களை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறது. மக்களுக்கு இத்தகைய உதவிகளை எல்லாம் தந்து இந்த விளைபொருட்களை அதிகரிப்பதற்காக முயன்று வருகிறது என்பது தெளிவாகிறது.

இந்த பயிர்ப் பாதுகாப்பிற்காக பல்வேறு முறைகளை எல்லாம் கடைபிடித்துக் கொண்டு வந்தாலும் கூட விளைகின்ற பயிரை அழிவு செய்கின்ற பூச்சிகள், நோய், எலி போன்றவைகளை ஒழிப்பதற்காக எத்தனையோ மருந்து வகைகளை எல்லாம் அரசு வழங்கிக் கொண்டிருந்தாலும் கூட அவைகள் பரிபூரணமாக ஒழிக்கப்படாத காரணத்தினாலே விவசாயி நஷ்டத்திற்கு ஆளாகின்றான். விளைச்சல் பாதிக்கப்படுகிறது. விவசாய சாதனங்கள அரசு தாராளமாக வழங்குகின்றது மானிய விலையிலே. இவைகளை எல்லாம் கூறிக்கொண்டு மூன்று பாகமாகப் போட்டு வருகின்றபோது நீர் ஆதாரத்தைக் குறித்து இங்கே ஒரு சில பகுதிகள் வருகிறது. அந்த நீர் ஆதாரத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது கசிவு நீர்க் குட்டைகளை உண்டு பண்ணியிருப்பதாகவும் வாய்க்கால்களை எல்லாம் அல்லது அணையிலிருந்து வருகின்ற அந்த கால்களை எல்லாம் தூர்வாரி செப்பனிட்டு அவைகளைச் சீர் செய்கின்ற முயற்சிகளை எல்லாம் மேற்கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 64 ஆவது பக்கத்திலே ஜவகர் வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலமாக இந்த நீர் நிலை மேம்பாட்டுத் திட்டத்தை கடைபிடித்து 1991-92 ஆம் ஆண்டுக்கு 5,710 கசிவு குட்டைகளைக் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது. கசிவு நீர் குட்டைகளால் நில நீர் மீண்டும் ஊற்றுப் பெறுக்கெடுக்கிறது என்றும் கிணறுகளின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது என்றும் கண்டறியப்பட்டுளது என்றெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக வல்லுநர்கள் என்ன கூறுகிறார்கள் என்றால் இப்படி குளங்கள், கண்மாய்கள் கசிவு நீர் குட்டைகள மூலமாக நீர்களை தேக்கி வைக்கின்ற காரணத்தினாலே நிலத்தடி நீர் பாதுகாக்கப்படுகிறது, கிணற்று நீர் மட்டம் தணியாமல் பாதுகாக்கப்படுகிறது. அதன் மூலமாக விவசாயிகளுக்கு நீர் ஆதாரம் கிடைக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையிலே ஒன்றை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1989-லே ஜவஹர் வேலைவாய்ப்பு நடந்துக் கொண்டிருந்தது. நெல்லை,

மாவட்டத்திலே நாங்குநேரி தொகுதியிலே பானாங்குளம் என்கின்ற ஊருக்குப் பக்கத்திலே கரந்தான் ஏரி என்கின்ற பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான ஒரு குளம். அதிலே நீலக் கலர் வெள்ளைக் கலர் என்று போர்டு இருந்தாலே அது பொதுப் பணித்துறை குளம் என்று பொருள். அதிலே மாண்புமிகு மறைந்த ராஜீவ் காந்தி அவர்கள் தன்னுடைய ஜிப்சி காரை ஓட்டிச் சென்று அதிலுள்ள அந்த வேலை ஆட்கள் கிட்டே குறைகளை எல்லாம் கேட்டு சென்று இருக்கிறார்கள். அந்த குளம் தான் இன்றைக்கு ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருக்கிறது என்று சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர் கிட்டே மனு கொடுக்கிறேன். நேஷனல் ஹை வேஸ் பக்கத்திலே இருக்கிறது. ஆனால் ஆக்கிரமிப்பு இல்லை என்று சொல்லி ஒரு தீர்ப்பைச் சொல்கிறார்கள். அது எப்படி என்றே புரியவில்லை. 100 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு குளம். அப்புறம் அதிலே ஒரு ஸ்டேட்மெண்டு குழுக் கிட்டே கொடுத்தற்கு ரிப்ளை இது நிலத்தடி நீரை பாதிக்காது என்று, எப்படி பாதிக்காது என்று புரியவில்லை. தன்னுடைய வசதிக்காக இந்த அதிகாரிகள் எனக்கு எந்த ஒரு கருத்தையும் கூறிவிடுகிறார்கள். மாவட்ட, வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கொடுத்திருந்தேன். மாவட்ட, பதில் இது ஒன்றியத்திற்கு சொந்தமான குளம். அதற்கு இன்னும் வேடிக்கை. ஆக பொதுப் பணித் துறைக்கு எந்த எந்த குளங்கள் இருக்கிறது என்று கூட தெரியாத இன்ஜினியர்கள் நெல்லை மாவட்டத்தில் இருக்கிறார்கள். இப்படி இப்படி இங்கே இங்கே காட்டி பொறுப்பை தட்டிக் கழிக்கிறார்கள். இந்த விவசாயத்திற்கு ஆதார மாக இருக்கின்ற இதே நீர் ஆதாரத்தைப் பேணிக் காப்ப தில் தன் கடமையை செவ்வனே ஆற்றுவதில் அவர்களுக்கு ஈடுபாடு இல்லை என்பதைத் தான் இது காட்டுகிறது.

பிற்பகல் 6-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் பேசு கின்றபோது எந்த எந்த குளங்கள் யாருடைய நிர்வாகத் தில் இருக்கிறது என்பது கூட அதிகாரிகளுக்குத் தெரிய வில்லை என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு அவர் உறுப்பினராகி ஏறத்தாழ 11 மாத காலம் ஆகி என்னிடத் தில் கூட அதை நேரடியாக தெரிவித்து இருக்கலாம்



அல்லது எழுத்து மூலம் தெரிவித்து இருக்கலாம். 100 ஏக்கருக்கு மேல் உள்ள கண்மாய்கள் பொதுப்பணித் துறையின் மூலம் நிர்வகிக்கிறோம். 100 ஏக்கருக்கு கீழே இருக்கின்ற கண்மாய்கள் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம், சில கண்மாய்கள், மின் கண்மாய்கள் போன்றவைகள், நம்முடைய பொதுப் பணித் துறையின் மூலம் நிர்வகித்து வருகிறோம். ஆகவே ஏக்கர் கணக்கு என்பது ஒரு நிர்ணயமான அளவு அல்ல. ஆகவே, அவர் குறிப்பிடு கின்ற அந்த ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட அந்த கண்மாய் எந்த பிரிவின் கீழ் வருகிறது என்பதற்கு அவர்கள் விவரங்கள் தருவார்களானால் இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இடத்தில், மட்டும் மனு கொடுத்து விட்டால் போதாது. சில சமயங் களில் அங்கே சரியான நடவடிக்கைகள் இல்லை என்றால், இங்கே அரசு இருக்கிறது. ஆகவே, அரசினுடைய கவனத் திற்கு அவர் கொண்டு வரலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மனுவை எங் கெல்லாம் கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் கொடுத்து பார்த்து விட்டேன். உயர்மட்டத்தில் இருக் கின்ற அரசுக்கு அந்த தகவல் சரியாக வருவதற்கு வாய்ப்புகள் இல்லை. அங்கே மாவட்ட அளவில் இருக் கின்ற அதிகாரிகள் அந்த தகவலை சரியான முறையில் தரவேண்டும். தவறான தகவலை தந்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும்.

ஒரு கசிவு நீர்க் குட்டை என்று சொல்லுகின்றபோது எத்தனையோ இலட்ச ரூபாயை நாம் செலவு செய்கி றோம். இன்றைக்கு நம்பியாறு அணைத் திட்டம் என்ற ஒரு அணைத் திட்டத்திற்கு இந்த அரசு நிதி ஒதுக்கி கடுமையான பணி நடந்து கொண்டிருக்கிறது. அந்த அணையானது எங்கள் பகுதியில் இருக்கிற விஜய நாராயண குளத்தை விட சற்று சிறியது. நாங்குநேரியில் உள்ள குளத்தை விட சற்று பெரியது. இது ஒரு மண் அணை தான். சுற்றிலும் மண்ணைத் தான் உயர்த்து கிறோம். இதற்கு 17 கோடிக்கு மேல் நாம் எஸ்டிமேஷன் போட்டு இருக்கிறோம். அப்படி பார்க்கும்போது இந்த கரந்தாநேரி குளத்திற்கு எவ்வளவு செலவு ஆகும். நான்

அந்த இடத்தில் இன்னொரு குளத்தை கொண்டுவர வேண்டும் என்று சொன்னால், அந்த மாதிரி ஒரு குளத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால் 20, 25 கோடி ரூபாய் செலவு ஆகும். ஆகவே தான் இதனை தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நான் மனுக்கள் குழுவிற்கு கொடுத்து இருந்த அந்த மனுவிற்கு பொதுப் பணித் துறை எங்களுடைய குளம் தான் என்று ஒத்துகொண்டிருக்கிறது. ஆனால் இன்னும் என்னவென்று கேட்டால் அந்த குளத்திற்கு நடு மத்தியில் கட்டிடங்கள் இருக்கின்றன, அது அவர்களுக்கு ஆக்கிரமிப்பாக தெரியவில்லை. அந்த நேஷனல் ஹைவேஸ்க்கும் குளத்தின் கரைக்கும் இடையில் சாலை மாதிரி கொஞ்சம் இடம் இருக்குமே இரண்டு சைடிலும் அந்த இடத்திலே ஒரு லிங்கு ரோடு போட்டு இருக்கிறார்கள். லாரி வருவதற்கு, மணல், செங்கல் ஏற்றிபோவதற்கு அந்த சின்ன பாதையை தான் ஆக்கிரமிப்பு என்று சொல்லி அதை அகற்றி விட்டோம் என்று சொல்லி அவர்கள் மார் தட்டி பதில் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே இந்த நிலைகள் எல்லாம் அரசுக்குத் தெரியவேண்டும். அதன் மூலமாக இந்த அரசு அவைகளை சரி செய்யவேண்டும் என்பதற்காகத் தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

விவசாயிகளுடைய மற்ற பிரச்சினைகளை எல்லாம் இங்கே கருத்திலே கொண்டு நமது அரசு விற்பனைத் துறையில் எல்லாம் நல்லமுறையில் முடுக்கிவிட்டு இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு அந்த சீசன் வரும் நேரத்தில் விளைச்சல் அதிகமாக இருக்கும். அப்போது விலை இறங்கிவிடும். சப்ளை அதிகமான உடன், டிமாண்டு அதே கான்ஸ்டன்டாக இருந்த உடன், அந்த விலை இறங்கி விடும்.

அதேபோல் பெரிஷபல் காமாடிட்டி சீக்கிரமாக அழிந்து போகும் தன்மை உடையதாக இருக்கின்ற காரணத்தால், அதை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் அதை பத்திரப்படுத்தி வைக்க முடியாத காரணத்தால், கேட்ட விலைக்கு கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு விற்பனைக் கூடங்கள், மார்கெட்டிங் சொசைட்டிகளை எல்லாம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதில் அவர்கள் மார்க்கெட்டில் நல்ல விலை வரும்வரை அந்தப் பொருட்களை ஈடு மாதிரி அல்லது ஒத்தி மாதிரி உள்ளே வைத்துக் கொள்ளலாம்; எப்படி நகைகளை எல்லாம் வங்கியில் வைப்போமோ அக்க ...



அதே சமயத்தில் எங்களுடைய தொகுதியில் சமூகரங்கபுரம் என்ற இடத்திலே ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கிறது. கடந்த ஆட்சியின் போது 20, 25 பேருக்கு நெல்லை ஈடாக பெற்றுக்கொண்டு கடன் வழங்கியதாக ரெக்கார்டு செய்து கொண்டார்கள். ஆனால் நெல்லை வாங்கவில்லை. நெல்லை விவசாயிகள் அந்த சங்கத்தில் கொண்டுபோய் வைக்கவில்லை. ஆனால் ரெக்கார்டு, செய்து விட்டு ஒவ்வொருவருக்கும் 25, 30 மூட்டை கொடுத்ததாக வைத்து பணத்தைக் கொடுத்து விட்டார்கள். இப்போது ஆட்சி மாறி, செகரட்டரி எல்லாம் மாறி, இப்படி பல பிரச்சனைகள் வந்த பிறகு விவசாயிகள் கிட்டே போய் நீ ரூபாய் கொடு என்று இவர்கள் வசூலுக்குப் போகும்போது அவர்கள் நெல்லை கொடு என்று கேட்கிறார்கள். நெல்லை இவர்கள் உண்மையிலேயே வாங்கி உள்ளே வைக்கவில்லை. நெல் இல்லை. இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் இந்த அதிகார வர்க்கத்தினால் இங்கே நடந்து கொண்டிருக்கிற காரணத்தால் அரசுக்கும் கெட்ட பெயர், வருகிற மக்களுக்கும் அது பயன் இல்லாமல் போகுது. இடையில் இருக்கின்றவர்கள் ஊதியம் இன்றி இந்த சலுகைகளை எல்லாம் அந்த விவசாயிகள் அனுபவிக்க முடியாமல் தவறு நடக்கிறது என்பதற்காகத்தான் இந்த ஒரு உதாரணத்திற்காக நான் எடுத்துச்சொல்கிறேன்.

பிற்பகல் 6-20

அப்புறம், இந்த மானியப் புத்தகத்திலே கால்நடை வளர்ப்புக்காக, இந்த வேளாண் கால்நடை வளர்ப்புக்காக மேய்ச்சல் நிலங்களை உண்டுபண்ணி, மேய்ச்சல் காடுகளையெல்லாம் உண்டுபண்ணுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது நல்ல ஒரு அம்சம்தான். எனக்கு இருக்கின்ற வருத்தமெல்லாம் இந்த மேய்ச்சல் புறம்போக்கு, மந்தை புறம்போக்கு இவைகளையெல்லாம் நாம் பட்டா பண்ணிவிடுகிறோம். ஆடு மாடுகளை வளர்ப்பதற்காக ஊக்குவிக்கிறோம். மானியக் கடன்களை வழங்குகிறோம். அதிலே அவர்கள் கடன்களை வாங்கி வளர்க்கிறார்கள். பால் வளத்தைப் பெருக்க வேண்டுமென்று, பசுமாடு எருமைமாடுகளைக் கொடுக்கிறோம். செம்மறி ஆடு, வெள்ளாடுகளை அவர்கள் வளர்க்கிறார்கள் இவைகளெல்லாம் எங்கே போய் மேயும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகவே இந்த மந்தை புறம்போக்கு, ஓடை புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு போன்ற நிலங்களை அப்படியே வைத்து, பேணி பாதுகாக்க வேண்டும். எப்படி நாம் குளங்களையெல்லாம் நாம் காக்க வேண்டுமோ அப்படித்தான் இந்த மேய்ச்சல்

திலங்களையெல்லாம் நாம் காக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். அதாவது, ஃபோர்தாட், வருங்காலத்தைப் பற்றி சிந்திக்காத சுயநலவாதிகளெல்லாம், இந்தமாதிரி காரியங்களைச் செய்வதற்கு உடன்பட்டு விடுகிறார்கள். அரசு இயந்திரம், எக்சிகியூட்டிவ் மெஷினெரி, அதிகாரிகள், இங்கே இயற்றப்படுகின்ற சட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கடமைகளில் தவறி, கையூட்டுகளைப் பெற்றுக்கொள்கின்ற காரணத்தினாலே வருங்காலம் பாதிக்கப்படுகிறது. இன்றைக்கு நிறைய கால்நடைகளை வைத்து இருக்கிறோம். ஆனால் மேய்ப்பதற்கு இடம் இல்லை. ஆகவே, பிராணிகளை வளர்ப்பவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அவைகளை அவிழ்த்து விட்டுவிடுகிறார்கள், விவசாயிகள் அறியாமல், தெரியாமல் இருக்கின்ற இடங்களில் கொண்டு போய் விட்டுவிடுகிறார்கள். அல்லது வேலியை வெட்டியே உள்ளே விட்டுவிடுகிறார்கள். விவசாயி முதலீடு செய்து வளர்த்து வைத்திருக்கிற பயிர்களை நாசம் செய்கின்றன. இதனால் விவசாயிகள் பெரிய பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் விவசாயிக்கு ஏற்கனவே வானம் பார்த்து இருக்கின்ற ஒரு நிலை. இயற்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கக், கூடிய ஒரு நிலை, அப்புறம், மின்சாரம், மழை அணைக்கட்டில் இருக்கின்ற தண்ணீர், கிணற்றிலே இருக்கிற தண்ணீர், நிலத்தடி நீர் இப்படி பல்வேறு பிரச்சினைகளை சார்ந்து இருக்கிற நிலை விவசாயிக்கு இருக்கிறது. திடீரென்று வெள்ளம் வந்து விடும்: புயல் வந்துவிடும். His life is totally subjected to risks. இப்படிப்பட்ட சூழ்நிலையும் இருக்கின்ற தின்த்தில் இந்த ஆடுமாடுகளினுடைய உபத்திரவம் வேறு. அவைகளை அடைப்பதற்கு பவுண்ட் கிடையாது. ஆக, விவசாயி பலவகைகளிலும் துன்புறுத்தப்படுகிறான். நசுங்கி, நலிந்து, வீழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதற்காகத்தான் இதையெல்லாம் நான் சுட்டிக்காட்டுகிறேன். ஆகவே, இதை தாங்கள் கருத்திலே கொண்டு விவசாயிகள் தங்களுடைய பயிருக்கு சேதம் செய்கின்ற கால்நடைகளைப் பிடித்து ஒப்படைத்து, அது பாதுகாக்கப்பட்டு, அதற்கு அபராதம் விதித்து, திரும்ப அந்த உடைமைதாரர் பெற்று செல்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தித் தரக்கூடிய அளவிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் அப்புறம் என்னுடைய தொகுதியிலே கள்ளிகுளம் என்கிற இடத்திலே இதேமாதிரி விவசாயிகளினுடைய, நிலத்திலே ஆடுமாடுகளால் சேதம் ஏற்படுகிறது என்பதற்காக, ஆட்டை பிடித்து அந்த விவசாயி விற்றுவிட்டான் ஆடு வளர்க்கின்ற அந்த உடைமைதாரர் வந்து, மிகுந்து



வேதனையோடு இன்றைக்கு எனக்கு மனு போட்டுக் கொண்டே இருக்கிறான்; ஆடு போய்விட்டது, ஆடு போய்விட்டது என்று சொல்லி. இப்படிப்பட்ட சூழ்நிலைகளெல்லாம் இருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை)

அப்புறம் காடு வளர்ப்பு. வேளாண் துறையிலே காடுகளை வளர்ப்பதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. காடுகளை வளர்க்கின்றபொழுது, மழை பெய்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, கட்டைகள், விறகுகள் இப்படி பல்வேறு காட்டுப் பொருள்களும் நமக்குக் கிடைக்கின்றன. அப்புறம் கால்நடை வளர்ப்பு. மேய்ச்சல் நிலம் இப்படி ஒவ்வொன்றாக, இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு இத்தனையும் செய்து, நாட்டிலே வாழ்கின்ற கற்ற, கல்லாத, செல்வந்தர்கள் ஒயிட்காலர் ஜாப் பார்த்துக்கொண்டிருக்கின்றவர்கள் மேட்டுக்குடி மக்கள் எல்லோருக்கும் உணவை அளிக்கின் இந்த உன்னதமான தொழிலைச் செய்கின்ற அந்த விவசாயிகளினுடைய நிலை இன்றைக்கு எப்படி இருக்கிறது என்று கேட்டால், மிகவும் கேவலமான, கீழ்த்தரமான நிலையிலே இருக்கிறது. அவர்களில் அநேகருடைய தலையிலே எண்ணெய் பார்க்க முடியாது. அநேகருடைய துணி சோப்பைப் பார்த்து இருக்காது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒர்க்கிங் கண்டிஷன் கிடையாது. இங்கே என்னடாவென்றால், 8 மணிக்கு வேலை மேலே செய்தால ஓவர்டைம் என்கிறான், ஸ்டிரைக் என்கிறான்; என்னவெல்லாமோ செய்கிறான். ஆக இவர்களுக்கு.... (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். நாம் இரவிலே அவர்களுக்கு கரண்ட் கொடுக்கிறோம். இரவிலே கரண்ட் கொடுக்கிறபொழுது, அவர்களுக்கு பேய் பயம் வரலாம்; திருடன் பயம வரலாம் அல்லது பாம்பு போன்ற விஷ ஜந்துக்களுடைய பயம் வரலாம். விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கிறது. அநேக விவசாயக் கிணறுகளினுடைய சுற்றுச்சுவர் என்று சொல்லப்படுகின்ற பேரபட் வால்ஸ் தரைமட்டத்தோடு இருக்கும். உயர்ந்து கூட இருக்காது. ஆகவே, உள்ளே விழுந்து சாகிற நிலையும் ஏற்படும். இப்படி பல்வேறு நிலைகளெல்லாம் இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்குத் தரப்படுகின்ற கரண்டை பகலிலே தர முடியுமா என்று பார்க்க வேண்டும்.

இப்படி, சட்டமன்றத்திற்கு, அது, இதற்கெல்லாம் மின் சாரத்தைச் செலவு செய்கின்ற நாம், அலுவலகங்களுக் கெல்லாம் செலவு செய்து கொண்டிருக்கின்ற நாம், நமக் காக உழைக்கின்ற, இந்த நாட்டின் பொருளாதாரத்திற் காக உழைக்கின்ற, உற்பத்தியைப் பெருக்குகின்ற— அதாவது விவசாயி சேற்றிலே காலை வைக்கவில்லை என்றால நாம் சோற்றிலே கை வைக்க முடியாது என்று சொல்வார்கள— அப்படிப்பட்ட உன்னதமான தொழிலைச் செய்கின்ற அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமை இ என்றே நான் கருதுகிறேன். ஆகவே, அவர்களுக்கு பது கரண்டைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று..

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் பேசி முடிக்கட்டும்.

திருமதி ரமணி நல்லதம்பி : அப்புறம், நீர் ஆதாரம் இருந்துவிட்டால் போதாது. மின் ஆதாரமும் வேண்டும். மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே இலவச மின்சாரம் வழங்குவதாக அரசு அறிவித்து அதை அண்மைக் காலத் திலே விவசாயிகள் அனுபவித்து வருகிறார்கள். விவசாயி கள் டைரக்டாக, இடைத் தரகர்கள் யாரும் டங்கு பெற முடியாமல், விவசாயிகள் சுரண்டப்படாமல் என்றாய் டண்ணக்கூடிய அரசு சலுகை இது ஒன்றுதான். அவன் பெரிய விவசாயியாக இருந்தாலும் சரி, சின்ன விவசாயி யாக இருந்தாலும் சரி, நஷ்டம் வரும்பொழுது எல்லோருக்கும் ஒன்றுடால வரும. புயல் வந்து, பணக் கார வீட்டு வாழை என்று விட்டுவிடப் போவதும் இல்லை ; பணக்கார வீட்டுத் தென்னை என்று விட்டு விட்டுப் போய்விடப் போவதும் இல்லை, எல்லாம் பட்டுப் போய்விடும் ; எல்லாம் முறிந்து போய்விடும், இப்படித்தான் ஆகும். ஆகவே, அவர்கள் அனுபவிக்கக் கூடிய இந்தச் சலுகைதான் நேர்முகமாக அவர்களுக்குக் கிடைக்கிறது.

பிற்பகல் 6-25

இந்த மானியக் கடன்களெலலாம் இடைத்தரகர்கள் அப்புறம் ஏதாவது பினாமி என எல்லாமே இருக்கிறது. அந்த ஊழல்களெல்லாம் நிறைய இருக்கின்றன. வங்கி களிலே கூட அந்த மானியத்தை மட்டும் தந்துவிட்டு,





கடனைக் கொடுக்காமல் வைத்து விடுகின்றார் கள். இப்படியெல்லாம் இருக்கிறது. ஆகவே, இந்த மின்சாரத்தைப் பொறுத்தவரையில், எந்த விவசாயி மின் இணைப்பு கேட்டாலும் கொடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்க வேண்டும். அது இலவச மின்சாரமாக இருக்க வேண்டும். இந்த 25,000 ரூபாய் டெபாசிட்டும் இன்ஸ்ட லேஷன் சார்ஜும் கட்ட வேண்டுமென்று ஒரு திட்டத்தை அரசு அறிவித்திருக்கிறது. எவ்வளவுதான் நஷ்டம் வந்தாலும் இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே ஈடு செய்து, சரி செய்து, புத்தியையும் யுக்தியையும் கையாண்டு, நல்ல வழிகளையெல்லாம் நாம் இன்றைக்குக் கையாண்டு, நல்ல நல்ல திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கின்ற இந்த வேளையிலே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதிலே ஒன்றும் பிரச்சினை இருகக முடியாது என்றே எண்ணுகிறேன். இந்த 25,000 ரூபாய் திட்டத்தை நாம் செயல்படுத்து கின்றபொழுது உண்மையிலேயே வரிசையிலே காத்துக் கொண்டிருப்பவர்களை இந்த இ.பி. வந்து வஞ்சித்து விடும். என்ன செய்வார்கள் ? ''உனக்கு வரிசை வர வில்லை'' என்று சொல்லிவிட்டு, ''பார், நிறையப் பேர் இந்த 25,000 கட்டுவதற்குக் காத்துக் கொண்டிருக் கிறார்கள், நீ ஒரு பத்தாயிரம் கொடுத்தாய் என்றால் உனக்கு முன்னாலே கொடுத்து விடுவோம்'' என்று இப்படியெல்லாம் சொல்லி மிரட்டுவார்கள். நிலத்தி னுடைய காஸ்டே 10,000 ரூபாய், 15,000 ரூபாய்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி நல்லதம்பி அவர்கள் ஊகத்தின் அடிப்படையிலே பேசிக்கொண்டிருக்கக் கூடாது. 25,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று, பெரும்பாலான தமிழக மக்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதற்கு ஏராளமான வரவேற்பு இன்றைக்குத் தமிழகத் திலே கிடைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வங்கிகளிலே கடனை வாங்கி, நிலங்களைச் சீர்படுத்தி, கிணறுகளை வெட்டிவிட்டு, பல இலட்சம் ரூபாய் முதலீடுகளைப் போட்டுவிட்டு, வட்டியாகக் கட்டுகின்ற

விவசாயிகள், மின்னிணைப்பு கிடைக்காமல் 4 வருஷம், 5 வருஷம் என்று காத்திருக்க வேண்டிய நிலைமையை மாற்றி, வெறும் 25,000 ரூபாய் கட்டினால் போதும் என்கின்ற அளவிற்கு எத்தனையோ பேர் தயாராக இருக்கின்ற இந்த நேரத்திலே இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். ஆகவே, இவ்வளவு வரவேற்பு பெற்றிருக்கின்ற இந்தத் திட்டத்தை ஊக்கப்படுத்துகின்ற விதத்திலே, எதிர்பார்ப்புகளை வைத்துக்கொண்டு, அப்படிச் செய் வார்கள் இப்படிச் செய்வார்கள் என்று யூகத்தின் அடிப் படையிலே மாண்புமிகு உறுப்பினர் ரமணி நல்லதம்பி அவர்கள் பேசக் கூடாது. அப்படி ஏதாவது பிரச்சினைகள் இந்த மாதிரி இருக்குமேயானால் அரசினுடைய கவனத் திற்குக் கொண்டு வரவேண்டும்; அதன்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குக் களங்கம் விளைவிக்க வேண்டும் என்றோ அல்லது ஊகத்தின் அடிப்படை யிலேயோ இதைப் பேசவில்லை. நடைமுறைச் சிக்கல் களைச் சொல்கிறேன் ஒரு விவசாயி—அமைச்சருடைய வாயிலே வந்தது அந்த வார்த்தை—கடன் பட்டு, வட்டி யிலே அவன் இருக்கிறான், வட்டிக் கடனிலே இருக் கிறான் என்று சொல்லி, வட்டிக் கடன் அவனுடைய நிலை மதிப்பீட்டுக்கு அதிகமாக அவனுக்குக் கடன் இருக்கிறது. நாம் கடனைக் கொடுத்துக் கொடுத்து இடைத் தரகர்களெல்லாம் அதைச் சுரண்டி, என்னவெல் லாமோ, இலஞ்சம் கொடுத்து, இப்படியெல்லாம் அவன் கடன் சுமையிலே நசுங்கிக் கொண்டிருக்கிற சூழ்நிலை யிலே, 25,000 ரூபாயை எடுத்தவுடன் கேட்டால்— மோட்டார் இணைப்போடு வயலே இந்த 25,000 ரூபாய்க்குக் கிடைக்கும் ஒரு விவசாயிக்கு. ஆகவே, அப்படிப்பட்ட நிலை என்பது சாதாரண பெரும்பான்மை விவசாயிகளுக்கு இயலாத காரியம் என்று கருதுவதால் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் நோக் கத்தையே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்து



கொள்ளவில்லை என்றே கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், கடன் பட்டு, நலிந்த நிலையில் இருக்கின்ற ஒரு விவசாயி முன் வந்து 25,000 ரூபாய் கட்டி னால்தான் அவருக்கு பம்பு செட்டுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும் என்ற நிலை இல்லை. அதற்காக இந்தத் திட்டம் வகுக்கப்படவில்லை. ஏற்கனவே அரசாங்கம் ஆண்டு தோறும் இலவசமாக 40,000 பம்பு செட்டுகளுக்கு இலவச மாக மின்னிணைப்பு கொடுத்து வருகிறது. அதற்கான திட்டம் ஏற்கனவே இருக்கிறது. ஆனால் ஒரு பம்பு செட் டுக்கு இலவசமாக மின்னிணைப்பு கொடுப்பதற்கு எவ்வளவு செலவு ஆகிறது, 25,000 ரூபாய் அரசாங்கத்திற்குச் செலவு ஆகிறது.

இன்று இருக்கின்ற நிதி நிலை நெருக்கடியில் ஆண்டுதோறும் 40,000 பம்பு செட்டுகளுக்கு, ஒரு பம்புசெட்டுக்கு 25,000 ரூபாய் வீதம் செலவு செய்ய வேண்டுமென்றால் இன்றுள்ள நிலையில் அவ்வளவு துரிதமாக அதைச் செய்ய முடியவில்லை. ஏற்கனவே தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு பெருத்த நஷ்டத்தில் இயங்கிக் கொண்டு இருந்தது. தமிழ் நாடு எலக்ட்ரிசிட்டி போர்டுக்கு மட்டுமே பலகோடி ரூபாய் கள் டெஃபிசிட் இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றபோது அதைப் படிப்படியாகக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எனவே, இந்தத் திட்டத்தை எதற்காக அறிவித்திருக்கிறோம் என்று சொன்னால், யாராவது வேகமாக மின்னிணைப்பு பெற வேண்டும் என்று விரும்பினால் அவர்களால் பணத்தைச் செலுத்த முடியும் என்ற நிலை இருந்தால், அவர்களாக முன் வந்து 25,000 ரூபாய் கட்டினால், அவர்களுக்கு முன்னுரிமை யோடு அவர்களுடைய பம்புசெட்டுக்கு மின்னிணைப்பு கொடுக்கப் படும் என்றுதான் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறோமே தவிர, இந்தத் திட்டத்தினால் அவர்களுக்கும் மின்னிணைப்பு விரை விலேயே கிடைக்கும்; துரிதமாகக் கிடைக்கும். அரசாங் கத்திற்கும் ஓரளவிற்கு வருமானம் கிடைக்கும். அவ்வளவுதானே தவிர, ஏற்கெனவே ஆண்டுதோறும் விவசாயி களுக்கு இலவசமாக 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு இலவச மாக மின் இணைப்பு கொடுக்கும் திட்டத்திற்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் நான் தெளிவுபடுத்த விரும்பு கிறேன்.

பிற்பகல் 6-30

**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. ஏழை விவசாயிகள் பாதிக்கப்படாமல், அவ்வாறு செய்வார்களேயானால், அது பொருத்தமானதென்றே கருதுகின்றேன்.

அடுத்து கால் நடைகள் அநேகமாக கேரள மாநிலத்திற்கோ அல்லது வடபகுதி கிளியரன்சில் செல்வதானால், ஆந்திரப்பிரதேசத்திற்கோ செல்கிறது. ஆகவே, இவைகளையெல்லாம் தவிர்க்கின்ற வகையிலே, நம்முடைய பகுதியிலே கால்நடைத்துறை ஒரு பெரிய ஸ்லாட்டரிங் ஹவுஸ் வைத்து, ஆயத்த உணவு உற்பத்தி செய்கிற ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவோமேயானால், அதன் மூலமாக தோல் பொருள்கள், இன்னும் மாமிச உணவுகள் எல்லாம் தயாரித்து அந்நியச் செலவாணியை ஈட்டுகிற வாய்ப்பு இருக்கும் என்பதையும் கூறி, விவசாயிகள் இறந்தால், அவர்களுக்கும் 60 ஆயிரம் ரூபாய், அரசு ஊழியர்கள் பெறுவதைப்போல ஆண்டாண்டுகாலம் பரம்பரையாக இதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற அவர்களுக்கும் ஏதாவது மாதம் இவ்வளவு என்று செலுத்துகிற வகையிலே செலுத்தி ஒரு ஏற்பாட்டைச் செய்து, அவர்களுக்கு பென்ஷன் வசதி போன்றவைகளைச் செய்து தர இந்த அரசு முன்வரவேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை வைத்து வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் கூறிய விளக்கத்திற்கு மேலும் ஒரு விளக்கத்தை இணைக்க விரும்புகிறேன். அரசாங்கம் ஆண்டுக்கு 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்றால், ஒரு பம்பு செட்டுக்கு 25 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்பதைக் குறிப்பிட்டேன். சில இடங்களில்தான் அப்படி, ஒவ்வொரு இடத்திலும் 'எஸ்டிமேட்' மாறுபடும். சில இடங்களில் 25 ஆயிரம் ரூபாய் செலவாகும். சில இடங்களில் 50 ஆயிரம் ரூபாய் ஆகும். சில இடங்களில் ஒரு இலட்சம் ரூபாய்கூட செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. எனவே ஒரு லட்சம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் இப்படியெல்லாம் செலவு செய்து, 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின் இணைப்பு துரிதமாக



கொடுக்கவேண்டுமென்றால், இன்றைய அரசின் நிதி நிலைமையில் அது சாத்தியமில்லை. நாம் ஆசைப்பட்டாலும் அவ்வளவு வேகமாக அத்தனை பேருக்கும் கொடுக்க முடியாது என்பதற்காகத்தான் எத்தனையோ விவசாயிகள் தாங்களாக முன் வந்து அரசை அணுகி, நாங்கள் பணம் கொடுக்கிறோம், எங்களுக்காவது முன்னுரிமை கொடுத்து எங்களுக்கு விரைவிலே பம்பு செட்டுகளுக்கு இணைப்புக் கொடுங்கள் என்று கேட்டதால்தான் இந்தத் திட்டத்தை அரசாங்கம் வகுத்துள்ளது என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

***மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தப் பேரவையின் மரபுகளை கிஞ்சிற்றும் வழுவாமல் கட்டிக் காத்து வருகிற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேற்றிலே கிடந்த என்னை,
சென்னைக் கோட்டையிலே பதித்து,
அமைச்சர் பதவியை அளித்து, ஆன்றவிந்தடங்கிக்
கொள்கைச் சான்றோர் பலரைக்கண்ட
இந்த மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பினை
எனக்கு நல்கிய
தாயே! தூய தமிழ் தவமே! அற்புதங்களான
திட்டங்கள் பல ஆக்கிப், படைத்து
அன்னைத் தமிழகத்தை, அழகுத் தமிழகமாக்கும்
என்னுயிரே! செந்தமிழே! நறுந்தேனே!
செயலினை, மூச்சினை
உனக்களித்தேன்!
(மேசையைத் தட்டும் ஒலி)

நைந்தாய் எனில் நைந்துபோகும் என
வாழ்வும் நன்னிலை உனக்கென்றால்
எனக்குத் தானே எனக்கூறி, நின் பாத மலர்
தொட்டு என்னுடைய உரையை
நான் ஆற்ற விழைகிறேன்.

இம் மாமன்றத்தில் இரண்டாவது நிதிநிலை
பற்றிய கலந்துரையாடலில் நான்
சார்ந்திருக்கும் வேளாண்மை பற்றிய
விளக்கங்களை எடுத்து வைப்பதற்கு
வாய்ப்பு நல்கிய, என் இதய தெய்வம்

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 21

கோடானகோடி மக்களின் குலவிளக்கு
உலக வரலாற்றில் தனக்கு ஒப்பாரும்
மிக்காரும் இல்லா வகையில்
(மேசையைத் தட்டும் ஒலி)
ஏன்? தன்னை நெருங்கக்கூட முடியாத நிலைக்கு
சாதனைகள் பல செய்து, தமிழ்ப் பெருங்குடி
மக்களின் வேதனைகளை-சோதனைகளை
விரட்டியடிக்கும் விடிவெள்ளியே,
(மேசையைத் தட்டும் ஒலி)
''என் தமிழரின் ஆட்சிதனை நிறுவுவதற்கு
ஊண் உடல் கேட்பினும்
செந்தமிழ் உவப்புடன் நல்குவேன் ''
என்றுரைத்த பாட்டு நெருப்பு பாவேந்தன் இலக்கிய
வரிக்கு இலக்கணமாய் இருக்கும் என் அன்னைக்கு
என் நெஞ்சார்ந்த நன்றியை
மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6.35

இந்த இனிய வேளையிலே நான் கூறாது போவேனே யானால்;
குள்ள மனம் கொண்ட புல்லுருவிகளில் நானும்
ஒருவனாகி விடுவேன்
(மேசையைத் தட்டும் ஒலி).

முதல் நிதி நிலை விவாதத்தின்போது மாண்புமிகு புரட்சித் தலைவியாக மட்டும் இந்தப் பேரவையில் முதலமைச்சர் பொறுப்பை அலங்கரித்தார்கள். இந்த இரண்டாவது நிதி நிலை அறிக்கையின்போது நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் டாக்டர் புரட்சித் தலைவி என்ற பெருமையுடன் (மேசையைத் தட்டும் ஒலி) விளங்குகிறார்கள். அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் அன்னை பல்கலைக் கழகமாம் சென்னைப் பல்கலைக் கழகம் நம்முடைய புரட்சித் தலைவிக்கு டாக்டர் பட்டம் வழங்கி தன்னுடைய பெருமையை நிலை நிறுத்திக் கொண்டது. அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனானேன். பட்டம் பெற்றதால் நம் புரட்சித் தலைவி அவர்களுக்கு புதிய பெருமை ஒன்றும் சேர்ந்துவிடவில்லை. ஆனால் புரட்சித் தலைவிக்குப் பட்டம் தந்ததினால் இப்பல்கலைக் கழகம் பெருமை பெற்றது என்று நான் சொல்லுவேன். (மேசையைத் தட்டும் ஒலி.)



1992 ஏப்ரல் 21] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

ஆங்கிலக் கவிஞன் ''லார்ட் டென்னிசன்'' (Lord Tennyson) பாடிய வரிகள் என் நினைவிற்கு வருகிறது. பட்டங்களைப் பற்றி பாட வந்த அவன்,

"He may not be a Master of Arts
But he is a Master of Hearts"

என்று பாடுவான். இந்த வரிகள் முழுக்க, முழுக்க நம்முடைய புரட்சித் தலைவிக்கு உரித்தானவை (மேசையைத் தட்டும் ஒலி). ஆம்! She is a Master of Hearts எண்ணற்ற தமிழ் மக்களின் நெஞ்சத்தில் நிறைந்திருக்கிற சொற்சித்திரம் அவர்கள் அவர்களின் பொற்பாதங்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

''கார் நடக்கும் படி நடக்கும் காராளர் தம்முடைய
ஏர் நடக்குமெனில் இயல் இசை நாடகம் நடக்கும்
சீர் நடக்கும் திறல் நடக்கும் திருவறத்தின் செயல் நடக்கும்
பார் நடக்கும் எங்கும் பசி நடக்க மாட்டாது.''

கம்பனின் கருத்திற்கு விளக்கம் பிறந்திருக்கிறது. புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் இனி பசி நடக்காது. (மேசையைத் தட்டும் ஒலி).

வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கேற்ப, உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதே அரசின் முக்கியக் குறிக்கோளாகும். தமிழ்நாட்டில் 1991-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 5.56 கோடியாகும். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது 10 ஆண்டுகளில் மக்கள் தொகை அதிகரிப்பு விகிதம் 14.94 சதமாக உள்ளது. 2000-ம் ஆண்டில் இம்மக்கள் தொகை 6.39 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, பெருகிவரும் மக்களுக்குத் தேவையான உணவு தானியங்களை உற்பத்தி செய்வது இத்துறையின் பணியாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புனித அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டபின், வேளாண்மையின் நிலை பற்றி விவரித்துக் கூறுவது என் கடமை எனக் கருதுகிறேன்:

''வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத் தலைய கடற் காவேரி''

என்று பட்டினப்பாலையிலே கண்ணனார் பாடி மகிழ்ந்தது பொய்யாய், கற்பனையாய்ப் பழங்கதையாய் போயிற்று.

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 21

கண்ணுக்கு மையழகு, கவிதைக்கு பொய் அழகு என்று பாடியவன் சொல்தான் மெய்யாகிவிடுமோ என்று எண்ணியிருந்த நேரத்தில், எங்கள் இதய தெய்வம், தமிழகத்தின் ஒளி விளக்கு, நாவலத்தீவின் நம்பிக்கை நட்சத்திரம், கன்னித் தமிழகத்தின் காவல் தெய்வம் புதுமைத் தலைவி-புரட்சித் தலைவி அவர்களின் புனித ஆட்சியில் வறண்ட நிலமெல்லாம் வயலாய் கொதிக்கக் காய்ந்து கருகிப் போன காடெல்லாம் கண்ணைக்கவரும் சோலையாய்க் காட்சிதர தூர்ந்துபோன குளங்களெல்லாம் வழிந்தொழுக ஏரியெல்லாம் எங்கும் நீர் பரப்பாய் காட்சிதர

''பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா— நின்றன்
பச்சை நிறந் தோன்றுதையே நந்தலாலா''

(மேசையைத் தட்டும் ஒலி).

என்ற பாரதி பாட்டு வரிக்கு இலக்கணமாய் இருப்பது எத்தனையோ ஆண்டிற்குப்பின் இப்பொழுதுதான் என்பது. நானல்ல, நீங்களல்ல, இந்த நாநிலமே அறியும். (மேசையைத் தட்டும் ஒலி.)

''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லோருக்கும் பெய்யும் மழை''

என்ற தமிழ்ப் பாட்டிற்கு விளக்கமே எனக்கு இப்பொழுது தான் புரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) யார் அந்த நல்லார்? எவர் பொருட்டு எல்லோருக்கும் மழை பெய்திருக்கிறது? எவர் அவர்? அவர்தான் எங்கள் குல விளக்கு. (மேசையைத் தட்டும் ஒலி).

இன்பத் தமிழகத்தின் சுடர் விளக்கு நாட்டு மக்களின் நன்மை ஒன்றையே தம்முடையதாக கொண்டு, அல்லும் பகலும், அனுதினமும் வீழ்ச்சியுற்ற தமிழகத்தை எழுச்சியுறச் செய்து, எழில் தமிழகமாக மாற்றிக் கொண்டிருக்கும் இதய தெய்வம் தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி.)



1992 ஏப்ரல் 21] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

''அயோத்தி ராமனின் கால்பட்டு அகலிகை
புனிதமடைந்ததாக காப்பியம் கூறும். அங்கே ஒரு
அகலிகை புனிதம் பெற்றாள்''

எங்கள் அகத்திலும் புறத்திலும் குடி கொண்டிருக்கும் அம்மா அவர்களின் கால்பட்டு, அது பட்ட இடமெல்லாம் தமிழகத் தில் மட்டுமல்லாமல் இந்தத் தரணியே புனிதமாக்கிக் கொண் டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

பிற்பகல் 6.40

புராணங்களில் அமிழ்தம் ஒன்றிருப்பதாகக் கூறியிருக்கின்றார் கள். அதற்கு சாவா மருந்தென்று விளக்கம் கூறி வருகின் றார்கள். தெள்ளுதமிழ் யாத்த வள்ளுவப் பெருந்தகை அமிழ்தம் எதுவென்று கூறுகிறார்.

''வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று.''

என வான் சிறப்பு அதிகாரத்தில் கூறுகிறார். வானின்று வழங்குவது மழை. அது அமிழ்தம். அது சாவா மருந்து அந்த சாவா மருந்து, இன்றைக்கு தமிழகத்து மக்களுக்கெல் லாம் கிடைத்திருக்கிறது. எங்கள் புரட்சித் தலைவியின் ஆட் சியில்.

இனி இன்பத் தமிழகத்தில் தானம், தவம், ஒழுக்கம் எல்லாமே தழைத்து நிற்கும். அதனால் தமிழகம் தலை நிமிர்ந்து நிற்கும்.

''நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுங்கு.''

யார்யார்க்கும் ஒழுக்கம் நீரின்றி அமையாதர்ம்? கடந்த ஆட் சியாளர் ஒழுக்கமின்றி ஆண்டு உலாவித் திரிந்தவர்களெல்லாம் ஒழுக்கம் பெற, ஒழுங்கு பெற வானம் நீரை வழங்கியிருக்கிறது. கள்ளமனம் போல் கருகிக் கிடந்த தமிழகத்தில் புரட்சித் தலைவி அவர்களின் புனித ஆட்சி மலர்ந்ததும் வானம் - மகிழ்ந்து மாமழை பெய்தது. மக்கள் மகிழ்ந்தனர். வாராது வந்த மாமணியாம் எங்கள் தலைவியின் வரவால் நீரோடைகள் நிறைந்தன. நிலங்கள் விளைந்தன, உற்பத்தியில் உபரி நாட்டில் தன்னிறைவு காண முனைந்தோம். கடந்த பல ஆண்டுகளாய் பொய்த்த வானம் புயலாக மாறி, பெய்யெனப் பெய்ததால் எங்கும் வெள்ளம் பொங்கிப் பாய்ந்தது. வங்கப் பெருங்கடல் சீறி எழுந்ததால் புயலின் தாக்கம் அதனால் இயற்கையின் சீற்றம், கொடுமையிலும் கொடுமை

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 21

மக்கள் பலர் வீடிழந்தனர், விளை நிலங்கள் நீரால் மூழ்கின.
கன்று பசுக்களின் உயிர்ச் சேதம், உடமைகள் அடித்துச்
செல்லப்பட்டன. மாதர்கள் என்ன செய்வது என்று
ஏக்கப் பெருமூச்சை இதயத்தில் தாங்கிக் கொண்டிருக்கையில்
புனிதத் தலைவியாம் எங்கள் புரட்சித் தலைவி அவர்கள்
கொட்டும் மழையில் குடை கூட வேண்டாது ஓடோடிச்
சென்று தண்ணீரிலும் கண்ணீரிலும் நனைந்து கொண்டிருந்த
மக்களுக்கு, உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும்
தந்து ஆறுதல் கூறினார்கள். அன்னையின் ஆணை கேட்டு
அமைச்சர் பலர் விரைந்தனர். (மேசையைத் தட்டும் ஒலி).

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான சீத்தலைச் சாத்தனார்
தீட்டிய 'மணிமேகலை'யில் அள்ள அள்ளக் குறையாத அமுத
சுரபியைக் காட்டி, பூம்புகார் மக்களுக்கு உணவு வழங்கியதாக
படித்திருப்போர் பல்லோர். ஆனால் அந்தக் காட்சியைக்
கண்டோம் இன்று. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள்
வெள்ளப் பெருக்கினால் உள்ளம் குமுறி, ஒடுங்கிக் கிடந்த
நேரத்தில் உன்னதத் தலைவி வாரி வழங்கியதை நாடறியும்
இன்று. துயர் துடைப்புப் பணிகளிலே சுறுசுறுப்பு, வாரி
வழங்கியதில் வள்ளல் தன்மை, பரிவு காட்டியதில் தாய்மை.

''வில்லுக்கு விஜயன்,

சொல்லுக்கு அரிச்சந்திரன்''

என்றுதான் நாடு எண்ணிக் கொண்டிருந்தது.

வில்லுக்கு விஜயன், சொல்லுக்கு அரிச்சந்திரன்,

நெல்லுக்கு ஜெ. ஜெ.''

(மேசையைத் தட்டும் ஒலி.)

என பார் வியக்கும் வண்ணம் அதிக அளவு உற்பத்தியை
இவ்வாண்டு பெற்றிருக்கின்றோம். அகில இந்திய அளவில்
உணவு உற்பத்தியில் 4.57 சதவிதம் குறைவாகப் பெற்றி
ருக்கிறோம். ஆனால் தமிழகத்தில் 1.28 இலட்சம் ஹெக்டேர்
நிலப்பரப்பிற்கு பெருத்த சேதம் ஏற்பட்டாலும், மதுரை,
காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், கோவை போன்ற
மாவட்டங்களில் மிகப்பெரிய வறட்சி ஏற்பட்டிருந்தும், தமி
ழகத்தில் உணவு தானிய உற்பத்தி இந்த ஆண்டு 94
இலட்சம் மெட்ரிக் டன் உயர்வை எய்தியுள்ளோம். இது
சென்ற ஆண்டு உற்பத்தியைவிட 25.33 சதம் கூடுதலாகும்.
கூடுதலாகப் பெற்றிருக்கிறோம் என்பதைப் பெருமையோடு கூறிக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



1992 ஏப்ரல் 21] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

பிற்பகல் 6.45

இது வெறும் புகழ்ச்சி அல்ல. புள்ளி விவரங்கள் இதோ
1989—90-ல் 20 இலட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டு
60 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது.
1990—91-ல் 22.91 இலட்சம் ஹெக்டேர் நிலத்தில் நெல்
பயிரிடப்பட்டு 60.63 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்
பத்தி செய்யப்பட்டது. ஆனால் 1991 ஜூன் திங்கள் 24
ஆம் நாள் நம்முடைய புரட்சித் தலைவியின் புனித அரசுப்
பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் இந்த அரசு வேளாண்மைத்
துறையின் முதல் மானியக் கோரிக்கையில் கொள்கை விளக்கத்
திலே குறிப்பிட்டது 21.2 இலட்சம் ஹெக்டேரில் நெல் பயிரி
டவும், இதனால் 65.00 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி
உற்பத்தி செய்ய வேண்டும் என்று குறியீடு வைத்திருந்தோம்.
இவ்வரசு அந்தக் குறியீட்டின்படி செயல்பட முனைந்தது.
அதன் பின் நான்கு மாதங்களில் இந்த சனவரி 29 ஆம் நாள்
இம்மாமன்றத்தின் மேதகு ஆளுநர் உரையில் குறிப்பிட்டது
புரட்சித் தலைவியின் சீரிய நிலையில் சீரிய தலைமையில்
இத்துறை ஆற்றிய பணியின் பயனாக 65.25 இலட்சம்
மெட்ரிக் டன் அரிசி இருக்கும் எனக் குறிப்பிட்டார்கள்.
ஆனால் இன்று அனைத்துக் குறியீடுகளையும் தகர்த்தெறிந்து
71.07 இலட்சம் டன் அரிசி உற்பத்தியை (மேசையைத்
தட்டும் ஒலி) பெற்றிருக்கிறோம். இது மார்ச் 31 வரை
எடுத்த புள்ளி விவரக் கணக்கு. இப்போது வயலிலே
உள்ள சொர்ணவாரி கணக்கிலே அடங்காது. எனவே மாண்பு
மிகு உறுப்பினர் தம்புசாமி அவர்களுக்குப் புரிந்திருக்கும் என
நம்புகிறேன். இனி சிந்திப்பதே இல்லை என மூளைக்கு
சீல் வைத்திருக்கிற சில மதியாளர்கள், புருவங்களை கேள்விக்
குறியாக்கி குமுறிக் கொண்டிருக்கிறார்கள். தன் ஆற்றாமை
நிலையைக் கண்டு. இக்கணக்கில் இதுவரை எந்த ஆண்டும்
பெறாத உற்பத்தியினை புரட்சித் தலைவியின் ஆட்சியில் பெற்
றிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச்
சான்றுகள் கூற இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். சில உண்மைகளையும் சொல்லியாக வேண்டும்.
சில உண்மைகளையும் சொல்லியாக வேண்டும். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரையில் நீங்கள்
பாடிய கவிதை வரிகளும் உண்மைகளே என நாங்கள் கருதிக்
கொண்டிருக்கிறோம். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன். : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இனியும் சில உண்மைகளைச்
சொல்லியாக வேண்டும் என்று சொல்லுகிறேன். இனியும்

சில உண்மைகளைச் சொல்லியாக வேண்டும். அந்த உண்மை எது என்று சொன்னால்,

''மகத்தில் பிறந்தவர்கள் ஜகத்தை ஆள்வார்கள்''
(மேசையைத் தட்டும் ஒலி)
இவ்வாண்டு சித்திரையின் வைகறைப் பொழுதே
மக நட்சத்திரத்தில் உதித்திருக்கிறது.
(மேசையைத் தட்டும் ஒலி)
இதுவே இந்த ஆண்டின் நல்ல
துவக்கத்திற்கு அறிகுறியாக,
வரும் காலம் வளங்கொழிக்கும், என
கட்டியம் கூறி வருகிறது.

1992—93 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட உற்பத்திக் குறியீட்டை அடைவதற்குத் தேவையான உதவிகளை விவசாயிகளுக்கு அளிக்க இந்த அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டம் செங்கல்பட்டு-எம். ஜி. ஆர்., தென்னாற்காடு, வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம் திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், காயிதே மில்லத், மதுரை, நெல்லை-கட்டபொம்மன், பெரியார், இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் ஆகிய 14 மாவட்டங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இம்மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் சலுகைகள் வழங்கி அரிசி உற்பத்தியை அதிகரிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

பிற்பகல் 6-50

சிறு தானியப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க சோளப் பயிருக்கான சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம் தர்மபுரி, சேலம், திருச்சி, கோயம்புத்தூர், பெரியார் மற்றும் திண்டுக்கல்-அண்ணா ஆகிய 6 மாவட்டங்களிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மேலும் கேழ்வரகு பயிருக்கான சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம் சேலம், தர்மபுரி, தென் ஆற்காடு, வட ஆற்காடு-அம்பேத்கார் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய 5 மாவட்டங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பயறு வகைகளின் உற்பத்தி நமது மாநிலத்தின் தேவைக்கு போதுமானதாக இல்லை. ஏழை எளிய மக்களுக்கு தேவையான புரதச் சத்து, குறைந்த செலவில் பயிறு வகைகள் மூலமே கிடைக்கும் என்பதால், அரசு பயிறு வகைகள் உற்பத்தியை அதிகரிக்க முக்கியத்துவம் அளிக்கிறது வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர் தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், சேலம் மற்றும்



கோயம்புத்தூர் ஆகிய 7 மாவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வந்த தேசிய பயிறு மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டம் நீங்கலாக 20 மாவட்டங்களிலும் இந்த ஆண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

பாமாயில் எண்ணை தற்பொழுது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இதன் தேவை மக்களிடையே நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், வரும் ஆண்டுகளில் செம்பனையை தமிழ் நாட்டிலேயே வளர்த்து அதிலிருந்து தேவையான எண்ணையை உற்பத்தி செய்ய வழி வகுக்கும் வகையில் அரசு செம்பனைச் சாகுபடிக்கு அதிக கவனம் செலுத்தி வருகிறது.

சூரியகாந்தி எண்ணையின் தேவை அதிகரித்து வருகிறது. ஆனால் சூரியகாந்தி சாகுபடி செய்யும் பரப்பு ஏறக்குறைய 20,000 ஹெக்டேர் என்ற அளவிலேயே உள்ளது. ஆகவே, அதிகரித்து வரும் சூரியகாந்தி எண்ணையின் தேவையைக் கருத்தில் கொண்டு மாநிலத்திற்குத் தேவையான சூரியகாந்தி எண்ணையை வரும் ஆண்டுகளில் நமது மாநிலத்திலேயே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கோடு சூரியகாந்தி சாகுபடி செய்யும் பரப்பை வரும் ஆண்டுகளில் கணிசமான அளவு அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் எண்ணை வித்து உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சான்றிதழ் பெற்ற விதைகள், உற்பத்தி மற்றும் விநியோகம், பெருவிளக்கப் பாத்திகள் அமைத்தல், பல்வகை இடுபொருள்கள் வழங்குதல், பாசன வசதிகளை மேம்படுத்தி எண்ணை வித்து உற்பத்தியினை அதிகரிக்க தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள அமைத்தல் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

உலக வங்கி உதவியுடன் 1991—92 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் 1992—93 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான 7 ஆண்டுகளுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 309.29 கோடியாகும். இததிட்டத்தில் விவசாயக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்க மண்வளம் மற்றும் நீர் பராமரிப்பு முக்கியமாக தாவர முறையிலான மண் பராமரிப்பு, தீவன மேம்பாடு, வேளாண் காடுகள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் மேம்பாடு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 21

தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புத் திட்ட அலுவலர்கள் ஜனவரி 1992-ல் பணியமர்த்தப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டக் காலத்தில் பாலாறு மற்றும் வெள்ளாறு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 54 ஆயிரம் ஹெக்டேர்களிலும், மேலும், 12 மாவட்டங்களில் 36 ஆயிரம் ஹெக்டேர்களிலும் இத்திட்டம் விரைவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படும்.

தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்புப் பகுதி, மேம்பாடு திட்டம் 1992—93 ஆம் ஆண்டு 14 மாவட்டங்களில் 84 வட்டாரங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் வெட்டிவேர் நடவு செய்தல், மண்வளம் மற்றும் நீர்ப் பராமரிப்பு, வேளாண் காடுகள், தடுப்பு அணைகள் கட்டுதல், ஆழ் ஓடை தடுப்பு முறைகள் மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படும்.

மானாவாரி விளை நிலங்களில் சாகுபடி செய்யப்படும் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதன் மூலம் மானாவாரி சாகுபடி மேம்படுத்தப்படும். இந்நோக்கத்துடன் 3 ஆண்டுத் திட்டமாக ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாட்டுத்திட்டம் நீலகிரி மற்றும் கன்னியாகுமரி தவிர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

தேர்தல் வாக்குறுதியில் அறிவித்துள்ளபடி, தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர அரசு தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. 1991—92 ஆம் ஆண்டு 5,000 ஹெக்டேர் தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர இத்திட்டம் மதுரை, திண்டுக்கல்-அண்ணா, இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், நெல்லை-கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் தர்மபுரி ஆகிய 8 மாவட்டங்களில் ரூ. 75 இலட்சம் ஒதுக்கீட்டுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மரக் கன்றுகள் நடவும், இடைவெளியில் ஊடு பயிராக ஆரம்ப காலத்தில் ஒரு ஆண்டிற்குள்ளாக பலன் தரும் பயிர்களைச் சாகுபடி செய்யவும், ஒரு ஹெக்டேருக்கு 1,500 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. 1992—93 ஆம் ஆண்டு இத்திட்டம் 17 மாவட்டங்களில் 10,000 ஹெக்டேரில் செயல்படுத்தப்படவுள்ளது.

'சினிடா' உதவியுடன் செயல்படுத்தப்படும் வேளாண் காடுகள் திட்டத்தில் 1992—93 ஆம் ஆண்டு பழ வகை, தீவன வகை எரி வகை, மரவகை மற்றும் நார்வகையுடைய 90 இலட்சம் மரக் கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டத்தில் நட்ட இரண்டாண்டுகளுக்கு மேல் உயிருடன் உள்ள



1992 ஏப்ரல் 21] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

மரக் கன்றுகள் கன்று ஒன்றுக்கு ரூ. 2.50 வீதம் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்பட இருக்கிறது.

பிற்பகல் 6-55

1986—87 முதல் 'டானிடா' உதவியுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ரூ. 4.13 கோடி ஒதுக்கீட்டுடன் செங்கல்பட்டு-எம். ஜி. ஆர். தென் ஆற்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் நெல்லை-கட்டபொம்மன் ஆகிய ஆறு மாவட்டங்களிலுள்ள உழவர் பயிற்சி நிலையங்களின் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 1992—93 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பூச்சி நோய்களின் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாலும், மிகப்பெரிய அளவில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாலும் பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் மூலமாகவும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் 50 சதம் மானியத்தில் வழங்குவதன் மூலமாகவும் விவசாயிகளிடையே ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் தொழில் நுட்பங்கள் பரவலாக்கப்படும்.

**விதைச்சான்றுத் துறை :**

''எண்சாண் உடம்பிற்கு கண்ணே பிரதானம்
வேளாண் பெருக்கத்திற்கு விதையே ஆதாரம்''

வல்லுநர் விதைமூலம் பெறும் ஆதார விதை கொண்டு சான்று விதைகளை உருவாக்கி அனைத்து வேளாண் பெருமக்களுக்கும் சான்று விதைகளை வழங்க இவ்வரசு முனைந்து செயல்படும்.

வேளாண் பொறியியல் துறை. இத்துறையின் மூலம் நிலங்களைச் சமப்படுத்துதல், திறந்த வெளிக் கிணறு அமைத்தல், வறண்டு போன கிணறுகளை ஆழப்படுத்தி நீர் ஊற்றைப் பெருக்குதல், கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல், சமதள வரப்புகள் அமைத்தல், மண் அரிப்பைத் தடுத்தல், பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் வாய்க்கால்களைச் சீர் அமைத்தல் போன்ற பணிகளைச் செயல்படுத்தி வருகிறது. இப்பணி நடப்பாண்டும் செயல்படுத்தப்படும். அந்தந்த பகுதியில் கிடைக்கும் நீரைக்கொண்டு சொட்டு நீர், தெளிப்பு நீர்த் திட்டங்களும் இந்த ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

இந்தத் துறையின் நலன் கருதி காலையிலும், மாலை யிலும் 27 மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக் களை வழங்கி இருக்கிறார்கள். இன்று தேதி 21. இந்த வேளாண்மைத் துறைக்கு 21 புதிய திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டங்களை விளக்கிக் கூறுவது என் கடமையெனக் கருதுகிறேன்.

பயிர் விளைச்சல் போட்டி. விவசாயிகளிடையே உற் சாகத்தை ஏற்படுத்தி, உற்பத்தித் திறன் அதிகரிக்கும் வகை யில், பயிர் விளைச்சல் போட்டித் திட்டம் கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை இந்தியத் துணைக் கண்டத்திலே, நமது முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தான் அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைக் கூறுவதில் நான் பெருமை கொள்கிறேன்.

ஒரு ஹெக்டேர் நிலத்திலிருந்து நெல் 5 மெட்ரிக் டன் அளவில் உற்பத்தியானது கடந்த கால வரலாறு. இன்று இப்பரிசுத் திட்டத்தால் ஹெக்டேருக்கு 6 மெட்ரிக் டன் அளவில் நெல் விளைந்திருக்கிறது. இந்த ஆண்டு நெல் பயிரிடப்பட்ட பகுதி 21 இலட்சம் ஹெக்டேர் ஆகும் என் பதனைக் கணக்கில் கொள்ள வேண்டுகிறேன்.

முதல் பரிசு பெற்ற நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தைச் சார்ந்த உழவர் பெருமகனார் தன் உழைப் பால் விளைவித்து இந்தப் பரிசை வென்றி ருக்கிறார். அவர் ஒரு ஹெக்டேருக்கு விளைவித்தது 18.8 மெட்ரிக் டன்கள் என்பது இந்தத் திட்டத்தால் விளைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டா வது பரிசு பெற்ற மதுரை மாவட்டத்தைச் சார்ந்த உழவர்—அவர் ஒரு ஹெக்டேருக்கு 17.3 மெட்ரிக் டன்கள் நெல்லை உற்பத்தி செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தப் பரிசு பெற்ற உழவர்கள் யார் என்ற விவரத்தைச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** இறுதியாக என் உரையை முடிக்கும் முன்னர் பெயர்களைச் சொல் கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே. இனி இந்தப்



பரிசுப் போட்டியின் முடிவுகளை நிர்ணயம் செய்யக் கூடிய நீதிபதிகள் குழுவில் அந்தந்தப் பகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் வருங்காலத்தில் இடம் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தச் சீரிய திட்டத்திற்குரிய பலன் இந்த ஆண்டே உள்ளங்கை நெல்லிக்கனி போல கண்களுக்குப் புலனாகிறது. இத்திட்டத்தின் மகத்துவத்தை உணர்ந்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு பரிசுப் போட்டிக்கு முதல் பரிசை ரூ. 50,000-த்திலிருந்து ஒரு இலட்சமாக உயர்த்தி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது பரிசை ரூ. 25 ஆயிரத்திலிருந்து ரூ. 50 ஆயிர மாக உயர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அனைத்துப் பயிர்களுக்கும் மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான பரிசுத் தொகையினை உயர்த்தி.

''காடு விளைஞ்சென்ன மச்சான், நமக்கு கையும் காலுந்தானே மிச்சம், அட,
நாளை போடப்போறேன் சட்டம், நல்ல
நம்பிக்கை ஊட்டிடும் திட்டம்''

என்று அன்று நம் தலைவர் சொன்னார். இன்று நாடாளும் நம் தலைவி, நாட்டு மக்களுக்காக இன்று இந்த நாவலந் தீவிலேயே முதல் முதலாக வழங்கி வெற்றியும் பெற்றிருக்கி றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 7-00

இரண்டு, விசை உழுவைகள் (பவர் டில்லர்கள்), மானிய விலையில் வழங்குதல், பழையன கழிதலும், புதியன புகுதலும் வேண்டுமென நன்னூல் பகர்கிறது. மாடுகட்டி ஏர் பூட்டும் பழைமையை மாற்றிட என்றாமை வேளாண் பெருமக்களுக்கு ரூ. 10 ஆயிரம் மானியத்துடன்—ஒரு டில்லருக்கு 10 ஆயிரம் மானியம் வீதம் இந்த ஆண்டு 2000 விசை உழுவைகள் (பவர் டில்லர்கள்) வழங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

''புதுமைப் பெண்களடி, பூமிக்குக் கண்களடி'' என பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி சொன்னான், அந்த பாரதி கண்ட புதுமைப் பெண்ணாம், எங்கள் புரட்சித் தலைவி அவர்கள், தம் பொற்கரத்தால் வழங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி,) அதுவும் குறுவைச் சாகுபடி தொடங்கு வதற்கு முன்னாலே வழங்க இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி,)

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 21

வேலையற்ற வேளாண் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புத் திட்டம், இரசாயன உரங்களின் விலை உயர்வால் வேதனையுறும் விவசாயிகளுக்கு உதவிட உயிர் உரங்கள் இன்று பெருமளவில் தேவைப்படுகின்றன. இவ்வுரங்களைத் தயாரிக்க முன்வரும் வேலையில்லா வேளாண் பட்டதாரிகளுக்கு அரசு ஊக்கமளிப்பதோடு இவர்கள் தயாரிக்கும் உரங்களை அரசே கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கும் திட்டம், இதனை இப்பட்டதாரிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். வேலை இல்லா வேளாண் பொறியியல் பட்டதாரிகள் இணைந்து நவீன தொழில் நுட்ப வேளாண் கருவிகளை உற்பத்தி செய்ய முன்வருவார்களேயானால், இவர்களுக்கும் அரசு ஊக்கமளித்து இவர்கள் தயாரிக்கும் கருவிகளை அரசே கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கும்.

'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு வேலை
இல்லாதோர் நிலை மாறவேண்டும்'

என்பதற்காக மாற்றுத் திட்டத்தை உருவாக்கித் தந்த மாண்புமிகு புதுமைத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இத்திட்டத்தை இப்பெருமன்றத்திலே அறிவிக்கப் பணித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

வேளாண் பயிற்சிப் பள்ளிகளை மேம்படுத்துதல். இதுகாறும் நடைபெற்று வந்த ஓராண்டு வயல் விளக்க அலுவலர் சான்றிதழ் பயிற்சி இனி ஈராண்டு உதவி வேளாண்மை அலுவலர் பயிற்சியாக மாற்றி அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வமும மற்ற உறுப்பினர்களும் பேசினார்கள். இத்திட்டத்தால் வயல் விளக்க அலுவலர்களின் பணிநிலை படிப்படியாக உதவி வேளாண்மை அலுவலர்களின் நிலைக்கு உயர்த்தப்படும். தொழில் நுட்பச் செறிவும் விஞ்ஞான அறிவும் விவசாயிகளைச் சென்றடைய இம்மாற்றம் பெரிதும் உதவியாக இருக்கும்.

உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின் ஒவ்வொரு துளியிலும் உழைப்பினைக் கண்டு, உழைத்தவர்களுக்கும் இன்று உவந்து அளிக்கிறார். அவர்கள் உள்ளம் குளிர, இல்லம் மகிழ, இதுவரை எந்த அரசும் செய்யாத ஒன்றைச் செய்திருக்கிறார்கள் எம்குலச் செல்வியாம் எங்கள் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)



1992 ஏப்ரல் 21] [திரு. கு. ப. கிருஷ்ணன்]

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். பூச்சி மருந்திலே தரம் இல்லை, இரசாயன உரங்களிலே கலப்படம் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுக்காக ஒரு திட்டம்.

வேளாண்மை செழிக்க தரமான இடுபொருட்கள் தேவை. விதை, உரம், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், நுண்ணூட்டச் சத்துக்கள் ஆகியவற்றின் தரங்கெடாமல் விவசாயிகளுக்குக் கிடைக்கவேண்டும். இன்று பெருமளவில் இவைகளில் கலப்படங்கள் நிறைந்துள்ளன. இவைகளைக் கண்டறிந்து சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், நீதி மன்றம் செல்வதற்கும், தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் பணியாற்றி வருகின்றார்கள். இப்பணியினை நெறிப்படுத்துவதற்கும், துரித நடவடிக்கை எடுக்கும் வகையில் இவ்வலுவலர்கள் இந்த ஆண்டு முதல் தனி இயக்ககத்தின் கீழ் செயல்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண்மை அதிகாரி பணியமர்த்தல். மாவட்ட ஆட்சியரின் கீழ் வேளாண்மை வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைக்கவும், விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், நீர்ப்பாசன பங்கீட்டினைப் முறைப்படுத்தவும், உர ஒதுக்கீடு செய்யவும், வேளாண் புள்ளி விவரங்கள் சேகரிக்கவும், இயற்கையின் சீற்றங்களால் ஏற்படும் வேளாண் சேதங்களைக் கணக்கிடுதல் போன்ற பணிகளுக்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒரு துணை வேளாண்மை இயக்குநரை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நியமித்து இருக்கிறார்கள. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற போது புயல் வந்தபோதும். வெள்ளம் வந்தபோதும், விளை நிலங்கள் எல்லாம் மணல் அடித்து மூடப்பட்டடு, தூர்ந்து போயிருக்கிறது. அதனைத் தூர் வாரித் தரவேண்டுமென்று சொன்னார்கள். இந்த தூர் வார்கிறதை விரைந்து செயல்படுத்துவதற்குத்தான் இந்த வேளாண் அதிகாரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே அமர்த்தப்படுகிறார். எப்படி என்றால், உழவர் உலகத்திற்கு ஆணி என்று ஏட்டளவில் இருந்தது. இந்த அச்சாணி இன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அமர்கிறது புரட்சித் தலைவி அவர்களின் புதுமைத் திட்டத்தால்.

[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 21

பிற்பகல் 7-05

வேளாண் பொறியியல் துறையில் மேலாண்மை மேம்பாடு. வேளாண் பொறியியல் துறையில் நிர்வாகத்தினை மேம்படுத்தும் வகையில் இத்துறையிலுள்ள கண்காணிப்புப் பொறியாளர்களை, மாவட்டத்துக்கு ஒருவராக நியமித்து இத்துறையின் சார்பில் நடைபெறும் அனைத்துத் தொழில் நுட்பப் பணிகளையும், ஒருங்கிணைத்துச் செயல்படுத்தப்படும்.

அழகுக்கு மெருகூட்டும் திட்டம். மலை ராணி என்று வர்ணிக்கப்படும் நீலகிரியில் அமைந்துள்ள தாவர இயல் பூங்காவில் ரூ. 30 இலட்சம் செலவில் ஒரு தோரண வாயிலும், ஒரு கண்ணாடி மாளிகையும், இவ்வாண்டு உருவாக்கவேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

''நகை யோடு நோக்கடா எங்கும் உள்ளாள்!
நல் அழகு வசப்பட்டால் துன்பமில்லை.''

என்று பாவேந்தன் பாரதிதாசன் பாடினான். அழகு கொழிக்கும் நீலமலைக்கு தோரண வாயில் அமைத்து அழகுக்கு அழகு சேர்க்கிறார் என் அருந் தமிழ்ச் செல்வியாம் எம் அன்னை அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி.).

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையம் உயர் விளைச்சல் பயிர்களில் பெரும் சேதத்தை உண்டாக்கும் பூச்சி, பூசான நோய்களைக் கட்டுபடுத்துவதற்கும், உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளினால் இப்பூச்சிகளை அழிப்பதற்கும், சுற்றுப்புறச் சூழ்நிலையை மாசுபடுத்தாமல் பாதுகாக்கவும் மற்றும் பூச்சி நோய் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் இம்மையம் பணியாற்றும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். பூச்சிக்கு மருந்து அடித்தால் புதிய பூச்சிகள் எல்லாம் உண்டாகும் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படிச் சொல்கின்றபோது கூட ஒரு மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். புற்றீசலைச் சொன்னார். எனவே, அந்தப் பூச்சிகளை எல்லாம் இயற்கையான பூச்சிகளை வைத்து அழிப்பதற்கு இந்தத் திட்டம் உதவுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



[திரு. கு. ப. கிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 21

செம்பனை வளர்ப்புத் திட்டத்தை இவ்வரசு முனைப்போடு செயல்படுத்தி வருகிறது. ரூ. 24.89 கோடி செலவில் இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். முதல் கட்டமாக நாற்றங்கால் தோட்டம் அமைப்பதற்கும், வெளிநாடுகளிலிருந்து விதைகளை வாங்குவதற்கும் ரூ. 107 இலட்சம செலவில் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் இரண்டு நாற்றங்கால் பண்ணைகளை இவ்வாண்டு அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாட்டில் தேசிய வாழை ஆராய்ச்சி மையம், இந்தியாவிலேயே முதன் முதலாக வாழைப் பயிருக்கென்று ஒரு ஆராய்ச்சி மையத்தை இவ்வாண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே துவங்க இருக்கிறார்கள். இத்தேசிய ஆராய்ச்சி மையம் பெருமளவில் வாழைச் சாகுபடி செய்யப்படும் திருச்சி மாவட்டத்தில் நிறுவப்படும். இவ்வாராய்ச்சியின் பயனால் வாழைப் பயிர்களுக்கு ஏற்படும் முடிகொத்து, வேர் அழுகல், நூற்புழு போன்ற நோய்களைத் தடுப்பதற்கும், வீரிய வாழை ரகங்களை உருவாக்குவதற்கும் இம்மையம் உதவிடும்.

'பள்ளித் தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்' என்று பாடினான் பாரதி. இன்று இந்தக் கோயிலோடு உழவினை உவந்து செய்வோம் என்று உவப்புடன் அறிவிக்கிறார் எம் உயிர்த் தலைவி அவர்கள், பள்ளிப் பாடத் திட்டத்தில் வேளாண் கல்வி, வேளாண்மை என்பது பழமை, அப்பழமையைப் போக்கி புதுமையாக தொழில் நுட்பங்களைப் புகுத்துவது என்பது காலத்தின் கட்டாயமாகிவிட்டது. வேளாண் கல்வியை இனிவரும் தலைமுறைக்கு போதிக்க வேண்டும் என முடிவெடுத்து, இவ்வேளாண் கல்விப்பாடத் திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளில் கொண்டுவர மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முடிவு செய்துள்ளார்கள், (மேசையைத் தட்டும் ஒலி). இதனை எந்த வகுப்பிலிருந்து கொண்டுவரலாம் என்று ஆராய பல்கலைக் கழக துணை வேந்தர்கள், துறைத் தலைவர்கள் கொண்ட குழுவை அமைத்துள்ளார்கள். இக்குழுவின் அறிக்கை பெற்று இத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

இங்கே பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். உரத்தின் விலை ஏறிவிட்டது. உரத்திற்குக் கொடுத்த மானியம் போதவில்லை, இந்த அரசு கொடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கூறினார்கள். விவசாயிகளுக்கு உர மானியம்

வழங்குதல். சாகுபடிச் செலவில் மூன்றில் ஒரு பங்கு உரச் செலவாகும். இதனை உணர்ந்து இரசாயன உரங்களுக்கு மானியம் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

இந்த ஆண்டு ஒவ்வொரு வேளாண் விரிவாக்க மையத்திலும் இரசாயன உரங்கள் வேளாண் தொழிற் கழகத்தால் விற்பனை செய்யப்படும். அடையாள அட்டை பெற்றவர்கள்— தவறு நடைபெறாமல் இருப்பதற்கு அடையாள அட்டை பெற்றவர்கள்—மானிய விலையில் உரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எடுத்துக் காட்டாக வெளிச் சந்தையில் 210 ரூபாய் விற்பனை செய்யப்படும் 50 கிலோ கொண்ட ஒரு டி.ஏ.பி. உரமூட்டை, இந்த மானிய விலையில் ரூ. 160-க்கு விற்பனை செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனைப் போல இந்த உரங்களின் விலையில் 30 சதவீதம் அரசு மானியம் வழங்குகிற ஒரே மாநிலம்—மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய மாநிலம் தமிழகம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விற்பனைக்காக அரசு ஒதுக்கி இருக்கிற நிதி 3 கோடி ரூபாய் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). உழைத்து உழைத்து உருக்குலைந்து போன உழவர்களின் துன்பச் சுமைக்கு தோள் கொடுக்கும் எங்கள் அன்புச் செல்வி இதனை அறிவிக்க என்னை பணித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 7-10

தருமபுரி மாவட்டத்தில் வேளாண்மை அறிவியல் மையம், தருமபுரி மாவட்டம் பல பயிர்கள் சாகுபடியாகும் மாவட்டம். இங்கே நெல்லும் உண்டு, பழ சாகுபடியும் உண்டு, சிறுதானியங்களும் உண்டு, காய்கறி சாகுபடியும் ஏராளம். சாகுபடியாகும் அனைத்து பயிர்களுக்கும்தேவையான விஞ்ஞான தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்கி, விளைச்சலைப் பெருக்கி லாபத்தை அதிகரிக்க இம்மாவட்டத்தில் இவ்வாண்டே ஒரு வேளாண் அறிவியல் மையத்தை அமைக்க மாண்புமிகு புரட்சி தலைவி அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது தர்மபுரியில் அமையும். செஞ்ஞாயிற்று செலவும் அஞ்ஞாயிற்று பதிப்பும் என்று உறையூர் முதுக்கண்ணச் சாத்தன் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே புறநானூற்றில் விண்ணை விரித்து வியந்து பாடினார். அந்த விண்ணில் மிதக்கும் செயற்கைக் கோளில் துணை கொண்டு புதிய வேளாண்மையைப் படைத்து புதிய ஒரு சரித்திரத்தை உருவாக்கியிருக்கிறார்கள் நம் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).



வேளாண்மையில் செயற்கை கோள்— விண்ணில மிதக்கும் செயற்கைக் கோள்கள் அனுப்பும் ஆய்வுகளின் அடிப்படையில் வேளாண் பணிகளை செயல்படுத்த இவ்வரசு திட்டமிட்டுள்ளது. இவ்வாய்வுகளின் அடிப்படையில் வறட்சியைத் தடுக்கவும், நிலத்தடி நீரை கண்டறியவும், எண்ணெய் வளத்தைத் தெரிந்து கொள்வதற்கும், பருவ மழை அளவை முன்கூட்டியே தெரிந்து கொள்ளவும், நீர் ஆதாரங்களின் வளர்ச்சிக்கும் திறமையாக நிலத்தைப் பயன்படுத்துவதற்கும், பயிர் சுழற்சியை மாற்றி அமைப்பதற்கும், தொலை உணர்வு கருவியின் புள்ளி விவரங்களைப் பயன்படுத்திக் கொள்ள இவ்வாண்டு இவ்வரசு இம்முடிவினை மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் தருமபுரி மாவட்டத்தில் துவக்கப்படும். இத்திட்டத்தின் வெற்றியின் அடிப்படையில் பின்னர் பிற மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்படும்.

9—4—1992 அன்று வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட வினாவிற்கு விடை சொல்லி இருக்கிறேன் ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்று இல்லை.

புரட்சித் தலைவி அவர்களின் மாணவர்கள் தென்னை வளர்ப்புத் திட்டம் — ''காணி நிலம் வேண்டும்— பராசக்தி'' எனக் கேட்ட பாரதி,

''கேணி யருகினிலே— தென்னைமரம்
கீற்று மிள நீரும்.''

வேண்டுமென்றான். பாரதி கண்ட புதுமைப் பெண்ணாம் நம் புரட்சித் தலைவி அவர்கள் இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்துகிறார்கள்.

ஆறாவது படிக்கும் மாணவர்களுக்கு தலா ஒரு தென்னங்கன்று இலவசமாக வழங்கப்படும். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) இதனை அவர்கள் வளர்க்க வேண்டும். அவர்கள பத்தாவது படிக்கும் காலத்தில் அவர்கள் வளர்க்கும் தென்னை மரத்தின் பலன் தரும் நிலை கண்டு அவர்களுக்குச் சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படும். சான்றிதழ் பெற்றவர்கள் வேளாண் பயிற்சி பெறவும் வேளாண் பட்டப்படிப்பு மேற்கொள்ளவும், இத்துறையில் வேலை வாய்ப்பு பெறவும் (மேசையைத் தட்டும் ஒலி) முன்வரும்போது இச்சான்றிதழ் பெற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதனால் ஆண்டிற்கு 5 லட்சம் புதிய தென்னை மரங்கள் உற்பத்தி செய்யப்படும் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

''நாட்டுக்கு பொருத்தம் நாமே
நடத்தும் கூட்டுப்பண்ணை விவசாயம்— தம்
கூட்டுக்குத் தகுந்த ஆதாயம்''

எனப் பாடிய பாட்டுக்கோட்டையாம் பட்டுக்கோட்டையார் அன்று பாடினார்கள். அதனை நடைமுறைப்படுத்துகிறார் நம் நாடாளும் தவப்புதல்வி புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 7-15

நிலமற்ற வேலையில்லாத பட்டதாரிகள் தாங்கள் பெற்ற வேளாண் தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி கூட்டுப் பண்ணை விவசாயம் செய்ய முன்வருவார்களேயானால் அரசு தரிசு நிலங்களைக் கொடுத்து அவர்கள் வேலை வாய்ப்பு மற்றும் நிரந்தர வருவாய் பெறும் அளவில் இந்த ஆண்டு இவ்வரசு இத்திட்டத்தைத் துவக்க உள்ளது. இத்திட்டத்திற்கு முன்வரும் வேளாண் பட்டதாரிகளுக்கு அரசு அனைத்து உதவிகளையும் செய்யும். காய்கறிகள் உற்பத்தி செய்தல், பழத்தோட்டங்கள் அமைத்தல், மலர்த்தோட்டங்கள் அமைத்தல், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்தல் ஆகியவற்றால் உள்நாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வதும் உபரியாக உள்ள விளை பொருட்களை வெளிச் சந்தைக்கு கொண்டு செல்வதால் விளைபொருட்கள் விலையேற்றத்தை வெகுவாக குறைப்பதற்கும் இது உதவும். எனவே இத்திட்டத்தை வேளாண் பட்டதாரிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற தொலை நோக்கு பார்வையோடு இவ்வாண்டு அறிமுகம் செய்து செயற்படுத்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

தோட்டக்கலை வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம். பூக்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற அழுகும் பொருட்களைக் கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்து அவைகளை வெளிச் சந்தைக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்லும் சங்கங்களுக்கு குளிர் சாதன சேமிப்பு வசதியும் வாகன வசதியும் 50 சதவிகித மானியத்தில் இவ்வாண்டு வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி). இதற்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 105 இலட்சம். மகளிருக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.) இத்திட்டத்தை தமிழகத்தில் முதன் முதலாக செயல்படுத்தும் பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி).



வேளாண்மையில், கிராமப்புற மகளிர், இளைஞர் அனைவருக்கும் திறமைக்கு ஏற்ற வேலை வாய்ப்புத் திட்டம் கி.பி. 2000.

அண்ணல் காந்திஜி கண்ட கிராம ராஜ்யம் கனவை நனவாக்க, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கி.பி. 2000-க்குள் வேளாண்மையில் அனைத்து கிராமப்புற மகளிர், இளைஞர்கள் அனைவருக்கும் கிராமங்களிலேயே திறமைக்கேற்ற வேலை வாய்ப்பினை பெற உயரிய திட்டங்களை உருவாக்க முன்வந்துள்ளார்கள். இதனால் கிராமப் புறங்களில் இருந்து வேலை தேடி நகரத்திற்கு செல்பவரை கணிசமாகக் குறைக்கவும் கிராம பொருளாதாரத்தை மேம்படுத்தவும் இயலும். தாங்கள் வாழும் பகுதியிலேயே வேளாண்மை மட்டும் வேளாண்மையைச் சார்ந்த தொழில்களான தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பட்டு வளர்ப்பு ஆகியவற்றில் திறமைக்கேற்ற வேலை வாய்ப்பினை உருவாக்க சீரிய திட்டங்கள் தீட்டிட உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்களின் தலைமையில் உயர்மட்ட வல்லுநர் குழுவை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அமைத்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு உறுப்பினர் நா. சா. பழனிசாமி அவர்களுக்கு விடை கிடைத்திருக்கும் என நம்புகிறேன்.

வாசனை நெல் அறிமுகம். டேராடூன் பள்ளத்தாக்கில் விளையும் பாசுமதி குட்டை எனும் இனத்திலிருந்து உருவாக்கப்பட்டது. இதன் வயது 114 நாட்கள், ஹெக்டேருக்கு 3,314 கிலோ நெல் மகசூல் தந்துள்ளது. பூசா பாசுமதியைவிட 29.8 சதவீதம் கூடுதல் விளைச்சல் தரும். இந்த ரகம் குறுவை மற்றும் சம்பா பட்டங்களுக்கு ஏற்றது பின்னர் தேவையான விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

புதியதாக நெல் கண்டு பிடிப்பில் தமிழக வேளாண் பல்கலைக்கழகம் வெற்றிக்கு மேல் வெற்றியை குவிப்பதால் இந்த ரகத்திற்கு ''ஜெய ஜெய—92'' எனப் பெயர் சூட்டப்படுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு இந்த ரகத்தை ''ஜெ ஜெ—92'' என்றும் கூட அழைக்கலாம்.

திருத்தலங்களில் நந்தவனம் அமைத்தல். ஆலயங்கள் என்பது தமிழகத்தின் பண்பாட்டு கலாச்சாரங்களின் அடித்தளங்கள். திருக்கோயில்களை எண்ணுங்கால் நம் நினைவுக்கு

வருவது தஞ்சை பெரிய கோவிலை. கண்டராதித்யச் சோழனின் பட்டத்தரசியும், இராஜராஜ சோழனை வளர்த்த சிவஞானச் செல்வி செம்பியன்மாதேவியார் பத்து செங்கற் கோயில்களை கற்றளியாக மாற்றியவர் என கல்வெட்டு சாசனங்கள் இன்று பறைசாற்றி வருகின்றன. இவர் வாழ்ந்த காலம் கி. பி. 950 முதல் 1012 வரை. ஏறத்தாழ 1,000 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்க் கோவில்களுக்கு புனர் அமைப்புப் பணி செய்ய புறப்பட்டு இருக்கும் பொதிகைத் தென்றல் (மேசையைத் தட்டும் ஒலி) 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற செம்பியன்மாதேவியார், எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுத்தும் திருக்கோவில்களின் வளர்ச்சிக்கு, இத் தோட்டக்கலைத் துறையும் அணில் சுமந்த மணலை போல, ஒரு சிறிய திட்டத்தை வழங்கி தானும் பெருமை கொள்கிறது. இந்து மத கோவில்கள், கிறித்துவ தேவாலயங்கள், இஸ்லாமிய பள்ளி வாசல்கள் ஆகிய அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் உள்ள சிறிய நிலப் பகுதிகளில் பூந்தோட்டங்கள் அமைப்பதற்கும், பழ மரங்கள் அமைப்பதற்கும் இத்துறை விதை, நாற்று, உரம், இதர வசதிகள் அனைத்தையும், ஒரு விவசாயிக்கு வழங்கும் சலுகை போல இத் திருத்தலங்களுக்கும் இவ்வாண்டு முதல் வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 7-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சம்மிங்அப்' என்ற புத்தக ஆசிரியன் 'சாமர்செட் மாம்' தம்முடைய புத்தகத்தில் இந்தியாவில் என்னை வெகுவாகக் கவர்ந்தது எது தெரியுமா என்று சொல்கிறபோது விண்ணை முட்டிக் கொண்டிருக்கும் இமயமலை, விரிந்து, பரந்து நெளிந்து கிடக்கும் மலைத் தொடர்களல்ல, கண்ணைக் கவர எத் தனிக்கும் தாஜ்மகாலல்ல, உள்ளத்தை உறைய வைக்கும் மதுரைக் கோபுரமோ, இராமேசுவரக் கோபுரமோ அல்ல. இடுப்பிலே அரைமுழ ஆடையை அணிந்து கொண்டு அல்லும் பகலும் ஆதவனின் அனல் கக்கும் வெப்பத் தாக்குதலுக்கு அஞ்சாமல் உழைத்துக் கொண்டிருக்கும் உழவனே என்னை வெகுவாகக் கவர்ந்தவன். அந்த உழைக்கும் தோழனின் வாழ்க்கையிலே ஒளியேற்ற வந்திருக்கும் எங்கள் புரட்சித் தலைவி அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) புனித அரசு இந்த வேளாண் துறையில் முடிந்ததைச் செய்திருக்கிறது.



என்னுடைய துறை பற்றிய எத்தனையோ செய்திகளை என்னுரையில் நான் சொல்ல நினைத்தாலும் காலம் கருதி சொல்ல இயலவில்லை. பழந்தமிழ் நூலாம் குறுந்தொகையில் உள்ள பாடல் எனக்காக எழுதப்பட்டது போல் இருக்கிறது.

''ஈரம்பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர் ஏர் உழவன் போல்''

வானம் பொழிந்தது, பூமி நனைந்தது, உழவன் ஒருவன் ஈரம் காய்வதற்குள் அந்த நிலத்தை உழுதுவிட வேண்டும் என்ற அவாவில் விரைவாக உழுது கொண்டிருக்கிறான்.

அந்நிலமோ புஞ்சை நிலம், (நம் நாட்டு பொருளாதாரத்தைப் போல) நீர் வர வழியில்லை. அவனோ ஒரு ஏழை விவசாயி, உள்ளதோ ஓர் ஏர். எனவே, ஈரம் காய்வதற்குள் உழ வேண்டும் என்ற அவனைப் போல தான் என்னுடைய நிலையும் இங்கே இருக்கிறது.

எவ்வளவோ செய்திகளைச் சொல்ல நினைக்கின்றேன். ஆனால் சொல்ல நேரம் கிடைக்கவில்லை என்பதைச் சொல்லி முடிப்பதற்கு முன் ஒன்றைச் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறைக்கு ஆண்டுக்கு ஒதுக்கப்படுகின்ற மத்திய அரசு நிதியைவிட இந்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் சீரிய முயற்சியால் அவர்கள் இட்ட ஆணையின் விளைவாகக் கூடுதலாக இந்தத் துறை இந்த மார்ச் ஒரு வாரக் காலத்திற்குள் கூடுதலாகப் பெற்ற தொகை 397 லட்சம் ரூபாய் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசிடமிருந்து பெற்று தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகத்தில் 1991—92 ஆம் ஆண்டில் நடைபெற்ற பயிர் விளைச்சல் போட்டியில் முதல் பரிசு பெற்றவர் திரு. எம் பூல்பாண்டி, அவர்கள் தந்தையார் பெயர் முத்தைய தேவர், கோட்டையடி., செங்கைகொண்டான், பாளையங்கோட்டை தாலுக்கா, நெல்லை—கட்டபொம்மன் மாவட்டம். (மேசையைத் தட்டும் ஒலி). அவர்கள் முதல் பரிசு 50 ஆயிரம் ரூபாயை இவ்வரசிடமிருந்து பெறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது பரிசை, சையது லப்பை ராவுத்தர் அவர்கள் திரு. நயினார் ராவுத்தருடைய மகன், உத்தமபாளையம், மதுரை மாவட்டத்தைச் சார்ந்தவர் பெறுகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

''இழந்த பழம்புகழ் மீளவேண்டும்
நாட்டில் எல்லோரும் தமிழர்களாய் வாழவேண்டும்
வழிந்தொழுகும் சுவை தமிழே மேவ வேண்டும்
மாற்றவர் ஏமாற்றம் தொலையவேண்டும்.
விழுந்த தமிழ்நாடு தலை தூக்க வேண்டும்''
எனில் புரட்சித் தலைவி அவர்களின் புனித முயற்சிக்கு
என்றன் உயிர் தனையே வேண்டிடினும் தந்திடுவேன்
என்று கூறி முடிக்கிறேன.

(மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 7-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையினுடைய நலன் கருதி 27 மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள் 72 வெட்டுத் தீர்மானங்களை, கொள்கை விளக்கத்தைப் பற்றி விவாதிப்பதற்கு வழங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களுக்கும் அவர்களுடைய கருத்துக்களுக்கும் விடை கிடைத்திருக்கும் என நம்புகிறேன். விடை கிடைக்கவில்லை என்று சொன்னாலும் அவர்களுடைய எண்ணங்கள் என்னுடைய நெஞ்சத்தில் பதிந்திருக்கின்ற காரணத்தினாலே அவர்களுடைய கோரிக்கைகளுக்கு இவ்வரசு பரிகாரம் தேடும் என்று கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய வெட்டுத் திர்மானங்களைத் திரும்பப் பெற்று, அரசு கோரிய தொகையை வழங்க வேண்டுமாய் அன்பின்பால் வேண்டுகிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவிதை நடையில் வார்த்தைகளை வெட்டியும் ஒட்டியும் இங்கே பதில் கொடுத்து இருக்கிறார். நீங்கள் அவருக்கு ஈடுகொடுத்து வார்த்தைகளை இங்கே போடவேண்டும். திருமதி ஏ, எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வளவு சிறப்பான முறையில் பதில் அளித்தார்கள், அதாவது, நல்ல விளைச்சல் விளைவித்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் முதல் பரிசு கொடுத்தோம் என்று சொன்னார்கள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை இப்போது 1 இலட்சம் ரூபாயாகக் கூட்டியிருக்கிறார்கள் என்பதையும் சொன்னார்கள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆமாம். 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தி இருப்பதாகச் சொன்னார்கள். இங்கே என்னைப் போன்றவர்கள் வாடிப்போய், அங்கே திண்டுக்கல் மாவட்டத்திலே மழை இல்லாமல் இந்தப் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே ஏதாவது கிடைக்குமா? மழை தண்ணீர் இல்லாவிட்டாலும் கூட, அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏதாவது கிடைக்குமா என்று ஏங்கிக்கொண்டிருக்கிற எங்களைப் போன்றவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றுமே சொல்லவில்லையே. அந்த வறண்ட பகுதிக்கு என்ன சொல்லப் போகிறீர்கள்? அதோடு, மலைவாழ் விவசாயி, காப்பி விவசாயத்திலே இன்றைக்கு விவசாயமே பாதிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு ஒன்றும் இல்லாத சூழ்நிலையிலே அந்தக் கடனை ஏற்கனவே நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். 8 ஆண்டுகாலமாக மழை இல்லாத காரணத்தினாலே அவர்கள் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அதில் மத்திய அரசு 90 சதவீதம் மானியமாகக் கொடுக்கின்றது. எனவே பாக்கியை தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்வது, ஒதுக்கீடு செய்தது மத்திய அரசு. மத்திய அரசே அதற்கு வரம்பையும் விதித்து இருக்கிறது. 75 சதவீதம் அந்த வேலைக்காகவும் 25 சதவீதம் நிர்வாகச் செலவுக்காகவும் செய்யவேண்டும் என்றும் இந்தக் கடனை தள்ளுபடி செய்யக்கூடாது என்றும் மத்திய அரசே விதித்து இருக்கிறது. எனவே மாநில அரசினுடைய கையிலே ஒன்றும் இல்லை. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினருக்காக மத்திய அரசிற்கு இவ்வரசு எழுதும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வறட்சிப் பகுதிகளைப் பற்றிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளுக்கு இன்னும் இரண்டு நாட்களில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கை வைக்க இருக்கிறார்கள். அதில், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிற எல்லா உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு கேள்வி

அனுமதிக்க இருக்கிறேன். அப்போது உறுப்பினர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டுப் பெறலாம். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. எச். எம். ராஜு.

*திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நீலகிரி மாவட்ட தோட்டக் கலையை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவினால் தலை நிமிரச் செய்தமைக்கு மாவட்ட மக்களின் சார்பாக் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விவசாயிகளுக்கு இந்த வருடம் தரும் தேயிலை நாற்றுகளை இலவசமாக அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேயிலை நாற்றுகள் இலவசமாக வழங்கப்படுமா என்று கேட்கிறார்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலை நாற்றுகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இதிலே ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுக்கு இலவசமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை மாண்புமிகு புரட்சித் தலைவி இடத்திலே கலந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதனை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 12 ஆண்டுக்காலமாக என்னுடைய பேராவூரணி தொகுதியிலே நெட்டை, குட்டை தென்னை மரங்களுக்கு ஒட்டு சேர்க்கின்ற பணியிலே ஈடுபட்ட சுமார் 52 தொழிலாளர்கள் பணி இழந்தார்கள். அவர்களை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு வேளாண் துறை அமைச்சரவர்களிடத்திலும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்திலும் கோரிக்கை கொடுத்தோம். அந்த அடிப்படையில் அவர்களை மீண்டும் பணியில் அமர்த்தி, அவர்கள் வாழ்க்கையில் ஒளி ஊட்டிய ''ஒளி விளக்கு'' ஆகத் திகழ்கின்ற நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், இங்கே அதை அறிவிக்க மறந்து போனாலும் பரவாயில்லை என்று சொல்லி, அவர்கள் வாழ்க்கையிலே ஒளி ஊட்டிய நம்முடைய வேளாண் துறை அமைச்சர்





கவிஞர் (சிரிப்பு) அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 7-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி கோ. மல்லிகா.

செல்வி. கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அன்பு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் பல புரட்சித் திட்டங்கள் அறிவிக்கப்படும் என்று எதிர் பார்த்த புவனகிரி தொகுதி மக்களுக்கு சேத்தியாதோப்பில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலையில் துவங்கப்பட உள்ள இணை மின் உற்பத்தி நிலையம் ஒரு மிகப்பெரிய திட்டமாகும். அந்தத் தொகுதி மக்கள் மகிழ்வுடன், நன்றியுடன் இதற்காகப் புரட்சித் தலைவியின் வருகையை ஆவலுடன் எதிர் பார்க்கிறார்கள்.

இந்த ஆலையின் மின் உற்பத்தி விரைவிலேயே தொடங்க உள்ளது. இந்தியாவிலேயே முதன்முதலாக கரும்பு ஆலைக் கழிவு மூலம் மின்சார உற்பத்தி என்கிற புரட்சிகரமான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே வந்து துவக்கி வைக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

மேலும் புரட்சித் தலைவரால் உருவாக்கப்பட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையை அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு இனாமாகத் தராத அல்லது உருவாக்க ஒரு செங்கல்கூட உழைக்காத மக்களால் தமிழக அதன் வளர்ச்சிக்காக விரட்டியடிக்கப்பட்ட ஒரு கட்சியின் அரசியலில் இருந்து எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி பெயர் மாவட்டச் செயலாளர் சூட்டியுள்ளதை மாற்றித் தர வேண்டுமென்று புவனகிரி மக்கள் விரும்புகிறார்கள்.

புதிய முறை மின் உற்பத்தியை, இந்த இந்திய நாட்டுக்கே வழிகாட்டியாக அமைந்த அந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு மாண்புமிகு இதய தெய்வம், நான் வணங்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவியின் பெயர் சூட்டப்பட அது பொருத்தமாக இருக்கும் என்பதால், மக்கள் இதயங்களில் குடிகொண்டிருக்கும் நமது தங்கத் தலைவி அவர்களின் திருக்கரத்தால் அந்த மின் உற்பத்தி நிலையத்தைத் திறந்து வைக்க முன் வர வேண்டுமென்று புவனகிரி மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும்,

[செல்வி கோ. மல்லிகா] [1992 ஏப்ரல் 21

அம்மா, உங்கள் பொற்பாதங்களை வணங்கி வேண்டிப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். பெயர் மாற்றியமைக்கப் படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சர்க்கரை ஆலையின் பெயர் மாற்றி அமைக்கப்படுமா என்று கேட்கிறார். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுயநலவாதிகள் தங்களுடைய பெயரை வைத்து மகிழ்ந்தார்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய பெயராலே இருந்த சத்துணவு மையங்களி னுடைய பெயர்களை மாற்றியவர்கள், முதியவர்களுக்கு உதவித் தொகை வழங்குகின்ற அந்தப் பண விடைத்தாளிலே, இந்தப் பணம் கருணாநிதி அவர்களால் வழங்கப்பட்டது என்ற முத்திரையைப் போட்டு வழங்கியவர் கருணாநிதி அவர்கள். அவர்களுடைய பெயர்கள் எந்த இடத்திலே எப்படி நீக்கப்படும் என்பதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடத்திலே கலந்து பேசி தக்க நடவடிக்கை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 20— வேளாண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.



1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''வேளாண்மை பற்றிய 20ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 621,02,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

(ஆ) கோரிக்கை எண். 53—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 53—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன் திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர் சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 53—ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 10,09,16,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்,''

என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்

தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத தட்டும் ஒலி) அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பிற்பகல் 7-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய துறை பற்றிய பதிலுரையை ஓரளவுக்கு விரிவாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு— விரிவாக அவர் பதில் அளிக்கிற அளவுக்கு, இப்போது நேரம் 7.35 ஆகிவிட்ட காரணத்தால், அந்த அளவுக்கு கால அவகாசம் இல்லை என்று கருதி நாளைய தினம் அவர் பதிலுரையைத் தொடரலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**9. அரசினர் தீர்மானம்.**

**விதி 32-ஐத் தளர்த்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"சட்டப்பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை, 22—4—1992 அன்று தளர்த்தி. அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்," என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை; தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

நாளைய தினம் "வினாக்கள்— விடைகள்" நேரம் இல்லை. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை காலை 9-30 மணிக்குத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 22—4—1992 காலை 9-30 மணிக்குக் கூடும் வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7.36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

**10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

**(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.**

—ஏதுமில்லை—

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.**

128. கோரிக்கை எண் 10—பால்பண்ணை வளர்ச்சி மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம் 1992-93 (தமிழ், ஆங்கிலம்).

129. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் மீதான ஆய்வுரை, 1991-92 (தமிழ் ஆங்கிலம்).

130. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் ஆய்வுரை, 1991- 92 (தமிழ் ஆங்கிலம்).

131. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் மீதான ஆய்வுரை 1992-93 (தமிழ், ஆங்கிலம்).

132. கோரிக்கை எண் 22— கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1992-93 (தமிழ், ஆங்கிலம்).

133. கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

134. கோரிக்கை எண். 20. வேளாண்மைத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93 (தமிழ், ஆங்கிலம்).

135. வேளாண்மைத் துறை பற்றிய செயல்விளை முறைத் திட்டம் 1992-93 (தமிழ், ஆங்கிலம்).

136. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தைந்தாவது அறிக்கை, 1991— 92.

137. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை. 1991- 92.



## இணைப்பு - I

(64—65ஆம் பக்கங்களிலுள்ள அடிக்குறிப்புகளைக் காண்க.)

## 1992-93 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

### வேளாண்மை.

உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவை எய்துவதே அரசின் முக்கியக் கொள்கையாகும். மேற்சொன்ன கொள்கையினை எய்த, இருக்கின்ற வளங்களை உரிய அளவுக்குப் பயன்படுத்தி உயரளவு உற்பத்தியைப் பெற அனைத்து வழிகளிலிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. எனவே பெருகி வரும் மக்கட் தொகையின் தேவையை நிறைவு செய்யப் போதுமான அளவில் உணவு உற்பத்தி செய்வதும் வேளாண்மையே அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கு மூலப் பொருட்களை வழங்குவதும் இன்றியமையாததாகிவிட்டது.

வேளாண்மை விளைபொருட்களின் உற்பத்தியையும் விவசாயக் குடும்ப வருமானத்தையும் பெருக்குவதன் மூலம் கிராம மக்களின் வறுமையினை போக்கும் பொருட்டு புலப்பயிர் செய்வதுடன் மண்வளம், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், மண்வளப் பாதுகாப்பு, புன்செய் நிலத் தோட்டக்கலை, கால்நடை தீவனப் பெருக்கம், வேளாண்மைக் காடு வளர்ப்பு, தாவரப் பெருக்கத்தின் வாயிலாக மண்வளப் பாதுகாப்பு முதலிய துறைகளில் செலவுக்கேற்ற பயன் கிடைக்கக்கூடிய வகையில் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகள் ஒருங்கிணைந்த முறையில் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பயிரிடத்தக்க தரிசு நிலங்களை மேம்படுத்தி அதன் மூலம் வருவாய் ஈட்டியியலும் வகையில் வேளாண்மைப் பணியின் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இம்மாநிலத்திலுள்ள தரிசு நிலங்களில் பயிரிடுவது குறித்த சிறப்புத் திட்டமொன்றினை பெரிய அளவில் அரசு மேற்கொண்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டில் நிலவிய பருவ நிலைகளும் பயிர் விளைச்சல் அளவும் மற்றும் 1992-93 ஆம் ஆண்டில் எதிர் பார்க்கப்படும் நிலைமையும்.

53—118—31

[1992 ஏப்ரல் 21

1991-92 ஆம் ஆண்டில் நிலவிய பருவ நிலைமைகள், பயிரிடுவதற்கு ஏற்றவையாக இருந்தன. ஒவ்வொரு பருவத்திலும் பெய்த மழை அளவு கீழே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(மில்லி மீட்டரில்.)

| தொடர் எண். | பருவ காலம். | இயல்பான அளவு. | பெய்த அளவு. | மாறுபாட்டு அளவு. (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1991: | | | | |
| 1. | கோடை காலம் (மார்ச்—மே) | 136.5 | 72.6 | (+) 47 |
| 2. | தென்மேற்கு பருவ மழை (ஜூன்—செப்டம்பர்) | 307.6 | 326.3 | (+) 6.0 |
| 3. | வடகிழக்கு பருவ மழை (அக்டோபர்—டிசம்பர்) | 438.7 | 536.5 | (+) 22.3 |
| | மொத்தம் .. | 882.8 | 935.4 | + 5.9 |

கோடை காலத்திலும், தென்மேற்கு பருவமழைக் காலத்தின் முற்பகுதியிலும் இயல்புக்குக் குறைவாக மழைபெய்திருந்த போதிலும், தென்மேற்குப் பருவமழைக் காலத்தின் பிற்பகுதியிலும், வடகிழக்குப் பருவமழைக் காலத்திலும் பெருமளவு மழை பெய்துள்ளது. மேலும், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெருமளவுக்கு மழை பெய்ததால், மேட்டூர் நீர்தேக்கத்திற்கு தண்ணீர் வந்தது. இவ்வாண்டு நான்காவது முறையாக மேட்டூர் நீர்த்தேக்கம் நிரம்பியது. அனேகமாக அனைத்து நீர்த்தேக்கங்களிலும் தண்ணீர் இருப்பு அளவு மன நிறைவளிப்பதாக இருக்கின்றது. மேலும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் புயலுடன் கூடிய மழை பெய்ததனால் அனைத்து பாசன ஏரிகளும் நிரம்பின. வறட்சியான இராமநாதபுரம் மாவட்டத்திலும் மதுரை மாவட்டத்திலும் குறைந்த அளவு மழை பெய்ததால், வைகை நீர் தேக்கத்தில் நீர்மட்டம் மிகவும் குறைவாக இருந்தது.



1992 ஏப்ரல் 21]

நல்ல பருவ நிலைமைகளைக் கருத்திற் கொண்டு 1991-92 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட திட்டம் எதிர்பார்க்கப்பட்ட பயிர் விளைச்சல் அளவு பற்றிய விவரம் வருமாறு.—

1991-92

| தொடர் எண். | பயிர். | பரப்பு (இலட்சம் எக்டேரில்) திட்ட இலக்கு. | பரப்பு (இலட்சம் எக்டேரில்) எதிர் பார்க்கப்பட்ட சாதனை. | உற்பத்தி (இலட்சம் மெ. டன்னில்) திட்ட இலக்கு. | உற்பத்தி (இலட்சம் மெ. டன்னில்) எதிர் பார்க்கப்பட்ட சாதனை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | நெல் .. | 21.00 | 24.00 | 62.50 | 65.25 |
| 2. | சிறுதானியங்கள் .. | 16.00 | 14.25 | 17.00 | 18.00 |
| 3. | பயறுவகைகள் .. | 10.00 | 10.00 | 4.60 | 7.20 |
| | மொத்தம் உணவு தானியம் | 47.00 | 48.25 | 84.10 | 90.45 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | 12.91 | 12.91 | 14.50 | 14.50 |
| 5. | கரும்பு .. | 2.00 | 2.00 | 240.00 | 240.00 |
| 6. | பருத்தி .. | 2.35 | 2.85 | 6.00 | 6.00 |

(இலட்சம் பேல்களில்)

(1 பேல்—170 கி.கி.)

1991-92 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நிலவிய சாதகமான பருவ நிலைமையைக் கருத்திற் கொண்டு 90.45 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியை எய்தும் நோக்குடன் சிறப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 21

பெய்யும் மழை அளவு ஆண்டிற்காண்டு வேறுபடலாம் எனினும் 1992-93 ஆம் ஆண்டில் வழக்கமான அளவுக்கு மழை பெய்யக் கூடும் என்பதைக் கருத்தில் கொண்டு பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ள தளைபரப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியளவு பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன :

| பரப்பு (இலட்சம் எக்டேரில்) | | உற்பத்தி (இலட்சம் மெ. டன்னில்) | |
|---|---|---|---|
| தொடர் எண். | பயிர். | 1992-93 திட்ட இலக்கு. | |
| | | பரப்பு. (இலட்சம் எக்டேரில்) | உற்பத்தி. (இலட்சம் மெ. டன்னில்) |
| (1) | (2) | (3) | (4) |
| 1. | நெல் .. .. | 21.00 | 63.00 |
| 2. | சிறு தானியங்கள் .. | 16.00 | 17.00 |
| 3. | பயறு வகைகள் .. | 10.00 | 5.00 |
| | மொத்தம் உணவு தானியங்கள் | 47.00 | 85.00 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் .. | 12.93 | 14.00 |
| 5. | கரும்பு .. .. | 2.00 | 246.50 |
| 6. | பருத்தி .. .. | 2.35 | 6.25 |
| | | | (இலட்சம் பேல்கள்) |

இடுபொருட்கள் :

(அ) விதைகள்

மூன்றடுக்கு முறையிலான விதை உற்பத்தித் திட்டம் ஒன்று தமிழ் நாட்டில் செயலில் இருந்து வருகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்தும் ஏனைய நிறுவனங்



1992 ஏப்ரல் 21]

களிலிருந்தும் பெறப்படும் புதுவகை விதைகள் (Breeder Seeds) அரசுக்குச் சொந்தமான 42 மாநில விதைப் பண்ணைகளில் ஆதாரவிதை உற்பத்தி செய்வதற்கு பெருக்கப்படுகின்றன. விதை உற்பத்தி பெருக்கத்தின் மூன்றாவது நிலையாக, உழவர்களின் நிலங்களில உள்ள பதிவுபெற்ற விதைப்பண்ணை களில் சான்றளிக்கப்பட்ட விதைகளை உற்பத்தி செய்வதற்கு ஆதாரவிதைகள் பயன்படுத்தப்படுகின்றன. விதைகளின் தரம் விதைச் சான்றளிப்பு முகவரமைப்பு மூலம் உறுதி செய்யப்படு கின்றது.

மொத்தத்தில் ஆண்டிற்கு 23,900 மெ. டன். விதைகளைப் பதப்படுத்தும் திறன்கொண்ட 15 பெரிய அளவிலான பதப் படுத்தும பிரிவுகளும் 32 நடுத்தரப் பிரிவுகளும் சிறிய பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. சான்றளிக்கப் பட்ட விதைகளுக்கு தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. தற்போதுள்ள விதைப்பதப்படுத்தும் பிரிவுகளின் திறனளவு இத் தேவையை நிறைவு செய்யப் போதுமானதாக இலலாத தாலும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கும்பன் பண்ணை யில ஆண்டுக்கு 1,000 மெ. டன். திறன் கொண்ட பெரிய பிரிவு ஒன்றும், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள காகுப்பத் திலும், தஞ்சாவூர் மாவட்டத்திலிலுள்ள காஞ்சிக்குடிகாடு நெடுபலத்திலும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத் திலுள்ள செய்யாறிலும், பசும் பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலுளள காரைக்குடியிலும் ஒவ்வொன்றும் ஆண்டுக்கு 200 மெ. டன் திறன் கொண்ட ஐந்து பிரிவுகளும் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன.

'டேனிடா' நிதியுதவியுடன் இயந்திரக் கூடம் 10 விதைக் கிடங்குகள், 10 கதிரடிக் களங்கள் ஆகியவற்றுடன் கூடிய 25 சிறு பிரிவுகளை கூடுதலாக ஏற்படுத்த அனுமதியளிப்பதற் கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1992-93 ஆம் ஆண்டில் பின் வரும் வீதத்தில் விதைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

| தொடர் எண். | பயிர்கள். | | விதை மாற்று சதவீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 1. | நெல் | | 21 |
| 2. | சிறு தானியங்கள் : | கேழ்வரகு | 20 |
| | | சோளம் (v) | 10 |
| | | சோளம் கலப்பினம் | 50 |
| | | மக்காச்சோளம் | 25 |
| | | கம்பு | 25 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 3. பயறு வகைகள் | .. | 12.5 |
| 4. பருத்தி | வானம்பார்த்தவை | 10. |
| | பாசன வசதியுடையவை | 15 |
| 5. எண்ணெய் வித்துக்கள் | | |
| | வேர்க்கடலை | 5 |
| | எள் | 15 |
| | சூரிய காந்தி | 50 |
| | ஆமணக்கு | 30 |

1991-92 ஆம் ஆண்டில் விதை விநியோகத் திட்ட செயலாக்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றம், 1992-93 ஆம் ஆண்டுக்கான திட்டம் குறித்த விவரம் பின்வருமாறு :

(மெ. டன்.)

| | | 1991-92 | | 1992-93 |
|---|---|---|---|---|
| தொ.எண். | விதையின் பெயர். | திட்ட இலக்கு. | 1991 டிசம்பர் வரை சாதனை. | திட்டம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | நெல் | 25,200 | 19,126 | 22,050 |
| 2. | சிறு தானியங்கள் | 11,92 | 765 | 1,194 |
| 3. | பயறு வகைகள் | 2,500 | 968 | 2,500 |
| 4. | பருத்தி | 350 | 229 | 350 |
| 5. | எண்ணெய் வித்துக்கள் | 11,166 | 4,919 | 11,166 |
| | மொத்தம் .. | 40,408 | 26,007 | 37,260 |



மண் வளத்தைப் பெருக்குவதற்காக 1991-92 ஆம் ஆண்டில் பசுந்தாள் உரம் விதைகள் விநியோகிக்கப்பட்டன. 1991-92 ஆம் ஆண்டில் 200 மெ. டன். எடையுள்ள பசுந்தாள் உர விதைகள் வழங்கப்படும். இத்திட்டமானது, 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## (ஆ) இரசாயன உரங்கள்.

1991-92 ஆம் ஆண்டில் 9.16 இலட்சம் மெட்ரிக் டன் நைட்ரேட், பாஸ்பேட் பொட்டாசிய உரங்கள் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டிருக்க, 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை, 7.17 இலட்சம் மெட்ரிக் டன் இரசாயன உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. 1992-93 ஆம ஆண்டில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ள, நைட்ரேட் பாஸ்பேட், பொட்டாசிய உரங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு :

| | | | 1991—92 | | 1992-93 |
|---|---|---|---|---|---|
| தொடர் எண். | இனம் | அளவு. | திட்ட இலக்கு. | 1991 டிசம்பர் வரை சாதனை. | திட்டம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| 1. | நைட்ரேட் | இ. மெ. டன். | 5.28 | 3.54 | 5.51 |
| 2. | பாஸ்பேட் | ,, | 1.98 | 1.69 | 2.20 |
| 3. | பொட்டாசியம் | ,, | 1.90 | 1.94 | 2.00 |
| | மொத்தம் என்+பி+கே | .. | 9.16 | 7.17 | 9.71 |

விலையேற்றத்தை ஈடு செய்யும் வகையில் சிறிய/ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்களுக்கு இரசாயன உரங்களை வழங்குவதற்காக, மத்திய அரசு, 53.937 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. இது தொடர்பாக சிறிய/ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்களைக் கண்டறிந்து விரிவாக்கப் பணியாளர் மூலமாக அவர்களுக்கு, அடையாள அட்டையும் பரிந்துரைச் சீட்டையும் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

உதவித்தொகை வழங்கும் பொருட்டு 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய, ரூபாய் 12 கோடி பெறுமானமுள்ள பரிந்துரை சீட்டுகள் சிறிய/சொற்ப நிலம் வைத்திருக்கும் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இரசாயன உர விநியோகப் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

## (இ) பயிர் பாதுகாப்பு :

பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 1991-92 ஆம் ஆண்டில் 42.10 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பிலுள்ள உணவுப்பயிர்களுக்கும் 22.90 இலட்சம் எக்டேர் பரப்பில் உள்ள உணவுப் பயிர் அல்லாத ஏனைய பயிர்களுக்கும் பயிர் பாதுகாப்பு வசதிகளை வழங்க திட்டமிடப்பட்டிருந்தது. 1991 ஆம் ஆண்டு டிசம்பர் வரையில், 36.03 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பிலுள்ள உணவுப் பயிர்களுக்கும் 19.63 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பிலுள்ள உணவுப் பயிரல்லாத ஏனைய பயிர்களுக்கும் பயிர், பூச்சியாலும் பயிர் நோயினாலும் தாக்கப்படாமலிருக்கும் வகையில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1992-93 ஆம் ஆண்டில் 44 இலட்சம் எக்டேர் பரப்பிலுள்ள உணவுப் பயிர்களுக்கும், 24.60 இலட்சம் எக்டேர் பரப்பிலுள்ள உணவுப் பயிரல்லாத ஏனைய பயிர்களுக்கும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பயிர் பூச்சிகளும், பயிர் நோய்களும் எந்த அளவுக்குப் பரவியுள்ளன என்பதை மதிப்பிடுவதற்காக, முறையான கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தக் கண்காணிப்புப் பணி மூலமாக ஒவ்வொரு வாரமும் 7244 இடங்களிலிருந்து திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில், பூச்சி மற்றும் நோய் பரவல்கள் குறித்து முன்னெச்சரிக்கைகள் செய்யப்படுகின்றன.

ஒருங்கிணைந்த பயிர்ப் பூச்சி பரவல் தடுப்பு தொழில் நுட்ப உற்பத்தியானது, சிக்கனமானதும், திறன்மிக்கதும், இரசாயன நச்சுத் தன்மையிலிருந்து பாதுகாப்பு அளிக்க வல்லதாகவும் இருப்பதாலும் சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தவிர்க்கவும் இவ்வுத்தியை பிரபலப்படுத்த அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பயிர் பூச்சி பரவல் தடுப்பு தொழில் நுட்ப உத்தியும், 9,750 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று இலக்கிடப்பட்டிருக்க, 1991 டிசம்பர் வரையில் 7,345 விவசாயிகள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். 16,640 எக்டேர் நிலப்பரப்புக்குத் தேவையான ஒருங்கிணைந்தப் பயிர் பூச்சி பரவல் தடுப்பு சாதனங்கள் வழங்கப்பட வேண்டுமென்று இலக்கிடப்பட்டிருக்க 8,000 எக்டேர் நிலப்பரப்பிற்கு வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், பாசன பகுதிகளில் ஒவ்வொன்றும் 20 எக்டேர் நிலப்பரப்பு அடங்கிய



150 இடங்களிலும், நீர் பிடிமுகடு பகுதி இடங்களில் 84 இடங்களிலும் ஒவ்வொன்றும் 40 எக்டேர் பரப்பளவு கொண்ட செயல்முறை விளக்கப் பண்ணைகள் ( compact Block demonstration) ஏற்படுத்தப்பட்டன. இவைத் தவிர ஒவ்வொரு உட்கோட்டத்திற்கு ஒரு கிராமம் என்ற விதத்தில் 150 கிராமங்கள், ஒருங்கிணைந்த பயிர்ப் பூச்சி பரவல் தடுப்புத் திட்ட கிராமங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒருங்கிணைந்த பயிர்ப் பூச்சி பரவல் தடுப்பு உத்திகள், மேற்கொள்ள கிராமங்களில் செயற்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும். இம்மாநிலத்தில் பயிர்ப் பாதுகாப்பு இரசாயனங்கள், மருந்துகள் பயன்பாட்டை குறைப்பதில் இம்முயற்சிகள் பெரிதும் உதவியுள்ளன. 10,200 மெ. டன் பயிர் பாதுகாப்பு இரசாயனப் பொருட்கள் (தொழில் நுட்ப நிலை) விநியோகிக்கப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்கு மாறாக 3,390 டன்கள் மட்டுமே உண்மையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தருமபுரி, கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல்-அண்ணா, திருநெல்வேலி, காமராசர், வ. உ. சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய எட்டு மாவட்டங்களில் 26 இலட்சம் ரூபாய்ச் செலவில் நெல் மற்றும் சோளம் பயிர்களைத் தாக்குகின்ற பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்துவதற்கான மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஏற்படக்கூடிய செலவினை மத்திய அரசும் மாநில அரசும் சரிசமமாக (அதாவது 50 : 50) என்ற விகிதத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தில் கீழ் 67,500 எக்டேர் நிலப்பரப்புக்குத் தேவையான பழுப்பு நிற புகையான் ( Paddy Brown Plant Hopper) குலை நோய் (Blast) பச்சை தண்டு பூச்சி, இலை சுருட்டு புழு, எலிகள் சோளப் பயிர் குருத்துப் பூச்சி (Rodert) ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான இரசாயன மருந்துகள் 50 சதவீதம் மானிய விலையில் மருந்துப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**பயிர் மேம்பாட்டுத் திட்டம் :**

**நெல் :**

1991-92 ஆம் ஆண்டில் 21 இலட்சம் எக்டேர் நிலத்தில் நெல் பயிரிடுவதெனவும் அதில் 19.95 இலட்சம் எக்டேரில் உயர் ரக நெல் பயிரிடவும் திட்டமிடப்பட்டது. போதுமான பருவ மழை பெய்ததாலும் நீர்த் தேக்கங்களிலுள்ள நீர் இருப்பு அளவு சாதகமாக இருந்ததாலும் சிறப்புத் திட்டம் ஒன்று

தொடங்கப்பட்டுள்ளது. 24 இலட்சம் எக்டேர் நிலப் பரப்பில் இத்திட்டம் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில், 1991 டிசம்பர் வரையில் 21.17 இலட்சம் எக்டேர் நிலப் பரப்பில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

பெய்யும் மழையின் அளவு, ஆண்டுக்காண்டு வேறுபடலாம், இருப்பினும் 1992-93 ஆம் ஆண்டில் வழக்கமான அளவுக்கு மழை பெய்யக் கூடும் என்பதைக் கருத்தில் கொண்டு 21 இலட்சம் எக்டேர் பரப்பில் நெல் பயிரிடுவதென திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 19.95 இலட்சம் எக்டேர் பரப்பளவில் உயர் விளைச்சல் நெல் ரகங்கள் பயிரிடப்படும்.

**ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் :**

ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் ஒரு மத்திய அரசு பொறுப்பு ஏற்கும் திட்டமாகும். இத்திட்டம் செங்கல்பட்டு-எம். ஜி. ஆர்., தென்னாற்காடு, வட ஆற்காடு, அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதேமில்லத், மதுரை, நெல்லை-கட்டபொம்மன், பெரியார், இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் ஆகிய 14 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெல் அதிக அளவில் விளையக்கூடிய வளமான மாவட்டங்களில் நவீன தொழில் நுட்ப உத்திகளை, உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டிற்கான திட்ட இலக்கு 1991 ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் எய்தப் பெற்ற சாதனைப் பற்றிய விவரம் திட்டக் கூறுவாயிலாக கொடுக்கப்பட்டுள்ளது.

| தொடர் எண். | திட்டக் கூறுகள். | அலகு. | 1991-92 திட்ட இலக்கு. | 1991-92 1991 டிசம்பர் வரையிலான சாதனை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | ஒருகிலோ விதைக்கு ரூ. 1 என்ற வீதத்தில் விதை மானியம். | மெ. டன் | 21,850 | 16,015 |
| 2. | 50 சதவீத மானிய விலையில் துத்தநாக சல்பேட் விநியோகம். | மெ. டன் | 1,500 | 441 |
| 3. | 50 சதவீத மானிய விலையில் ஜிப்சம் விநியோகம். | மெ. டன் | 11,025 | 2,772 |
| 4. | 25 சதவீத மானிய விலையில் பூச்சிக் கொல்லி மருந்துகள் விநியோகம். | எக். | 40,000 | 49,274 |
| 5. | 25 சதவீத மானிய விலையில் களைக் கொல்லி மருந்துகள் விநியோகம். | எக். | 1,00,000 | 59,495 |
| 6. | 50 சதவீத மானிய விலையில் பயிர் பாதுகாப்புச் சாதனங்கள் விநியோகம். | எண்ணிக்கை. | 6,000 | 5,707 |
| 7. | 50 சதவீத மானிய விலையில் வேளாண் கருவிகள் விநியோகம். | எண்ணிக்கை. | 2,237 | 9,081 |
| 8. | ஒட்டுமொத்த களச் செயல் முறை விளக்கம். | எக். | 5,900 | 5,810 |
| 9. | உழவர்களுக்குப் பயிற்சி. | எண்ணிக்கை. | 29,500 | 29,400 |
| 10. | வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு பயிற்சி. | எண்ணிக்கை. | 29,500 | 29,300 |



இத்திட்டத்திற்கான செலவினை 75 : 25 என்ற விகிதாச்சார அடிப்படையில் மத்திய அரசும் மாநில அரசும் ஏற்கின்றன. 1991-92 ஆம் ஆண்டில் 533.33 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அத்தொகையில் 1991 டிசம்பர் வரையில் 316.88 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

இத்திட்டத்தை மேலும், 6 மாவட்டங்களுக்கு அதாவது தருமபுரி, கோயம்புத்தூர், காமராசர், வ. உ. சிதம்பரனார், திண்டுக்கல்-அண்ணா, மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு 24.22 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்

படுகிறது. 1992-93 ஆம் ஆண்டில், இத் திட்டத்தை மத்திய அரசின் உரிய அனுமதியுடன் அனைத்து மாவட்டங்களிலும் (நீலகிரி, சென்னை மாவட்டங்கள் நீங்கலாக) செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

**அரிசி சிறுதளைப் பைகள் :**

புதிய ரக நெல்களை விரைந்து பரப்புவதற்காக அரிசி சிறு தளைப் பைகள் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெளிவராத விதை ரகங்களின் பொருத்தமுடைமையைக் கண்டறிவதற்கும் இத்திட்டம் உதவுகிறது. மத்திய அரசு பொறுப்பேற்கும் இத்திட்டமானது எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 100 சதவீத நிதியுதவி அளிக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் நான்கு கிலோ அரிசி அடங்கிய சிறு தளை பைகள் ஒவ்வொன்றும் ரூ. 3 என்ற குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 18.86 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் அரிசி அடங்கிய சிறுதளைப் பைகள் 70,000 விநியோகிக்க திட்டமிடப்பட்டிருக்க 1991 டிசம் பர் மாதம் வரையில் 15.80 இலட்சம் ரூபாய் செலவில் 70,322 சிறு தளைப் பைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம், 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

**உணவு தானியங்கள் உற்பத்தி சிறப்புத் திட்டத்தின் கீழ் ஆழ் மற்ற குழாய்க் கிணறுகள்/திறந்த வெளிக் கிணறுகள் திட்டம் —**

நீர்ப்பாசன வாயில்களைப் பெருக்குவதற்காக உணவு தானி யம் உற்பத்தி சிறப்புத் திட்டத்தின் கீழ் ஆழமற்ற குழாய்க் கிணறு கள் திறந்த வெளிக் கிணறுகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்ட மாகும். மேலும் நெல் உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் மேற் கொள்ளப்படும் மாவட்டங்களில் 14 ஒருங்கிணைந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்துடன் சிறிய அளவில் நிலம் வைத்திருக்கும் உழவர்களுக்கு 25 சதவீதம் உதவித் தொகையும் சொற்ப நிலம் வைத்திருக்கும் உழவர்களுக்கு 33 1/3 சதவீதம் உதவித் தொகையும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த உழவர்களுக்கு 50 சதவீத உதவித் தொகையும் அளிக்கப்படு வதுடன், சிறிய சொற்ப நிலம் வைத்திருக்கும் உழவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது. புதிய





கிணறுகள் தோண்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத் தவும், மின்சார மோட்டார் எண்ணெய் இயந்திர பம்பு செட்டு கள் நிறுவுவதற்கும், குழாய்கள் போடவும் வேண்டி மேற் சொன்ன நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஏற்படும் செலவை, மத்திய அரசும் மாநில அரசும் சமமாக ஏற்கின்றன. இத்திட்டத்தைச் செயல் படுத்தும் பணிகளில் வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல் ஆகிய துறைகள் ஈடுபடுகின்றன.

1991-92 ஆம் ஆண்டில் 8,000 கிணறுகள் வெட்ட திட்ட மிடப்பட்டு, ரூ. 400 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் வேளாண்மை துறைக்கு ரூ. 300 இலட்சமும், வேளாண் பொறியியல் துறைக்கு ரூ. 100 இலட்சமும் ஒதுக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் ரூ. 35.43 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1992-93 ஆம் ஆண்டிலும், இத்திட்டம் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சிறு தானியங்கள்.**

1991-92 ஆம் ஆண்டில், 16 இலட்சம் எக்டேர் பரப்பில் சிறு தானியங்களை பயிரிடுவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 10 இலட்சம் எக்டேர் பரப்பில் உயர் விளைச்சல் வகை களைப் பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில், 11.98 இலட்சம் எக்டேர் பரப்பில் மட்டுமே சிறு தானியங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதில் 8.57 இலட்சம் எக்டேர் பரப்பில் உயர் விளைச்சல் வகை தானியங் கள் பயிரிடப்பட்டுள்ளன. 1992-93 ஆம் ஆண்டிலும் இத் திட்டம் தொடரப்படும்.

**சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டம் : சிறு தானியங்கள்.**

**1. மக்காச் சோளம் :**

மக்காச் சோள உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, தரும புரி, சேலம், திருச்சி, கோயம்புத்தூர், பெரியார், திண்டுக்கல்-அண்ணா ஆகிய ஆறு மாவட்டங்களில், மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ், பல்வேறு இடுபொருள்கள், மானிய விலையில்

உழவர்களுக்கு வழங்கப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டிற்குரிய திட்டக் கூறுகள், 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் எய்திய சாதனைகள் பற்றிய விவரங்கள் வருமாறு :

| தொடர் எண். | திட்டக் கூறுகள். | அளவு. | நிர்ணயிக்கப் பட்ட திட்ட இலக்கு. | 1991 ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் எய்திய சாதனை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | விதைகள் வழங்குதல். . | மெ.டன். | 170.5 | 23.79 |
| 2 | விதை பக்குவப்படுத்தும் இரசாயனப்பொருள்கள் வழங்குதல். | எக்டேர் | 50,000 | 27,329 |
| 3 | 25 சதவீத மானிய விலையில் பயிர் பூச்சிக்கொல்லி மருந்து வழங்குதல். | எக்டேர் | 20,000 | 9,395 |
| 4 | 50 சதவீத மானிய விலையில் பயிர் பாதுகாப்பு சாதனங்கள் வழங்குதல். | எண்ணிக்கை | 2,200 | 1,216 |
| 5 | 50 சதவீத மானிய விலையில் வேளாண்மை கருவிகள் வழங்குதல். | எண்ணிக்கை | 1,100 | 2,361 |
| 6 | செயல் விளக்கப் டாத்திகள் அமைத்தல். | எண்ணிக்கை | 695 | 625 |
| 7 | உழவர்களுக்கு பயிற்சி அளித்தல். | எண்ணிக்கை | 6,950 | 4,900 |

இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டில், ரூ. 50 இலட்சம் மூலதனச் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை, ரூ. 24.32 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆகும் செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்கிறது. 1992-93 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.





**சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டம்—கேழ்வரகு :**

சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டத்தின் கீழ் கேழ்வரகு உற்பத்தி செய்யும் திட்டம் 100 சதவீத மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், சேலம், தருமபுரி, தென் ஆற்காடு, வடஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்டுத்தப்பட்டு வருகின்றது. 1991-92 ஆம் ஆண்டிற்குரிய திட்டக்கூறுகள், 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் எய்திய சாதனைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.—

| தொடர் எண். | திட்டக் கூறுகள். | அலகு. | நிர்ணயிக்கப் பட்ட திட்ட இலக்கு. | 1992 ஆம் ஆண்டு வரை எய்திய சாதனை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | கிலோ ஒன்றுக்கு ரூ. 1 என்ற மானிய விலையில் விதைகள் வழங்குதல். | மெ.டன். | 165.70 | 114.27 |
| 2 | 25 சதவீத மானிய விலையில் பயிர் பூச்சிக் கொல்லி மருந்துகள் வழங்குதல். | எக்டேர் | 5,000 | 4.319 |
| 3 | 50 சதவீத மானிய விலையில் பயிர் பாதுகாப்பு சாதனங்கள் வழங்குதல். | எண்ணிக்கை | 2.000 | 515 |
| 4 | 50 சதவீத மானிய விலையில் புல் பூண்டு அழிப்பான் மருந்துகள் வழங்குதல். | எக்டேர் | 5,000 | 1,194 |
| 5 | 50 சதவீத மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்குதல். | எண்ணிக்கை | 400 | 1,043 |

[1992 ஏப்ரல் 21

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 6 | ஒட்டுமொத்த செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல். | எக்டேர் | 250 | 132 |
| 7 | உழவர்களுக்குப் பயிற்சி. | எண்ணிக்கை | 6,250 | 3,600 |

இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபாய் 25 இலட்சமாக இருக்க, 1991-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் ரூபாய் 9.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆதி திராவிடர் / பழங்குடியினர் வாழும் பகுதிகளில் சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம் ஆகியவற்றை மும்முரமாகப் பயிரிடுதல்.**

ஆதி திராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த உழவர்கள் தீவிர சாகுபடியை மேற்கொள்ளும் பொருட்டு, மக்காச் சோளம், சோளம், கம்பு, கேழ்வரகு ஆகியவற்றின் உற்பத்தியில் மேம்பட்ட தொழில் நுட்பத் திறனை நிரூபிக்கும் வகையில் இத்திட்டத்தில் செயல் விளக்கப் பாத்திகளை அமைத்து மேற்சொன்ன பயிர்களை மும்முரமாக வளர்க்கக் கருதப் பட்டுள்ளது.

இத்திட்டம், அனைத்து மாவட்டங்களிலுள்ள ஆதி திராவிடர் / பழங்குடியினர் வாழும் பகுதிகளில் செயலாக்கப்பட்டு வருகின்ற மத்திய அரசுத் திட்டமாகும். 1991-92-ல், 210 செய்முறை விளக்கங்களைச் செய்து காட்ட வேண்டுமென இலக்கு நிர்ணயித்திருக்க, 1991 டிசம்பர் வரை 133 செய்முறை விளக்கங்கள் செய்து காட்டப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் / பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த உழவர்களுக்கு கம்பிற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 500 வீதமும் சோளத்திற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 600 வீதமும், கேழ்வரகிற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 350 வீதமும் மக்காச் சோளத்திற்கு எக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 1,000 வீதமும் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஆகும் செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்கிறது. மொத்தம் 1.32 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்க, 1991 டிசம்பர் வரையில் ரூபாய் 0.90 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடரும்.



1992 ஏப்ரல் 21]

**சிறு தானிய சிறுபைகள் :**

இத்திட்டத்தின் கீழ் சிறுபை ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் பெயரளவுத் தொகை வசூலித்து, சிறு தானிய சிறுபைகள் சிறு உழவர்களுக்கும் / சொற்ப நிலம் வைத்துள்ள குறு உழவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பையின் அளவும் மதிப்பும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்விவரம் வருமாறு :

| தொடர் எண்ணும் பயிர்களும். | பையின் அளவு, மதிப்பு. | பை ஒன்றின் மதிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | கிலோகிராம். | ரூபாய். |
| 1. சோளம் .. .. .. | 1 | 10.35 |
| 2. கம்பு .. .. .. .. | ½ | 6.00 |
| 3. மக்காச் சோளம் .. .. | 2 | 15.50 |
| 4. கேழ்வரகு .. .. | ½ | 4.50 |

1991-92-ல், 82,000 சிறு பைகள் வழங்க வேண்டுமென இலக்கு நிர்ணயித்திருக்க, 1991 டிசம்பர் வரை, 81,918 சிறு பைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 1992-93-ஆம் ஆண்டிலும் தொடரும்.

**பயிறுவகைகள் :**

1991-92-ல் 10 இலட்சம் எக்டேர் பரப்பில், பயறு உற்பத்தி செய்யக் கருதப்பட்டிருக்க, 1991 டிசம்பர் வரையில், 6.18 இலட்சம் ஹெக்டேரில் பயறு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1992-93-ல், 10 இலட்சம் எக்டேரில் பயறு சாகுபடி செய்து, 5 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அளவை அடையக் கருதப் பட்டுள்ளது. மேற்கூறிய உற்பத்தி இலக்கை அடைய பின்வரும் திட்டங்கள் செயலாக்கப்படும்.

**நுண்ணுயிர்க் கலவைப் பொட்டலங்கள் :**

விண்வெளியில் உள்ள நைட்டிரஜனை நிலைப்படுத்துவதற்கு நுண்ணுயிர்க் கலவைப் பொட்டலங்களைப் பயன்படுத்துவது முக்கியமானதொரு வழி என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே

அரசு நுண்ணுயிர்க் கலவைப் பொட்டலங்களைப் போதிய அளவில் உழவர்களுக்கு வழங்க, இயலக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. 1991-92-ல் நுண்ணுயிர்க் கலவைப் பொட்டலங்கள் 6 இலட்சம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, நுண்ணுயிர்க் கலவைப் பொட்டலங்கள் 2.80 இலட்சம் வழங்கபபட்டன.

1992-93 ஆம் ஆண்டிலும் மேற்படி திட்டம் தொடரும்.

தேசிய பயிறு வகை மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டம், நவீன தொழில் நுட்ப முறைகளைப் பற்றி பயறுவகை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகின்ற மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும்.

1991-92-ல் இத்திட்டம், முதற்கண் 6 மாவட்டங்களில் அதாவது தென் ஆற்காடு, வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், ஆகிய மாவட்டங்களில் செயலாக்கப்பட்டது. பின்னர், இத்திட்டம், சென்னை, நீலகிரி மாவட்டங்கள் தவிர எஞ்சிய மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றது. ரூபாய் 79.35 இலட்சம் மொத்த ஒதுக்கீட்டுத் தொகையுடன் இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது. இதில் ரூபாய் 61.31 இலட்சத்தை மத்திய அரசும், ரூபாய் 18.04 இலட்சத்தை மாநில அரசும் வழங்குகின்றன. 1991-92 ஆம் ஆண்டிற்கான பணிகள் வாரியான திட்டம் 1991 டிசம்பர் வரை சாதனைகள் குறித்த விவரம் வருமாறு :

| தொடர் எண். | இனம். | 1991-92 அளவு. | 1991-92 இலக்கு. | 1991 டிசம்பர் வரை சாதனை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | பயறு வகைகள் அடங்கிய சிறுபைகள் (ஒவ்வொன்றும் ரூ. 40 என்ற விதத்தில்). | எண்ணிக்கை | 17,500 | 4,160 |
| 2. | ஒவ்வொருவருக்கும் ரூபாய் 10,000 என்ற விதத்தில் பயிற்சி. | எண்ணிக்கை | 2 | 2 |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 3 | 10 எக்டேர் நில பரப்பில் செயல் முறை விளக்கம் (ஒவ்வொன்றுக்கும் செலவு ரூ. 5.125). | எண்ணிக்கை | 400 | 103 |
| 4 | ஆதாரக் கிராமங்கள் (குவிண்டாலுக்கு ரூபாய் 200). | குவிண்டால் | 5,000 | 383 |
| 5 | அடிப்படை விதை மானியம் (குவிண்டாலுக்கு ரூபாய் 400). | குவிண்டால் | 1,900 | 98 |
| 6 | சான்றளிக்கப்பட்ட விதை மானியம் (குவிண்டாலுக்கு). | குவிண்டால் | 5,300 | 615 |
| 7 | பயிர் பாதுகாப்பு இராசாயனங்கள் (50 சதவீத மானியம்) எக்டேருக்கு ரூபாய் 75 என்ற வரம்புடன். | எக்டேர் | 3,333 | 1,237 |
| 8 | பயிர் பாதுகாப்பு சாதனங்கள் (50 சதவீத மானியம்) சாதனம் ஒன்றுக்கு ரூபாய் 500 என்கிற உச்சவரம்புடன். | எண்ணிக்கை | 1,080 | 297 |
| 9 | விவசாயக் கருவிகள் (50 சதவித மானிய ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 500 என்கிற உச்ச வரம்புடன்). | எண்ணிக்கை | 400 | 209 |
| 10 | ரைசோபியம் கலவைப் பொட்டலங்கள் (50 சதவீத மானியம்). | இலட்சம் பொட்டலங்கள். | 1.50 | 0.28 |

இத்திட்டம் 1992-93-ஆம் ஆண்டிலும் தொடரும்.

[1992 ஏப்ரல் 21

சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டம்.

பயறு வகைகள்—கோடையில் பயறு பெருக்கத் திட்டம் மற்றும் துவரையைப் பாதிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பயிர்பாதுகாப்புக் குடை.

இது மத்திய அரசு பொறுப்பேற்கும் ஒரு திட்டமாகும். இது 100 சதவீத மத்திய அரசு உதவியுடன், அரிசி மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டம் செயல்படும் 14 மாவட்டங்களில் சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டத்தின் பகுதியாக செயல் படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சிறு/குறு விவசாயிகளுக் கும், 10 கிலோ எடையுள்ள பயறு அடங்கிய சிறு பைகளை ஒவ்வொன்றும் ரூ. 50 என்ற சலுகை விலையில் வழங்கவும், ஹெக்டேருக்கு ரூ. 75 என்ற உயரளவிற்கு 50 சதவீத மானியத்தில் பயிர்பாதுகாப்பு இரசாயனம் வழங்குவதன் மூலம் பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு வகை செய்யவும் இத்திட்டம் கருதுகிறது 1991-92 ஆம் ஆண்டில், 20,000 பயறு வகை சிறு பைகள் வழங்க இலக்கிடப்பட்டிருக்க, 1991 டிசம்பர் மாதம் வரை 8,340 பயறு வகை சிறு பைகள் வழங்கப்பட்டுள்ளன. ரூ. 10, இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ. 4.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயிர் பாதுகாப்பு குடைத் திட்டத்தின் கீழ், 12,000 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டுவர இலக்கிடப்பட்டிருக்க, 3,840 ஹெக்டேர்கள் பரப்பளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ரூபாய் 9 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூபாய் 2.88 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம், 1992-93 ஆம் ஆண்டிலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பருத்தி:

பருத்தி பயிர் 2.35 ஹெக்டேரில் பயிரிட இலக்கிடப்பட்டிருக்க, 1991 டிசம்பர் மாதம் வரை 2.29 இலட்சம் ஹெக்டேரில் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. இத்துடன் கூடுதல் சேமிப்பு நிலை மேம் பாட்டைந்துள்ளதைப் பயன்படுத்தி 1991-92 ஆம் ஆண்டில், கோடைப் பருத்தியை 50,000 ஹெக்டேர் நிலத்தில் பயிரிடக் கருதப்பட்டுள்ளது. பருத்தி உற்பத்தி 6.25 இலட்சம் பேல்கள் செய்யவேண்டுமென்ற இலக்குடன், 1992-93 ஆம் ஆண்டில் 2.35 இலட்சம் எக்டேர் நிலத்தில் பருத்தி பயிரிடப்படும். பருத்தி உற்பத்தியைப் பெருக்க மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங் கள் வருமாறு :



1992 ஏப்ரல் 21]

தீவிரப் பருத்தி மேம்பாட்டுத் திட்டம்.

பருத்தி பயிரிடப்படும் பரப்பளவு அப்படியே உள்ளது. பரப்பளவை அதிகரிக்க வாய்ப்பு ஏதுமில்லை. ஆனால் மக்கள் தொகை பெருக்கத்தினால், பருத்திக்கான தேவை அதிகரித்து கொண்டிருக்கிறது. ஆகவே, இருக்கக்கூடிய பரப்பில், உற் பத்தியை பெருக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மேற் சொன்னவற்றின் காரணமாக காமராஜர், மதுரை, நெல்லை கட்டபொம்மன் ஆகிய மூன்று மாவட்டங்களில், ரூபாய் 20,38 இலட்சம் செலவில் மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு ஆகும் செலவு மத்திய அரசும் மாநில அரசும் சரி சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன திட்ட வாரியாக திட்ட இலக்கு, 1991 டிசம்பர் மாதம் வரை எய்திய சாதனை ஆகியவை பற்றிய விவரம் வருமாறு :

| தொடர் எண். | இனம். | அளவு. | 1991-92 இலக்கு. | 1991-92 1991 டிசம்பர் மாதம் வரை சாதனை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 50 சதவீத மானியத்தில் பயிர்பாதுகாப்புக் கருவிகள் வழங்குதல். | எண்ணிக்கைகள் | 1,600 | 1,239 |
| 2 | 50 சதவீத மானியத் தில் பயிர் பாதுகாப்பு இராசாயனங்கள். வழங்குதல். | எக்டேர் | 3,052 | 2,600 |
| 3 | உழவர் பயிற்சி | எண்ணிக் கைகள். | 100 | 100 |
| 4 | பெரோமேன் பொறிகள் | எண்ணிக் கைகள். | 30 | 30 |

1992-93 ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடரும்.

இதுவரையில் திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த வ. உ. சிதம்பரனார் மாவட்டத்திலும் இத்திட்டம் விரிவாக்கப்படுவதற்கு செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்படும்.

**கரும்பு :**

1991-92 ஆம் ஆண்டில், கரும்பு 2 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிட இலக்கிடப்பட்டிருக்க, 1991 ஆம் ஆண்டு டிசம்பர் வரை 1.91 ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டிற்கான வெல்ல உற்பத்தி இலக்கு 24 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும்.

1992-93 ஆம் ஆண்டில், 2 இலட்சம் எக்டேரில் கரும்பு பயிரிடவும், 24.26 இலட்சம் மெ. டன் வெல்லம் உற்பத்தி செய்யவும் இலக்கிடப்பட்டுள்ளது.

**கரும்பு மேம்பாட்டுத் திட்டம்.**

கரும்புப் பயிரைத் தாக்கும் இளங்குருத்துப் புழுவைக் கட்டுப்படுத்த 21 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்களில் ஒட்டுண்ணிகள் வளர்க்கப்பட்டு கரும்பு பயிரிடப்படும் நிலத்தில் விடப்படுகின்றன. 1991 ஆம் ஆண்டில் 10,500 ஹெக்டேர் கரும்பு சாகுபடி நிலத்தில் ஒட்டுண்ணிகளை விடுவதற்கு இலக்கிடப்பட்டிருக்க 1991 டிசம்பர் வரை 6,834 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஒட்டுண்ணிகள் விடப்பட்டன. இது தவிர, விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்துவிளக்குவதற்கு 575 செயல் விளக்கங்கள் நடத்த இலக்கிடப்பட்டதற்கு மாறாக 1991 டிசம்பர் வரையில் 356 செயல் விளக்கங்கள் நடத்தப்பட்டன.

1992-93 ஆம் ஆண்டிலும் மேற்படி திட்டங்கள் தொடரும்

**எண்ணெய் வித்துக்கள் :**

1991-92 ஆம் ஆண்டில் 12.91 இலட்சம் எக்டேர் பரப்பளவில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 1991 டிசம்பர் வரை 9.89 இலட்சம் எக்டேர் பரப்பளவில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்பட்டன. 1992-93 ஆம் ஆண்டில் 12.91 இலட்சம் எக்டேர் பரப்பளவில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்பட்டு, 14 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலக்கை அடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்கும், தேவைக்கும் இடையே அதிகமான அளவில் பற்றாக்குறை நிலவுவதால், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிப்பதில் அரசு மிக்க ஆர்வமாக உள்ளது. எண்ணெய் வித்துக்கள் விளைச்சலின் கீழ் உள்ள பரப்பளவு நிலையானதாக இருப்பதால், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரிக்கும் பணி கடினமாக உள்ளது. மேலும், 65 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிலக்கடலை பயிர்கள்



மானாவாரியாக பயிரிடப்படுகின்றன. இந்த முட்டுக்கட்டைகளை களைந்து, உற்பத்தி இலக்கை அடையும் பொருட்டு, கீழ்க்காணும் வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம் :**

சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக பிற மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் இத்திட்டம், ஒரு மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். விதைகள் ஜிப்சம், பயிர் பாதுகாப்புச் சாதனங்கள், ரைசோபியம் வளர்ப்பு, நுண்ணுயிர்ச் சத்துக்கலவை, பயிர் பாதுகாப்பு இராசாயனப் பொருட்கள், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கான சாதனங்கள் போன்ற பல்வேறு இடுபொருகளுக்கு உதவி தொகை அளிப்பதன் மூலம் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி அளவை உயர்த்துவதே இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் சிறு உழவர்களுக்கும், குறு உழவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்தச் செலவில் 75 சதவீதத்தை மத்திய அரசும், எஞ்சிய 25 சதவீதத்தை மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன.

1991-92 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம், 1991 டிசம்பர் வரை திட்டக்கூறு வாரியாக எய்திய சாதனை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| தொடர் எண். | திட்டக் கூறுகளின் பெயர். | அலகு. | 1991—92 இலக்கு | 1991 டிசம்பர் வரை எய்திய சாதனை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | அடிப்படை விதை உற்பத்தி (குவிண்டாலுக்கு ரூ 400 என்ற வீதத்தில்). | குவிண்டால்கள். | 2,625 | 2,794 |
| 2 | ஆதார கிராமத் திட்டம் சான்றளிக்கப்பட்ட விதைக் கொள்முதல் (குவிண்டாலுக்கு ரூ. 200 என்ற வீதத்தில்). | ,, | 24,297 | 4,601 |

1992 ஏப்ரல் 21]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 3. | பெயர் சீட்டு ஒட்டப்பட்ட விதை கொள்முதல் (குவிண்டாலுக்கு ரூ. 50 என்ற வீதத்தில்). | குவிண்டால் | 72,342 | 41,538 |
| 4. | சான்றளிக்கப்பட்ட பெயர்ச்சீட்டு ஒட்டப்பட்ட விதைகள் வழங்குதல் (சான்றளிக்கப்பட்ட பெயர்ச் சீட்டு ஒட்டப்பட்ட விதைகள் குவிண்டாலுக்கு ரூ. 100 என்ற வீதத்திலும் கலப்பின விதைகள் குவிண்டாலுக்கு ரூ. 1,500 என்ற வீதத்திலும்). | குவிண்டால் | 99,990 | 23,421 |
| 5. | 10 முதல் 20 எக்டேர் நிலப் பரப்பில் ஒட்டு மொத்த செயல் முறை விளக்கம் (50% உதவித்தொகை என்ற வீதத்தில், இடு பொருட்கள் வழங்குதல். | எக்டேர் | 11,000 | 5,110 |
| 6. | விலையில் 10 சத வீதம் வசூல் செய்து கொண்டு விதைகள் அடங்கிய சிறு பைகள் வழங்குதல். | எண்ணிக்கைகள் | 10,700 | 2,54 |
| 7. | எக்டேருக்கு ரூ 100க்கு மிகாமல் 50 சதவீதம் மானியம் என்ற வீதத்தில் பயிர் பாதுகாப்பு இராசாயனப் பொருள்கள் வழங்குதல். | எக்டேர் | 53,722 | 211 |
| 8 | வேர்ப் புழுவைக் கட்டுப்படுத்தல் எக்டேர் ஒன்றுக்கு ரூ 500 என்ற வீதத்தில உதவித்தொகை வழங்குதல். | ,, | 4,000 | 1,624 |
| 9 | சாதனம் ஒன்றுக்கு ரூ. 500க்கு மிகாமல் 50 சதவீதம் உதவித் தொகையில் பயிர் பாதுகாப்பு சாதனங்கள் வழங்குதல். | எண்ணிக்கைகள். | 8,000 | 1,628 |
| 10 | சிறு உழவர்களுக்கும், குறு உழவர்களுக்கும் 50 சதவீதம் என்ற வீதத்திலும், ஆதி திராவிடர்/பழங்குடி உழவர்களுக்கு 90 சதவீதம் என்ற வீதத்திலும், உழவர் ஒருவருக்கு ரூ.700 என்ற வீதத்தில் நவீன பண்ணைக் கருவிகள் வழங்குதல் | ,, | 4,500 | 2,454 |
| 11 | தண்ணீர் தெளிப்பான்கள் வழங்குதல் (சிறு உழவர்களுக்கும், குறு உழவர்களுக்கும் 50 சதவீதம் என்ற வீதத்திலும் ஆதி திராவிடர்/பழங்குடி உழவர்களுக்கு 75% என்ற வீதத்திலும் உழவர் ஒருவருக்கு ரூ. 10,000க்கு மேற்படாமல் தண்ணீர் தெளிப்பான் கருவிகள் வழங்குதல்.) | ,, | 500 | 35 |
| 12 | எக்டேர் ஒன்றுக்கு ரூ. 15க்கு மேற்படாமல் 50 சதவீத உதவித் தொகையில் ரைசோபியம் வளர்ப்புப் பைகளை, வழங்குதல். | எக்டேர் | 33,358 | 21,429 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 13 | எக்டேருக்கு ரூ.200-க்கு மேற்படாமல் 50 சதவீதம் மானியத்தில் ஜிப்சம் வழங்குதல். | எக்டேர் | 20,000 | 20,053 |
| 14. | பயிர்ப் பாதுகாப்பு ஊர்திப்பிரிவை அமைத்தல். | எண்ணிக்கை | 2 | — |

இத்திட்டம் 1992-93ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**மாநில எண்ணெய் வித்து ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் :**

இம்மாநிலத்தில் எண்ணெய்வித்து உற்பத்திக்கு இடையூறு பயக்கும் சில தடைகளை நீக்கவும், எண்ணெய்வித்து உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கவும் 1991-92-ல் அரசு மாநில எண்ணெய்வித்து ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இது தருமபுரி, வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம், தென் ஆற்காடு, இராமநாதபுரம், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். ஆகிய 7 மாவட்டங்களில் செயற்படுத்தப்படுகிறது. கீழ்க்கண்ட திட்டப் பணிகளை நிறைவேற்ற, இத்திட்டம் வகை செய்கிறது.

**1. தெளிப்பான்களை அமைத்தல் :**

நீர்ப்பாசன வசதியற்ற நிலைமையில் ஏறத்தாழ 65 சதவீதம் நிலக் கடலைப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. ஆகையால், கிடைக்கும் தண்ணீரை அதிகப் பரப்பளவிற்கு பயன்படுத்துவதற்காக, 26 இலட்சம் ரூபாய் செலவில் தெளிப்பான்கள் அமைக்கப்படும். இது பாசன வசதியை மேம்படுத்துவதுடன், உற்பத்தியையும் பெருக்கும். இத்திட்டத்தின் கீழ் 1,040 உழவர்கள் பயனடைவர்.

**2. விதைகள் குறித்த உதவித் தொகை :**

நிலக்கடலை விதையின் விலை அதிகமாக இருப்பதையும், வானவாரியாக அதனைச் சாகுபடி செய்வதில் உள்ள இடர்பாட்டையும் கருத்திற் கொண்டு, வானவாரி நிலக்கடலைச் சாகுபடியை மேற்கொள்ள, உழவர்கள் தயங்குகின்றனர். இத்திட்டத்தின் கீழ் வானவாரி நிலக்கடலைச் சாகுபடியை மேற்கொள்ள உழவர்களை ஊக்குவிக்க, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 500 என்ற வீதத்தில் விதை உதவித் தொகையாக, வழங்கப்படும். 1991-92 ஆம் ஆண்டில் 2,400 எக்டேருக்கு விதை உதவித் தொகையாக வழங்க ரூ. 12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**3. சிவப்பு நிற கம்பளிப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தல் :**

நிலக்கடலைப் பயிரைப் கடுமையாகத் தாக்குகின்ற பயிர் பூச்சியான சிவப்பு நிற கம்பளிப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த கோடை உழவு, மண்ணைத் தோண்டுதல், கூட்டுப் புழுக்களைச் சேகரித்தல், விளக்குப் பொறிகளை வழங்குதல் போன்ற பயிர் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பயிர்ப் பூச்சிகள் பயிரைந் தாக்காமல் கட்டுப்படுத்த, பயிர்ப் பாதுகாப்பு இரசாயனப் பொருட்களை வழங்கவும், எக்டேர் ஒன்றுக்கு 300 ரூபாய் என்ற வீதத்திலும் உதவித் தொகை வழங்கப்படும். இத்திட்டம் மொத்தம் 12 இலட்சம் ரூபாய் செலவில் 4,000 எக்டேரில் செயல்படுத்தப்படும்.

மேற்சொன்ன மூன்று திட்டக் கூறுகளில் 1991-92ஆம் ஆண்டில் தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகளை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

எஞ்சியுள்ள இரு திட்டக்கூறுகளும் அதாவது மிகக் குறைந்த விலையில் விதைகளை வழங்குதல், சிவப்பு நிற கம்பளிப்பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை வருகின்ற வானாவாரிப் பருவத்தில் செயல்படுத்தப்படும்.

**தென்னங்கன்றுகள் மேம்பாட்டுத் திட்டம்**

1991-92ம் ஆண்டில் 7 லட்சம் நெட்டை தென்னை மரக் கன்றுகளையும், 7 லட்சம் நெட்டை குட்டை தென்னை மரக்கன்றுகளையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 1991 டிசம்பர் திங்கள் வரையில் 6.76 இலட்சம் நெட்டை தென்னை மரக்கன்றுகளும், 4.94 இலட்சம் நெட்டை குட்டை தென்னை மரக் கன்றுகளும் வழங்கப்பட்டன.

மேற்சொன்ன திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**செம்பனைச் சாகுபடித் திட்டம் :**

பாமாலின் எண்ணெய் தற்போது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின் கழிமுகப் பகுதிகளில் நிலவும் தட்பவெட்ப நிலை செம்பனை சாகுபடிக்கு மிகவும் உகந்தது என்று கண்டறியப்பட்டுள்ளது. முதல் கட்டமாக அரசு விதைப் பண்ணைகளில் 250 எக்டேரில் செம்பனையைச் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. படிப்படியாக விவசாயிகளின் நிலங்களில் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டம் இனுங்கூரில் உள்ள

அரசு விதைப் பண்ணையில் நாற்றுகளை வளர்க்க, மத்திய மலைத்தோட்டப் பயிர் ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்தும், பாலக்கோட்டிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மன்றத்திடமிருந்தும் 1 இலட்சம் முளைத்த விதைகளை வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு 24.89 கோடி ரூபாய் செலவு பிடிக்கக்கூடிய திட்டத்திற்கான செயற் குறிப்புகளை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

**சிறப்புத் திட்டம் :**

தேசீய எண்ணெய் வித்துக்கள் தாவர எண்ணெய் மேம்பாட்டுக் குழு மத்திய அரசின் தன்னாட்சி உரிமை பெற்ற ஓர் அமைப்பாகும். இது இம்மாநிலத்தில் எண்ணெய் வித்துக்கள் தென்னை ஆகிய பயிர்களின் மேம்பாட்டுக்காக 100 சதவீத நிதியுதவி வழங்குகிறது. இதுவரை சூரிய காந்தி சாகுபடி செய்யப்படாத பகுதிகளில் சூரிய காந்திப் பயிரை அறிமுகப்படுத்தவும் சூரிய காந்தி உற்பத்தி மற்றும் தென்னை ஆகிய பயிர்களின் மேம்பாட்டுக்காகவும் 42 இலட்சம் ரூபாய் அளவுக்கு (100 சதவீத) நிதியுதவி வழங்கியுள்ளது.

**பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் :**

**தரிசு நிலச் சாகுபடித் திட்டம் :**

போதுமான மழையின்மையால் தமிழ் நாட்டில் ஒவ்வொராண்டும் பெரும் பரப்பளவைக் கொண்ட பட்டா நிலங்கள் சாகுபடி செய்யப்படாமலுள்ளன. சாகுபடி செய்யத்தக்க இந்த தரிசு நிலங்களை மீண்டும் வளம் பெறச் செய்து அதன்மூலம் வருவாய் ஈட்டக்கூடிய வாய்ப்புக்களை உருவாக்க 10,000 எக்டேர் பரப்பை சாகுபடியின் கீழ் கொண்டுவரும் வகையில் மொத்தம் 150 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கத்துடன் புதிய திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டில் 75 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கத்துடன் மதுரை, திண்டுக்கல்-அண்ணா, இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், நெல்லைக் கட்டபொம்மன், சிதம்பரனார், தருமபுரி ஆகிய எட்டு மாவட்டங்களில் 5,000 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மரக்கன்றுகள் நடவும், இப்பயிர்களின் இடைவெளிகளில் ஒரு வருடத்திற்குள்ளாகப் பயன் தரும் பயிர்களை ஊடுபயிராக ஆரம்ப காலத்தில் சாகுபடி செய்யவும் உழவர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 1,500 ரூபாய் ஊக்கத் தொகையாக அளிக்கப்படுகிறது. 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள்





வரை 2,370 எக்டேர் பரப்பில் மேற்சொன்ன பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 35.93 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 5,000 எக்டேரிலும் மேற்சொன்ன பயிர்களைச் சாகுபடி செய்ய ரூ. 75 இலட்சம் நிதியொதுக்கத்துடன் 1992-93 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் மேற்சொன்ன மாவட்டங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**ஒருங்கிணைந்த புன்செய் நில மேம்பாட்டுத் திட்டம்—மாநிலத் திட்டம்:**

தமிழ் நாட்டில் அதிக அளவு நிலப்பகுதியில் புன்செய் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்ட போதிலும், அவற்றின் உற்பத்தித் திறன் அதிகரிக்கவில்லை. புன்செய்ப் பயிர்களின் மூலம் வருவாய் கிடைக்குமா என்பது ஐயப்பாட்டிற்குரியதாக இருப்பதால் புன்செய்ப் பயிர்சாகுபடிக்காக அதிக அளவில் முதலீடு செய்யவும் தேவையான இடுபொருட்கள் முதலானவற்றைப் பயன்படுத்தவும் உழவர்கள் தயங்குகின்றனர். இந்நிலையைப் போக்க புன்செய் பயிர்களைச் சாகுபடி செய்யும் உழவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த, புன்செய்ப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன், புன்செய் நில மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மாநில நிதியிலிருந்து பெறப்பட்ட நிதியுடன் மொத்தம் 5 கோடி ரூபாய் செலவில், 1990-91 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு 100 எக்டேர் நிலத்திலும பெரிய அளவிலான செயல்முறை விளக்க பாத்திகள் 300 (30,000 எக்டேர்) அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் அனைத்து வகையான புன்செய் வேளாண் தொழில்நுட்ப உத்திகள் பின்பற்றப்படுகின்றன. 1991-92 ஆம் ஆண்டில், மொத்தம் 126 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[1992 ஏப்ரல் 21

1991 டிசம்பர் திங்கள் வரை 96.43 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 1991 டிசம்பர் திங்கள் வரை திட்டக்கூறுவாரியான சாதனை பற்றிய விவரம் வருமாறு :—

| தொடர் எண். | திட்டக்கூறு | உதவித் தொகை 1991-92. | | |
|---|---|---|---|---|
| | | எக்டேர். | 1991 டிசம்பர் திங்கள் வரை எய்திய | |
| | | | இலக்கு. | சாதனை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபாய் |
| 1. | 50 சதவீத உதவித் தொகையில் கோடை உழவு. | 200 | 30,000 | 29,184 |
| 2. | 20 சதவீத உதவித் தொகையில் ஊட்டச் சத்து நிறைந்த தொழு உரம். | 60 | 30,000 | 29,593 |
| 3. | 50 சதவீத உதவித் தொகையில் இரு போகப் பயிர் சாகுபடி (விதைகள்-உயிரின உரங்கள் முதலானவை வழங்குதல்). | 50 | 30,000 | 7,873 |
| 4. | 50 சதவீத உதவித் தொகையில் தழைச் சத்து மேலுரம் இடுதல். | 40 | 30,000 | 24,874 |
| 5. | ஒருங்கிணைந்த பயிர் பூச்சி நிருவாகத் தொழில் நுட்பம் 50 சதவீத உதவித் தொகையில் இன ஈர்ப்புப் பொறிகள், செப்டாஸ் முதலானவற்றை வழங்குதல். | 50 | 30,000 | 18,660 |
| 6. | உழவர்களுக்கான பயிற்சி (உழவர்களின் எண்ணிக்கை). | .. | 30,000 | 92,800 |

ஒவ்வொன்றிலும் 100 எக்டேர் பரப்பளவு கொண்ட பெரிய அளவிலான செயல் விளக்கப் பாத்திகள் 400 (40,000 எக்டேர்) அமைப்பதன் மூலம் 1992-93 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



1992 ஏப்ரல் 21]

வானாவாரிப் பயிர்களுக்கான நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் தேசியத் திட்டம்—மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்.

வானாவாரிப் பயிர்களுக்கான நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டு தேசியத் திட்டம் 1990-91 ஆம் ஆண்டு வரை தருமபுரி மாவட்டத்தில் மட்டும் சிறிய அளவில் செயல்படுத்தப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டில் இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு தென் ஆற்காடு, வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், தருமபுரி, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், பெரியார், திருச்சி, மதுரை, திண்டுக்கல்-அண்ணா, காமராசர், பசும்பொன், நெல்லைக் கட்டபொம்மன் ஆகிய 14 மாவட்டங்களிலுள்ள 84 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 30 சதவீதத்திற்குக் குறைவாகப் பாசன வசதி பெறும் சாகுபடி நிலங்கள் உள்ள சமுதாய வளர்ச்சி வட்டாரங்களில் திருப்திகரமான அளவில் மேம்பாடு அடையக்கூடிய வகையில் மாதிரிகளை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், மத்திய அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள பெருந்திட்டமாகும். இத்திட்டத்திற்காகும் செலவில் 75 சதவீதத்தை மத்திய அரசு மானிய உதவியாகவும், 25 சதவீதத்தை மாநில அரசுக்கு கடனாகவும் வழங்குகிறது. இத்திட்டம் 4 ஆண்டுத் திட்ட செயல் ஆகும். 35.61 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் திட்ட காலத்தில், 89,025 எக்டேரை இத்திட்டத்தின் கீழ் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டில் 5 வேளாண் தட்ப வெப்ப மண்டலங்களுக்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு 4 மாதிரி திட்ட அறிக்கைகளுக்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 1991-92ம் ஆண்டுக்காக, மத்திய அரசு 2.09 கோடி ரூபாய்க்கு அனுமதியளித்துள்ளது. இதில் 1.09 கோடி ரூபாய் வேளாண்மைத் துறைக்கும், 1 கோடி ரூபாய் வேளாண். பொறியியல் துறைக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தடுப்பு அணைகள் கட்டுதல், நீர்வழிகளை முறைப்படுத்துதல், வனத் துறை நிலம், புறம்போக்கு நிலம் போன்ற அரசு நிலங்களில் மண்வளம், ஈரத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு நீர் ஆதாரங்கள் குறித்து பயிற்சியளித்தல் ஆகியவற்றை இலவசமாக மேற்கொள்ள இத்திட்டம் வகை செய்கிறது. இவை தவிர மண்ணின் ஈரத்தன்மையைப் பாதுகாக்க பட்டா நிலங்களை வைத்துள்ள உழவர்களுக்கு நில வரப்புக்களில் நடுவதற்கு வெட்டிவேர் நறுக்குகள், பழங்கள் வெட்டு மரங்கள், ஆகிய வற்றைத் தரும் மரக் கன்றுகள், தீவனப் பயிர் முதலானவை மிகக் குறைந்த விலையில் அளிக்கப்படும்.

நடப்பாண்டில் அரசுக்குச் சொந்தமான அரசு விதைப் பண்ணைகளில் வெட்டிடுவர் நாற்றுப் பண்ணைகள் ஏற்படுத்தப் பட்டு, தாவர அரணாக அமையவும், உழவர்களுக்கான நாற்றுப் பண்ணைகளை அமைக்கவும், நீர்ப்பிடிப்புப் பகுதிகளுக்கு வெட்டி வேர் நறுக்குகள் வழங்கப்பட்டுள்ளன. உழவர்களுக்கான 84 நாற்றுப் பண்ணைகளின் மூலம் 84 நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மரக்கன்றுகளும், தீவனப் பயிர்க் கன்றுகளும் வளர்க்கப்பட்டன. மரக்கன்றுகளையும், தீவனப் பயிர்க் கன்றுகளையும் நடும் பணி நடைபெற்று வருகிறது. நீர்ப் பிடிப்புப் பகுதி மேம்பாடு குறித்து உழவர்களின் நண்பர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த பயிற்சி முடிவடைந்துள்ளது. வீடுகளின் பின்புறத்தில் தோட்டப் பயிர்கள் சாகுபடி செய்தல், வெள்ளாடு வளர்ப்பு, கோழிப் பண்ணை அமைத்தல் முதலியவை போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 84 நீர் பிடிப்புப் பகுதிகளிலும் வடிகால் குழாய்களைச் சுத்தப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. 1991-92 ஆம் ஆண்டில், 1991 டிசம்பர் திங்கள் வரை 17.69 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுளளது.

**ஒருங்கிணைந்த நீர்ப் பிடிப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்— உலக வங்கியின் நிதியுதவி பெறும் திட்டம் :**

ஒருங்கிணைந்த நீர்ப் பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத்திட்டம், தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதி யாகும். இத்திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் 1991-92 ஆம் ஆண்டிலிருந்து 7 ஆண்டுக்கால அளவிற்குச் செயல் படுத்தப்பட்டு வருகிறது. நீர்ப் பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டக் கூறு கீழ்க்காணும் இரண்டு நோக்கங்களைக் கொண் டுள்ளது:

(1) உழுது பயிரிடத்தக்க நிலங்கள், அவ்வாறு பயிரிடு வதற்கேற்ப சீர் செய்யப்படாத நிலங்கள் ஆகியவற்றை உற் பத்தித் திறனை அதிகரித்தல்.

(2) கிடைக்கின்ற ஈரத்தன்மையை அதிக அளவுக்குப் பயன் படுத்தல், மண்வளம், ஈரத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்க, உரிய நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் நீர் வழிந்து ஓடி வீணாவதைத் தடுத்தல்.

இத்திட்டத்திற்கான மொத்த நிதியொதுக்கம் 47.32 கோடி ரூபாயாகும். பாலாறு, வெள்ளாறு ஆகியவற்றின் நீர் பிடிப்புப் பகுதிகளில் 54,000 எக்டேரும், விரிவாக்கத் திட்டத்தின் கீழ் 12 மாவட்டங்களில் 36,000 எக்டேரும் இத்திட்டக் காலத்தில் பயன் பெறும்.



1991-92 ஆம் ஆண்டில் 134.251 இலட்சம் ரூபாய் நிதி யொதுக்கத்துடன் முறையே 385 எக்டேரையும் 255 எக்டே ரையும் பயன்பெறச் செய்யும் நோக்குடன் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் பாலாறு நீர்பிடிப்புப் பகுதியிலும் சேலம் மாவட்டத்தில் வெள்ளாறு நீர் பிடிப்புப் பகுதியிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டுக்கான திட்டம் சார்ந்த நிதி சார்ந்த பணிகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும் இனமும். | அலகு. | 1991-92 ஆம் ஆண்டு இலக்கு. திட்ட இலக்கு. | நிதி இலக்கு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. பண்ணை மேம்பாடு குறித்த பணிகள் : | | | |
| (அ) தாவர அரண் .. .. | எக்டேர் | 640 | 6.653 |
| (ஆ) கலப்புப் பயிர் .. .. | எக்டேர் | 125 | |
| (இ) பயிர் செயல் விளக்கம் | எக்டேர் | 79 | |
| (ஈ) கலப்புதோட்டக்கலை .. | எக்டேர் | 180 | |
| 2. பண்ணை அல்லாத பிற இடங் களுக்கான மேம்பாட்டுப் பணி கள் :— | | | |
| (அ) காடுகளை மீண்டும் வளர்த் தல், காடுகளுக்குப் புத்துயி ரளித்தல் .. .. | எக்டேர் | 560 | 23.603 |
| (ஆ) காடுகளில் மேய்ச்சல் நிலங் களை அமைத்தல். | எக்டேர் | 125 | |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3. இயற்கையான வடிகால் அமைப்புகள்— | | | |
| (அ) தடுப்பு அணைகள் .. | எண்ணிக்கை. | 147 | |
| (ஆ) குட்டைகள் .. .. | ,, | 1 | |
| (இ) நீரைத் திருப்பிவிடும் .. வடிகால் அமைத்தல். | மீட்டரில் | 150 | 8.076 |
| (ஈ) தாவர அரண்கள் அமைத்தல் | எக்டேர் | 2,700 | |
| 4. வெட்டிவேர் நாற்றங்கால்கள் | எக்டேர் | 30 | 12,300 |
| 5. 146 ஊர்திகள் எந்திரங்கள் சாதனங்கள் குறித்த முதலீட்டுச் செலவு. | | | 15.260 |
| 6. சம்பளம், படிகள்/இயக்கச் செலவு. | | | 41,019 |
| 7. மண்வள ஆய்வு ... .. | | | 12.940 |
| 8. பயிற்சி/ஆய்வுப் பயணம்/கருத்தரங்குகள் விவாதங்கள். | | | 6.850 |
| 9. ஆராய்ச்சி .. .. | | | 6.350 |
| 10. கண்காணித்தலும், மதிப்பீட்டு ஆய்வும். | | | 1,000 |
| மொத்தம் .. | | | 134.251 |

முன்னர் எண்ணெய் வித்துக்கள் துறையில் பணியாற்றிய பணியாளர்களை இத்துறைக்கு கொண்டு வந்ததன் மூலம் இந்த நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டத்திற்கு போதுமான பணியாளர்களை அரசு வழங்கியது. இப்பணியாளர் 1992 ஜனவரியிலிருந்து செயல்படத் தொடங்கினர். திட்டம் சார் துறைகளின் மூலம் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் பணி நடந்தேறி வருகிறது. அரசின் ஆணைகள் கிடைத்தவுடன் 1992 ஜனவரி முதல் இத்திட்டப்பணி தொடங்கப்பட்டுள்ளது.



இத்திட்டம் 1992–93 ஆம் ஆண்டிலும் தொடரும்.

**வேளாண் காடு வளர்ப்பு :**

வேளாண் காடுவளர்ப்பு தமிழ்நாடு சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தின் ஓர் அங்கமாகும். ஸ்வீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி மன்றம் (SIDA) நிதியுதவியைப் பெற்று 1988-89 ஆம் ஆண்டிலிருந்து 1992-93 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுக் காலத்திற்கு, இரண்டாவது காலதிட்டங்கள் செயல்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், பழவகைகள், தீவனம், எரிபொருள், மரம், நார் போன்றவற்றை கொடுக்கும் மரக்கன்றுகள் உயரளவாக 500 என்ற வரம்பிற்கு உட்பட்டு இலவசமாக தெரிந்தெடுக்கப்பட்ட சிறுகுறு உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இரண்டாண்டுகளுக்கு மேல் செடிகள் உயிர் வாழ்ந்திருக்குமாயின், செடி ஒன்றுக்கு ரூ. 2.50 என்ற அளவில் வழங்கப்பட்டுள்ளது. நாற்றுகளை வளர்க்கும் பணி சிறு-குறு உழவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள பல்வேறு வகை மண் வளத்திற்கு ஏற்ற பயிர் வகைகளைத் தெரிந்தெடுக்க சிறு-குறு உழவர்களின் மாதிரி பண்ணைகளில் மாதிரி சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

1991-92 ஆம் ஆண்டில் 80 இலட்சம் நாற்றுகளை வளர்த்து வழங்க திட்டமிடப்பட்டது. இதில் 79.77 இலட்சம் நாற்றுகள் வளர்க்கப்பட்டு 1991 ஆம் ஆண்டு டிசம்பர் வரை வழங்கப்பட்டன. மாதிரி நாற்றங்கால் பண்ணைகள் 21 இடங்களில் 89 எக்டேர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 139.2 இலட்சம் ஆகும். ஆனால் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் வரை ரூ. 46.84 இலட்சம் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. 1992–93 ஆம் ஆண்டுகளில் சிறு-குறு உழவர்களுக்கு 90 இலட்சம் நாற்றுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தனித் தொகுதியைச் (Special Group) சேர்ந்த உழவர்களின் நிலையை உயர்த்தும் திட்டம் :**

**வேளாண்மைப் பணியில் தமிழ்நாட்டு மகளிர் :**

டானிடா நிறுவனத்தின் உதவித் தொகையைபெற்ற டான்வா திட்டம் 1986-87 ஆம் ஆண்டிலிருந்து ஏழு ஆண்டு காலத்திற்கு மொத்தம் ரூ. 4.13 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வேளாண்மைப்பணியில் ஈடுபடும் பண்ணை மகளிரின் செயல் திறனையும், அறிவுத்திறனையும் வளர்க்கவும் அவர்களின் நிலையை உயர்த்துவதற்குமான பயிற்சி அளிக்கப்

படுகிறது. இத்திட்டம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களிலுள்ள 6 உழவர் பயிற்சி மையங்களின் வாயிலாக செயல்படுத்தப்படடு வருகிறது. ஒவ்வோராண்டும் ஒவ்வொரு தொகுதியிலும் 30 பயிற்சியாளர்கள் என்ற அளவில் ஐந்து நாட்களுக்கு 96 கிராமங்களில் பயிற்சித் திட்டங்கள் நடததப்பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் 67 பயிற்சி வகுப்புகள் நடத்தி, 1991 டிசம்பர் இறுதியில் முடிக்கப்பட்டுள்ளன. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ.. 27.96 இலட்சமாகும். இதில், 1991 டிசம்பர் வரையில் ரூ. 18.85 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்பட உள்ளது. தற்போது ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள டானவாவின் இத்திட்டம் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து இத்திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகளை 1992-93 ஆம் ஆண்டிலிருந்து, எட்டாண்டுகளுக்கு மொத்தம் ரூ. 18 கோடி செலவில் செயல்படுத்த கருதப்பட்டுள்ளது. இதற்கான செயற் குறிப்பு ஒன்று மத்திய அரசின் மூலமாக 'டானிடா' நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இரண்டாவது கட்ட திட்டத்தின் கீழ் பெண்களுக்கான பயிற்சி மையங்கள் வடஆற்காடு-அம்பேத்கார், தருமபுரி, சேலம், திருச்சி, பெரியார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள உழவர் பயிற்சி மையங்களின் வாயிலாக மேலும் ஆறு மாவட்டங்களில் பிரிவுபடுத்தப்பட்டு செயற்படுத்தப்படவுள்ளது. இரண்டாவது திட்டப் பணிகளை தயாரித்து முடிவு செய்ய 1992 ஆகஸ்டில் டானிடா நிறுவனத்திலிருந்து மதிப்பீட்டு குழு தமிழ்நாட்டிற்கு வருகை தர உள்ளது.

**சிறப்புகூறு திட்டம் :**

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி—மேம்பாட்டு கழகம் மூலமாக, மத்திய அரசின் நிதியுதவியுடன், இத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. வேளாண்மைப் பணியில் ஈடுபட்டுள்ள உழவர்களின் நிலையை உயர்த்தும் இத்திட்டம் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் உயரளவிற்கு 50 சத விகிதம் உதவித் தொகை என்ற விதத்தில் உழவர் ஒருவருக்கு ரூ. 750 வழங்கும் வகையில் ஆதிதிராவிடர் உழவர்களுக்கான உதவித் தொகை அதிகரிக்கப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டில் இத்திடடப் ரூபாய் 83 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு கீழ கொடுக்கப்பட்டுள்ளது.



| தொடர் எண்ணும் திட்டக் கூறுகளும். (1) | | 1991-92 ஆம் ஆண்டு திட்டம். (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | நெல்-சிறுதானியங்கள் விதைகள் வழங்குதல் | 16.50 |
| 2 | பயறு வகைகள் வழங்குதல் .. .. .. | 28.72 |
| 3 | பருத்தி விதைகள் வழங்குதல் .. .. | 2.05 |
| 4 | பயிர் பாதுகாப்பு இரசாயனப பொருட்கள்-புல் பூண்டு அழிப்பான் வழங்குதல். | 21.60 |
| 5 | நுண் ஊட்டச்சத்து உரக்கலவை வழங்குதல் .. | 14.01 |
| | சேம நிதி .. .. | 0.12 |
| | மொத்தம் .. | 83.00 |

இத்திட்டம், 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்
படுததப்படும். மேலும் எண்ணெய் வித்துக்கள், தென்னங்கன்று
கள், பயிர்பாதுகாப்பு, இரசாயனப்பொருட்கள் போன்ற இடு
பொருட்கள் 50 சதவீத மானிய விலையில் 1991-92 ஆம் ஆண்
டில் 23,850 குடும்பங்கள் பயனுறும் வகையில் 36.64 இலட்சம்
ரூபாய் செலவில் வழங்கப்பட்டன. இத்திட்டம், 1992-93 ஆம்
ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

**நிர்வாக அமைப்பு :**

தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தை மொத்தம்
309.29 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீட்டுடன் 1991-92 ஆம்
ஆண்டிலிருந்து வேளாண்மைத் துறை எடுத்துக் கொண்டுள்ளது. இத்திட்டம் முற்றிலும் உலக வங்கி உதவியுடன் செயல்படுகிறது. திட்டக்கால
அளவு 7 ஆண்டுகளாகும். இத்திட்டத்தின் கீழ் விரிவாக்க
திட்டங்களைப் பரவலாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இத்திட்டத்தின் முக்கியப் பணிகள் வருமாறு :

(1) அதிக வேளாண் உற்பத்தி-வருமானம் மூலம் கிராமப்
புறங்களில் வறுமையை ஒழித்தல்.

(2) காய்கறிகள் பயிரிடுவதற்கான மண்வளப் பாது
காப்புத் தொழில் நுட்பங்கள், கால்நடைத் தீவனப்பயிர் மேம்பாடு
வேளாண் காடு வளர்ப்பு, நீர் பிரி முகடு மேம்பாடு, கிராமப்புற

[1992 ஏப்ரல் 21

சாலை, குடிநீர் வழங்கல், முதலியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து வலியுறுத்துவதுடன் தோட்டக்கலை, மண்-நீர் நிர்வாகம் குறித்து, உழவர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனை வழங்கப்படும்.

1. எண்ணெய்வித்துத் துறையை இணைத்தல் :

தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதன் முதல் நடவடிக்கையாக 1—4—1991லிருந்து எண்ணெய் வித்துத்துறை, வேளாண்மைத்துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. முன்னாள் எண்ணெய் வித்துத்துறை பணியாளர்கள் பல்வேறு இன்றியமையாத் திட்டங்களில் முக்கியமாக தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித்திட்டத்தில் பரவலாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2. தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டம் :

தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1991—92 ஆம் ஆண்டில் திட்டப்பணியை செயற்படுத்துவதற்கு, அரசு 20 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்திட்டப்பணியில் எட்டு துறைகள் ஈடுபட்டுள்ளன. மேற்சொன்ன 20 கோடி ரூபாயில், 1991-92 ஆம் ஆண்டிற்கு வேளாண்மைத் துறைக்கு 7.243 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அவ்வொதுக்கீட்டின் விவரம் வருமாறு :—

| தொடர் எண்ணும் இனமும். (1) | (ரூபாய் கோடியில்.) 1991-92 ஆண்டுத் திடடம். (2) |
|---|---|
| 1. வேளாண்மை குறித்துத் திட்டமிடல் .. | 0.750 |
| 2. வேளாண்மை விரிவாக்கத் திட்டம் .. .. | 3.361 |
| 3. விதை உற்பத்தி .. .. .. .. | 1.789 |
| 4. நீர்பிரி முகடு மேம்பாடு .. .. | 1.343 |
| | 7.243 |

வேளாண்மை குறித்துத் திட்டமிடல் :

வேளாண்மை குறித்துத் திட்டமிடல் திட்டத்தின் கீழ் கொள்கை விளக்க ஆய்வு மேற்கொள்வதுடன் திட்டமிடல் பணிகளை மேலும் சிறப்புற ஆற்றுவதற்காக 20 கணக்கீடு பொறிகள்,



1992 ஏப்ரல் 21]

11 நிழற்பட நகல்கள், 1 கார், 12 ஜீப்புகள், 21 மின்னணு தட்டச்சுப் பொறிகள் ஆகியவற்றை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்கத் திட்டம் :

குடுமியான் மலையிலுள்ள மாநில அளவிலான பயிற்சி நிறுவனத்திற்கு மாநில அளவிலான விரிவாக்கப் பணி உட்கோட்ட அளவில் விரிவாக்கப்பணி ஆகியவை வலுப்படுத்தப்பட்டு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும். இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. வேளாண்காடு வளர்ப்பு, புன்செய் மேம்பாடு, பட்டுப்புழு வளர்ப்பு ஆகிய பகுதிகளில் வீடியோ படங்கள் எடுப்பதற்காக அரசு, பகுதி-2 திட்டமாக 4.50 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது; பணி நடைபெற்று வருகிறது.

விதை உற்பத்தி :

இத்திட்டப்பகுதியின் கீழ் தரத்தை அடிப்படையாகக் கொண்ட சான்றளிக்கப்பட்ட விதைகளை உற்பத்தி செய்ய அரசு மாநில விதைப்பண்ணைகள்-எண்ணெய் வித்துப்பண்ணை வலுப்படுத்தப்படும். 1991-92 ஆம் ஆண்டில் 24.97 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில், அரசு விதைப்பண்ணைகள் மேலும் சிறந்த முறையில் இயங்கச் செய்ய முள் கம்பி வேலி அமைத்தல், வாய்க்கால்களுக்குச் கரையமைத்தல், கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுடன் எண்ணெய் வித்துப் பண்ணைகளில் 2 கிடங்குகளும், மாநில விதைப்பண்ணைகளில் 4 கிடங்குகளும் கட்டப்படும்.

நீர்பிரி முகடு மேம்பாடு :

திட்டக்காலம் முழுவதும், 54,000 எக்டேர் நிலப்பகுதி பயனுறும் வகையில், பாலாறு-வெள்ளாறு நீர்பிரி முகட்டில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டம் 1992-93 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

மனித வள மேம்பாட்டுத் திட்டங்கள் :

உழவர் பயிற்சி மையங்கள் :

உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக நமது மாநிலத்தில் 2 உழவர் பயிற்சி மையங்கள் உள்ளன. கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், உதகமண்டலம் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக

ஏனைய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பயிற்சி மையம் உள்ளது. முன்பிருந்த மாவட்டங்களிலுள்ள உழவர் பயிற்சி மையங்கள் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள பயிற்சி மையங்களைக் கவனித்துக்கொள்கின்றன. உழவர் பயிற்சி மையங்கள் ஒவ்வொன்றும் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் 22 கிராம அடிப்படையிலான பயிற்சிகளையும் உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்காக 10 கிராம அடிப்படையிலான பயிற்சிகளையும் 110 நேரிட விளக்கப் பயிற்சி-இடைநிலை கட்புல விளக்கங்களையும் நடத்துகிறது. இவற்றுடன், உழவர் பயிற்சி மையங்கள் மாதாந்திர பண்ணைச் செய்திக் கடிதங்கள் மூலமாகவும் தகவல் பலகைகளில் தொழில்நுட்பத் தகவல்கள் வெளியிடுதல், வானொலி பண்ணைச் செய்திகள், ஒலி பரப்புதல் மூலமாகவும், உழவர் விழா உழவர் சுற்றுலா முதலியவை நடத்துவதன் மூலமாகவும் உழவர்களுக்கு விளக்கமளிக்கப்படுகிறது. உழவர் பயிற்சி மையங்கள் ஒவ்வொன்றிற்கும் தொலைகாட்சிப் பெட்டி, வீடியோ கேசெட் ரெக்கார்டர் (V.C.R.) விளம்பர வில்லைப்படக் கருவி (Slide projector) முதலியவை வழங்கப்பட்டுள்ளன. இவை உழவர் கல்வித் திட்டங்களில் பயிற்சிக்கான உபகரணங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இத்திட்டம், 1991-92 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட அதே முறையில் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்த கருதப்பட்டுள்ளது. 1991 டிசம்பர் திங்கள்வரையிலான திட்ட இலக்கு சாதனை குறித்த விவரங்களும், 1992-93 ஆம் ஆண்டிற்கான உத்தேச இலக்கு குறித்த விவரமும் வருமாறு :—

| | பயிற்சிகளின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| (1) | 1991-92 ஆம் ஆண்டு இலக்கு. (2) | 31-12-1991 வரை சாதனை. (3) | 1992-93 ஆம் ஆண்டு இலக்கு. (4) |
| 1. உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆண், பெண்களுக்கு கிராம அடிப்படையில் பயிற்சி. | 264 | 218 | 264 |
| 2. உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கு கிராம அடிப்படையில் பயிற்சி. | 120 | 109 | 120 |
| 3. நேரிட விளக்கப் பயிற்சி இடைநிலை கட்புல விளக்கம். | 1,380 | 1,028 | 1,320 |





**வேளாண்மைப் பள்ளிகள் :**

நம் மாநிலத்தில் 18 முதல் 30 வயது வரையுள்ளவர்களும் எட்டாம்வகுப்பு தேறியபின்னர் பள்ளிப்படிப்பை இடையில்விட்டு விட்டவர்களும் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுமான கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக 12 வேளாண்மைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. வேளாண் அறிவியல் முறைகளில் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கவும், வேளாண்மையைத் தங்கள் தொழிலாக மேற்கொள்வதற்கு இயலும் வகையிலும் பயிற்சியளிப்பதே இதன் நோக்கமாகும். இவ்வாறு பயிற்சி பெறும் இளைஞர் ஒவ்வொருவருக்கும், திங்களுக்கு 100 ரூபாய் வீதம் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. அவர்களுக்குப் பயிற்சி முடிவில் சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வேளாண்மைப் பள்ளியும் வருடம் ஒன்றிற்கு 25 நபர்களுக்குப் பயிற்சியளிக்கக்கூடிய திறன் கொண்டதாகும்.

1991-92 ஆம் ஆண்டில் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 300 பேர்களாகும். ஆனால் 293 பேர்கள் இவ்வகுப்புகளில் சேர்ந்துள்ளனர். 1992-93 ஆம் ஆண்டில் 300 மாணவர்களை சேர்த்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாநில அளவிலான பயிற்சி நிலையம், குடுமியான் மலை :**

துறையைச் சேர்ந்த விரிவாக்கப் பணியாளர்களான வேளாண் அலுவலர் (வேளாண்மை பாடத்தின் சிறப்பு வல்லுநர்), வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர், ஆகியோருக்கு பணியிடைப் பயிற்சியை குடுமியான் மலையிலுள்ள மாநில அளவிலான பயிற்சி நிலையம் வழங்கி வருகிறது. அத்துடன் புதிதாக பணிக்கமர்த்தப்பட்ட வேளாண்மை அலுவலர்களுக்குத் தொடக்கப் பயிற்சியும், உதவி உயர்வு பெற்ற உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு நினைவு கூர் பயிற்சியும் பரவலான அடிப்படையில் விரிவாக்கப்பணி குறித்து முக்கிய துறைகளில் சிறப்பு சிறு வகுப்புகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. 1991-92 ஆம் ஆண்டு 160 நபர்களுக்கு 4 மாத கால அளவு கொண்ட பயிற்சி வகுப்புகளை கரும்பு மேம்பாட்டு பணியாளர்களுக்காக 3 தொகுதிகளாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்ததன் மூலம் இப்பயிற்சி நிலையம் சர்க்கரைத் துறையின் தேவைகளையும் நிறைவு செய்தது.

குடுமியான்மலையில் உள்ள மாநில அளவிலான பயிற்சிநிலையத்தில் தற்போது நடத்தப்பட்டு வரும் பயிற்சித் திட்டங்களை மேலும் தொடர்வதுடன், தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித்

திட்டத்தின் கீழ் உயர் நடுத்தர நிலையில் உள்ள துறை அதிகாரிகளுக்கு அதாவது இணை வேளாண்மை இயக்குநர்கள், துணை வேளாண்மை இயக்குநர்கள், உதவி வேளாண்மை இயக்குநர்கள் ஆகியோருக்கு பயனளிக்குமாறு விரிவாக்க வேளாண்மை பயிற்சி வகுப்புகளை நடத்தும் வகையில் ஒரு புதிய பல்கலைக் கழக அறிவியல் பிரிவினை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் 1991 டிசம்பர் மாதம் வரையிலான சாதனைகள் மற்றும் 1992-93 ஆம் ஆண்டுக்கானத் திட்டங்கள் ஆகியவை பின்வருமாறு :—

| | 1991-92 ஆம் ஆண்டு பயிற்சித் திட்டத்திற்கு அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை. | பயிற்சி பெற்றோரின் எண்ணிக்கை. 1991 டிசம்பர் வரையிலான சாதனை. | பயிற்சித் திட்டத்திற்கு அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு நினைவு கூர் பயிற்சி. | 55 | அடுத்த ஆண்டிற்குத் தள்ளி வைக்கப்பட்டது. | 50 |
| 2. வேளாண்மை அலுவலர்களுக்கு தொடக்கப் பயிற்சி. | 50 | ஷை | 50 |
| 3. சிறப்பு சிறு வகுப்புகள் : வேளாண்மை அலுவலர் | 1,400 | 724 | 1,750 |
| உதவி வேளாண்மை அலுவலர். | 2,000 | 1,215 | 1,750 |
| 4. உயர் நடுத்தர நிலை அதிகாரிகளுக்கான வேளாண்மை வகுப்புகள். | .. | .. | 200 |





## பிற நடவடிக்கைகள்.

**1. மண்வள ஆய்வு பரிசோதனைக் கூடங்கள் :**

வேளாண்மை நிலங்களில் இருந்து சேகரிக்கப்படும் மண் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யும் நோக்கத்துடன் 15 மண்வள ஆய்வுப் பரிசோதனைக் கூடங்களும், 16 மண்வள ஆய்வு நடமாடும் பரிசோதனைக் கூடங்களும் துறையிடம் உள்ளன. மண்வளத் தரத்தின் அடிப்படையில் சில உரங்களை பயன்படுத்துமாறு உழவர்களுக்குப் பரிந்துரை செய்வதும் அதன் நோக்கமாகும். மேலும், குறைவான வளமுடைய நிலங்களை அவற்றின் குறைகளை நீக்கும் வகையில் தகுந்த நிலச்சீர்த்திருத்த முறை பற்றி ஆலோசனைகள் வழங்குவதும் பாசனம் செய்யும் நீரின் பாசனத்துக்குகந்த தன்மையினை ஆய்வு செய்தலும் மண்வள ஆய்வுப் பரிசோதனைக் கூடங்களின் பணிகளாகும். அவை மட்டுமல்லாது, கிராம அளவு உரங்கள், பரிந்துரைகள் பற்றி கருத்து தெரிவிக்கும் கிராம அளவு செழுமைக் குறியீடு தயாரிப்பதிலும் மண்வள ஆய்வுப் பரிசோதனைக் கூடங்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. மண்வள ஆய்வுப் பரிசோதனைக் கூடங்கள் மண்வள ஆய்வு நடமாடும் பரிசோதனைக் கூடங்கள ஆகியவற்றின் மொத்த ஆண்டுத் திறன் முறையே 7.08 இலட்சம், 2.70 இலட்சம் மண் மாதிரிகளாகும்.

1991-92 ஆம் ஆண்டில் அடைநத வளர்ச்சி பற்றிய விவரங்கள் மற்றும் 1992-93 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் ஆகியவை வருமாறு :

| | மாதிரிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) 1991-92 | | 1992-93 |
|---|---|---|---|
| | இலக்கு. | 1991 டிசம்பர் வரை எய்திய சோதனை. | திட்டம். |
| (1) | (2) | (3) | (4) |
| 1. மண்வள ஆய்வு பரிசோதனைக் கூடங்கள். | 7.08 | 5.30 | 7.08 |
| 2. மண்வள ஆய்வு நடமாடும் பரிசோதனைக் கூடங்கள். | 2.70 | 2.00 | 2.70 |
| மொத்தம் .. | 9.78 | 5.30 | 9.78 |

2. தரக் கட்டுப்பாடு :—

(அ) பயிர்ப்பூச்சிக்கொல்லி ஆய்வு பரிசோதனைக் கூடங்கள் :

ஆண்டொன்றுக்கு 16,200 மாதிரிகளை ஆய்வு செய்யும் திறன் கொண்ட 9 பயிர்ப்பூச்சிக் கொல்லி ஆய்வுக் கூடங்கள் தற்போது இயங்கி வருகின்றன. 1991-92 ஆம் ஆண்டில் 1991 டிசம்பர் மாதம் வரை ஆய்வு செய்யப்பட்ட 12,274 மாதிரிகளில் 154 மாதிரிகள் தரம் குறைந்தவையாக இருந்தன. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

(ஆ) இரசாயன உர ஆய்வுக் கூடங்கள் :

ஆண்டொன்றுக்கு 11,000 மாதிரிகளை ஆய்வு செய்யும் திறன் கொண்ட 6 இரசாயன உர ஆய்வுக் கூடங்கள் தற்போது இயங்கி வருகின்றன. 1991 ஆம் ஆண்டு டிசம்பர் வரை ஆய்வு செய்யப்பட்ட 8,380 மாதிரிகளில் 493 மாதிரிகள் தரம் குறைந்தவை எனக் கண்டறியப்பட்டன. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1992-93லும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

(இ) நுண்ணுயிர் உரங்கள் :

நுண்ணுயிர் உரங்கள் பயிர்களுக்கு மலிவான விலையில் சிறந்த நைட்ரஜன் சத்து சேர்ப்பு ஆதாரம் ஆக விளங்குகின்றன. உழவர்கள் இரசாயன உரங்களை உபயோகிப்பதுடன் நீலம் பச்சைப்பாசி அஜோஸ்பைரில்லம், அசோல்லா, ரைசோபியம் போன்ற நுண் உரங்களை உபயோகிக்க ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். நுண்ணுயிர் உரங்களை தேவை அதிகரிப்பதுடன் உழவர்களும் இத்திட்டத்தினை மிகவும் நல்ல முறையில் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது 20 நீலப்பச்சைப் பாசி மையங்களில் நீலப்பச்சைப் பாசி பெருக்கப்பட்டு வருகின்றது. 1991-92 ஆம் ஆண்டின் இலக்கான 260 மெட்ரிக்டன்னில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் வரை 247 மெட்ரிக்டன் நீலப்பச்சைப் பாசி இனாக்குலம் (Inoculam) உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக உழவர்களுக்கு அஜோஸ்பைரில்லமும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. 1991-92 ஆம் ஆண்டில் விநியோகிக்க உத்தேசிக்கப்பட்ட



இலக்கான 12 இலட்சம் பொட்டலங்களில், 1991 டிசம்பர் வரை 10,05 இலட்சம் பொட்டலங்களும், விநியோகிக்க உத்தேசிக்கப்பட்ட இலக்கான 8 இலட்சம் பொட்டலங்களில், 6.87 இலட்சம் ரைசோபியம் கலவை (R.C.) பொட்டலங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடலூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றிலும் 10 இலட்சம் பொட்டலங்கள் தயாரிக்கக்கூடிய திறன் கொண்ட இரு நுண்ணுயிர் உரத் தயாரிப்பு மையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. நுண்ணுயிர் உரங்களின் தேவை அதிகரித்து வருவதைக் கருதி அரசு ஏற்கனவே, சேலம், குடுமியான்மலை ஆகிய இடங்களில் மேலும் இரு தயாரிப்பு மையங்களை அமைக்க ஒப்புதலளித்துள்ளது. தற்போது அவ்விரு மையங்களிலும் இயந்திரங்கள் நிறுவும் பணியும், கருவிகள் வாங்கும் பணியும் நடைபெற்று வருவதுடன், அப்பணிகள் முடிவுற்றவுடனே உற்பத்தி தொடங்கி விடும்.

அதுமட்டுமல்லாது, கடலூரிலுள்ள பிரிவின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் பொட்டலங்களிலிருந்து 15 இலட்சம் பொட்டலங்களாக உயர்த்துவதற்காக ரூ.13.50 இலட்சம் செலவில் கூடுதல் எந்திரங்கள், கருவிகள் ஆகியவை நிறுவி உற்பந்தித் திறன் வலுப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு 1992-93 ஆம் ஆண்டில் உழவர்களுக்கு கிடைக்கும் வகையில், இந்த நுண்ணுயிர் உரத் தயாரிப்பு மையங்களில் 45 இலட்சம் நுண்ணுயிர் உர பொட்டலங்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மண்வள அளவைப் பணிகள்-நிலப் பயன்பாடு அமைப்பு :

தகுந்த வேளாண் பயிரிடுமுறை திறமையான உர மேலாண்மை மற்றும் இறுதியாக உற்பத்தி உயர்த்துதலுக்கான மிகவும் பொருத்தமான பலவகையான சிறப்புத் திட்டம் ஆகியவற்றை முடிவு செய்வதற்காக மண் வள ஆதாரங்கள் கொண்ட பட்டியலை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மண்வள அளவை-நிலப் பயன்பாடு அமைப்பின் பிரிவுகள் கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் இயங்கி வருகின்றன. அவை மண்வள அளவை குறித்த முன்னோடி ஆய்வுப் பணிகளை நடத்தி விட்டன. தமிழ்நாட்டிலுள்ள எல்லா 161 வட்டங்களிலும் மண்வள அளவைப்பணி இதுகாறும் முடிக்கப்பட்டதுடன் மண்வள வரை படங்களும் தயாரிக்கப்பட்டுவிட்டன.

1991-92 ஆம் ஆண்டின் நில அளவை இலக்கான 14.40 இலட்சம் எக்டேரில், 1991 டிசம்பர் மாதம் வரை 10.54 இலட்சம் எக்டேர் பரப்பு நில அளவை செய்யப்பட்டு விட்டது. 1992-93 ஆம் ஆண்டிலும் இத்திட்டமானது நில அளவை இலக்கான 14.40 இலட்சம் எக்டேர் வரை தொடரும் படும்.

[1992 ஏப்ரல் 21

**நுண் ஊட்டச்சத்து உரக்கலவை :**

உழவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பெரு மளவு பயிர்களுக்குத் தேவையான நுண் ஊட்டச் சத்து உரக் கலவைகள் குடுமியான்மலை மையத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. 1991-92 ஆம் ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப் பட்ட 1,000 மெட்ரிக் டன்னில் 127 மெட்ரிக்டன் உற்பத்தி செய்யப்பட்டது. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடரப்படுவதுடன், 1,000 மெட்ரிக் டன் அளவு நுண் ஊட்டச் சத்து உரக்கலவை உற்பத்தி செய்யப்படும்.

**உப்பு, காரத் தன்மையிலிருந்து நிலங்களை மீட்கும் திட்டம்.**

செங்கற்பட்டு எம்.ஜி. ஆர். மாவட்டத்தில், மண்வளம் மேம் பட்ட உற்பத்தித் திறனை அடையச் செய்யும் நோக்கத்துடன் உப்பு, காரத்தன்மையிலிருந்து நிலச் சீர்திருத்தத் திட்டமானது செயல் பாட்டில் இருந்து வருகிறது. 1991-92 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவிருந்த 800 எக்டேரில், 1991 ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலுள்ள காலத்திற்கு 476 எக்டேர் பரப்பு செயல்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

**காவேரியாற்று கழிமுகப் பகுதி உழவர்க்கு உற்பத்தி ஊக்கத் தொகை.**

ஏகபோகக் கொள்முதல் இத்திட்டத்தின் கீழ் 1991-92 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுகர்பொருள வாணிபக் கழகத்திற்கு, காவேரியாற்று கழிமுகப் பகுதி உழவர்கள் வழங்கிய நெல்லுக்கும் குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் வீதம் ரொக்க ஊக்கத் தொகை வழங்கியதில் ரூ. 36.66 கோடி செலவிடப்பட்டது. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடரக் கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

**பயிர் விளைச்சல் போட்டி :**

1990-91 ஆம் ஆண்டு வரை பத்து பயிர்களை உள்ளடக்கிய பயிர் விளைச்சல் போட்டித் திட்டம் நடைமுறையில் இருந்து வந்தது.

முற்போக்கு உழவர்களை மேலும் ஊக்குவிப்பதற்காகவும், பயிர் விளைச்சல் போட்டியில் பங்கெடுத்துக் கொள்வதற்காக எண்ணற்ற உழவர்களைக் கவரும் பொருட்டு, எல்லாவற்றிற்கும் மேலாக உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்காக உழவ சமுதாயத்தினரிடையே புத்துணர்வை ஏற்படுத்தவும் 1991-92 ஆம் ஆண்டில் பரிசுத் தொகை கீழ்க்கண்டவாறு அதிகப் படுத்தப்பட்டது.



1992 ஏப்ரல் 21]

மாநில அளவு :—

| | | | |
|---|---|---|---|
| நெல் | .. .. | முதல் பரிசு .. | 50,000 |
| | | இரண்டாம் பரிசு .. | 25,000 |
| இதரப் பயிர்கள் | .. | முதல் பரிசு .. | 5,000 |
| | | இரண்டாம் பரிசு .. | 3,000 |

மாவட்ட அளவு :—

| | | | |
|---|---|---|---|
| நெல் | .. .. | முதல் பரிசு .. | 5,000 |
| | | இரண்டாம் பரிசு .. | 3,000 |
| இதர பயிர்கள் | .. | முதல் பரிசு .. | 2,000 |
| | | இரண்டாம் பரிசு .. | 1,000 |

போட்டிக்கான பதிவுக் கட்டணம் கீழே அளிக்கப்பட்டுள்ளது :

ரூபாய்.

மாநில அளவிலான போட்டி :—

| | |
|---|---|
| நெல் .. | 50 |
| இதரப் பயிர்கள் :— .. | 20 |

மாவட்ட அளவிலான போட்டி :—

| | |
|---|---|
| நெல் .. | 10 |
| இதரப் பயிர்கள் .. | 5 |

1991-92 ஆம் ஆண்டு மாநில அளவிலான போட்டிக்கு 1,017 உழவர்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை 358 உழவர்கள் பதிவு செய்திருந்தனர். அதே போல, மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு 3,165 உழவர்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 1991 டிசம்பர் வரை 1,231 உழவர்கள் பதிவு செய்திருந்தனர்.

**இயற்கைச் சீற்றம், வெள்ள நிவாரணம் :**

நாகப்பட்டினம் காயிதே மில்லத், தஞ்சாவூர், தென்னாற் காடு, செங்கை எம். ஜி. ஆர், திருச்சி மற்றும் வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டங்களில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பெய்த எதிர்பாராத பெரு மழையினாலும், வெள்ளத் தினாலும் வேளாண் பயிர்களுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது.

முழுதும் சேதமடைந்த பகுதிகளின் பரப்பு 0.96 இலட்சம் ஹெக்டேர் எனவும் பகுதியளவு சேதமடைந்த பகுதிகளின் பரப்பு 1.28 இலட்சம் எக்டேர் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன இனங்களில் கிட்டத்தட்ட பாதி பரப்புக்கு சிறு நில/சொற்ப நில உழவர்களே உரிமையாளர்களாவர். வெள்ளம் பாதித்த பகுதிகளைச் சேர்ந்த இந்த உழவர்களுக்கு நிவாரண நடவடிக்கையாக விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், துத்தநாக சல்பேட் இரசாயன உரங்கள் ஆகியவற்றை வழங்குவதற்காக ரூ. 9.336 கோடி வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவை கீழ்க்கண்ட விலை வீதங்களின்படி அளிக்கப்படும் :–

| விபரம். (1) | பரப்பு ஹெக்டேரில். (2) | மானியம் ஹெக்டேர் ஒன்றுக்கு. (3) | மொத்த ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்). (4) |
|---|---|---|---|
| 1. (அ) சிறு-குறு உழவர்களுக்குச் சொந்தமான முழுதும் பாதிக்கப்பட்ட பகுதிகள். | 48,0000 | 845 | 4,056 |
| (ஆ) இதர உழவர்களுக்குச் சொந்தமான முழுதும் பாதிக்கப்பட்ட பகுதிகள். | 48,000 | 500 | 2,400 |
| 2. (அ) சிறு-குறு உழவர்களுக்குச் சொந்தமான பகுதியளவு பாதிக்கப்பட்ட பகுதிகள். | 64,000 | 250 | 1,600 |
| (ஆ) இதர உழவர்களுக்குச் சொந்தமான பகுதியளவு பாதிக்கப்பட்ட பகுதிகள். | 64,000 | 200 | 1,280 |
| மொத்தம் .. .. | | | 9,336 |

1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை ரூ. 5.20 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.



தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் :

தேசிய பால் வள மேம்பாட்டு வாரியத்தின் தாவர எண்ணெய் திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்தும் அமைப்பாக தமிழ் நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் 1— 1—1981 ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்டது.

எண்ணெய் மற்றும் அதன் துணைப் பொருட்களை உற்பத்தி செய்தல், கொள்முதல் செய்தன, செயல்முறைப்படுத்துதல் விற்பனை செய்தல் ஆகிய பணிகளை திறம்பட ஒருங்கிணைப்பதன் மூலம் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு உகந்த பணிகளை மேற்கொள்வதே, இந்த இணையத்தின் (டான்காஃப்) முக்கிய நோக்கமாகும்.

இந்த இணையத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ஐந்து கோடி ரூபாய் ஆகும். இணையத்திட்டப் பகுதியிலுள்ள பதிவு செய்யப்பட்ட எண்ணெய் வித்துக்கள் கூட்டுறவு உற்பத்தியாளர் தொடக்கச் சங்கங்களும், தேசிய பால்வள மேம்பாட்டு வாரியமும், இந்த இணையத்தின் உறுப்பினர்களாவர். இந்த இணையத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 159.76 இலட்சம் ரூபாய் ஆகும். இத்தொகையில் 98.88 இலடசம் ரூபாயை தேசிய பால் வள மேம்பாட்டு வாரியம், எஞ்சிய 60.88 இலட்சம் ரூபாயை எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் செலுத்தியுள்ளன.

கிராமம் (கிராமங்கள்) அளவிலான எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள், மாநில அளவிலான தலைமை இணையமாக இரண்டு நிலைகளின் கீழ், அமெரிக்க நாட்டு கூட்டுறவுச் சங்கத்தினால் இத்திட்டத்திற்கு 15.61 கோடி ரூபாய் அளவிற்கு நிதி வழங்கப்படுகிறது. இதில் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கு தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்திடமிருந்து 8.42 கோடி ரூபாய் அதாவது (54 சதவீதம்) கடனாகவும், 7.19 கோடி ரூபாய் (அதாவது 46 சதவீதம்) மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. எண்ணெய்வித்துக்கள் கொள்முதல் செய்யும் பொருட்டு திட்ட ஒதுக்கீட்டுக் தொகைக்கும், அதிகமாகத் தேவைப்படுகிற தொகையை நியாயமான வட்டி வீதத்தில் குறுகிய காலக் கடனாக, இந்த இணையத்திற்கு தேசிய பால்வள மேம்பாடு வாரியம் வழங்குகின்றது. மேம்பாட்டுப் பணிகளுக்காக இந்த இணையம் இந்நாள் வரை 10.21 கோடி ரூபாயைப் பெற்றுள்ளது.

[1992 ஏப்ரல் 21

தற்போது தொடக்க நிலையாக திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டங்களிலும் 9வட்டங்களிலும் தென் ஆற்காடு மாவட்டத்தில் 8 வட்டங்களிலும் மற்றும் செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் 3 வட்டங்களிலும் ஆக மொத்தம் 20 வட்டங்களில் நிலக்கடலை மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது. இந்த இணையம் 1,492 கிராமங்களை உள்ளடக்கிய 335 கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இச்சங்கங்களில் மொத்தம் 81,942 பேர் பதிவு உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். 30-11-1991 ஆம் நாள் நிலவரப்படி, இந்த இணையம் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் 1.33 இலட்சம் ஹெக்டேர் பகுதியைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவந்துள்ளது.

விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருட்களை தமது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர். நிலக்கடலை உடைப்புத் திறன், ஈரப்பதம் மற்றும் எடுக்கப்படும் எண்ணெய் அளவு ஆகியவற்றின் அடிப்படையிலேயே இதன் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. அனைத்து பருவங்களிலும் விவசாயிகளிடமிருந்தும் எண்ணெய் வித்துக்களைக் கொள்முதல் செய்ய இந்த இணையம் ஏற்பாடு செய்கிறது.

1-4-1991 முதல் 31-12-1991 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் இந்த இணையம் 10,448 டன் நிலக்கடலை நெற்றுக்களையும், 1315 டன் நிலக்கடலை வித்துக்களையும் தங்களுடைய கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உறுப்பினர்களிடமிருந்து வாங்கியுள்ளது. ஒவ்வொரு பருவத்திலும் கொள்முதல் செய்யப்படும் மொத்த மதிப்பின் 1.5 சதவீதத் தொகை பணிக்கட்டணமாக இச்சங்கத்திற்கு வழங்கப்படுகிறது. சங்கங்களிடமிருந்து நிலக்கடலை நெற்றுக்களைக் கொள்முதல் செய்வதோடு ஒழுங்குமுறை அங்காடிக் குழுக்களிடமிருந்து நேரடியாக நிலக்கடலைப் பருப்புக்களையும் கொள்முதல் செய்துள்ளது. மேற்சொன்ன கால அளவில் திட்டப்பகுதியில் அமைந்துள்ள இந்த ஒழுங்குமுறை அங்காடிக் குழுக்களின் மூலம் 13,166 டன் நிலக்கடலைப் பருப்புக்கள் நெற்றுக்களாக வாங்கப்பட்டன.

இந்த இணையம் மேம்பட்ட சிறந்த விதைகளை உற்பத்தி செய்வதற்கும், இதன் கூட்டுறவுச் சங்க உழவர்கள் சங்கப் பணியாளர்கள் ஆகியோரின் பயிற்சித் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும் 102 எக்டேர் நிலப்பரப்பில் ரூ. 130 இலட்சம் செலவில், திட்டப்பகுதி உழவியல் மையம் பயிற்சி மையத்தை நெய்வேலியில் அமைத்துள்ளது. இம்மையம் மூல விதைகளை



1992 ஏப்ரல் 21]

உற்பத்தி செய்ய மத்திய அரசு (இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழு) அங்கீகாரம் அளித்துள்ளது. 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையிலான 1991-92 ஆம் ஆண்டுக் கால அளவில் 44 டன் மூல விதைகளையும், 34 டன் அடிப்படை விதைகளையும், திட்டப்பகுதி உழவியல் மையம் உற்பத்தி செய்துள்ளது. இம்மையத்தின் ஆண்டு தொடர் செலவிற்காக ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 20 இலட்சம் பால்வள மேம்பாட்டு வாரியம் வழங்கியது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (டான்பெட்) சொந்தமாகயிருந்த நாளொன்றுக்கு மொத்தம் 165 டன் நிலக்கடலைப் பருப்பிலிருந்து எண்ணெய் எடுக்கும் திறன் கொண்டு விருத்தாச்சலம் (VDM) திருவண்ணாமலை (TVM) ஆகிய இடங்களில் அமைந்துள்ளதுமான இரு செய்முறை தொழிற்பிரிவுகளை 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் கூட்டுறவு இணையம் வழங்கியுள்ளது. சீரமைத்து, நவீனப்படுத்தும் பணிகள் ரூ. 1,687.34 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது நாளது நிலவரப்படி (அ) இந்த இணையத்தில் உள்ள பலவேறு செய்முறை வசதிகள் குறித்த விவரம் வருமாறு :—

நாளொன்றுக்கு 230 டன் தோலுடன் கூடிய நிலக்கடலையிலிருந்து எண்ணெய் எடுக்கும் நிறுவு திறன் (இது 165 டன் நிலக்கடலைப் பருப்பிற்குச் சமமாகும்.) (ஆ) திருவண்ணாமலை தொழிற்பிரிவில் மட்டும் நாளொன்றுக்கு 10 டன் எண்ணெய் சுத்திகரிப்புத் திறன்.

(இ) ஒவ்வொரு தொழிற்பிரிவிலும் 40 டன் என்ற அளவில் நாளொன்றுக்கு 80 டன் பிண்ணாக்கு தயாரிக்கும் திறன் கொண்ட எண்ணெய் எடுக்கும் தொழிற் பிரிவுகள்.

1-4-1991 முதல் 31-12-1991 ஆம் நாள் வரையிலான கால அளவில் இந்த இரு தொழிற் பிரிவுகளும், 15,835 டன் நிலக்கடலைப் பருப்பிலிருந்து எண்ணெய் எடுத்துள்ளன. இதன் மூலம் 5,569 டன் எண்ணெயும் 169 டன் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயும், 10,005 டன் பிண்ணாக்கும் கரைசல் முறையில் 104 டன் எண்ணெயும் 1,290 டன எண்ணெய் எடுத்த பிண்ணாக்கும் உற்பத்தி செய்யப்பட்டது. மேலும் 7,600 டன் நிலக்கடலைப் பருப்பு வெளி நிறுவனங்களில உள்ள ஆலைகளிலிருந்து வாடகை அடிப்படையில் பிழியப்பட்டதன் மூலம் 2,888 டன் எண்ணெயும், 4,599 டன பிண்ணாக்கும் உற்பத்தி செய்யப்பட்டன.

[1992 ஏப்ரல் 21

இந்த இணையம் எண்ணெய் நிரப்பும் தொழில் பிரிவு ஒன்றை சென்னை கிண்டியில் அமைத்துள்ளது, 15 கிலோ டின்கள், 5 கிலோ கேன்கள், 1 கிலோ, ½ கிலோ பாலீதீன் புட்டிகள், பைகள் ஆகியவற்றில் நாளொன்றுக்கு 45 டன் எண்ணெய் நிரப்பும் திறனை இத் தொழில் பிரிவு கொண்டுள்ளது. இந்த இணையம் 'பியூர்நட்' (ஆலையில் பிழியப்பட்ட எண்ணெய்) ''வின்னர்'' (சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெய்) என்ற வணிகப் பெயர்களில் இருவகை எண்ணெய்களையும் அங்காடிகளில் விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது.

இந்த இணையம் 1-4-1991 முதல் 31-12-1991 வரையிலான கால அளவில் ஆலையில் பிழிந்தெடுத்த நிலக் கடலை எண்ணெய் 10,474 டன், வின்னர் (சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெய்) 231 டன், பிண்ணாக்கு 14,567டன் கரைசல் பிரிப்பு முறையில் எடுத்த எண்ணெய் 106 டன், எண்ணெய் எடுத்த பிண்ணாக்கு 2,355 டன் ஆகியவற்றை விற்பனை செய்துள்ளது. டான்காப் நிறுவனம் (TANCOF) 1988 ஜூன் திங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு பொது விநியோக முறையின் கீழ், மத்திய அரசு வழங்கும் இறக்குமதி செய்யப்பட்ட ஆர். பி. டி. (RBD) பாமாலின் எண்ணெயை பாலிதீன் பை களில் நிரப்பி, நுகர்வோருக்கு வழங்கும் பணியை மேற்கொண் டுள்ளது. மேற்சொன்ன பணி உரிய அளவுக்கு சிப்பம் செய்யும் வசதிகளை (பைகளில் நிரப்பும் பணிகள்) பயன்படுத்திக் கொள்ளவும் இந்நிறுவனத்தின் வருவாயை பெருக்கும் வகை யிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருவண்ணாமலையிலுள்ள தொழில் பிரிவில் நாளொன்றுக்கு 30 டன் எண்ணெய் நிரப்பும் வசதிகளை 'டான்காப்' ஏற்படுத்தியுள்ளது. மேலும், தென்பகுதி யிலுள்ள நுகர்வோரின் தேவைகளை நிறைவு செய்யும் வகை யில் இந்த இணையம் நாளொன்றுக்கு 30 டன் எண்ணெய் நிரப்பும் திறன் கொண்ட மற்றொரு தொழிற்பிரிவை மதுரை கப்பலூரில் நிறுவியுள்ளது. எண்ணெய் வித்துக்களின் சாகுபடி பரப்பை அதிகரிப்பதின் மூலம் எண்ணெய் வித்துக்கள் உற்பத் தியை அதிகரிப்பதும், ஹெக்டேர் ஒன்றுக்கான உற்பத்தித் திறன் அதிகரிப்பதும் டான்காப்'' நிறுவனத்தின் வளர்ச்சி நடவடிக்கைகளின் நோக்கமாகும். தரமான எண்ணெய் வித்துக் கள் கிடைக்கச் செய்தல், பல்வேறு செயல் முறை விளக்கங்கள் நடத்துதல், பயிற்சி அளித்தல், இடுபொருட்களுக்கும் ஏனைய வற்றிற்கும் வகை செய்தல் ஆகியவற்றின் மூலம் இதன் வளர்ச்சி, பணியாளர்களின் உதவியுடன், பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளால் இந்த நோக்கம் எய்தப்படுகிறது.



1992 ஏப்ரல் 21]

### தோட்டக்கலை மற்றும் மலைத் தோட்டப்பயிர்கள் துறை.

தமிழ்நாட்டில் பழங்கள், காய்கறிகள், வணிகப் பயிர்கள் நறுமணப் பொருட்கள் போன்ற தோட்டக்கலை பயிர்களை யும் சாகுபடி செய்வதற்குப் பொருத்தமான தட்பவெட்ப நிலை அமைந்துள்ளது. தோட்டப் பயிர்களாகிய காப்பி, தேயிலை மற்றும் நறுமணப் பொருட்களையும் இவை நாட் டிற்குப் பெருமளவு அந்நிய செலவாணியை ஈட்டித் தருகின்றன.

தமிழ்நாட்டில் பயிர் சாகுபடி செய்யப்படும் மொத்தப் பரப்பளவு 68.2 இலட்சம் எக்டேரில் 30.4 இலட்சம் எக்டேர் (அதாவது 44 சதவீதம் மட்டும்) பாசன வசதி கொண்டுள்ளது. மீதமுள்ள 37.8 இலட்சம் எக்டேர் நிலம் (அதாவது 56 சத வீதம் நிலம்), வானம் பார்த்த பூமியாக இருக்கின்றன. சமீப காலங்களில் பருவமழை பொய்த்ததன் காரணமாக அடிக்கடி வறட்சி ஏற்பட்டது. இதனால் ஆண்டு பயிர்களான தானியங் கள் பயிறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்து பயிர்கள் சாகு படி செய்வதில் ஒரு சூதாட்டம் போலாகிவிட்டது. ஏனெனில் ஆண்டு பயிர்கள் எளிதில் வறட்சியால் பாதிக்கப்பட்டு மகசூல் குறைந்து விவசாயிகளுக்கு நட்டத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால் தோட்டக்கலைப் பயிர்கள், பழமரங்கள் வறட்சியால் எளிதில் பாதிக்கப்படாததோடு, விவசாயிகளுக்கு அதிக வருமானத்தை அளிக்கின்றன. புன்செய் நிலப்பகுதிகளில், தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி செய்வது மிகச் சிறந்த தாகும். என்வே, நம் மாநிலத்தில் பல்வேறு தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துகையில், புன்செய் நிலப் பகுதிகளில் தோட்டக் கலைப் பயிர்களை சாகுபடி செய்ய ஊக்குவிக்கிறது. தோட்டக்கலைப் பயிர்கள், விவசாயி களுக்கு நிரந்தர வருமானத்தை அளிப்பதுடன் கிராமப் பகுதி களில் வேளாண் சார்பு தொழிற்சாலைகள் ஏற்படுத்தவும் சுற்றுச் சூழலை பேணிப்பாதுகாக்கவும் பெரிதும் உதவுகின்றன.

நல்ல தரமான விதைகள் பயிரிடு பொருட்கள் ஆகியவற்றை உரிய காலத்தில் வழங்குவதன் வாயிலாகவும் அறிவியல் முறை யிலான சாகுபடி குறித்த தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குவதன் வாயிலாகவும் மேலும் அதிகமான பகுதிகளில், தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்வதன் மூலமும் தோட்டக் கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து விளைச்சலைப் பெருக்குவதே தோட்டக்கலை மலைத்தோட்டப் பயிர்கள் துறையின் நோக்கமாகும்.

1991-92 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பல்வேறு தோட்டக் கலைப் பயிர்களின் விளைப் பொருட்கள் உற்பத்தி அளவும் விளை

[1992 ஏப்ரல 21

பொருள் உற்பத்தி, இலக்கு மற்றும் சாதனை விவரங்களும் 1992-93 ஆம் ஆண்டிற்கான உற்பத்தித் திட்ட இலக்கு விபரங் களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| தொடர் எண். | இனம் பயிர். | இலக்கு (இலட்சம் மெ. டன்கள்). | 1991-92 இலட்சம் மெ. டன்னில் திட்ட சாதனை டிசம்பர் 1991 முடிய. | 1992-93 திட்ட இலக்கு (இலட்சம் மெ. டன்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பழங்கள் .. | 31.50 | 25.26 | 32.05 |
| 2 | காய்கறிகள் .. | 35.20 | 31.22 | 35.90 |
| 3 | நறுமணப் பொருட்கள். | 2.61 | 1.46 | 2.65 |
| 4 | மலைத் தோட்டப் பயிர்கள். .. | 2.02 | 1.85 | 2.06 |
| 5 | பூக்கள் .. | 0.47 | 0.46 | 0.48 |
| | மொத்தம் .. | 71.80 | 60.25 | 73.14 |

தோட்டக் கலை - மலைப் பயிர்கள் துறை, கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

1. ஒருங்கிணைந்த தோட்டக் கலை மேம்பாட்டுத திட்டம் :

இது மாநில அரசுத் திட்டமாகும், இத்திட்டம் தமிழ்நாடு மாநிலச் சமவெளி பகுதிகளில் செயல்படுத்தப் படுகிறது. இத் திட்டத்தின் கீழ் நிரந்தர தோட்டப் பயிர்களாகிய பழமரங்கள் வாசனைத் திரவிய செடிகள் மற்றும் மலைத் தோட்டப் பயிர் களாகிய காப்பி, முந்திரி, போன்ற பயிர்களை அதிகப் பரப்பில் பயிரிடுவதற்கு சிறிய மற்றும் சொற்ப நில விவசாயிகளுக்கு



1992 ஏப்ரல் 21]

50 சத மானிய விலையில் செடிகள் வழங்கப்படுகின்றன. சான்றளிக்கப்பட்ட உயர் ரக காய்கறி விதைகளும், விவசாயி களுக்கு வழங்கப் படுகின்றன. 1991-92 டிசம்பர் மாதம் இறுதி வரை, இத்திட்டத்தின்கீழ் 5,213 எக்டேரில் நிரந்தர தோட்டக் கலைப் பயிர்களும் 7,079 எக்டேரில் காய்கறிகளும் பயிரிடப் பட்டு, இத்திட்டத்தின் மூலம் 11,236 விவசாயிகள் பயனடைந் துள்ளனர். இத்திட்டத்திற்கு ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ. 73.28 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. ரூ. 130 இலட்சம் மூலதனச் செலவில் 1992-93 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 7,500 எக்டேர் பரப்பில் நிரந்தர தோட்டக் கலைப்பயிர்களையும், 7,500 ஏக்கர் எக்டேர் பரப்பில் காய்கறிப் பயிர்களையும் சாகுபடி செய்வதென இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

2. மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் :

இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இத் திட்டம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந் துள்ள கோயம்புத்தூர், திண்டுக்கல்— அண்ணா, மதுரை, காம ராஜர், நெல்லை-கட்டபொம்மன், கன்னியாகுமரி மாவட்டங் களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மலைப் பகுதி களில் மண் அரிப்பைத் தடுப்பதற்கும், மண்வளத்தைப் பாது காப்பதற்கும் உயிரின வாழ்க்கைச் சூழலை மேம்படுத்தவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்துறையின் மூலம் சிறு விவசாயிகள், ஓரளவு நிலம் வைத்திருக்கும் குறு விவசாயி களுக்கு 50 சத மானிய விலையில் தரமான பழச் செடிகள் வழங்கப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டில் 2,100 எக்டேர் பரப்பளவில் தோட்டப் பயிர்சள் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப் பட்டதில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் 1,850 எக்டேரில் தோட்டப் பயிர் பயிரிடப்பட்டுள்ளது. இத்திட்டத் தின் மூலம் இதுவரை 1,632 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கு 1991-92 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 81.01 இலட்சத்தில், 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதி வரை ரூ. 33.10 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. மேலும் மேற்கு மலைத் தொடர் பகுதியில் உள்ள அரசுத் தோட்டக்கலை பண்ணைகளில் பழச் செடிகள், காய்கறி விதைகள், உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 29 இலட்சம் செலவில் இப்பண்ணைகளிலுள்ள கிணறுகளை ஆழப்படுத்தி, பாசன வசதியைப் பெருக்குவதற்கும் பாதுகாப்பு வேலி அமைக்கவும் பணி கூடங்கள் கட்டுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1992-93 ஆம் ஆண்டிலும்

100 இலட்சம் செலவில், இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டில் பெரியார், நெல்லை–கட்டபொம்மன் மாவட்டங்களிலும் நீட்டிக்கப்படும்.

3. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இத்திட்டம் தமிழ்நாட்டில் வாழும் பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டம் சேலம் மாவட்டத்தில் கொல்லி மலை, சேர்வராயன் மலை, அறுநூத்தமலை, பச்சை மலையிலும், தர்மபுரி மாவட்டத்தில் சித்தேரி மலைப்பகுதியிலும், வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் ஜவ்வாது, ஏலகிரி மலையிலும், திருச்சி மாவட்டத்தில் பச்சை மலையிலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கல்வராயன் மலையிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் பழங்குடியினர் ஒரு ஏக்கர் பரப்பளவில் பழத்தோட்டம் அமைப்பதற்கு இலவசமாக பழச் செடிகளும், இதர இடுபொருட்களும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 2,600 ஏக்கர் பரப்பளவில் பழச் செடிகள் நடப்பட்டு முழு சாதனை எய்தப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 74 இலட்சத்தில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் ரூ. 63.38 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் ரூ. 81.37 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

4. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். நீலகிரி மலைப்பகுதியில் மண் அரிப்பை தடுக்கவும் மலைப் பகுதிகளில் உயிரின வாழ்க்கைச் சூழல் அமைப்பு முறையை மேம்படுத்தும் நோக்கத்துடனும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் மலைச் சரிவுகளில் ஆண்டுப் பயிர்களைத் தவிர்த்து, பல்லாண்டுப் பயிர்களான தேயிலை, பழமரங்கள் ஏனைய பயனுள்ள மரச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. இத்திட்டத்தில் ஆதி திராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த சிறு உழவர்களுக்கும், ஓரளவு நிலம் வைத்துள்ள குறு உழவர்களுக்கும், 50 சதவீத மானிய விலையில் உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்குவதோடு, இவர்களுக்கு 75 சதவீத மானிய விலையில், தேயிலை பதியன்கள் பழச் செடிகள், குறைந்த செலவில் வளர்க்கும் மரங்கள் முதலியனவும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம்





ஆண்டுதோறும் சுமார் 500 எக்டேர் பரப்பில் கூடுதலாக தேயிலைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டு, இத்தோட்டங்களில் பழச் செடிகளும் வாசனை திரவியப் பயிர்கள், சில்வர், ஓக் போன்ற மரச் செடிகளும் குறைந்த செலவில் வளர்க்கப்படும் ஏனைய மரங்களும், பல அடுக்குப் பயிர் சாகுபடி முறையில் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 148.00 இலட்சம் செலவில் 500 எக்டேர் நிலப்பரப்பில் தேயிலைத் தோட்டங்கள் அமைக்கப்பட வேண்டும் என இலக்கிடப்பட்டிருக்க 559 எக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டன. ஆனால், 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் இதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 226.38 இலட்சம் மட்டுமேயாகும். இத்திட்டம், 1992-93 ஆம் ஆண்டிலும், சுமார் 240 இலட்சம் செலவில் தொடர்ந்து மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இதன் திட்ட இலக்கு 500 எக்டேர் பரப்பாகும். வரும் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் கூடுதலாக பழமரங்களை வளர்ப்பதற்கும், காய்கறி, மலர்கள உற்பத்தியை அதிகரிக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5. ஒருங்கிணைந்த முந்திரி மேம்பாட்டுத் திட்டம் .

இது மத்திய அரசின் 100 சதவித உதவி பெறும் திட்டமாகும். தமிழ்நாட்டில் முந்திரி உற்பத்தியை அதிகரித்து அந்நியச் செலாவணியை பெருக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகளுக்கு, உயர் விளைச்சல் தரும் முந்திரி ரகச் செடிகள் 75 சத மானிய விலையிலும் முந்திரி பயிரைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் 100 சத மானிய விலையிலும், விநியோகிக்கப்பட்டு பயிர் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உயர் விளைச்சல் தரும் முந்திரிப் பயிரை 350 எக்டேரில் பயிரிடுதல், 1,780 எக்டேரில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான இத்திட்டம் 17.64 இலட்சம் ரூபாய் செலவில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

6. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் :

இத்திட்டம் வறட்சிக்கு இலக்காகும் மாவட்டங்களாகிய தருமபுரி, காமராசர், பசும்பொன் தேவர், இராமநாதபுரம், வ. உ. சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மழை அளவு மிகக் குறைவாயுள்ள ஆண்டுப் பயிர்களைச் சாகுபடி செய்வதில்

இடர்பாடு உள்ள பகுதிகளில் வறட்சியைத் தாங்கக் கூடிய பழப் பயிர்கள் சாகுபடி செய்ய, இத்திட்டம் வகை செய்கிறது. இத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு 50 சதவீதம் உதவித் தொகை யில் பழச் செடிகள் வழங்கப்படுகின்றன. மேலும் செடி களுக்குப் பக்கத்தில் பானைகளைப் புதைத்து அதில் தண்ணீர் ஊற்றி, அந்நீர் சிறிது சிறிதாக செடியின் வேரில் கிடைக்கும் படி செய்து, அதன்மூலம் ஆண்டின் வறட்சிக் காலத்தில் செடி களை வறட்சியிலிருந்து பாதுகாக்க உழவர்களுக்குப் பானை கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 2,037 எக்டேரில் பழ மரங்கள் வளர்க்கப்படவேண்டுமென்றும் அப்பரப்பை பிட்சர் (Pitcher Irrigation) பாசன முறையின் கீழ் கொண்டுவர வேண்டும் என்றும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, 1991-92 ஆம் ஆண்டில் 1,414 எக்டேர் பரப்பில் பழமரங்கள் வளர்க்கப்பட்டு அவை (Pitcher Irrigation) பாசன முறை யின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு 36.44 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டிருக்க, 1991 டிசம்பர் திங்கள் வரை 19.34 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டுள்ளது. இத்திட்டம் ரூ. 30.00 இலட்சம் நிதியொதுக் கத்துடன் 1992-93 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

7. பயிற்சி வழி தொடர்புத் திட்டம் :

இத் திட்டம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தும் திட்டமாகும். வேளாண்மைத்துறை செயல்படுத்தும் பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தைப் போலவே, இத்திட்டம் நீலகிரி மாவட்டத்திலும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் கொடைக் கானல் வட்டத்திலும், செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் நோக்கம் மலைப் பகுதிகளில் பயிர் செய்யப்படு கின்ற உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், காலிபிளவர், காரட் போன்ற மலையில் பயிராகும் காய்கறிகள், தேயிலை, காப்பி, கோதுமை, நெல், இஞ்சி போன்ற முக்கிய பயிர்களின் உற்பத்தி அளவை அதிகரிப்பதேயாகும். இத்திட்டத்தில் பணியாற்றும் களப்பணியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராமங்களுக்கு குறிப்பிட்ட நாளில் சென்று, உழவர்களை நேரில் சந்தித்து, பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வல்ல தொழில்நுட்ப ஆலோசனையை நல்குகின்றனர். இத்திட்டத்தின் மூலம் நீலகிரி மாவட்டத்தில் 46,502 உழவர் குடும்பங்களும், கொடைக் கானல் வட்டத்தில் 12,986 உழவர் குடும்பங்களும் பயன் அடைந் துள்ளனர். இத்திட்டத்திற்கு ரூ. 72.12 இலட்சம் நிதியொ துக்கீடு செய்யப்பட்டிருக்க, 1991 டிசம்பர் திங்கள் வரை ரூ. 63.31 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம், ரூ. 81.92 இலட்சம் நிதி உதவியுடன் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



8. வாசனைத் திரவியப் பயிர்கள் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டம் முற்றிலும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். வாசனைத் திரவியப் பயிர்கள் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு ரூ. 12.05 இலட்சம் நிதியொதுக்கத் துடன் 1991-92 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வயல் விளக்கப் பாத்திகள் அமைக்க அதிக மகசூல் தரும் வாசனைத் திரவியச் செடிகள், இடுபொருட்கள் அடங்கிய சிறு பைகள், சிறு வாசனைத் திரவிய பயிர் விதை சிறு பைகள், பயிர் பாதுகாப்புக் கருவி கள் ஆகியவை உழவர்களுக்கு குறைந்த விலையில் வழங்கப் படுகின்றன.

9. பழைய பழத் தோட்டங்களுக்கான புனரமைப்புத் திட்டம் :

இத்திட்டம் முற்றிலும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இது மா, கொய்யா, எலுமிச்சை பழ வகைகளை கொண்ட பழைய பழத்தோட்டங்களை புனரமைத்து அதிக மகசூல் பெற வழிவகை செய்கின்றது. இத்திட்டத்தின் கீழ் பழைய மரங்களை அகற்றி பட்டுப்போன மரங்களையும் அகற்றிவிட்டு புதிய மரக் கன்றுகளை நடுவதற்காக, உழவர் களுக்குப் பழமரக் கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பழச் செடிகளின் வகைக்கு ஏற்றவாறு பராமரிப்பிற்குத் தேவை யான உரங்கள் மற்றும பயிர் பாதுகாப்பு மருந்துகள், ஒரு எக்டேருக்கு ரூ. 476 முதல் 820 வரை மிகக் குறைந்த விலை யில் வழங்கப்படுகின்றன. ரூ. 8.06 இலட்சம் நிதியொதுக்கத் துடன் 1991-92 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டுவருகிறது. 1992—93 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

10. காய்கறி விதைகள் அடங்கிய சிறு பைகள் வழங்கும் திட்டம் :

இத்திட்டம் முற்றிலும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்ட மாகும். காய்கறி உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, வீரிய ரகக் காய்கறிகளாகிய தக்காளி, முட்டைக்கோசு, போன்ற காய்கறி விதைகள் அடங்கிய சிறு பைகள் (Mini Kits) உழவர் களுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 2.40 இலட்சம் நிதியொதுக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 3,200 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

[1992 ஏப்ரல் 21

**11. கிராமப் பகுதிகளில் ஊட்டச்சத்து மிக்க பழ மரங்கள் கொண்ட தோட்டம் அமைத்தல் :**

இத்திட்டம் கிராமப் பகுதிகளிலுள்ள வீட்டுத் தோட்டங்களில் பழப்பயிர்கள் சாகுபடி செய்து, கிராமப்புற மக்களுக்கு ஊட்டச் சத்து மிக்க உணவு அளிக்க வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்டத்தில் நடுவதற்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ. 50 பெறுமானமுள்ள 10 பழச் செடிகள் இலவசமாக வழங் கப்படுகின்றன. 1991-92-ம் ஆண்டில் 37,500 குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ. 18.75 இலட்சம் நிதி யொதுக்கத் துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**12. உழவர்கள் தொழில்நுட்ப அனுபவம் பெற அண்டை மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லுதல்:**

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந் தும் 50 முன்னோடி தோட்டக்கலை உழவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டு குறிப்பாக காய்கறி மற்றும் பழப்பயிர்கள் சாகுபடியில் பின்பற்றப்படுகிற நவீன தொழில்நுட்ப உத்தி குறித்து நேரடி யாகப் பார்த்து தெரிந்துகொள்ள அண்டை மாநிலங்களில் அதிக அளவில் காய்கறி மற்றும் பழங்கள் சாகுபடி செய்யும் பகுதி களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். இத்திட்டத்தின் கீழ் தொகுதி ஒன்றுக்கு ரூ. 0.28 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

**13. சொட்டு நீர்ப் பாசனத் திட்டம் :**

தமிழ்நாட்டில் எல்லா நீர் நிலைகளும் ஏற்கனவே முழு அளவில் பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டுவிட்டதால் மேலும் பாசன வசதியை விரிவு படுத்த வாய்ப்பில்லை. 56 சதவீதத்திற்கும் மேலான பயிரிடும் பரப்பு வானாவாரி பாசனப் பகுதியாக உள்ளது. ஆண்டிற்கு ஆண்டு மழை அளவு குறைந்து வருவதால் ஏரிகளும் குளங்களும் வற்றிப்போயிருப்பதுடன் நிலத்தடி நீரும் குறைந்துகொண்டே போகிறது. இவ்வாறாக வரும் ஆண்டில் வானாவாரி பாசனத்தின் கீழ் வரும் நிலத்தின் பரப்பளவு அதிக ரிக்கும். இச்சூழ்நிலையில் கிடைக்கப்பெறும் தண்ணீரை சிக்கன மாகப் பயன்படுத்துவதற்கு இயலும் வகையில், சொட்டு நீர், தெளிப்பு நீர் போன்ற தண்ணீரை சிக்கனப் பாசனத் திட்டங்களை பின்பற்றுவது உகந்ததாகும். நுண்பாசனத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நீரைப் பயன்படுத்தி அதிகப்பரப்பளவை பாசனத் திற்கு கொண்டு வருவது ஆதாயம் தரத்தக்கதாகும்.



1992 ஏப்ரல் 21]

சொட்டு நீர், தெளிப்புநீர் போன்ற பாசன முறைகள் தோட் டப் பயிர்களுக்கு மிகவும் உகந்ததாக உள்ளதால், மத்திய அரசுத் துறைகளின் கீழ், 100 இலட்சம் ரூபாய் செலவில் சொட்டுநீர்ப் பாசனத்தை ஊக்குவிப்பதற்கான தனித் திட்டம் உருவாக்கப்பட் டுள்ளது. இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டில் செயற்படுத்தப் படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 4 எக்டேர் வரை ரூ. 50,000 என்ற உச்சவரம்பிற்குட்பட்டு, திட்டச் செலவில் 50 சதவீதம் உதவித் தொகை அளிக்கப்படவுள்ளது.

**14. தோட்டக்கலை கல்வி மற்றும் பயிற்சி :**

தரமணியிலுள்ள தோட்டக்கலை பயிற்சி நிறுவனத்தில் மூன்று பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அதாவது இரண்டாண்டு பட்டப்படிப்பு, ஓராண்டு சான்றிதழ் படிப்பு ஆறுமாதகால தலைமைத் தோட்டக்காரர் படிப்பு ஆகியவை நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு படிப் பிலும் 20 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் 1992 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப் படவுள்ளது. குடுமியான்மலையிலுள்ள மத்திய தோட்டக்கலை பயிற்சி மையம் தோட்டக் கலைப் பயிர்களைப் பொறுத்தமட்டில் அண்மைக்கால பயிர் உற்பத்தித் தொழில் நுட்ப யுத்திகள் குறித்து களப்பணியாளர்கள் அறிந்து கொள்வதற்காக, அவர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் 220 வயல் விளக்க அலுவலர்களுக்கும், 60 உதவி வேளாண்மை அலுவலர் களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் 1992-93 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது. வரும் ஆண்டில் தோட்டக்கலை அலுவலர்களுக்கும் இத்திட்டத்தில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**15. அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள் :**

மாநிலத்தின் பல பகுதிகளில் அமைந்துள்ள தோட்டக்கலைத் துறை 53 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் பூங் காக்கள் ஆகியவற்றை பராமரித்து வருகின்றது. இப்பண்ணை களில் மா, கொய்யா, சப்போட்டா, மாதுளை, [illegible], ஆரஞ்சு, எலுமிச்சை, ஆப்பிள், சீத்தா, அன்னாசி, பேரி போன்ற முக்கிய பழச் செடிகளும், மிளகு, கிராம்பு, சாதிக்காய் போன்ற வாசனை திரவிய செடிகளும், தேயிலை, காப்பி, முந்திரி போன்ற பொருளாதார ரீதியில் ஆதாயம் தரும் செடிகளும், தர மான காய்கறி விதைகளும் உற்பத்தி செய்து மேம்பட்டு வரு கிறது. இவை தவிர, இப்பண்ணைகள் விவசாயிகளுக்கு நேரடி பழத் தோட்டங்களாக விளங்குவதோடு. நேரடி செயல்முறை

மையமாகவும் செயல்பட்டு வருகிறது. இப்பண்ணைகளில் 1991-92 ஆம் ஆண்டுகளிலும், 1992-93 ஆம் ஆண்டுகளிலும் உற்பத்தி விவரங்களும், 1991 டிசம்பர் மாதம் இறுதி வரை அவை எய்திய சாதனையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1991-92 இலக்கு | 1991-92 சாதனை டிசம்பர் 91 வரை. | 1992-93 இலக்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (இலட்சம் | எண்ணிக்கை) | |
| 1. பழக்கன்றுகள் .. | 21.00 | 18.66 | 21.50 |
| 2. வாசனை திரவியப் பயிர்கள். | 10.00 | 7.83 | 10.50 |
| 3. மலைத் தோட்டப் பயிர்கள். | 185.00 | 75.61 | 186.00 |
| 4. மலர் மற்றும் இதர வாணிபப்பயிர்கள். | 37.00 | 25.01 | 38.00 |
| மொத்தம் .. | 203.00 | 127.11 | 295.00 |

வேளாண்மைப் பொறியியல் துறை.

இம்மாநிலத்தில் மண்வளத்தையும், நீர் வளத்தையும் பாதுகாத்து அவற்றை மேம்படுத்தி நிருவகிக்கும் பணியில் வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டு வருகிறது. இத்துறை பின்வரும் வழிகளில் விவசாயிகளுக்கு உதவுகிறது:—

(1) மண்ணரிப்பு போன்ற ஆபத்துக்களிலிருந்து மண்ணைப் பாதுகாத்து, அதன் ஈரத்தன்மையை பாதுகாப்பது.

(2) பாசன வளங்களை ஏற்படுத்துதல், நிலைப்படுத்துதல் நுண் பாசன திட்டங்களை அறிமுகம் செய்து நீரை உரிய அளவு பயன்படுத்த வகை செய்தல்.





(3) கிணறு, ஏரி, ஆற்றுப் பாசனப்பகுதிகளில் நீர் நிருவாகம்.

(4) நில மேம்பாட்டிற்காக பண்ணைத் திட்டத்திற்கு மின்சாரம் வழங்கி, வேளாண்மைப் பணிகளை உரிய காலத்தில் மேற்கொள்ளுதல்.

(5) பயன்படுத்த முடியாதவை என்று ஒதுக்கப்பட்ட நிலத்தைப் பயன்படுத்தத் தக்க வகையில் மேம்படுத்தி பொருத்தமான பயிர் சாகுபடிக்கு அவற்றைப் பயன்படுத்துதல்.

இத்துறை கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்காக, பெருமளவில் வேலை வாய்ப்பினை உருவாக்கும் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

மண்வளப் பாதுகாப்பு, நீர் வளப்டரதுகாப்பு, சிறுபாசனம் பாசனப்பகுதி மேம்பாடு, நில மேம்பாட்டுத் திட டங்கள், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மேற்சொன்ன பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

புதிய உத்வேகம்.

நுண்பாசனத் திட்டங்கள் :

நீரை உரிய அளவுக்கும் பயன்படுத்துதல், சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு சொட்டுநீர்/தெளிப்பு நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்ற நுண்பாசனத் திட்டங்களைப் பிரபலப்படுத்த புதிய உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது. நுண்பாசன அமைப்புகளை நிறுவும் விவசாயிகளுக்கு அரசு ரூ. 40.60 இலட்சம் உதவித் தொகை அனுமதித்துள்ளது. பின்வரும் உதவித் தொகை திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

| நிலத்தின் பரப்பு. | உதவித் தொகை வீதம். | உதவித் தொகையின் அளவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | சதவீதம். | எக்டேருக்கு. |
| 1. ஒரு எக்டேர் வரை ... | 50 | 12,500 |
| 2. ஒரு எக்டேருக்கு மேல் 2 எக்டேர் வரை. | 40 | 10,000 |
| 3. 2 எக்டேருக்கு மேல் 3 எக்டேர் வரை. | 30 | 7,500 |

இத்திட்டம் விவசாயப் பெருமக்களிடையே நல்ல ஆதரவு பெற்றுள்ளது. தரமான கருவிகளை நிறுவுவது, அவற்றின் செயல்பாடு விவசாயிகளுக்குப் பயிற்சி ஆகியவை தொடர்பாக வேளாண்மைப் பொறியியல் துறை திட்டங்களையும் நடைமுறைகளையும் வகுத்துள்ளது.

சொட்டு நீர்ப் பாசனத்தை கொண்டு தோட்டக்கலைப் பயிர்களை வளர்ப்பதற்கான ரூ. 100.00 லட்சம் செலவாகக் கூடிய திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட இருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் தோட்டக்கலைப் பயிரை வளர்ப்பதற்கு சொட்டு நீர்ப் பாசனக் கருவிகளை நிறுவுவதற்காக விவசாயிகளுக்கு 50 சதவீதம் உதவித் தொகையாக வழங்கப்படும்.

நில ஆதாரங்களை நிருவகித்தல்.

மண்வள நீர்வள பாதுகாப்பு.

மண் அரிப்பைத் தடுப்பதற்கும் நிலப் பயன்பாட்டினை முறைப்படுத்துவதற்கும் மலைப்பகுதிகளில் உயிரின வாழ்க்கை பாதுகாப்பு உயிரின வாழ்க்கைச் சூழலை மீண்டும் உருவாக்குதல் ஆகியவற்றிற்காக வேளாண்மைப் பொறியியல் துறையின் வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

1.1. குந்தா, கீழ் புவானி ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மத்திய அரசு பொறுப்பேற்கும் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் :

சரிவுப் பூச்சுப் பூசுதல் தளவேறுபாட்டு எல்லைச் சுவர் அமைத்தல் வண்டல் படிவு ஏரிகள் அமைத்தல், சுற்றுச் சுவரமைத்தல், தடுப்பணைகள், ஆற்று சமநிலைப்பணிகள் போன்ற வெவ்வேறு மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன், நீர்வரத்துப் பகுதிகளைச் சேர்ந்த, நீரோட்டத்திற்கு எதிர்ப் பகுதிகளைப் பாதுகாப்பதில் அதிக முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் நீர்த் தேக்கங்களில் வண்டல் படிவதைக் கட்டுப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1991-92 ஆம் ஆண்டில், ரூ 350.00 இலட்சம் மொத்தச் செலவில் 80.21 எக்டேர் பரப்புப் பாதுகாக்கத் திட்டமிட்டிருந்ததற்கு மாறாக 1992 ஜனவரி வரையில் ரூ. 300.79 இலட்சம் மொத்த செலவில் 7,532 எக்டேர் பரப்பு பாதுகாக்கப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில், 6.00 எக்டேர் பரப்பைப் பாதுகாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு பணிச் செலவில் 50 சதவீதம் உதவித் தொகையாகவும், எஞ்சிய தொகை, இரண்டாண்டுக் கடன் தவணை கால நீட்டிப்புடன் பத்து சம ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கத்தக்க கடனாக வழங்கப்படுகின்றன.



1.2 மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு பொறுப்பேற்கும் மண்வள நீர்வளப் பாதுகாப்புத் திட்டம் :

1991-92 ஆம் ஆண்டில் அமராவதி மற்றும் வைகை நீர் பிடிப்புப் பகுதிகளில் மொத்தம் ரூ. 227 இலட்சம் செலவில் 1,495 எக்டேர் பகுதிகளில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. இதில், 1992 ஜனவரி வரையில் ரூ. 190.26 இலட்சம் செலவில், 1,394 எக்டேர் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1992-93 ஆம் ஆண்டில் 1,575 ஹெக்டேர் பகுதிகளில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மீண்டும் காடு வளர்த்தல், தளவேறுபாட்டு எல்லைச் சுவரமைத்தல், வண்டல் படிவு ஏரிகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிச் செலவுகளில் 40 சதவீதம் விவசாயிகளுக்கு உதவித் தொகையாகவும், எஞ்சிய தொகை இரண்டாண்டு கடன் தவணைக் கால நீட்டிப்புடன் பத்து சம ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கத் தக்க கடனாகவும், வழங்கப்படுகின்றது.

1.3. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த மலைப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மண்வளப்பாதுகாப்புப் பணிகளும், நிலச் சரிவு ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளைப் பாதுகாக்கும் பணிகளும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

மொத்தம் 1,458 எக்டேர் பரப்பில், மொத்தம் ரூ. 160.11 இலட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ளக் கருதப்பட்டிருக்க, 1992 ஜனவரி வரை ரூ. 128.15 இலட்சம் செலவில் 1,548 எக்டேர் பரப்பில், மண்வளப்பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1992-93-ல் 1,515 எக்டேர் பரப்பு பயனடையும் வகையில் பணியை மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது. நிலச்சரிவு ஏற்படுவதைத் தடுக்கும் பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன. மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 50 சதவீதம் உதவித் தொகையுடனும், 50 சதவீதம் கடன் தொகையுடனும் மேற்கொள்ளப்படுகின்றன.

[1992 ஏப்ரல் 21

### 1.4. மண்வளப்பாதுகாப்புத் திட்டங்கள் :

#### 1.4.1. மலைகளிலும் சமவெளிகளிலும் மண்வள பாதுகாப்புப் பணிகள் :

இம்மாநிலம் மண் அரிப்பிற்கும் நில வளம் குறைவதற்கும் உட்பட்டதாகும். மண்-நீர் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக மேற்படி நிலைக்குத் தீர்வு காணப்படுகிறது. மண்ணைப் பாதுகாப்பதும் குறிப்பாக புன்செய் நிலங்களில் ஈரத்தன்மையைக் காப்பதும் மிகுந்த கவனத்தைப் பெற்றுவருகின்றது. இந்த நிலங்களின் ஈரப்பகுதி மேற்கூறிய திட்டத்தின் கீழ், இத்தகைய நடவடிக்கைகள் மூலமாக மேம்படுத்தப்படுகிறது. 1991-92-ல் 75,000 எக்டேர் பரப்பைப் பாதுகாக்கும் பொருட்டு நீர்ப்பிரி முகடுகளின் அடிப்படையில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1992, ஜனவரி வரையில், 74,100 எக்டேர் பகுதி பயனடைந்துள்ளது. 1992-93-ல் 75,000 எக்டேர் பரப்பில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. சமவெளிகளுக்கு பணிச் செலவில் 25 சதவீதமும், மலைப் பகுதிகளுக்கு பணிச் செலவில் 40 சதவீதமும் உழவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. பாக்கித் தொகை கடனாகக் கருதப்படுகிறது. அத்தொகை, கடன் தவணை நீட்டிப்புக் கால அளவான இரண்டாண்டுக் கால அளவிற்குப் பின்னர் 10 சம ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. இந்து ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த உழவர்களுக்கு 50 சதவீத உதவித் தொகை வழங்கப்படுகிறது.

#### 1.4.2. காற்றினால் மண்ணரிப்பு ஏற்படுவதைக் கட்டுப்படுத்துதல் :

காற்றினால் மண்ணரிப்பு ஏற்படுகின்ற கடும் பிரச்சினையால் பாதிக்கப்படுகின்ற மாவட்டங்களான நெல்லை, கட்டபொம்மன், வ. உ. சிதம்பரனார் மாவட்டங்களில் காற்றினால் மண்ணரிப்பு ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும் திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது. காற்றினால், மண் அரிப்பு ஏற்படுவதிலிருந்து, நிலத்தைப் பாதுகாக்க, பாதுகாப்பாக நிழல் தரும் மரங்கள் 5 வரிசையில் காற்றடிக்கும் திசைக்கு எதிராக அரசு செலவில் நடப்படுகின்றன. 1991-92-ல் 1,000 எக்டேர் பரப்பைப் பாதுகாப்பது என இலக்கு நிர்ணயித்திருக்க, 1992 ஜனவரி வரையில் ரூ. 39.13 இலட்சம் செலவில் 1,007 எக்டேர் பரப்பு பாதுகாக்கப்பட்டுள்ளது. 1992-93-ல் 1,000 எக்டேர் பரப்பைப் பாதுகாக்கக் கருதப்பட்டுள்ளது. நிழல் தரும் மரங்கள் வளர்ப்பதற்காகும் மொத்தச் செலவையும், 5 ஆண்டுகளுக்கு அவற்றைப்பராமரிக்க ஆகும் செலவையும் அரசு ஏற்கிறது.



1992 ஏப்ரல் 21]

#### 1.4.3. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண் வளப்பாதுகாப்பு :

பழங்குடியினருக்குச் சொந்தமான பகுதிகள் பயனடையும் பொருட்டு, பழங்குடியினர் வாழும் பகுதியில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் என்கிற மண்வளப் பாதுகாப்புத் திட்டம் தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், திருச்சி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகிறது. 1991-92-ல் 370 எக்டேர் பரப்பில் மண்வளப் பாதுகாப்புப் பணியை, ரூ. 31.30 இலட்சம் செலவில் மேற்கொள்வது எனத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 1992 ஜனவரி வரையில் 23.87 இலட்சம் செலவில் 297 எக்டேர் பரப்பு பயனடைந்துள்ளது. 1992-93-ல் மேற்கூறிய 5 மாவட்டங்களிலும், 376 எக்டேர் பரப்பில் மண்வளப் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இச் செலவு முழுவதையும் அரசு ஏற்கிறது.

#### தொலைதூர இயற்கை வள ஆய்வு :

மேற்கு மலைத் தொடர் நீர்ப்பிடிப்புப்பகுதிகளின் வள நிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தொலை தூர இயற்கை வள ஆய்வு தொடர்பான தொழில் நுட்ப உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. மண்வள பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அது தொடர்பான பணிகளுக்கு பயன்படுத்துவதற்காகவும் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டு திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கு நீர்ப்பிரி முகட்டு வரைபடங்களும் தயாரிக்கப்பட்டன.

### 1.6. நில மேம்பாட்டுத் திட்டம்:

நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலத்தைச் சமப்படுத்துதல், சரி செய்தல், இயந்திரங்களைக் கொண்டு சாகுபடிப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு வேளாண்மைப் பொறியியல் துறை, விவசாயிகளுக்கு பரம்புப் பொறிகளையும், புல்டோசர், டிராக்டர்களையும் வாடகைக்கு கொடுக்கிறது.

1990-91 ஆம் ஆண்டில் இந்திய வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் மூலம் மொத்தம் ரூ. 500 இலட்சம் செலவில், 30 பரம்புப் பொறிகளை (புல்டோசர்) வாங்க, அரசு அனுமதியளித்துள்ளது. 1991-92-ம் ஆண்டில் பரம்புப் பொறிகளின் எண்ணிக்கை 115-ம் டிராக்டர்களின் எண்ணிக்கை 177-ம் ஆகும். இந்து மத ஆதி திராவிட விவசாயிகள் சாதாரண வாடகைக் கட்டணத்தில் (ஐம்பது சதவீதத்தில்) பாதி கட்டணத்திற்கு இந்த இயந்திரங்களைப் பெறுகின்றனர்.

[1992 ஏப்ரல் 21

1991-92 ஆம் ஆண்டின் இலக்கு, சாதனை, 1992-93 ஆம் ஆண்டின் இலக்கு ஆகியவற்றின் விவரங்கள் வருமாறு :-

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | அளவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | டிராக்டர், பரம்புப் பொறிகளை வாடகைக்கு விடும் திட்டம் : | |
| (அ) | நிலத்தைச் சமன்படுத்துதல் | .. மணி எக்டேருக்கு. |
| (ஆ) | இயந்திரங்களின் உதவியுடன் சாகுபடி | மணி எக்டேருக்கு. |

| | 1991-92 ஆம் ஆண்டு இலக்கு. | 1992-ஆம் ஆண்டு ஜனவரி வரையிலான திட்ட சாதனை. | 1992-93 ஆம் ஆண்டு இலக்கு. |
|---|---|---|---|
| | (4) | (5) | (6) |
| (அ) | 1,54,000 | 1,37,550 | 1,54,000 |
| | 6,160 | 5,502 | 6,160 |
| (ஆ) | 93,800 | 97,174 | 93,800 |
| | 26,800 | 3,887 | 26,800 |

வேளாண் பொறியியல் துறையின் இந்தப் பரம்புப் பொறிகள் (புல்டோசர்கள்) 1991-92 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத் திலுள்ள பாசனக் கால்வாய்களில் தூர் வார பயன்படுத்தப் 'பட்டன. கும்பகோணம் மகாமக குளத்தில் தூர் வாரவும் ந்த புல்டோசர்கள் பயன்படுத்தப்பட்டு, பொது மக்களின் ர்ராட்டுக்களைப் பெற்றது.

நீர் வள நிருவாகம் :

2.1. நில நீர் மேம்பாடு :

கிணற்றுப் பாசனம் மூலம் பாசனம் பெறும் நிலப் பரப்பு அதிகரித்து வருகிறது. நீர் மேம்பாடு மிகுந்த முக்கியத்துவம் பெற்றுவருகிறது. புவியியற்பியல் ஆய்வுகள் மூலம் கிணறுகளை



1992 ஏப்ரல் 21]

அமைக்க ஏற்ற இடம் எது என்பது பற்றி அறிந்து கொள்ளவும், குழாய்க் கிணறுகளையும், வடிமுனைக் குழாய்க் கிணறுகளையும் அமைக்கவும் வறண்டுபோன கிணறுகளின் பக்கத்தில் துளைகள் போடுவதன் மூலம் அல்லது வெடி வைத்து ஆழப்படுத்துவதன் மூலம் அக்கிணறுகளில் மீண்டும் நீர் வரத்தை அதிகரிக்கவும், வேளாண் பொறியியல் துறை உழவர்களுக்கு உதவுகிறது. மின் சக்தியினால் இயங்கும் துளையிடும் இயந்திரங்கள அழுத்தும் கருவிகள், கையினால் இயக்கப்படும் துளையிடும் எந்திரங்கள் பாறைகளைத் தகர்க்கும் எந்திரங்கள் ஆகியவற்றை இத்துறை வைத்துப் பராமரித்கு வருகிறது. இந்து ஆதி திராவிட உழவர்கள், வழக்கமான வாடகைக் கட்டணத்தில் 50 சதவீத வாடகைக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் இந்த எந்திரங்களைப் பெற்று வருகின்றனர். நில நீர் குறித்து ஆய்வு அதற்குரிய தளவாடங்களை எடுத்துச் செல்வதற்கான கட்டணங்கள், தொழிலாளர்களுக்கான ஊதியம், மூலப் பொருட்கள் அதிவேக டீசல் எண்ணெய்க் குழாய்கள், வெடிமருந்துகள் ஆகியவற்றுக்கான செலவுகள், கிணறுகளை மேம்படுத்துவதற்கான செலவுகள் ஆகியவற்றுக்காக 50 சதவீத உதவித் தொகை பெறவும் அவர்கள் தகுதி உடையோராவர்.

1991-92 ஆம் ஆண்டில் 5,500 குழாய்க் கிணறுகள், 3,300 வடிமுனைக் குழாய்க் கிணறுகள், ஆகியவற்றை அமைக்கவும், 6,000 கிணறுகளில் மீண்டும் நீர் வரத்தை ஏற்படுத்தவும் கருதப் பட்டுள்ளது. 1992 ஜனவரி திங்கள் வரையில் 4,656 குழாய்க் கிணறுகளும் 2,777 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் அமைக்கப் பட்டுள்ளன. 4,831 கிணறுகளில் மீண்டும் நீர் வரத்து ஏற் படுத்தப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் 5,500 குழாய்க் கிணறுகளும் 3,300 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும், அமைக்கப்படும். 6,000 கிணறுகளில் மீண்டும் நீர் வரத்து ஏற்படுத்தப்படும்.

2. 2. உணவு தானிய உற்பத்தி சிறப்புத் திட்டம்:

கிணறுகளை அமைக்கவும் ஆழ்படுத்தவும் மானியம் வழங்குதல் :

வேளாண் பொறியியல் துறை உணவு தானிய உற்பத்திச் சிறப்புத் திட்டத்தின் கீழ் கிணறுகளையும், குழாய்க் கிணறுகளையும் அமைக்கவும், அவற்றை ஆழப்படுத்தவும், சிறு உழவர்கள், குறு உழவர்கள், பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த உழவர்கள் ஆகியோருக்கு முறையே, ரூ. 3,000, ரூ. 4,000 மற்றும் ரூ. 5,000 உதவித் தொகை வழங்குகிறது 1991-92 ஆம் ஆண்டில் உதவித் தொகை வழங்குவதற்காக ரூ. 100 இலட்சத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. 1992 ஜனவரி திங்கள் வரையில், 4,932 உழவர்களுக்கு ரூ. 44.85 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

நிலநீர் மேம்பாட்டுப்பணிகள், நீர்வளத்தை ஏற்படுத்துவதற்கு மட்டுமல்லாது நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் கோட்பாட்டை நடைமுறையில் வெற்றிகரமாக செயல்படுத்துவதற்காகவும் கவனம் செலுத்தும் வகையில் சீரமைக்கப்படும். சமுதாயக் கிணறுகள் கட்டுதல், உழவர்கள் சங்கம் அமைத்தல், நில நீரையும், மேற்பரப்பு நீரையும் ஒரு சேரப் பயன்படுத்துதல், நுண்ணிய பாசன முறைகளை அறிமுகப் படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும்.

**2.3. பாசனத்திற்காக ஊற்று நீர் வளத்தைப் பெருக்க நீரைச் சேமித்து வைத்தல் :**

நில நீரை அதிக அளவில் பயன்படுத்துவதால் நீரின் அளவு வேகமாகக் குறைந்து வருகிறது. நில நீர் மீண்டும் ஊற்றெடுத்து பெருகுவதற்கான ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் பெருமளவு கசிவுநீர்க் குட்டைகள் கட்டும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டு வரை, 5,710 கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்பட்டுள்ளன. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கசிவுநீர்க் குட்டைகள் கட்டுவதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. கசிவு நீர் குட்டைகளினால், நில நீர் மீண்டும் ஊற்றெடுத்துப் பெருகுகின்றது என்றும் கிணறுகளில் நீர் அளவு உயர்ந்துள்ளது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

**2.4. பாசனப் பகுதிகளில் நீர் நிருவாகம் :**

**2.4.1. பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

மத்திய அரசுப் பொறுப்பேற்கும் பாசனப் பகுதி மேம்பாட்டு திட்டம், காவிரி, கீழ்பவானி, சாத்தனூர், பரம்பிக்குளம், ஆளியாறு திட்டம் ஆகிய பாசனப் பகுதிகளில் செயற்படுத்தப் படுகிறது. 1990-91 ஆம் ஆண்டில் உலக வங்கி உதவி முடிவடைந்துவிட்டதால், 1991-92 ஆம் ஆண்டில் பெரியார்-வைகை பாசனப்பகுதி, மத்திய அரசு பொறுப்பேற்கும் பாசனப்பகுதி, மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

(1) ஒவ்வொரு நிலத்திற்கும் பாசனமளிக்கும் முறையை நீக்குவதற்கும்; (2) உரிய அளவு நீர் பெற இயலும் வகையிலும்; (3) சுழற்சி முறையில் நீர் வழங்குவது மூலமாக உபரி நீர் கிடைக்கும் சமயத்திலும் பற்றாக்குறை காலங்களிலும் கிடைக்கும் நீரை சமமாகப் பகிர்ந்து கொள்ள உதவி செய்யவும் பண்ணை மேம்பாட்டுப்பணிகள் செயற்படுத்தப்படுகின்றன.



**2.4.2. உழவர்கள் பங்கேற்றல் :**

உழவர்கள் பங்கேற்கும் சுழற்சி முறையில் நீர் வழங்கும் முறையைக் கொண்டு வருவது பற்றி கீழ் பவானி பாசனப் பகுதியில் முன்னோடி திட்டமாக சோதனை செய்து பார்க்கப்பட்டது. ஒன்றுசேர்ந்து செயல்படுவதற்காக உழவர்கள் ஊக்குவிக்கப் பட்டனர். இம்முறையில் நீரைச் சமமாக பகிர்ந்துகொள்வதையும் இந்த ஏற்பாட்டை நிர்வகிப்பதையும் உறுதி செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காக உழவர்கள் தங்களுக்குள் சங்கம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். பண்ணை மேம்பாட்டுப் பணிகள் அவர்களுடைய முழு ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்பட்டுள்ளன. இது ஒரு வெற்றிகரமான கோட்பாடு எனக் கண்டறியப்பட்டுள்ளது. ஏனைய பாசனப் பகுதிகளிலும் இது பின்பற்றப்பட்டு வருகிறது. பாசனப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட உழவர்கள் சங்கங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் வருமாறு :—

| | 1991 டிசம்பர் வரை பாசனக் குழுக்களின் எண்ணிக்கை. | சங்கங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. காவிரி .. .. .. | 11 | 249 |
| 2. கீழ்பவானி .. .. | 8 | 719 |
| 3. சாத்தனூர் .. .. | 8 | 93 |
| 4. பரம்பிக்குளம் -ஆளியாறு திட்டம். | .. | 14 |
| 5. பெரியார்-வைகை .. | 3 | 235 |
| | 27 | 1,310 |

பாசனப் பகுதிகளில் நீர் நிருவாகத்திற்காக மகளிர் உழவர்கள் சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. பெரியார் வைகை பாசனப் பகுதியில் மகளிருக்காக இரு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2.4.3. உழவர்கள் சங்கங்களுக்கு நிருவாக உதவித்தொகை அளித்தல்:

உழவர்கள் பங்கேற்கும் புதிய கோட்பாட்டின் கீழ் உழவர்கள் சங்கங்களை ஏற்படுத்துவது முக்கியமானதாகும், உழவர் சங்கங்களுக்கு, முதல் இரண்டாண்டுகளுக்கு எக்டேர் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதமும், மூன்றாம் ஆண்டிற்கு, எக்டேர் ஒன்றுக்கு 75 ரூபாய் வீதமும் நிருவாக உதவித் தொகை அளிக்கப்படுகிறது. கீழ் பவானி, காவிரி திட்டப் பாசனப் பகுதியிலுள்ள உழவர் சங்கங்களுக்கு நிருவாக உதவித் தொகை வழங்குவது அரசின் பரிசீலனையில் உள்ளது. பெரியார்-வைகை 5.00 இலட்சம் ரூபாய் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டிற்கான இலக்கு சாதனை குறித்த விவரங்களும் 1992-93 ஆம் ஆண்டிற்கான இலக்கு பற்றிய விவரங்களும் வருமாறு :—

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | அளவு. | 1991-92 ஆம் ஆண்டு இலக்கு. | 1992 ஜனவரி வரையிலான சாதனை. | 1992-93 ஆம் ஆண்டு இலக்கு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்— பண்ணை மேம்பாடு : | | | | |
| | 1. காவிரி பாசன பகுதி. | எக்டேர் | 24,000 | 21,393 | 23,900 |
| | 2. கீழ்பவானிப் பாசனப் பகுதி. | ,, | 5,000 | 4,390 | 5,500 |
| | 3. சாத்தனூர் பாசனப் பகுதி. | ,, | 1,000 | 1,302 | 3,000 |
| | 4. பரம்பிக்குளம் ஆளியாறு பாசனப் பகுதி. | ,, | 11,000 | 9,398 | 11,000 |
| | 5. பெரியாறு வைகைப் பாசனப் பகுதி. | ,, | 3,200 | 2,723 | 4,000 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 2. | சுழற்சி முறையில் நீர் வழங்கும் திட்டத்தைக் கொண்டுவருதல் : | | | | |
| | 1. காவிரி பாசனப் பகுதி. | எக்டேர். | 2,000 | 3.158 | 3,500 |
| | 2. கீழ் பவானி பாசனப் பகுதி. | ,, | 2,000 | 2,593 | 3.500 |
| | 3. பெரியாறு வைகைப் பாசனப் பகுதி. | ,, | 9,000 | 9.006 | 9,000 |

பண்ணை மேம்பாட்டுப் பணிகளுக்காக உழவர்களுக்கு 50 சதவீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. எஞ்சியவை இரண்டாண்டுக் கடன் தவணை சலுகையுடன் ஐந்து ஆண்டு சம தவணைகளில் வசூலிக்கத்தக்க கடனாக கருதப்படுகிறது.

3.1. சிறப்புத் திட்டங்கள் : வானாவாரி வேளாண்மைக்கான தேசிய நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம் :

வானாவாரி வேளாண்மை தேசிய நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கழிவுநீரைச் சுத்தப்படுத்துதல், தடுப்பணை கட்டுதல் போன்ற ஊற்று நீர் வளத்தைப் பெருக்க நீரைச் சேமிக்கும் அமைப்புகள் கட்டுதல் ஆகிய வேளாண்மைப் பொறியியல் திட்டங்களுக்காக, அரசு 100.00 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. 14 மாவட்டங்களில் உள்ள 84 வளர்ச்சி வட்டாரங்களில் இப்பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

3.2. ஒருங்கிணைந்த நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம் : (WDP)

சிதம்பரனார், நெல்லை-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங் களில், தரம் குறைவாயுள்ள 17,500 எக்டேர் நிலப்பரப்பை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு 1990 ஆம் ஆண்டு அக் டோபர் திங்களில் அரசு மொத்தம் 625 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. இத்திட்டம், டானிடா உதவியுடன் மூன்றரை ஆண்டுகளில் செயற்படுத்தப்பட உள்ளது. இத்திட் டத்தில் அடங்கியுள்ள திட்டப்பகுதிகள் வருமாறு :

1. 5,000 எக்டேர் பரப்பில் நீர்ப்பிரி முகடு மேம்பாடு.
2. 3,000 எக்டேர் பரப்பில் காற்றரிப்புக் கட்டுப்பாட்டுத் திட்டம்.

3. 6,500 எக்டேர் பரப்பில் தேரி நில மேம்பாட்டுத் திட்டம்.

4. 3,000 எக்டேர் பரப்பில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்.

1991-92 ஆம் ஆண்டில் 134.30 இலட்சம் ரூபாய் செலவில் மேற்சொன்ன நான்கு திட்டப் பணிகளின் கீழ் 5,725 எக்டேர் பகுதியை மேம்படுத்த வேண்டுமென்று உத்தேசிக்கப்படுகிறது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பகுதி முழுவதும் மேம்படுத்தப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில், மேற்சொன்ன திட்டத்தின் கீழ் 5,800 எக்டேர் பகுதியை மேம்படுத்த உத்தேசிக்கப்படுகிறது.

3.3. காமராஜர், பசும்பொன் தேவர் திருமகன், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் டானிடா உதவியுடன் செயற்படுத்தப்படும் ஒருங்கிணைந்த நீர்ப்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம் :

மேற்சொன்ன மாவட்டங்களில் பெரிதும் வளம் குன்றிய நிலங்களில் மேலும் மண்ணரிப்பு ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன், தரிசு நிலங்களை செலவுக்கேற்ற பயன்பாடு இலக்கு வகையில் தொடர்ந்து மேம்படுத்தவும், நீண்டகால வேலை வாய்ப்பை உருவாக்கவும், 10,500 கோடி ரூபாய் செலவில் 18,000 எக்டேர் நிலப்பகுதி பயனுறுவதற்கான திட்டம் ஒன்றிற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. டானிடா மதிப்பீடு செய்து ஒப்புதலளித்த பின்னர், இந்த மூன்றரை ஆண்டுத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

3.4. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் ;

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்போன்ற சிறப்புத் திட்டங்களை இத்துறை செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ் கசிவு நீர்க் குட்டைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்படுகிறது. நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்கவும், வேலைவாய்ப்பை உருவாக்கவும் இந்த கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கும் பணி பயன்படுவதை இது மெய்ப்பித்துள்ளது. இது பல் நோக்கு சமுதாய சொத்தாகவும் பயன்படுகிறது. இம்மாநிலத்தில் 1991 வரை 5,710 கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. 1990 அக்டோபரில் இருந்து செயற்படும் இத்திட்டத்தின் கீழ், 663.76 இலட்சம் ரூபாய் செலவில் 507 குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 24.82 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட பணியில், 1992 ஜனவரி வரை 132.25





இலட்சம் ரூபாய் செலவில் 92 கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. 500 கசிவு நீர்க் குட்டைகள் கட்டுவதற்காக 1991–92, 1992–93 ஆம் ஆண்டுகளுக்கு 6.00 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்.

1991-92, 1992-93 ஆம் ஆண்டுகளில் 4.00 கோடி ரூபாய், 4.72 கோடி ரூபாய் செலவில் கசிவு நீர்க் குட்டைகள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 687 கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கப்பட உள்ளன.

ஊராட்சி ஒன்றிய ஏரிகளின் தரத்தை மேம்படுத்துதல்.

ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் பாசன ஏரிகள் பல உள்ளன. இப்பாசன ஏரிகளின் நீர் சேமிக்கும் திறனை மேம்படுத்த இவற்றைப் புதுப்பிக்க போதிய கவனஞ் செலுத்தவேண்டுமென்றும், உழவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் பண்ணை மேம்பாட்டின் மூலமும் நீர் நிருவாகத் திட்டத்தைக் கொண்டுவரவும் இப்போது பரிசீலிக்கப்படுகிறது. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மாதிரித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். 140 குளங்களின் தரத்தை உயர்த்துவதற்காக அரசு 222.56 இலட்சம் ரூபாய் அனுமதித்து உள்ளது. இம்முயற்சி இத்துணை ஆண்டுகளாக நிராகரிக்கப்பட்ட ஏரிப்பாசனத் திட்டங்களை மீண்டும் பொலிவுபெறச் செய்யுமாறு எதிர்பார்க்கப்படுகிறது.

விதைச் சான்றுத் துறை.

விதைச் சான்றுத் துறை பின்வரும் பணிகளைச் செயலாக்கி வருகின்றது : (1) விதைச் சான்றளித்தல், (2) விதை ஆய்வு, (3) விதைப் பரிசோதனை (4) விதைச் சான்றளித்தலில் பயிற்சி, நல்ல தரமான சான்றளிக்கப்பட்ட விதைகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக, இத்துறை, 1966 ஆம் ஆண்டு மத்திய விதைச் சட்டத்தின் விதித்துறைகளுக்கும் 1968 ஆம் ஆண்டு விதைகள் குறித்த விதிகளுக்கும், இணங்க, விதைச் சான்றிதழ் அமைப்பின் பணிகளை மேற்கொண்டது. சரியாக விதைச் சான்றிதழ் அளித்தால்தான் தரமான விதையை உற்பத்தி செய்யமுடியும். சான்றளிக்கப்பட்ட விதைகள் சான்றளிக்கப்படாத விதைகளைக் காட்டிலும் குறைந்தது 10 சதவீதம் அதிக விளைச்சலைத் தருகிறது.

**விதைச் சான்றிதழ் :**

1991-92-ல் 27,730 எக்டேர் விதைப் பண்ணைகள் சான்றளிப்பதற்காக பதிவு செய்யப்பட்டன. 18,573 மெ. டன் விதைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன. 1992-93ல், விதைச் சான்று அளிப்பதற்காக, 33,200 எக்டேர் நிலத்தைப் பதிவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**விதை ஆய்வு :**

நல்ல தரமான சான்றளிக்கப்பட்ட விதைகள் உழவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, 1966 ஆம் ஆண்டு விதைகள் சட்டத்தையும், 1968 ஆம் ஆண்டு விதைகள் குறித்த விதிகளையும் செயலாக்க, விதை ஆய்வுப் பிரிவு, விதை விற்பனை மையங்களை ஆய்வு செய்கின்றது.

1991-92-ல் விதை விற்பனை மையங்கள் 8,819 ஆய்வு செய்யப்பட்டு, 7,993 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டன. 1991-92-ல் இது தொடர்பான குற்றவாளிகள் மீது 57 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 41 வழக்குகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் 16 வழக்குகள் நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளன. ஆய்வுப் பிரிவு 1,212 விதைக் குவியல்கள் தரம் குறைந்தவை எனக் கண்டறிந்ததால், அவற்றின் விற்பனை தடை செய்யப்பட்டது. 1992-93-ல் விதை விற்பனையாளர்களிடமிருந்து 10,300 விதை மாதிரிகளைப் பகுப்பாய்விற்காக எடுக்கவும், 10,300 விதை விற்பனை மையங்களை ஆய்வு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**விதைப் பரிசோதனை :**

உலக விதைப் பரிசோதனை அமைப்பு உருவாக்கிய விதிகளுக்கு உட்பட்டு, விதை மாதிரிகளின் புறத் தூய்மை, முளைப்புத் திறன், ஈரத்தன்மை, இதர பயிர் விதைகள், பிற ரக கலப்பு விதைகள், களை விதைகள் முதலியவை சோதனை செய்யப்படுகின்றன. இத்துறையின் அங்கீகாரம் பெற்ற நான்கு விதைப் பரிசோதனைக் கூடங்கள், கோயம்புத்தூர், மதுரை, குடுமியான்மலை, தருமபுரி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

1991-92-ல் விதை மாதிரிகள் 25,635 சோதனையிடப்பட்டன. மேலும் 1992-93 ல் 35,000 விதை மாதிரிகளைச் சோதனையிட்த் திட்டமிடப்பட்டுள்ளது.



பருத்தி மற்றும் ஆமணக்கு உயர்ரக ஒட்டு விதைகளுக்குச் சான்றளிப்பதற்கு முன்னர், அவற்றின் பயிர் ரகத் தூய்மையையும் அவற்றின் மூல விதைகளுடைய பயிர் ரகத் தூய்மையினையும் அறிவதற்காக, கோவையிலுள்ள விதைச் சான்றிதழ் இயக்குநர் அலுவலகத்திலும், கண்ணம்பாளையத்திலுள்ள மாநில விதைப் பண்ணையில் உள்ள கண்ணாடி ஆய்வகத்தில் ''முளைக்கச் செய்யும் சோதனைகள்'' நடத்தப்படுகின்றன. 1991-92-ல் மொத்தம் 387 பருத்தி, ஆமணக்கு உயர்ரக ஒட்டு விதை மாதிரிகளும், அவற்றின் மூலவிதை மாதிரிகளும் சோதனையிடப்பட்டன. உழவர்களுக்கு வழங்கப்படுகின்ற விதைகளின் தரத்தைச் சரிபார்ப்பதற்காக, விதை ஆய்வுப் பிரிவிலிருந்து வரப்பெற்ற விதை மாதிரிகளும் அவற்றின் உயர்ரகத் தன்மையை அறிவதற்காகச் சோதனையிடப்படுகின்றன.

**விதைச் சான்றளித்தலில் பயிற்சி :**

விதை உற்பத்தி, வழங்கல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள விதை உற்பத்தி செய்யும் தனியார்கள், உழவர்கள், விற்பனையாளர்கள் தவிர, விதைச் சான்றளிக்கும் துறை, அதன் கிளைத் துறை, ஆகியவற்றின் களப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1991-92-ல் 10,828 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1991-92-ல் 12,000 பேருக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1991-92-ல் சான்றளிப்புக் கட்டணம், சான்றட்டைக் கட்டணம், விதைப் பரிசோதனைக் கட்டணம் முதலிய வகையில் ரூ. 46.04 இலட்சம் வசூலிக்கப்பட்டது.

- **வேளாண்மை விற்பனை துறை.**

வேளாண்மை விற்பனைத் துறை பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்துகிறது:—

(1) பயிரிடுவோரின் நலனுக்காக ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

(2) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, வளம் ஆகிய துறைகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை ''அக்மார்க்' முறையில் தரம் பிரித்தல்.

(3) வேளாண்மை விளைபொருட்களை வணிக முறையில் தரம் பிரித்தல்.

(4) வேளாண்மை விற்பனையில் பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல்.

(5) பருத்தி விதைக்குச் சான்றளித்தல் வலிந்து செயற்படுத்தல் திட்டம்.

1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் :

விவசாயிகளுக்கு உற்பத்தி செய்வோருக்கு ஆதாயம் தரத்தக்க விலை கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கத்துடன், தமிழ் நாட்டில் உள்ள 14 அங்காடிக் குழுக்களின் கட்டுப்பாட்டின்கீழ் 270 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1991-92 (டிசம்பர் வரை) ஆம் ஆண்டில் அங்காடிக் குழுக்களுக்கு வரப்பெற்ற வேளாண்மை விளை பொருட்கள் அவற்றின் மூலம் கிடைத்த வருவாய் ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு:—

| | |
|---|---|
| வரப்பெற்ற வேளாண்மை விளை பொருள்கள். | 3.11 இலட்சம் மெட்ரிக் டன். |
| உரிமக் கட்டணம், அங்காடிக் கட்டணம் மூலம் அங்காடிக் குழுக்களுக்குக் கிடைத்த வருவாய். | ரூ. 757.27 இலட்சம். |

சிறு, குறு விவசாயிகள் இடர்பாடு அளிக்கும் குறைந்த விலையில் வேளாண்மைப் பொருட்களை விற்பனை செய்வதை தவிர்க்கும் நோக்கத்துடன், மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் கிராமக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. தற்போது 93 கிராமக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 5 கிராமக் கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன.

2. அக்மார்க் முறையில் தரம் பிரித்தல் :

நுகர்வோர் தரமான பொருட்களை பெறுவதற்கு உதவி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அக்மார்க் முறையில் தரம் பிரிப்பதற்காக அனுப்பப்படும் சமையல் எண்ணெய் வகைகள், நெய், தேன், சுவையூட்டும் பொருட்கள் போன்ற மத்திய கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருள்களில் தரமான உணவுப் பொருள்களை வழங்குவதை உறுதி செய்வதற்காக "அக்மார்க்" தரம் பிரிப்பு ஆய்வுக் கூடங்கள் செயல்படுகின்றன. 1991-92 ஆம் ஆண்டில் (1991 டிசம்பர் வரை)



வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, வனத் துறை உற்பத்தி செய்த 1,40,817 குவிண்டால் பொருட்கள் 'அக்மார்க்' முறையின் கீழ் தரம் பிரிக்கப்பட்டன. தரம் பிரிப்பு கட்டணமாக ரூ. 9.59 இலட்சம் பெறப்பட்டது. அரிசி, பருப்பு வகைகள், உருளைக் கிழங்கு, மஞ்சள், பாக்கு போன்ற மத்திய கட்டுப்பாட்டின்கீழ் வராத பொருள்களும் தரம் பிரிக்கப்படுகின்றன. 1991-92 ஆம் ஆண்டில்(1991 டிசம்பர் வரை)1,15,724 குவிண்டால் பொருள்கள் தரம் பிரிக்கப்பட்டன. தரம் பிரிக்கும் கட்டணமாக ரூ. 0.52 இலட்சம் பெறப்பட்டது. தரம் பிரிக்கப்பட்ட பொருள்களின் தரம் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்வதற்காக மாநிலத்திலுள்ள அக்மார்க் தரம் பிரிப்பு ஆய்வுக் கூடங்களின் பகுப்பாய்வு செய்யப்பட்ட அக்மார்க் மாதிரிகளை, திருச்சிராப்பள்ளியில் செயல்படும் முதன்மை ஆய்வுக் கூடம் மேற்பார்வை செய்கிறது. இந்த ஆய்வுக்கூடம், மாநில அக்மார்க் தரம் பிரிப்பு ஆய்வுக் கூடங்களில் பணிபுரியும் ஆய்வுக் கூட உதவியாளர்களின் திறனை மேம்படுத்தவும் அவர்களுடைய தொழில்நுட்ப திறமையை வளர்க்கவும், அவர்களுக்குப் பயிற்சியளிக்கிறது.

3. வணிக முறையில் த்ரம் பிரித்தல் :

இத்திட்டம் 96 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் செயற்படுத்தப்படுகிறது. விற்பனைக்காக கொண்டுவரப்படும் பல்வேறு வேளாண் விளைபொருள்கள் தரம் பிரிக்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் தங்கள் பொருளின் தரத்திற்கேற்ப நல்ல விலையைப் பெறுகின்றனர். 1991-92 ஆம் ஆண்டில் (1991 டிசம்பர் வரை) தரம் பிரிக்கப்பட்ட வேளாண் விளை பொருள்களின் அளவு 34.45 இலட்சம் குவிண்டாலாகும். பல்வேறு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் 11 உள்ளன. புஞ்சை புளியம்பட்டியில் புகையிலை தரம் பிரிப்பு மையம் ஒன்று உள்ளது.

பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மூலமாக 2.60 இலட்சம் குவிண்டால் பருத்தி தரம் பிரிக்கப்பட்டுள்ளது. புகையிலை தரம் பிரிப்பு மையம் மூலமாக 0.06 இலட்சம் குவிண்டால் புகையிலை தரம் பிரிக்கப்பட்டுள்ளது.

4. பயிற்சி :

இந்த இயக்ககத்தில் பயிற்சி நிலையம் ஒன்று செயல்படுகிறது. இங்கு 'அக்மார்க் வணிக தரம் பிரிப்பு திட்டங்களின் கீழ் தரம் பிரிப்பு முறைகளில் உதவி வேளாண்மை அலுவலர்களுக்கும் அங்காடிக்குழுக்களின் மேற்பார்வையாளர்களுக்கும் 3 மாதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வோராண்டும் 60 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. இதுவரை 850 பேர் பயிற்சி பெற்றனர்.

5. பருத்தி விதை சான்றளித்தல்—வலிந்து செயற்படுத்துதல் திட்டம். :

பருத்தி விதையை நீக்கும் அழுத்தும் தொழிற்சாலைகளில் பல்வேறு வகைப் பருத்திகள் கலப்பதைத் தடுப்பதன் மூலம் கலப்படம் இல்லாத பருத்தியை உற்பத்தி செய்யவும் மாநிலத்திற்குள் கிடைக்கும் பருத்தியின் அளவையும், வெளி மாநிலத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்தியின் அளவையும் மதிப்பிடுவதற்கும் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. பருத்தி எடுத்துச் செல்லும் சட்டம், விதிகள் ஆகியவற்றை செயல்படுத்துவதன் மூலம் வேளாண்மை விற்பனை இயக்ககம் இத்திட்டத்தை செயற்படுத்துகிறது. இதற்காக 1991-92 ஆம் ஆண்டில் (1991 டிசம்பர் வரை) 68,690 உரிமங்கள் வழங்கப்பட்டன. ரூ. 6,84 இலட்சம் வருவாயாக வசூலிக்கப்பட்டது. பயிர் பதிவு திட்டத்தின் கீழ் 580 ஏக்கர், பயிர் சான்றளிப்புக்கு கொண்டுவரப்பட்டது.

**அரசு வேளாண்மை விற்பனை வாரியம் :**

விவசாயிகளுக்கு அதிகமான பயன் கிடைக்கும் பொருட்டு செயல் முறைகளும் நடைமுறைகளும் ஒரே சீராக இருப்பதை உறுதி செய்தவற்காக அரசுக்கும், அங்காடிக் குழுக்களுக்கும் இடையே ஒரு பாலமாக இவ்வாரியம் செயல்படுகிறது. அங்காடிக்குழுக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை இவ்வாரியம் அவ்வப்போது அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறது.

அங்காடிக் கூடங்கள், அலுவலகங்கள் பொருள் வாங்கும் விற்கும் கொட்டகைகள், கிடங்குகள், உலர வைக்கும் கிடங்குகள், விவசாயிகளுக்கு ஏனைய வசதிகள் போன்று ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கட்டுமானத்தை மேற்கொள்ள இவ்வாரியத்தின் பொறியியல பிரிவு ஒன்று உள்ளது.

**விவசாயிகளுக்கு விற்பனை உதவி :**

விவசாயிகள் குறைந்த விலையில் தங்கள் விளைபொருள்களை விற்பனைத் தவிர்ப்பதற்கும், அவர்களுக்கு ஆதாயம் தரத்தக்க விலையை அளிப்பதற்கும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், நெல், நிலக்கடலை, சிறு தானியங்கள், எள், சூரியகாந்தி, மலைத் தோட்டப்பயிர்கள் போன்ற வேளாண் விளைபொருள்களை பிணையமாக வைப்பதன் பேரில் சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், ''ஏனைய விவசாயிகள்'' ஆகியோருக்கு குறுகிய காலக் கடன்கள் அளிக்கின்றன. இத்திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்கு, குறு விவசாயிகளுக்கு விளைபொருள்களின் மதிப்பில் 75 சதவீதமும், ஏனைய விவசாயிகளுக்கு விளைபொருளின் மதிப்பில் 50 சதவீதமும்



(உயரளவு ரூ. 10,000-க்கு உட்பட்டு) கடனாக வழங்கப்படுகிறது. இதில் சிறு உழவர்களுக்கு-குறு உழவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். குறைந்தது 50 சதவீதமும், கடன் சிறு உழவர்களுக்காக - குறு உழவர்களுக்காக ஒதுக்கப்படும். நிதி நிலைமையைப் பொறுத்து ஒவ்வொரு கிராம கிடங்குக்கும் ரூ. 2.00 இலட்சத்திலிருந்து ரூ. 5.00 இலட்சம் வரை கடன் வசதி அளிக்கப்படும். உயரளவு 6 மாதங்கள் வரை வேளாண்மை விளை பொருள்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கிடங்குகளில் வைக்கப்படும். விவசாயிகளிடமிருந்து தனியே இடங்கு வசதிக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதில்லை. முதல் மாதத்திற்கு கடனுக்கு வட்டி ஏதும் வசூலிககப்படுவதில்லை. எனினும் இரண்டாவது மாதத்திலிருந்து ஆறாவது மாதம் வரை கடன் மீது ஆண்டொன்றுக்கு 12 சதவீதம தனி வட்டி வசூலிக்கப்படுகிறது.

கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டம்.

கரும்பு பயிரிடப்படும் பகுதிகளுக்கும் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கும் இடையே இணைப்புச் சாலைகள் அமைப்பதற்காக கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. கரும்புப் போக்குவரததை எளிதாக்குவதே இச்சாலை அமைப்புத் திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் இம்மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் கரும்புகளுக்கு டன் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் என்ற வீதத்தில் விதித்து வசூலிக்கப்படும் தொகையும் கரும்பு மேல்வரி நிதியிலிருந்து ஒரு பகுதியும் கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்ட நிதிக்கு ஒதுக்கப்படுகிறது.

சர்க்கரைத் துறை ஆணையாளர், சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுடன் கலந்தாலோசித்து செய்யும் பரிந்துரைகளின் அடிப்படையில், அரசு, புதிய சாலைப் பணிகளைத் தெரிந்தெடுக்கிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் சாலைப் பராமரிப்புப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை பற்றிய விவரம் வருமாறு: —

| | ஆண்டு | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | 1987–88 .. .. .. .. | 200.17 |
| 2. | 1988–89 .. .. .. .. | 200.16 |
| 3. | 1989–90 .. .. .. .. | 200.01 |
| 4. | 1990–91 .. .. .. .. | 300.00 |
| 5. | 1991–92 .. .. .. .. | 662.00 |

[1992 ஏப்ரல் 21

1992-93 ஆம் ஆண்டில் 500 இலட்சம் ரூபாய் செலவில் புதிய சாலைப் பணிகளை மேற்கொள்ளவும் பழைய சாலைகளைப் பராமரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (அதாவது, தனியார் துறை சர்க்கரை ஆலைப் பகுதிகளுக்கு 300 இலட்சம் ரூபாயும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளுக்கு 200 இலட்சம் ரூபாயும் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது).

நகர்புற கலவை உரத்திட்டம்:

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 99 நகராட்சிகள் மற்றும் 7 நகரியங்கள் உள்ளன. நடப்பு ஆண்டில் 106 நகராட்சிகளில் மொத்தம் 3,15,900 மெ.டன் கலவை உரம் தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி மன்றங்கள் ஒவ்வொன்றின் கலவை உர உற்பத்தித் திறன் (மெட்ரிக் டன்னில்) அந்தந்த உள்ளாட்சி மன்றங்களின் மக்கட் தொகையில் 3 சதவிதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. நகராட்சிகளில் தயாரிக்கப்படும் கலவை உரம் வேளாண் பெருங்குடி மக்கள் அவர்களின் வயல்களில் பயன்படுத்த விநியோகிக்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் நகராட்சிகளில் உற்பத்தி செய்யப்பட்ட கலவை உரம் பற்றிய விபரம் பின்வருமாறு:

| ஆண்டு. (1) | உற்பத்தி. (மெ. டன்னில்) (2) |
|---|---|
| 1986-87 | 2,19,353 |
| 1987-88 | 2,24,777 |
| 1988-89 | 2,56,550 |
| 1989-90 | 2,58,550 |
| 1990-91 | 2,83,900 |
| 1991-92 | 2,83,900 |

1992-93 ஆம் ஆண்டுக்கான இலக்கு, உள்ளாட்சி மன்றத்தின் அப்போதுள்ள ஜனத் தொகையில் 3 சதவீதம் எனக் கணக்கிட்டு நிர்ணயிக்கப்படும்.

1991-92 ஆம் ஆண்டுக்கான கலவை உரப் போட்டியில் கலந்துகொள்ள 31 நகராட்சிகள் பதிவு செய்துள்ளன. இவற்றில் நல்ல தரமுடைய கலவை உரம் தயாரித்து அதிக அளவில் விற்பனை செய்த நகராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பண முடிப்பும், சுழற்கேடயமும் வழங்கப்படும்.



1992 ஏப்ரல் 21]

1992-93 ஆம் ஆண்டிலும் நகராட்சிகள் நிலைவாரியாக பிரிக்கப்பட்டு கலவை உரப் போட்டி நடத்தப்பட்டு, அவற்றின் கலவை உரத்தின் உற்பத்தி அளவின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுகள் வழங்கப்படும்.

கழிவு நீர்ப் பண்ணைகள்:

தற்போது 22 உள்ளாட்சி மன்றங்கள் கழிவு நீரைப் பயன்படுத்தி கழிவு நீர் பண்ணைகளை பராமரித்து வருகின்றன. இப்பண்ணைகளில் தீவனப்புல், தென்னை, சிறுதானியங்கள், கரும்பு, காய்கறிகள் இதரப் பயிர்கள் லாபகரமாக பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகளின் உற்பத்தி திறனை அதிகரிக்கவும், வளத்தைப் பெருக்கவும், முறையாக இவற்றை பராமரிக்கவும் உள்ளாட்சி மன்றங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள்—திட்டம்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் மத்திய அரசு பொறுப்பேற்கும் ஒரு திட்டமாகும். இத்திட்டம், இம்மாநிலத்தில் 1974-75 ஆம் ஆண்டில் இருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காகும் செலவை மத்திய மாநில அரசுகள் 50 : 50 என்ற அடிப்படையில் சமமாகப் பகிர்ந்துகொள்கின்றன. தற்போது இத்திட்டம் இம்மாநிலத்தில் பின் வருமாறு ஏழு மாவட்டங்களில் 43 வளர்ச்சி வட்டாரங்களில் செயற்படுத்தப்படுகிறது:

| மாவட்டங்கள். (1) | வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயற்படுத்தப்படும் வளர்ச்சி வட்டாரங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. தர்மபுரி | 12 |
| 2. சிதம்பரனார் | 8 |
| 3. இராமநாதபுரம் | 7 |
| 4. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் | 6 |
| 5. காமராஜர் | 5 |
| 6. புதுக்கோட்டை | 4 |
| 7. திருநெல்வேலி கட்டபொம்மன் | 1 |
| மொத்தம் | 43 |

(2) உயரின வாழ்க்கைச் சூழலின் ஏற்றத் தாழ்வை சீராக்கு வதை நோக்கமாகக் கொண்டு, உரிய அளவுக்கு இயற்கை ஆதாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வறட்சிக்கு இலக் காகும் பகுதிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்துவது இத்திட் டத்தின் குறிக்கோளாகும். வகுக்கப்பட்ட இத்திட்டத்தில் மூன்று முக்கிய பணிகள், அதாவது நில மேம்பாடு, மண் ஈரத் தன்மை யைப் பாதுகாத்தல், காடு வளர்ப்பு, மேய்ச்சல் நில மேம்பாடு, நீர்வள ஆதாரங்கள் மேம்பாடு ஆகியவை அடங்கும். மற்ற பணிகள் ஏனைய பணி திட்டங்களின் கீழ் நிறைவேற்றப்படும்.

(3) 1991–92 ஆம் ஆண்டில் 19,940 ஹெக்டேர் பரப்பில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தைச் செயற் படுத்து வதற்கு ரூ. 657.00 இலட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள் ளது. இத்திட்டத்தின் கீழ் 1991 டிசம்பர் வரை செலவிடப்பட்ட தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு :

நடப்பு ஆண்டு 1991–92 :

| | நிதி ஒதுக்கீடு. | 1991 டிசம்பர் வரை செய்யப் பட்ட செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சம்.) | |
| நிதி .. .. | 657.00 | 401.80 |

| | இலக்கு. | 1991 டிசம்பர் வரை எய்திய சாதனை. |
|---|---|---|
| | (4) | (5) |
| | (ஹெக்டேர்) | |
| திட்டம் .. .. | 19,940 | 17,800 |

(4) எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், ஆண்டு நிதி ஒதுக் கீட்டு அளவை அதிகரித்தல், திட்ட நிர்வாகம் குறித்த செலவுத் தொகையை அதிகரித்தல் ; சொத்துக்கள், சிறு பாசனப் பணிகள் பராமரிப்புக்கு நிதி ஒதுக்குதல், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் கீழ் அதிகமான பகுதிகளைக் கொண்டு வருதல் ஆகியவை குறித்து மாநில அரசு தெரிவித்த கருத்துக்களை மத்திய அரசு பரிசீலிக்கும் என்று நம்பப்படுகிறது.



தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம்.

வேளாண்மை, இந்தியப் பொருளாதாரத்தின் அச்சாணியாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. மக்களுள் எழுபது சதவீதம் பேர் வேளாண் தொழிலின் பல்வேறு பிரிவுகளில் ஈடுபட்டுள்ள தாலும் மொத்த உற்பத்தியில் 36 சதவீதம் வேளாண் துறையிட மிருந்து கிடைப்பதாலும், மக்கள் தொகையில் 75 சதவீதம் பேர் வேளாண்மையையும், அது தொடர்பான தொழில்களையும் சார்ந்துள்ளதாலும், வேளாண் தொழிலின் வளர்ச்சிக்கும் அதை நவீனமயமாக்குவதற்கும் உதவுவதற்காக நாடெங்கும் வேளாண் தொழில் கழகங்களை மத்திய, மாநில அரசுகள் அமைத்துள்ளன. 1966 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகம் (TAI) தமிழகத்தில் வேளாண் தொழிலை நவீனமயமாக்குவதிலும், வளர்ச்சியடையச் செய்வதிலும் பய னுள்ள முனைப்பான பணியை 25 ஆண்டு காலம் ஆற்றி வருகிறது.

(2) இக்கழகம், 1991–92 ஆம் ஆண்டில் பல்வேறு நிறுவனங் கள் உற்பத்தி செய்யும் 32,000 டன் இரசாயன உரங்கள், 391 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உதிரிப் பாகங்கள், கருவிகள், 165 டிராக்டர்கள், 438 விசைக் கலப்பைகள் ஆகியவற்றை விற்பனை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கழகத்தின் பூச்சி கொல்லி மருந்து தயாரிக்கும் பிரிவு 23.16 டன் பயிர் பூச்சிக் கொல்லி மருந்துத்தூள், 22,79,461 லிட்டர் திரவ மருந்து ஆகியவற்றை உற்பத்தி செய்யவும் திட்டமிட்டுள்ளது. இதன் மீன்பிடி வலை தயாரிக்கும் பிரிவு 59 டன் மீன் பிடி வலைகளைத் தயாரிக்கும். உடுமலைப்பேட்டையிலுள்ள மலைப் புல் வகை கால்நடைத் தீவனப் பிரிவு இக்கால அளவில் 117 டன் கால்நடைத் தீவனம் தயாரிக்கும். போச்சம்பள்ளி எண்ணெய் ஆலை 7,600 டன் சூரியகாந்தி விதைகளை செய்முறைப்படுத்தும், 1,600 டன் கச்சா சூரியகாந்தி எண்ணெயைச் சுத்திகரிக்கும் ; 4,250 டன் ' சனோலா ' சூரியகாந்தி எண்ணெயைத் தயாரிக்கும். இக்கழகம் நாமக்கல்லில் உள்ள கரைசல் முறையில் எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலையில் 555 டன் அரிசித் தவிட்டில் இருந்து எண் ணெய் தயாரிக்கப்படுகிறது.

(3) இக்கழகம், 1992–93 ஆம் ஆண்டில், 50,000 டன் இரசாயன உரங்கள், 190 டிராக்டர்கள், 430 விசைக் கலப்பைகள், 449 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உதிரிப் பாகங்கள் கருவிகள், ஆகியவற்றை விற்கத் திட்டமிட்டுள்ளது. இக்கழகம் 400 டன் பயிர்ப் பூச்சிக்கொல்லி மருந்து தூள், 3 இலட்சம் லிட்டர் திரவ பயிர்ப் பூச்சிக்கொல்லி மருந்து, 60 டன் மீன்பிடி வலைகள் ஆகியவற்றைத் தயாரிக்கக் கருதியுள்ளது. போச்சம்பள்ளியில் 10,000 டன் சூரியகாந்தி விதைகளை செய்முறைப்படுத்தவும்,

1,100 டன் கச்சா சூரியகாந்தி எண்ணெய் வாங்கி சுத்திகரித்து 4,550 டன் ' சனோலா ' எண்ணெய், 2,400 டன் பிண்ணாக்கு ஆகியவற்றை விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(4) இக்கழகத்தினுடைய மொத்த வியாபாரத் தொகை 1988–89 ஆம் ஆண்டு முதல் 1990-91 வரை உள்ள மூன்றாண்டு கால அளவில் 2.6 மடங்கு உயர்ந்துள்ளது, ஒரு முக்கியமான குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதாவது 1988–89 ஆம் ஆண்டில் ரூபாய் 16.87 கோடியாக இருந்த மொத்தவிற்பனை 1990–91 ஆம் ஆண்டில் ரூபாய் 43.94 கோடியாக உயர்ந்துள்ளது. எனினும், இக்கழகத்தின் எல்லா பிரிவுகளிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை அங்காடியில் விற்பனை செய்கையில் கடுமையான போட்டியிருந்த காரணத்தால், இக்கழகத்தினால் விற்பனை செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களிலிருந்தும் கிடைக்கும் ஆதாயத்தின் அளவு வெகுவாகக் குறைந்துள்ளது. ஊழியர்களின் சம்பளங்களை மாற்றியமைத்தது, கடன் தொகை அதிகரிப்பு, இடுபொருட்களின் விலை ஏற்றம் ஆகியவற்றால் இக்கழகத்தினுடைய செலவு அதிக அளவுக்கு உயர்ந்துள்ளது. இத்தகைய கடுமையான இடர்ப்பாடுகள் இருந்தும் இழப்பு சிறிதளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக 1990–91 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இழப்பு (தற்காலிகமானது) முந்தைய ஆண்டை விட ரூபாய் 35 இலட்சம் குறைவானதாகும்.

(5) சனோலா எண்ணெய் விலைக் குறைப்பு :

சமையல் எண்ணெய் சந்தையில், சமையல் எண்ணெயின் விலையைக் கட்டுப்படுத்தியதோடல்லாமல், அதன் விலையைக் குறைத்ததே 1991–92 ஆம் ஆண்டில் இக்கழகம் ஆற்றிய ஒரு முக்கியப் பணியாகும். பொதுவாக வேளாண் விளைபொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டும், குறிப்பாக சமையல் எண்ணெயின் விலை தொடர்ந்து அதிகரித்தும் வந்தபோது, சமையல் எண்ணெயின் சில்லரை விற்பனை விலையை கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 50 பைசா குறைத்து விற்று வருகிறது. பொதுவாக, 13 முதல் 14 சதவீதம் வரை விலை ஏற்றத்தில் இருக்கும் இன்றைய பொருளாதார சூழ்நிலையில், இக்கழகம் தயாரித்த சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயின் (சனோலா என்ற வியாபாரப் பெயரில் வழங்கப்பட்டு வருகிறது) விலைக் குறைப்பு அதாவது கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 50 பைசா வீதம் குறைத்து விற்பனை செய்வது மக்களுக்கு இக்கழகம் ஆற்றி வரும் மாபெரும் தொண்டாகும்.

தமிழ்நாடு வேளாண் பொறியியல்—பணிக் கூட்டுறவு இணையம் (என்கோஃபெட்).

தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் (என்கோஃபெட்) 1972 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது, வளர்ச்சி, வட்டார, மாவட்ட அளவுகளில் வேளாண் பணி மையங்களை





நிறுவி, கிராமப்புற உழவர்களுக்குப் பற்பல வேளாண் பொறியியல் பணிகளைச் செய்து கொடுப்பதே இந்த இணையத்தின் முதன்மையான நோக்கமாகும். விதைகள், உரங்கள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், பூச்சிக்கொல்லிகள், போன்ற வேளாண் இடுபொருட்களை வழங்குதல், வேளாண் துணைக் கருவிகளைப் பழுது பார்த்தல், வேளாண் துணைக் கருவிகளையும், இயந்திரங்களையும் வாடகைக்குக் கொடுத்தல் ஆகிய வகைகளில் இந்த வேளாண் பணி மையங்கள் கிராமப் பகுதிகளில் உள்ள உழவர்களுக்குப் பணியாற்றுகின்றன.

தற்போது வளர்ச்சி, வட்டார அளவில் 183 வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்களும் மாவட்ட அளவில் 12 வேளாண் பணிச் சங்கங்களும் உள்ளன. இவை தமிழ்நாடு வேளாண் பொறியியல் — பணிக் கூட்டுறவு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

சிறப்புப் பணிகளும், திட்டங்களும் :

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் 1984–85 ஆம் ஆண்டிலிருந்து உழவர்கள் வேளாண் பணி மையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் முக்கியக் கூறுகளாவன :

(1) புதிய உழவர் வேளாண் பணி மையங்களை அமைத்து அவற்றுக்கு 50 சதவீதம் மானியம் வாடகைக்கு இயந்திரங்களை வழங்குதல்.

(2) மேம்படுத்தப்பட்ட வேளாண் துணைக் கருவிகள், கைக் கருவிகளையும் பயன்படுத்துவது குறித்து செய்முறை விளக்கங்களை நடத்துதல்.

(3) 50 சதவீத மானிய உதவித் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட வேளாண் துணைக் கருவிகள், கைக்கருவிகளை வழங்கி அவற்றை உழவர்களிடையே பிரபலப்படுத்துதல்.

1991–92 ஆம் ஆண்டில் (1992 ஜனவரி வரை) தமிழ்நாடு வேளாண் பொறியியல் பணிக்கூட்டுறவு இணையம் நிறைவேற்றிய, முக்கியமான திட்டங்கள், பணிகள், 1992–93 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற பணிகள், திட்டங்கள் ஆகியவை குறித்த அறிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

இணைப்பு திட்டம்.

| தொடர் எண் மற்றும் நடவடிக்கைகள். | திட்டம். | | | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 1991-92 இலக்கு. | 1992 ஜனவரி வரையில் சாதனை. | 1992-93 இலக்கு. | 1991-92 இலக்கு. | 1992 ஜனவரி வரையில் சாதனை. | 1992-93 இலக்கு. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. அனைத்து வகை தெளிப்பான்கள் விற்பனை. | 19,000 | 16,886 | 21,000 | 170 | 138.96 | 200.00 |
| 2. உருளைகளை வாடகைக்குக் கொடுத்தல். | 900 நாட்கள். | 715 நாட்கள். | 900 நாட்கள். | 3.60 | 2.97 | 4.00 |
| 3. டிராக்டர்களை வாடகைக்குக் கொடுத்தல். | 1,45,000 மணி. | 1,65,658 மணி. | 1,70,000 மணி. | 82.00 | 94.48 | 89.00 |
| 4. விசைக் கலப்பைகளை வாடகைக்குக் கொடுத்தல். | 20,000 மணி. | 14,466 மணி. | 20,000 மணி. | 7.00 | 4.60 | 7.60 |
| 5. உரங்கள், பூச்சி மருந்துகள், குழாய்கள், பம்பு செட்டுகள் முதலியன விற்பனை. | .. | .. | . | 1,100.00 | 764.09 | 1,000.00 |
| 6. குழாய்க் கிணறுகளையும் கட்டுமானப் பணிகளையும் பழுது பார்த்தல், சீரமைத்தல் முதலியன. | .. | .. | .. | 960.00 | 729.16 | 960.00 |
| 7. ஒட்டு மொத்த வணிகம் .. | .. | .. | .. | 2,322.60 | 1,734.26 | 2,360.00 |



1992 ஏப்ரல் 21]

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் :

1991-92 ஆம் ஆண்டில், வேளாண் கல்வி, ஆராய்ச்சி விரிவாக்கக் கல்வி ஆகியவற்றில் பல்கலைக்கழகம் எய்திய சாதனைகள் பற்றியும், இனி மேற்கொள்ளவிருக்கும் பெரு முயற்சிகள் பற்றியும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1991 ஆம் ஆண்டில், இப்பல்கலைக் கழகத்தின் 6 கல்லூரி வளாகங்களிலுள்ள பி.எஸ்சி. (வேளாண்மை), பி.எஸ்சி (தோட்டக் கலை), பி.ஈ., (வேளாண் பொறியியல்), பி.எஸ்சி. (வனவியல்), பி.எஸ்சி. (மனையியல்) ஆகிய பட்டப் படிப்புகளில் 472 மாணவ, மாணவியர்களும், 4 கல்லூரி வளாகங்களிலுள்ள பட்டப் படிப்பிற்கான பிந்தைய படிப்புகளில் அதாவது (எம்.எஸ்சி., பி.எச்.டி. பட்டப் படிப்பிற்கு பிந்தைய பட்டயப் படிப்பு) ஆகியவற்றில் 289 மாணவ, மாணவியர்களும் சேர்க்கப்பட்டனர்.

ஓராண்டுக் காலம் பயிலத்தக்க வணிக வேளாண்மை பட்டப் படிப்பு (பி.சி.ஏ.) என்ற புதிய பாடத் திட்டமும், 4 ஆண்டுக் காலம் பயிலத் தக்க வேளாண் தொழில் நுட்ப பட்டப்படிப்பான (B. Agri. Tech.) புதிய பாடத் திட்டமும், இப்பல்கலைக் கழகத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள பாடத் திட்டங்களாகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பின்வரும் 16 வகைப் பயிர்களை அறிமுகப்படுத்தியுள்ளது :

| | | | | |
|---|---|---|---|---|
| நெல் | .. | .. | .. | 1 |
| பயறுவகை | .. | .. | .. | 1 |
| எண்ணெய்வித்து | | .. | .. | 1 |
| பருத்தி | .. | .. | .. | 1 |
| கரும்பு | .. | .. | .. | 2 |
| பழங்கள் | .. | .. | .. | 3 |
| காய்கறிகள் | .. | .. | .. | 1 |
| மரங்கள் | .. | .. | .. | 2 |
| பூக்கள் | | .. | .. | 2 |
| தீவனப் புற்கள் | | .. | .. | 2 |

புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள பயிர்/மர வகைகளின் முக்கிய பண்பியல்கள் வருமாறு :

### டி.கே.எம். 10 நெல் :

இது செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், அதிக விளைச்சல் தரவல்ல, குறுகிய கால புழுதிக்கால் சாகுபடிக்கேற்ற நெல் வகையாகும்.

[1992 ஏப்ரல் 21

**வம்பன் 1- துவரை :**

அதிக விளைச்சல் தரவல்ல குறைந்தகால பயிராகும். இந்த வகை ஒரே முறையில் அறுவடை செய்யவும் கடலையில் ஊடு பயிராகப் பயிரிடவும் ஏற்றது.

**எஸ்.வி.பி.ஆர். 1- எள் :**

அதிக விளைச்சல் ,தரவல்ல, விரைவில் முதிர்ந்துவிடக்கூடிய வெள்ளை நிற வித்துக்களையுடைய இந்த வகை எள் முடிக் கொத்து நோயை எதிர்த்து நின்று பயன் தரவல்லது.

**ஏ.டி.டி. 1- பருத்தி :**

அதிக பருத்தி மகசூலை தரவல்ல, குறைந்த காலப் பயிர். காவிரிப் பாசனப் பகுதியிலுள்ள தரிசு நிலத்தில் பயிர் செய்வதற் கேற்றது. இது எம்.சி.யு. 7-க்கு மாற்று வகைப் பருத்தியாகும்.

**கோ.க. 92061—கரும்பு :**

இக்கரும்பு குறைந்த காலத்தில் பயிராவதோடு, அதிக விளைச் சலையும், தரமான சாறையும் 8-ஆம் மாத முதலே அறுவடைக்கு வரக்கூடிய தனித் தன்மையும் கொண்டது. இதனால், மூன்று முறை (இரண்டு வருடத்தில்) பயிரிட இயலும். மேலும் கரும்பாலைகளுக்கு கரும்புச் சாறு பிழியும் நாட்கள் அதிகரிக் கிறது. இந்த வகை 11 மாதங்கள் வரையிலும் அறுவடை செய்ய ஏற்றது. கோ.க. 671-ஐ விட சிறந்தது.

**கோ. 8362—கரும்பு :**

அதிக விளைச்சல் தரவல்ல நடுப்பட்டத்திற்கு உகந்த இந்த இரகம் கோ. 6304-ஐ காட்டிலும் விளைச்சல், சாறு, மறுதாம்பு விளைச்சல் போன்றவற்றில் சிறந்தது.

**வையூர்-1..நீலம் மா :**

அதிக விளைச்சல் தரவல்ல தரமான பழங்களுடையதும் தவறாமல் காய்க்கும் இந்த இரகம் குறுகிய இடைவெளியில் பயிரிட ஏற்றது. பழத்தைப் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு இப்பழங்கள் உகந்தது.



1992 ஏப்ரல் 21]

**பி.கே.எம். 2—வீரிய ஒட்டு சப்போட்டா :**

அதிக விளைச்சலும், தரமான பழங்களும் தரவல்ல இந்த இரகம் குறுகிய இடைவெளியில் நட்டு பயிரிட ஏற்றது. இது பழம் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்குகந்த இரகமாகும். மேலும் 4-வது ஆண்டிலேயே பயன் தரவல்லது.

**பாலூர் 1—பலா :**

அதிக விளைச்சலும், அதிக அளவில் தரமுடைய சுளைகள் தரவல்ல இந்த இரகம் வருடத்திற்கு இருமுறை காய்ப்பதுடன் 5-வது வருட முதலே அறுவடைக்கு வரவல்லது.

**பி.கே.எம். 1—புளி :**

அதிக விளைச்சலும், விரைவில் பலனும் தரவல்ல அதிக சதைப் பிடிப்புடன் கூடிய பழங்களுடைய இரகம்.

**எஸ்.வி.பி.ஆர்.—பனை :**

ஓரளவு உயரமான இந்த இரக பனை மரங்கள் ஓராண்டில் மரமொன்றிற்கு 288 லிட்டர் பதநீர் தரவல்லது. ஒரு லிட்டர் பதநீரிலிருந்து 144 கிராம் பனை வெல்லம் கிடைக்கும்.

**ஊட்டி 1—பீட்ரூட் :**

அதிக விளைச்சலும், எல்லாப் பருவத்திலும் பயிரிட ஏற்றது மான மெல்லிய தோலுடைய இரத்த சிவப்புடை இரகம்.

**ஒய்.சி.டி. 2—ரோஜா :**

மஞ்சள் கலந்த இளஞ்சிவப்பு நிறமுடைய இந்த ரோஜா, கவாத்து செய்த 35 நாளிலேயே பூப்பதுடன், ஒரு செடிக்கு 150 முதல் 200 வரையில் மலர்களைத் தரவல்லது. மலரின் நிறம், மொட்டாக இருக்கும்போதும், மொட்டு விரியும்போதும் மாறுபடு கிறது. இதற்கு வெளிநாட்டில் நல்ல கிராக்கி உள்ளது.

**ஒய்.சி.டி. 1—ஜெர்பரா :**

இந்தக் குட்டையான நீண்ட காலப் பூச்செடி. நட்ட 45 நாட்களிலேயே பூப்பதுடன், அலங்காரப் பூத் தொழிலுக்கு மிகவும் உகந்த இரகமாகும்.

கோ. 8—தீவனக் கம்பு :

இது குறைந்த வயதுடைய சத்தான, அதிகத் தூர் கட்டும் இனிப்பான தண்டுகளுடையதும், கால்நடைகள் விரும்பி உண்ணக் கூடியதுமான இரகமாகும்.

கோ. 1—கினியாப்புல் :

இது அதிக மகசூல் தரக்கூடிய, அதிகத் தூர்கள் கொண்ட வறட்சி மற்றும் நிழலைத்தாங்கி வளரும் தன்மையுடைய கால் நடைகள் விரும்பி உண்ணுகின்ற சத்துமிக்க புல் வகையாகும்.

வேளாண் மக்களின் வேலைப் பளுவைக் குறைக்கவும், அவர் களின் திறனையும் வணிகஞ் சார்ந்த வேளாண்மையையும், மேன்மையுறச் செய்யவும், வேளாண் பொறியியல் கல்லூரி உரு வாக்கிய கீழ்க்கா ணும் 7 வேளாண் எந்திர ங்கள்எந்திர நுணுக்கப் பாகங்கள் ஆகியவை 1992 ஜனவரி திங்களில் அறிமுகப்படுத்தப் பட்டன.

(1) எந்திரக் கலப்பையுடன் இணைத்து நீர் இறைக்கின்ற கருவி.

(2) கைகளினாலும், கால்களினாலும் இயக்கப்படுகின்ற தீவனப் பயிர் வெட்டும் கருவி.

(3) பழங்களையும், காய்கறிகளையும் சூரிய வெப்பத்தில் உலர்த்தும் கருவி.

(4) தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் தயாரித்த அடுப்புகள்.

(5) உயிரியல் முறையில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் பொருட்கள் தயாரிக்கும் முன்னோடி ஆலை.

(6) ஊதாக் கதிர் விளக்குப் பொறியின் மூலம் தானிய சேமிப்புக் கிடங்கில் பூச்சிக் கட்டுப்பாடு.

(7) பயிரைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவும் ஒட்டுண்ணிகளை உருவாக்கும் போது பூச்சிகளை முட்டையிட்டு அவற்றைச் செதில் போன்ற துகள்களால் மூடுகிறது. இதனைச் சுத்தப்படுத்த கோர்சைரா எனப்படும் இக்கருவி உதவும்.

இருபதாம் நூற்றாண்டிற்குள் அரிசி உற்பத்தியை, தற்போதைய அளவான 62 இலட்சம் டன்னிலிருந்து 75 இலட்சம் டன்னாக உயர்த்த, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக விஞ்ஞானிகள்,



பயிர் வகைத் தேர்வு, விதை உற்பத்தி, பயிர் நிர்வாகம், பயிர்ப் பாதுகாப்பு, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல், பண்ணைக் கருவிகள், வேளாண் விரிவாக்கம் மற்றும் பயிற்சி ஆகியவைக் குறித்த உத்திகளைக் கண்டுபிடித்துள்ளனர். மேற்சொன்ன இலக்கை அடைய, விஞ்ஞானிகள், தங்களுடைய முழு தொழில் நுட்ப ஆதரவையும் வேளாண் துறைக்கு நல்கியுள்ளனர்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் மகரந்தத்தின் மூலம் 140 நாட்கள் வயதுடைய டி.என்.ஏ.யு. (ஏசி) 88115 என்ற அரிசி வகையை உருவாக்கியது. இது, சோதனை முறையாக பல வயல்களில் பயிரிடப்பட்டது. இந்த ரகம், சராசரியாக ஏக்டேருக்கு 5.61 டன் மகசூல் தருகிறது. இது, புகையான் குலைநோய் மற்றும் ஆர்.டி.வி. நச்சுரிக்கு எதிர்ப்பு சக்தியுடையது.

உயிர் நுட்பவியல் துறையில் அசோலா மற்றும் நீலப் பச்சைப் பாசிகளைப் பயன்படுத்தி, கோவை மற்றும் பெரியார் மாவட்டங் களில் 7 செயல்முறை விளக்கங்கள் செய்து காட்டப்பட்டன. இது உரச் செலவைக் குறைக்க வேளாண் மக்களுக்குப் பெரிதும் உதவும்.

வேளாண் மக்கள் பயன் பெறுவதற்காக, 1991—92 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திலுள்ள பல்வேறு ஆராய்ச்சி மையங் களிலும் வேளாண் அறிவியல் நிலையங்களிலும் மற்றும் பல வேளாண் மக்களின் தோட்டங்களிலும் பல்வேறு செயல்முறை பயிற்சிகள் விரிவான முறையில் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாண்டில் 263 வீடியோ பாடங்கள் தயாரிக்கப்பட்டு அதிக அளவில் பயன்படுத்தப்படுவதற்காக விநியோகிக்கப்பட்டன.

அண்ணா மாவட்டத்திலுள்ள பழனி வட்டத்தில் இறவைப் பாசனம் மட்டும் மானாவாரிப் பாசனத்தில் பயிரிடப்படும் முக்கியப் பயிர்களில் மகசூலின் இடைவெளி 26.8 சதவீதத்தி லிருந்து 74.6 சதவீதம் வரை இருப்பது கண்டறியப்பட்டது.

உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படும் தமிழ்நாடு விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விதை உற்பத்தித் திட்டம் பவானிசாகர், விருத்தாசலம், பெரியகுளம், கிள்ளிக்குளம், வம்பன், பாலூர் மற்றும் முகுளூர் ஆகிய தற்போதுள்ள 7 ஆராய்ச்சி நிலையங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு வீடியோ நூலகம்ஏற்படுத்தப்பட்டு, வீடியோ நிகழ்ச்சிகள் மற்றும் பாடங்களைத் தயாரிக்கும் பணி அதனிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இந்த முன்னோடி விரிவாக்க தொழில் நுட்பங் களும், பரிந்துரைகளும், வேளாண் அறிவியல் நிலைய மற்றும் வேளாண் பயிற்சி நிலையத்தின் மூலம் மிக விரைவில் வேளாண் மக்களை எட்ட உதவியாக இருக்கும்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படும் வேளாண்மை அறிவியல் நிலையங்களின் மூலம் வளர்ச்சி வட்டத்தில் "100 முன்னோடிப் பண்ணைகள்" அமைக்க, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பண்ணைகள் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களான பால்வளம், கோழி வளர்ப்பு, பழத் தோட்டம், வேளாண் - வனவியல் போன்றவற்றின் தொழில் நுட்பங்கள் பற்றியும் மேற்சொன்ன தொழில் நுட்பங்களைப் பின்பற்றுவதற்கான சாத்தியக் கூறு பற்றியும் அறிய உதவும் மைய நிலையங்களாகச் செயல்படும்.

1992-93ஆம் ஆண்டில் பின்வரும் பகுதி இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | 1992-93-க்கான செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்). |
| வேளாண்மை— | | |
| 1 | கரம்பு நில மேம்பாட்டுத் திட்டப் பணிகள். | 75.00 |
| 2 | தென்னங்கன்றுகள் வழங்குவதற்காக தென்னங்கன்றுகள் பாதுகாப்பு விற்பனைப் பிரிவு அமைத்தல். | 18.45 |
| 3 | வானவாரிப் பகுதிகளில் தரமான வித்துக்கள் பயன்படுத்தப்படுவதையும் நிலக்கடலை சாகுபடியையும் ஊக்கப்படுத்துதல், ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துதல். | 30.00 |
| 4 | தமிழ்நாட்டில் தஞ்சாவூர் வாடல் நோய் மற்றும் கேரள வாடல் நோயினால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களைக் கண்டறிந்து, அந்நோய்களை ஒழிப்பதற்கான திட்டம். | 1.55 |
| 5 | மாநில விதைப் பண்ணைகளுக்கு அடிப்படை வசதி அளித்தல். | 51.30 |
| 6 | தமிழ்நாட்டில் எண்ணெய் தரும் பனை மரங்கள் வளர்ப்புத் திட்டம். | 10.00 |
| | வேளாண்மை—மொத்தம் .. | 186.30 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| | தோட்டக்கலை மலைத் தோட்டப் பயிர்கள் :— | |
| 7 | மாநிலத் தோட்டக் கலைப் பண்ணைகளுக்குப் பாசன வசதியளித்தல். | 11.20 |
| 8 | மாநிலத் தோட்டக் கலைப் பண்ணைகளுக்கு முள்வேலியும் அணுகு சாலையும் அமைத்தல். | 3.00 |
| 9 | மாநிலத் தோட்டக்கலைப் பண்ணைகளில் சேமிப்பு கிடங்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல். | 2.50 |
| 10 | பூ, பழச்செடிகள் உற்பத்தி செய்தல் மற்றும் பழச்செடிகள் உற்பத்தியை அதிகரித்தல் திட்டம். | 8.87 |
| | தோட்டக்கலை—மொத்தம் .. | 25.57 |
| | வேளாண் பொறியியல்— | |
| 11 | டீசலில் இயங்கும் ஐந்து பழைய ஜீப்புகளுக்குப் பதிலாகப் புதியன வழங்குதல். | 10.00 |
| | தமிழ்நாடு வேளாண் தொழில் நிறுவனம் : | |
| 12 | தமிழ்நாட்டின் எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டம். | 25.00 |
| | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்— | |
| 13 | புதிய திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் ஆராய்ச்சிக்காகவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி. | 41.85 |
| | பெரு மொத்தம்—வேளாண்மைத் துறை. | 2,88.72 |

இணைப்பு III

கொள்கை விளக்கம் 1992-93.

கோரிக்கை எண் 22.

கால்நடை பராமரிப்புத் துறை.

பாகம்— 1.

பொது விவரம்.

முன்னுரை :

தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பு கிராமப்புற விவசாயி களின் வாழ்க்கையிலும் கிராமப்புற பொருளாதாரத்திலும் வெகுகாலமாக இன்றியமையாததாக இருந்து வருகின்றது. இருந்தபோதிலும் சில வருடங்களுக்கு முன் கிராமப்புற விவ சாயிகள் கால்நடை வளர்ப்பில் அதிகம் அக்கறை காட்டவில்லை. தமிழ்நாட்டில் பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் கோழி களின் உற்பத்தித் திறன் குறைவாக இருந்ததே இதற்குக் காரணமாகும். சமீப காலங்களில் தரம் உயர்த்தப்பட்ட இனங் களினால் கால்நடை வளர்ப்பு தமிழ்நாட்டில் கிராமப்புற விவசாயக் குடும்பங்களுக்கு உபரி வருமானம் கொடுக்கக் கூடியதாகவும், கிராமப்புற பொருளாதாரம் மேன்மையடை யச் செய்வதாகவும் அமைந்துள்ளது.

கால்நடைகள் மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறன் அதி கரித்த காரணத்தால் தமிழ்நாட்டில் பால்; இறைச்சி, முட்டை உற்பத்தியும், ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு கிடைக்கக் கூடிய அளவும் அதிகரித்துள்ளது. கிராமப்புற பொருளாதாரம் கால்நடை வளர்ப்பின் மூலம் கிடைக்கக்கூடிய உபரி வருமானத் தால் மேன்மை அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பு மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப் பட்டு புரதச் சத்து மிக்க பால், இறைச்சி, முட்டை ஆகியவை களின் உற்பத்தி அதிகரிக்க கால்நடைப் பராமரிப்புத் துறை பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இதன் காரணமாக பால் உற்பத்தி 1978-79 ஆம் ஆண்டில் 1,726 மில்லியன் டன்னில் இருந்து 3,374 மில்லியன் டன்னாக 1990-91 ஆம் ஆண்டில் உயர்ந்துள்ளது. அதுபோலவே முட்டை உற்பத்தியும் 1978-79இல் இருந்து 1990-91 ஆம் ஆண்டு 782 மில்லியனிலிருந்து 2,550 மில்லியனாக அதிகரித்துள்ளது. கால்நடை பராமரிப்புத் துறை கால்நடை அபிவிருத்தி பணி களுடன், கால்நடை மற்றும் கோழிகளுக்குச் சிகிச்சையும் நோய் தடுப்புப் பணிகளையும் செயல்படுத்தி வருகிறது. இவ்விதம் கால்நடைகள் மற்றும் கோழிகளை நோய்களிலிருந்து காப்பதன் மூலம் அவைகள் உடல் நிலை நன்கு பராமரிக்கப் பட்டு அவைகளுடைய உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படுகிறது.



கால்நடை பராமரிப்புத் துறை பசுந் தீவன உற்பத்தியைப் பெருக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் பசுக்கள் / எருமைகளுக்கு போதிய அளவு பசுந்தீவனம் கிடைக் கவும், பால் உற்பத்தி செலவை குறைக்கவும் உதவுகிறது.

பாகம் 2.

துறையின் முக்கிய பணிகள்.

ஆவின அபிவிருத்தி.

1. ஆவின எண்ணிக்கை :

தமிழ்நாட்டில் உள்ள மொத்த பசுக்கள்/எருமைகளின் எண்ணிக்கை 1989 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி முறையே 9.35 மில்லியனும், 3.13 மில்லியனும் ஆகும். தமிழ் நாட்டில் இனவிருத்திக்குத் தகுதியான பசுக்கள் மற்றும் எருமை களின் எண்ணிக்கை முறையே 31.48 லட்சங்களும், 16.17 லட் சங்களும் ஆகும். இனவிருத்திக்குத் தகுதியான மொத்தக் கால் நடைகளின் எண்ணிக்கை 1982 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பை விட 1989-ல் மிகவும் குறைந்துள்ளது. இதன் காரணமாக உற்பத்தித் திறனற்ற கால்நடைகள் மந்தையில் இருந்து நீக்கப் பட்டு அதிக உற்பத்தி உள்ள கால்நடைகள் மட்டுமே பராமரிக் கப்பட்டு வந்ததால் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது.

2. ஆவின/எருமைகள் இனவிருத்திக் கொள்கை :

மாநில அரசின் இனவிருத்திக் கொள்கை பின்வருமாறு :—

(அ) உள்நாட்டு ஜாதிப் பசுக்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி மாடுகளை அவை அதிகமாகக் காணப்படும் பாகங்களில் தெரிவு செய்யப்பட்ட முறையில் இனவிருத்தி செய்தல்.

(ஆ) நாட்டினப் பசுக்களை அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய அயல் இன ஜெர்சி மற்றும் பிரிசியன் பொலி காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்தல்.

(இ) கிராமப்புறங்களில் உள்ள எருமைகளை, முர்ரா பொலிக் காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்து தரம் உயர்த்தல்.

(ஈ) தமிழ்நாட்டில் தற்போது உள்ள கலப்பின பசுக்களை கலப்பின காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்தல்.

தவிர பொதுக் கொள்கையாக ஜெர்சி இன பொலிக் காளைகளை இன விருத்தி உபயோகத்திற்காக கன்னியாகுமரி மாவட்டம் தவிர மற்ற எல்லா சமவெளிப் பகுதிகளிலும் பிரிசியன் காளைகளை எல்லா மலைப் பகுதிகளிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் பயன்படுத்துகின்றனர். சமீப காலங்களில் நகர்ப் பகுதியில் பசுக்களுக்கு நல்ல போஷாக்கு கிடைக்கும் காரணத்தால் நகர்ப் பகுதியில் உள்ள பசுக்களை பிரிசியன் இனப் பொலிகாளைகளை கொண்டு இனவிருத்தி செயல்பட்டு வருகிறது.

### 3. கால்நடை அபிவிருத்தி திட்டங்கள் :

பசுக்கள் மற்றும் எருமைகளின் ஒருங்கிணைந்த அபிவிருத்திக்காக கால்நடைப் பராமரிப்புத் துறை தீவிர கால்நடை வளர்ப்பு திட்டங்களையும், கேந்திர கிராமத் திட்டங்களையும் செயல்படுத்தி வந்தது. இத்திட்டங்கள் சில குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வந்தது. தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்திலும், கேந்திர கிராம நிலையத்தில் பணி புரிந்து வந்த பணியாளர்களை தீவிர ஆவின/எருமைகளின் இன விருத்தி மற்றும் பசுந்தீவன உற்பத்திக்காக 20 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளனர்.

### 4. பசுக்கள் / எருமைகளின் இனப் பெருக்கம் :

தமிழ்நாட்டில் கால்நடைப் பராமரிப்புத் துறை 2,770 நிலையங்கள் மூலமாக பசுக்கள் / எருமைகளின் இனவிருத்தி பணியை விஞ்ஞான முறையில் மேற்கொண்டுள்ளது. இவற்றில் 1936 நிலையங்களில் உறைவிந்து உபயோகிக்கப்படுகிறது. மீதமுள்ள 834 நிலையங்களில் பதப்படுத்தப்பட்ட திரவ விந்து உபயோகப் படுத்தப்படுகிறது. உறைவிந்து உபயோகித்து செய்யும் செயற்கை முறை கருவூட்டல் பணி மற்ற எல்லா நிலையங்களிலும் விரிவு படுத்தப்பட உள்ளது.

உறைவிந்து செயற்கை முறை கருவூட்டல் பணி 1991-92-ல் 234 நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதை மாநிலத்தில் மற்ற இடங்களில் 1992-93-ல் செயல்படுத்தப்பட உள்ளது.

### பொலி காளை நிலையங்கள் :

கால்நடை பராமரிப்புத் துறை விந்து உற்பத்திக்கும் செயற்கை முறை கருவூட்டல் பணி செய்து வரும் செயற்கை முறை இனவிருத்தி நிலையங்களுக்கும் விந்து விநியோகம் செய்வதற்காகவும் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பொலிக் காளை நிலையங்களை பராமரித்து வருகின்றது.



ஜெர்சி, பிரிசியன், காங்கேயம் மற்றும் முர்ரா பொலிக் காளைகள் விந்து உற்பத்திக்காக இந்நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றன. செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களில் உறை விந்து முறை கருவூட்டலை புகுத்துவதன் மூலம் இப் பொலிக் காளை நிலையங்கள் படிப்படியாக மூடப்படும்.

### 6. உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் :

கால்நடை பராமரிப்புத் துறை நான்கு இடங்களில் உறை விந்து நிலையங்களை செயல்படுத்தி வருகிறது.

1. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்).
2. அபிசேகப்பட்டி (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்).
3. ஓசூர் (தர்மபுரி மாவட்டம்).
4. ஊட்டி (நீலகிரி மாவட்டம்).

உறை விந்து உற்பத்திக்காக தரமிக்க உயிரின அயலின ஜெர்சி, பிரிசியன், கலப்பின சிந்தி, காங்கேயம் மற்றும் முர்ரா பொலிக் காளைகள் இந்நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் உறை விந்து செயற்கை முறை கருவூட்டல் நடைபெறும் நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. 12.68 லட்சம் டோஸ்கள் உறைவிந்தும் 1.48 லட்சம் லிட்டர் திரவ நைட்ரஜனும் உறை விந்து நிலையங்கள் மூலம் 1991-92 ஆம் ஆண்டில் (31—12—1991 முடிய) உற்பத்தி செய்யப்பட்டு வெவ்வேறு நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

### 7. கால்நடைப் பண்ணைகள் :

மாநிலத்தில் தற்போது எட்டு கால்நடைப் பண்ணைகள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. அங்கு கால்நடைப் பராமரிப்புத் துறை ஆவின/எருமைகள், செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளின் இனவிருத்தி, விஞ்ஞான முறையில் நடத்தி வருகிறது. ஈச்சங்கோட்டை பண்ணையில் ஒரு இன மாற்றப் பிரிவும் இயங்கி வருகிறது.

சிந்தி இன ஆய்வு ஓசூர் பண்ணையிலும், முர்ரா எருமை பொலிகாளைகளை தேர்ந்தெடுக்க ஒரத்தநாடு பண்ணையிலும் ஒரு வம்சாவழி ஆய்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[1991 ஏப்ரல் 21

8. உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கால்நடை அபிவிருத்தித்திட்டம்:

கால்நடை பராமரிப்புத் துறை ஆவின/எருமைகளின் அபிவிருத்திக்கான திட்டம் ஒன்றை உலக வங்கியின் நிதி உதவியுடன் ரூ. 46.62 கோடி செலவில் செயல் படுத்தி இத்திட்டம் 1991-92-லிருந்து ஏழு வருடக் காலத்திற்கு செயல்படும். 1991-92 ஆம் வருடத்திற்கு ரூ. 5.04 கோடி நிதி வழங்கப்பட்டது. 1991-92 ஆம் வருடத்திற்கான இத்திட்டத்தின் அம்சங்கள் கீழ்வருமாறு:—

(1) 1991-92 ஆம் வருடத்தில் மதுரை, கோயம்புத்தூர், வேலூர் ஆகிய இடங்களில் உறைவிந்து நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

(2) செயற்கை முறை கருவூட்டலில் உறைவிந்து நுணுக்கத்தை செயல்படுத்த 234 கருவூட்டல் நிலையங்களுக்கு விரிவு படுத்தப்படுகிறது.

(3) உறைவிந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் நடைபெரும் நிலையங்களுக்கு உறைவிந்து சேமிக்க 500 திரவ நைட்ரஜன் குடுவைகள் வழங்கப்படுகின்றன.

(4) மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர், ஒரத்தநாடு மற்றும் ஈச்செங்கோட்டை ஆகியவற்றில், தீவன அபிவிருத்திக்கான உள்ளமைப்புகள் வலிமைப்படுத்தப்படுகிறது.

(5) தீவன அபிவிருத்தி பணிகள் பத்து மாவட்ட பசுத்தீவன குழுக்கள் மூலம் தீவிரப்படுத்தப்படுகிறது.

(6) ஒலி, ஒளி கருவிகள் வழங்கப்படுவதன் மூலம் விரிவாக்கப் பணிகளுக்கான உள்ளமைப்புக்கள் எளிமைப்படுத்தப் படுகிறது.

(7) கால்நடை நோய் பரவுவதை கண்டறியும் பிரிவு திருநெல்வேலி, மதுரை, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டு வருகிறது. மாவட்ட கால்நடைப் பண்ணை மற்றும் கால்நடை இனப்பெருக்கப் பிரிவுகளில் உள்ள அலுவலர்களுக்குப் பல்வேறு ஒழுங்கு முறைகளை பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தத் திட்டம் 1992-93 ஆம் ஆண்டில் தொடரப்பட்டு, கூடுதலான இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு, தீவிரப்படுத்தப்



1991 ஏப்ரல் 21]

9. டாண்டா திட்டம் :

கால்நடை பராமரிப்புத் துறை புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் ஒன்றியத்தில் டாண்டா நிதி உதவியுடன் கால்நடை வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது கால்நடை வளர்ப்பிலும் மற்ற துறைகளிலும் தீவிர பயிற்சி அளிப்பதன் மூலம் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே ஆகும். இத்திட்டம் ரூ. 4.4 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

பாகம் - 3

1. செம்மறி ஆடு வளர்ப்பு :

செம்மறி ஆடு வளர்ப்பு இம்மாநிலத்தில் ஏழை விவசாயிகளிடம் மிகவும் பிரபலமடைந்துள்ளது. இந்த ஆடு அலகுகள் அதிக விவசாயக் குடும்பங்களுக்கு நிலையான வருமானத்தை அளிக்கிறது. கிராமப் புற பொருளாதாரத்தில் ஆடு வளர்ப்பின் முக்கியத்துவத்தைக் கொண்டு கால்நடைப் பராமரிப்புத் துறை பல்வேறு செம்மறி ஆடு வளர்ப்புத் திட்டங்களினால் ஏழை விவசாயிகளுக்கு ஆடு அலகுகளை உருவாக்குவதன் மூலம் உதவுகிறது.

2. ஆட்டுப் பண்ணைகள் :

கால்நடைப் பராமரிப்புத் துறை சின்னசேலம் (தென்னாற்காடு மாவட்டம்), சாத்தூர் (காமராசர் மாவட்டம்) ஆகிய இடங்களில் 2 ஆட்டுப் பண்ணைகளையும், மாவட்டக் கால்நடைப் பண்ணைகள் 4 ஆடு அலகுகளையும் பராமரித்து வருகிறது. உள்நாட்டினங்களான மேய்ச்சேரி, இராமநாதபுரம் வெள்ளை, கீழக்கரிசல், மாண்டியா மற்றும் வேம்பூர் ஆகிய செம்மறி ஆடுகளை பராமரித்து தெரிவு செய்யப்பட்டு இனவிருத்தி செய்யப்படுகிறது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்டுக் கிடாக்களும், பெட்டைகளும் தமிழ் நாட்டின் பல்வேறு பாகங்களில் உள்ள விவசாயிகளுக்கு உள்நாட்டின் ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்கும் ஆடு அலகுகளை உருவாக்கவும் வழங்கப்படுகிறது.

3. செம்மறி ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் :

ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்கு தக்க சமயத்தில் உள்ளீடுகள் கிடைப்பதற்கும் விற்பனை உதவிக்கும் தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களில் இச்சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுவரை (1991-92 ஆம் ஆண்டு) 1,664 எண்ணிக்கையுள்ள சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கால்நடைப் பராமரிப்புத் துறையினால் செயல்படுத்தப்படும் பல்வேறு ஆடு வளர்ப்புத் திட்டங்களில் பயனீட்டாளர்கள் இச்சங்க உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

4. ஐரோப்பிய பொருளாதார நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஆடு வளர்ப்புத் திட்டம்.

ஐரோப்பிய பொருளாதார நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் செம்மறி ஆடு வளர்ப்புத் திட்டம் செங்கல்பட்டு—எம்.ஜி. ஆர். வட-ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை—சம்புவ்ராயர், தென்னாற்காடு, தருமபுரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் ரூ. 13.67 கோடி செலவில் செயலபடுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் திட்டப் பகுதியில் உள்ள செம்மறி ஆடுகளின் இறைச்சி உற்பத்தி திறனை அதிகப்படுத்துவதே ஆகும்.

உற்பத்தித் திறனை அதிகரிக்க —

1. உள்ளூர் செம்மறி ஆடு இனங்களை தெரிவு செய்து இன விருத்தி செய்தல்.

2. செம்மறி ஆடுகளுக்கு வேண்டிய மேய்ச்சல் வசதியை ஏற்படுத்துதல்.

3. ஆடுகளுக்கு உடல் நலம் பேணும் பணிகளைத் தீவிரப்படுத்துவது போன்ற பணிகள் செயல்படுத்தப்படும்.

ஒரு செம்மறி ஆட்டின் ஆராய்ச்சிக் கூடம் இத்திட்டத்தின் கீழ் சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிடா டெருக்க நிலையம் இராணிப்பேட்டை, சின்ன சேலம் மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளது. உடல் நலம் பேணும் திட்டம் மற்றும் மேய்ச்சல் வசதியுடன் கூடிய உள்நாட்டின் செம்மறி ஆடுகளை தரம் உயர்த்தப்பட்ட கிடாக்கள் கொண்டு இனப் பெருக்கம் செய்வதினால், அதிக இறைச்சி தரும் ஆடுகளை விற்பதின் மூலம் விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்க வழி வகுக்கின்றது.

5. வெள்ளாடு அபிவிருத்தி :

தமிழ் நாட்டில் வெள்ளாடு வளர்ப்பு விவசாயிகளிடையே பிரபலம் அடைந்து வருகிறது. சில விவசாயிகள் வெள்ளாடுகளை கொட்டில் முறையில் தீவிரமாக வளர்த்து வருகின்றனர். இறைச்சி மற்றும் பால் உற்பத்தி திறன் உள் நாட்டின் வெள்ளாடுகளில் குறைவாக இருப்பதால் கால்நடைப் பராமரிப்புத் துறை ஜம்னாபாரி இன வெள்ளாடுகளை சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையிலும் செட்டிநாடு மற்றும் கொருக்கை கால்நடை பண்ணையிலும் இனப் பெருக்கத்திற்காக வளர்த்து வருகிறது.



புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் தெல்லிச்சேரி இன வெள்ளாடுகளை இனப் பெருக்கம் செய்கிறது. உள்நாட்டின் வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்த தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களிலுள்ள விவசாயிகளுக்கு இவ்வழித் தோன்றிய ஆடுகள் விநியோகிக்கப்படுகின்றன.

6. கோழியின அபிவிருத்தி :

கால்நடை பராமரிப்புத் துறை 26 கோழி விஸ்தரிப்பு நிலையங்களும், 2 குஞ்சு பொரிப்பு நிலையங்களும் வெள்ளை லெகான் கோழிகளின் உற்பத்திக்காகவும் வளர்ப்பிற்காகவும் பராமரிக்கிறது. விவசாயிகளுக்கு விநியோகிக்க குஞ்சு வளர்ப்பு நிலையங்களாகவும், செயல் முறை விளக்க நிலையங்களாகவும் இந்த கோழி விஸ்தரிப்பு நிலையங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த கோழி விஸ்தரிப்பு நிலையங்கள் தற்போது வியாபார நோக்கத்தோடு முட்டை உற்பத்தி நிலையங்களாகவும் முயல் வளர்ப்புப் பண்ணைகளாகவும் மாற்றப்பட உள்ளன.

ஈரோட்டில், கோழி நோயைக் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆய்வுக்கூடம் இந்த பகுதியில் கோழி நோய்களை கண்டறிந்து கோழி நோய்கள் பரவாமல் தடுக்க, எடுக்க வேண்டிய முன் அறிவிப்பு நடவடிக்கை பற்றி விவசாயிகளுக்கு விவரித்து உதவி வருகிறது. 1991—92 ஆம் வருடத்தில் 427 கிராமங்களுக்கும் 783 கோழிப்பண்ணைகளுக்கும் சென்று நோயை கண்டு அறியும் பணிகளில் ஈடுபட்டனர்.

7. பன்றி அபிவிருத்தி :

பன்றி வளர்ப்பு, கிராமங்களில் வறுமை கோட்டிற்கு கீழுள்ள ஏழைக் குடும்பங்களுக்கு உபரி வருமானம் அளிக்கிறது. நாட்டு பன்றிகளின் இறைச்சி உற்பத்தி திறன் குறைவாக உள்ளதால் கால்நடை பராமரிப்புத்துறை சென்னை சைதாப்பேட்டையிலும் ஓசூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், லார்ஜ் ஒயிட் யார்க்ஷயர் இன பன்றிகளை இனப் பெருக்கம் செய்து வருகிறது. உள்நாட்டின் பன்றிகளின் தரத்தை உயர்த்த விவசாயிகளுக்கு இப்பிரிவுகளிலிருந்து பன்றிகள் விநியோகிக்கப்படுகின்றன. சிறப்பு கால்நடை இனவிருத்தி திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகளுக்கு இந்த பண்ணையிலிருந்து பன்றிகள் வழங்கப்படுகின்றன.

8. பசுந்தீவன உற்பத்தி :

பசுந்தீவன உற்பத்தி கால்நடை அபிவிருத்தி பணியின் ஒரு முக்கிய அம்சமாகும். அதனால் கால்நடைப் பராமரிப்புத்துறை பசுந்தீவன உற்பத்திக்காக பல்வேறு திட்டங்களை, முக்கியமாக தீவிர கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் மற்றும் கேந்திர கிராம திட்டம் செயல்படுத்தி வந்தன. இத்துறை விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகளை பசுந்தீவன உற்பத்தியில் ஈடுபடுத்தி நிரந்தரமாக பசுந்தீவன உற்பத்தி மேற்கொள்வதற்காக தேவையான விஸ்தரிப்புப்பணியில் ஈடுபடுத்தி, பசுந்தீவன நறுக்குகள், பசுந்தீவன மரக்கன்றுகள், பசுந்தீவன விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்கிறார்கள்.

பசுந்தீவன விதை உற்பத்தி நிலையங்கள் இம்மாநிலத்தில் 7 இடங்களில் செயல்படுகிறது. அவை பசுந்தீவன நறுக்குகள் பசுந்தீவன மரக்கன்றுகள், பசுந்தீவன விதைகள் ஆகியவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. 1991—92-ல் 120 லட்சம் பசுந்தீவன நறுக்குகளும் 3.60 லட்சம் பசுந்தீவன மரக்கன்றுகளும், 35.97 மெட்ரிக் டன்கள் பசுந்தீவன விதைகளும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

பசுந்தீவன உற்பத்தி உலக வங்கி நிதிஉதவியுடன் செயல்பட்டு வரும் கால்நடை அபிவிருத்தி திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். மேலும் பசுந்தீவன நறுக்குகள், பசுந்தீவன மரக்கன்றும், பசுந்தீவன விதைகள் ஆகிய பசுந்தீவன உள்ளீடுகள், விவசாயிகளுக்கு பசுந்தீவன உற்பத்திப் பணியை மேற்கொள்ள இலவசமாக வழங்கப்படுகின்றன.

9. சிறப்புத் திட்டங்கள் :

கால்நடைகளின் வளர்ப்பின் மூலம் ஏழை விவசாயிகளுக்கு உபரி வருமானத்தைக் கொடுக்க கால்நடை பராமரிப்புத்துறை பல்வேறு கால்நடை வளர்ப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இத்துறை செயல்படுத்தும் முக்கிய திட்டங்கள்

1. சிறப்பு கால்நடை உற்பத்தி திட்டம் :

மத்திய அரசின் நிதி உதவியுடன் இம் மாநிலத்தில்தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(a) செம்மறி ஆடு உற்பத்திப் பிரிவு :

இத்திட்டத்தில் செம்மறி ஆட்டு வளர்ப்பு பிரிவு கால்நடைப் பராமரிப்புத்துறையினால் தர்மபுரி, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., தென் ஆற்காடு, திருச்சி, புதுக்கோட்டை மற்றும் மதுரை



மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு ரூ. 8,200 மதிப்புள்ள 20 பெட்டை ஆடுகளும் ஒரு கிடாவும் அடங்கிய ஆடு வளர்ப்புப் பிரிவு ஒன்றை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்து தரப்படுகின்றன. இத்திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு/குறு விவசாயிகளுக்கு, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு 25 சதவீதம் மற்றும் 33-1/3 சதவீதம் மானியம் முறையே வழங்கப்படுகிறது.

4,500 விவசாயிகள் பயனடைய ரூ. 174.00 லட்சம் இத்திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(b) பன்றி வளர்ப்புத் திட்டம் :

இத்திட்டம் கால்நடைப் பராமரிப்புத் துறையினால் தர்மபுரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது. 5 பன்றிகள் கொண்ட ரூ. 6,000 மதிப்புள்ள 50 சதவீத மானியத்துடன் கூடிய சிறு பன்றி அலகு ஏற்படுத்த விவசாயிகளுக்கு உதவி புரிந்து வருகிறது. 50 விவசாயிகள் பயனடைய ரூ. 1.80 லட்சம் இத்திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(c) கன்று வளர்ப்புத் திட்டம் :

இத்திட்டம், வடஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம், தென்ஆற்காடு, கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல்-அண்ணா மற்றும் பெரியார் மாவட்டங்களில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி இணையத்தால் செயல்படுத்தப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட கலப்பின கன்றுகளுக்கு 4 மாதம் முதல் 32 மாதம் வரை பராமரிப்பதற்கான அடர் தீவனம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு சிறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் குறுநில விவசாயிகளுக்கும் நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கும் 66-2/3 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. 5,500 விவசாயிகள் பயனடைய ரூ. 246.8 லட்சம் இத்திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(d) கோழி வளர்ப்புத் திட்டம் :

கோழி வளர்ப்புத் திட்டம் தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகத்தால் 1991-92 வரை செயல்படுத்தப்பட்டு வந்தது. தற்போது இத்திட்டம் கால்நடைப் பராமரிப்புத் துறையினால் செயல்படுத்தப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகள் 200 கறிக்கோழி பண்ணைகளை அமைக்க 25 சதவீதம் சிறு விவசாயிகளுக்கும் 33-1/3 சதவீதம் குறு மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கும் மானியம் அளிக்கப்படுகிறது. 600 விவசாயிகள் பயனடைய ரூ. 27.3 லட்சம் இத்திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(2) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

கால்நடை அபிவிருத்திப் பணிகளையும் உடல் நலம் பேணும் பணிகளையும் தீவிரப்படுத்த இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டில் மாவட்ட கால்நடைப் பண்ணை மற்றும் கால்நடை மருத்துவ நிலையங்களின் உள்ளமைப்பை வலுப்படுத்த ரூ. 12.03 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

(3) மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டம் பசுந்தீவன உற்பத்தியுடன் கால்நடை அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டில் (31-12-1991 வரை) அபிஷேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் உள்ள இனவிருத்தி மந்தையை வலுப்படுத்த முர்ரா எருமை இனக் காளைகளும் கறவை எருமைகளும் வாங்க ரூ. 9.00 லட்சம் மொத்த செலவு செய்யப்பட்டுள்ளது. பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட ஆண் எருமைகள் உறைவிந்து உற்பத்திக்கு உபயோகப்படுத்தப்படும்.

(4) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டம் கால்நடைப் பராமரிப்புத் துறையினால், சேலம், தர்மபுரி, வடாற்காடு-அம்பேத்கார், தென்னாற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் வாழும்பழங்குடியினரின் நலனுக்காக மேற்கொள்ளப்படுகின்றது. மலைப் பகுதியில் வாழும் ஏழை விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்பு பிரிவுகளும் கறவை மாட்டுப் பிரிவுகளும், உழவுமாடு மற்றும் கலப்பினக் கன்றுகள் வளர்க்கவும் 50 சத வீதம் மானியம் வழங்கப்படுகிறது. தென்னாற்காடு மாவட்டம் கல்ராயன் மலைப் பகுதியில் உள்ள பழங்குடியினருக்கு மட்டும் 75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. 1991—92 ஆம் ஆண்டில் 50 சதவீதம் மானிய செலவில் கறவை மாடுகள 135-ம் ஆட்டுப் பிரிவுகள 155-ம் 80 கன்றுகளுக்கு கலப்புத் தீவனம் மானிய விலையில் வழங்கப்பட்டும் பயனீட்டாளர்கள் பயனடைந்து உள்ளனர். மேலும் 5 சென்ட் நிலத்தில் 200 தீவனப் பண்ணைகள் 50 விழுக்காடு மானியத்தில் அமைத்து, இதனால் 570 விவசாயக் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர், இது தவிர, 9 கால்நடை மருந்தகப் பிரிவுகள், 9 நடமாடும் மருத்துவப் பிரிவுகள் 9 உறைவிந்து நிலையங்கள் மற்றும் 3 கிளை நிலையங்களின் மூலம் இப்பகுதிகளில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு மருத்துவ வசதியும், பசுக்கள் எருமைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணியும் செய்யப்படுகிறது.

(5) சிறப்பு மத்திய உதவித் திட்டம் :

ஆதி திராவிட சமுதாயத்திற்கு உட்பட்ட விவசாயிகள் மட்டுமே பயன்பெறும் நோக்கத்துடன் மத்திய அரசின் உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்



தில் பயன்பெறும் விவசாயிகளுக்கு 20 பெட்டை செம்மறி ஆடுகளும் ஒரு கிடாவும் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டில் 1,763 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் 70.53 லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

10. கணக்கெடுப்பு மதிப்பீடு :

கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் முக்கிய அங்கமான கால்நடை அளவீடுகள் மூலம் பால், இறைச்சி, முட்டை, உற்பத்தியை மதிப்பீடு செய்து அதன் மூலம் பசு எருமை இனங்களின் அபிவிருத்தி முறைகளை மதிப்பீடு செய்யவும், இதனால் கால்நடைப் பராமரிப்புத் துறையின் வளர்ச்சித் திட்டங்களில் பலனை அனுமானிக்கவும் முடிகிறது.

கால்நடைப் பராமரிப்புத்துறை மாநில மாதிரி அளவீட்டுத் திட்டத்தின் மூலம் எல்லா மாவட்டங்களிலும் பால், முட்டை இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியை காலமுறை தோறும் மதிப்பீடு செய்கிறது. அதே போல் மாவட்ட அளவிலான மாதிரி அளவீட்டுத்திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட தென் ஆற்காடு, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய நான்கு மாவட்டங்களின் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் அளவை பெரிய அளவில் மத்திய அரசின் உதவியுடன் செய்து வருகிறது. பால், முட்டை ஆகியவற்றின் உற்பத்தியின் மதிப்பீட்டினை இத்திட்டம் கணக்கிடுகிறது. 1991-92 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் இரண்டு பருவ காலங்களுக்கு எடுக்கப்பட்ட அளவீடுகளின் முடிவுகள் பின் வருமாறு :—

| | கோடை. | மழை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. பால் உற்பத்தி மதிப்பீடு ('000' டன்கள்). | 1,126.884 | 1,103.377 | 2,230.261 |
| 2. முட்டை உற்பத்தி மதிப்பீடு (மில்லியன்). | 870.348 | 899.000 | 1,769.348 |
| 3. இறைச்சி உற்பத்தி மதிப்பீடு (மில்லியன் கிலோ). | 12.59 | 13.84 | 26.43 |

கால்நடைப்பராமரிப்புத் துறை, இடைக் காலத்தில் கால்நடை கணக்கில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை மதிப்பீடு செய்வதற்கு இடைக்கால கணக்கெடுப்பு திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாகம் 4.

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை பராமரிப்புத்துறை எட்டு கால்நடைபண்ணையில் பசுக்கள், எருமைகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், பன்றி இனங்களைத் தேர்ந்தெடுத்து இனவிருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளன. இக்கால்நடை பண்ணைகள் ஓசூர் (தர்மபுரி மாவட்டம்), புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்), ஒரத்தநாடு மற்றும் கொருக்கை (தஞ்சாவூர் மாவட்டம்), அபிஷேகப்பட்டி (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்), செட்டிநாடு (பசும்பொன் முத்துராமலிங்கதேவர் மாவட்டம்) மற்றும் உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

ஒரத்தநாட்டிலும் அபிஷேகப்பட்டியிலும் உள்ள மாவட்ட கால்நடைப்பண்ணைகள் எருமை இனத்தின் இன விருத்தியில் ஈடுபட்டுள்ளன. மற்ற கால்நடை பண்ணைகள் ஆவின் இன விருத்தியில் ஈடுபட்டுள்ளன. கொருக்கையில் உள்ள மாவட்ட கால்நடைப்பண்ணை உம்பளாசேரி இனவிருத்தியிலும் ஊட்டியில் உள்ள மாவட்ட கால்நடைப்பண்ணை பிரிஷியன் இனவிருத்தியில் மட்டுமே ஈடுபட்டுள்ளன. ஈச்சங்கோட்டையில் உள்ள கால்நடை பண்ணை அயலின ஜெர்சி ஆவின இனவிருத்தியில் மட்டுமே ஈடுபட்டுள்ளது. ஈச்சங்கோட்டையில் உள்ள அயலின கால்நடை அபிவிருத்தி பண்ணையிலும், ஓசூர், உதகமண்டலம், அபிஷேகப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணையிலும் உறைவிந்து உற்பத்திசெய்யும் நிலையங்கள் உள்ளன. உறைவிந்தை சேகரிப்பதற்காக தேவைப்படும் திரவ நைட்ரஜன் இப்பண்ணைகளில் தயாரிக்கப்படுகின்றது. இப்பண்ணைகளிலிருந்து தயாரிக்கப்படும் உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் மாநிலத்தில் உள்ள எல்லா செயற்கை முறை இன விருத்தி நிலைய பசுக்கள் மற்றும் எருமை இனவிருத்திக்காக விநியோகிக்கப்படுகின்றன.

பாகம் 5.

**கால் நடை மருத்துவ நலப் பணிகள்**

**(1) கால்நடை மருத்துவ நிலையங்கள் :**

**(அ) கால்நடை மருந்தகம் பெரு மருத்துவமனை மற்றும் கிளை நிலையங்கள்—**

தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகளையும் கோழி இனங்களையும் நோயிலிருந்து பாதுகாப்பதற்கான வகையில் கால்நடை பராமரிப்புத் துறை கால்நடை மருத்துவ





நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களை மாநிலத்தில் பல் வேறு இடங்களில் ஏற்படுத்தி சிகிச்சை அளிக்கிறது. சிகிச்சை மற்றும் தடுப்பூசி போடுவதன் மூலம் கால்நடையின் உடல் நலத்தை காப்பதுடன் கால்நடைகளின் இனவிருத்தி சம்பந்தப்பட்ட குறைகள் இத்துறையினால் கவனிக்கப்படுகிறது. பயனற்ற காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல் முக்கியபணியாக இத்துறை மேற்கொள்கிறது. கால்நடை மருத்துவமனையில் உள்ள பிரதம மருத்துவமனை நோயுற்ற கால்நடைகளுக்கு உள்ளிருப்பு வசதிகளும், அறுவை சிகிச்சை செய்வதற்கான வசதிகளையும் கொண்டவை. தல்லாகுளத்தில் உள்ள பிரதம மருத்துவமனை எக்ஸ்ரே கதிர் படம் எடுக்கும் வசதியையும் பெற்றுள்ளது.

தற்போது மாநிலத்தில் மொத்தம் 837 கால்நடை மருத்துவ நிலையங்கள் கீழே கொடுக்கப்பட்டவாறு இயங்கி வருகின்றன.—

| | |
|---|---|
| பெரு மருத்துவ மனை .. .. .. | 22 |
| கால்நடை மருத்துவ நிலையம் .. | 57 |
| கால்நடை மருந்தகங்கள் .. .. .. | 758 |

எருமை/பசு இனங்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் சிகிச்சை அளிக்கும் பொருட்டு மொத்தம் 2,226 கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1991-92ஆம் ஆண்டில் மொத்தம் 139.2 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சையும் 5.59 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கமும் 177 இலட்சம் தடுப்பூசியும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**(ஆ) கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்.**

கால்நடை நோய்களைப் புலனாய்வு செய்து அவற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மாநிலத்தில் 11 இடங்களில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இப்பிரிவுகள் தொற்று நோய் பரவுவதை களப் பணியாளர்களுக்கு முன்னதாகவே அறிவித்து முன் எச்சரிக்கை தடுப்புப் பணிகளை மேற்கொள்ளச் செய்கின்றன.

**(இ) நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள்.**

நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள் ஐம்பது இடங்களில் நம்மாநிலத்தில் பணியாற்றி தொடர்பு கொள்ள பட்டி தொட்டிகளில் உள்ள கோழிகளுக்கும், கால்நடைகளுக்கும் சிகிச்சை அளிக்கிறது. இப்பிரிவுகள் ஆவின/எருமையினத்திலும்

செயற்கை முறை கருவூட்டல் பணிபுரியும் செய்துவருகின்றன. 1990-91-ம் ஆண்டில் தடுப்பு மருந்துகளை சேமித்து வைப்பதற்காக குளிர் சாதன வசதி செய்வதற்கான திட்டம் மாநிலத்தில் குறிப்பிட்ட நிலையங்களில் ரூ. 2.08 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்குளிர்சாதன வசதியை ஏற்படுத்தியதன் மூலம் கால்நடை மருத்துவர்கள். நோய் கிளர்ச்சியின் போது தக்க தடுப்பு நடவடிக்கைகள் தகுந்த நேரத்தில் எடுக்க முடிகிறது.

(ஈ) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம் :

இம்மாநிலத்தில் வெக்கை நோயை ஒழிப்பதற்காக 26 மாவட்ட வெக்கை நோய் குழுக்கள் 10 கண்காணிப்பு பிரிவுகள் மற்றும் 10 சோதனைச் சாவடிகள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) வெக்கை நோய் மாவட்ட குழுக்கள்.

இந்தக் குழுக்கள் மாவட்டங்களில் உள்ள பசு, எருமை இனங்கள் மற்றும் ஆடுகளுக்கு வெக்கை நோய் தடுப்பூசி போட்டு வெக்கை நோய் தடுப்பு சக்தி அதிக அளவில் உண்டாவதற்கு உதவி புரிகின்றன. இப்பணி தக்க முறையில் செயல்பெற கண்காணிப்புக் குழு எல்லாப்பகுதிகளிலும் மூன்று ஆண்டுக்கு ஒரு முறை தடுப்பூசி போட ஏற்பாடுகளை செய்கின்றனர்.

(2) வெக்கை நோய் கண்காணிப்புக் குழுக்கள்.

மாநில எல்லைக்குள் 15கி.மீ. சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு கால முறைப்படி தடுப்பூசிபோட்டு இதன் மூலம் மாநில எல்லைப் பகுதிகளில் நோயற்ற நிலையை உருவாக்கும் பொருட்டு சோதனை சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன.

(3) வெக்கை நோய் சோதனைச் சாவடி.

மாநில எல்லையில் உள்ள 10 சோதனைச் சாவடிகள் மாநில எல்லைக்குள் வருகின்ற கால்நடைகளை வெக்கை நோயிலிருந்து தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. 1991-92ம் ஆண்டில் வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 52.94 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டன.



கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை.

(அ) தடுப்பு மருந்து உற்பத்தி :

தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகள் உடல் நலனைக் காப்பாற்றி, அவைகளுக்கு தொற்று நோய்கள் ஏற்படாமல் இருக்க அவ்வப்போது தடுப்பு ஊசி போடுவது கால்நடைப்பராமரிப்புத் துறையின் முக்கிய பணியாகும். இதற்குத் தேவையான தடுப்பு ஊசி மருந்துகள் எல்லாம் இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்படுகின்றன.

தற்போது இந்நிலையத்தின் 7 நுண் கிருமி கொல்லிதடுப்பூசி மருந்துகளும். 11 நச்சுக்கிரும் கொல்லி தடுப்பூசி மருந்துகளும், 11 வகையான நோய் கண்டறியும் மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன.

இங்கு கீழ்க்கண்ட முக்கிய நோய்களுக்குத் தடுப்புமருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.—

1. மாடுகளுக்கு .. வெக்கை, ம்நாய், தொண்டை அடைப்பான் சப்பை நோய் அடைப்பான்.

2. ஆடுகளுக்கு .. ஆட்டம்மை, வெக்கைநோய், துள்ளு மாரி.

3. நாய்களுக்கு .. வெறிநாய்க்கடி, டிஸ்டம்பர்.

4. கோழிகளுக்கு .. கோழிக் கழிச்சல், கோழியம்மை, வாத்து பிளேக்.

(ஆ) நோய் கண்டறிதல் :

இராணிப்பேட்டை நிலையத்தில் கால்நடை நோய்களைக் கண்டறியும் பிரிவும் உள்ளது. மாநிலத்தில் கால்நடைகளுக்கு தொற்றுநோய் ஏற்பட்டுள்ளதைத் தெரிவிப்பதுடன் இந்த பிரிவிலுள்ள அலுவலர்கள் பாதிக்கப்பட்ட கிராமத்திற்குச் சென்று கால்நடை மற்றும் கோழியினத்துக்கு ஏற்பட்டிருக்கும் தொற்று நோய்களை கண்டறிந்து தடுப்பு முறைகளுக்கான ஏற்பாடுகளை எடுக்க உதவி புரிகின்றனர்.

[1992 ஏப்ரல் 21

**நோயற்ற மண்டலம் ஏற்படுத்துதல்:**

(அ) தமிழகத்தின் தென்மாவட்டமான கன்னியாகுமரியில் கால்நடைகளையும், கால்நடைகளைச் சார்ந்த பொருள்களையும் இப்பகுதியிலிருந்து ஏற்றுமதிசெய்ய ஏற்றவாறு நோயற்ற பகுதி நிறுவப்பட்டுள்ளது. முதற்படியாக இத்திட்டம் கீழ்க் குறிக்கப் பட்டுள்ள பிரிவுகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. அவை யாவன—

1. கால்நடைகளுக்கு முழுமையாக தடுப்பூசி போடுதல்.

2. சோதனைச் சாவடிகளை நிறுவுதல்.

3. நோய் கடுங்கண்காணிப்பு மற்றும் நோய் தடுப்புப் பிரிவுகளை நிறுவுதல்.

**(ஆ) முழு தடுப்பூசித் திட்டம் :**

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்டம் வரை 40 கி.மீ. சுற்று வட்டாரத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் வெக்கை, கோமாரி முதலிய நோய்தடுப்பு ஊசிகள் காவல்கிணறு சோதனைச் சாவடியில் இருந்து இலவசமாக போடப்பட்டு வருகின்றன.

**(இ) சோதனைச் சாவடிகள் :**

மாநிலங்களுக்கு இடைப்பட்ட வெளியில் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குச் செல்லும் கால்நடைகளின் எண்ணிக்கையைக் கண்காணிக்க சோதனைச் சாவடி அமைந்துள்ளது. நோயற்ற பகுதிகளுக்கு செல்வதற்கு முன்பு வெக்கை நோய் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன. 1991-92 ஆம் ஆண்டு 33,768 கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

**(ஈ) கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு :**

மத்திய அரசின் 50 விழுக்காடு பொருள் உதவியால் இத்திட்டம் இயங்கி வருகிறது. மாநிலத்தில் நோய்களால் தாக்கப்படும் கால்நடைகளின் விபரங்களைச் சேகரித்து, எங்கெங்கு என்ன என்ன நோய்களில் தீவிரம் இருந்தது என்றும் அறிந்து ஆய்ந்து அதன் அடிப்படையில் முன் கூட்டியே அந்த நோய்கள் வருமுன் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு, நோய் புலனாய்வு நிலையம், இத்திட்டத்தின் கீழ் இயங்குகிறது. பல்வேறு பருவ காலங்களில் கால்நடைகளிடையே பரவும் தொற்று நோய்களைப் பற்றிய விபரங்கள் அடங்கிய நோய்பற்றிய அட்டவணை



1992 ஏப்ரல் 21]

தயாரிக்கப்படுகிறது. இதன் மூலம் எந்தெந்த காலங்களில் எந்தெந்த நோய்கள் பரவக் கூடும் என முன்கூட்டியே அறிய முடியும்.

**மக்கள் தொடர்பு முகாம் :**

கால்நடைப் பராமரிப்பு செயல்பாடுகளை உள்ளார்ந்த கிராம மக்கள் அறிவதற்காக களப்பணியாளர்கள் கிராம அளவில் மக்கள் தொடர்பு முகாம்களை முறையாக நடத்தி வருகின்றனர். சிகிச்சை அளித்தல், பயனற்ற காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல், தடுப்பூசிகள் போடுதல், கன்றுகள், செம்மறி ஆடு களுக்கு குடற்புழு நீக்கம் செய்தல் போன்ற வழக்கமான பணி களை ஆற்றுவதுடன் கால்நடைப் பராமரிப்பினைப் பற்றி அறி வுறுத்தல் சாதனமாகவும் மக்கள் தொடர்பு முகாம் பயன்படு கிறது. 1991-92 ஆம் ஆண்டில் மாநிலத்தில் பல்வேறு பகுதி களில் மொத்தம் 13,725 மக்கள் தொடர்பு முகாம்கள் நடத் தப்பட்டன.

**செம்மறி ஆடுகளுக்கு உடல் நலம் பேணும் பணித் திட்டம் :**

ஆடுகளின் இறைச்சி உற்பத்தித் திறன் அவற்றின் உடல் ஆரோக்கியத்தை பொறுத்தது. ஆடுகளின் வயிற்றில் குடல் புழுக்கள் இருந்தால் ஆடுகளின் உடல் எடை குறைந்து அவை களின் இறைச்சி உற்பத்தியும் குறையும். இதனால் ஆடு வளர்ப் பில் விவசாயிகளுக்கு கிடைக்கும் வருவாயும் குறையும். ஆகவே, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு கால்நடைப் பராமரிப்புத் துறை ஏழை விவசாயிகளின் ஆடுகளுக்கு அரசின் செலவிலேயே குடற்புழு நீக்கத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. 1991-92-ல் ரூ. 30 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்:**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் பல வளாகங்களில் தமிழ்நாடு முழு பல புலங்களைக் கொண்டு கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் மீன்வள வதற்கும் முன்னேற்றத்திற்கான பணிகளைச் செய்து வருகின்றது. இப் பல்கலைக் கழகம் 20—9—1989 ஆம் நாளிலிருந்து சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் இயங்கி வருகிறது.

கால்நடைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், சிறந்த தீவனங்களைத் தயாரித்தல், கால்நடைகளின் நலத்திற் காக சிறந்த நோய்த்தடுப்பு ஊசி மருந்துகளை வழங்குதல் நோய்த்தடுப்பு ஊசி மருந்துகளைத் தயாரிப்பதற்குரிய முறை களை வகுத்தல், அறுவடைக்குப் பிந்திய காலத்தில் பின்பற்ற

வேண்டிய பொருத்தமான தொழில் நுட்பத்திற்கு வகை செய்தல், கால்நடைகள், மீன்கள் இரையாகக் கொள்வதற்குக் கழிவு பொருள்களைப் பயன்படுத்துவதற்குரிய தொழில் நுட்பத்தைத் தெரிவித்தல் ஆகியவை குறித்த பணிகளை இப்பல்கலைக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

இப்பல்கலைக்கழக செலவினங்களுக்காக 1991-92 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீடு ரூ. 950.28 இலட்சம், 1991-92 ஆம் ஆண்டிற்கான திருத்தி அமைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ரூ. 1,154.103 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1992-93 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீடு ரூ. 1,261.18 இலட்சமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டிற்கான திட்டத்தில் சேராத செலவின ஒதுக்கீடு ரூ. 519.97 இலட்சம் ஆகும். இந்த ஒதுக்கீடு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் மற்றும் பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள மூன்று கால்நடை ஆராய்ச்சி நிலையங்களிலும் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான வசதிகளைப் பராமரிப்பதற்கும் ஆராய்ச்சிப்பண்ணையில் ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்படும் கால்நடைகளை பேணுவதற்கும், விவசாயிகளின் பயிற்சி மற்றும் விரிவாக்கத் திட்டங்களுக்காகவும் உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்தில் சேராத செலவினத்தின் கீழ் 133.31 ஏக்கர் நிலப்பரப்பில், பங்கலைக் கழகம் பால் பண்ணை ஒன்று மாதவரத்தில் 1—3—1991 அன்று நிறுவப்பட்டது.

ரூ. 634.06 இலட்சம் திட்ட ஒதுக்கீடுத் தொகையில் பல்கலைக் கழகத்தின் மூன்று கல்லூரிகளிலுள்ள மேற்படிப்பிற்கான அடிப்படை வசதிகளையும் மற்றும் ஐந்து ஆராய்ச்சி நிலையங்களிலுள்ள ஆராய்ச்சிக்கான அடிப்படை வசதிகளையும், மேம்படுத்துவதற்காகச் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இருபது பல்கலைக் கழகங்களின் கீழ் இயங்கும் ஐந்து கால்நடை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், ஏழு கோழியின ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், மூன்று உழவர் பயிற்சி நிலையங்கள், இரண்டு வாத்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், ஒரு அடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் மற்றும் இரண்டு கால்நடையில் கருச்சிதைவு தடுப்பு மையங்கள் ஆகியவற்றின் மூலமாக உழவர் பெருங்குடி மக்களுக்கு பயிற்சி அளித்து கால்நடை பராமரிப்பில் உள்ள நவீன உத்திகளை பரப்புவதற்கும் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட மேம்பாட்டு மற்றும் விரிவாக்க மையங்களில் பெரும்பாலானவை தமிழகத்தில் பின் தங்கியுள்ள பகுதிகளில் அமைந்துள்ளன.





**1991-92 ஆம் ஆண்டின் சாதனைகள் :**

1. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், நிறுவன மேம்பாட்டு மான்யம உட்பட அனைத்து மத்திய நிதி உதவி பெறுவதற்கு தகுதியானதாக பல்கலைக்கழக மான்யக் குழு சட்டப் பிரிவு 12 (பி) யின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு இறைச்சி மேம்பாட்டுக் கழகத்திற்குச் சொந்தமான, கொடுவள்ளியில் உள்ள வளாகம் பால்வளக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்படுவதற்காக இப்பல்கலைக்கழகத்திற்கு ரூ. 1.65 கோடி நிதி ஒதுக்கீடு மாற்றப்பட்டுள்ளது.

**கல்வி அறிக்கை :**

1. 1991-92 கல்வியாண்டின் பொழுது இப்பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள மூன்று கல்லூரிகளையும், பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேல் படிப்பு நிலைகளில் செமஸ்டர் முறை கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2. கால்நடை மருத்துவ பட்ட மேல் படிப்பு ( M.V.Sc. ) கால்நடை பராமரிப்பு விரிவாக்கத் துறையிலும், கால்நடை பராமரிப்பு பொருளாதாரத் துறையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பட்ட ஆராய்ச்சி ( Ph.d. ) படிப்பு இரண்டு துறைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

3. மீன்வளத்துறையில் பட்ட மேற்படிப்பு (M.F.Sc.) ஐந்து துறைகளில் 1991-92 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

4. இப்பல்கலைக் கழக்கத்திலுள்ள மூன்று கல்லூரிகளிலும் 1,619 மாணவ மாணவிகள் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேல் படிப்பிற்காக கல்வி பயின்று வருகின்றார்கள். இந்தக் கல்வி ஆண்டில் (B.V.Sc.) பட்டப்படிப்பிற்காக 54 மாணவிகள் உட்பட மொத்தம் 224 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். (M.V.Sc.) 6 மாணவிகள் உட்பட 39 பட்ட மேல் படிப்பிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மீனவளக் கல்லூரி மாணவர்கள் B.F,Sc. பட்டப் படிப்பில் ஒரு மாணவி உட்பட 17 மாணவர்கள் பிற்காகவும் ஒரு மாணவி உட்பட 9 மாண்வர்கள் மேற்படிப்பிற்காகவும் (M.F.Sc.) சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ரூ. 14.85 இலட்சம் செலவில் கால் மாணவியர் விடுதி ஒன்று விடுதி வளாகத்தில் கட்டப்பட்டு நடை மருத்துவக் கல்லூரி வருகிறது. பின்தங்கிய வகுப்பு, மிகவும் பின்தங்கிய வகுப்பு தாழ்த்தப்பட்ட வகுப்பு மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் ( ICAR ) மாநில அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் அளிக்கும் நிதியிலிருந்து உபகாரச சம்பளங்களும் உதவித் தொகைகளும் அளிக்கப்படுகின்றன.

ஆராய்ச்சி :

1. வைரஸ் கிருமி நோய்களுக்கான தடுப்பு மருந்திற்கு ஒன்றும் மற்றும் நுண்ணுயிர் கிருமி நோய்களுக்கான தடுப்பு மருந்திற்காக ஒன்றுமாக இரண்டு கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மையங்கள் மாதவரத்தில் நிறுவப்பட்டுள்ளன.

2. PPR என்றழைக்கப்படும் ஒரு புதிய நோய் இந்தியாவில் முதல் முறையாகக் கண்டறியப்பட்டுள்ளது.

3. கால்நடைகளில், செயற்கை முறை கரு மாற்றத்தின் மூலம் ஒரு பசு இரட்டைக் கன்றுகள் ஈன்றுள்ளது.

4. தெரு நாய்களில், வெறி நாய் (Rabies) பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதற்காக வாய் மூலம் செலுத்தக்கூடிய வெறிநோய் தடுப்பு மருந்தை தயாரிப்பதற்கான திட்டம் ஒன்று எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**1992-93 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:**

1992-93 ஆம் ஆண்டு புதிய திட்டங்கள் செயல்படுத்தப் படுவதற்காக ரூ. 27.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அதில் ரூ.13.4 இலட்சம் கால்நடை மருத்துவ திற்கும் ரூ. 13·60 இட்சம் மீன் வளத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ரூ. 13.60 இலடசத்தில் "ஷிரிம்பு இன குஞ்சு பொரிப்பு திட்டத்திற்காக ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### அரசு நிறுவனங்கள்

### தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்.

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் (டாப்கோ) தமிழ் நாட்டில் கோழி வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ரூ. 100 இலட்ச மூலதனத்துடன் முழுவதும் அரசுக்கு சொந்தமான நிறுவனமாக 12—7—1973-ல் நிறுவப்பட்டது.

2. இந்நிறுவனம் கலப்பினக்கோழிக் குஞ்சுகள் மற்றும் இறைச்சிக் கோழிக் குஞ்சுகள் ஆகியவற்றைப் பொரித்து விற்பனை செய்வதிலும், தரமான கோழித் தீவனத்தை தயாரித்து விற்பனை செய்வதிலும், முட்டைகள், கோழிக் குஞ்சுகள், கோழிகள் இறைச்சி, ஜப்பானியக் காடை, முட்டைகள் ஆகியவற்றை விற்பனை செய்வதிலும் ஈடுபட்டு வருகிறது.



3. டாப்கோவின் குஞ்சு பொரிப்பகங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசூரிலும் மதுரை மாவட்டத்தில் கப்பலூரிலும் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொட்டப்பட்டியிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குஞ்சு பொரிப்பகங்கள் விற்பனைக்காகக் கலப்பினக் குஞ்சுள் உற்பத்தி செய்து வழங்குவதில் ஈடுபட்டு வருகின்றன. கலப்பினக் கோழிக் குஞ்சுகளை அறிமுகப்படுத்தியதால் மாநிலத்தில் கோழிப் பண்ணைகளின் வளர்ச்சி அதிகரித்து வருகின்றது. அதிகரித்து வரும் தேவைகேற்ப முட்டையிடும் கோழிக்குஞ்சுகளை வழங்க இந்நிறுவனம் முயற்சி எடுத்து வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலைப் யகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காமராசர் மாவட்டத்தில் இராஜ பாளையத்தல் உள்ள அனுப்பங்குளத்தில் ரூ. 30.95 இலட்ச மதிப்பீட்டில் (50 சதவீதம் மானியம் 50 சதவீதம் கடன் என்ற முறையில்) ஒரு கோழிக்குஞ்சு பொரிப்பகம் நிறுவப்பட உள்ளது. இந்த நிலம் கால்நடைப் பராமரிப்புத் துறையிடமிருந்து பெறப் புட்டுக் கட்டுமானப் பணிகள் துவக்கப்பட்டு குஞ்சு உற்பத்தி 1992-93-ல் எதிர்பார்க்கப்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 32.45 இலட்சம் மதிப்பீட்டில் (50 சதம் பங்கு மானியம் 50 சதம் கடன் என்ற முறையில்) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1990-91 ஆம் ஆண்டில் மற்றொரு கோழிக் குஞ்சு பொரிப்பகம் துவக்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான நிலம் தெரிந்து எடுக்கப்பட்டு கட்டுமானப் பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது.

ஜப்பானியக் காடைகளின் வணிகக் சாத்தியக் கூறு கருதி செங்கல்பட்டில் ஒரு ஜப்பானியக் காடை பொரிப்பு நிலையம் நிறுவப்பட்டு 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் செயல் பட்டு வருகிறது. மேற்கு தொடர்ச்சிமலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோயம்பத்தூர் மாவட்டத்தில் உள்ள தெக்கு பாளையத்தில் மேலும் ஒரு ஜப்பானியக் காடைக்குஞ்சு பொறிப்பகம் ஜுன் 1991 முதல் செயல்பட்டு வருகிறது. காலப்போக்கில் இக்கழகம் பொதுமக்களுக்குத் தேவையான அளவு காடை இறைச்சியை விநியோகிக்க இயலும் நிலையில் இருக்கும்.

4. டாப்கோவின் தீவனக் கலவை நிலையங்கள், நந்தனம் (சென்னை), திருப்பூர் (கோவை), மற்றும் கப்பலூரில் (மதுரை மாவட்டம்) அமைந்துள்ளன. மத்திய அரசின் பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் 50 சதவீதம் மத்திய அரசும் 50 சதவீதம் டாப்கோவும் இணைந்து முறைமாற்றுப் பணியில் 8 மணி நேரத்தில் 50 மெட்ரிக் டன் தீவனம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நவீன கலவை நிலையம் ரூ. 21 இலட்சம் செலவில் காட்டுப் பாக்கத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டுமானப்

பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதன் மூலம் தரமான தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு கோழிப்பண்ணையாளர்களுக்கு விற்பனை செய்யப்படும்.

5. கோழித் தீவனத் தயாரிப்புக்குத் தேவையான தரமான தாதுக்கலவை உற்பத்தி செய்வதற்காக ஒரு தாதுக் கலவை நிலையம் ரூ. 1.78 இலட்சம் செலவில் சேசன்சாவடியில் பிப்ரவரி 1991 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தி செய்யபபடும தாதுக்கலவை முழுவதும் தீவனக் கலவை நிலையத்தில் தீவனம் தயாரிக்க உபயோகப்படுத்தப்படுகிறது.

6. டாப்கோ, தனது விற்பனை மையங்களை சென்னை, கோயம்புத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, வேலூர், நாமக்கல் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது. தேசிய திட்டத்தின் கீழ் ஊனமுற்றவர்களுக்கும் வேலையற்ற நபர்களுக்கும் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்பொருட்டு சில்லறை விற்பனைக்காக விற்பனைமுகவர்களை ஏற்படுத்தியுள்ளது. இதனால் 96 நபர்கள் இதுவரை பயன் பெற்றுள்ளனர்.

1989 அக்டோபரில் இருந்து தமிழகத்தில் சில குறிப்பிட்ட மாவட்டங்களிலுள்ள சத்துணவுக் கூட மையங்களுக்கு இக்கழகத்தால் முட்டை விநியோகிக்கப்பட்டது. இந்த சத்துணவுக் கூடங்களுக்கு விநியோகிக்கும் முட்டை 1991 நவம்பர் மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டுவிட்டது. இதன் விளைவாக 66.4 இலட்சம் முட்டைகளின் விற்பனை குறைந்துவிட்டது. மேலும் டாப்கோவின் முட்டை விற்பனை அளவும் அதற்கேற்றார்போல் குறைந்துள்ளது. இந்த முட்டை விற்பனைக் குறைவை சரி செய்ய அடையாறிலுள்ள இக்கழகத்தின் விற்பனைப் பிரிவு சில முகவர்கள் மூலமாக வெளிநாடுகளில் முட்டை விற்பனை செய்வதற்கு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

7. நாமக்கல் மற்றும் திருப்பூரிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலுள்ள கோழிப் பண்ணைகளின் தேவையை நிறைவு செய்யும் வகையில் நடமாடும் கோழியின நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை நிலையங்கள் நாமக்கல்லிலும், திருப்பூரிலும் செயல்பட்டு வருகின்றன.

8. டாப்கோவுக்குச் சொந்தமான தீவன பரிசோதனை நிலையங்கள் நந்தனம் (சென்னை) மற்றும் திருப்பூரிலும் உள்ளன. அவை தரமான தீவனத்தை தயாரித்து வருகின்றன.



சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டம்.

இந்த மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம் ஏழாவது ஐந்தாண்டு காலத்தில் 1987-88-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தொடரப் பெறுகின்றது. செங்கல்பட்டு-எம். ஜி. ஆர், வட ஆற்காடு-அம்பேத்கார், மதுரை மற்றும் சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களில் ஆரம்பத்தில் 720 கறிக் கோழிப் பண்ணைகள் துவக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பின்னர், இத்திட்டம் தருமபுரி, தென்னாற்காடு, பசும் பொன் முத்துராமலிங்கம்தேவர், இராமநாதபுரம், காமராஜர் மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் 200 மற்றும் 500 முட்டைகள் தரும் கோழிப் பண்ணைகள் துவக்குவதற்காகவும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

10. கோயம்பத்தூருக்கு அருகில் உள்ள தெக்குப்பாளை யத்தில் ''கோழி உரிக்கும் நிலையம்'' ஒன்று ரூ 4.50 இலட்சம் செலவில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட் டத்தின் கீழ் நிறுவப்பட உள்ளது. கட்டுமானப பணிகள் முன் னேற்றத்திலுள்ளன இது 1992-93 ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கும்.

11. சேலம் மாவட்டம், கல்ராயன் மலைவாழ் பகுதியில் 25 குடும்பங்கள் பயன் அடையும் வகையில் ரூ. 7.48 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கோழியின வளர்ப்புக் கூடங்கள் அமைப் பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இக்கூடங்கள் 1991 ஜனவரி முதல் செயல்படத் துவங்கியுள்ளன.

தமிழ்நாடு இறைச்சிக் கழகம்.

தமிழ்நாடு அரசின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் பல்வேறு நிறுவனங்களில் தமிழ்நாடு இறைச்சி நிறுவனமும் ஒன்றாக வேளாண்மைத் துறையின் 1979 ஆம் ஆண்டு மார்ச்சுத திங்கள் 2-ம் நாளிட்ட 423 எண் கொண்ட அரசு ஆணையின்படி துவக்கப் பட்டு 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ம் நாளன்று பதிவு செய்யப்பட்டது. இதை கோழியின வளர்ச்சிக் கழகத்துடன் இணைக்க அரசு உத் திரவிட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இறைச்சிக் கூடங்கள் சென்னை மாநகராட்சிக்கே திரும்ப ஒப்படைக்கப்படுகின்றன. கொடுவேளியில் அமைந்துள்ள நிலம் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் பொருட்களையும் பால் பண்ணை குறித்த அறிவியல் கல்லூரி தொடங்குவதற்கென தமிழ் நாடு கால் நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு

அளிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. மேற்படி சொத்துக்களை மாற்றல் செய்யும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. இந்தச் சொத்துக்கள் மாற்றலாகும் பட்சத்தில் தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் இழப்பு குறைய வாய்ப்புள்ளது.

22-11-1989 நாளிட்ட 554 எண் கொண்ட அரசு ஆணையின் படி தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தை தமிழ்நாடு கோழியின வளர்ப்பு நிறுவனத்துடன் சில சிக்கன நடவடிக்கைகளுக்காக இணைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்விரு நிறுவனங்களின் இணைப்பு பற்றிய திட்டம் புதுடெல்லி கம்பெனிகள் சட்ட விதி குழுமத்திற்கு ஏப்ரல் 1991-ல் அனுப்பப்பட்டு அக்குழுமத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

1990-91 முதல் அயற்பணியிலுள்ள பணியாளர்களை அவரவர் துறைக்கு திரும்ப அனுப்பியும், கோழியின வளர்ச்சிக் கழக அலுவலர்களை இறைச்சிக் கழகப் பணியினை மேற்கொள்ளுமாறும் செய்து அதிகப்படியானக் செலவினங்களை குறைத்து இந்நிறுவனம் சிக்கன நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

எம். ஆனந்தன்.

ஆதி திராவிட நலத் துறை அமைச்சர்.



## இணைப்பு II

(64-65ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

1992-93 ஆம் ஆண்டிற்கான பால் பண்ணை வளர்ச்சி மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம்.

கோரிக்கை எண் 10.

பால் பெருக்குத் துறை.

முன்னுரை :

பால் வளத் துறை 1958 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 1963ஆம் ஆண்டு முதன் முதலில் நவீன பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967ஆம் ஆண்டில் மதுரை பால்பண்ணை நிறுவப்பட்டது. 1-2-1981 முதல் பால்வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாவட்டத்தில் உள்ளதைப் போல, பால்கூட்டுறவு சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்கு கொண்டதாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர் சங்கமாகவும், இடையில் (மாவட்ட அளவில்) பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஒன்றியமாகவும், மேல்மட்டத்தில் (மாநில அளவில்) ஒன்றியங்களின் இணையமாகவும், இயங்கி வருகின்றது.

குறிக்கோள்—பால்வளத் துறையின் முக்கியமான குறிக்கோள்கள் :

(அ) நிலையான, மாறாத மற்றும் நன்றாக ஒழுங்கு படுத்தப்பட்ட வியாபார உதவிகள் மூலம், பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு நல்ல விலை கிடைக்க வழி செய்தல்.

(ஆ) நுகர்வோர்களுக்கு பாலும் மற்றும் பாலில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல்.

[1992 ஏப்ரல் 21

நடவடிக்கைகள் :

மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களைக் கருத்தில் கொண்டு பின்வரும் நடவடிக்கைகளைப் பால்வளத் துறை எடுத்து வருகிறது.

(அ) பால் கூட்டுறவு சங்கத்தில் உள்ள அங்கத்தினர்கள் வைத்திருக்கும் கால் நடைகளுக்கு இலவசமாக கால்நடை மருத்துவ வசதி அளித்தல், செயற்கை முறை கருவூட்டல் நடத்துதல், சரிவிகித கால்நடைத் தீவனம் அளித்தல், அங்கத்தினர்களுக்கு நவீன கால்நடை பராமரிப்புப் பயிற்சி அளித்தல், இவைகள் அனைத்தும் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கும் அதன் மூலம் அம்மாடுகள் தொடர்ந்து அதிக அளவு பால் அளிக்கவும் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) அதிக அளவில் பால் கொள்முதல் செய்யவும், பதப்படுத்தவும் மற்றும் விற்பனை செய்யவும், தகுந்த அளவில் (உள்ளிட்டு) வேண்டிய அடிப்படை வசதிகள் (Infrastructure facilities) அளித்தல், பால் கொள்முதல் வழிகள் அமைத்தல், பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், பால் பதப்படுத்தும் ஆலைகள் அமைத்தல், பால் பொடி (பால் பவுடர்) உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைத்தல் மற்றும் நவீன பால் விற்பனை முறையை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் நுகர்வோர் நலன் கருதி மேற்கொள்ளப்படுகிறது.

பால் வளத்துறையில் வணிக சம்பந்தமான பால் கொள் முதல், பக்குவப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் தமிழ்நாடு பால்வள நிறுவனத் திடம் 1-7-1972 முதல் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் இந்நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமாக 1-2-1981 முதல் மாற்றப்பட்டது. தமிழ்நாடு பால்வள நிறுவனம் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் மேற்கொள்ளும் வகையில் இது ஏற்படுத்தப் பட்டது.

இவ்விணையம் பால்வளத் திட்டங்களைப் பால் பெருக்குத் திட்டங்களின்கீழ் தேசிய பால்வள வாரியத்தின் நிதி உதவியுடன் சென்னை, செங்கல்பட்டு - எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு, வடஆற்காடு - அம்பேத்கார், திருவண்ணா மலை - சம்புவராயர், சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார், மதுரை, திண்டுக்கல்— அண்ணா,



1992 ஏப்ரல் 21]

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 16 மாவட்டங் களில் நிறைவேற்றி வருகின்றது.

பால்வளத் திட்டங்கள் எஞ்சியுள்ள 6 மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் காமராசர் மாவட்டங்களில் மாநில திட்ட நிதி யிலிருந்து நிறைவேற்றப்படுகின்றன.

மேலும் சில சிறப்புத் திட்டங்களான மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம் பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர் மகளிர் திட்டம் முதலியவை சம்பந்தப்பட்ட துறை மற்றும் நிதி நிறுவன உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பால்வளத் திட்டங்கள் மாவட்ட அளவில் நிறைவேற்றிட 17 துணைப் பதிவாளர் (பால் பதம்) அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. கால்நடைகளுக்கு மருத்துவ வசதி மற்றும் செயற்கை முறை கருவூட்டல் வசதி அளிக்கும் வகையில் 11 பால் சேகரிப்புக் குழுக்களும், 13 நடமாடும் கால்நடை மருந்தகங்களும் பால் பெருக்குத் திட்டம் செயல்படாத (Non-operation) மாவட்டங்களாகிய காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், கன்னியாகுமரி, திருநெல்வேலி - கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

பால்வளத் துறை தற்போது முக்கியமாக பால் உற்பத்தி யாளர் கூட்டுறவு சங்கங்களை அமைத்துப் பதிவு செய்தல், அவற்றை மேற்பார்வை செய்தல் மற்றும் ஊரக பால் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் பணிகளைக் கவனித்து வருகிறது.

தற்போதுள்ள அரசு கொள்கையின்படி, கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே ஆரம்பிக் கப்படுகின்றன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை, மேற்படி சங்கங்கள் சேகரிக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் வழங்கும் பாலைப் பரிசோதித்து அதன் தரத்தின் அடிப் படையில் அரசு நிர்ணயம் செய்துள்ள விலையில், அவர் களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. பால்

[1992 ஏப்ரல் 21

கொள்முதல் மற்றும் மருத்துவ வசதிக் குழுக்களில் இருக்கும் கால்நடை மருத்துவர்கள் மூலம் பால் உற்பத்தியாளர் களின் மாடுகளுக்கு இலவச மருத்துவ வசதி அவர்கள் வீட்டிலேயே வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த செலவில் செயற்கை முறை கருவூட்டல் வசதியும் வழங்கப்படு கின்றது. உறைவிந்து குச்சிகள் திரவ நைட்ரஜன் குப்பி களில் செயற்கை முறை கருவூட்டல் செய்யும் வகையில் எப்போதும் தயாராக வைக்கப்படுகின்றன. இச்சங்கத்தின் செயலாளர்கள் சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்குச் செயற்கை முறைக் கருவூட்டல் மற்றும் முதலுதவி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கமும் அதன் சொந்த செலவில் முதலுதவிப் பெட்டி களை வைத்துள்ளது. இக்கிராம சங்கங்களில் கொள் முதல் செய்யப்படும் பாலில் உள்ளூர் உபயோகத்திற்கு வைத்துக்கொண்டது போக எஞ்சியுள்ள பால், மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. பால் உற்பத்தியாளர்களுக்கு வாரம் ஒருமுறை தரத்தின் அடிப் படையில் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது.

பால்வளத் துறையின் முன்னேற்றம் :

அரசு திட்ட நிதி உதவியுடனும், மற்றும் இதர சிறப்பு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளுடனும், கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் பால்வளத் துறை மூலம் அடைந்துள்ளன.

| வரிசை எண். | பெயர். | 31-12-1991 வரை. செயலாக்கம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | முதன்மை சங்கங்களின் எண்ணிக்கை .. | 8,979 |
| 2. | மாவட்ட ஒன்றியங்களின் எண்ணிக்கை .. | 17 |
| 3 | உறுப்பினர்களின் எண்ணிக்கை .. .. | 24.06 இலட்சம். |
| 4. | பால் உற்பத்தி (சங்கங்கள் அளவில்) .. | 14.31 இலட்சம் லிட்டர். (நாள் ஒன்றுக்கு) |



1992 ஏப்ரல் 21]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 5. | பால் கொள்முதல் (ஒன்றியம் அளவில்) .. | 11.09 இலட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு) |
| 6. | சென்னை நகரத்தில் பால் விற்பனை .. | 6.82 இலட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு) |
| 7. | பால் பதப்படுத்தும் ஆலைகளின் எண்ணிக்கை .. | 16 |
| | அவற்றின் திறன் .. .. .. | 15.87 இலட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு) |
| 8. | குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 44 |
| | அவற்றின் திறன் .. .. .. | 7.63 இலட்சம் லிட்டர் (நாள் ஒன்றுக்கு) |
| 9. | தானியங்கி பால் நிலையங்களின் எண்ணிக்கை. .. | 135 |

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி :

1990-91-ல் புதியதாக 801 சங்கங்கள் அமைக்கப் பட்டன. 1991-92-ல் 350 கூடுதல் சங்கங்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்கு மேலாக 31-12-1991-லேயே 430 கூட்டுறவு சங்கங்களை அமைத்து இக்குறியீடு எய்தப்பட்டது. அதாவது குறியீட்டை விட அதிகமாக சங்கங்கள் அமைக்கப்பட்டன. 1991-92 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட சங்கங்களில் 31-12-1991 வரை 86 சங்கங்கள் மகளிருக்காக அமைக்கப்பட்டன.

பால் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்களின் புள்ளி விவரங்கள் :

செயல்பாட்டிலுள்ள ஆரம்ப பால் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்கள்.—

(அ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் .. 8,912

| | |
|---|---|
| (ஆ) பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் .. .. | 13 |
| (இ) கூட்டுறவு பால் பண்ணைகள் .. .. | 2 |
| (ஈ) பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் .. | 51 |
| (உ) கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம் .. .. | 1 |
| (ஊ) மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள். .. .. | 17 |
| (எ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் (மாநில அளவு இணையம்). .. | 1 |

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் :

1992-97 வரையிலான எட்டாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் பால் பெருக்குத் துறையில் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்ற ரூ. 525 இலட்சம் நிதி ஒப்புதல் வழங்க கோரப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சங்களில்).

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 1. | காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் வளர்ச்சித் திட்டத்திற்கு .. .. | 124.50 |
| 2. | பால் பெருக்குத் திட்டம் அமுல்படுத்தாத மாவட்டங்களில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு அடிப்படை வசதி ஏற்படுத்துதல் .. .. .. .. | 99.11 |
| 3. | கூட்டுறவு சங்கங்களுக்கு அலுவலக கட்டிடங்களுடன் கூடிய கிடங்கு அமைத்தல் .. | 300.00 |
| | மொத்தம் .. | 523.61 அல்லது 525.00 |



பால்பண்ணை வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள்—

(1) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டம்.— பால்பெருக்குத் திட்டம் செயல்படும் மாவட்டங்களில் இருக்கும் பால் பண்ணைக்கு இணையாக உளளீட்டு வசதி களை திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஏற்படுத்தப் படுவதற்மகன ரூ. 7.05 கோடி திட்ட மதிப்புடன் கூடிய ஒரு பெரிய ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்திற்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கு இக்கழகம் திட்ட மதிப்பீட்டில் 70 சத நிதியைக் கடனாக வழங்கும். மீதமுள்ள 30 சத நிதியை மாநில அரசு மானியமாகவும், பங்கீட்டு தொகையாகவும் வழங்கும். இத்திட்டம் 1987-88 ஆம் ஆண்டு முதற்கொண்டு செயல். படுத்தப்படுகிறது.

திட்டத்தின் முக்கிய அம்சங்கள் :

(1) 651 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்தல்.

(2) மேலும் கூடுதலாக 73,000 கால்நடைகளைக், கூட்டுவு திட்டத்தின் கீழ் கொண்டு வருதல்.

(3) 651 கூட்டுறவு சங்கங்களுக்கு கால்நடை மருத்துவ வசதி செய்தல்.

(4) மூன்று பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.

(5) தற்போதுள்ள திருநெல்வேலி பால் பதப்படுத்தும் நிலையத்தின் கொள்திறனை நாளொன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக உயர்த்துதல்.

(6) நாளொன்றுக்கு 73,000 லிட்டர் பால் விற்பனை செய்தல், இத்திட்டம் 53,000 விவசாய உறுப்பினர்களுக்கு பயன்படும் என திட்டமிடப்பட்டுள்ளது. பால் கொள் முதல் நாளொன்றுக்கு 28,000 லிட்டரிலிருந்து 75,000 லிட்டருக்கு உயர்த்தப்படும்.

அரசு தன் பங்குத் தொகையான ரூ. 211.50 இலட்சத்தில் ரூ. 165.875 இலட்சங்கள் 31-3-1990 வரை ஒப்பளிப்பு செய்துள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் பங்குத் தொகையான ரூ. 493.50 இலட்சத்தில்

[1992 ஏப்ரல், 21

31-3-1990 முடிய ரூ. 147.00 இலட்சம் அந்நிறுவனத்தால்
வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது இத்திட்டத்தை அமுல்
படுத்த ரூ. 134 இலட்சம் அரசுக் கடனாக வழங்க
ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டங்கள் :

காமராசர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் கூட்டுறவு
வளர்ச்சித் திட்டம்.— ஒருங்கிணைந்த பால் பெருக்குத்
திட்டத்தில் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில்
50,000 லிட்டர் கொண்ட பால் பண்ணை ஒன்று நிறுவ
திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் செலவிட உத்
தேசிக்கப்பட்டுள்ள தொகையான ரூ. 490 இலட்சத்தை
தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன்
செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
21-1-1991, 22-1-1991 ஆகிய தேதிகளில தேசிய கூட்டுறவு
வளர்ச்சிக் கழக மதிப்பீட்டுக் குழு கடந்த
பற்றி ஆய்வு செய்து அமுல்படுத்துவதற்கு இத்திட்டத்தினைப்
அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்கூறிய கொள்கை
24-6-1991 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு குழு,
பாலைக்குச் சொந்தமான 2.8 ஏக்கர் நிலத்தினை ஆய்வு நூற்
செய்து பால் பண்ணையினை அமைக்கும்படி பரிந்துரை
செய்துள்ளது. மேற்கண்ட நிலம் தற்பொழுது
காமராஜர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்
ஒன்றியத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய
கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் வரப் பெற்ற
வுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும். 1991-92 ஆம்
நிதியாண்டில மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்ற
ரூ. 22.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) 1992-93 ஆம் ஆண்டில் பால் பண்ணைகளுக்கு சூரிய
வெப்ப கொதி கலன்கள் அமைத்தல்.— இரண்டாம்
பகுதி திட்டத்தின் கீழ் 1992-93 ஆம் ஆண்டில பால்
பண்ணைகளுக்கு சூரிய வெப்பத்தினால் கொதி கலன்கள்
அமைக்க (Provision of Solar heater) ரூ. 10 இலட்சம் இத்
துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) மலைவாழ் பகுதி மக்கள் மேம்பாட்டுத் திட்டம் :

மலைவாழ் பகுதிகளில் பால் பெருக்குவதற்கு இத்
திட்டத்தின் கீழ் கடன்கள் பங்குத்தொகை (Loans and Share
capital) நிதியும் அரசு வழங்கி வருகிறது. உதக
மண்டலத்தில் ஜெர்சி பொலிகாளைகளைப் பண்ணை



1992 ஏப்ரல் 21]

(என்.ஜே.எப். பண்ணை)-யில் உள்ள புல் பண்ணையை
மேலும் வளப்படுத்த 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ.12-15
இலட்சம் நிதி இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது.

3. கறவை மாடுகள் மானிய திட்டம் :

ஆதி திராவிட நலத்திட்டம் / சிறப்பு மத்திய உதவி

இத்திட்டத்தின் கீழ் பால் கூட்டுறவு சங்கங்களில் உள்ள
ஆதி திராவிட உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்கு
வதற்கு என ஆதி திராவிடர் நலத்துறை வரவு செலவு
திட்டத்தின் கீழும், சிறப்பு மத்திய உதவியின் கீழும்,
'' தாட்கோ '' நிறுவனம் மூலமும் கடன் மற்றும் மானியத்
தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆதி
திராவிட உறுப்பினர்களுக்கும் ஒரு கறவை மாட்டு விலையில் 50
சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. ஒரு கறவை மாட்டின்
விலை ரூ 3,200 ஆக நிர்ணயம் செய்து 50 சதவீதம் அரசுத்
தொகையை மானியமாகவும், எஞ்சிய தொகையை அரசுடை
மையாக்கப்பட்ட வங்கிகளினால் கடனாகவும் வழங்கப்படுகிறது.

ஆதி திராவிட நல வரவு செலவுத் திட்டத்தின் கீழ்
1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ 106.70 இலட்சம் நிதி உதவி
பெற்று ஆதி திராவிடர் மக்களுக்கு 7,804 கறவை மாடுகள்
வாங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1991-92 ஆம்
ஆண்டில் ரூ1.28 இலட்சம் நிதி உதவி பெற்ற ஆதி திராவிடர்கள்
பயனடைய 8,000 கறவை மாடுகள் வாங்க திட்டமிடப்
பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டிற்கான சிறப்பு மத்திய நிதி உதவி
யின் கீழ் ரூ 258.33 இலட்சம் தொகையினை 2421 கறவை
மாடுகள் வாங்க ஆதி திராவிட உறுப்பினர்கள் பயனடையும்
வகையில் தாட்கோ நிறுவனம் மூலம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்
டுள்ளது 1991-92 ஆம் ஆண்டிற்கு இத் திட்டத்தின் கீழ்
கறவை மாடுகள் வாங்க ரூ 387.38 இலட்சம் நிதி உதவி பெற்று
செயல் பட திட்டமிடப்பட்டுள்ளது.

[1992 ஏப்ரல் 21

ஆதி திராவிட இனத்திலிருந்து கிறித்துவர்களாக மாறியவர் களுக்கு 1990-91 ஆம் ஆண்டில் உறுப்பினர்கள் பயனடையும் வகையில் கறவை மாடு வாங்குவதற்காக ரூ. 1.50 இலட்சம் வழங்கப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டில் கறவை மாடுகள் வாங்க ரூ. 1.50 இலடசம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ் நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்.**

பால் பெருக்குத் திட்டம் மூன்று அடுக்கு ஆனந்த் பாணி முறையில் செயல்படுத்துவதற்காக கிராம அளவில் பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கங்களும் மாவட்ட அளவில் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும் மாநில அளவில் கூட்டுறவு இணையமும் அமைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குவதும் பால் உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான கட்டுபடியான விலையை அளிப்பதும் நகரங்களில் வாழ்கிற மக்களுக்கு தரமான பாலை நியாயமான விலையில் விற்பதும் கொள்கையாகும்.

தற்போது பால் பெருக்குத் திட்டத்தை அந்தந்த மாவட்ட ஒன்றியங்களே செயல்படுத்தி வருகின்றன. சேலம் பெரியார் கோயம்புத்தூர் நீலகிரி மாவட்டங்களில் 1981 ஆம் வருடத்தில் தர்மபுரி மாவட்டத்தில் 1982 ஆம் வருடத்திலும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். தென்னாற்காடு மதுரை ஆகிய மாவட் டங்களில் 1985 ஆம் வருடத்திலும் பிரிக்கப்படுவதற்கு முன்பாக வடஆற்காடு மாவடடத்தில் 1984 ஆம் வருடத்திலும் திருச்சிராப் பளளி தஞ்சாவூர் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 1985 ஆம் வருடத்திலும் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 1987 ஆம் வருடத்திலும் பால் பெருக்குத் திட்டம் செயல் படுத்துவதை அந்தந்த ஒன்றியங்கள் ஏற்று செயல்படுத்தி வருகின்றன. மேலும் இவ்விணையம் உறுப்பினர் ஒன்றியங்களுக்காக தேவையான திரவ நைட்ரஜன் உறை விந்து நிலையம் பொலிகாளை பேணல் கால்நடை தீவனம் முதலிய பொதுவான வசதிகளை அமைத்து ஒன்றியங்களுக்கு அளித்து வருகிறது.

தற்சமயம் இவ்விணையத்தின்கீழ் அம்பத்தூர், மாதவரம் மற்றும் அயனாவரம் ஆகிய மூன்று இடங்களில் பால் பண்ணை கள் செயல்பட்டு வருகின்றன. அம்பத்தூரில் உள்ள பால் பண்ணை நாள் ஒன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் கொள்திறனுடனும் மாதவரத்தில் உள்ள பால் பண்ணை நாளொன்றுக்கு 1.75 இலட் சம் லிட்டர் கொள்திறனுடனும், அயனாவரத்தில் உள்ள பால் பண்ணை நாளொன்றுக்கு 12,000 லிட்டர் கொள்திறனுடனும் செயல்பட்டு வருகின்றன.

அம்பத்தூர் மற்றும் மாதவரம் பால் பண்ணைகளில் பாலைப் பதப்படுத்தி, நிலைப்படுத்தி, பாலிதீன் பைகளின் மூலமாகவும் தானியங்கி நிலையங்களின் மூலமாகவும் பால விற்பனை செ யப்பட்டு வருகின்றது. அயனாவரம் பால பண்ணையில் பால் துணை பொருட்களாகிய ஐஸ்கிரீம், யோகர்ட் மற்றும் கோவா உற்பத்தி செய்யப்படுகின்றன.



1992 ஏப்ரல் 21]

இது தவிர மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு சொந்தமான கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு மற்றும் மதுரை ஆகிய 4 பால் பண்ணை மற்றும் பால் பொடி தயாரிக்கும் ஆலைகளின் மூலமாக பிற பால் உற்பத்திப் பொருட் கள், அதாவது பால் பொடி, வெண்ணெய், நெய் மற்றும் பாலாடைகட்டி ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு 'ஆவின்' பெயரால் தமிழ் நாட்டிலும், மற்ற மாநிலங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. மற்ற ஒன்றியங்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவியை அவ்வப்பொழுது அளிப்பதுடன், திட்ட ஆக்க விவரம் ஒப்பந்தப் புள்ளி அட்டவணை மேலும் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் பால் பண்ணை நிறுவுதல் ஆகிய வற்றை இணையமே மேற்கொள்வதுடன், தேவைப்படின் விஸ்தரிப்பு வேலையையும் லாப நோக்கமின்றி ஒருவர் சார்பில் மற்றவர் பெற்றுக் கொள்வது போன்ற அடிப்படையில் மேற் கொள்கிறது.

**மாவட்ட ஒன்றியங்கள் வாரியாக கொள்முதல் செய்யப்பட்ட பால்.**

| வரிசை எண்ணும், மாவட்டமும். | 1989-90 | 1990-91 | 1991-92 டிசம்பர் முடிய. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (நாளொன்றுக்கு சராசரியாக ஆயிரம் லிட்டர்களில்) | | |
| 1. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். | 66 | 64 | 57 |
| 2. தென்னாற்காடு .. | 90 | 89 | 89 |
| 3. வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவ ராயர். | 235 | 246 | 252 |
| 4. தர்மபுரி .. .. .. | 89 | 81 | 75 |
| 5. சேலம் .. .. .. | 193 | 175 | 176 |
| 6. பெரியார் .. .. | 133 | 115 | 101 |
| 7. கோயம்புத்தூர் .. .. | 106 | 89 | 90 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 8. நீலகிரி .. .. .. | 29 | 25 | 27 |
| 9. திருச்சிராப்பள்ளி .. .. | 69 | 68 | 79 |
| 10. தஞ்சாவூர் .. .. | 17 | 15 | 13 |
| 11. புதுக்கோட்டை .. | 5 | 3 | 2 |
| 12. திண்டுக்கல்-அண்ணா .. | 48 | 41 | 41 |
| 13. மதுரை .. .. .. | 99 | 79 | 75 |
| 14. இராமநாதபுரம் .. .. | 26 | 15 | 14 |
| 15. காமராஜர் .. .. | 17 | 11 | 10 |
| 16. திருநெல்வேலி-கட்டபொம்மன் | 47 | 38 | 43 |
| 17. கன்னியாகுமரி .. .. | 14 | 10 | 11 |
| மொத்தம் .. | 1,283 | 1,164 | 1,155 |

**பால் விலை :**

**(அ) கொள்முதல் (உற்பத்தியாளர்களுக்கான விலை )**

பால் உற்பத்தி மற்றும் கால்நடைகளின் பராமரிப்புச் செலவு அதிகரித்ததாலும் கொள்முதல் விலை விவசாயிகளுக்கு அவ்வப்போது கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டது :—

| காலம். (1) | எருமைப் பால் கிலோ (கொழுப்பு) ஒன்றுக்கு. (2) | பசும்பால் கிலோ (மொத்த திடப் பொருள்) ஒன்றுக்கு. (3) |
|---|---|---|
| | ரூ பை. | ரூ. பை. |
| 15-8-87 முதல் 14-10-87 வரை .. | 50 00 | 24 00 |
| 15-10-87 முதல் 31-10-87 வரை .. | 48 00 | 24 00 |
| 1-11-87 முதல் 31-3-88 வரை .. | 48 00 | 23 00 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| | ரூ. பை. | ரூ.பை. |
| 1-4-88 முதல் 2-11-88 வரை .. | 50.00 | 24.00 |
| 3-11-88 முதல் 30-11-90 வரை .. | 58.00 | 28.00 |
| 1-12-90 முதல் 14-5-91 வரை .. | 64.25 | 30.75 |
| 15-5-91 முதல் 22-2-92 வரை .. | 67.15 | 32.30 |
| 23-2-92 முதல் இன்று வரை .. | 90.00 | 32.30 |

**(ஆ) விற்பனை விலை :**

அதிகப்படியான கொள்முதல் விலை உறபத்தியாளர்களுக்கு கொடுத்ததாலும், பால் விநியோகப் போக்குவரத்துச் செலவு மற்றும் பாலின் பை அடைப்பான் விலை அதிகரித்ததாலும், பணியாளர்களின் சம்பள விகிதம் அதிகரித்ததாலும் விற்பனை விலையைக் கீழ்க்கண்டவாறு அவ்வப்பொழுது மாற்றி அமைக்கப் பட்டது :—

| (1) | 8-8-1987 முதல். (2) | 1-11-1987 முதல் (3) | 16-11-1988 முதல். (4) | 25-1-1992 முதல். பதப் படுத்திய பால். (5) | தானியங்கி நிலையங்களில் (6) |
|---|---|---|---|---|---|
| | ரூ.பை. | ரூ.பை. | ரூ.பை. | ரூ.பை. | ரூ.பை. |
| பால் அட்டை .. | 4.20 | 4.50 | 5.00 | 5.90 | 6.00 |
| ரொக்கத்திற்கு .. | 4.30 | 4.00 | 5.20 | 6.10 | 6.00 |

**கால்நடை தீவன ஆலை :**

நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் கொள்திறன் உள்ள மாதவரம் கால்நடை தீவன தொழிற்சாலை தற்போது சராசரியாக மாதம் 1,500 மெட்ரிக் டன் வீதம் கால்நடை தீவனம் உற்பத்தி செய்கிறது. இத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப் படும் தீவனம் கால்நடை பராமரிப்புத் துறைக்கும் மாவட்ட கால் நடை பண்ணைகளுக்கும் மாநகராட்சி மற்றும் நகராட்சி களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

ஈரோட்டிலுள்ள கால்நடை தீவன தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 100 மெட்ரிக் டன் என்ற கொள்திறனுடன் சராசரியாக மாதம் 2,000 மெட்ரிக் டன் கால்நடை தீவனம் உற்பத்தி செய்கிறது. இத் தொழிற்சாலை சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களிலுள்ள பால் உற்பத்தியாளர்களின் தேவையை நிறைவு செய்கிறது. மாற்று வழித் தீவனம் (By' pass protein) எனப்படும் சத்து செறிவுள்ள தீவனமும் இவ்வாலையில் உற்பத்தி செய்யப்படுகிறது.

இத்தொழிற்சாலைகளைத் தவிர மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூரில் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் கொள்திறன் உள்ள தொழிற்சாலை மாதம் 400 மெட்ரிக் டன் கால்நடை தீவனம் உற்பத்தி செய்கிறது.

மேற்சொன்ன கால்நடைத் தீவன ஆலைகளில் 1991—92 ஆம் ஆண்டில் தீவன உற்பத்தி மற்றும் விற்பனை விபரம் வருமாறு :—

| இருப்பிடம். | 1991—92 டிசம்பர் முடிய | | |
|---|---|---|---|
| | உற்பத்தி. | விற்பனை. | (மெ.டன்) |
| (1) | (2) | (3) | |
| சென்னை மாதவரம் .. .. | 9,950 | 10,009 | தொடக்க இருப்பு உள்பட. |
| ஈரோடு .. .. | 13,876 | 14,028 | |
| கப்பலூர் .. .. | 1,055 | 1,103 | |
| மொத்தம் .. | 24,881 | 25,140 | |

பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை :

1991—92 ஆம் ஆண்டில் சென்னையில் நாளொன்றுக்கு 6.82 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் 1990—91 ஆம் ஆண்டு நாளொன்றுக்கு சராசரியாக 6.60 இலட்சம். இவ்வாண்டு 60 இலட்சம் லிட்டர் பால் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. இதை 7.00 இலட்சம் லிட்டராக உயர்த்தத் திட்டமிடப்பட்டு உள்ளது. 531 பால் விற்பனை நிலையங்கள், 51 பாலகங்கள்.



135 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் மற்றும் 93 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் (எப். ஆர். பி. டேங்க்) இவைகளின் மூலமாக வாடிக்கை நிறுவனங்களுக்கு மொத்த விற்பனையாகவும் தனி வாடிக்கையாளர்களுக்கு அரை லிட்டர், 1 லிட்டர் பாலின் பைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. பால் நுகர்வோர்களைப் பால் விற்பனையில் ஈடுபாடு கொள்ளச் செய்யவும், உபயோகிப்பவர்களுக்கு சேவையின் தரத்தை உயர்த்தவும் 32 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் தற்போதுள்ள தினசரி பால் விற்பனை அளவாகிய 11.50 இலட்சம் லிட்டர், 1994 ஆம் ஆண்டில் 17.00 இலட்சம் லிட்டராக உயரும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பால் பொருட்கள் விற்பனை விபரம் பின்வருமாறு :—

| இனங்கள். | 1989-90 | 1990-91 | 1991-92 டிசம்பர் முடிய. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (எண்கள் இலட்சத்தில்). | | |
| பால் நாளொன்றுக்கு சராசரி (லிட்டர்களில்). | 6.12 | 6.60 | 6.82 |
| வெண்ணெய் (கிலோ கிராமில்). | 10.39 | 8.45 | 8.43 |
| நெய் (கிலோ கிராமில்) | 1.54 | 1.29 | 1.73 |
| பால்பொடி (கிலோ கிராமில்) | 13.60 | 1.38 | 0.43 |

1991-92 ஆம் ஆண்டில் பிற மாநிலங்களில் விற்பனை செய்யப்பட்ட பால்பொருட்களின் விற்பனை விபரம் பின்வருமாறு :—

(1991-92 டிசம்பர் முடிய)

| | |
|---|---|
| பால் பொடி (டன்களில்) .. .. .. | .. |
| வெண்ணெய் (டன்களில்) .. .. .. .. | 1,180 |
| நெய் (டன்களில்) .. .. .. .. | 1,229 |

இணையத்தின் மொத்த விற்பனை 1991-92 டிசம்பர் முடிய சராசரியாக ரூ. 104.28 கோடியாகும்.

**பால்பெருக்குத் திட்டம் 1**

பால் பெருக்குத் திட்டம் முதல் கட்டமாக ஜூலை 19.. முதல் மார்ச் 1981 வரை செயல்படுத்தப்பட்டது. இதற்காக இத்திட்டங்களின் கீழ் ரூ. 15.64 கோடி தேசிய பால்வள வாரியம் வழங்கியதில் ரூ. 15.48 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**பால்பெருக்குத் திட்டம் 2**

பால் பெருக்குத் திட்டம் 1-ன் தொடர்ச்சியாக பால் பெருக்குத் திட்டம் 2 துவங்கப்பட்டது. பால் பெருக்குத் திட்டம் 3-ன் கீழ் முன்னேற்பாடு செயல்பாட்டுத் திட்டத்தின் கீழ் முன்பிருந்த 9 மாவட்டங்களில் தவிர திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஏப்ரல் 1985 முதல் துவக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் முடிவுற்ற நிலையில் 12 மாவட்டங்களில் பால் உபரிக் காலத்தில் நாள் ஒன்றுக்கு 10.15 இலட்சம் லிட்டர் பாலை 5,10 கூட்டுறவு சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு 8.19 இலட்சம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள். இத்திட்ட காலத்தில் ரூ. 26.26 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**பால்பெருக்குத் திட்டம் 3 :**

ஆனந்த் பாணியில் ஒருங்கிணைந்த கூட்டுறவில் ஒரு நிலையான எதிர்கால வளர்ச்சியை உருவாக்கி, 13 மாவட்டங்களையும், நகர்ப்புற பால் பண்ணைகளையும் உள்ளடக்கிய கருத்துரு ஒன்று ரூ. 69.19 கோடி செலவில் தேசிய பால்வள வாரியத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது.

சேலம், திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, தர்மபுரி, மதுரை, கோயம்புத்தூர், வட ஆற்காடு-அம்பேத்கார், பெரியார் மாவட்டங்களின் திட்டத்திற்கும், தென் சென்னையில் நாள் ஒன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட புதிய பால் பண்ணையை அமைப்பதற்கும், அம்பத்தூர் பால் பண்ணையை நாள் ஒன்றுக்கு 3 இலட்ச லிட்டர்களிலிருந்து 4 இலட்சம் லிட்டராக பதப்படுத்தும் திறனுக்கு விரிவுபடுத்தும் திட்டத்திற்கும் தேசிய பால்வள வாரியம் முறையான ஒப்புதல் அளித்துள்ளது. இது வரை தேசிய பால்வள வாரியம் இந்த 9 மாவட்டங்களுக்கும் இணையத்திற்கும் ரூ. 62.20 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. மீதமுள்ள 4 மாவட்டங்களான நீலகிரி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல் அண்ணா ஆகிய மாவட்டங்களின் கருத்துருக்கள் தேசிய பால்வள வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன.



**மூன்றாவது பால்பெருக்குத் திட்டத்தின் கீழ் வரும் திட்டப் பணிகள்.**

**சென்னை மாவட்டம்.**

(1) அம்பத்தூர் பால்பண்ணை விரிவாக்கம் (நாளொன்றுக்கு 3.0 இலட்சம் லிட்டரிலிருந்து 4.0 இலட்சம் லிட்டராக உயர்த்த –50 தானியங்கி பால் வழங்கும் நிலையங்களையும் உள்ளடக்கியது) இணையத்தின் மூலம் நிறுவப்பட உள்ளது. பத்து தானியங்கி நிலையங்கள் முடிவடைந்துள்ளன. 21 தானியங்கி நிலையங்களுக்குப் பணிக்கான ஆணை பிறப்பித்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 15 தானியங்கி நிலையங்களுக்கு ஒப்பந்தப் புள்ளி கோர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சில இயந்திர தளவாடங்கள் வந்து சேர்ந்துள்ளன. செலவின் மதிப்பீடு ரூ. 258.14 இலட்சம்.

(2) 3-வது பால் பண்ணை : சோளிங்கநல்லூர் (சென்னை) நாளொன்றுக்கு 4.0 இலட்சம் லிட்டர் கொள்திறனுள்ளது. 150 தானியங்கி பால் வழங்கும் நிலையங்களை உள்ளடக்கிய திட்டம். தேசிய பால்வள வாரியத்தால் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் 50 சதவீதம் நடந்துள்ளன. சில இயந்திரங்கள் வந்து நிறுவுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. செலவின் மதிப்பீடு ரூ. 18.80 கோடி :

**வட ஆற்காடு - அம்பேத்கார் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் :**

(1) வேலூர் பால்பண்ணை விரிவாக்கம் (70,000 லிட்டரிலிருந்து 1.5 இலட்சம் லிட்டர் கொள்திறன்) இணையத்தின் மூலம் நிறுவப்படவுள்ளது. அதற்கான திருத்தி அமைக்கப்பட்ட ஆணையை தேசிய பால்வள வாரியத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

(2) திருவண்ணாமலை குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து ஒரு இலட்சம் லிட்டராக உயர்த்த) இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. சில இயந்திர தளவாடங்கள் வந்து நிறுவுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. செலவின் மதிப்பீடு ரூ. 88.41 இலட்சம்.

(3) ஆம்பூர் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்த) இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப்பணிகள் 90 சதவீதம் நடந்துள்ளன. வேலைக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சில இயந்திரங்கள் வந்துள்ளன. செலவின மதிப்பீடு ரூ. 36.26 இலட்சம்.

(4) அனக்காவூர் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 60,000 லிட்டராக உயர்த்த) இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. சில இயந்திரங்கள் வந்துள்ளன. செலவின் மதிப்பீடு ரூ. 26.95 இலட்சம்.

(5) கொடைக்கல் பால் குளிரூட்டும் நிலையம் (புதியதாக சோளிங்கருக்கருகில் நிறுவப்படவுள்ளது) இணையத்தின் மூலம் நிறுவப்படவுள்ளது. 30,000 லிட்டர் கொள்திறன் கொண்டது. கட்டுமானப் பணிக்கான ஒப்பந்தம் பரிசீலனையில் உள்ளது. இயந்திரங்களுக்கான ஒப்பந்தப் புள்ளி வரவேற்கப்படவுள்ளது. செலவின் மதிப்பீடு ரூ. 57.56 இலட்சம்.

பெரியார் மாவட்டம் :

(1) நாளொன்றுக்கு 30 டன் திறனுள்ள பால்பொடி ஆலை ஒன்று ஈரோட்டில் தேசிய பால்வள வாரியத்நால் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் 90 சதவீதம் முடிந்துள்ளன. இயந்திரங்கள் முழுவதும் வந்தடைந்துவிட்டன. வேலை 40 சதவீதம் நடந்துள்ளது. செலவின் மதிப்பீடு ரூ. 801.82 இலட்சம்.

(2) சங்கராண்டாம்பாளையம் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்துதல்) இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் டிசம்பர் 1991-ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இயந்திரங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படவுள்ளது. செலவின் மதிப்பீடு ரூ. 43.52 இலட்சம்.

சேலம் மாவட்டம் :

(1) சேலம் பால் பண்ணை விரிவாக்கம் (2.0 இலட்சம் லிட்டரிலிருந்து நாளொன்றுக்கு 3.0 இலட்சம் லிட்டராக உயர்த்துதல்) தேசிய பால்வள வாரியத்தினால் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகளுக்கான ஆணை கொடுக்கப்பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. சில இயந்திரங்கள் வந்துள்ளன. செலவின் மதிப்பீடு ரூ. 146.15 இலட்சம்.





(2) ஆத்தூர் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (50,000 லிட்டரிலிருந்து 80,000 லிட்டராக உயர்த்துதல்) இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இயந்திரங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட உள்ளது. செலவின் மதிப்பீடு ரூ. 47.49 இலட்சம்.

(3) நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்த) தேசிய பால்வள வாரியத்தினால் நிறுவப்படவுள்ளது. கட்டுமானப் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. இயந்திரங்களுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. செலவின் மதிப்பீடு ரூ. 96.08 இலட்சம்.

கோயம்புத்தூர் மாவட்டம் :

(1) கோயம்புத்தூர் பால் பண்ணை (விரிவாக்கம் நாளொன்றுக்கு 1.0 இலட்சம் லிட்டரிலிருந்து 2.0 இலட்சம் லிட்டராக உயர்த்த) தேசிய பால்வள வாரியத்தினால் நிறுவப்படவுள்ளது. கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தம் பரிசீலனையில் உள்ளது. இயந்திரங்களுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. செலவின் மதிப்பீடு ரூ. 99.32 இலட்சம்.

(2) ஷண்முகாபுரம் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்த) இணையத்தின் மூலம் செய்யப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. இயந்திரங்களுக்கான ஒப்பந்தப் புள்ளி வரவேற்கப்பட உள்ளது. செலவின் மதிப்பீடு ரூ. 45.42 இலட்சம்.

(3) சுல்தான்பேட்டை பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்த) இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. இயந்திரங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி வரவேற்கப்பட உள்ளது. செலவின் மதிப்பீடு ரூ. 45.47 இலட்சம்.

தர்மபுரி மாவட்டம் :

(1) கிருஷ்ணகிரி பால் பண்ணை விரிவாக்கம் (1 இலட்சம் லிட்டரிலிருந்து 1.5 இலட்சம் லிட்டராக உயர்த்த) இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் முடிவடைந்துவிட்டன. சில இயந்திரங்கள் வந்து, நிறுவுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. செலவின் மதிப்பீடு ரூ. 36.55 இலட்சம்.

53-118—49

(2) தர்மபுரி பால் குளிரூட்டும் நிலைய விரிவாக்கம் (நாளொன்
றுக்கு 40,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்துதல்)
இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணி
கள் முடிவடைந்து விட்டன. சில இயந்திரங்கள் வந்து நிறுவு
வதற்கான வேலை நடந்து கொண்டிருக்கின்றது. செலவின் மதிப்
பீடு ரூ 24.69 இலட்சம்.

**மதுரை மாவட்டம் :**

(1) மதுரை பால்பண்ணை விரிவாக்கம் (நாளொன்றுக்கு
1.50 இலட்சம் லிட்டரிலிருந்து 2.0 இலட்சம் லிட்டராக உயர்த்த
இணையத்தின் மூலம் நிறுவப்படவுள்ளது. இயந்திரங்களுக்கான
ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. செலவின் மதிப்பீடு ரூ. 60.16
இலட்சம்.

(2) மாட்டுத் தீவன ஆலை 100 டன் நாளொன்றுக்கு உற்பத்
தித் திறனுள்ளது. கப்பலூர் (மதுரைக்கருகில்) கட்டுமானப் பணி
யும், இயந்திரங்கள் நிறுவும் பணியும் முடிந்து நவம்பர் 1991
முதல் உற்பத்தி தொடங்கி நல்லபடியாக இயங்கிக் கொண்டிருக்
கிறது. செலவின் மதிப்பீடு ரூ. 143.56 இலட்சம்

(3) தேனி பால் குளிரூட்டும் நிலைய விரிவாக்கம் (நாளொன்
றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்துதல்)
இணையத்தின் மூலம் நிறுவப்படவுள்ளது. கட்டுமானப் பணிக்கு
மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இயந்திரங்களுக்கான
ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட உள்ளது. செலவின் மதிப்பீடு
ரூ. 84.50 இலட்சம்.

**தென்னாற்காடு மாவட்டம் :**

விழுப்புரம் பால் குளிரூட்டும் நிலையம் தற்போதைய கொள்
ளளவு 30,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக நாளொன்
றுக்கு உயர்த்தி, 50,000 லிட்டர் பதப்படுத்தும் திறனுடன் கூடிய
ஒரு பால் பண்ணையாக தேசிய பால்வள வாரியத்தால் நிறுவப்
பட்டு வருகிறது. இதற்கான கட்டுமானப் பணிகள் நடந்து
கொண்டிருக்கின்றன இயந்திரங்களுக்கான ஆணை பிறப்பிக்கப்
பட்டு, சில இயந்திரங்கள் பெறப்பட்டுள்ளன. செலவின் மதிப்பீடு
ரூ. 174.22 இலட்சம்.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் :**

(1) திருச்சி பால் பண்ணை 1.5 இலட்சம் லிட்டர் கொள்திறன்
கொண்டது. தேசிய பால்வள வாரியத்தால் நிறுவப்பட்டு வரு
கிறது. கட்டுமானப் பணிக்கான ஒப்பந்தம், பரிசீலனையில்
உள்ளது. சில இயந்திரப் பொருட்கள் வந்துவிட்டன. செல
வின் மதிப்பீடு ரூ. 538.16 இலட்சம்.



(2) பெரம்பலூர் பால் குளிரூட்டும் நிலைய விரிவாக்கம்
(நாளொன்றுக்கு 8,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக
உயர்த்துதல்) இணையத்தின் மூலம் நிறுவப்படவுள்ளது. கட்டு
மானப் பணிக்கு மறு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது. இயந்
திரங்கள் வாங்குவது பற்றிய ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட
உள்ளது. செலவின் மதிப்பீடு ரூ. 113.93 இலட்சம்.

(3) கரூர் பால் குளிரூட்டும் நிலையம் (நாளொன்றுக்கு 8,000
லிட்டரிலிருந்து 30,000 லிட்டராக உயர்த்துதல்) இணையத்தின்
மூலம் நிறுவப்படவுள்ளது. கட்டுமானப் பணிக்கு மறு ஒப்பந்தப்
புள்ளி கோரப்பட்டுள்ளது. இயந்திரங்கள் வாங்குவது பற்றிய
ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட உள்ளது. செலவின் மதிப்பீடு
ரூ. 68.01 இலட்சம்.

**செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்:**

(1) புக்கத்துறை பால் குளிரூட்டும் நிலையம் (இணையத்தின்
மூலம் புதியதாக நிறுவப்படவுள்ளது.) 30,000 லிட்டர் கொள்
திறன் கொண்டது. செலவின் மதிப்பீடு ரூ. 53.25 இலட்சம்.

(2) காக்களூர் பால் குளிரூட்டும் நிலையம் பதப்படுத்தும்
உபகரணங்களைக் கொண்டு தற்போதைய 30,000 லிட்டர் கொள்
திறனிலிருந்து 50,000 லிட்டர் கொள்திறன் விரிவாக்கம் கொண்ட
தாக இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு உள்ளது. செலவின்
மதிப்பீடு ரூ. 15.50 இலட்சம்.

மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தின் முடிவில் அதாவது
1994-ல் இவ்விணையம் நாளொன்றுக்கு 28.41 இலட்சம் லிட்டர்
பால் கையாளும் திறனுடன் விளங்கும். பால் விற்பனை நகரத்
தில் நாளொன்றுக்கு தோராயமாக 10.0 இலட்சம் லிட்டராகவும்
மாவட்ட ஒன்றியங்கள் மூலம் தோராயமாக நாளொன்றுக்கு
.0 இலட்சம் லிட்டராகவும் உயர்த்தப்பட உள்ளது.

**கால்நடை தொழில்நுட்ப உள்ளீட்டுப் பணி.**

**பால் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம்.**

1991–92 ஆம் ஆண்டு (டிசம்பர் 1991 முடிய) இவ்விணையத்
தில் நாளொன்றுக்கு 11.55 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல்
செய்யப்பட்டது.

பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1991–92 ஆம் ஆண்டு
டிசம்பர் 1991 முடிய) 430 பால் உற்பத்தியாளர் சங்கங்கள்
துவக்கப்பட்டு, 13.73 இலட்சம் பசு மற்றும் எருமை கறவை

இனங்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. அவைகளுக்குத் தேவைப்படும் செயற்கை இனவிருத்தி செய்வதற்குத் தேவையான உறைவிந்து குச்சிகள், கால்நடை தீவனங்கள், பசும்புல் உற்பத்திக்கான மானியம், வெக்கை மற்றும் கோமாரி நோய்களுக்கான தடுப்பு ஊசி போடுவது போன்ற வசதிகள் அளிக்கப்பட்டன.

செயற்கை கருவூட்டலில் கிராம அளவிலான தேர்ச்சிபெற்ற ஊழியர்கள் மூலம் கால்நடைகளுக்கு செயற்கை கருவூட்டல் செய்யப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டு (டிசம்பர் 1991 முடிய) 5,23,256 கறவை இனங்களுக்கு உறைவிந்து செலுத்தப்பட்டது.

1991-92 ஆம் ஆண்டு (டிசம்பர் 1991 முடிய) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் நல்ல தேர்ச்சி பெற்ற கால்நடை மருத்துவர்கள் மூலம் 3,57,655 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தன. கால்நடை உரிமையாளர்களிடமிருந்து வரும் அவசர நேர அழைப்பிற்காக, அவசரக்கால சிகிச்சை வழித்தடங்கள் செயல்படுத்தப்பட்டன. 1991—92 ஆம் ஆண்டு 75 நடமாடும் கால்நடை சிகிச்சை தடங்களும், 36 அவசரகால சிகிச்சை தடங்களும் செயல்முறை படுத்தப்பட்டன.

**உள்நாட்டுக் கால்நடைகளின் பால் வழங்கும் திறனை மேம்படுத்தும் பணி.**

செயற்கை கருவூட்டலின் பயனாக 1991—92 ஆம் ஆண்டு (டிசம்பர் 1991 முடிய) 57,916 அதிக வீரியமுள்ள கிடாரிக் கன்றுகள் பிறந்துள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள எருமை இனங்களின் உற்பத்தித் திறனை முர்ரா இன எருமைகளோடு கலப்பினம் செய்வதன் மூலம் உயர்த்தலாம். எனவே முர்ரா இன எருமைகளின் உறை விந்து குச்சி தயாரிப்பதற்காக எருமை இன பொலிகாளை நிலையம் 1986-ஆம் ஆண்டு ஈரோட்டில் நிறுவப்பட்டது. தற்போது 71 முர்ரா இன காளைகள் இந்நிலயத்தில் பராமரிக்கப்பட்டு எருமை இன விந்து சேகரிக்கப்படுகிறது. இந்நிலையத்தில் 1991—92 ஆம் ஆண்டு (டிசம்பர் 1991 முடிய) 2.32 இலட்சம் முர்ரா இன எருமை உறை விந்து குச்சிகள் தயாரிக்கப்பட்டன.

உதகமண்டலத்திலுள்ள கருவூல மைய பொலிகாளை பண்ணையில் 7.50 இலட்சம் உயர் இன உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டன.



**மரபுவழி அம்சத் திட்டம் :**

பால் உற்பத்தியை மேம்படுத்த நல்ல தரமான பொலிகாளைகள் தேர்ந்தெடுப்பதற்காக 1986 ஆம் ஆண்டு மரபுவழி வம்சத் திட்டம் ஈரோட்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்தில், தாய் பசுவின் பால் உற்பத்தித் திறனுடன், மரபுவழி வம்சத் திட்டத்தின் கீழ் உள்ள பொலிகாளைகள் மூலம் பிறந்த கிடாரிக் கன்றுகளின் பால உற்பத்தித் திறன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது. தற்போது இத்திட்டம் தென் ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் எருமை இனக் காளைகளுக்கான வம்சாவழி பரிசோதனைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மதுரை, திண்டுக்கல்-அண்ணா, தஞ்சாவூர், வட ஆற்காடு-அம்பேத்கார், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் கலப்பினங்களுக்கான வம்சாவழித் திட்டம் நடைமுறையில் உள்ளது.

**சிறப்பு கால்நடை இனவிருத்தி திட்டத்தின் கீழ் கலப்பின பசுங் கன்று வளர்ப்புத் திட்டம் :**

தமிழ்நாட்டில் தென்னாற்காடு, வட ஆற்காடு—அம்பேத்கார், மதுரை, சேலம், கோயம்புத்தூர், பெரியார் மற்றும் திண்டுக்கல்—அண்ணா ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தினால், கலப்பின பசுங்கன்று வளர்ப்புத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

நான்கு மாத வயது முதல் பத்து மாத வயதிற்குள் உள்ள கலப்பின பசுங்கன்றுகள் வைத்திருக்கும் சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் இத்திட்டத்தில் பயனாளிகளாகச் (Beneficiaries) சேர்க்கப்படுகின்றனர். இத்திட்டத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொரு பயனாளியும் ஒரு கன்று விதம் வளர்க்க இத்திட்டத்தில் மானியம் தீவனமாக (தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தினால் தயாரிக்கப்பட்ட தீவனம்) அளிக்கப்படுகிறது.

1990-91 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், நிர்ணயிக்கப்பட்ட 2,500 கன்றுகள் என்ற இலக்கிற்கும் கூடுதலாக 168 கன்றுகள் சேர்க்கப்பட்டு, மொத்தம் 2,668 கன்றுகளாக அனுமதிக்கப்பட்ட. ரூ. 98.663 இலட்சம் செலவில் சேர்ந்துள்ளது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் 1991-92 ஆம் ஆண்டில் 3,500 கலப்பின பசுங்கன்றுகள் மற்றும் 2,000 எருமைக் கன்றுகளை (1991—92 ஆம் ஆண்டின் புதிய திட்டமாக) ரூ. 246.81 இலட்சம் செலவில் சேர்க்கத் திட்டமிட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு பால உற்பத்தியாளர்கள் கூட்டுற இணையம், 1992-93 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 3,50 கலப்பின பசுங்கன்றுகள் மற்றும் 2,000 எருமைக் கன்றுக ரூ. 271.491 இலட்சம் செலவில் சேர்க்க திட்டமிட்டுள்ளது

## பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை.

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையானது, பா கூட்டுறவு தணிக்கை வாரியம் நீக்கப்பட்டபின், தமிழ்நாட்டிலுள் அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கையினை தேசிய பால் பெருக்கு வாரியம் (முந்தைய பண்ணை கழகம்) அளித்த ஆலோசனையின் பேரில் மேற்கொண்டு 1-10- முதல் இயங்கி வருகிறது. இத்துறையானது, பால் வளத் துறை யின் கட்டுப்பாட்டிலுள்ள மாநிலத்தின அனைத்து ஆரம்பப் பா உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள், 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் ஒரு தலைமை இணைய மான தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையப் லிமிடெட் ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்து வருகிறது.

2. தணிக்கை முன்னேற்றம் :

(அ) பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை.

(i) 1990-91 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை : மொத்த முள்ள 8,420 சங்கங்களில், கணக்குப் புத்தகங்கள் கிடைக்கப் பெற்ற 7,718 சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பெற்றுள்ளது. மீதமுள்ள 702 சங்கங்களின் புத்தகங்கள் நீதிமன்ற வழக்குகள் சம்பந்தமாக காவல் துறை மற்றும் நீதிமன்றங்களில் உள்ள தால் தணிக்கை முடிக்கப்படாமல் உள்ளது. எனவே, இச்சங்கங் களின் தணிக்கையை முடிப்பதற்குச் சம்பந்தப்பட்ட அலுவலர் களையும். பால்வளத்துறை நிர்வாக அலுவலர்களையும் தொடர்பு கொண்டு, சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ii) 1991-92 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை : 1990 -91-ம் ஆண்டுக்கு இறுதித் தணிக்கை முடிக்கப்பட்ட அனைத்து சங்கங்களிலும் 1991-92ம் ஆண்டுக்கான தொடர் தணிக்கை முன்னேற்றத்திலுள்ளது.



(ஆ) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை :

(i) 1990-91 ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கை.— 1990-91 ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கை அனைத்து 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் முடிக்கப்பட்டு விட்டது.

(ii) 1991-92-ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கை.— அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றி யங்களிலும் 1991-92-ம் ஆண்டுக்கான தொடர் தணிக்கை முன்னேற்றத்திலுள்ளது.

(இ) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தி தின் 1987-ம் ஆண்டு வரைக்கான இறுதித் தணிக்கை முடிக்கப் பட்டுள்ளது.

3. அரசு வருவாய் வசூல் :

தணிக்கை மேற்கொள்ளப்படும் அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களிடமிருந்தும் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்பட்டு அரசு வருவாய் கணக்கில் சேர்க்கப்பட்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டுக்கு நிதிநிலை அறிக்கையில் இவ்வினத்தில் நிர்ணயிக் கப்பட்ட ரூ. 62.00 இலட்சத்தில் 15-2-1992 முடிய ரூ. 65.94 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இதற்கான குறியீட்டிற்கு மேலாக ரூ. 3.94 இலட்சம் வசூல் செய்யப்பட் டுள்ளது.

163179

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Company, Madras-4.
Higginbothams (Private) Limited, Madras-2.
P. Varadachary and Company, Madras-1.
C. Subbiah Chetty and Company, Madras-5.
The Universal Book House, Moore Market, Madras-3.
C. Sitharaman and Company, Madras-14.
Mohan Pathippagam and Book Depot, Madras-5.
C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-
The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelv.. Limited, Madras-1.
The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1
New Century Book House (Private) Limited, Madras 2.
Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmor Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 T. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthagbalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.